ஸாதாரணமாகக் கீழ்வகுப்பினர்களும் பலவகைகளிற் சிறப்புப் பெறுதற்குப் பெருமுயற்சிகள் செய்யும்படியான இக்காலத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸமுதாயத்தினர்களான நாம் ஸ்வல்ப உட்பிரிவுகளைப் பற்றிய த்வேஷ புத்திகளை அறவேயொழித்து ஐகரஸ்யத்தை அழகாகக் காட்டி அதை அநுபவபர்யந்தமாகவும் ஆக்கி "ஸ்ரீவைஷ்ணவஸமுதாயத்திற்குள் எவ்வகையான வாதவிவாதமும் தலைகாட்ட மாட்டாதபடிக்கும் ஐகமத்யமே செழித்து ஓங்கும்படிக்கும் நாடுநகரமும் நன்கறிய ப்ரசாரஞ் செய்ய வேண்டியது அவசியம்" என்கிற ஊக்கத்தை ஏற்றுக்கொண்டு வியாபரிக்கக் கூடிய உத்தமாதிகாரிகளை நாடவேணுமென்று அடியேன் மநோரதித்திருக்கையில், தற்காலம் சென்னையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதுபயவேதாந்த வடகரை ராமாநுஜாசார்யஸ்வாமி யென்பவர் அடியேனுடைய அபிஸந்திக்கு மிகவும் அநுகூலராகி வர்யத்த

acharya.org

தனால் அவருடைய சிறந்த குதூஹலங்களையும் உத்ஸாஹத்தையும் முக்கிய ஆதாரமாகக் கொண்டு, ஸ்ரீவைஷ்ணவர்களின் ஐகமத்யமே உலகமெங்கும் பரவிச் செல்லவேணுமென்று மேலே விவரித்த உத்தேசத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பாங்காக இப்பத்திரிகையின் பிரசாரம் தொடங்கப்படுகின்றது.

தேசக்ஷேமம் ஜாதிக்ஷேமம் முதலிய பலவகைப்பட்ட நல்ல நோக்கங்களுடன் இவ்வுலகில் வெளிவருகின்ற பல பத்திரிகைகளினிடையே 'ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயக்ஷேமம்' என்கிற நோக்கமொன்றையேகொண்டு வெளிவரப்புகுகின்ற இப்பத்திரிகையை உபயஸம்ப்ரதாயஸ்தர்களும் ஆதரித்து, அனைவரும் விரும்பிவாசிக்கக்கூடிய இன்சுவைமிக்க விஷயங்களை உபகரித்தும் இயன்றவாறு பொருளுதவி புரிந்தும் அநுக்ரஹிக்கவேணுமென்று பிரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீ

எம்பெருமானார் தர்சனம்

நம்முடைய ஸம்ப்ரதாயமானது எம்பெருமானார் தர்சனமென்றும் ஸ்ரீராமாநுஜஸித்தாந்த மென்றும் வழங்கப்பட்டு வருகின்றது. 'ஸ்ரீராமாநுஜரால் புதிதாக ஏற்படுத்தப்பட்டமதம்' என்று இதைக்கொண்டு சிலர் சொல்லுவார்கள். உண்மையில் அங்ஙன்மன்று, ஸ்ரீபாஷ்யம் முதலிய க்ரந்தங்களை இயற்றி ஸ்ரீராமாநுஜரால் பரிபாலனம் செய்யப்பட்ட ஸித்தாந்தம் என்பதே இங்கு விவக்ஷிதம். இவ்வர்த்தத்தை மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில்

"எம்பெருமானார் தரிசனமென்றே யிதற்கு, நம்பெருமாள் பேரிட்டு
நாட்டிவைத்தார்—அம்புவியோர், இந்தத் தரிசனத்தை யெம்
பெருமானார் வளர்த்த, அந்தச் செயலறிகைக்கா"

என்ற பாசுரத்தினால் வெளியிட்டருளினார். 'ஸ்ரீராமாநுஜமதம் நவீநம்' என்கிறவாதம் தேசிகனுடைய காலத்திலேயே தோன்றியதாகத் தெரிகின்றது. யதிராஜஸப்ததியில் " **यतिक्ष्माभृद्दृष्टं मतमिह नवीनं तदपि किम्** ? யதிக்ஷ்மாப்ருத்த்ருஷ்டம் மதமிஹ நவீநம் ததபி கிம் ?" என்கிறசலோகத்தில் அந்த வாதத்தை அநுவ

acharya.org

த்தது, பூர்வார்த்தத்தால் அதை அங்கீகரித்து ஸமாதானமும், உத்தரார்த்தத்தால் வஸ்துஸ்திதிஸமாதானமும் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.

காளிதாஸர் **पुराणमित्येव न साधु सर्वं न चापि काव्यं नवमित्यवद्यम् । सन्तः परीक्ष्यान्यतरद्भजन्ते मूढः परप्रत्ययनेयबुद्धिः** - புராணமித்யேவ ந ஸாது ஸர்வம் ந சாபி காவ்யம் நவமித்யவத்யம், ஸந்த: பரீக்ஷ்யாந்யதரத் பஜந்தே மூட: பரப்ரத்யயநேயபுத்தி:" என்று தமது நாடகமொன்றில் கூறியுள்ளார். ப்ராசீனமென்பது பற்றியே ஒன்றுக்கு ஏற்றமும் நவீனமென்பது பற்றியே ஒன்றுக்குத் தாழ்வும் சொல்லப்போகாது, குணபுஷ்கலமாக இராவிடில் ப்ராசீநமாயிருந்தாலும் ஹேயமாகும், குணபுஷ்கலமாகவுள்ளதாகில் நவீநமாயினும் உபாதேயமேயாகும். ஆகவே, குணமுடைமை பரிக்ராஹ்யத்வத்திற்கு ஹேதுவாகவும், குணமின்மை பரித்யாஜ்யத்வத்திற்கு ஹேதுவாகவும் தேறுமேயல்லது, ப்ராசீநத்வ நவீநத்வங்களைக்கொண்டு பரிக்ராஹ்யத்வ பரித்யாஜ்யத்வங்களை வ்யவஸ்தைபண்ணுவது புத்திமான்களின் பணியன்று என்பது மேற்குறித்த காளிதாஸச்லோகத்தின் தாத்பர்யம். இந்த ரீதியைத் திருவுள்ளம் பற்றியே ஸ்வாமி தேசிகன் முந்துற ஒரு ஸமாதான மருளிச் செய்தார்.

மீமாம்ஸாபாதுகையிலும் "**किञ्चित् केनापि दृष्टम्** - கிஞ்சித் கேநாபி த்ருஷ்டம்" என்கிற எட்டாவது ச்லோகத்தில் "**प्रत्येतव्यं तदर्थ्यैः पटुतरमतिभिः प्राक्तनं नूतनं वा** - ப்ரத்யேதவ்யம் தத்தர்த்யை: படுதரமதிபி: ப்ராக்தநம் நூதநம் வா" என்ற நான்காவது பாதத்தினால் இந்தத் திருவுள்ளத்தைக் காட்டியருளினார்.

யாதவாப்யுதய மஹாகாவ்யத்திலும், "**तदात्वे नूतनं सर्वमायत्यां च पुरातनम् । न दोषायैतदुभयं न गुणाय च कल्पते** - ததாத்வே நூதநம் ஸர்வம் ஆயத்யாஞ்ச புராதநம், ந தோஷாயைததுபயம் ந குணாய ச கல்பதே" என்ற ச்லோகத்தில் இத்திருவுள்ளமே பொலியும். இது ஸாமாந்ய ந்யாயசிக்ஷணமாதலால் இந்த ந்யாயத்தைத் தழுவி 'ஸ்ரீராமாநுஜமதம் நவீனமாகத்தான் இருக்கட்டுமே, இருந்தாலென்ன?' என்று அப்யுபகமவாத ப்ரணாளியிலே அருளிச் செய்து, உடனே "**निशाम्यन्तां यद्वा निजमतितिरस्कारविगमात् निरा-**

acharya.org

तङ्काः टङ्कद्रमिडगुहदेवप्रभृतयः-நிசாம்யந்தாம் யத்வா நிஜமதிதிரஸ்கார விக்மாத் நிராதங்கா: டங்கத்ரமிடகுஹதேவபராங்குசப் ” [யதிராஜஸப்ததி-57] என்று வஸ்துஸ்திதிஸமாதானத்தையும் அருளிச்செய்தார். இந்த ஸ்ரீராமானுஜமதத்தைப் ப்ரவர்த்தனம் செய்தவர்கள் இராமானுஜருக்கு முன் ப்ரவர்த்தகர்களிற் காட்டிலும் மிக முற்பட்டவர்கள் என்று இதனால் காட்டப்பட்டது.

ஸம்ப்ரதாய பரிசுத்தி என்கிற ரஹஸ்யத்தின் உபக்ரமத்திலும்

> “ஸர்வலோகஹிதமான அத்யாத்மசாஸ்த்ர ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதமப்ரவர்த்தகன் ஸர்வேச்வரன் மற்றுள்ளாரெல்லாரும் அவன்தன்னாலே யாதல் சேதநாந்தரமுகத்தாலேயாதல் மயர்வற மதிநலமருளப் பெற்று ப்ரவர்த்திப்பிக்கிறவர்கள் இந்த யுகாரம்பத்திலே ப்ரஹ்மநந்த்யாதிகளுக்குப் பின்பு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார்”

என்று ஸ்வாமி அருளிச் செய்தவை இங்கு ஸ்மரிக்கத்தக்கன. எம்பெருமானார் தாமும் ஸ்ரீபாஷ்யத்தின் உபக்ரமத்திலே,

> **“ भगवद्बोधायनकृतां विस्तीर्णां ब्रह्मसूत्रवृत्तिं पूर्वाचार्याः संचिक्षिपुः, तन्मतानुसारेण सूत्राक्षराणि व्याख्यास्यन्ते । ”**

[போதாயநமஹர்ஷியினால் செய்யப்பட்ட விரிவான ப்ரஹ்மஸூத்ர வ்ருத்திக்ரந்தத்தைப் பூர்வர்கள் சுருக்கியருளினார்கள், அவர்களது கொள்கையைப் பின்பற்றி ப்ரஹ்மஸூத்ர வியாக்கியானம் செய்யப்புகுவோம்] என்று ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கையாலும் இது அநாதிமதமேயன்றி நவீநமதமன்று என்பது தெற்றென விளங்கும்.

ஸ்ரீராமானுஜபாஷ்யத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த தேறிசையாரும் ஸ்ரீராமானுஜருடைய கொள்கையே மிகவும் ஏற்புடையது என்பதை நிரூபித்துள்ளாரென்று கேள்விப்படுகிறோம். அத்வைதம் த்வைதம் என்கிற மற்ற இரண்டு தர்சனங்களிற் காட்டிலும் நமது விசிஷ்டாத்வைததர்சனத்தின் வைலக்ஷண்யத்தை அறிந்து கொண்டால் இதுவே புராதனமாக இருக்கக்கூடியதென்றும், இதுவே உலக அநுபவத்திற்கு இணங்கியதென்றும் யாவரும் நிச்சயத்தக்கதாகும். அதனை அடுத்த ஸஞ்சிகையில் விவரிப்போம்.

---

acharya.org

ஸ்ரீ

எமபெருமானும நாமும

சேதநாகளையும அசேதநஙகளையும சரீரமாககொணடவன எமபெருமான அவன பெருமையில தலைசினறவன, நாம சிறுமையில தலைசிறபவாகள நாம அபபெருமானை வழிபடுதறகு உரியோம அவனதிறதது நாம செயயககூடிய வழிபாடுகள பலவகைபபட்டிருககும அவறறைபபறறின விரிவுகள சாஸதரஙகளில விசதமாகக காணககிடைககும நாமும அவறறை அடைவே விவரிககப பராபதமாகும அநத வழிபாடுகளெலலாம ஒரு புறமிருககட்டும அவாபதஸமஸதகாமனான பெருமானுககு நாம செயயும வழிபாடுகள எனனபயனைத தரபபோகினறன! நமமுடைய ஸவரூபம கடைததேறுவதறகாகவே நாம வழிபடுவோமததனை

எமபெருமான அலபஸநதுஷடன அநாதிகாலமாக அவனோடு எதிரமபு கோககினற (அதாவது விவாதபபடுகினற) கொடிய ஸமஸாரிகள நாம அநத நிலைமையில நினறும நாம நீஙகி, அவனோடு நமககுணடான ஒழிககவொழியாதவுறவைத தெரிநது கொணடோமாயின இதுவே பரம பூஜையாகும ஸமபநதஜஞானமாததிரமே நமககு மேலான நனமைகளுககு எலலை அஃது உணடானால நாம எமபெருமானோடு விவாதபபடமாட்டோம விவாதபபடு தொலைநததெனனில, எவவிதப பணிவிடைகளும நாமு செயது தோமாவோம

மநுஸமருதியில [8-92] यमो वैवस्वतो राजा यस्तवैष हृदि स्थितः । तेन चेदविवादस्ते मा गंगां मा कुरून् गमः - யமோ வைவஸவதோ ராஜா யஸ தவைஷ ஹருதி ஸதித:, தேந சேதவிவாதஸ தே மா கஙகாம மா குருந கம:" எனறு சொலலிறறு இதன கருததாவது ஸாவநியாமகனும தணடதரனும (அலலது ஸூாயவமசததிற பிறநதவனும அலலது ஆதிதயமணடலவாஸியாயும) எலலாககும இனியனுமிருககிற எமபெருமான உனது உளளததிலேயுளளான, அவனோடுவிவாதம நெடுநாளாக அநுவாததிததுக

acharya.org

கொண்டு வருகிறது, அதாவது இந்த ஆத்மவஸ்துவை அவன் தன்னுடையதாக அபிமானித்தால் அதற்கு இசையாதே 'இது என்னுடையதுதான்' என்று செருக்கியிருப்பதுவே விவாதம் இது தொலைந்தொழியுமாகில், கங்கை முதலிய புண்யதீர்த்தங்களில் குடைந்தாடப் போகவும் வேண்டா, குருக்ஷேத்ரம் முதலிய புண்யக்ஷேத்ரங்களை ஸேவிக்கப் போகவும் வேண்டா அஹங்காரமமகாரங்களை உள்ளே வைத்துக்கொண்டு ப்ராயச்சித்தம் பண்ணுகையாவது ஒரு பாத்திரத்தினுள்ளே அசுத்த வஸ்துவையிட்டுவைத்து மேலே பளபளவென்று சுத்திசெய்வது போலாதலால், உள்ளே எம்பெருமானோடு விவாதத்தை வைத்துக்கொண்டே க்ஷேத்ரதீர்த்தஸஞ்சாரம் செய்வது எதுக்கு? அந்த விவாதம் தீர்ந்துவிட்டால் இருந்த இடத்திலேயே பரமசுத்தியுண்டாதலால் ஒருக்ஷேத்ரத்தையும் ஒருதீர்த்தத்தையும் தேடிப்போகவேண்டா என்றபடி. ஆகவே விவாதம் நீங்குமளவே வேண்டுவது.

ஸம்பந்தவுணர்ச்சி உறைப்பாக உண்டானாலொழிய விவாதசாந்தி விளையமாட்டாது ஸம்பந்தஜ்ஞான முண்டானவளவிலே நாம் வாழ்ச்சிபெற்றோராவோம் இதுபற்றி ஈடுமுப்பத்தாறாயிரப்படியில் [1-2-7] ஒரு இதிஹாஸம் காட்டப்பட்டுள்ளது, அதனை விவரித்துரைப்போம், ஒரு நகரத்தில் ஒரு வணிகத்தலைவனிருந்தனன், அவன் வெளிநாடுகளில் நீண்டகாலம் வஸித்து வர்த்தகஞ்செய்து விசேஷமாகப் பொருள் படைக்க விரும்பி த்வீபாந்தர யாத்திரைசெய்யமுயன்றான் அத்தருணம் அவனது மனைவி கருவுற்றிருந்தாள் அப்போதே அவன் புறப்பட்டு த்வீபாந்தரம் போய்ச்சேர்ந்தான் பிறகு இரண்டொரு மாதங் கடந்தபின் அவனது மனைவி ஊரில் ஒரு புதல்வனை யீன்றாள் அம்மகன் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகச் சுக்லபக்ஷசந்த்ரன் போன்று வளர்ந்துவருகின்றான் த்வீபாந்தரத்தில் வர்த்தகஞ்செய்து வாழ்ந்துகொண்டிருக்கும் அவ்வணிகன் மகப்பேறுஉண்டான செய்தியையறிந்து பெருமகிழ்ச்சிகொண்டு விரைவிலேயே ஊர்வந்து சேரற்குப் பெருமுயற்சி செய்தும், மேன்மேலும் வர்த்தகத்தில் மீதூர்ந்து சென்ற மிலைப்பினால் கடுக மீண்டுவரமுடியாமல் நெடுங்காலம் அங்கேயே தங்கிவிட்டான் மகன் தானும் உரியவயதுவாய்த்தவள

acharya.org

வில் தனது குலத்தொழிலாகிய வர்த்தகத்தையே கைப்பற்றி
வந்தான். வயது முதிர்ந்தவனாகிலும் இவனது தகப்பன் த்வீபாந்த
ரத்திலேயே வாழ்கிறான். பின்பொருநாள் அவ்வணிகன் மகன் தொ
ழில்முறையில் வெளிநாட்டிற்குச் சென்றிருந்து பலசரக்குகளு
டன் கடல்வழியாய் ஊர்த்துறைமுகம் வந்து சேர்ந்தான். அவன்
வந்த கப்பலிலேயே அவனது தந்தையும் த்வீபாந்தரத்திலிருந்து
பல மூட்டைகளுடன் ஊர் வந்தனன். அந்தக்கப்பல் துறைமுகஞ்
சேர்ந்தவுடனே குமாரன் தனது மூட்டைகளை இறக்குவதாக
உத்தேசித்த ஓர் இடத்திலேயே தகப்பனும் தான் கொணர்ந்த
மூட்டைகளை இறக்கநினைத்தனன். இவ்விருவரும் தங்களுக்குள்ள
பித்ரு புத்ரபாவ ஸம்பந்தத்தை அறியாதவர்கள். 'இவன் நம்ம
கன்' என்று தந்தையறியான்; இவர் நம் தகப்பனார் என்று
மகனுமறியான். உண்மையில் இவர்கட்கு இவ்வுறவுமுறை
தெரிவதற்கு ப்ரஸக்தியில்லையே. இக்குமாரன் பிறப்பதற்கு
முன்னமேயன்றோ அவ்வணிகன் வெளிநாடு சென்றிட்டான்.
ஆகவே 'இவன் யாரோ வெளிநாட்டு வர்த்தகன்' என்று பாவிக்க
லானான், தந்தையும் மகனை அங்ஙனமே பாவித்தான். இறக்கு
மிடத்தைப்பற்றிய விவாதம் இவர்களுக்கு முற்றிவிட்டது.
'இவ்விடத்தை நானே முதலில் உத்தேசித்தேன்' என்று இருவ
ரும் நெடும்போதாக வாதாடுகின்றனர். அப்போது இவ்விருவரு
டையவும் உறவுமுறையை உணர்ந்திருப்பானொருகிழவன் கண்டு
'அந்தோ! உறவறியாமல் இது என்ன விவாதம்!' எனவருந்தி
'இவன் உன் தந்தை, நீ அவனது மகன், இவன் உன்மகன்,
நீ இவனுடைய தந்தை, ஆயிருக்க எதுக்கு இங்ஙனே வீண் விவா
தம்?' என்று அறிவித்தனன். அதன் பிறகு அங்கு என்ன நடந்தி
ருக்கவேணும்? ஸம்பந்தவுணர்ச்சி உண்டானவுடனே கீழிழந்த
நாளைக்குச் சோகித்து இருவர் சரக்கும் ஒருசரக்காய், தந்தை
ரக்ஷகனாய் மகன் ரக்ஷ்யனாய் விவாதம் தொலைந்து பரமரஸம் தலைப்
பற்றி வாய்க்கொண்டவாறு பேச்சுக்கு நிலமாமோ?

அதுபோலவே நாமும் நிருபாதிகபிதாவாகிய ஸ்ரீமந்நாராயண
னுடைய "உன்றன்னோடுறவேல் நமக்கு இங்கொழிக்க வொழி
யாது" என்னும்படியான உறவின் உறுதியை உற்றுநோக்கி, ரசவ

acharya.org

ரன் ‘த்வம் மே” [நீ எனக்கு அடியன்] என்றால் “அஹம் மே” [நான் எனக்கே உரியேன்] என்னும் விவாதத்தை விட்டொழித்தால் “பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ” என்னும்படியாக உபயவிபூதியும் நாம் தாராளமாக அநுபவிக்கும் செல்வமாகுமன்றோ

மாலைப் பொழுதில் விஹாரார்த்தமாக வெளியே சென்ற ராஜகுமாரன் அழகியதொரு தோட்டத்தைக் கண்டு உள்ளே புகுந்து திளைக்க நினைத்தும் கட்டுங்காவலுமாயிருந்தது கண்டு அஞ்சி நிற்குமளவில் ‘இஃது உன் தகப்பனாருடைய தோட்டங்காண்’ என்னவே பிறகு தேங்காதே புகுந்து திளைக்கலாயிற்று என்றவொரு கதையையுங் காட்டுவார்கள்

எம்பெருமானுக்கும் நமக்குமுள்ள ஸம்பந்தம் ஒன்றன்று, இரண்டன்று, ஒன்பது வகையான ஸம்பந்தங்கள் திருவஷ்டாக்ஷர மஹாமந்திரத்திலிருந்து கிடைக்கின்றன அவற்றை மேல் ஸஞ்சிகைகளில் விவரிப்போம்

ஸ்ரீ

தேசிகனும் திவ்யப்ரபந்தமும்.

ஆழ்வார்களுடைய அருளிச்செயல்கள் தமிழ்ப்பாஷையிலே அவதரித்திருக்கின்றமையால் வடமொழியில் பரிசயமில்லாதவர்கள் மாத்திரமே ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்களைக் கொண்டு போதுபோக்கவேணுமென்றும், ஸம்ஸ்க்ருதவித்வான்களாகவுள்ளவர்கள் உபநிஷத்துக்கள் முதலானவற்றைக்கொண்டே போதுபோக்கவேணுமென்றும் சிலர் வரம்பிட்டுப் பேசுவார்கள் இவ்விஷயத்தில் ஸ்ரீதேசிகனுடைய திருவுள்ளம் எப்படிப்பட்டது என்பதைப்பற்றி இங்குச் சிறிது ஆராய்வோம்

வடமொழிப்பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்தவர் நம்முடைய தேசிகன் இவரைப்போன்ற ஸம்ஸ்க்ருத வித்வான் “ந பூதோ ந பவிஷ்யதி” என்றால் மிகையாகாது ஸம்ஸ்க்ருதவேதாந்தத்திற்கு உபப்ருமஹணங்களாகவுள்ள இதிஹாஸபுராணாதிகள் இவர்க்கு வாசோவிதேயங்கள் ஸஹகாரிஸாமக்ரிகளான ந்யாய

acharya.org

ஸ்ரீமாமலைஞரும் இவர் திருவுள்ளத்தைப் பின் செல்லுமவை. இங்ஙனே திருநாவீறுடைய பிரானாகிய இவர் பேசியிருக்கிற ஒரு பாசுரத்தைக் காணுங்கோள்,

' பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார் தண்
பொருநல்வருங் குருகேசன் விட்டுசித்தன்
துய்ய குலசேகரன் நம்பாணநாதன்
தொண்டரடிப்பொடி மழிசைவந்தசோதி
வையமெலாம் மறைவிளங்க வாள்வேலேந்தும்
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்துபாடும்
செய்யதமிழ் மாலைகள் நாம்தெளிய வோதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே "

இது தேசிகப்பிரபந்தங்களுள் ஒன்றான அதிகாரஸங்க்ரஹத்தின் முதற் செய்யுள். ஸம்ஸ்க்ருதவேத வேதாந்தங்களில் எவ்வளவு பரிச்ரமப்பட்டாலும் கலங்கின ஞானமே அவற்றால் உண்டாகுமென்றும், ஆழ்வாரருளிச்செயல்களைக் கொண்டுதான் தெளிவு பெறுத்திக் கொள்ளவேண்டுமென்றும் இதனால் காட்டினாராயிற்று. இங்கு ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களைப்பற்றிச் சொல்லுகையில் தெளியாத மறைநிலங்கள் என்று அருளிச்செய்ததை நோக்கத்தக்கது.

இதிஹாஸ புராணாதிகளைக் கொண்டு உபநிஷத்துக்களின் தாத்பர்யத்தை அறிவதைக்காட்டிலும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு அறிவதே மிகச் சிறந்தது என்கிற திருவுள்ளத்தை த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளியிலும் நிரூபித்தருளியுள்ளார், அதில் நான்காவது ச்லோகத்தில் यत्तत्कृत्यं श्रुतीनां मुनिगणविहितैस्सेतिहासैः पुराणैस्तत्रासौ सत्त्वसीम्नः शठमथनमुनेः संहिता सार्वभौमी - [யத் தத் க்ருத்யம் ச்ருதீநாம் முநிகணவிஹிதைஸ் ஸேதிஹாஸை: புராணை: தத்ராஸௌ ஸத்த்வஸீம்ந: சடமதநமுநேஸ் ஸம்ஹிதா ஸார்வபௌமீ] என்றருளிச் செய்யப்பட்டுள்ளது (இங்கு அடியேனுடைய வியாக்கியானம் வருமாறு) வேதங்களுக்கு உபப்ருஹ்மணமாக மஹர்ஷிகள் இயற்றிய இதிஹாஸ புராணங்களைக் கொண்டு நாம் யாதொரு உபயோகமடைகின்றோமோ அந்தவுப

acharya.org

யோக்ஷேமே திருவாய்மொழியினுமுள்ளது. ஆனால் அந்தப் புராணாதிகள் ராஜஸங்களென்றும் தாமஸங்களென்றும் த்யாஜ்யங்களாகவு மாகின்றன, இங்கு அப்படியில்லை, ஸத்வகுணத்திற்கு எல்லைநில மான ஆழ்வாராலே அருளிச்செய்யப்பட்டதாகையாலே கேவலம் ஸாத்விகமாயிருக்கின்ற இத்திருவாய்மொழியாகிற த்ராவிடப்ரஹ்ம ஸம்ஹிதையானது வேதோபப்ருமஹணங்களில் தலைமை பெற்றதாகும்.

ஆளவந்தார் ஸ்தோத்ரரத்நத்தில் மாதாபிதாயுவதய என்கிற ச்லோகத்தினால் ஆழ்வாரை இறைஞ்சினார். அங்கு ஸ்தோத்ரபாஷ்யத்தில் ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்துள்ள அவதாரிகா ஸ்ரீஸூக்திகள் ஆஸ்திகர்களுக்குக் கண்டபாடம் செய்யத்தக்கவை.

“अथ पराशरप्रबन्धादपि वेदान्तरहस्यवैशद्यातिशयहेतुभूते सद्य परमात्मनि चित्तरञ्जकतमे सर्वोपजीव्ये उपबृंहणे मधुरकविप्रभृति सम्प्रदायपरम्परया नाथमुनेरप्युपकर्तारं कालविप्रकर्षेपि परमपुरुषसंकल्पात् कदाचित् प्रादुर्भूय साक्षादपि सर्वोपनिषत्सारोपदेष्टारं पराङ्कुशमुनिं * मातापितेत्याद्युपनिषत्प्रसिद्धभगवत्स्वभावदृष्ट्या प्रणमति—मातेति॥

என்பவை அங்குள்ள ஸ்ரீஸூக்திகள். பராசரமஹர்ஷிபணித்த ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற்காட்டிலும் வேதாந்தரஹஸ்யார்த்தங்களை மிகத் தெளிவாகக் காட்டுகின்றவை ஆழ்வாரருளிச் செயல்கள் என்பது இங்கு ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ள விஷயம்.

யதிராஜஸப்ததியில் நம்மாழ்வாரைப்பற்றி ஒரு ச்லோகமருளிச் செய்கிறார் காண்மின், **“यस्य सारस्वतं स्रोतो वकुलामोदवासितम्। श्रुतीनां विश्रमायालं शठारिं तमुपास्महे ॥”** [யஸ்ய ஸாரஸ்வதம் ஸ்ரோதோ வகுளாமோதவாஸிதம், ச்ருதீநாம் விச்ரமாயாலம் சடாரிம் தமுபாஸ்மஹே] என்பதாமது. இதில் பிற்பாதியின் தாத்பர்யம் யாதெனில், ஸமஸ்க்ருதவேதங்கள் தத்வஹித புருஷார்த்தங்களைத் தெளிய வெளியிடவேணுமென்று மிகவும் ச்ரமப்பட்டன, ஆனால் ச்ரமத்திற்குத் தகுதியான பலன்கிடைக்கவில்லை ‘அந்தோ! நமக்கு ச்ரமமே மிக்கதே!’ என்று அந்த வேதங்கள் விடாய்த்தனவாம், அந்த நிலைமையில் மகிழ்மாலை மார்பினரான ஆழ்வார் திருவவத

acharya.org

ரித்து ஈரச்சொற்களாலே வேதங்களுக்கு உத்தேச்யமான பொருள்களைத் தெளிய வெளியிட்டருளினமையால், வேதங்களுக்கு உண்டாயிருந்த விடாய் தொலைந்ததாம் என்பதே அன்றி, 'பகவத்ஸ்வரூபரூபகுண விபூதிகளை ப்ரதிபாதிக்கும் விஷயத்தில் வேதங்களே! நீங்கள் ஏன் வீணுக ச்ரமப்படுகின்றீர்கள்? அந்தத் தொழிலை நான் வஹிக்கக்கடவேன், நீங்கள் இளைப்பாறலாம்' என்று சொல்லி ஆழ்வார் திவ்யப்ரபந்தங்களை அருளிச் செய்வாராயினர் என்பதும் கருத்தாகும் அதிகம்பீரமான தேசிக திவ்யஸூக்திகளிலே இன்னமும் எவ்வளவோ விசேஷார்த்தங்களை ஊஹித்துணரலாம்.

இனி, பாதுகாஸஹஸ்ரத்தில் ஆழ்வார் விஷயமாக அருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகளை ஆராய்ப்புகுந்தாலோ ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளை அநுஸந்தித்தவாயினால் மற்றொரு ஸரஸ்வதியைப் பேசவும் கூசவேண்டும்படி அருளிச் செயல்களுக்கு அத்தனை பெருமை அருளிச் செய்யப்பட்டுள்ளது. அதைப்பற்றி மற்றொரு கால் பேசுவோம்.

திவ்யப்ரபந்தங்களின் பெருமை தேசிகனுடைய திருவுள்ளத்தில் இடைவிடாது குடிகொண்டிருந்ததென்று நமக்கு புலப்படுகிறது. அம்ருதாஸ்வாதிநீ யென்னும் தேசிகப்ரபந்தத்திலுள்ள "அந்தமிலாப் பேரின்பமறிந்த போகும் அடியோமை யறிவுடனே யென்றுங்காத்து, முந்தைவினை நிரைவழியிலொழுகாது தம்மை முன்னிலையாந் தேசிகர்தம் முன்னே சேர்த்து, மந்திரமும் மந்திரத்தின்வழியுங்காட்டி வழிப்படுத்தி வானேறியடிமைகொள்ளத், தந்தையென நின்றதனித்திருமால்தாளில் தலைவைத்தோம் சடகோபனருளினாலே" (28) என்ற ஒருபாசுரமே போதும். ஆங்காங்கு ஊடே அருளிச்செய்துள்ள (1) "அணிகுருகை நகர்முனிவர் நாவுக்கு அமைந்தன விட்டலரிய பெரிய பெருமாள் மெய்ப்பதங்களை" (2) "குருகையில் வந்து கொழுப்படக்கிய குலபதித்தந்த குறிப்பில்வைத்தனர்" இத்யாதிபாசுரங்கள் ஆழ்வாரிடத்திலும் அருளிச்செயல்களிடத்திலுமுள்ள பக்தியே வடிவெடுத்து தேசிகனாகத் திருவவதரித்ததோ! என்னலாம்படியிருக்கின்றதேயன்றி

(1) அதிகாரஸங்க்ரஹம்—51 (2) பரமதபங்கம்—2

acharya.org

வேறொன்றுஞ் சொல்லப் போகாது ஸ்வாமி தம்மை விசேஷித்துக் கொள்ளுமிடத்தும் (1) "சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு" என்று த்ராவிடப்ரஹ்மஸம்ஹிதைக்கே தாம் இட்டுப்பிறந்தவராக அருளிச் செய்கிறார் ஸ்வாமியை வாழ்த்துகின்றவர்களும் "செந்தமிழ்த் தூப்புல் திருவேங்கடவன் வாழியே" என்கிறார்கள் ஸ்வாமி தாம் மங்களாசாஸனம் செய்தருளுவதும் (2) "தொண்டைமண்டலவேதியர் வாழ்வே தூய தென்மறைவல்லவர் வாழ்வே" என்று தமிழ்வேதமறிந்த பகவர்களுக்கேயாயிற்று

இப்படிப்பட்ட அபிநிவேசம் தேசிகனுக்கு உண்டானது இரண்டு காரணத்தினால் ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் ஆழ்வான் பட்டர் முதலான பூர்வாசார்யர்களெல்லாரும் ஒருமிடறாக ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளையே சேமநிதியாகக் கொண்டிருந்தார்களென்பது ஒருகாரணம் அவற்றில் தாம் கண்ட ஒப்புயர்வற்ற குணநிசயங்கள் மற்றொரு காரணம் "**प्रिया तु सीता रामस्य दारा: पितृकृता इति । गुणाद्रूपगुणाच्चापि प्रीतिर्भूयोऽभ्यवर्धत** - ப்ரியா து ஸீதா ராமஸ்ய தாரா: பித்ருக்ருதா இதி, குணாத் ரூபகுணாச்சாபி ப்ரீதி: பூயோऽப்யவர்த்தத" என்னுமாபோலே

இப்படிப்பட்ட மஹாசார்யபக்தியில் நாம் ஹார்த்தமான பக்தியை விஹிப்பதற்கு லக்ஷணம் அருளிச் செயல்களை வரியடைவே கற்றுவல்லாராவதே மற்றும் பலவகைகளாலும் நாம் ஆசார்யபக்தியைக் காட்டலாமாயினும் இவ்வழியிலே காட்டுவது மிகச் சிறந்ததாகும்

ஸ்ரீ

ஸ்ரீலோகாசார்யர்

ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்திற்குப் பிள்ளைலோகாசார்யர் சிறந்த மஹோபகாரகர் "**परिवर्तिनि संसारे मृत: को वा न जायते । स जातो येन जातेन याति वंशस्समुन्नतिम्** - பரிவர்த்திநி ஸம்ஸாரே ம்ருத: கோ வா ந ஜாயதே, ஸ ஜாதோ யேந ஜாதேந யாதி வம்சஸ்ஸமுந்

(1) ப்ரபந்தஸாரம்—18 (2) ஹஸ்திகிரிமாஹாத்ம்யம்—27

acharya.org

நதிம" என்று பாதருஹரியென்கிற கவிவர் அங்ஙனம் ஸ்ரீ வைஷ்ணவகுலமெல்லாம் தெய்வமாகக் கொண்டு தொழுத் திருவவ தரித்தருளின மஹாநுபாவர் இவர்.

எம்பெருமானாருடைய நியமனத்தாலே ஸித்தாந்தஸ்தாபக ராக எழுந்தருளியிருந்த ஸ்ரீபராசரபட்டருடைய திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தவர் நஞ்சீயர். அவருடைய திருவடிகளில் வாழ்ந் தவர் நம்பிள்ளை. இவ்வாசிரியர் இவ்வுலகில் தோன்றிய ஓரு விலக்ஷணஸூரியன் என்னலாமத்தனையன்றி வேறொன்றுஞ் சொல்ல வொண்ணாது. இவருடைய அமுதப்பெருக்கான திவ்யஸூக்திகளைப் பெரும்பாலும் பட்டோலை கொள்வதையே போது போக்காகக் கொண்டு இவர்க்கு நிழலும் அடிதாறும்போலே வாழ்ந்து வந்த வடக்குத்திருவீதிப்பிள்ளையின் மூத்த திருக்குமாரர் பிள்ளை லோகாசார்யர். இளைய திருக்குமாரர் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் [இவர், ஆசார்யஹ்ருதயம், அருளிச்செயல் ரஹஸ்யம், திருப்பாவை ஆறாயிரப்படி வியாக்கியானம், அமலனாதிபிரான் வியாக்கியானம் முதலான திவ்யகரந்தங்களை அருளிச் செய்தவர்]

இவ்விரண்டு திருக்குமாரர்களும் நம்பிள்ளை திருவருளாலேயே திருவவதரித்தவர்கள். 'லோகாசார்யர்' என்கிற திருநாமம் முதலில் நம்பிள்ளைக்கு இருந்தது. அதுவே வடக்குத்திருவீதிப்பிள்ளையினால் தமது ஜ்யேஷ்ட புத்ரர்க்கு இடப்பட்டது. இவ்விஷயம் உபதேசரத்தினமாலையில் "துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர் தம் உகப்பால், என்னவுலகாரியனோ வென்றுரைக்கப், பின்னை உலகாரியனெனும்பேர் நம்பிள்ளைக்கோங்கி, விலகாமல் நின்றதென்றும் மேல்" "பின்னைவடக்குத் திருவீதிப்பிள்ளையன்பால், அன்ன திருநாமத்தையாதரித்து—மன்னுபுகழ், மைந்தருக்குச் சாத்துகையால் வந்து பரந்ததெங்கும், இந்தத்திருநாமமிங்கு" என்ற பாசுரங்களினால் விளங்கும்.

முமுக்ஷுக்கள் அறிந்து உஜ்ஜீவிக்கவேண்டிய அர்த்தவிசேஷங்களை மணிப்ரவாளநடையில் இவ்வுலகுக்கு உபகரிக்கத் தொடங்கின ஆசார்யர்களுள் திருக்குருகைப்பிரான்பிள்ளான் முதல்வர். "தெள்ளாருஞானத் திருக்குருகைப்பிரான் பிள்ளானெதிரா

acharya.org

சா பேரருளால், உள்ளாருமன்புடனே மாறன் மறைப்பொருளை யன்றுரைத்தது, இன்பமிகு மாறாயிரம்” என்ற உபதேசரத்தின மாலைப்படியே திருவாய்மொழிக்கு ஸங்க்ரஹ வியாக்கியானமாகத் திருவவதரித்த ஆறாயிரப்படிக்கு முன்னே ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களில் மணிப்ரவாள நடையில் க்ரந்தமியற்றினாருமிலர். அதற்குப் பிறகு ஒன்பதினாயிரப்படி, இருபத்தினாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி முதலிய திவ்யக்ரந்தங்கள் அந்த நடையில் அவதரித்தன. இவை பகவத்குணானுபவக்ரந்தங்கள். இவற்றில் ஊடேயூடே சாஸ்த்ரார்த்த நிரூபணங்களும் பலபல இருந்தாலும் அவை குணானுபவத்திற்கே ஐகாந்திகங்களான க்ரந்தங்களாகும். அங்ஙனன்றிக்கே சாஸ்த்ரார்த்தங்களைத் தொகுத்துத் தெரிவிக்கவல்ல திவ்யக்ரந்தங்களைப் பிள்ளை லோகாசார்யரென்னும் இவ்வாசிரியரே தமது பேரருளால் க்யாதிலாப பூஜாபேக்ஷைகளின்றியே முதன் முதலாக உலகுக்கு உபகரித்தருளினவர். உபயவேதாந்த ரஹஸ்யார்த்தங்களெல்லாம் இவருடைய க்ரந்தங்களில் அழகாகவும் அற்புதமாகவும் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன. “**श्रुतप्रकाशिका यस्मै सम्प्रदर्श्य विशुद्धताम् । नीता सुदर्शनार्येण लोकाचार्यं तमाश्रये** - ச்ருதப்ரகாசிகா யஸ்மை ஸம்ப்ரதர்ச்ய விசுத்ததாம், நீதா ஸுதர்சநார்யேண லோகாசார்யம் தமாச்ரயே’ என்கிற ஸ்ரீபாஷ்யபரம்பரைத் தனியன்படியே ஸ்ரீஸுதர்சநபட்டர் ஸ்ரீபாஷ்யவியாக்கியானமாகத் தாம் ஏற்றியருளப்பண்ணின ச்ருதப்ரகாசிகையை இவ்வாசிரியர் ஸந்நிதியிலே கொணர்ந்து கடாக்ஷிப்பித்துப் பரிஷ்கரிப்பித்துக்கொண்டார் என்று விளங்குகின்றது. இவருடைய திவ்யக்ரந்தங்களே வேதாந்த ப்ரஸ்தாநத்தில் பின்புள்ள முதலிகளுக்கும் வழிகாட்டியாயிருக்கும். ஸ்ரீபாஷ்யார்த்தங்களோ ரஹஸ்யார்த்தங்களோ எல்லாம் இவ்வாசிரியருடைய திவ்யக்ரந்தங்களில் தான் மூந்துறமுன்னம் கையிலங்கு நெல்லிக்கனியாக எடுத்துக்காட்டப்பட்டன. தத்வசேகரம் முதலியன காண்க.

இவருடைய ஸ்ரீஸூக்திகள் அஷ்டாதசரஹஸ்யங்களென்று ப்ரஸித்தம். அவற்றில் முமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீவசநபூஷணம் என்கிற மூன்று ரஹஸ்ய க்ரந்தங்கள் மிகச் சிறந்தவை. இவற்றின் அமைப்பை ஆழ்ந்து நோக்குமிடத்து இவை அபெள

acharya.org

ருஷேயமா யிருக்கலாமே யல்லது புருஷ ப்ரணீதமென்று சொல்வதற்கு ஒருபடியாலும் இயலாது என்றே ப்ராமாணிகர்கள் அறுதியிட்டாயிருக்கும் ஸ்ரீபாஷ்யத்தின் பெருமைக்குத் தக்கவாறு ச்ருதப்ரகாசிகை அதற்கு வ்யாக்யானமாக அமைந்ததுபோல இந்த மூன்று ரஹஸ்யக்ரந்தங்களின் பெருமைக்குப் பொருந்த விசதவாக் சிகாமணியான மணவாளமாமுனிகளின் வ்யாக்யானம் இவற்றுக்கு அமைந்தது 'சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பொழிந்ததாம்' என்கிற பழமொழியையே நினைப்பூட்டும் "**नामूलमुच्यते किञ्चिन्नानपेक्षितमुच्यते** - நாமூலம் லிக்யதே கிஞ்சித் நாநபேக்ஷிதமுச்யதே" என்கிறபடியே பொருத்தமுள்ள வ்யாக்யானம் மணவாளமாமுனிகள் தவிர மற்று எவராலும் இயற்றமுடியாதென்பது அநுபவரஸிகர்களான அநஸூயுக்களின் ஸித்தாந்தம் பூர்வோத்தரஸங்கதிகளைக் காட்டி அவதாரிகையிடுந்திறனும், மயங்கவைத்தல் விரியவுரைத்தல் சுருங்கச் சொல்லல் என்னும் குற்றங்களுக்கு அணுவளவும் இடமின்றியே மூலத்தைப் விவரிக்கும் அழகும், பிண்டிதார்த்தத்தை ஆங்காங்கு உபஸம்ஹரித்துக் காட்டும் நேர்த்தியும், ப்ராமாணிக பத்ததியிலிருந்து இறையும் வழுவாத ஆர்ஜவமும், "**अनाघ्रातत्वं बहुगुणपरीणाहि मनसो दुहानं सौहार्दं परिचितमिवाथापि गहनम्। पदानां सौभ्रात्रादनिमिषनिषेव्यं श्रवणयोः—वाणीविलसितम्** - அநாக்ராதத்வம் பஹுகுணபரீணாஹி மநஸோ துஹாநம் ஸௌஹார்த்தம் பரிசிதமிவாதாபி கஹநம் பதாநாம் ஸௌப்ராத்ராத் அநிமிஷநிஷேவ்யம் ச்ரவணயோ:—வாணீவிலஸிதம்" என்று ஸ்ரீகுணரத்நகோசத்தில் பட்டர் அருளிச்செய்தபடியே அந்த லக்ஷணங்களின் பரிபூர்த்தி பொருந்திய அழகொழுகுகின்ற அத்புதபங்க்திகளை எழுதியருளுமியல்வும், அதிகஹந சாஸ்த்ரார்த்தங்களையும் எளிய தெளிய மொழிகளாலே ஸுலபப்படுத்தும் ஸாரஸ்யமும் மணவாளமாமுனிகளின் வ்யாக்யானங்களிலன்றி மற்று எதிலும் காணக்கிடைக்கமாட்டா இப்படிப்பட்ட மஹநீயருடைய வ்யாக்யானம் பிள்ளைலோகாசார்யருடைய மூன்று ரஹஸ்யரத்னங்களுக்கும் ஆசார்யஹ்ருதயத்திற்கும் அமைந்திலதென்றால், அந்த மூலக்ரந்தங்கள் அவதரித்தும் ஒரு பேறும் பெற்றிலோமாவோம் நமது வாசாமகோசரபரமபாக

யத்தினால் மாமுனிகளின் வியாக்கியானங்கள் அவற்றிற்கு அமைந்தன. இந்த ஸம்ஸாரமண்டலத்தில் அடிக்கொதிப்பு ஒரு புறமிருக்கச் செய்தேயும் "எம்மாவீட்டுத் திறமும் செப்பம்" என்றும் "அச்சுவை பெறினும் வேண்டேன்" என்றும் "**भावो नान्यत्र गच्छति** - பாவோ நாந்யத்ர கச்சதி" என்றும் "**वैकुण्ठवासेपि न मेभिलाष** - வைகுண்டவாஸேபி ந மேபிலாஷ" என்றும் மஹான்கள் பேசினதுபோல் அடியேனும் பரமபதத்தை வெறுத்து இவ்விபூதியில் நித்யவாஸஞ்செய்யக் குதூஹலிப்பதுண்டு, அந்தக் குதூஹலத்திற்கு முக்கியகாரணம் யாதெனில், இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகளை அநுபவிக்குமானந்தம் பரமபதத்திலும் நமக்குக் கிட்டக்கமாட்டாதே, இப்போது நமக்குக்கிடைத்திருக்கும் பாக்கியம் மறுபிறப்பிலும் இங்ஙனமே கிடைக்குமென்றும் நிச்சயிக்கவழியில்லையே, ஆதலால் இந்த திவ்யஸூக்திகளின் அநுபவானந்தம் இடையறாது செல்லுதற்குப்பாங்கான இச்சன்மமே நீடூழி வாழ்க! வாழ்க!! என்னவேண்டியிருத்தலால், இங்ஙனம் பாவியேனுடைய நெஞ்சையும் பதஞ்செய்விக்கவல்ல மாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளிலுள்ள அநுபுபூஷையே காரணமெனக்

இத்தகைய வியாக்கியானத்தோடு கூடிய ஸ்ரீலோகாசார்ய திவ்யக்ரந்தங்களை ஸேவித்து ஸ்ரீவைஷ்ணவகுலமத்தனையும் இன்புறவேணும் இவ்விபூதியில் நாம் ஆனந்திக்க வேறு வழியில்லை

இவ்வுலகாசிரியர் நைஷ்டிகப்ரஹ்மசாரியாகவே யெழுந்தருளியிருந்தவரென்று பெரியார்பணிப்பர் இவரது அமுதமொழிகளின் இனிமையையும் பெருமையையும் பற்றிப் பிறகு விரிவாகப் பேசுவோம்

लोकाचार्याय गुरवे कृष्णपादस्य सूनवे ।

ससारभोगिसदष्टजीवजीवातवे नम ॥

acharya.org

ஸ்ரீ

புஸ்தகவிமர்சம்

(1)

சிஷ்டப்ரயோக ஸங்க்ரஹம்—இப்பெயர் பூண்ட வொரு ஸம்ஸ்க்ருதக்ரந்தம் (60 பக்கங்கள் கொண்டது) அபிப்ராய ப்ரகடனார்த்தமாக நம்மிடம் அனுப்பப்பட்டு வந்திருக்கின்றது. திருவல்லிக்கேணியிலெழுந்தருளியிருக்கும் வ்யாகரண வித்வான் ஸ்ரீமத் உபயவே திருமங்கலம் நடாதூர் நரஸிம்ஹாசாரியார் ஸ்வாமியால் இப்புத்தகம் இயற்றப்பட்டு தேவநாகராக்ஷரத்தில் அச்சிடப்பட்டுளது. ஸம்ஸ்க்ருத பாஷாமயங்களான முன்னோருடைய சில க்ரந்தங்களில் உள்ள அருமையான சில ப்ரயோகங்களுக்கு வியாகரண சாஸ்த்ரப்படி உபபத்திகள் காட்டுவதற்கும் தவறுதலான பாடங்களைப் பரிஹரித்து ஸ்வபாடங்களை வெளியிடுவதற்கும் முயற்சி கொண்டு இப்புத்தகமெழுதியிருப்பதாக உபோத்காதத்தில் காண்கிறது. இவ்வாசிரியர் வியாகரணசாஸ்த்ரத்தில் நல்ல வல்லவர் என்பதும், சென்னைப் ப்ரஸிடென்ஸிகாலேஜில் ஸம்ஸ்க்ருத பண்டிதராக எழுந்தருளியிருந்தவரென்பதும் பலர்க்குந் தெரிந்திருக்கும். இவருடைய இப்புத்தகத்தில் நமக்குத் தோன்றின ஸந்தேஹங்களைக் கீழே விவரிக்கின்றோம். அந்த ஸ்வாமியே ஸமாதானம் எழுதி அநுக்ரஹிப்பாராயின் அதனையும் இப்பத்ரிகையிலேயே வெளியிடுவோம். வியாகரணசாஸ்த்ரீய விஷயமாதலால் ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே எழுதலாகிறது.

श्रीकैरविणीक्षेत्रवास्तव्यै पण्डितै निरुमङ्गलम् नडादूर् नरसिहाचार्यै प्रणीय प्रकाशिते शिष्टप्रयोगसग्रहनाम्नि लघीयसि ग्रन्थे दृष्टि प्रसारितवतामस्माक प्रादुर्बभूवुस्सुबहवस्संदेहा । सर्वानपि तान् न वयमिदानीं प्रकाशयाम । अपि तु त्रिचतुरानेव विशयान् सम्प्रति विज्ञापयाम । परान् परस्तात् ।

तत्र ४२ तमे पृष्ठे—"तत्त्वमुक्ताकलापे पु १९७ गृहीतम् 'एतं सेतुं तीर्त्वा' इति च उपनिषद्वाक्यम् । अत्र * आगमशास्त्रमनित्यम् * इति परिभा-

acharya.org

षैव गति ” इति विलिखितमवलोक्यते। **तीर्त्वा** इत्यस्मिन् प्रयोगे विचिकित्साया अवकाशलेशोपि नास्ति। **तरित्वा** इति भवितव्यमिति विदुषामेषा मनीषा कथन्नाम साधीयसी? **तरितुम्** इतिवत् तरित्वेति हि युक्तमिति व्याकरणशास्त्रपरिचितिन कथमहो कथयितुमर्हन्ति? * तीर्त्वा भूतेशमौलिस्रजममरधुनीम् * इति भट्टमुरारिरपि प्रायुङ्क्त। एव सुसप्रतिपन्ना प्रयोगा जाग्रति शतश। वस्तुत शाब्दिको निष्पत्तिरप्येवमेव। न पुन स्तरित्वेति। तदत्र अपशब्दत्वशङ्का कथम्। **आगमशास्त्रमनित्य**मिति परिभाषया समाहितिप्रकाशन च कथतरा युज्यते? परिभाषेन्दुशेखरे * सज्ञापूर्वकविधेरनित्यत्वम् * आगमशास्त्रमनित्यम् * इत्यादि परिभाषावष्टम्भत * सागर **ततुकामस्ये**त्यादिप्रयोगान् समाहितवता केषाञ्चिदुक्तिमनूद्य “ तन्न, भाष्ये अदर्शनात् ” इति प्रत्याख्यात खलु। तदुपरि यत्किञ्चिद्विलेख्न किमनावश्यकम्। परिभाषैव गतिरिति केवल विलिख्य विरति कथमु पद्यताम्। वस्तुत परिभाषैव गतिरिति वयमपि (रूपान्तरविषये) व्याख्यासु व्यलिखाम। परिभाषेन्दुशेखरोपरि च किमप्यलिखाम। तथा वा अन्यथा व' महामतिभिरमीभि कुतो नु न किमप्यलिख्यत? तीर्त्वेत्यस्य कथमपशब्दत्वशङ्का। इत्येवात्र न प्रबलो विशय ॥

अथ ४३ तमे पुटे—* उदधिगमन्दराद्रिमथिमन्थनलब्धपयोमधुररसेन्दिराह्वसुधसुन्दरदो परिघम् * इति सुन्दरबाहुस्तवीयसूक्तिमुपादाय, “ अत्र ‘ सुध ’ इति अमृतपर्यायतया कूरेश प्रायुङ्क्त। तत्र सुधा इति स्त्रीलिङ्गत्वात् इन्दिराह्वा या सुधा तस्या सुन्दरदोरेव परिघ –अर्गल –रक्षक यस्य तथाभूतमित्यर्थ। तथा च सुधाशब्दस्यात्र छन्दोभङ्गावहत्वात् ‘सुध’ इति अप्रयोज्यत्वात् ‘ सुधि ’ इति प्रयुक्त भवेत्। * उपसर्गे घो कि * इति कर्मणि किप्रत्ययान्त पुलिङ्ग इति ज्ञेयम्। विधि निधि इत्यादिवत्। अत ‘ सुध ’ इत्यपपाठ।” इति सहसा व्यलेखि। मूलस्य अयमर्थ इत्यनवबुद्धयैव अस्थाने चोद्यावतारण पण्डिताना कच्चिद्युज्यते? **‘ हरिमहमद्राक्षम् ’** इति श्रवणमात्रे स्त्रीलिङ्गस्य द्राक्षाशब्दस्य कथ द्राक्षमिति क्लीबनिर्देश इति चोद्यमुपक्षिपन्त प्रति “ ज्ञान-

acharya.org

शब्दस्य क्लीबत्वेपि ज्ञानानन्दमयमित्यत्र 'ज्ञाना' इति यथा स्त्रीलिङ्गनिर्देशस्तथैव न दुष्यतीति भाव्यम्" इति प्रत्युत्तरप्रदानवत् हहो! कोयमाक्षेप! कोय तन्निरासक्रम इति चित्रीयामहे। "மந்தரம நாட்டியன்று மதுரகொழுஞ் சாறுகொண்ட சுந்தரத்தோளுடையான" इत्येषा गोदासूक्ति श्रीवत्साङ्कमिश्रै * उदधिगमन्दराद्रिमथिमन्थनलब्धपयोमधुररसेन्दिराह्वसुधसुन्दरदोःपरिघम् * इत्येव विवर्तिता। अत्र इन्दिराह्वा सुधा येन लब्धा-इति बहुव्रीहिविवक्षया सुधेत्यस्य भाषितपुंस्कतामनवधाय विचिकित्साप्रकटनम् अथ अपहास्यसमाहितिप्रकाशन च कथ नु भो! पूर्णप्रज्ञाना कृत्य भवति?

अथ ४१ तमे पुटे—*नित्य काम्य परमपि कतिचित् त्वय्यध्यात्मस्वमतिभिरममा * इति श्रीरङ्गराजस्तव—उत्तरशतकस्थश्लोकरत्नमुपादाय, "अत्र 'त्वय्यध्यात्म' इत्यत्र **त्वय्यध्यात्म** इति भाव्यम्। अममा इत्यत्र **अमथाः** इति च भाव्यम्। अन्यथा नान्वेति। 'मनु अवबोधने' इत्यस्मात् अमथा इति रूप भवति। किञ्च एतत्पूर्वपद्ये च 'ज्ञानं त्वमून् सममथास्सममत्युदारान्' इति इदमेव क्रियापद प्रायोजि। तस्मात् अमथा इत्येव भाव्यम्। अममा इति अशुद्ध लेखकप्रमादागतमेव। तथा 'त्वयि' इत्यपि प्रामादिकमेव" इति अत्यन्तसाहसिकत्वपिशुनमस्ति लिखितम्। वस्तुतस्सुपाठानामप्यपपाठत्वेन विदूषणे को लाभ एतेषा मनीषिणाम्? अग्निना सिञ्चतीतिवाक्यवदपि कञ्चिदप्यर्थमप्रयच्छतोऽपपाठस्य स्वतन्त्रतया प्रकल्पने किं बीजम्? **अममाः**—ममकाररहितास्सन्त, **त्वयि**—श्रीरङ्गनाथे भगवति, **न्यस्य**—निक्षिप्य इत्यर्थविवक्षया भट्टपादैर्यथाऽनुगृहीतम् तथैव कोशेषु पाठो विराजते। व्याख्यायि चैवमेव प्राचीनैरपि प्राज्ञपुङ्गवै। असावेव गुरुवरोऽष्टश्लोक्या यथा [* नित्य त्वहं निर्मम * इति]ममकाररहित इत्यर्थे निर्मम इति प्रायुङ्क्त, यथा च वेदान्तदेशिकोप्यच्युतशतकादिषु प्रयुङ्क्ते स्म, तथाऽत्रापि तादृशार्थविवक्षयैव अममशब्दमप्यन्वग्रहीत्। **अमथा** इति तिङन्तपदस्य कास्विदत्र प्रसक्ति? पूर्वश्लोके तादृश रूप प्रयुक्तमिति प्रदर्शन च कस्मै फलाय? 'त्वय्यध्यात्म' इति

acharya.org

भाव्यमिति लिखताममीषा मनसि कोऽर्थोभिसहित इति न विद्म । व्याकरणग्रन्थं पठन् कोपि विद्यार्थी एकाज्ग्रहणमिति पद पठितवान् । तदाकर्ण्य गुरु 'रे मूढ ! एकादशीग्रहणमिति परिष्कृत्य पठ' इत्यादिदेश । अथ 'एकादश्या चन्द्रस्य सूर्यस्य वा ग्रहणम् [उपराग] नास्ति किल' इति विद्यार्थिनाऽनुबोधितस्स 'सत्य सत्यम्, राकाशशिग्रहणमिति परिशोध्य पठ' इत्यनुशास्तिस्मेति कथामिमां स्मृतिपथमधिरोहन्तीं प्रयत्नेनापि न वय निगूहयितु प्रभवाम । "अन्यथा नान्वेति" इति लिखन्त एते महामतय स्वाविष्कृते पाठे कीदृगर्थान्वयमवधारयामासुरिति पर जिज्ञासित न ।

अद्य प्रस्तुतानामेतेषा विषयाणा समाहितिमुपलभ्य, अथावशिष्टानपि विशयान् विवरीतुमुत्सहेमहीत्यखिलमवदातम् ॥

---

(2)

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷிணீ —இதன் மூன்றாவது ஸஞ்சிகை (சென்ற ஆவணிமாதத்தில் வெளிவந்தது) வரப்பெற்றோம். இதன் கீழ்ஸஞ்சிகைகளிலுள்ள விஷயங்களைப்பற்றி விரிவான விமர்சம் ஏற்கனவே வெளியிட்டிருக்கின்றோம். ஸ்ரீதேசிகனுடைய திவ்யஸூக்திகளுக்கு அரிய பெரிய வியாக்கியானங்களை வெளியிடுவதிலேயே செலவிடவுரிய அவகாசத்தை ஸுதராம் அநாவச்யகங்களான விஷயங்களின் விசாரங்களில் செலவிடாமலிருப்பது நன்று என்று இப்பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமதுபய வே (திருச்சி) ஏ வி கோபாலாசார்யஸ்வாமி ஸந்நிதிக்குச் சில விண்ணப்பங்கள் எழுதிக்கொண்டோம். மிகவிரிவாக எழுதத் தொடங்கிய மறுப்பு நூலை இடையில் நிறுத்தமுடியாதென்று அந்தஸ்வாமி பதில் திருமுகமருளியுள்ளார். ஆனாலும் ஸ்ரீஹஸ்திசைலசிகரோஜ்ஜ்வல பாரிஜாதமான பேரருளாளன் திருவடி வாரத்திலே அந்தகரணசுத்தியுடன் அடியோம் செய்யும் பிரார்த்தனை யாதெனில், "பழுதே பலபகலும் போயினவென்று அஞ்சியழுதேன்" என்றும் "ஊமனார் கண்ட கனவிலும் பழுதாயொழிந்தன கழிந்தவந்நாள்கள்"

acharya.org

என்றும் ஆழ்வார்கள் அநுஸந்தித்த பாசுரங்கள் நமக்காகவேயா கும் அங்ஙனம் நமக்குப் பலநாட்கள் பாழாய்ப்போயின வாயினும் இனிக் கழியுங்காலமாவது சேமமாகக்கழியவேணும் ஸ்ரீகோபாலா சார்யஸ்வாமி போல்வார்களும் ஸ்ரீவைஷ்ணவவுலகுக்குப் பெரிதும் பயன்படக்கூடிய ப்ரவ்ருத்திகளையே மேற்கொள்ளவேணும், இங் ஙனே கடாக்ஷித்தருளவேணும்—என்பதே

ப்ரக்ருதஸஞ்சிகையில் பாதுகாஸஹஸ்ராவதார தத்வவிமர்சம் என்பது 16 பக்கம் வெளிவந்திருக்கிறது இதில் ஆறுவிஷயங்கள் ஸ்ரீகோபாலாசார்யஸ்வாமியால் விரிவாக விசாரிக்கப்பட்டிருக்கின் றன அவற்றில் எமது அபிப்ராயம் அதிஸம்க்ஷேபமாக இங்கு வெளியிடப்படுகின்றது „ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ! முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ - ந ச ஸீதா தவயா ஹீநா ந சாஹமபி ராகவ!, முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாநமதஸயாவிவோததருதௌ” என் கிற ஸ்ரீராமாயணச்லோகத்தின் அந்வயவிஷயமான சர்ச்சைக்குச் சொல்லவேண்டியவை வ்யாமோஹபரசமௌஷத முதற் பகுதியில் (பக்கம் 39 ல்) சுருங்கச் சொல்லப்பட்டுள்ளன இதில் ஸாரமான விஷயம் யாதெனில், இது ஆர்ஷப்ரயோகம் இப்படிப்பட்ட ப்ர யோகம் லௌகிககவிகளின் வாக்குகளில் தேடினாலும் கிடைக்க மாட்டாது „ந கௌரவேயோ ந ச ஆத்மஜோ ந ஸௌஹ்ருதோ நா- ப்யாப்தோ ஜநோ ந ஸ்வஜநோ கரோதி ந ச மாதுலேயம் ந பேயோபா நகஸ்ய பாமதி, பவந்தி” என்பதும் இப்படிப்பட்டதே இதில் ந்வ் யோத, நலோப இத்தியாதிகளை ஏகபதமாகவே கொண்டு சிலர் நிர்வஹிக்கும் புடைகளையும் நாமறிவோம் ஆனால் ஆர்ஷமென்று சொல்லிப்போருவதே நன்று என்றும், வ்ருத்தி யோஜிக்கும் ஆர்ஷ மென் ஸமர்த்தனீயமல்லவென்றும் பெரியோர்கள் பணிப்பர் க்ரியாப் தத்தை ஆவ்ருத்திபண்ணிக்கொள்ள முடியாதவிடங்களில் காணப் படும் ஸம்ப்ரஹர்ஷம் ஆர்ஷத்வேந ஸஹ்யம் என்பது சிறந்த ஸித்தாந்தம் „ந ச ஸீதா த்வயா ஹீநா“ என்ற ப்ரக்ருதஸ்தலத் திலும் இங்ஙனமே சொல்லலாமாயிருக்கச்செய்தேயும், வ்ருத்தாந் தம் வைராக்யபரமாகவும் ஒரு யோஜனை பண்ணிப் பொருந்

தவிடலூமெனறு நமபிளளைகருத தோனறவே ஈடடில அபபடிப படடயோஜனை அருளிசசெயயபபடடது “ஸம்ஹவதேூகவா கூேகவ வாகூேஹெஹா ந யுஜூதெ – ஸமபவதயேகவாக யதவைவ வாகயபேதோ ந யுஜயதே” எனகிற நிபநதனை ஆதத ஸவாரஸயமுளள விடஙகளிலே குறுககிடாதெனபது பூருவாக ளின திருவுளளம “தகெகெங்கௗமுஸி மொஷுாம் ஹஜது ஷஹஊதிம் தாவகீ மாவவொகூ: – தாககைககாலமபேகோஷடயாம பஜது பஹமதிம தாவகீ லாகவோகதி” எனறருளிசசெயத தேசிகன திருவுளளமும இதறகிணஙகியதே காவலிற புலனை வைதது எனறவிடததுப பெரியவாசசானபிளளை அருளிசசெயதுளள ஒரு ஸ்ரீஸூகதியும இதனை வறபுறுததும ஆகவே நமபிளளையின யோஜனையில ஸவாரஸயாதிசயமுளளதுபறறி ஒரு அவதயமும சொலலபபோகாது ஆரஷமாகையாலே இரணடு நரு இருபபதில குறையொனறுமிலலையெனறு திருவுளளமபறறியருளின தேசிகனுடைய ஸ்ரீஸூகதியும அநவதயம மறறைபபடியுளள வாகராசிகள உபேகூிககததககவை

2 வரிவநி - பரிபநதி” சபதம அஸாதுவெனறு பரஸஙகமேகிடையாது இது சாநதஸபதமா? லௌகிகபதமா? எனபதே விசாரம எததனையோ சாநதஸபதஙகளை மஹாகவிகள தாஙகள பரயோகிதது வருகிறாகளெனபது அபலபிககவொணணாத விஷயம சாநதஸமெனறபோதே அஸாது வெனறதாக ஆகமாடடாது திருவையாறறில ஒரு விதவசசிரோமணிஸவாமி பரிபநதி சபதம லௌகிகமாக வொனறும சாநதஸமாக வொனறும உணடெனறு ஸஞசிகையெழுதினா அதறகுமேல வரிவநிவஞஜுஹ ஜீ [பரிபநதி பஞசபஙகீ] எனகிற விரிவான காநதம வடமொழியில எமமால மூனறு வருஷஙகளுககு முன பிரசுரஞ செயயபபடடுளளது அநத சபததிறகு சாநதஸதவமேதான வடிவு அது லோகவேதஸாதாரணமனறு எனபது ஸகலவையாகரணாகளின ஸிததாநதமெனறு அதில பரககநிரூபிததிருககிறோம அவவளவோடு விவாதசாநதியாயிருககிறது அநத காநததததை நமது நணபா கடாகூிததருள வேணுமென்று பிராாததிககபபடுகிறது

3 யதிராஜஸப்ததியில் “ ரஸபரிமளஸலாகாகோஷ்ட ஸம்புடத்வந்த்வபேதநம் லக்ஷணவணிஜ: கர்பூராகர்கம் கிமிதி [illegible] - ரஸபரியளசலாகாகோஷ்ஸபுடத புடபேதநம லக்ஷணவணிஜ காபபூராககம கிமிதயபிமநவதே ” என்றவிடத்தில் விசாரம் வெகுநாளாக நடைபெற்று வருகிறது ஸ்வாமி தேசிகன் தவறுதலாகக் கவநம் பண்ணிவிட்டாரென்று ஒருமூடனும் சொல்லமாட்டான் பலபல ஸ்ரீஸூக்திகளில் பலஹேதுக்களாலே பாடு ஸகாவித்யம் விளைந்திருப்பதுபோல இங்கும் விளைந்திருப்பதாகவே நாம் கூறியிருப்பது அப்படிப்பட்ட ஸகாவித்யம் யாதொன்று மில்லையென்றும் உள்ள பாடத்தில் யாதொரு அநுபபத்தியும் இல்லையென்றும் சில வித்வான்கள் எழுதினார்கள் ஸ்ரீகோபாலா சாயஸ்வாமியும் அங்ஙனமே யெழுதுகிறார் புடபேதநே என்று ஏழாம் வேற்றுமையாகப் பாடமிருக்கலாமென்றும் அப்போது ஆக்ஷேப ப்ரஸக்தியே யில்லையென்றும் எழுதுகிறார் ஆக்ஷேபம் செய்ய ஆருக்கதிகாரம் ? ஒருவன் ஆக்ஷேபித்ததாகவே கொண்டாலும் ஸர்வஜ்ஞரான ஸ்வாமியின் ஸூக்தியில் அஜ்ஞனொருவன் செய்த ஆக்ஷேபத்தைப் பொருள்படுத்திப் பலமஹான்கள் திரண்டு திரண்டு விடையளிக்க என்ன ஆவச்யகதை ? சுத்தபாடத்தை நாம் ஸேவிக்கப்பெறுவதற்கு முன் எல்லாரும் ஓதுகிற பாடத்தையே தான் நாமும் நெட்டுருப் போட்டு ஓதிவந்தோம் அப்போது ஒரு அநுபபத்தியும் நமக்குத் தோன்றாமலே யிருந்தது பராசீநரான ஒரு ஆசிரியர் [அஸ்மத்குலீநர்] வியாக்கியானித்தபாடத்தை உணரப்பெற்ற பின்பு அதில் அதிகஸ்வாரஸ்யம் தோன்றிற்று உள்ள பாடத்தில் அநுபபத்தியும் புலனாயிற்று ப்ராமாணிகர்களான வித்வான்களும் எம்முடைய உபபாதநங்களைக் கேட்டு உவந்தனர்

யாம்கண்ட சுத்தபாடம் யாதெனில், கர்பூரோத்க - [காபபூரோதகம] எனப்படுவதே அமரகோசத்தில் “ மதலலிகாமசாச சிகா பரகாணடமுதகதலலஜேள பரசஸதவாசகாநயமுநி ” என்றுள்ளது பாவிதத்மே “ ஸஜோத்வள ஏணர்வஸம்ஸயோ: - ஸங்கோச்கேள கணுரசமஸயோ ” என்று வியாகரணஸூத்ரமுமுண்டு பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவ பூர்வசதகத்தில் (102) * அநூத்க்கரோத்வள - அநுமணிமகரோதகேள் * என்று

acharya.org

ப்ரயோகித்திருக்கிறார். அந்த ஊஷ்வ சப்தமே தேசிகனாலும் கர்ப்பூரப்பத்தோடு சேர்த்துப் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. கர்ப்பூரச்ரேஷ்டமென்றபடி அடுத்துள்ள "ஸுஹிருந்வதே - அபிமந்வதே" என்ற க்ரியாபதத்தை ஆழ்ந்து நோக்கினால் முன்னே ஸ்வார்ஷம் இருக்கத் தகுதியில்லையென்பது விவேசகவிசாரதர்களுக்கு விளங்கும். ஸ்வார்ஷ் என்று ஸ்வாமி ஸாதித்திருந்தால் அதற்குச்சேர 'ஸ்யம் ந விஜாநதே' என்றே மேல்வாக்கியம் ஸாதிக்கப்பட்டிருக்கும். 'கர்ப்பூரத்தின் விலையை என்னவென்று அபிமானிக்கிறார்கள்' என்கிற வாக்கியம் ஒழுங்குபட்டிருக்கிறதாவென்று புத்திமான்கள் பரிசீலிக்கவேண்டும். கர்ப்பூரத்தின் விலையை எங்ஙனம் தெரிந்துகொள்வார்கள்? என்றால் இது வார்த்தைப்பாடாகும். க்ஷிதௌ ஹிருந்வதே என்பதற்கு இதுதான் பொருள் என்னில், அதற்கு நாம் என்ன சொல்லப்போகிறோம்? ப்ராமாணிகர்கள் அங்ஙனம் சொல்லார்கள் என்பேமத்தனை. 'உப்பு வாணியர்கள் கர்ப்பூர ச்ரேஷ்டத்தை என்னவென்று மதிப்பிடுவார்கள்' என்பது ஒழுங்குபட்டான வார்த்தையாதலால் அங்ஙனமே ஸ்வாமியால் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. மூன்றாவது பாதமாகிய விசேஷணம் எங்கு அந்வயிக்கிறது? என்கிற விசாரம் ஒருபுறமிருக்கட்டும். நான்காவது பாதத்தின் முடிவில் வார்த்தையே ஓட்டவில்லையே. 'நன்றாக ஓடுகிறது, ஒரு குறையுமில்லை' என்பவர்கள் தமக்கு இஷ்டமான பாடத்தையே தாராளமாக ஆதரித்திடுக. விஷய ஸ்வாரஸ்யம் நெஞ்சுக்கு விஷயமான பின்பும் ஆத்மாவை வஞ்சிக்குமவர்களைப் பற்ற நாம் என் சொல்வோம்! இந்த யதிராஜஸப்ததியிலேயே "மூலே நிவிசய மஹதாம் நிகமத்ருமாணாம்" என்றவிடத்து நிவிசய என்பதே சுத்தபாடமென்று நாம் உணர்த்த உணர்ந்துவைத்தும் நிவேசய என்றே சொல்வோமென்று ஆக்ரஹிப்பார் திறத்திலே நாமென் செய்தோம்? யாதவாப்யுதயம் நான்காவது ஸர்க்கத்தில் (87) "நிவிசய மூலேஷு வநத்ருமாணாம்" என்றவிடத்துங்கூட நிவேசய என்று திருத்தினாலும் நாம் செய்யலாவதொன்றில்லையே. வெய்யிலிற் செல்வாரை நிழலுக்கழைக்கலாம், வெய்யிலே எமக்கு இனிதென்பாரை வலிப்பாரார்?

acharya.org

ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி (பக்கம் 44ல்)—“விசேஷணத்தோடு கூடிய விசிஷ்டத்திற்குச் சொல்லியது விசேஷ்யத்தில் ஓட்டாமல் ஸ்வாயித்தமானால் விசேஷணத்தில் ஓட்டும் என்றும் ஒரு நியாயம். ரஸபரிமளாதிகள் விசேஷ்யமான வில்லில் ஓட்டக்கூடாததால் விசேஷணமான கர்ப்பூரத்தில் ஓட்ட என்ன தடை?” என்கிறார். இந்த ஸ்வாமியின் திருவுள்ளத்தினால், ‘உமாஸுதம் ஶோகவிநாஶகாரணம் நமாமி விக்நேஶ்வரபாதபங்கஜம்’ [உமாஸுதம் சோகவிநாச காரணம் நமாமி விக்நேச்வர பாத பங்கஜம்] என்பது போன்ற கவிதைகளும் சாஸ்த்ர ஸம்மதங்களே போலும். உமாஸுதமென்ற விசேஷணம் பாதபங்கஜத்தில் ஓட்டக்கூடாததால் விக்நேசவரனில் ஓட்ட என்ன தடை? என்று ஸாதிக்கப் ப்ராப்தமேயன்றோ? *ஶைவ்யோ ராஜாத்ருஷ:* இத்யாதிகள் பிசகு என்று நிஷ்கர்ஷித்த வ்யுத்பத்திவாதம் முதலிய க்ரந்தங்களுக்கும் ஜலாஞ்ஜலிபோலும்.

கர்ப்பூரத்தின் வில்லில் ரஸபரிமளங்களை ஆரோபிக்கலாமென்று சொல்லி, “என்ன மலிவான வில்? இதன் ரஸபரிமளத்திற்கு இதனை மலிவான வில்லேயா என்று சலாகோஷம்” என்று முடித்திருக்கின்றார். தமிழ் ரீதி வேறு, ஸம்ஸ்க்ருத ரீதி வேறு. ‘நீங்கள் சொல்லவேணும்’ என்பதற்குச் சரியாக, ‘யஸ்ய வக்தவ்யம்’ என்னலாகுமோ? “க்வசிச்சாஸ்த்ரஸ்ய ரஸம் வர்ஷிஷ்ணு ஶ்ராவயேத்” என்று சொல்லப் பொருந்துமா என்று பாருங்கள். பொருந்துமென்று தோன்றினால் ஸ்வஸ்தி என்கிற பாடத்தையே ஆதரிக்க. இனிமேல் இதில் விசாரம் விரும்பத்தக்கதன்று.

4. பகவத் த்யாந ஸோபாந ஸ்துதியில் “வலதி புஜயோ:” [வலதி புஜயோ] என்றவிடத்து வலதி என்ற பரஸ்மைபதம் அஸாது என்று நாம் பணித்ததாக எழுதியுள்ளார் பட்டருடைய ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் “ஸவ்யம் உத்க்ஷிப்ய” என்றவிடத்து உத்க்ஷிப்ய என்ற ஆத்மநேபதம் அஸாது என்று ஒருத்தவான் ஆக்ஷேபிக்க, அதற்கு விடையாக ‘அப்படியானால் வலதி என்று பரஸ்மைபதியாகப் ப்ரயோகித்ததும் அஸாதுவென்ன

acharya.org

வேணும்-என்று ப்ரதிபந்தியாக உபந்யஸித்தோம். தேசிக திவ்ய ஸூக்திகளுள் எதில் என்ன தோஷம் நாம் காட்டியிருந்தாலும் அது ப்ரதிபந்தியாகவே காட்டப்பட்டிருக்குமென்பது ஸத்யம். ‘அங்கு எப்படி ஸமாதானமுறையுண்டோ அப்படியேதான் இங்கும்’ என்று தூஷகர்களுக்கு வாக்பந்தநம் பண்ணுகிற புடையிலே உபந்யஸிக்கப்பட்டவற்றை மஹான்கள் பற்றிக்கொண்டு ப்ராதம்பனனுவது பாங்கன்று. மணவாள மாமுனிகள் முதலிய பூர்வாசிரியர்களின் அநவத்ய திவ்ய ஸூக்திகளிலே தூஷணாபாஷணங்களைப் பண்ணினார்க்கு விடையளிக்குங்கால் உபந்யஸித்தவற்றுக்கு என்ன தாற்பர்யமென்று அறிவது அறிஞர்கட்கு எளிதேயன்றோ? ஆழ்ந்து பாராமல் தூஷிப்பதென்று புகுந்தால் தேசிக திவ்ய ஸூக்திகளிலும் இங்ஙனே ஆபாத தூஷணங்கள் பல பேசலாமன்றோ என்று காட்டுவது குற்றமாமோ ?

வியாகரண சாஸ்த்ரத்தில் ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமியின் நிரூபணத்தினால் தெளிவுபெற்ற தக்கவர்களாக நாம் இருக்கவுமில்லை. அந்த ஸ்வாமி வெளியிட்டுள்ள சில ஸ்தோத்ர வியாக்கியானங்களில் த்விஜந்த-க்வ-ங்களை உக்த்வாவமாக ப்ரயோகிக்கப்பட்டிருப்பதை நாம் நட்பு முறையில் அந்த ஸ்வாமிக்குப் பல தடவை உணர்த்தியிருக்கிறோம். சப்த சாஸ்த்ரம் பயிலாத குறையினால் அப்பிழைகள் நேர்ந்து விட்டதாகவும் இனிமேல் அவஹிதரா யிருக்கப் போகிறதாகவும் ஸ்ரீமுகமருளியுள்ளார். தசாவதார ஸ்தோத்ரத்தில் * ஶோபாயை ஜகதாம் ஜயந்தி * என்ற ச்லோகத்தின் வியாக்கியானத்தில் “(ஸமவாய) ஸம்ப்ருத்ய ஶேஷாத்மநா ஸஹஸ்ரை: ஶிரோபி: உபயந்தி ?” “அநிஶம் ரக்ஷந்தி அநேந” இத்யாதி ப்ரயோகங்கள் நமது நண்பர் செய்துள்ளவை. [illegible] இவற்றை நாம் எடுத்து உணர்த்தியிருக்கிறோமென்பதையும் இந்த ஸ்வாமியே தமது ஸஞ்சிகையில் எழுதியுள்ளார்.

5 ப்ரபோத சந்த்ரோதய நாடகத்திலுள்ள ஸாரமான ச்லோக ரத்னங்களைத் தனியே யெடுத்துப் பதிப்பித்தவொரு மஹநீயர் “ஶ்ரேயாப்யுதயவந்த்யம்” [குரோரப்யவலிப்தஸ்ய]

என்கிற (மத்யே உதாஹ்ருதமாயிருந்த) ஆர்ஷ ச்லோகத்தையும் அந்த நாடகத்தின் ச்லோகமாக மயங்கி அவற்றோடு சேர்த்துப் பதிப்பித்துவிட்டார்—என்கிறவொரு வழுவை ஒரு புத்தகத்தில் நாம் குறிப்பிட வேண்டி நேர்ந்தது, குறிப்பிட்டிருந்தோம். அவ் விஷயத்தை யெடுத்துக்கொண்டு "அண்ணா இங்கு ஏமாந்தே போனார், ஆகமாத்தான் தூஷிதமாயிற்று" இத்யாதிகளான சிறிய வார்த்தைகளை இப்பெரியார் வரைந்துள்ளார். விஷயத்திற்கு மாத்திரம் விடை யளிக்கின்றோமிங்கு. குரோரப்யவலிப்தஸ்ய என்கிற ச்லோகம் ஸ்ரீராமாயணத்திலுள்ளதே யன்றி நாடகத் தன்று என்பது நாமெழுதி யிருந்தது. 'அது ஸ்ரீராமாயணத் தன்று, தாம் சாஸ்த்ரத்திலிருந்து ஸ்ரீராமாயணத்தில் உபாத்தம்' என்கிறார் நண்பர். கோவிந்தராஜீயம் முதலிய வியாக்கியானங் களில் அங்ஙனம் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ளதாம். நான்காவது பாதம் * கார்யம் பவதி ஶாஸநம் * என்றுதான் ஸ்ரீராமாய ணத்திலுள்ளதாம். *பரித்யாகோ விதீயதே * என்று நாட கத்திலுள்ளபடி மஹாபாரதத்தில் காணப்படுகிறதாம். ஆகவே மஹாபாரதத்திலிருந்துதான் நாடகக்காரர் எடுத்திருக்கக்கூடு மாம். ஶ்ரத்தாவ்ருதே ॥ ஸ்ரீராமாயணம் பம்பாய்ப் பதிப்பிலும் காசிப்பதிப்பிலும் (பாடபேதங்களில்) கார்யம் பவதி ஶாஸநம், பரித்யாகோ(ஹி)விதீயதே, ஸம்ப்ரஹாரோ(ஹி)விதீயதே என ஐந்து வகைப் பாடங்கள் காணப்படுகின்றன. பலவாயிரம் பாடபேதங்களுள்ள ஸ்ரீராமாயணத்தில் இது வியப்பன்று. இது நிற்க. தாம் சாஸ்த்ரங்களிலிருந்து உதாஹரிப்பதாக ஸ்ரீராமாய ணத்தில் மற்றும் பல ச்லோகங்களுமுண்டு, அப்படிப்பட்ட சில ச்லோகங்கள் மநுஸ்ம்ருதி முதலியவற்றில் பல வேறுபாடுகளுடன் காணப்படுவதுமுண்டு, ஆகரம் கிடைக்கப் பெறாதவைகளுமுண்டு. பெரும்பாலும் ஆத்தர்த்துவாதமே செய்யப்படுவதாக ஸித்தாந் தம். இதைப்பற்றின விரிவு வேண்டும்போது வெளிவரும். தாம் சாஸ்த்ரங்கள், ஸ்ரீராமாயணம், மஹாபாரதம் இத்யாதிகளை யெடுத் துக்கொண்டு, எது முற்பட்டது, எது பிற்பட்டது என்று பௌர் வாபர்ய வ்யவஸ்தையை ஸப்ரமாணமாகச் செய்து தலைக்கட்டிவிட் டால் 'அண்ணா இங்கு ஏமாந்தே போனார்" என்கிற ஸ்ரீஸூக்தி

acharya.org

அழகியதேயாகும நாடகததினுடையதல்லாதவொரு சலோ கததை நாடகததினுடையதாக எழுதினவொருவருமம, அபபடி யெழுதுவது ஓா குறறமாகாது எனறு ஸமாததநம பணணப் புகுநத விநத ஸவாமியும ஏமாநதவாகளெனபது திணணம

இது சநதரோதய கவியின சலோகமனறு, மஹாஷியின சலோகநதான, உதாஹருதநதான---எனபதை அஙகீகரிததான பினபு எனன விவாதம? அது எநத மஹாஷியின காநதஸதமாகு லெனன? பிறவிடஙகளிலிருநது உதாஹரிககபபட்ட சலோகஙகளை யும காநதஸத சலோகஙகளோடு சோததுக கணககிடலாமென கிற வாாததையை நமது நணபரொருவாதாமே உரைகக வலலாா

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

6 எமது பாணவாதிகார ததவகாநதம "ஜேஜேது ஸமஸ தாபிதம" எனறு ஸமாபதி செயயபபட்டிருககிறது ஸம்ஸதாபித மெனறால கொலலபபட்டது எனறு பொருளாகையாலே அசலீல மான முடிவு எனறு ஒரு ஸ்வாமி எழுதி யிருநதாா அபபடியா னால, 'தாம ஸமஸதாபநாாததாய ஸமபவாமி யுகேயுகே" எனறு பகவான பணிககினறனே, தாமததைக கொலலுவதறகாகததான பகவததவதாரமோ? எனறு ஒருவா கேட்டிருநதாா. இதனமேல நமது நணபா விஷயஞ சொலல வருகிறாா எனன சொலலுகிறா ரெனனில, அஙகு ஸமஸதாபநாய எனறுமல ஆததாய எனறு கூட்ட சோததுச சொலலி யிருபபதால வாரணம வநது விட்டது எனகி றாா இநத வாரணம எநத தேசததிலிருநது வநததோ அறிகினறி லோம வெகு அறபுதமான வாரணமாயிரா நினறது இநத வாரணததின ரஸததை காஹிகக நமககு சகதியிலலை வெறும ஸமஸதாபநமாயிருநதால கொலைதான அாததமாகுமெனறும், ஆய சபதம உடன சோநது விட்டால அநத அாததம மாறிவிடு மெனறும இநத ஸவாமி ஸாதிககிறாா இஃது ஒரு அபூாவ சிக்ஷ ணம இது இவருடைய அறபுதமான ஆகாசப பநதல

acharya.org

அச்யுத சதகத்தில் ஸ்வாமி தேசிகன் (ச்லோகம் 9-ல்) "ஸம்ஸாரவ்ருக்ஷே - ஸமஸ்தாபயஸே" என்றும், (ச்லோ 31-ல்) "ஸம்ஸாரதாவதஹநார்த்த: - ஸமஸ்தாபித பரமதாமா" என்றும் அருளிச் செய்துள்ளார். இங்கு அநுஸ்வாரம் உடன் கூடாமையால் கொலைதான் அர்த்தமென்று நண்பர் ஸித்தாந்தப் படுத்தினாராகிறார். ஸித்த தாமத்திற்கும் ஸாத்ய தாமங்களுக்கும் அந்தோ! கொலை நேர்ந்து விட்டது! காப்பாராரோ? எமக்கு ரக்ஷகமான ஸித்த தாமமும் பிறர்க்கு ரக்ஷகமான ஸாத்ய தாமங்களும் கொலையுண்டுபோயினவே! "தர்மோ ரக்ஷதி ரக்ஷித:" என்று ஆச்வஸிப்பதற்கு இடமில்லையாயிற்றே. தயா! நீங்கி வாழ்க வாழ்க!

‘வ்ருக்ஷே’ இத்யக்ஷராண்யேவம் பரிவ்ருத்திவசாத்ததா ।
இதீதம் ஹ்ருதயம் கிம் மே வாரணம் ஸாதயிஷ்யதி ॥

ஸம்ஸித்தஸாத்யயோ யதா
கோஷேஷு ச்ருதாவதாநிதா ந ததா ॥
ப்ரஸ்தாவஸாத்யயோர்த்தம்
வாரிதவாஞ்சதி விஹாயத ॥

ந த்வத்ர ந்யாயதஸ்ஸித்திர்நியதா விசேஷம் ததா ।
ராஜஸம்ஸ்தாநவித்யார்த்தே கோஷ்டி ராஜ்ஞா ச்ருதிம் சதேச ॥

தோகோபகாரமுபதேச விஷீநவாசாம்
ஸமேத நவதேவகாரதீவ மோசஸ்ய ।
கார்யார்த ஜித்விதி ந: ப்ரணதார்திஹந்து
ர்தேவஸ்ய பாதகமலே ப்ரணிபத்ய யாசே ॥

ஶ்ரீரஸ்து

ஶ்ரிய:காந்தாய நம:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே ।

ய: ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாமந்தர்ஜ்வரமஶீஶமத் ॥

ஸ்ரீராமாநுஜஸித்தாந்தவைஜயந்தீ.

(ஒரு மாதாந்தப் பத்திரிகை)

—ஆசிரியர்—

காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்-அண்ணங்கராசாரியர்

தொகுதி 1] [பகுதி 2.

ஸ்ரீ

பத்ராதிபரின் பரிசீலனைகள்.

(1)

ஸ்ரீராமாநுஜதர்சனம்

நம்முடைய ஸ்ரீவைஷ்ணவதர்சநமானது எம்பெருமானார் தர்சனமென்று வழங்கப்படுவதற்குக் காரணமும், இந்தத் தர்சனம் அநாதியென்பதும் முன்ஸஞ்சிகையில் நிரூபிக்கப்பட்டன. அத்வைதம் த்வைதம் என்கிற மற்ற இரண்டு தரிசனங்களிற் காட்டிலும் நமது விசிஷ்டாத்வைத தர்சனத்தின் வைலக்ஷண்யம் இப்போது சுருக்கமாக நிரூபிக்கப்படுகிறது.

உபநிஷத்துக்களில் சில வாக்கியங்கள்—ஒரு தத்துவமே உள்ளதாகவும் பல தத்துவங்கள் கிடையாதென்பதாகவும் பேசுகின்றன. „நேஹ நாநாஸ்தி கிஞ்சந” [நேஹ நாநாஸ்தி கிஞ்சந] என்றிது முதலான வாக்கியங்களினால் பல தத்துவங்கள் கிடையாதென்பது ஸ்பஷ்டமாகச் சொல்லப்படுகிறது. „ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம” [ஏகமேவஅத்விதீயம் பரஹ்ம] „ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம” [ஸர்வம்

acharya.org

கல்விதம் ப்ரஹ்ம] "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" [ஐததாத்ம்யமிதம் ஸர்வம்] என்றிவை முதலான வாக்கியங்களினால் ஓரே தத்துவமுள்ள தாகக் காட்டப்படுகிறது.

இப்படிப்பட்ட வாக்கியங்களுள்ள உபநிஷத்துக்களிலேயே பலதத்துவங்களுண்டென்பதைக் காட்டுகின்ற வாக்கியங்களும் ஓதப்பட்டிருக்கின்றன. "க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:" "ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶநீஶௌ", "த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே। தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி॥" என்றிவை முதலான வாக்கியங்களால்—சித்து அசித்து ஈச்வரன் என்கிற மூன்று தத்துவங்கள் தனித்தனியே உள்ளனவாக ஸ்பஷ்டமாய்த் தெரிவிக்கப்படுகிறது.

இவை ஒன்றோடொன்று முரண்படுகிற வார்த்தைகளாக இருக்கின்றன. ஒன்றுதான் தத்துவம் என்று சொல்லிவிட்டால் பல தத்துவங்களுள்ளனவாகச் சொல்வது கூடாது. பல தத்துவங்களுண்டென்றால் ஒன்றே தத்துவமென்பது பொருந்தாது. யதார்த்தவாதிகளான உபநிஷத்துக்கள் அஸங்கதமாகச் சொல்லமாட்டாதாகையால் இவற்றை முரண்பாடு சிறிதுமின்றியே ஸங்கதமாகப் பொருந்தவிடுகிற வழி என்ன? என்பது ஆராயப்படவேண்டும்.

ஒரு தத்துவமே உள்ளதென்று ஓதுகின்ற உபநிஷத்வாக்யங்கள் அத்வைதச்ருதி (அல்லது) அபேதச்ருதி என்று வழங்கப்படும். பலதத்துவங்களுண்டென்று ஓதுகின்ற உபநிஷத்வாக்கியங்கள் த்வைதச்ருதி (அல்லது) பேதச்ருதி என்று வழங்கப்படும்.

ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் மேற்குறித்த அத்வைதச்ருதிகளை முக்கியமாகக்கொண்டு ஒன்றேதான் தத்துவமென்று நிர்வஹித்தார்கள். த்வைதச்ருதிகளான பேதச்ருதிகளை ஔபசாரிகமாக நிர்வஹிக்கலாமென்றும் கருதினார்கள். சேதனப்பொருள்களும் அசேதனப்பொருள்களும் உள்ளனவாகத் தோற்றுவது மாயையின் தோற்றமேயாதலால் அப்படிப்பட்ட தோற்றத்தை நோக்காகக் கொண்டு பேதச்ருதிகளை நிர்வஹித்துவிடலாமென்பது இவர்களின் கருத்து. ஆகவே, த்வைதச்ருதிகளைத் தள்ளி அத்வைதச்ருதி

acharya.org

களையே முககியமாகக கொணடபடியால இவாகள அதவைதிகள எனறு வழஙகபபடுகினறாகள

ஸ்ரீமத் ஆநநததீாததஸவாமிகள தவைதசருதிகளான பேதச ருதிகளை முககியமாககககொணடு அதவைதசருதிகளை ஔபசாரிக மாக நிாவஹிககலாமெனறு கருதுகினறாகளாதலால அவாகள [மதவாசாாயஸமபரதாயஸதாகள] தவைதிகள எனறு வழஙகப படுகினறாகள

ஆக மேறகூறிய இரணடு ஸமபரதாயஙகளிலும ஒருவகையான சருதிவாகயஙகள ஒதுககபபடடு ஒருவகையான சருதிவாகயஙகளே முககியமாகக கொளளபபடுகினறன எனபது தெறறுகினறது சிதது அசிதது ஈசவரன என மூனறு தததுவஙகள ஸதயமாகவுளளன எனகிற ஆததம ஸ்ரீ சஙகராசாாயஸவாமிகளுககும அவாகளைச சாாநதவாகடகும உடனபாடனறு ஒரே தததுவம எனகிற ஆததம ஸ்ரீ மதவாசாாயஸ்வாமிகளுககும அவாகளைச சாாநதவா கடகும உடனபாடனறு

உபநிஷத வாககியஙக ளெலலாவறறையுமே ஸமரஸபபடுததி ஒனறையும ஒதுககாமல மிகவும பொருததமாகவே நிாவஹித தருளினா நம ஸ்ரீ வைஷணவாசாாயாகள எஙஙனே யெனனில, உலகததில ஒருவஸதுவைப பலவெனறும ஒனறேயெனறும சொலலுவதறகுப பொருததமுணடு உதாஹரணமாக ஒரு கடியாரததை எடுததுககொளவோம அஃது ஒனறு? பலவா? எனறு கேடடால ஒனறு எனறே சொலவோம ஆனால அதை நாம ஊனறிபபாாககுஙகால அதில பல பலவஸதுககள அவயவங களாகச சோநதிருபபது புலபபடாமற போகாது பல அவயவங களோடு கூடிய அவயவியான வஸது ஒனறே எனறு ஏறபடுமே யலலது வேறவிதமாக ஏறபடாது இஙஙனமே பல பலவஸதுககளை யும நாம உதாஹரணமாகக கொணடு பாாக்கலாம படுககை தலையணை, வணடி, வீடு முதலான ஒவவொரு வஸதுவும ஒருவிதத தில ஒரேவஸதுவாகவும மறறொருவிதததில பல வஸதுககளாகவும கொளளபபடுவது அநுபவஸிததம

நமமையே எடுததுககொளவோம, ராமாநுஜன எனபவன ஒருவன எனறு சொலலுகிறோம பல உறுபபுகளோடு கூடின

acharya.org

ஆத்மாவாகிய அந்த வ்யக்தி ஒருவன் என்றதாகுமேயன்றி, அவ்வ னிடத்தில் பல வஸ்துக்கள் இல்லை யென்றதாக ஸித்திக்க மாட்டாதன்றோ? ராமாநுஜன் சிவப்பாயிருக்கிறானென்று சொல் லும்போது அவனுடைய தேஹம் அர்த்தமாகிறது. ராமாநுஜன் மேதாவி என்று சொல்லும்போது ஆத்மா அர்த்தமாகிறது. ஏன்? சிவப்புநிறம் தேஹத்திற்கு ஏற்குமேயல்லது ஆத்மாவுக்கு ஏலாது. மேதாவித்வம் ஆத்மாவுக்கு ஏற்குமேயல்லது தேஹத்திற்கு ஏலாது. ஆகவே ஒரே பதம் சில ஸமயங்களில் ஆத்மாவைக் குறிப்பதாயும் சிலஸமயங்களில் உருப்பைக்குறிப்பதாயும் தேறு கின்றதென்பது மறைக்கமுடியாது.

இனி, முற்காட்டிய பேதச்ருதிகளையும் அபேதச்ருதிகளையும் எடுத்துக்கொள்வோம். சித்து அசித்து ஈச்வரன் என மூன்று தத்துவங்களை [illegible] வாக்கியங்கள் [illegible] அப்படிப்பட்ட மூன்று பொருள்கள் இருப்பதைச் சொல்லுகின்றன வாதலால் பொருந்தும். ஒன்றே என்று சொல்லுகிற வாக்கியங்கள் சேதனப்பொருள்களையும் அசேதனப்பொருள்களையும் சரீரமாக்க் கொண்ட பரம்பொருள் ஒன்றே என்கிற உண்மையைக் காட்டுகின் றன வாதலால் இவையும் பொருந்தும். இப்படி ஸமந்வயப்படுத்திக் காட்டுவதே நம் ஸித்தாந்தத்தின் முழுமுதற்கொள்கை. இதை [illegible] திருவாய்மொழியில் முதற்பதிகத்தில் "உடன்மிசை உயிரென" என்ற அருமருந்தன்ன [illegible] காட்டியருளி னார். அதை நிதியாகக் கொண்டு ஆளவந்தார் எம்பெருமானார் முதலிய ஆசார்ய சிகாமணிகள் உபபாதநம் செய்தருளின அர்த்த விசேஷங்கள் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்.

---

(2)

எம்பெருமானோடு நமக்குள்ள உறவுகள்

திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரம் நமக்கு மங்கல ஸூத்ரம் போன்றது என்று ஆசார்யர்கள் அருளிச்செய்கிறார்கள். உலகில் ஒரு கன்னிகையின் கழுத்தில் தாலி ஏறினவாறே தம்பதிகளுக்கு "பர்த்ரு பார்யா ஸம்பந்தம்" என்ற ஒரு உறவு ஏற்பட்டதாகும். திரு மந்த்ரமாகிற தாலி நமது கழுத்தில் ஏறினவாறே ஒரு உறவு அல்ல, ஒன்பது உறவுகள் ஏற்பட்டனவாகும். எங்ஙனேயெனனில், அதில்

acharya.org

முதல் பதம் ப்ரணவம். அது அகாரமென்றும் உகாரமென்றும் மகாரமென்றும் [மூன்றக்ஷரமான] மூன்று பதங்கள் கொண்டது.

முதற் பதமான அகாரத்தில் மூன்று உறவுகள் தோன்றும். (1) பித்ரு புத்ரபாவம் (2) ரக்ஷ்யரக்ஷகபாவம் (3) சேஷசேஷி பாவம். அந்த ஒரு அக்ஷரத்தில் இந்த மூன்று உறவுகள் எங்ஙனே தோன்றுகின்றனவென்னில், அகாரத்திற்கு ப்ரக்ருதி சக்தியென்றும் தாதுசக்தி (தாதுசக்தி) யென்றும் இரண்டுவகையான சக்திகளுண்டு. "அகாரோ வை ஸர்வா வாக்" என்றும் 'அகரமுதல வெழுத்தெல்லாம்" என்றும் சொல்லுகிறபடியே அகாரமானது எல்லா எழுத்துக்களுக்கும் முதன்மையாயிருந்துகொண்டு, தனக்கு அர்த்தமான எம்பெருமான் உலகுக்கெல்லாம் முதல்வன் என்று காட்டுவதாகிய இது ப்ரக்ருதி சக்தி எனப்படும். "ஆதிபகவன் முதற்றேயுலகு" என்ற குறளும் இதனையே காட்டிற்றுகும். ஆகவே அகாரத்தின் ப்ரக்ருதி சக்தியினால் ஏற்பட்ட வுறவு கார்ய காரணபாவம் (அல்லது) ஜந்ய ஜநகபாவம் அல்லது பித்ருபுத்ரபாவம்.

அந்த அகாரமானது "அவ—ரக்ஷணே" என்கிற தாதுவிலிருந்து தேறினதாகையாலே எம்பெருமான் ஸர்வரக்ஷகன் என்றதாகும். இதனால் (2) ரக்ஷ்யரக்ஷகபாவமாகிற உறவு தேறிற்றுகிறது. இதுதான் தாதுசக்திஸித்தமெனப்படும்.

இந்த அகாரத்தின்மேல் வ்யாகரண சாஸ்த்ரப்படி சதுர்த்தீ விபக்தி இருந்து லோபித்ததாகக் கொள்ளப்படுகிறது. இல்லாவிடில் அந்வயிக்கவேமாட்டாது. அந்த விபக்தியானது 'அவனுக்கு சேஷப்பட்டது' என்கிற பொருளைக் காட்டுதலால் (3) சேஷசேஷிபாவம் என்கிற உறவு தேறிற்று.

இனி அடுத்துள்ள உகாரமானது அவதாரணப் பொருளதாய் எம்பெருமானுக்கே சேஷப்பட்டது என்று காட்டுதலால் ' கண்டாரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும், கொண்டானையல்லால் அறியாக் குலமகள்போல்" என்றபடி (4) பதிபத்நீபாவமென்கிற உறவு தேறிற்று.

அதற்கு அடுத்துள்ள மகாரமானது "மந ஜ்ஞாநே" "மந அவபோதநே" என்கிற தாதுக்களிலிருந்து நிஷ்பந்நமாகி ஜ்ஞாதாவான ஆத்மாவைச் சொல்லுதலால் (5) ஜ்ஞாத்ரு ஜ்ஞேயபாவ

acharya.org

மென்கிற உறவு தேறிற்று. அதற்குப் பிறகு உள்ள நம: பதத்தினால், தன்னை ரக்ஷித்துக்கொள்வதில் தனக்கு எவ்விதமான உரிமையும் இல்லையென்று காட்டுகிற முகத்தினால் ஆத்ம வர்க்கமெல்லாம் எம்பெருமானுடைய சொத்து என்று காட்டுதலால் (6) ஸ்வ ஸ்வாமிபாவம் என்கிற உறவு தேறிற்று.

இனி நாராயணபதத்தை யெடுத்துக்கொண்டால் இதற்குத் தத்புருஷஸமாஸமென்றும் பஹுவ்ரீஹிஸமாஸமென்றும் இரு வகையான வ்யுத்பத்திமார்க்கங்கள் கொள்ளப்பட்டு, நாரபதார்த்தமான ஸகலவஸ்துக்களுக்கும் எம்பெருமான் ஆதாரமென்றும், அந்த ஸகலவஸ்துக்களையும் ஆதாரமாக வுடையவனென்றும் தெரிந்துகொள்ளுகிறோம். ஆதலால் "நாராணாமயந" மென்கிற தத்புருஷனால் (7) ஆதாராதேயபாவ மென்கிற உறவு தேறுகிறது. நாரா: அயநம் யஸ்ய ஸ: என்கிற பஹுவ்ரீஹியால் (8) சரீர சரீரிபாவ மென்கிற உறவு தேறுகின்றது. நாரங்கள் இவனிடத்திலே இருக்கின்றன என்பது தத்புருஷஸித்தம். நாரங்களிலே இவனிருக்கிறானென்பது பஹுவ்ரீஹிஸித்தம். அவற்றிலே இவனிருப்பதாவது அவற்றை உடலாகக்கொண்டு தான் அவற்றுக்கு உயிராக இருப்பதேயாதலால் இதனால் சரீராத்மபாவம் ஸித்தித்ததென்னக் குறையில்லை.

அந்த நாராயண பதத்தின் மீதுள்ள சதுர்த்தீவிபக்தியானது காகாக்ஷிந்யாயத்தாலே தன்னிடத்திலும் அந்வயிக்கின்ற நமஸ்ஸினுடைய பரிஷ்காரம் பெற்று, நாராயணனுக்குச் செய்யப்படுகிற கைங்கர்யத்தின் போக்யமும் அவனுக்கேயன்றி இந்த ஜீவனுக்கில்லையென்று நிஷ்கர்ஷித்துக் காட்டுதலால் (9) போக்த்ருபோக்யபாவம் என்கிற உறவைத் தெரிவிக்கின்றது. ஆக்த திருமந்திரத்தினால் நவவித ஸம்பந்தங்கள் தெரியவந்தன.

இவற்றைச் சிந்தையில் பதிப்வைத்துக்கொள்வதற்காக

"பிதா ச ரக்ஷக: சேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி: ।
ஸ்வாம்யாதாரோ மமாத்மா ச போக்தா சாத்யமநூதித: ॥"

[பிதா ச ரக்ஷகச் சேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி:
ஸ்வாம்யாதாரோ மமாத்மா ச போக்தா சாத்யமநூதித:]

என்கிற ஒரு ச்லோகரத்னத்தைக் காட்டியுள்ளார்கள்.

acharya.org

க்ஷத்ரபந்துவின் உபாக்கியானம்

இன்று *மன்னியசீர் மார்கழியில் கேட்டை இது, தொன்று புகழ் மாமறையோன் தொண்டரடிப்பொடியாழ்வார் பிறப்பால் நான்மறையோர் கொண்டாடும்நாள் என்பது உலகமறிந்ததே. அவ்வாழ்வார் பேரருள்கொண்டு நமக்கு ஊட்டிய அர்த்த விசேஷங்களுள் ஏதேனுமொன்றை இன்று நாம் அநுஸந்திப்பது நன்று.

அவ்வாழ்வாரருளிய திருமாலையின் சிறப்பை, "திருமாலை யறியாதவன் பெருமாளையறியான்" என்னும் முதுமொழியே விளங்கக் காட்டும். அத்தகைய பெருமைவாய்ந்த அத் திவ்யப் பிரபந்தத்தில் "மொய்த்த வல்வினையுள் நின்று மூன்றெழுத்துடைய பேரால், கத்திரபந்துமன்றே பராங்கதி கண்டுகொண்டான்" என்ற பாசுரத்தில் எடுத்தாளப்பட்டுள்ள க்ஷத்ரபந்துவின் சரிதை நாம் அவசியம் அறியத்தக்கது. இது ஸ்ரீவிஷ்ணுதர்மத்தில் தொண்ணூற்றேழாவது அத்தியாயத்தில் பரக்கக்கூறப்பட்டுள்ளது. அதன் சுருக்கம் வருமாறு —

மிகக்கொடிய நடத்தைகளையுடையனாய், பலவகைப் பாவங்களும் உருவெடுத்துவந்தனவென்னும்படி மஹாபாபியான க்ஷத்ரபந்து என்பானொருவன் இருந்தான். அவன் தனது கொடுமையினால் தாய் தந்தை மக்கள் மித்திரர் அனைவராலும் கைவிடப்பட்டவனாய், காட்டிலே திரிந்துகொண்டு ஜீவஹிம்ஸையினால் வயிறுவளர்த்து வந்தான். இங்ஙனம் நெடுநாள் சென்றவளவில், ஒருநாள் ஒரு மாமுனிவர் கொடிய வெய்யில்வேளையில் வழி போகாநிற்கையில் வழி தப்பி, இப்பாவி திரியும் கானகத்திலே புகுந்து இவனது கண்ணுக்கு இலக்கானார். அவரைக் கண்டதும் அவருடைய பரிதாபத்தைக் கண்ட இவனுக்குத் தன்னையுமறியாமல் அம்முனிவர் விஷயத்தில் காருண்யமுண்டாகி, 'மாமுனிவரே! இஃது உம்முடைய வழியன்றே, வழிதப்பி வந்தீர்போலும், உற்றுநோக்கிப் பாரும்' என்று முனிவரை நோக்கிக்கூற, அவரும் உணர்ந்து, பொறுக்க முடியாத தாஹத்தையுடையவராய் ஒரு தடாகத்தைத் தேடிச் செல்லுகையில் அருகே ஒரு அழகிய பொய்கையைக்கண்டு, தாப மிகுதியால் சடக்கென அக் குளத்திற்போய் விழுந்திட்டார். அப்போது அங்கிருந்த க்ஷத்ரபந்து தனது கையிலிருந்த வில்லையும் அம்புகளையும் எறிந்துவிட்டு, அம்முனிவரைப் பிடித்துத் தூக்கித் தேற்றித் தாமரைக்கிழங்குகளை உணவாகக்கொடுத்து

acharya.org

விடாயைப்போக்கி மகிழ்வித்தான். பிறகு அவர் கரைமீதேறி ஒரு மரத்தடியில் உட்கார அவரது கால்களின் நோவுதீர நன்றாகப் பிடித்து உபசாரங்களைச்செய்த க்ஷத்ரபந்துவை நோக்கி அம் முனிவர், 'பேருபகாரம்புரிந்த பெரியோனே! யாருடைய சிறந்த குலத்திற் பிறந்தவன் நீ? உனது வரலாறுகளைக் கேட்க விரும்புகிறேன்' என்ன, அதுகேட்ட அவனும் 'முனிவர் கோமானே! நான் ஸூர்யவம்சத்தில் விச்வரதன் என்பவற்கு மகனாய்த் தோன்றியவன்' என்று தொடங்கித் தனது கொடுமைகளையெல்லாம் ஒன்றும் ஒளிக்காமல் உள்ளபடி சொல்ல; அவற்றைச் செவியுற்ற முனிவர் இவனை நல்வழியிற் செலுத்தவேணுமென்ற கருத்துக்கொண்டு 'அப்பா! இனி இத் தீய குணங்களையெல்லாம் விட்டிட்டு ஜீவகாருண்யத்தையே பரம தர்மமாகக் கடைப்பிடிக்க உன்னாலாகாதோ?' என்று கேட்க; அதற்கு அவன் 'காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்னும் தீக் குணங்கட்குப் பிறப்பிடமான நான் அவற்றைவிட்டுப் பிரிந்து ஒரு க்ஷணகாலமும் இருக்ககில்லேன்; என்மனம் என்வசமன்று; இது தவிர வேறு நியமநமுண்டாகில் சிரமேற்கொள்ளக் காத்திருக்கிறேன்' என்ன; எப்படியாவது இவனை வழிபடுத்தவேணுமென்னும் பேரவாக்கொண்ட முனிவர் 'இது மாட்டாயாகில், எப்போதும் கோவிந்த! கோவிந்த! என்று சொல்லிக்கொண்டிருக்கவாவது உன்னால் முடியுமோ? இருமினாலும் தும்மினாலும் கோவிந்த! என்றே சொல்லிக்கொண்டிருப்பாயாகில் உனக்கு மிக்க நன்மையுண்டாம்' என்று சொல்லிவிட்டுப் போயினர். அது முதலாக க்ஷத்ரபந்து கோவிந்த நாமத்தை இடைவிடாது ஸங்கீர்த்தநம் பண்ணிக்கொண்டிருந்தான். சிலகாலங் கழித்து அவன் மரணமடைந்து அந்தணர்குலத்தில் பூர்வஜந்ம ஸ்மரணத்துடன் பிறந்தான். உடனே அவனுக்கு இக் கொடிய ஸம்ஸாரத்தில் மிக்க நிர்வேதம் உண்டாயிற்று. இப்படிப்பட்ட உத்தமோத்தமமான ப்ராஹ்மண குலத்தில் எனக்குப் பிறவிநேர்ந்ததும் பூர்வஜந்ம ஸ்மரணமுண்டானதும் நான் முன்பு பண்ணின கோவிந்தநாம ஸங்கீர்த்தநத்தின் பலனன்றோ? ஆகவே எனக்கு மேலான நன்மையை விளைத்த அந்த ஸ்ரீ கோவிந்தனையே நான் ஆராதனஞ்செய்து, *தீண்டாவழும்புஞ் செந்நீருஞ் சீயுநரம்புஞ் செறிதசையும் வேண்டா நாற்றமிகு முடலைவிட்டு* மாய வன்சேற்றள்ளற் பொய்ந்நிலத்தைக் கடந்து நலமந்தமில்லதோர் நாடாகிய பரமபதத்தை அடையக் கடவேன் என்பதாகத் துணிந்து அங்ஙனமே செய்து பரம பாகவதனாகி வீடுபெற்றனன் என்பதாம்.

---

acharya.org

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷிணீ பத்ரிகையின் புரட்டாசி மாதத்து ஸஞ்சிகையும் வரப்பெற்றோம். இதிலும் 'பாதுகாஸஹஸ்ராவதாரத்தவ விமர்சம்' என்ற மகுடத்தின் கீழ் பதினாறு பக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன. கடைவீதி ராமாயண காலக்ஷேபமென்று பலரும் ப்ரஸித்தமாகச் சொல்லிப் போருவதுண்டே. மூலம் வாசிப்பவர் ஆரண்யகாண்டம் வாசிக்கிறார், அர்த்தம் சொல்பவர் ஸேதுபந்தனக் கதை சொல்லிக்கொண்டிருக்கிறார். ஸர்க்கம் முடிந்தவுடனே மூலம் வாசிப்பவர் 'இத்யார்ஷே வால்மீகிராமாயணே ஆரண்யகாண்டே ஷோடசஸ்ஸர்க:' [இத்யார்ஷே வால்மீகி ராமாயணே ஆரண்யகாண்டே ஷோடசஸ ஸர்க்க] என்று வாசித்து முடித்தார். அதைக்கேட்ட கதைக்காரர் 'அடபாவி! இதை முதலிலேயே சொல்லக்கூடாதா? பரத்வாஜ ஆதித்யம், காகாஸுரவ்ருத்தாந்தம், அஹல்யா சாபம் முதலிய ஆரண்ய காண்டக் கதையைச் சொல்லியிருப்பேனே, நீ கிஷ்கிந்தா காண்டம் வாசிக்கிறாய் என்று நினைத்தன்றோ நான் ஸேதுபந்தனக் கதையைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்' என்றாராம். அதைக்கேட்ட ஸபையிலே ஒருவர் 'ஐயரவாள்! பாரத பாகவத கதைகளில் செல்லாமல் ஸ்ரீராமாயணக் கதையையே சொல்லிவருகிறீர்களல்லவோ, அது போதும், மேலே நடக்கட்டும்' என்றாராம்.

இப்படிப்பட்ட கதைகளெல்லாம் ஏகதேசமென்னலாம்படி ஸ்ரீ கோபாலாசார்யஸ்வாமி, க்ரந்தத்திற்குத் திருநாமம் சாத்தியிருப்பதும் உள்ளே விஷயங்களெழுதுவதும் மிகவும் ஆச்சரியம்.

முற்காலத்தில் காளிதாஸர் ஒன்றுமறியாத சிலரை ராஜ ஸபையில் கொண்டு நிறுத்தி 'இவர் எனது ஆசாரியர், அத்விதீய

acharya.org

மஹா வித்வான்' என்று சொல்லிப் புகழ்வராம். அந்த மஹா வித்வான் வாய்திறவாதிருந்தால் க்ஷேமம். பரவசமாக அவர் ஏதேனும் வாய்திறந்துவிட்டால் விலவறச் சிரிக்கும்படியான விபரீத வார்த்தை தவிர வேறொன்றும் வாக்கில் வெளி வராதாம். இப்படிப் பட்டவர்களில் ஒருவரை ஒருநாள் காளிதாஸர் ராஜ ஸந்நிதானத்தில் கொண்டுபோய்ப் பெரிய சிங்காசனத்திலே எழுந்தருளப் பண்ணிவைத்தார். 'அங்கு நீர் ஒன்றும் வாய்திறக்கக் கூடாது' என்று திட்டம் செய்தும் வைத்திருந்தார். அவரும் அப்படியே யென்று இசைந்திருந்தும், அந்த ஸபா மண்டபத்தில் பயங்கரமான பத்துத் தலைகளோடே இராவணனது சித்திரம் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு அஞ்சி நடுங்கி 'ராஹணன்!' என்று வாய் வெருவினார். அதுகேட்ட அரசன் காளிதாஸரை நோக்கி 'இதென்ன? இவரை நீர் மஹா வித்வானென்றீரே, ராவணனென்னவேண்டியிருக்க ராஹணன் என்கிறாரே!' என்று கேட்க, ப்ரத்யுத்பந்நமதியாய மஹா மேதாவியான காளிதாஸர் உடனே

* கும்பகர்ணே ஹகாரோஸ்தி ஹகாரோஸ்தி விபீஷணே ।
ஸ்வயம் ச ராக்ஷஸஶ்ரேஷ்டோ ராஹணோ ந து ராவண: *

என்று ஒரு ச்லோகஞ் சொல்லி ஒரு மணி காலம் வ்யாக்யான முபந்யஸித்தாராம். இப்படி அநேக ஸமயங்களில் அவர் ஆச்சரியமான ச்லோகங்கள் இயற்றி, ஒன்றுமறியாத மூடர்களின் அஸமஞ்ஜஸ ப்ரலபிதங்களை யெல்லாம் அர்த்தயுக்தம் உபபந்நங்களாகவே ஸமர்த்தநம் செய்துகொண்டிருந்தாராம்.

அவ்விதமாகவே நம் கோபாலாசார்யஸ்வாமியும் ஒரு சிறந்த கைங்கர்யத்தை ஏற்றுக்கொண் டிருக்கிறார். அஸமஞ்ஜஸமாக எழுதியிருந்தவர்களின் உக்திகளை அதி சாதுர்யமாய் ஸமர்த்தநம் செய்வார்போன்று, தமது அதிகாரத்திற்கு ஏலாத காரியங்களை ஏன்றுகொண்டு விஷயங்களால் வித்வான்களின் ஹ்ருதயரஞ்ஜநம் செய்யவில்லாமல், அநுவதிக்கவும் அர்ஹமல்லாத தூஷண பரிஹாரோக்திகளினாலேயே பத்ரபூரணம் செய்தருளாநின்றார். நிந்தனை கூடாதென்று பிறர்க்கு உபதேசிக்குமிவர் நிந்தனை தவிர வேறொன்றும் அறியாதாராயினார். தாம் எழுதுவதெல்லாம் பரம பாவந திவ்ய ஸ்ரீஸூக்திகளென்றும், பிறர் எழுதுவது வசை மொழிப்

புராணமெனறும விபரீதமாக கரஹிததிருககினற இநத ஸவாமி அடியேனமீது எததனை நிநதைகளை எழுதினுலும அதில அடியே னுககுச சிறிதும வருததமிலலை "வைததனை இன சொலலாக கொளவானும, செயபெயத சோறெனறு கூழை மதிபபானும, கைததததனைக கடடியென றுணபானு மிமமூவா, மெயபபொருள கணடு வாழவாா" எனறபடி அடியேன இவரது வசை மொழிகளால வாழவேனததனை இவாதாம தமது ஸவரூபததில நினறும அதி மாதரம பரசயுதராகினருரே! எனகிற வருததமமாததிரமே அடியேனுககுளளது விஷயஙகளை அழகாக எழுதிவிடடு இவா எததனை அதபாயம வைதாலும நனருயிருககும அநத பாகபம இவாககு இப பிறபபில இலலையெனபதை உடனுககுடனே அடியேன விவரிததே வருகினறேன

இநத ஸவாமியின விகிநஙகள யாவும அபததமயம எனபதை ஸபஷடமாக விவரிதது இதுவரை அடியேன மூனறு ஸஞசிகைகள வெளியிடடுளளேன அவறறிறகு இவா யாதொரு மறு மாறறமும தாராதே எதையோ எழுதிககொணடு போகிருா பரகருதம நானகாவது ஸஞசிகையில இவா எழுதியுளள விஷயஙகளும அஸபபதத மெனபதை இதோ நிரூபிககினறேன ஸவாமி தேசிகன நயாய பரிசுததியில "நவஜு ஊபகாஉ ஙிஷெஷி ஊதஂஏஃ கணீஙவஊவஙணஃ" எனறு ஸாதிததிருககினற ஸ்ரீஸூகதி நமது நணபா திருவுளளததில எபபோதுமகுடிகொணடிருககத தகும இவவிடததிறகு மிகவும பொருததமான ஸ்ரீஸூகதி அதுவே.

1 "ஜெஜெதூ ஸஂஸூாவிதழ்" எனகிற எமது பரயோ கததில ஸமஸதாபித சபதம அசலீலமெனகிற வாதம இநத ஸஞசிகையிலும தொடாநதிருககிறது சபதமாமறியாத வொருவா எழுதியிருநததை ஸதாபிகக இவா பாடுபடுவது வீண. முனனமே இதைபபறறிப போதுமானது எழுதினேன மீணடும ஸாரமாக எழுதுகினறேன ஸமஸதாபிதம எனருல கொலலப படடது எனறு பொருள எனறு இவாகளுககு எநத பரமாணததி லிருநது தெரியவநதது? ஸ்ரீ தேசிகனுடைய பரயோகஙகளை முனனமே விளககியிருககிறேன அவரறியாத கோசம இவாகள அறிநதுவிடடாாகளபோலும ஸமஸதித எனனும பததிறகு

acharya.org

இறந்தவனென்று பொருள் கூறப்பட்டிருப்பதைக் கொண்டு ஸமஸ்தாபித பதத்திற்குக் கொல்லப்பட்டதென்கிற பொருளைக் கொள்வது பரிஹாஸ்யம். சப்த கல்பத்ருமம் முதலான நிகண்டுகளில் ஸமஸ்தித பதத்திற்கு அவ்யவஹித பூர்வமாகவே ஸம்ஸ்தாபனம் என்கிற பதம் குறிக்கப்பட்டுள்ளது, அதற்கு அர்த்தம் "ஸஜ்ஜீக்ருதிஃ ப்ராவண்யம், ஸ்வீகரணம்" என்று எழுதப்பட்டுள்ளதேயன்றி மாரணம் என்று எழுதப்பட்டிருக்கவில்லை. ஸமஸ்தித பதத்தின் அர்த்தத்தைக்கொண்டு ஆரோபித்துச் சொல்வது கூடாதென்பது வையாகரண நிஷ்கர்ஷம்.

ஸித்தாந்த கௌமுதியின் உபக்ரமத்தில் "முநித்ரயம் நமஸ்க்ருத்ய தது꞉க்தீஃ பரிபாவ்ய ச" என்றிருப்பது ப்ரஸித்தமே. இதில் பரிபாவ்ய என்பதற்கு 'பரிபவப்படுத்தி' அதாவது 'திரஸ்கரித்து' என்றுதானே அர்த்தமாகும். அது தகுதியோ? என்று சங்கித்து, பரிபவ சப்தத்திற்குத் திரஸ்காரம் அர்த்தமானாலும் ஞாதாஃபராயாஃ அந்த அர்த்தம் கொள்ளவேண்டிய அவசியமில்லையென்று எழுதிவைத்தார்கள். ஸமஸ்தாபித சப்தத்திற்கு இவர்கள் கூறுகிற பொருள் நிகண்டு ஸித்தமுமன்று, ப்ரயோக ஸித்தமுமன்று, கேவலம் ஆக்ரஹஸித்தமத்தனை. ஏதிலும் ப்ரமாணம் காட்டாமல் ஒரு அக்ஷரமாவது அடியேன் எழுதுவதுண்டா? பலராகத்திரண்டு எழுதுமிவர்களின் ப்ராமாணிகத்வத்தைப் பாருங்கள். தேசிகதிவ்யஸூக்தியையுமன்றோ இவர்கள் திரஸ்கரிக்கிறார்கள். ஸர்வாத்மநா அப்ராமாணிகமான விஷயங்களையே யெழுதிப் போதுபோக்குமிவர்கள் வீணாகப் பிறரை இகழுவது என்ன ஸாஹஸமோ!

ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதைகளில் இந்த ஸித்தமான ப்ரதிஷ்டை விஷயம் சொல்லுமிடங்களில் ஸம்ஸ்தாபநா என்று ஒருவகை ஓதப்பட்டிருக்கின்றது. விஷ்ணுஸம்ஹிதையில் பதினைந்தாவது படலத்தில் "ஸ்தாபநாஃஸ்தாபநே சைவ ததா ஸம்ஸ்தாபநந்திவ। ப்ரஸ்தாபநா ப்ரதிஷ்டா ச ப்ரதிஷ்டா பஞ்சதா ஸ்ம்ருதா॥" என்றுள்ளது. இங்ஙனமே நாரதீயஸம்ஹிதையிலும் காணலாம். அவ்விடங்களுக்கு இவர்கள் பொருளுரைக்க

acharya.org

குங்கால் எம்பெருமானைக் கொலை செய்கிற பாதிஷ்டை யென்றே உரைப்பர் போலும்.

வேதத்திலும் பலவிடங்களில் ஸமஸ்தாபந மென்றும் ஸமஸ்தர்பய மென்றும் ஸமஸ்தாபயந என்றும் ஓதப்பட்டுள்ளது. இவர்கள் சொல்லுகிற அர்த்தம் ஓரிடத்திலும் கண்டதில்லை. ஸ்திரீகரணம் என்கிற அர்த்தமும் ஸமாப்தி செய்தல் என்கிற அர்த்தமுமே யுள்ளன. ஸமாப்தி செய்வதும் கொல்லப்படுவதும் பர்யாய மென்பரோ? அது பாமரபாஷிதம். "ஶாஸ்த்ரஞ்ச பரிஸமாப்தம்" என்ற ஸ்ரீபாஷ்யத்தின் முடிவு இதனால் 'சாஸ்த்ரம் கொலையுண்டது' என்று சொல்லப்படுகிறது? "ஷோ-மதிநிவ்ருத்தா" என்னுமாபோலே 'இவ்வளவோடு சாஸ்த்ரம் நிற்றல் பெற்றது' என்பதே அர்த்தம். 'லவணமென்றால் எருமைச்சாணியல்லவா" என்னுமாபோலே இவர்களாகவே ஒரு இல்லாதபொருளை ஸித்தவத்கரித்துக் கொண்டு காவ்ய தோஷமென்றும் அச்லீல கீர்த்தநமென்றும் எழுதுவது பண்டிதகோஷ்டியில் பரிசு பெறாது.

2. ஈடுமுப்பத்தாறாயிரப்படியின் அரும்பதவுரையில் அநேக இடங்களில் அநேகவிதமான அபப்ரம்சங்கள் காணப்படுகின்றன. வடமொழியிலும் தென்மொழியிலும் விபரீதமாக ப்ரமித்து எழுதியவை அதில் உள்ளனவென்பதைப் பல ப்ராமாணிகர்கள் அறுதியிட்டே யுள்ளார்கள். அந்த அரும்பதவுரை எழுதியவர் ஆசார்ய கோஷ்டியில் சேர்ந்தவரல்லர், மிகவும் பிற்பட்டவர். மணவாள மாமுனிகள் வரையிலுமுள்ள ஆசார்யர்களின் திவ்யஸூக்திகளில்தான் ப்ராமாண்ய பூர்த்தியுள்ளது. பிற்பட்டவர்களின் க்ரந்தங்களில் உபபந்நமானவை மாத்திரமே உபாதேயம் என்பது அஸ்மதாசார்ய ஸித்தாந்தம். இது ஸர்வவிவேகி ஜநஸம்மதமுமாகும்.

ந்யாயபரிசுத்தியின் முதலில் ப்ரத்யக்ஷாத்யாயத்தில் — "ஶ்ருதோ யாவதிஹ யத்நம் தாவதுபஜீவ்யதே, நவ்யஸ்து தடாகவ்யூஹ: வந்யோஷதி கல்பிதவ்யஸநவஸராஹி ஹிநோபஜீவ்யதே" இத்யாதியாக ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்திருப்பது மஹர்ஷிகள் விஷயத்திலேயே யன்றோ? ப்ரஹ்ம ஸூத்ரத்தில் வ்யாஸர் காட்டின வழியே இது. மஹர்ஷிகளின் வாக்குக்களையா இப்படி இழித்துப்

உரைபபதெனறு பரிதபிபபாரைக காணெம ஆசாரய ரலலாதாருடைய உகதிகளில உளள ஸகாலிதயஙகளை பரகரணங களில எடுததுரைகக நோநது உரைததால எனன குறறம? ஸ்ரீ பாஷயகாரா படடா தேசிகன போலவாரான மஹானகளின ஸ்ரீ ஸூகதிகளை அவலீலையாக பரதிபதம தூஷிததுககொணடே போது போககுமிவா, அாவாசீநாகளான அருமபதவுரைகாரா களின அவதயஙகளை உளளபடியே அடியேன எடுததுககாடடும விஷயததில பரிதாபம காடடுவது 'வஸநதெவெளவரிணீ வீதாவரீவாஜெ ந தூஷ்யதி ! ஜ்ரஷாவாஜெகஜீவாதூ: ரராஜூஹ-ஷ்யஹ்ரஷ்யதி" எனனுமாபோலே யிருககினறது வாத ஸலயவிஷயததில "யஸ்ய விவாகா:" இதயாதி ஸ்ரீஸூகதிகளைக கொணடிருககினற சருதபரகாசிகையை "இடிதது தளளிவிடு வோம" எனறு கைகூசாமல எழுதியுளளவா வஸது ஸதிதியை உரைககினற எமமை இகழவது ஏறகுமோ? அதிகரண ஸாராவளி யின சிநதாமணி வியாகயானததிலேயே பல அவதயஙக ளிருபபதாக ஸ்ரீமத திருபபுடகுழி ஸவாமி ஸாதிபபரெனறு அவாது சிஷயாகள சொலலி வருகிறாாகள அது நயனாசாாயா ஸாதிததனறு என றும அநதஸவாமி ஸாதிபபாாம ஸ்ரீமத ரஹஸய தரயஸாரததின வியாககியானஙகளிலும இஙஙனே சொலலககூடிய அவகாசம பெரிது முணடெனறு பெரியோா பணிபபா விருமபினால அநத அவதயங களை யெலலாம ஸபஷடமாகவே யெடுததுக காடடுவேன 'புலிககுத தனகாடு புறஙகாடு இலலை" எனறு இவா எழுதுவது ஸதயமாய இவா திறததிலேயே இணஙகும ஆசாாயாகளில தேசிகன, மணவாள மாமுனிகள வரையிலுளள பூருவாகளின ஸகல ஸ்ரீஸூகதி களையும தரிகரண சுததியுடன சிரஸா வஹிபபவன அடியேன. இவரொருவரே ஸவதநதிரமான சில கொளகைகளைக கைபபறறிக கொணடு, அதறகிணஙகாத ஸ்ரீஸூகதி எநத ஆசாயருடையதாக இருநதாலும நிராகஷிணயமாய பரமஜுகுபஸநீயமாய உதறித தளளுபவா இபபடிபபடட விவா சில அாவாசீநோகதிகளின உணமையான நிலைமையை எடுததுரைககும எமமீது குறை கூறுதல சில பாமராகளுககுததான பரசமஸநீயமாகும

ஸ்ரீமத கரூா ஸவாமி பரமபதிதது 60, 70, வருஷஙக ளனறிககே நூறு வருஷநதான இருககடடுமே. இருநூறு வருஷ

acharya.org

மாயின வென்றாலும எமககு விபரதிபததி இலலை.

தாவதா கிஂஹோ தஸ்ய வக்ஷ்யாவஶேஷ்யேஷு குணோக்தா।
ஸம்பவேத்? ஶாஸ்த்ர தத்ராபி, காஂசம் ஸோஸ்த்ர உதாஹ்ருதி:॥
ஸஹஸ்ரகிரணீ தஸ்ய ஸாந்த்ரோத்வவக்ரதிக்ஷிதா।
ஸந்தேஹே வஸ்து ஸந்த்யாம்ஸ த்ருஷ்ட்வா உபகாரகா:॥

ஸ்ரீ சஙகராசாரயஸவாமிகள, விதயாரணய ஸவாமிகள, அபபய தீக்ஷிதா முதலானோரும உலகுககு மஹோபகாரஙகளைச செயதிருபபவாகள இநத உபகாரஙகள உணமையில வாசாமகோசரம ஆவறறுககாக அவாகள பககல ஆசாரயதவ பாதி பததியை ஸ்ரீ கோபாலாசாரய ஸவாமி தாமும பணணக காணோம மைஸூா அனநதாழவானைக காடடிலுமா வேறொருவா எமபெருமானா தாசனததிறகு மஹோபகாரகராகத தேறப போகிறா? கருதஜ ஞதையைச செலுததவேணடா மெனபாராருமிலலை தேவப பெருமாளுககு ஆழவாா பாடலிலலை யெனகிற நிராதார துரா கரஹததில தலை நிறபவாகள களூா ஸவாமியைப பூாவாசாாய கோஷடியிலே நிறுததி (அலலது, அவாகடகும மேலான பதவியில நிறுததி) ஆராதிகக விருமபினால தாராளமாக ஆராதிககடடுமே திரியுங கலியுகமெனறு ஆழவா ரருளிசசெயததற கிணஙகப பூாவாசாாயாகளுககுத திரஸகாரமும ஆதுநிகாகளுககுப புரஸகாரமும எறபடவேணடியது மிகவும அவசியமே. ஹவிஷ்யத்யக்ரதோ த்ருஷ்டி எனறது அனுஷடானததிறகு வர வேணடாவோ? எதிர காலம எபபோதும எதிாகாலமாகவே யிருககலாகுமோ?

3 ஸ்ரீமத ரஹஸயதரயஸார பரமாணததிரடடின ஆராயசசி எனறு அடியேன வெளியிடடிருககினற ஒரு ஸஞசிகையினமீது திருவெழுததுசசாதத ஆரமபிததிருககிறா ஸ்ரீகோபாலாரய நணபா திருககுடநதையில வாழும ஸ்ரீ உ வே வி கே ராமானுஜாசாரய ஸவாமிகள மிகவும மஹநீயரெனபதையும, அவா திரு நக்ஷததிரம நிரமபியவராய மிகவும அசகதரான நிலைமையிலும பல புஸதக வெளியீடுகளை இடைவிடாது செயதுகொணடே நலல போது போககுபவா எனபதையும மறறும அவரது பல புகழசசிகளையும அடியேனே எழுதி வெளியிடடிருககினறேன. லோகோபகாரததிற

acharya.org

கொன்று பெரும் பொருட் செலவு செய்து வெளியிடப்படுகின்ற அவரது புத்தகங்களில் பிழைகள் இல்லாதிருந்தால்தான் உண்மையான லோகோபகாரமாகும் என்றெண்ணியே அவரது பதிப்பொன்றில் ஸ்தாலீபுலாக ந்யாயமாகச் சில குற்றங் குறைகளை எடுத்துக் காட்டினேன். 'கண் அடியோடு தெரியாத வயோவ்ருத்தராய அஜாத சத்ருவான அந்தப் பெரியாருடைய பதிப்பில் இந்த யுவா அவத்யம் காட்டுவதைத் தெய்வம் ஸஹிக்குமா? உலகம் ஸஹிக்குமா?' என்று மாய்ந்து போகிறார் ஸ்ரீ கோபாலாசார்யர். அந்த ஆராய்ச்சிப் புத்தகத்தின் முடிவில் (பக்கம் 14ல்) அடியேன் வெளியிட்டுள்ள முக்கியமானதோர் விஜ்ஞாபனத்தைக் குறிக்கொள்பவர்கள் "மிகவும் யுக்தமும் ஆவச்யகமுமான ப்ரவ்ருத்தியே இது" என்று தலை துலுக்கி மெச்சுவர்கள், அப்படியே பல பெரியோர் மெச்சுகின்றார்கள். அடியேன் எழுதியுள்ள விஷயங்களை நெஞ்சில் வாங்கிக்கொள்ளவும் வல்லரல்லாதார் வயிறெரிவதில் அடியேனுக்கு என்ன அவஸாதம்?

ஸ்ரீமத் வி. கே. ராமாநுஜாசார்ய ஸ்வாமிகள் வெளியிட்டுள்ள கீதாபாஷ்யவுரைப்பதிப்பின் முகவுரையில் (பக்கம் 18ல் புட்நோட்டில்) "ஒன்றில் குற்றமிருப்பதாக ஒருவர் எழுதினால் உண்மையைக் கண்டுபிடிக்கவேணுமென்று ஆசைப்படுகிறவர்கள் அதை நன்றாய்க் கவனிக்கவேணும், தூஷித்ததாக நினைக்கக்கூடாது" என்று அழகாக எழுதியுள்ளது ஏனோ இவர் கண்ணில் தென்படவில்லை. அதே கீதாபாஷ்யப் பதிப்பில் (பக்கம் 54ல்) "த்ரைகுண்ய விஷயா வேதா:" என்கிற கீதா ச்லோகத்திற்கு உரையெழுதுகின்ற அந்த ஸ்வாமி—

"கும்பகோணம் முதலான பெரிய ஸ்தலங்களில் கூலிவேலை செய்கிறவர்களுக்காக கள்ளுக்கடைகள் இருக்கவேண்டியது அப்படி இல்லாவிட்டால், கள்ளு இல்லாவிட்டால் தாங்கமுடியாதவர்கள் கள்ளுக்கடை இருக்கும் ஊர்களுக்குப் போய், கும்பகோணத்திலபோல் தொழில் அகப்படாமல், உத்ஸவ காலத்தில் ஆராவமுதனை கருடவாஹனத்தில் எழுந்தருளப் பண்ணுகிற பாக்கியத்தையும், அதினாலுண்டாகும் புண்ணியத்தையும் இழந்து போவார்கள்"

acharya.org

என்று எழுதிவைத்திருக்கின்ற வார்த்தைகளை இந்த ஸ்ரீகோபாலார்யர் ஒரு ஸபையில் வாசித்துக்காட்டி "இப்படியும் ஒரு மஹான் எழுதுவாரா? பரமபரிசுத்தமான கீதாபாஷ்யத்தில், ஆராவமுதன் ஸந்நிதியில் கள்ளுக்கடை வைக்க வேணுமென்று க்ராம்யவார்த்தையைக் கைக்கூசாமல் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் எப்படி எழுதினார்?" என்று உத்கோஷித்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட விஷயங்களைப்பற்றி அடியேன் எழுத வந்தேனல்லேன்.

நன்றாக வெளிக்கண் தெரியப்பெற்றவரும் யுவர்க்களில் தலைவருமான ஸஜாத சத்ருவுமாகிய ஒரு மஹாநுபாவரைக் குறித்தே அடியேன் எழுதியிருக்கின்றேனென்பது இவர் கண்ணில் படாதது ஏனோ? பல வம்புதும்புக் கடிதங்களை ப்ரசுரஞ் செய்வதையே போதுபோக்காகக் கொண்டிருக்கும் அவர் விஷய சர்ச்சைகளில் வெளிவராது பதுங்கி நிற்பது ஏனோ? வாவதூகராகிய கோபாலார்ய ஸ்வாமி தமது தொழில்முறைமையில் அவர்க்கும் ப்ரதிநிதியாக எழுந்தருளுகின்றார் போலும். பொறுமையை யொழித்த பண்டிதர்கள் ஒருகாலும் இவருடைய எழுத்துக்களில் ஈஷத்தும் மனங்கனியார்களென்று குடப்பாம்பில் கையிட்டுரைப்பேன்.

இவர் அடியேனை நோக்கி எழுதும்போது (பக்கம் 51-ல்)— "எழுதத் தெரியும்படி ஈச்வரன் கொடுத்த சக்திக்கு அரும்பெரியோரை இகழ்வதில்தானோ விநியோகம்?" என்கிறார். அடியேனுடைய சக்தியானது அரிய பெரிய உலகவுபகாரங்களிலேயே இருபது வருஷமாக உபயோகப்பட்டுவருகின்றதென்பதை உலகமறியும். எம்பெருமான் "ஸம்பவாமி யுகே யுகே" என்றபோது தன் திருவவதாரத்திற்கு மூவகைப் பயன்களை வெளியிட்டருளினன். அவற்றுள் மத்யஸ்தமாகக் காண்கின்ற பலன் ஸாதுக்களுக்கு ஆசம்ஸநீயமேயாகும். அதனை அவனடியார்களும் கொள்ளப் ப்ராப்தம். 'சடங்காவாயடங்கிட' இடையிடையே அடியேன் எழுதுகின்ற நூல்களும் விவேகிகளுக்கு ஹ்ருதயங்கமங்களே. "ஸ்வயம் த்ரிதண்டக்ஷ: க்லைவ்யாநவேளா தாரயேத்?" என்று ஸ்ரீவேங்கடாத்வரி பணித்தபடியே தம்முடைய அவத்யங்களைப் பரிஹரித்துக்கொள்ளகில்லாதவிவர் அநாவச்யக—அஸாத்ய—ப்ரவ்ருத்திகளிலே தலையிட்டுக்கொள்வது ஏதுக்கு? நிற்க.

acharya.org

அடியேனுடைய திரட்டாரய்ச்சி நூலில் (பக்கம் 5 ல்) “ஸுநிஶ்சயாஶி ஸம்ஸ்ப்ருஷ்டா ஊஹதே த்ருவ ஹி வாசகஃ” என்பதற்குப் பொருளெழுதிய திரட்டுக்காரர் ஸ்வபாவத்தை விட்டுப் பொருளுரைத்திருப்பது விபரீதார்த்தக மென்று காட்டியிருந்தேன். ‘அது ஏதோ கைப்பிசகினால் விட்டுப்போயிற்று’ என்று கோபாலார்யர் ஸமாதான மெழுதுகிறார். இது அழகியதே. இவ்வளவோடு நில்லாமல் ப்ரஸங்கங்களை அதிக்ரமித்துச் செல்வது அழகோ? ‘உக்தா’ என்று அடியேன் எழுதியிருந்த ஒரு பக்ஷத்தில் தகார விஸர்க்கமில்லையென்பதைப் பெரிய குற்றமாகக் காட்டியிருந்த வொரு வித்வானைத் தோள்மீதுகொண்ட இவர், அடியேனை ப்ராக்ருத விஷயத்திற்காகச் சிரமீதுகொள்ள வேண்டாவோ? தடஸ்த புத்தியுடன் வருவது உண்மையாயிருந்தால் அப்படியன்றோ வரவேணும். ‘தத்துவ பாகங்களைத் திருத்த வந்தாரோ இவர்’ என்று அடியேனை நோக்கிக் கேட்கின்றார். இவர் தம் திருவுள்ளத்தில் எதைத் தத்வ பாகமாக நினைத்திருக்கின்றாரென்று தெரியவேணும். தேசிகன் “வகாரஸஞ்சயோந்நம” என்று ஒரு க்ரந்த மருளிச்செய்தது எதற்காகவென்று இவரையே கேட்போம்.

“குயுக்தியால் வீண் வம்புக்காக” இத்தியாதி வார்த்தைகளை ஸ்ரீ கோபாலார்யர் அடியேன் திறத்து எழுதுவது தகும் தகும். ஏனெனில், விஷய சாசசைகளில் வாத்ஸல்ய விஜயத்வஜத்தினாலும் “வாரஉஸ்வேஉஸ்விஶ்வவாரஶாயோத்ர” ரக்ஷையினாலும் (வ்ராதெஶாஹ வ்யாஸௌஷதத்தினாலும்) இவரை நன்கு வாயமாளப் பண்ணியிருக்கின்ற அடியேன் விஷயத்தில் இவர்க்குள்ள உத்வேகம் இப்படிப்பட்ட சொற்களை வெளியிட்டுத்தானே சாந்தி பெற வேணும். அந்தோ! என் செய்வர் பாவம்!! அடியேனுடைய ஸூக்திகளைத் திருப்பித் திருப்பிக் கடாக்ஷித்தருளுகிறார். ஒரு அக்ஷரத்திற்கும் மறுப்புரைக்க வாய்திறக்கவும் வழியில்லை. “பிறகு விஸ்தாரமாக பதில் எழுதுவோம்” என்று அட்டைமீது வெளியிட்டுவிட்டுத் தமக்கு அவசியமல்லாத விஷயங்களிற் புகுந்து பரிதபிக்கிறார். ஏனோ இவர்க்கு இந்த விதி?

அபூர்வமாகவும் ரஸ்யமாகவும் பல விஷயங்களை தாம் கர்ஹித திருப்பதாக அபிமானிக்கிறார். அது வ்யர்த்தமான அபிமானமே.

acharya.org

யென்பதை இரண்டொரு விஷயங்களைக் காட்டி இங்கு விசதமாக்கு கின்றேன். சென்ற வாரத்தில் இப் பெரியாருக்கு அடியேன் விடுத்திருந்த வொரு விண்ணப்பத்தில் "த்ரிம்சத்ரிம்சதி" என்ற ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதய ச்லோகார்த்தத்தைக் குறிப்பிட்டிருந்தேன். அதன் நான்காவது பாதம் "நிவ்ருத்திசவி யஜ்ஞத்ருந்வதத்த விநிக்ரஹா:" என்பது. இதற்கு அடியேன் ஒரு அர்த்தமும் எழுதியிருக்கவில்லை. ஆனாலும் தத்த்வவிநிக்ரஹா: என்பதற்கு, தத்வவித்துக்களான பாகவதோத்தமர்களால் செய்யப்படுகிற நிக்ரஹம் என்றே அடியேன் பொருள் கருதியிருப்பது.

இப்படியேதான் ஸம்ஸ்க்ருத வித்வான்களெல்லாரும் கருதியிருப்பதாகும். இந்த ஸ்வாமி அடியேனுக்கு விடுத்த உத்தர பத்திரிகையில் எழுதியுள்ளார்—"தத்வவித்துக்களே நாம் நிக்ரஹிப்பது என்று அர்த்தம் கொள்ளவேணும், ஏனென்றால் நிர்பய அஜ்ஞாத நிக்ரஹர்களாகிய தத்வவித்துக்கள் நம்மை நிக்ரஹிக்க ப்ரஸக்தி யில்லாமையால் 'தத்வவித்துக்களால் செய்யப்படுகிற நிக்ரஹம்' என்று பொருள் கொள்ள ப்ரஸக்தியே கிடையாது" என்று.

இவருடைய ரஸிகத்வத்தையும் ஸம்ஸ்க்ருத பாஷையின் சுவடறியுந் தன்மையையும் இஃதொன்றிலேயே விவேகிகள் கண்டு கொள்ளலாம். நிக்ரஹம் என்பது அநுக்ரஹத்திற்கு எதிரிடையான சொல். அநுக்ரஹம் செய்ய யார் அதிகாரிகளோ அவர்கள் தாம் நிக்ரஹம் செய்வதற்கும் அதிகாரிகளாவர். நீசர்களான நாம் மஹான்களை எப்படி அநுக்ரஹிக்க முடியாதோ அப்படி நிக்ரஹிக்கவும் முடியாதென்பது சொல்லவும் வேணுமோ? ஆசார்யன் சிஷ்யனை நிக்ரஹித்தானென்று வசநவ்யக்தியுளது. இங்ஙனம், சிஷ்யன் ஆசார்யனை நிக்ரஹித்தானென்று சொல்வதாக இவ்வுலகில் இது வரை எங்கும் கேட்டதில்லை. வேதத்திலும் "ஹாத்ருவஸ்ய நிக்ருஹ்ணாதி" போலவன வாசகங்கள் பலவுள்ளன. உத்தரங்க விஷயத்தில் அதமனுடைய அபசாரத்தை நிக்ரஹ சப்தத்தால் ஒரு விவேகியும் சொல்ல விரும்பான. இப்படியிருக்க இவர் மஹார்த்தம் கண்டுபிடித்து விட்டதாக ஸர்வஜ்ஞராகவே

acharya.org

எழுதித் தம்முடைய பரம பாண்டித்யத்தை ப்ரகாசப்படுத்திக் கொள்ளுகிறார். 'எல்லாம் தலைகீழ்' என்பது இவர் விஷயத்திலா? அடியேன் விஷயத்திலா? என்பதைத் தடஸ்தர்களே நிஷ்கர்ஷிக்கலாம். ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளில் இவர் தலையிட்டு அவத்யமான அர்த்தங்களைச் செய்யவேண்டா என்பதை மீண்டும் கைகூப்பி வேண்டுகின்றேன்.

இங்ஙனமே மற்றொரு விஷயமும் பண்டித போக்யமாகக் காட்டுகின்றேன். காண்மின் கண்ணுடையீர்!. இப்போது இந்த ஸ்வாமி வெளியிட்டுவரும் வைராக்ய பஞ்சகவுரையில் (பக்கம் 29ல்) "நாஸ்தி பித்ரார்ஜிதம் கிஞ்சிந்ந மயா கிஞ்சிதார்ஜிதம் ।
அஸ்தி மே ஹஸ்திசைலாக்ரே வஸ்து பைதாமஹம் தநம் ॥"
என்கிற ச்லோகத்திற்கு அர்த்தமெழுதியிருக்கும் அழகைக் காணீர்;

> "என்தகப்பனாரும் நான்சொல்லப்போகும் என்னுடைய தனத்தை ஸம்பாதித்தவர் அல்லர்; அவர் தகப்பனார் முதலியோர்களும் ஸம்பாதித்தது அல்ல."

என்று எழுதியுள்ளார். இது எந்த ஸ்ரீஸூக்திக்கு அர்த்தமோ அறியோம். தேசிகன் மூலத்தில் ப்ரயோகித்திருக்கின்ற நாஸ்தியும் நவ்வும் அத்யந்தாபாவார்த்தத்தில் ப்ரயுக்தங்களேயன்றி அந்யோந்யாபாவார்த்தத்தில் ப்ரயுக்தங்களல்ல. இது ரகுவம்சம் வாசிக்கிற ஒரு சிறு மாணாக்கனுக்கும் எளிதாகப் புலனாகும் விஷயம்.

'எனக்கு ஸ்வயமார்ஜிதமான தனமும் கிடையாது, பித்ரார்ஜிதமான தனமும்கிடையாது' என்று சொல்வதன்றோ பூர்வார்த்தத்தில் உள்ளது. இவரெழுதுவது அப்படியில்லையே. "ஹஸ்திசைலாக்ரத்திலுள்ள தேவப்பெருமாளாகிற செல்வம் நான்படைத்ததுமன்று, என்தந்தை படைத்ததுமன்று" என்று எழுதுகிறாரே; இதற்கு இங்கு ப்ரஸக்திலேசமாவது உண்டாவென்று பாருங்கள். ஹஸ்திசைலாக்ரஸ்தாயியான வஸ்துவைப்பற்றிப் பூர்வார்த்தத்தில் ஸ்மரணமே கிடையாதே. தத்விஷயமான ப்ரஸங்கத்தைப் பூர்வார்த்தவுரையில் இவர் ஏதுக்குப் பண்ணுகிறார்? இதைவிட அஸமஞ்ஜஸம் வேறுண்டோ? இதற்கு இவர் என்ன சொல்லுவ

acharya.org

றென்றால் "பதவுரையில் ஸரியாக எழுதியிருக்கிறேனே" என்பர்; அது இவருடையதன்று என்பது கூட்டுரையில் ஏற்கனவே வெளிவந்திருக்கின்ற வைராக்யபஞ்சக வ்யாக்யானத்தினால் விசதமாகும் அப்படிப்பட்ட பதவுரையைப் பார்த்து வைத்தும் இவர்க்கு விபரீதமான பொருளே தோன்றுகின்றதென்றால் இனி இவருடைய மேதாவிலாஸத்தைப்பற்றி நாம் விரித்துரைக்க வேண்டுவதுண்டோ? இது சிறிய விஷயமா, பெரிய விஷயமா, பாருங்கள்

இவருடைய புத்தி ருஜுவான வழியில் புகுகிறதா? விபரீதமான வழியில்புகுகிறதா? என்று தெரிந்து கொள்வதற்கு இவ்விஷயமொன்றே $ போதுங்கிடீர். இப்படிப்பட்ட பரம ஹேயமான அர்த்தங்களை யெழுதிவிட்டுத் தமக்குமேல் ரஸமாகவுரைப்போர் உலகத்திலேயே கிடையாரென்று இறுமாப்புக் கொள்கின்றார். இது நிற்க

அடியேனுடைய திரட்டாராய்ச்சியில் (பக்கம் 4ல்) 'மூலத்தில் இல்லாத பதங்களைச் சேர்த்துக்கொண்டு அர்த்தமெழுதுவர்' என்ற மகுடத்தின்கீழ் வ்யாகரணவித்வான்கள் சிரமேற்கொள்ள வேண்டிய ஒரு விஷயம் எழுதியிருக்கின்றேன் அதில் புகுந்து பேசுவதற்கு இவர்க்குச் சிறிதும் அதிகாரமில்லை இவர் தாம் தம்மை ஸ்வதந்த்ரஸ்வதந்த்ரராக நினைத்திருக்கையாலே எந்த விசாரத்திலும் தாராளமாகப் புக விரும்பி இதிலும் வாய்வைத்து மஹாகோலாஹலங்கள் செய்துள்ளார் இங்கு விஷயமென்னவென்றால் ஆழ்வானுடைய ஸ்ரீ வைகுண்ட ஸ்தவத்தில் „[illegible]" என்றதற்கு 'நித்யஸூரிகளுடன் எப்போது நான் சேருவேன்" என்று திரட்டுக்காரர் எழுதியிருக்கும் பொருள் வ்யாகரணத்திற்குச் சேராது, 'எப்போது' என்பதற்கு வாசகமான பதம் மூலத்தில் இல்லை, கொண்டு கூட்டுவோமென்றாலும் மேலுள்ள க்ரியாபதமானது ஆசீ

$ ஸ்ரீகோபாலாரியருடைய பதிப்புக்களில் இப்படிப்பட்ட அஸம்பத்த லேகனங்கள் ஆயிரக்கணக்காக வுண்டென்பதை ஸமயம் வாய்க்குங்கால் விரிவுக்கு அஞ்சாமல் நிரூபிப்பேன் முன்ஸஞ்சிகைகளிலும் இங்ஙனே பல நிரூபித்தேயிருக்கின்றேன் எதற்கும் அநந்தரமே இவர்க்கு சரணம்

acharya.org

ஸ்வரூபமாதலால் அதன் சோக்கையை ஸஹிக்கமாட்டார்து—என்பது அடியே னெழுதியிருந்தது. இங்கும் கைக்கூப்பவேண்டுவது தவிர வேறு கதியில்லை. அப்படியிருந்தும் இவர் ஸமாதானம் பண்ண வருகிறார் எங்ஙனே யென்னில், திரட்டுக்காரர் பதவுரை கூறவந்தவரல்லர், தாத்பர்யமே உணர்த்த வந்தவர், ப்ரகரணத்திற்குப் பொருந்த உரைக்கவேண்டு மாதலால் கீழ் ச்லோகங்கள் சிலவற்றில் [க்ஷா க்ஷா] என்று ஆழ்வானே கூறியிருப்பதால் அதிமாத்ரம் த்வரையோடே கூடியிருக்கின்ற அவருடைய திருவுள்ளத்திற்குச் சேர இப்படித்தான் உரைக்கவேண்டும்—என்கிறார். இதுதான் * கும்பகர்ணே பகாரோஸ்திவாக்யார்த்த மென்பது. ஸ்தோத்ரக்ரந்தத்தில் ப்ரகரணமென்று ஒன்றுண்டோ? ஒவ்வொரு ச்லோகத்தில் ஒவ்வொருவிதமான கீர்த்தனம். இதில் பூர்வோத்தரஸமந்வயக்ரமம் யாதொன்றும் கிடையாது. ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளிலும் ஒரு பாசுரத்தில் அளவு கடந்த த்வரை விளங்கும், அடுத்தபாசுரத்தில் சிறிது ஆறுதலான பேச்சு வரும். இங்ஙனே ஸ்ரீஸூக்தி முறைமைகள் பலவிதம். உள்ள சப்தத்திற்கு நாம் உள்ளபடி அர்த்தம் உரைக்கவேண்டுமத்தனை. அப்படி உரைக்கவில்லை என்றால் அது அஜ்ஞாநத்தையும் அந்யதாஜ்ஞாநத்தையும் காட்டுமேயல்லது வேறொன்றையுங் காட்டாது. மூலவக்தாவுக்கு த்வராதிசயம் விவக்ஷிதமானால் அதைக் காட்டக்கூடிய சப்தப்ரயோகம் அவர்க்குத் தெரியாதோ? இவர்களுக்குள்ள அஸாமர்த்தியத்தை மூலவக்தாக்கள் பேரிலும் ஏற்றப் பார்ப்பது மிகவியப்பே! ஆழ்வார்கள் ஒரே பதிகத்திலுள்ள "அடையப்பெறுவேனோ?—அடையக்கடவேன்—எப்போது அடைவேன்?—அடைந்துவிட்டேன்—அடையாமல் எப்படியிருப்பேன்?—அடைவதற்கு வழியுண்டோ?—நானாவது அடையப் போகிறதாவது—அடையப் பெறலாகுமோ?" என்றிப்படிப்பட்ட வசநவ்யக்திகளைப் பாசுரங்களில் அமைத்திருக்கக் காண்கின்றோம். இங்கு எதைக் கொண்டு எதன் பொருளை மாற்றுவது? மாற்றுதற்கு யார்க்கதிகாரம்? ஒரு ஆசிரியரும் மாற்றவுமில்லை. "திரட்டுக்காரர் ஆராய்ச்சியின்றியே எழுதிவிட்டார்" என்று ஒருவார்த்தையில் முடிக்க வேண்டிய விஷயம். மிது 'மனம் போனபடி நாம் எதையும் எழுதிவிடலாம்' என்று

acharya.org

ஸ்ரீகோபாலாரயர் துணிவு கொள்ளுகிறார் பாவம்! அடியேனுடைய வாழ்நாளில் அதை அவர் ஜீரிப்பித்துக் கொள்ள முடியாதென்பது திண்ணம் திண்ணம்.

இந்த ப்ரஸங்கத்தினிடையில் (பக்கம் 54ல்) ஸ்ரீகோபாலாரயர் "காந்திஸ்த்வோஜ்வலஸஹஸ்ரசந்த்ரஶ்ரீ: ஸாயேத வாரணயித்ரும் கிம் வக்ஷஸோஶே?" என்ற ஸ்ரீவைகுண்டஸ்தவ ஶ்லோகத்திற்கு அர்த்தமெழுதியுள்ளார் காண்மின்,—

"உம்முடைய காந்தியானது என்கண்களுக்குப் பாரணை செய்ய ஶக்யமாகுமோ?" என்று இதை மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவர்கட்கு இதில் ஒரு அவத்யமும் தோன்றாது. உண்மையாகவுள்ள குற்றம் அடியேனுடைய ஸ்தூலத்ருஷ்டியிலேயே தோன்றிற்று. இங்கே 'சக்யமாகுமோ?' என்று இவர் எழுதியிருப்பது ஒவ்வாது. 'காந்தியானது சக்ய மாகுமோ? என்றால் என்ன அர்த்தம்? சக்தம் என்று ஒரு பதம், சக்யம் என்று ஒரு பதம் இரண்டுக்கும் பொருள்வாசி பெரிதுமுண்டு. அர்த்தத்தில் பதம் சக்தம்; பதத்திற்கு அர்த்தம் சக்யம். காரணவஸ்து சக்தம், கார்யவஸ்து சக்யம். இந்த நிரூபணங்கள் நுண்ணறிவோடு கூடிய சாஸ்த்ரவாஸனையில்லாதார்க்குச் சிறிதும் ரஸிக்கமாட்டாது. "ஸ்வார்த்தஸ்த்ரீநசர்த்த கோபி ஸஹாநயசர்" என்று கொண்டு இப்படிப்பட்ட விஷயங்களை ஸமயங்களில் எழுதிவருகின்றேன்.

"காந்தியானது கண்களுக்குத் த்ருப்தி செய்ய சக்யமாகுமா?" என்கிற கோபாலாரயருடைய வாசகம் ஸர்வாத்மநா அஸங்கதம். 'காந்தியானது கண்களுக்கு த்ருப்தி செய்ய சக்தமாகுமா? என்ன வேணும். "ஶக்யமரவிந்தஸுரபி: கணவாஹீ மாலினீதரங்காணாம்। அங்கைரநங்கதப்தைரவிரலமாலிங்கிதும் பவன:॥" என்பது சாகுந்தளநாடகத்தில் காளிதாஸருடைய ஒரு ஶ்லோகம். இதனை ஊன்றி நோக்குக. "ஶ்லாகீந்து ஹயாஸ்ய கிமபி வக்தும் நஶக்ய:" என்பது தேசிக திவ்யஸூக்தி. சக்யபத ப்ரயோக ஸ்தலத்தையும் சக்த பத ப்ரயோக ஸ்தலத்தையும் காட்டிவிட்டேன். உபாத்யாயர் என்னை உத்தீர்ணனாக்குவதற்கு சக்தரா?

acharya.org

என்று கேட்கலாமே தவிர சக்யரா? என்று கேட்கலாகாது. அப்படியேதான் இங்கும்.—வார்த்தை சொல்லத் தெரியாதவர்கள் பலர் பெரியவர்களிடத்தில் மிகவும் மரியாதையாகப் பேசுவது போல் நினைத்து "ஸ்வாமியைக் கொஞ்சம் அபசாரப்படுத்துகிறேன், க்ஷமிக்கவேணும்" என்பர். இப்படிப்பட்ட அவிவேகிதரமணீய வார்த்தைகள் நமது கோபாலார்யருடைய சுவடிகளில் பலகோடி நூறாயிரம்.

அந்தஸ்வாமிக்கும் அடியேனுக்கும் வாதிப்ரதிவாதிபாவம் ஏற்பட்டிருப்பதால் அந் காரணமாக இங்ஙனே அடியேன் எழுதுவதாய்ச் சிலர் நினைக்கலாம். காரணம் அதுவே யெனினும், அடியேன் எழுதும் விஷயம் ஒவ்வொன்றும் பிரளயத்திலும் அசையமாட்டாதென்பது அறிஞர்கட்குக் குறிப்பிற் கொள்ளத்தக்கது.
‘வாதஸ்யைவ ப்ரஸங்கேந நவ்ராவயதி ஸாதவ:’ ।
தமேவ ஜ்ஞாநதீபேந ப்ரத்யுஜ்ஜ்வலயதி த்ருவம் ॥

‘சக்யமாகுமோ’ என்கிற சொல் மிகச்சிறிதேயாயினும் நுண்ணறிவாளர்க்கு இது மிகப் பெரிய விஷயம். யாதவ்யமென்ன? ஸ்வாத்யாயமென்ன? எதற்கு எங்கே அந்வயம்? சாப்த போதம் எப்படி? என்று வினவப்புகுந்தால் *ஸவ்யாகரணாநாம் ஸ்வராணி கேஷாஞ்சித் ஸம்யேவ நாத்யாபவித்ரீ* என்றுற போன்ற விடை யொன்றையே நமது நண்பர் அளிக்கவல்லவரென்பதில் என்ன ஸந்தேஹம்.

இந்த ப்ரஸங்க மத்யத்திலேயே ஸ்ரீ கோபாலார்யர் ஸ்துவாநி என்று ஒரு லோட்ரூபம் ஆழ்வான் ப்ரயோகித்திருப்பதாக (பக்கம் 54-ல்) எழுதுகிறார். இப்படிப்பட்ட ஒரு பத ஸ்வரூபம் லோகத்திலேயே கண்டதில்லை. (வேதத்திலும் கண்டதில்லை.) ஸர்வாத்மநா அஸத்தான ஒரு பதத்தை இவர் ஆழ்வான் ஸ்ரீ ஸூக்தியில் நுழைக்கப் புகுவது மிக்க ஸாஹஸம். ஸ்துதி என்று சொல்லுகிறோமாகையாலே ஸ்துவாநி என்றுதான் லோட்ரூபமிருக்கவேணுமென்று இவர் க்ரஹித்துவிட்டார். முதலெழுத்து போகட்டும்; முடிவெழுத்தாவது சுத்தமோ என்று பார்த்தால் அந்தோ! அதுவு

acharya.org

யிலலை இவா காட்டும ஆழவான சலோகததில வயம எனபது காதரு பதமாதலால அது எஙஙனே 'ஓடடும? இததனை ஆராயசசி யிலலாத மஹாநுபாவா அடியேனை காஹிககப புறபபடடதை நினை தொறும சொலலுந்தொறும நெஞசிடிநதுகும (இஙகே உளள ரூபம ஷ்வாஉ—ஸதவாம எனபதே)

'4 இனி, மேலே செலவோம திரடடாராயசசியில "அநாவசயக மான பிழை திருததஙகள" எனற தலைபபின கீழச சில நுடபஙகள காடடியுளளேன அவறறையும பழிககப புகுநதிருககினறா திரடடுககாரா கூடபீடு எனற வொரு பததைதை முதலிலே யெழுதிப பிறகு பிழைதிருததததில அதைக கூடபாடு எனத திருததியுளளார்; இரணடு சொறகளும சுததமே யாதலால திருததம வேணடா எனபது அடியே னெழுதியுளளது இஙகே கோபாலாயருடைய ஸமாதான மெனனவெனறால, இரணடு சொறகளும சுததமே யானாலும திரடடுககாராக்கு உதேதசயமான பதம கூடபாடு எனபதே யாதலால அது தோனறவே திருததஞ செயயபபடடது எனபதாம. இதுவும விபரீதம. சுததா சுதத பதரிகை எனறும பிழைதிருததம எனறும மகுடம வைதது அசுததம எனகிற வகுபபின கீழ கூடபீடு எனற சொலலை யெழுதி சுததமெனகிற வகுபபினகீழ கூடபாடு எனற சொலலை எழுதி யிருககுமவாககு இவா எறிடும ஸமாதானம உபகாரக மாகுமோ? திணணையில படுததிருநதவன வேணுமெனறே கீழே யிறஙகியிருநதாலும 'உறககததில நழுவி விழுநதிடடேன' எனறு சொலலி ஸமாதானம பணணலாம கீழே படுததிருநதவன மேலே காணபபடடால மேறகுறிதத விதமான ஸமாதானம சொலல லாகுமோ? நம கோபாலாயா அபபடியும சொலலலாமெனறு கறபிககிறா போலும ஹந்த! கிமிவாச்யம் வாவதூகானாம் அநாசாரம்?

பரஸ்துதஸதலததில ஆராயசசியில நாம எழுதியுளளவை தமிழபபணடிதாகள தலைமேறகொளள வுரியவை இரணடு பாஷையிலும நாடஜஞான மிலலாதவாகள ஏதோ எழுதப புகுவதும அதறகு நாம விடையளிககப புகுவதும மிகக பரிதாபம. "காரவிகேஷு கவிகுஞ்ஜதேஷு பிரஸவி ஶாகிவ ஶாகிவா"

acharya.org

என்ன ப்ராப்தம் "திரட்டுக்காரர் உண்மையான பிழைகளுக்குத் திருத்தம் பதிப்பித்திருந்தால் அழகாயிருக்கும், இனி அங்ஙனம் பதிப்பிப்பதானால் பிழைதிருத்தம் மாத்திரம் இருபது முப்பது பாரங்களுக்காகும்" என்று நாம் ஆராய்ச்சியில் (பக்கம் 10ல்) எழுதியிருந்ததைக் கண்ட ஒரு தமிழ் மகாவித்வான் "உண்மையைக் கூசாது வெளியிட்டவுமக்கு என் தலையல்லால் கைம்மாறிலேன்" என்ன உவந்து திருமுகமருளியுள்ளார்.

"கண் தெரியாத ஒரு க்ரந்தகர்த்தா அச்சிடும் புஸ்தகத்தில் 'ன'வுக்கும் 'ந'வுக்கும் வ்யத்யாஸத்தை யெடுத்து எழுதுவதினழகை என்னென்று சொல்லுவது?" என்று தொடங்கி (பக்கம் 55ல்) ஸ்ரீகோபாலாயர் எழுதியிருப்பதும் தவறு. க்ரந்தகர்த்தா கண் தெரியாதவரென்பது நமக்குத் தெரியும். அது நமது ஆராய்ச்சிநூலிலும் குறிப்பிடப்பட்டேயுள்ளது. அந்த ஸ்வாமி ஒருவரை ஸஹாய பூதராக வைத்துக்கொண்டு காரியம் செய்து வருகிறாராதலால் அந்த வ்யக்தி உண்மையான வித்வானாக இருக்க வேணுமென்றும், பல அவத்யங்களுக்கு அவகாசம் கொடுத்து எழுதுகின்றவரைத் துணைகொண்டு செய்யும் காரியம் உலகுக்கு உபகாரகமாகாததோடு ப்ரத்யுத அபகாரகமும் ஆகிறதே! அங்ஙனம் ஆகாதபடி நோக்கிக் கொள்வது நன்று—என்றும் நாம் ஸ்பஷ்டமாக எழுதியிருக்கிறோமே.

"தமிழ்ப்பாஷையில் இலக்கணம் பொருந்திய இலக்கிய நூலாக வைத்துக் கொள்வதற்குத் திரட்டுக்ரந்தம் எழுதப்படவில்லையே! இதன்மேல் ஏதுக்குக் குற்றம் குறை கூறவேணும்?" என்கிறார் ஸ்ரீகோபாலாயர். இலக்கணக் குற்றம் கூறுவதை நாம் நெஞ்சிலும் நினைக்கவில்லை. இல்லாத விஷயத்தை இவர் ஏதுக்கு ஏறிட்டுக் கொண்டு இகழ்கிறார்? உண்மையில் பிழையல்லாதவற்றைப் பிழையாக ப்ரமித்துப் பிழை திருத்தம் பதிப்பிக்கப்பட்டிருந்ததனால் ப்ரஸங்காத் சிறிது இலக்கணத் தத்துவம் காட்டினோம். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் உதாஹரிக்கப்பட்டுள்ள ப்ரமாணங்களுக்குப் பொருள் விபரீதமாக எழுதப்பட்டுள்ளதென்பதையன்றோ நமது ஆராய்ச்சிநூல் காட்டுவது. அவ்விஷயத்தில் ஸமாதானம் சிறிதும் ஏறவில்லையே.

acharya.org

5 ஜீவாத்மனாம் ஸ்வ விஶ்வரூபாய ஸத்தா நித்யம்ப்ரியா ஸ்வத்வ கேவலந் தேஹி நித்யா:” என்ற ஆழ்வான் ஸ்ரீஸூக்தியில் இரண்டாவது பாதத்திற்குத் திரட்டில் உள்ள பொருள் பொருந்தாதென்று எழுதியிருந்தேன். இதற்கு ஸ்ரீகோபாலார்யர் எழுதுகிற விநோதத்தை ஆராய்வோம். “நித்யம் ப்ரியா: – எப்போதும் ப்ரியமாயிருக்கின்றன” என்பது திரட்டின் விவரணமே. அது அர்த்தமில்லாத பாடத்தை யென்றும், நித்யஸ்ஸ்வத்வேந ஸம்ஹிதா: என்றே உரைக்கவேணு மென்றும் நாம் எழுதியிருந்தோம். இங்ஙனம் நாம் காட்டியிருக்கிற பொருளையே கோபாலாசார்யஸ்வாமி தாமும் நெடுநாளாக ஸ்வீகரித் திருந்ததாகவும் இப்போது ஆராய்ந்த பிறகு மற்றொருவிதமான அர்த்தமும் சொல்லப் பொருந்துகின்றதாகவும் எழுதுகிறார். இங்கே விவேகிகள் ஜாக்ருகர்களா யிருக்கவேணும். ‘மற்றொரு அர்த்தம்—மற்றொரு அர்த்தம்’ என்று இவர் எழுதுகிறாரே, அந்த மற்றொரு அர்த்தம் என்னவென்று பார்ருங்கள்; ஒன்று மில்லை. அடியேன் எழுதியுள்ள அர்த்தத்தையேதான் அவரும் முடிக்கிறார். ‘எப்போதும் ப்ரியமாயிருக்கின்றன’ என்றாலும் ‘நித்யதவேந அபிமதங்கள்’ என்றாலும் தாத்பர்யம் ஒன்றுதான் என்று தலைக்கட்டி யுள்ளார். இப்படிப்பட்டவிவர் “மற்றொரு அர்த்தமும்” என்று எழுதுவது சேருமோ? “விவரணத்தில் சப்த பேதமே யன்றி அர்த்த பேதம் அடியோடு இல்லை” என்று இவர் எழுதியிருக்கவேண்டும். இரண்டு அர்த்தம் என்றே இவர் தவறாக ஸ்வீகரித்து அநர்த்தம்செய்கிறார். இனி, ‘இரண்டுவகையான அர்த்தங்களையும் நான் ஸ்பஷ்டமாக நிரூபித்தே யிருக்கிறேனே’ என்று இவர் சொல்லவருவர். அது பரமமாகத்தான் முடிவு பெறும். ஒருகாலும் இரண்டுவகை தேறமாட்டா தென்பது விவேக குசலர்களுக்கு விசதமேயாகும். அதுநிற்க.

திரட்டுக்காரர் எழுதியுள்ள பொருள் பொருந்திவிடுகிறதா இல்லையா? என்று விமர்சிப்போம். ஒருநாளும் பொருந்தாது. ஏன்? கேண்மின்,—“ நித்யாஸ்ஸ்வாஸ்ரிதங்களான” என்கிற பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திக்கு இவர் என்ன அர்த்தம் செய்கிறா

ரென்றால், நித்யபதத்தை இச்சையில் ஸாக்ஷாத்தாக விசேஷணமாக்கி நித்யமான [எப்போதுமுள்ளதான] இச்சையினாலே ஸித்தங்கள்—என்று பொருள் கொள்ளுகிறார். சாஸ்த்ர வாஸனையுள்ளவர்கள் இங்ஙனம் கொள்ளார்கள். இச்சா என்கிற பதம் ஸாகாங்க்ஷபதம். என்ன வென்கிற இச்சை? என்று கேள்வி பிறந்தே தீரும். 'எப்போதும் நான் இச்சிக்கிறேன்' என்று நிஷ்ப்ரகாரகமான வார்த்தையே ஒட்டாது. இன்னபடியாக இச்சிக்கிறே னென்று சொல்லித் தீரவேண்டும். எப்போதும் இச்சைக்கு விஷயமென்றால், எவ்வகையான இச்சை? என்று ஆகாங்க்ஷை உதிக்கே தீருமாதலால் அதற்கு விடையளிக்க வேறொரு பதத்தைக் கொண்டாகவேண்டும். யாருடைய அர்த்தத்தில் க்லேசமென்பதை இப்போது தெரிந்து கொள்க. 'ஸந்நித்யவஸ்த்நி நித்யவஸதி:' என்றால், எப்போதுமுள்ள புத்தி என்று எந்த மேதாவி அர்த்தம் கூறுவார்? "ஸநாதநாத் வஸியம்" இத்யாதிகளைக் காணலாமே. நித்யேச்சா என்றால் ஜந்நித்யம்ஸ்ரீநித்யநவ்யவஸாயாதிகா — நித்யஸ்வஸ்ரிகா — ஜவர என்று அர்த்தம் கொள்ளலாகுமேயன்றி 'தொடர்ந்து வருகின்ற இச்சை' என்று கொள்ளலாகாது. சப்தத்திற்கு இந்த சக்தி இல்லையென்று நாம் சொல்லவில்லை. ஆகாங்க்ஷையை அகற்றுமலிருப்பதாலும், அதை அகற்றுவதற்கு வேறொருபதத்தை இழுத்துப் போட்டுக்கொள்ள வேண்டியிருப்பதாலும் அங்ஙனம் கொள்ள வொண்ணாதென்கிறோம். 'நித்ய மென்கிற இச்சை' என்றல்லது வேறுவிதமாக உரைக்க இடமில்லை. 'அநித்யங்கள் அநித்யேச்சையாலே உத்பந்நங்கள்" என்கிற ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரஸூக்தியே இந்தத் தெளிவை நனகு பிறப்பிக்கும். உத்தத்திவ்யாமஹாவக்ஷையிலுள்ள இச்சையையன்றோ ஸ்வாமி தேசிகன் அநித்யேச்சையென்கிறார். 'அநித்ய மென்கிற இச்சை' என்றாலன்றிப் பொருந்தாதே.

ஸ்ரீபாஷ்யத்தில் கடைசி அதிகரணத்தில் ஏதோ அருளிச் செய்யப்பட்டிருப்பதாக அநுவதித்து எழுதியுள்ளார் ஸ்ரீகோபாலாசார்யர். இங்கு 'குணங்களின் நித்யத்வமானது பரமபுருஷனுக்கு

acharya.org

நித்யேஷ்டம்" என்று ஸ்ரீபாஷ்யத்திலுள்ளதாக இவர் எழுது கிறார் இந்த ஒருவாக்யமே நமக்குப்போதும் 'குணங்கள் பரம புருஷனுக்கு நித்யேஷ்டம்' என்றில்லையே. இச்சையில் விஷய பூதம் நித்யத்வமா? குணமா? என்று பாருங்கள். நித்யத்வ மென்று நாம் சொல்லுகிறோம் ஸ்ரீபாஷ்ய ஸூக்தியும் அப்படியே யிருப்பதாக இவரே காட்டுகிறார் இதனால், இந்த விசாரம் இன்ன தென்றே இவர்க்குப் புலப்படவில்லை யென்பது நன்கு விளங்கவில்லை யா? தமக்கு ப்ரதிகூலமானதைத் தாமே எடுத்துக்காட்டுகிறாரே

'நித்யமாயிருக்கட்டுமென்று எப்பொழுது ஸங்கல்பிக்கிறது? புதிதாகவுண்டாகும் பொருளைப்பற்றி எப்படி ஸங்கல்பிக்கலாம்?" என்று அற்புதமான சில வினாக்களை ஸ்ரீகோபாலார்யர் வெளியிட் டுள்ளார் புதிதாக வுண்டாகும் பொருள் எது? என்று தெரிந்து கொண்டு விடையளிப்போம்.

மேற்குறித்த ஆழ்வான் ஸ்ரீஸூக்தியில் நித்யம் என்கிற பதம் இரண்டாம் பாதத்தின் முதலிற் போலவே மூன்றாம் பாதத்தின் முதலிலுமிருப்பதால் இரண்டிடத்திலும் ஒரேவிதமாக இந்தப் பதத்தின் பொருளைக் கொள்ள வேண்டாவோ? த்ருஷ்டாந்த தார்ஷ்டாந்திகங்களில் வெவ்வேறாகப் பொருளுரைக்க முடி யுமோ?—என்கிறார் கோபாலார்யர் இதுவும் அஸங்கதம் நித்யம் என்கிற பதம் இரண்டிடத்திலும் ஸமாநம் என்பதை மாத்திரம் இவர் பார்த்தாரே யல்லது அதற்கடுத்த பதம் வெவ் வேறாக வுள்ளதே யென்பதைப் பார்த்தாரல்லர் ஸம்பிவ்யாஹ்ருத பதாநுகுணமாகவன்றோ அர்த்தம் செய்யவேண்டும் ச்ரிய: என்ற பதமும் ஸ்வைகவர்த்த நிஜவல்லபச்ரிய: என்ற பதமும் ஒரே அர்த்தத்தைக் கொண்டிருக்குமாகில் நித்யம் என்ற பதமும் அப்படியேயாகும் தவிரவும், இங்கு இவர் த்ருஷ்டாந்தம் தார்ஷ்டாந்திகம் என்ற சொற்களை ப்ரயோகிப்பதும் அஸமஞ்ஜஸ தமம் பாதாரவிந்தம்—முகசந்த்ரன் என்கிற இடங்கள் போல வன்று இங்குள்ளது பூர்வார்த்தத்தால் நித்யவஸ்து ஸாமாந்ய லக்ஷணம் கூறி, உத்தரார்த்தத்தால் லக்ஷ்யவிசேஷ ஸமந்வயம் காட்டினபடி சாஸ்த்ரீய மர்யாதையைச் சிறிது மறியாமே

கைபோனபடி பெல்லாமெழுதுவது அறிஞர்க்கு அழகன்று.
அவஶ்யம் அனுபோக்தவ்யம் க்ருதம் கர்ம ஶுபாஶுபம்

6 „தம்ஸ்வம்ஸ' என்கிற பட்டருடைய முக்தகத்தில் „ ஶ்ரீதாஹ்ஷிஷ ஸஸ விஜிதஃ" என்றவிடத்திற்குத் திரட்டுக்காரர் கொண்ட அந்வயமும் பொருளும் தவறு என்றெழுதியிருந்தோம் அது தவறுதான் என்றும், ஏதோ அந்வதாந்தத்தினால் எழுதிவிட்டார் என்றும் ஸ்ரீகோபாலராயர் எழுதுகிறார் இது ப்ராமாணிகஸரணி. இப்படித்தான் ஒவ்வொரு விஷயத்திலும் இவர் எழுத வேண்டியவர். ஆயினும் பலவிடங்களில் ஆத்மாவை வஞ்சிக்கிறார் இங்கு உண்மைக்கு இசைந்தமைபற்றி உவப்போம். ஆனாலும் இவர் அவ்வளவோடு நில்லாமல், வேறொரு ரஸ்யமான பொருள் இருப்பதாகவும் 33-ஆண்டுகட்கு முன் அப்பொருளை ஒரு மஹாவித்வான் உபந்யஸிக்கத் தாம் கேட்டதாகவும் விவரித்திருக்கிறார் மிகவும் ரஸமான பொருளையும் அந்வயத்தையும் நாம் நழுவவிட்டதாகச் சொல்லுகிறார் அடுத்த ஸஞ்சிகையில் இந்த பட்டர் ஸ்ரீஸூக்தியை நாம் விரிவாக விவரிக்கப்போகிறோமாதலால் இங்கு ஸங்க்ரஹித்துவிடுகிறோம் „ ஸம்ஸ்வஸநாமுதம்" என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்தில் (ஸம்ஸ்வ) என்று தனியாகப் பிரித்துவிட்டு, ஸநாமுதம் என்று எடுத்துக்கொண்டு "அலைமேலலை இடிமேலிடி என்னுமாபோலே காற்று மேல்காற்று குட்டிக்காற்று என்கிறது" என்று பரமரஸ்யமாக உபந்யஸித்த ஒரு பரபல்பண்டிதருடைய உபந்யாஸத்தையே இவர் 33-வருஷங்களுக்குமுன் கேட்டருளினார் என்பதை ஸத்யமாய் நாம் நம்புகிறோம் இங்குத் திரட்டுக்காரர் எழுதினது தப்புதான் என்று இவர் நிர்விவாதமாக ஒப்புக்கொண்டானபிறகு இங்கு நமக்கு உபர்தியே உரியது 'ரஸமான' என்று இவர் கையால் எழுதினால் அது பரமவிரஸமாகவேயிருக்குமென்று விவேகிகள் திடமாக நிஷ்கர்ஷித்துக் கொள்வார்களாதலால் அந்த வைரஸ்யத்தை நிரூபிக்க நாம் ப்ரயாஸம்கொள்ளத் தேவையில்லை.

acharya.org

7 திரட்டாராய்ச்சியில் (பக்கம் 3ல்) 'அநபேக்ஷிதங்களை யெழுதுவது'' என்ற தலைப்பின் கீழ், , *ஸவ்யாக்யாநஸ்ய யதாவத் ஸவ்யுத்பத்தி* என்கிற மஹா பாரத ச்லோகம் அவ்வளவு மாத்திரமே உதாஹரிக்கப்பட்டுள்ள விடத்திற்கு ஜிஜ்ஞாஸுக்களுக்கு விபரீதார்த்தத்தை ப்ரத்யாயநம் பண்ணக்கூடிய விவரணமுள்ளது என்று நாம் எழுதியிருந்தோம் இதற்கு ஸ்ரீ கோபாலாயர் இப்போது என்ன ஸமாதானம் எழுதியுள்ளாரோ இதை முன்னமே நாம் எடுத்துக்கொண்டு (அதில் பக்கம் 4ல்) கண்டித்திருக்கிறோம் ப்ரமாணத் திரட்டிற்குப் பொருளுரைப்பதென்றால் ஒரு நியமம் அவசியமிருக்கவேண்டும் மூலத்தில் எவ்வளவு பாகம் உதாஹரிக்கப்பட்டுள்ளதோ அவ்வளவுக்கு மாத்திரமே பொருளுரைப்பது—என்கிற நியமமாவது இருக்கவேண்டும் அல்லது, ப்ரமாணத்தின் ஸ்வல்ப பாகம் மாத்திரமே மூலத்தில் உதாஹரிக்கப்பட்டிருந்தாலும் எவ்வளவு அம்சத்திற்கு விவரணம் எழுதினால் வாசிப்பவர்களுக்கு உபகாரமாகுமோ அவ்வளவு அம்சத்திற்கும் பொருளுரைப்பது—என்கிற நியமமாவது இருக்கவேண்டும் இரண்டில் ஒரு நியமமும் இந்தத் திரட்டுக்காரர்க்கு இல்லை யென்பதே ஆராய்ச்சியில் நன்கு நாம் நிரூபித்திருப்பது உண்மையில் இது பெரிய குற்றம் க்ரந்த கர்த்தருடைய இஷ்டந்தான் நியாமகம் என்று சொல்வது பொருந்தாது அச்சுக்கூடத்தைக் கொள்வதும் காகிதத்தைக் கொள்வதும் அவருடைய இஷ்டத்தைப் பொறுத்திருக்கலாம் க்ரந்தத்தின் அமைப்பில் ஒழுங்கீனம் ஏற்பட்டால் அது திருத்திக்கொள்ள வேண்டிய தவறுதான் இக் குற்றத்தை ஸ்ரீ கோபாலாயர் ஒப்புக்கொண்டு, ஆனால் இது இவருடைய குற்றமன்று, இவர்க்கு முந்தியே ஒரு ப்ரமாணத்திரட்டு வெளியிட்டிருக்கின்ற இவரது ஆசார்ய ஸ்வாமியின் குற்றம் என்று காட்டவருகிறார் 'பரம்பரையாகவே நாங்கள் தவறிப்போகிறவர்கள்' என்று சொன்னால் இரங்கவேண்டியது அவசியமே ஆதலால் நாமும் இங்கு இரக்கங்காட்டி நிற்கின்றோம் வாவதூகர்களின் வல்லமை விசித்திரமே

ஒருமுக்ய விஜ்ஞாபநம்.

நிகழும் யுவ(ஞு) சித்திரை மாதம் முதலாக ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி அடியேனுடைய க்ரந்தங்களின்மீது வெளியிட்டுள்ள தூஷண ஸஞ்சிகைகள் ஆறு இந்த ஆறு ஸஞ்சிகைகளிலுமுள்ள விஷயங்களை அடியேன் அலசியலசி இவருடைய லேகனங்கள் ஸர்வாத்மநா அஸங்கதம் — அபஹாஸ்யம்—அநாதரணீயம் — அவிவேகித ரமணீயம்—ரஸலேசவிவர்ஜிதம் என்பதைக் கையிலங்கு நெல்லிக் கனிபோல் காட்டியாயிற்று. ஸ்ரீ கோபாலாசார்யஸ்வாமி அடியேனெழுதுகிற ஸமாதான ஸஞ்சிகைகளின்மீது ஒரு அக்ஷரமும் எழுதாமல் மேலே மேலே ஏதேனும் வெவ்வேறு விஷயங்களை எடுத்துக் கொண்டு தூஷணைகள் எழுதி வந்தாலும் விஷய சாசனைகளில் அடியேன் தளர்ச்சியடைவேனல்லேன் ப்ராமாணிக ஸரணியில் அந்த ஸ்வாமியின் எழுத்து எள்ளளவும் ஓங்காதென்பதை உடனுக் குடனே அடியேன் காட்டியே நிற்கின்றேன் இன்னமும் அவர் அடியேனை உத்தேசித்து ஏதேனும் எழுத விரும்புவாராயின், இது வரையில் (சென்ற வைகாசி மாதம் முதலாக) அடியேன் வெளியிட்டுள்ள ஸஞ்சிகைகளுக்கு லக்கம் வாரியாக விடையளித்துவிட்டு மேலெழுதத் தொடக்கவேணுமென்று கைகூப்பி வேண்டப்படுகிறார்.

இடையிடையே ஸ்ரீ கோபாலாசார்யஸ்வாமிக்கும் அடியேனுக்கும் கடிதப் போக்குவரத்தும் நடந்துகொண்டிருக்கின்றது அடியேன் அவர்க்கு என்ன எழுதுகின்றேனென்பதை அவர் தாமே வெளியிட்டுக்கொள்க அவர் அடியேனுக்கு எழுதுவது என்னவென்றால்,

> "முன்னடியே நான் எழுதி அச்சிடுவதற்கு அனுப்பிவிட்டேன், அச்சிட்டுமே ஆயவிட்டது, அதிலுள்ள தோஷங்களை மாத்திரம் க்ஷமித்துக்கொள்ள வேண்டியது, இனி எழுதுவதெல்லாம் திருவுள்ளத்திற்குப் பாங்காகவே யிருக்கும்."

என்று இவ்விதமாகவே பலகால் எழுதி வருகிறார் ஏற்கனவே இந்த ஸ்வாமியின் க்ஷமாப்ரார்த்தநா பத்திரிகைகள் இரண்டு மூன்று அச்சாகி வெளிவந்திருக்கின்றன. இப்போது ஸமீபகாலத்திலும் (20—10—35) அப்படிப்பட்ட பத்ரிகை மீண்டும் கிடைத்திருக்க

acharya.org

கின்றது. இவற்றால் இந்த ஸ்வாமியின் அற்புதமான ஆத்மகுண பரிபூர்த்தி வெளியாகின்றதென்பது ஸர்வஸம்மதம். மிகவும் மஹநீய ரான அந்த ஸ்வாமி நீசனேனை நிறையொன்றுமிலேனை இத்தகை அத்தகைய திருமுகங்களை அருளுவது தகாது. கல்யாணகுணபூர்த்தி யினால் அருளினரென்பதை அடியேனும் அறிந்தவனே. அந்த ஸ்வாமியைச் சார்ந்தவர்கள் பலர் 'எதிரிக்கு ஒரு பத்திரிகையும் தேவரீர் எழுதக்கூடாது, சூடாமணி பத்திரிகை அடியோடு எழுதக் கூடாது' என்று வெகு நிர்ப்பந்தங்கள் செய்தபோதிலும் எதையும் அந்த ஸ்வாமி பொருட்படுத்தாமல் ஸஹஜஸௌஜந்யத்தினால் அடிக்கடி சூடாமணி பத்திரிகைகளை அநுக்ரஹித்து வருகின்றார். அவர் அச்சிட்டு வெளியிடுகின்றவற்றுக்கும் அடியேனுக்கு அவர் விடுக்கும் ஸ்ரீமுகங்களுக்கும் ஸம்பந்தலவலேசமு மில்லாமலிருப்பதுபற்றியே அடியேன் மிக வருந்துகிறேன். 'தெரியாமல் முன்னடியே யெழுதி அச்சிட்டுவிட்டேன்' என்று ஒருதரம் எழுதினால் அழகாயிருக்கும், அல்லது இரண்டு தடவையும் எழுதட்டும். பலகால் அப்படியே யெழுதிக்கொண்டிருந்தால் ஆத்தமில்லாமற் போகிறதல்லவா? வாஸ்தவமாய் அவருடைய சுவடிகளுக்கும் ஆத்தமில்லை, கடிதங் களுக்கும் ஆத்தமில்லை என்பதே தாஸனுடைய தீர்மானம்.

ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ பத்திரிகையை நடத்தத் தொடங்கின்பிறகு, ஸ்ரீ கோபாலாசார்யஸ்வாமி என்ன தூஷணைகள் எழுதினாலும் அவற்றை நாம் பொருள்படுத்தவே வேண்டாம் என்று திண்ணிய உறுதிகள் செய்து கொண்டாலும், உலகுக்கு வழிகாட்டி யான அந்த ஸ்வாமியே இத்தகைய ப்ரவ்ருத்திகளை போக்யமாகக் கொள்ளும்போது இவற்றைப் பரம போக்யமாகக் கொள்ளவேண்டிய தன்றோ நமது கடமை என்று பாவியேனுக்குத் தோன்றிவிடுகிறது.

ஸ்வரூபஸித்தமான கைங்கர்யத்தை அடியேன் எவ்வளவு அநு ஸந்தித்துக்கொண்டாலும், சாஸ்த்ரஸத்தில் எவ்வளவு குதூஹலங் கொண்டாலும் ஸ்ரீ கோபாலாசார்யஸ்வாமியின் அத்யந்தம் அஸம் பத்தமான லேகனங்கள் ப்ரக்ருதி பாரவச்யத்தை உத்தேஜநஞ் செய்கின்றமையால், 'இப்படிப்பட்ட அநாவச்யக ப்ரவ்ருத்திகளிற் விரக்திகொள்ளவேணும்' என்று அநேக மஹநீயர்கள் அடியேனுக்கு

acharya.org

நியமித்தருள்வதை நிறைவேற்றுவதற்கு அவகாசமில்லையாகிறது ஆனால், ஸம்ப்ரதாயத்தில் ஐகரஸ்யத்தை அழகாக அநுபவிக்க வேணுமென்று அடியோம் கொண்டிருக்கின்ற ஆவலுக்கு ஒரு குறையும் நேராது எந்த ஸம்ப்ரதாயத்தையும் எந்த ஆசார்யரையும் எந்த ஸ்ரீஸூக்தியையும் அவசமாகவுங்கூட இகழமாட்டோ மென்பது ஸத்யம்

மற்றொரு விஜ்ஞாபநம்

ஊயையாவது வாஷாஂவேஷாஂவிசவமென்றும், அது சிறந்த பெருங் குண மென்றும் பட்டர் முதலான ஆசார்யர்கள் அருளிச் செய்திருப்பதை தூஷித்து ஸ்ரீகோபாலார்யர் எழுதின ஸஞ்சிகையின் மீது அடியேன் மறுப்பு வெளியிட்டுப் பல மாதங்களாயின கோபாலார்யருடைய ஒவ் வொரு வார்த்தையும் ப்ரமாணவிருத்த மென்பது அதில் ஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டிருக்கிறது அந்த ஸ்வாமி அடியேனுடைய ஸஞ்சிகைக்கு விடையளிக்காமல் ஸ்ரீ வடகரைஸ்வாமியின் ஒரு ஸ்ரீமுகத்திற்கு விடையளிப் பதாக ஏதோ விரிவாய் எழுதி வெளியிட்டு வருகின்றார் ஸ்ரீபாஷ்யத்தில் அந்த அதிகரணத்தில் அப்படியிருக்கிறது, இந்த அதிகரணத்தில் இப்படி யிருக்கிறது—என்று எதையேனும் மனம்போனபடி யெல்லாம் எழுதி வருகின்றார் எம்பெருமான் ஆநந்தமயன் என்பதையும் ஹேயப்ரதிபடன் என்பதையும் திருப்பித்திருப்பி எழுதுகிறார் இது தவிர வேறொரு அக்ஷர மும் அவர் எழுதவில்லை இதை யாரும் மறுக்கவில்லையே இவர் கூறுகிற தூராக்ஷேபங்களை யெல்லாம் முன்னமே அநுவதித்துக் கண்டித்து பட்டரும் நம்பிள்ளையும் ஸாரமாக அருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்திகளைப் பன்முறை நாம் எடுத்துக் காட்டியிருந்தும் அவற்றில் கண் செலுத்தாமலும் அதைப்பற்றி ஸ்வாபிப்ராயம் சிறிதும் காட்டாமலும் வீணவம்பளப்பு களினால் கோபாலார்யர் பல ஏடுகளை நிரப்பிவருவது ஆர்க்கு ரஞ்ஜகமோ?

விஶேஷணீயோ விஷய: க்ஷேத்ரமித்யவிசார்யதாம் ।
யதாததா ப்ருவந்து வைஷம்யம் மோவாராயேத்ர விஜ்ரும்பதே ॥

வ்யாமோஹப்ரசமௌஷத்தத்தின்
மூன்றாவது பகுதி முற்றிற்று

---

acharya.org

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

விஷயதானம் செய்ய வாக்களித்திருக்கும்

மஹாநுபாவர்கள்

ஸ்ரீ உ. வே. கோயில் கந்தாடை வாதூல தேசிக அப்பன் ஸ்வாமி
ஸ்ரீ உ. வே. கோவிந்தப்பங்கார் ஸ்வாமி திருநாராயணபுரம்
ஸ்ரீ உ. வே. தேசிகவரதாசாரியார் ஸ்வாமி காரப்பங்காடு
ஸ்ரீ உ. வே. திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசாரியார் ஸ்வாமி
ஸ்ரீ உ. வே. A V கோபாலாசாரியார் ஸ்வாமி பத்ராதிபர் ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷணீ
ஸ்ரீ உ. வே. கோயில் கந்தாடை அ. ராமாநுஜாசாரியார் ஸ்வாமி திருமழிசை
ஸ்ரீ உ. வே. மேலவாத்திவார் திருமலை அய்யங்கார் ஸ்வாமி ஸ்ரீவில்லிபுத்தூர்
ஸ்ரீ உ. வே. திருநாராயணய்யங்கார் ஸ்வாமி பத்ராதிபர் செந்தமிழ் மதுரை
ஸ்ரீ உ. வே. உத்தமசேரி ரங்கஸாமி அய்யங்கார் ஸ்வாமி ஸ்ரீரங்கம்
ஸ்ரீ உ. வே. ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார் ஸ்வாமி
ஸ்ரீ உ. வே. கோ. [illegible] ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி திருமழிசை

— o —

[illegible] மார்கழி மாதமானது—தினத்திற்கு ஸர்வோத்தரமான ப்ராஹ்ம முஹூர்த்தம்போல் ஸம்வத்ஸரத்திற்கு ஸர்வோத்தரமான மாதமாகும். மேலும் விபூதியில் உத்க்ருஷ்டமான பதார்த்தங்களெல்லாம் நான் என்று ஸ்ரீ க்ருஷ்ண பகவான் அருளிச்செய்யுமிடத்து, "மாஸாநாம் மார்க்கசீர்ஷோऽஹம்" என்று அருளிச்செய்திருக்கை [illegible]யாலும் இம்மாதம் மாதங்களெல்லாவற்றிலும் மேன்மை [illegible]. இன்னும் இவ்விருள் தருமாஞாலத்தில் ஆண்டாள் [illegible] [illegible] நீராட்டம் என்று ஒரு வ்யாஜத்தால் திருப்பாவை பாடி நமக்குபகரித்ததும் இம்மாதத்திலே. இவ்வளவு பெருமை வாய்ந்த இம்மாதத்தில் வைஜயந்தீ வனமாலிகாம்சராய் பகவத் கைங்கர்ய நிஷ்டர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களின் பாததூளி பெறுவதே தமக்கு [illegible] நிரூபகமாம்படி தொண்டரடிப்பொடி என்ற திருநாமத்தை யுடைய ஆழ்வாரவதரித்தது கேட்டை நக்ஷத்திரமாகையாலே அத்தினத்தன்று வைஜயந்தியின் 2-வது ஸஞ்சிகை வெளியிடும்படி நேர்ந்ததும் பொருத்தமுடையதே.

acharya.org

வர்த்தமானங்கள்.

காஞ்சீபுரம்:—இந்த திவ்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ தேவராஜஸ்வாமி தேவஸ்தான மென்கிற தேவப்பெருமாள் ஸந்நிதியில் தைமீ 1உ (14—1—36) இரவு 11 மணிக்குள் இராப்பத்துத் திருவத்யாயநோத்ஸவம் சாத்துமுறையாகி உடனே ஜீயர்புரம் பரிவேட்டை யுத்ஸவத்திற்குத் தண்டிகையில் புறப்பாடு நடைபெறும். பழைய சீவரம் என்கிறவிடத்திலுள்ள ஸ்ரீ நரஸிம்ஹஸ்வாமி மலையின்மீது மறுநாள் காலை 10 மணிக்குள் சேர்ந்து அன்று மாலை பாலாற்றங் கரைப் பிராந்தங்களில் எழுந்தருளியிருக்கின்ற நான்கு எம்பெருமான் களுடனே ஆச்சரியமான உத்ஸவம் நடைபெறும். தைமீ 3உ காலை 12 மணி ஸுமாருக்குத் தேவப்பெருமாள் ஸந்நிதி சேர்ந்தருள்வர்.

தெப்பஉத்ஸவம்:—தைமீ 25உ (7—2—36) முதற்கொண்டு மூன்றுநாள் மேற்குறித்த ஸந்நிதியில் அனந்தஸரஸ்ஸில் பேரருளாள னுக்கும் பெருந்தேவித்தாயாருக்கும் அற்புதமான தெப்பவுத்ஸவம் நடைபெறும்.

தையில்மகம்:—திருமழிசையாழ்வார் காஞ்சீபுரத்தில் திரு வெஃகா என்கிற ஸ்ரீயதோக்தகாரி ஸந்நிதியில் எழுந்தருளியிருந்த காலத்தில் நடந்த இதிஹாஸத்தை அநுஸரித்து அநாதிகாலமாக இத் திருவெஃகாவில் *பைந்நாகம் பாய்சுருட்டியுத்ஸவம் என்பது வெகு அழகாக நடந்து வருகின்றது. ஸ்ரீயதோக்தகாரி யெம் பெருமானும் திருமழிசைப்பிரானும் 'ஓரிரவிருக்கை' முதலான கிராமங்களுக்கும் அக்ரஹாரங்களுக்கும் எழுந்தருளிப் பாலாற்றங் கரையில் திருமஞ்சனங் கொண்டருளி அதிரமணீயமாக நடைபெறு மிந்த மஹோத்ஸவம் தைமீ 26உ (8—2—36) பின்மாலை 5 மணி முதல் நடைபெறும்.

திருமழிசை:—மேற்குறித்த பக்திஸாரமஹாமுநியான ஆழ்வா ருக்குத் திருவவதார ஸ்தலமாகிய திருமழிசையில் தைமீ 17உ முதலாக 10 நாள் வருஷோத்ஸவம் அதிக விமரிசையாய் நடை பெறும்.

ஸ்ரீபெரும்பூதூர்:—இத்தலத்தில் திருவவதாரம் செய்தருளின ஜகதாசார்யரான எம்பெருமானார்க்கு அர்ச்சாவதார ப்ரதிஷ்டோத்

acharya.org

ஸவமாக நடத்தப்பட்டு வருகின்ற குருபுஷ்யோத்ஸவம் தைமீ 22௳ முதல் மூன்றுநாள் லோகோத்தர விபவங்களுடனே நடைபெறும் தினப்படி திருமஞ்சனமும், இரண்டுவேளையும் வாஹனப் புறப்பாடுகளும் ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டிகளும் வித்வான்களின் அமுத மொழிகளும் அநுபவிக்கத்தக்கவை.

மதுரமங்கலம்:—“ராமானுஜபதச்சாயா” என்னும்படி எம்பெருமானார்க்குத் திருவடி நிழலாக ப்ரஸித்தரான எம்பாருக்குத் திருவவதார ஸ்தலமான இத்தலத்தில் தைமீ 14௳ முதலாகத் திருநக்ஷத்ரோத்ஸவம் ஆரம்பமாகி 5—2—36௳ புநர்வஸு நக்ஷத்திரத்தில் சாத்துமுறையாகும். வெகு அழகிய வைவ்ரியில் இவ்வுத்ஸவம் நடைபெறும். இந்த ஸமயத்தில் காஞ்சீபுரம் உலகளந்தபெருமாள் ஸந்நிதியாகிய திருவூரகத்திலும் ப்ரம்மோத்ஸவம் விபவமாக நடைபெறும். ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதனுக்கு முதல் ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறுவதும் இந்த ஸமயமாகும்

கூரம்:—“ராமஸ்ய தக்ஷிணோபாஹு:” என்னுமாபோலே எம்பெருமானார்க்கு வலக்கையாக எழுந்தருளியிருந்த கூரத்தாழ்வான் என்கிற ஆசார்யஸார்வபௌமருக்கு இத்தலத்தில் தைமீ 21௳ முதலாகத் திருநக்ஷத்ரோத்ஸவம் ஆரம்பமாகி 12—2—36௳ ஹஸ்த நக்ஷத்திரத்தில் சாத்துமுறையாகும்.

ஸ்ரீரங்கம் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷண ஸபை:— 6—1—36௳ மேற்குறித்த ஸபையின் இருபதாவது வருஷாந்த மஹோத்ஸவம் ஸ்ரீரங்கத்தில் உடையவர் ஸந்நிதியில் இனிது நடைபெறும். இந்த திவ்ய தேசத்தில் மேற்படி ஸபையினால் பலவகையான மஹோபகாரங்கள் விளைந்திருப்பதனால் இச்சபை மேன்மேலும் அபிவிருத்திபெற்று விளங்கவேணுமென்று பல மஹா ஜனங்கள் பிரார்த்தித்து வருகின்றார்கள்

சென்னை பகவத் கதாப்ரஸங்க ஸபை:—இந்த ஸபையின் சார்பில் நடைபெறும் உபந்யாஸங்கள் தங்கசாலை வீதியிலுள்ள தொண்டைமண்டலம் ஹைஸ்கூல் ஹாலில் நடந்துவருகின்றன. ஐந்துவருஷகாலமாக இதில் உபந்யாஸங்கள் நடத்திவருகின்ற காஞ்சீ ஸ்ரீ.உ.வே. அண்ணங்கராசார்யஸ்வாமி நிகழும் யுவ௵ சித்திரைமீ முதலாக சனிக்கிழமைதோறும் ஸ்ரீ பாகவத—தசமஸ்கந்த உபந்யாஸங்களும், ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆழ்வாரருளிச்செயல் விசே

acharya.org

ஷார்த்த வுபந்யாஸங்களும் நடத்தி வருகின்றார். இடையில் மார்கழியில் தினப்படியாகத் திருப்பாவையின் உபந்யாஸங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. பிறகு யதாக்ரமம் சனிக்கிழமைதோறும் மாலையில் ஸ்ரீ பாகவதமும் ஞாயிற்றுக்கிழமைதோறும் காலையில் திவ்யப்ரபந்தங்களும் உபந்யஸிக்கப்பட்டுவரும். சென்ற திருக்கார்த்திகைக்கு முன் திருப்பல்லாண்டு உபந்யாஸம் முடிக்கப்பட்டிருப்பதனால் தையில் முதல்வாரத்தில் திருமாலை விசேஷார்த்த உபந்யாஸம் தொடங்கப்படவேணுமென்று பக்த ஜனங்களின் அபேக்ஷை தெரியவருகின்றது.

பாண்டுரங்க பக்த ஸபையினுதரவில் ஸ்ரீரங்கம் ஸ்ரீ. உ. வே. சடகோபாசார்யஸ்வாமிகளால் கோவிந்தப்பநாய்க்கன் தெரு உப்பட்டூர் ஸ்ரீமான் ஆழ்வார் செட்டியார் சாரிட்டியில் அநேக விசேஷார்த்தங்களுடன் ஹரிகதா காலக்ஷேபம் நடைபெறும் திருநாராயணபுரம் ஸ்ரீ. உ. வே. அனந்தாண்பிள்ளை கோவிந்தப்பங்கார்ஸ்வாமிகளால் யதீந்த்ர ப்ரவணம் செட்டியார் சாரிட்டியில் உபந்யாஸங்கள் நடத்தப்படும்.

நாராயணமுதலி வீதியில் காருமானி ஆதிகேசவலுசெட்டியார் சாரிட்டியில் திருமழிசை கோ. க. ஸ்ரீநிவாஸார்யஸ்வாமிகளால் விசேஷமான உபந்யாஸங்கள் நடத்தப்படும்.

திருவல்லிக்கேணி பகவத்விஷய காலக்ஷேபம்:—இங்கு நம்மாழ்வார் ஸந்நிதியில் ஸ்ரீவில்லிபுத்தூர், உ. வே. ஸாது ராமாநுஜாசார்யஸ்வாமியால் இரண்டுமூன்று மாதகாலமாய் திருவாய்மொழியீடு காலக்ஷேபம் ஸாதிக்கப்பட்டுவந்து இடையில் அநத்யயனத்திற்காக அது நிறுத்தப்பட்டு மார்கழியில் திருப்பாவை காலக்ஷேபம் நடத்தப்பட்டுவருகிறது.

எழும்பூர்:—ஜகன்னாத பக்த ஸபையினுதரவில் ஸாகேத நிலயத்தில் வடகரை ஸ்ரீமான் உ. வே. வெங்கட் வரதாசார்யஸ்வாமிகளைக் கொண்டு அநேக உபந்யாசங்கள் நடைபெறும். ஷை சபையினுதரவில் வேத விலாசத்தில் அநேக ஹரிகதா காலக்ஷேபங்களும் பாட்டுக் கச்சேரிகளும் நடைபெறும்.

—o—

acharya.org

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீ ஹயக்ரீவாய நம:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
யச்ச்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||

தஸ்மை ராமாநுஜார்யாய நம : பரமயோகிநே |
யஶ்ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத்||

வேதவேதாந்த வேதாங்க ஸத்குருக்த்யர்த்தவர்ஷிணீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

வேத வேதாந்த வேதாங்க ஸத்குருக்த்யர்த்தவர்ஷிணீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

ஸ்ரீ

ராமாநுஜஸித்தாந்தவைஜயந்தீ.

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த
ப்ரகாஶந பத்ரிகை.

பத்ராதிபர்

வடகரை இராமாநுஜாசாரியர்

தொகுதி 1.] [பகுதி 3.

பத்திராதிபரின் விஜ்ஞாபனம்.

ஆரியர்காள் !

நம்முடைய இந்த வைஜயந்தீ பத்திரிகையானது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் ஐகமத்யத்தை விளக்குவதற்கும் உபய ஸம்ப்ரதாயத்திலுமுள்ள உபயவேதாந்த ப்ரவர்த்தகர்கள் அநுக்ரஹிக்கும் விஷயங்களை நிஷ்பக்ஷபாதமாய் வெளியிடுவதற்குமே வெளிவரத் தொடங்கியிருக்கின்றது. கீழ் இரண்டு ஸஞ்சிகைகளில் புஸ்தக விமர்ஶம் என்னும் பகுதியில் ஸ்ரீ. உ. வே. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமிபோல்வார்களுடைய உக்திகளுக்கு மறுப்பாகச் சில விஷயங்

கள் வெளியிடப்பட்டிருப்பதைக் கடாக்ஷித்த சில பெரியோர்கள் "இப்பத்திரிகையின் நோக்கத்திற்குப் பொருந்தாதவையான இத்தகைய விஷயங்களை இதில் வெளியிடாதிருந்தால் நன்றாயிருக்கும்" என்று அடியேனிடம் அன்புடன் அறிவித்தார்கள். அதை அடியேன் பெரு நன்றிபாராட்டுதலோடு சிரஸாவஹிக்கக் கடமைப்பட்டவனாகவே யிருக்கின்றேன். ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் விரும்பி வாசிக்கக்கூடிய விஷயங்களை வெளியிடுவ தொன்றிலேயே அடியேனுக்கும் முழுநோக்கம். இப்போது வெளிவந்திருக்கும் அருணோதயத்திலும் வைஜயந்தி ஸஞ்சிகைகள் இரண்டிலும் அப்படிப்பட்ட விஷயங்களே மலிந்துகிடக்கும். ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி போன்றவர்களின் உக்திகளுக்கு உத்தரமாக வெளிவந்த விஷயங்களையும் ரஸிகர்கள் உற்று நோக்கினால் ஸம்ப்ரதாய ஐகமத்யத்திற்கு ஹாநிகரமான விஷயம் ஒன்றும் அவைகளில் இல்லையென்பது நன்கு விளங்கும்.

ஸ்ரீ உ. வே. ஏ. வி. ஜீ. ஸ்வாமி லௌகிக ஞானத்திற்போலவே வைதிக ஞானத்திலும் சிறந்தவர். ஆத்மகுண பரிபூர்த்தியிலும் மேம்பட்டவர் என்பதை எல்லோரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆகலால் அந்த ஸ்வாமியின் பெயரால் வெளிவந்த வாத்ஸல்யார்த்த விவரண விமர்சத்தைப் பார்த்த அடியேனால் அவைகள் ஒருகாலும் அவரால் எழுதப்பட்டவை என்று நினைக்கவும் இயலாது. ஆயினும் அவைகளில் முதன்முதலாக "வாத்ஸல்யம் தோஷபோக்யத்வம்" என்று ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமி சொல்லுவதாகக் கண்டனம் எழுதத் தொடங்கினார். அது அண்ணங்கராசார்ய ஸ்வாமி சொல்லுவதா? அல்லது நமது பூர்வாசார்யர்கள் அருளிச்செய்ததா? என்பதை ப்ராமாணிகர்கள் பராமர்சிக்கவேண்டுகிறேன்.

சரணாகதி கத்ய பாஷ்யத்தில் "வாத்ஸல்யம்நாம தோஷேபி குணத்வ புத்தி:" என்று ஸர்வஜ்ஞரான ச்ருதப்ரகாசிகாபட்டர் அருளிச் செய்திருக்கவில்லையா? கடோபநிஷத்தில் "அங்குஷ்டமாத்ர: புருஷ:" என்கிற வாக்யத்தில் "நததோ விஜுகுப்ஸதே" என்கிறவிடத்தில் ஸ்ரீரங்கராமாநுஜ ஸம்யமிஸார்வபௌமரால் அநுக்ரஹிக்கப்பட்ட பாஷ்யத்தில், "வாத்ஸல்யாதிசயாத் தேஹகதாநபி தோஷாந் போக்யதயா பச்யதி" என்று சொல்லப்படவில்லையா? அவ்வர்த்தத்தையன்றோ ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி அருளியது. அதை மறுப்பது ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி போல்வார்களுக்குப் பொருந்துமோ? அதற்கு அபார்த்தங்களைச் சொல்லுமவர்களை யன்றோ

acharya.org

கண்டிக்க ப்ராப்தம். " காக்கை வாயிலும் கட்டுரை கொள்வதன்றோ" ஸ்வரூபம். அது நிற்க, தயாஸப்தார்த்த விஷயமாகவும் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமி அருளிய விஷயம் அவரபிப்ராயமா? பட்டர் போல்வார்களின் அபிப்ராயமல்லவோ? பட்டர் ஸ்ரீ ஸூக்தியின் மீதன்றோ இவர் தூஷணைகள் எழுதப் புகுந்தது. எல்லா ஆசார்யர்களையும் ஸமரூபமாகவே ஸம்பாவிப்பதாக எழுதும் இந்த ஸ்வாமி ஸ்வபாவத்திற்கு இவ்வாறு கண்டிப்பது பொருந்துமோ? பட்டருடைய ஸ்ரீ ஸூக்தியை அபலபிக்க யார் சக்தர். "ஸ்வார்த்த ஹர்ஷமோகாத்யபாவேபி" என்கிற ஸ்ரீஸூக்தி என்போல்வார்களும் நன்கறியும்படி யன்றோ விளங்கா நிற்கின்றது? அதற்குத் தாத்பர்யம் அப்படியில்லை என்றே ஏ. வி. ஜீ. ஸ்வாமி ஸாதிக்கிறபடி கொண்டாலும் ஸப்த ஸந்நிவேஸத்தில் விவாதம் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை யன்றோ? அதுபோலவே மற்றையோர்களும் சொல்லி வருகிறார்களென்று இந்த ஸ்வாமியும் திருவுள்ளம் பற்றி இருந்திருக்கக் கூடாதோ? இதில் அநாவஸ்யகங்களான விசாரங்களை வளர்த்திக்கொண்டு போருவது உசிதமா? என்பதை விவேகிகள் விசாரிக்கவேண்டும்.

ஆக வாத்ஸல்யம், தயை என்கிற இரண்டு விஷயங்களைப்பற்றியும் ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமியின் உக்திக்கு உத்தரமாக ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி வெளியிட்டிருக்கிற பத்ரிகைகளில் இரண்டு ஸம்ப்ரதாயங்களினுடையவும் ஸாமரஸ்யம் (ஒற்றுமை) அழகாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றதே யல்லாமல் ஒரு ஸம்ப்ரதாயத்தை தூஷித்திருப்பதாகக் காணக் கிடைக்குமோ? ஸ்ரீ கோபாலாசார்யர், ஸ்ரீ அண்ணங்கராசாரியரைப் பற்றி எவ்வளவோ மறுத்து எழுதுகிறார். ஸ்ரீ அண்ணங்கராசாரியரும் அவ்வாறே மறுத்து எழுதுகிறார். இது விஷயத்தில் அடியேன் சிறிய ஞானத்தன் என்ன செய்யமுடியும்?

இன்னமும் இந்த் கோபாலாசார்யர் எழுதும் விஷயங்களைப் பற்றி அடியேன் எழுதினால் பக்ஷபாதத்தினால் எழுதுவதாகவே சிலர் கருதக்கூடும். ஆயினும் விவேகிகளின் உள்ளத்திற்கு விஷயவுண்மை விளங்காமற் போகாது. இதுவரையிலும் இவ்விரண்டு ஸ்வாமிகளுக்கும் பரஸ்பரம் அநேக விஷயங்களில் விவாதம் ஏற்பட்டு ஓயாமல் இருவரும் பத்திரிகைகள் மூலம் போராடி வருகிறார்கள். இருவருடைய போராட்டமும் மிகவும் அநாவஸ்யகமென்றே மத்யஸ்தர்கள் கருதுகிறார்கள். அடியேனுடைய எண்ணமும் இதுவே. பாதுகா ஸஹஸ்ராவதார தத்வ விமர்சம் என்று பெயரிட்டு ஒரு நீண்ட

acharya.org

தால் வெளியிட்டு வருகின்றார். அதிலும் அண்ணங்கராசார்ய ஸ்வாமியைப்பற்றி மறுத்தே எழுதி வருகின்றார். அண்ணங்கராசார்யரும் ஸ்ரீ தேசிக ஸூக்திஜயத்வஜ மாலையில் ஸ்ரீ கோபாலாசார்யரை மறுத்து எழுதி வருகிறார். இதற்கென் செய்வோம் யாம். அடியேன் ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி ஸந்நிதிக்கு விடுத்த பத்திரிகைகளுக்குப் பதிலாக அவர் அனேக ஆச்சர்யமான அர்த்த விசேஷங்களை வெளியிட்டு வருகிறார். ஆயினும் அடியேன் எழுதிக்கொண்டு விஷயங்களுக்கு ஏதாவது பதில் உண்டா? என்பதை ப்ரமாணிகர்கள் அறிவித்தால் அவர்கள் விஷயத்தில் தலையல்லால் கைமாறிலேன். அறியாதவர்கள் எழுதினால் அவர்களுக்குப் பதில் ஏதாவது எழுதலாம். இந்த கோபாலாசார்ய ஸ்வாமி விஷயங்களை அறிந்துவைத்தே இவ்வாறு எழுதுவதற்கு பதில் எழுதுவது உசிதமன்று என்றே அடியேன் வாளாவிருக்கின்றேன்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம்

எம்பெருமான் தொடங்கி எம்பெருமானார் நடுவாக அஸ்மதாசார்யர்கள் பர்யந்தமாகவுள்ள ஆசார்ய பரம்பரையில் "ஜ்ஞாநாந் மோக்ஷம்" என்கையால் ஸம்ப்ரதாய பரம்பராப்ராப்தமான ரஹஸ்யார்த்த ஜ்ஞானமே, நிரதிசய புருஷார்த்தமான மோக்ஷத்தை அடைவதற்கு உறுப்பாகும். ஆகையால் நமது பூர்வாசார்யர்கள் ஆங்காங்கு நம்போல்வார்கள் உஜ்ஜீவிப்பதற்காக அருளிச் செய்திருக்கும் அர்த்த விசேஷங்களை அடியேன் பெரியோர்கள் ஸந்நிதியில் அடிபணிந்து அறிந்துகொண்டபடி இங்கு விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

பதார்த்தங்கள் ப்ரமாணம் ப்ரமேயம் என்று இருவகைப்படும். அவற்றுள் ப்ரமேயங்களை உள்ளபடி அறிவதற்கு ஸாதகமாயிருக்குமவை ப்ரமாணங்கள் எனப்படும். அப்ரமாணங்கள் ப்ரத்யக்ஷம், அநுமானம், சப்தம் என்று மூன்று வகைப்படும். ப்ரத்யக்ஷமான பதார்த்தங்களை அறிவதற்கு இன்றியமையாத செவி, வாய், கண், மூக்கு, உடல் மனமும் ஆகிய ஆறு புலன்களும் ப்ரத்யக்ஷமெனப்படும். இவ்வாறு ப்ரத்யக்ஷ ப்ரமாணங்களால் அறியப்பட்ட வஸ்துக்களில் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமலிருக்கும் நிலைமையை அறிந்து அவைகளில் ஒன்றைக்கொண்டு மற்றொன்றை அறிவதற்கு யோக்ய

acharya.org

மான யுக்திகள் அநுமானம் என்று சொல்லப்படும். அதாவது மலையின் கண்ணுள்ள புகையைக் கண்டவுடன் அப்புகை நெருப் பில்லாவிடத்து உள்தாகாமையால் அவ்விடம் நெருப்புளது என்று அறிவதற்கு யோக்யமான யுக்தி விசேஷம்.

சப்தமாவது ப்ரத்யக்ஷத்தால் அறிய முடியாத விஷயங்களை உள்ளபடி அறிகைக்கு யோக்யமான அக்ஷராத்மகமாயுள்ள ஶப்தங் கங்கள். அந்த ஶப்தங்களாவன அபௌருஷேயங்களாய் நித்ய நிர்த் தோஷங்களாய் ஸ்வத:ப்ரமாணங்களாயிருக்கும் வேதங்களும், அவை களின் அர்த்தங்களை அறிவதற்கநுகூலங்களான மீமாம்ஸாதி ஶாஸ்த் ரங்களும், அவ்வேதார்த்தங்களை ப்ரத்யக்ஷமாக ஸாக்ஷாத்கரித்த மனு முதலாயினோர் ஸ்ம்ருதிகளும், அவ்வேதார்த்தங்களை அறுதியிடா நின்ற இதிஹாஸ புராணங்களும், பாஞ்சராத்ராதி ஆகமங்களும், மயர்வறமதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்தி களாய் தென்மொழி மறை என்று கொண்டாடப்படும் திவ்யப்ரபந் தங்கள் நாலாயிரமும், அவைகளை அடியொற்றிய பூர்வாசார்யர்க ளுடைய ஸ்ரீஸூக்திகளும்.

அவைகளில் வேதம், அபௌருஷேயம். (புருஷனால் செய்யப்படா தது.) ஆகையால், மயக்கம், வஞ்சனை, கவனமில்லாமை முதலாகிய குணங்களால் ஏற்படும் தோஷமில்லாததாயிருக்கும். ஸ்வத: ப்ரமாண மாவது, ஒரு விஷயத்தைத் தெரிவிக்கும்பொழுது மற்றொன்றை அபேக்ஷியாது தானே அறிவிக்கும் பெருமை. அது நித்யமா யிருக்கும். அஹங்கார தத்துவத்தினுடைய கார்யமான ஶப்தத்தை எப்படி நித்யம் என்று சொல்லமுடியுமெனில்? சப்தங்கள் அநித்ய மாயிருந்தாலும் ஒவ்வொரு கல்பங்களிலும் அந்த ஶப்தங்க ளுடைய க்ரமங்கள் வேறுபடாமல் ஸர்வேஶ்வரன் திருவுள்ளத்தில் வைத்திருந்து கல்பந்தோறும் வெளியிடுகின்றமையால் நித்யமென்று சொல்லப்படுகிறது. இதிஹாஸாதி புராணங்கள் வேதத்தை அடி யொற்றியே ப்ரமாணங்களாகும். வேதவிருத்தமான அர்த்தங்களை அறுதியிடுமவைகள் ப்ரமாணமாகமாட்டா. பாஞ்சராத்ரம் ஸர்வஜ்ஞ னான ஸர்வேஶ்வரனால் சேதனர்களுடைய உஜ்ஜீவநார்த்தமாய் அருளிச்செய்யப்பட்ட தாகையால் வேதம்போலவே ஸ்வத: ப்ரமாண மாகும். அப்படியே மயர்வறமதிநல மருளப்பெற்ற ஆழ்வார் களின் ஸ்ரீஸூக்திகளாகிய திவ்ய ப்ரபந்தங்களும் ப்ரமாணங்களாகும்.

படைத்தான் கவி என்கிறபடியால் இந்த திவ்ய ஸூக்திகளும் வேதம் போலேயே ஸர்வஜ்ஞனான ஸர்வேஶ்வரன் ப்ரளயகாலத்தில்

acharya.org

தன் திருவுள்ளத்தில் வைத்திருந்து ஸூப்த ப்ரபுத்தந்யாயத்தாலே இந்த த்ரவிட ப்ரபந்தத்தை ஆழ்வாருக்கு அருளிச்செய்ய ஆழ்வாரும் மதுரகவிகள் போன்ற மஹாநுபாவர்களுக்கு அருளிச்செய்ய உலகில் வந்திருக்கின்றமையால் த்ரவிட ப்ரபந்தத்தையும் அபௌருஷேயமான வேதமென்றே சொல்லக்கூடும்.

அபௌருஷேயமாய் நித்யமான வேதம், கர்மபாகம் ப்ரஹ்மபாக மென்று இரண்டு வகைப்பட்டிருக்கும். அவற்றில் கர்மபாகமானது அசித்ப்ராயர்களான சேதனர்கள் உஜ்ஜீவிப்பதற்கு ஸர்வேஶ்வரன் பரம க்ருபையினால் அநுக்ரஹித்த அவயவங்களைக்கொண்டு அவனை ஆராதிப்பதற்கு அநுகூலங்களான யஜ்ஞம் முதலான கர்மங்களையும் அவைகளை அநுஷ்டிக்கும் ப்ரகாரங்களையும் அழகாகச் சொல்லுமதாயிருக்கும். அவைகளை ப்ரத்யக்ஷீகரித்த மனு முதலியினோர் ஸ்ம்ருதிகள் அந்தக் கர்மபாகமான வேதார்த்தங்களை நாமறியும்படி விஸ்தரியா நிற்கும். ப்ரஹ்மபாகம் "ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" என்கிற ஸர்வேஶ்வரனுடைய ஸ்வரூப ரூப குணவிபவாதிகளையும் அவனை அடைவதற்கு உபாயத்தையும் அவ்வுபாயத்தால் அடையக்கூடிய பலத்தையும் அப்பலத்தை அடைவதற்கு யோக்யனான புருஷனுடைய ஸ்வரூபத்தையும், அப்பலத்தைப் பெறுவதற்கு இடையூறான விரோதி ஸ்வரூபத்தையும் அறிவிக்குமதாயிருக்கும். இவ்வர்த்த விசேஷங்களையே விஸ்தரியா நிற்கும் ஸ்ரீராமாயணாதி இதிஹாஸங்களும், ஸாத்விக புராணங்களும். மேற்சொல்லப்பட்ட ப்ரமாணங்கள் போலவே பகவத் கடாக்ஷமடியாகப் பெற்ற திவ்யஜ்ஞானத்தையுடைய ஶிஷ்டர்களின் ஆசாரங்களும் ப்ரமாணங்களாக ஆகும். "தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதாஶ்ச." (தர்மத்தையறிந்த ஶிஷ்டர்களுடைய ஆசாரம் ப்ரமாணம் வேதங்களும்) என்று சொல்லா நின்றதிறே. இதில் தர்மத்தையறிந்த ஶிஷ்டர்களின் ஆசாரம் ப்ரமாணம் என்று முந்துற முன்னம் ஶிஷ்டாசாரத்தைச் சொல்லியிருப்பதுடன் வேதமும் என்று சொல்லப்படுகிற சகாரத்தாலும் வேதத்தைக்காட்டிலும் ஶிஷ்டாசாரம் முக்யமான ப்ரமாணம் என்று சொல்லப்படுகிறது.

---

acharya.org

நமது ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தி

தற்சமயம் நமக்கு அகஸ்மாத்தாய் ஒரு வருத்தமும் அதைக் கொஞ்சம் ஆராய்ச்சி செய்தவுடன் ஸமாதானமும் அடைய நேர்ந்தது. அதாவது நமது ராஜாதிராஜனுகிய ஜார்ஜ் சக்ரவர்த்தி ஸ்வர்க்கம் சென்றார் என்கிற சமாசாரம் செவிக்கெட்டியபொழுது ஒரு வருத்த முண்டாயிற்று. அதைச் சிறிது பராமர்சித்தவுடன் அவர் இவ்வளவு காலம் இவ்வுலகை இனிது ஆண்டு இதேமாதிரி விண்ணுலகையும் ஆளக்கருதி விண்ணுலகம் சென்றிருக்கின்றார் என்றே நினைக்க வேண்டும்.

மேலும், நர: பதிதகாயோபி—யஶ: காயேநஜீவதி—என்கிற படி ப்ராக்ருதமான சரீரத்தைவிட்டு அப்ராக்ருதமான யஶஃஶரீரத்தை அவலம்பித்திருக்கின்றார். ராஜாதிராஜனுகிற நமது சக்ரவர்த்தியின் பெருமையைப் பேசப் புகுந்தால் "நாவிஷ்ணு: ப்ருதிவீபதி:" என்று சொல்லுகிறபடி ஸாக்ஷாத் விஷ்ணுவே நமது சக்ரவர்த்தி என்று சொல்லவேண்டும். இல்லாவிடில் இவ்வளவு பெருமை ஏற்பட இயலாது. நமது சக்ரவர்த்தியின் அரசாட்சியானது நமது தேசத்தை முன் ஆண்டுவந்த அரசர்களின் அரசாட்சியை அடியொற்றினதாகவே காணப்படுகின்றது. முன் அரசாண்டவர்களின் அரசாட்சியைச் சொல்லும்போது ஒரு துறையில் புலியும் பசுவும் தண்ணீர் அருந்துமாறு ஆண்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அதை நாம் சரித்திரங்களில் படிக்கின்றோமே யல்லாமல் ப்ரத்யக்ஷமாகக் கண்டதில்லை. ஆகலின் அது விஷயத்தில் நமக்கு அவ்வளவு நம்பிக்கை உண்டாகாமலிருந்தது. தற்காலம் பெரியது சிறியதை நலியர்தபடி ஆண்ட நமது சக்ரவர்த்தியின் அரசாக்ஷியை ப்ரத்யக்ஷமாகக் கண்டோமாதலால் அது ஸம்பாவிதமென்றே நினைக்க நேருகின்றது. மேலும் அந்நல்லடிக் காலத்தில் அவர்கள் ஆண்டுவந்தது அவ்வளவு பெருமையல்ல. கலிஸாம்ராஜ்யம் பண்ணுமிக்காலத்தில் இவர் அரசாண்ட பெருமையைப் பன்னி யுரைக்குங்கால் பாரதமாம். அவ்வாறு மண்ணுலகை ஆண்டு விண்ணுலகையும் ஆள விரும்பித் தன்னுடைய புதல்வரான ஹெட்வர்ட் சக்ரவர்த்தியை இவ்வுலகாள வைத்துவிட்டுத் தான் வானுளச் சென்றிருக்கிறார். அவர் புதல்வரான ஹெட்வர்ட் சக்ரவர்த்தியும் "திநாந்தே நிஹிதம் தேஜ: ஸவித்ரேவ ஹுதாஶந:" என்கிறபடி சாயங்காலத்தில் சூர்யனால் கொடுக்

கப்பட்ட தேஜஸ்ஸை அடைந்து அக்நியானது எவ்வாறு ஜ்வலிக்கின்றதோ, அவ்வாறே நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியினால் கொடுக்கப்பட்ட ராஜ்யத்தைப் பெற்ற அவர் புதல்வரான ஹெட்வர்ட் சக்ரவர்த்தி அதி தேஜஸ்வியாய் பெரியது சிறியதை நலியாதபடி "யாவதா வர்த்ததே சக்ரம் யாவதீஹ வஸுந்தரா" என்கிறபடி ஆஜ்ஞாசக்ர முள்ளவளவும் பூமியுள்ளவளவும் இவ்வுலகை இனிது ஆளும்படி எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் புரியுமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்
வடகரை இராமாநுஜாசாரியார்,
பத்திராதிபர், S. R. S. வைஜயந்தீ.

வர்த்தமானங்கள்.

காஞ்சீபுரம் தேவப்பெருமாள் உத்ஸவங்கள்:—நாளது மாசி மாதத்தில் சுக்லபக்ஷ தசமியன்று (2-3-36) திங்கட்கிழமை தென்னேரித் தெப்பத்திருநாள் நடைபெறும். முதல்நாள் இரவு 10-மணிக்குப் பெருமாள் ஸந்நிதியை விட்டுப் புறப்பட்டருளிப் பல கிராமங்களையும் அக்ரஹாரங்களையும் அலங்கரித்துக்கொண்டு மறுநாள் காலை 11-மணிக்குத் தென்னேரி சேர்ந்து அங்கு அற்புதமான திருமஞ்சனங் கொண்டருளி மாலை 5-மணிக்குமேல் தாதஸமுத்ரமென்கிற ஏரியில் தெப்பம் கண்டருளி, அகரம் என்கிற வைதிகாக்ரஹாரத்தில் லோகவிலக்ஷணமான திருவீதிப் புறப்பாடுடன் அவ்வூர் ஸந்நிதியில் எழுந்தருளியிருந்து திருவாராதன நைவேத்யாதிகள் விசேஷமாகக் கண்டருளி மறுநாள் உதயம் காஞ்சிபுரம் ஸந்நிதியில் சேர்ந்தருள்வர்.

8-3-36 ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமியன்று ராய்ஜீ குளத் தெப்பத்திருநாள் ஆச்சரியமாக நடைபெறும். மறுநாள் முதல் மூன்றுநாட்கள் ஸந்நிதியுள்ளே துரைத்தோட்டத்தில் நவனவுத்ஸவம் பரமபோக்யமாக நடைபெறும்.

திருக்கச்சிநம்பிகளுத்ஸவம்:—இவ்வாசிரியருடைய வருஷோத்ஸவம் ஸகல திவ்ய தேசங்களிலும் நடைபெற்றாலும் இவருடைய திருவவதாரஸ்தலமான பூவிருந்தவல்லியில் 10-நாளும் திருவீதிப் புறப்பாடுடன் வெகு சிறப்பாக பக்தவர்க்கங்களால் நடத்திவைக்கப்படும். 21-2-36ல் உத்ஸவாரம்பம். 1-3-36ல் மிருகசீர்ஷத் திருநக்ஷத்திரத்தன்று (ஞாயிற்றுக்கிழமை) சாற்றுமுறை.

acharya.org

திருநாராயணபுரம்

இது மேலக்கோட்டை என்கிற திவ்யக்ஷேத்ரம். இந்த க்ஷேத்ரமானது க்ருதயுகத்தில் நாராயணாத்ரி என்றும் த்ரேதாயுகத்தில் வேதாத்ரி என்றும் த்வாபரயுகத்தில் யாதவாத்ரி என்றும் கலியுகத்தில் யதிஸார்வபௌமரான எம்பெருமானாரால் ஜீர்ணோத்தாரணம் பண்ணப்பட்டதால் யதிசைலமென்றும் சொல்லப்படுகின்றது. மேலும் இந்நகருக்கு உடையவர் திருநாராயணபுரம் என்று திருநாமம் சாத்தின படியால் திருநாராயணபுரமென்றும் எல்லோராலும் போற்றப்படும். பங்குனிமாதத்தில் ப்ரும்ஹோத்ஸவம் வயிரமுடி ஸேவை. 17-2-36 (மாசிமீ 5-உ) கேட்டை நக்ஷத்திரத்தில் டில்லியிலிருந்து உடையவர் செல்வப்பிள்ளையை எழுந்தருள் வித்துக்கொண்டு எழுந்தருளின தினமாகையால் அன்று காலை ஸன்னிதியில் செல்வப்பிள்ளைக்குத் திருமஞ்சனம் மிக விமர்சையாய் நடைபெறும். உடனே உடையவருடன் தேசிகன் ஸன்னிதிக்கு எழுந்தருளி தளிகை முதலானதுகள் அமுது செய்து பல்லக்கில் செல்வப்பிள்ளையும் தோளுக்கினியானில் உடையவருமாக வீதி எழுந்தருளுகிற உத்ஸவம் மிகவும் அழகாக நடைபெறும்

திருவல்லிக்கேணி காலக்ஷேபங்கள்

ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி திவ்யாலயம், ஸ்ரீவேதவல்லித்தாயார் ஸந்நிதியில் ஸ்ரீமான் திவான் பஹதூர் M. O. பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமி சார்டி மூலமாய் சுமார் இருபது வருஷகாலமாய் உபயவேதாந்த ப்ரவர்த்தகரான திருமழிசை கோ. க. அ. ராமானுஜாசார்யஸ்வாமி அநேக ஸம்ப்ரதாயக்ரந்த காலக்ஷேபங்களை நடத்திக்கொண்டு வந்து, கொஞ்ச காலமாய் அந்தக் காலக்ஷேபங்களிலிருந்து நிவர்த்தராயிருக்கிறபடியால், ஷை தாயார் ஸந்நிதியில், அந்த ஸ்வாமியினுடைய அந்தேவாஸிகளான தி. ஆஸூரி, வெ. ஸ்ரீனிவாஸாச்சாரியர் ஸ்வாமி' தி. ஆஸூரி, ரா. ரங்காச்சாரியர் ஸ்வாமி இவர்கள் முறையே, ஹரிவம்சகாலக்ஷேபமும், பகவத்கீதா காலக்ஷேபமும் அந்தந்த வாரங்களில் பகல் 3மணிக்கு நடத்திக்கொண்டு வருகிறார்கள். அநேகர் வந்து கேட்டுக்களிக்கின்றனர்.

திருவல்லிக்கேணி ஸ்ரீ வானமாமலை மடத்தில், காலை 7½மணிக்கு தி. ஆஸூரி, வெ. ஸ்ரீனிவாஸாச்சார்ஸ்வாமி 'தத்வத்ரயம்' பிரதி தினமும் நடத்திக்கொண்டுவருகிறார்.

acharya.org

மாம்பலம்.

திருக்கண்ணபுரம் ந்யாய வேதாந்த ப்ரவர்த்தகரான ஸ்ரீமான் வரதாசார்யஸ்வாமிகளால், மாம்பலம் ராமானுஜன் தெரு, ராமாநுஜ நிலயத்தில் ப்ரதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு திருயந்த்ரார்த்தம் உபந்யஸிக்கப்படும்.

கோயில் மாசியுத்ஸவம்.

ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமாளுக்கு தைமீ முதற்கொண்டு நான்கு மாதங்களிலும் நான்கு பிரம்மோத்ஸவங்கள் நடைபெறுவது வழக்கம். தையுத்ஸவம் வெகுவிபவமாக நடைபெற்றது. மாசி ப்ரம்மோத்ஸவம் நாளது மாசிமீ 13-ந் தேதி (25-2-36) முதல் நடைபெறும். முடிவில் தெப்பவுத்ஸவம் நடைபெறுவதால் இதற்கு மாசித் தெப்பத் திருநாள் என்கிற பெயரும் வழங்கிவருவதுண்டு.

திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவர்தெப்பம்.

22—2—36உ அமாவாஸ்யையன்று நடைபெறும்.

திருபுட்குழியில் தெப்பம்.

இந்த திவ்யதேசத்தில் ஸகலமான உத்ஸவங்களும் வெகு அழகாக நடந்துகொண்டிருந்தன. சில வருஷங்களாகப் பலவகை விவாதங்களினால் ஒரு உத்ஸவமும் நடைபெறாமல் நின்றிருந்த குறையை நீக்க, சென்ற தையமாவாஸ்யை முதலாக மூன்று நாள் தெப்பவுத்ஸவம் நடத்துவதாக ஆரம்பம் செய்து ஒருநாள் உத்ஸவம் நடத்தப்பட்டது. அவ்வளவிலேயே கலஹங்கள் ஏற்பட்டு உத்ஸவம் நிறுத்தப்பட்டுவிட்டது. பக்தர்களுக்கு விசாலஹ்ருதயமுண்டாகி நல்லவழி பிறக்கவேணும்.

திருக்கண்ணபுரம் மாசிமகம்.

இத்தலத்து எம்பெருமான் சௌரிராஜப் பெருமாளுக்கு மாசி மகோத்ஸவமென்கிற ஒரு ப்ரம்மோத்ஸவம் 28—2—36உ முதலாக நடைபெறும். 7—3—36 மக நக்ஷத்திரத்தன்று திருமலைராஜன் பட்டணத்திற் கெழுந்தருளிக் கடலில் தீர்த்தம் ஸாதிக்கிற அதிசயங்கள் வெகு அற்புதமானவை. இவ்வுத்ஸவம் ஸ்ரீபெரும்பூதூரிலும் ஐந்து நாள் நடைபெறும்.

acharya.org

திருவத்யயநோத்ஸவம்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார்

மாஸங்களிற் சிறந்தது மார்கழி மாதமென்பது, ஸ்ரீ கீதாசார்யாபிமதமன்றோ? தேவதைகளின் திநாரம்பமான தை மாஸத்துக்குப் பூர்வபாவியாய் ப்ராதஸமயமாயிருப்பதே, அப்படி அந்த மாஸம் கொண்டாடப் படுவதற்குக் காரணமாயிருக்கும். அந்த மாதத்திற் சுக்லபக்ஷ ஏகாதசி தொடங்கிப் பெரிய பெருமாள் வடமொழிவேதத்தைக் கேட்டுப்போருவது வழக்கமாயிருந்ததாம். அதற்கு அத்யயநோத்ஸவமென்று பெயராம். அப்படி நடந்து வரா நிற்கையில் திருவரங்கம் பெரிய கோயிலில் ப்ராகாராதி கைங்கர்யங்களைச் செய்தருளின திருமங்கைமன்னன் காலத்தில் அவ்வாழ்வாருக்குப் பெரிய பெருமாள் அருள்பாடிட்டு ஸம்ஸ்க்ருத வேதஸாம்யம் தென்மொழிவேதமாகிய திருவாய்மொழிக்கு உண்டென்று தாம் திருவுள்ளம் பற்றியிருப்பதை ஸகலரும் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி திருவரங்கத் திருப்பதியினின்று திருக்கார்த்திகையானதும் ஆழ்வார்திருநகரிக்குப் பயணமாகி ஆழ்வாரை எழுந்தருளிப் பண்ணிக்கொண்டுவந்து திருவாய்மொழி பாராயணம் நடத்தும்படி நியமித்தருளினார். அப்படிப் பெரியபெருமாள் அநுக்ரஹித்த நியமனத்தை ஶிரஸாவஹித்துக் கலியனும் திருக்கார்த்திகையானதும் திருவரங்கத்திலுள்ள கோயில் பரிஜநங்களுடன் ஆழ்வார் திருநகரிக்குப் பயணமாகி அங்குநின்று ஆழ்வாரை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து ப்ரதிஸம்வத்ஸரமும் சுக்லபக்ஷ ஏகாதசி தொடங்கித் தினம் ஒவ்வொரு பத்து வீதம் திருவாய்மொழி பத்து பத்தையும் பத்துநாள் உத்ஸவத்தில் வடமொழி வேதத்தோடுகேட்பித்தருளித் திருவாய்மொழிக்கு வேதஸாம்யம் பெருமாள் திருவுள்ளம் பற்றியிருப்பதை ப்ரகாசிப்பித்தருளினார். இப்படி நிகழ்ந்து வாராநின்றமேற்படி உத்ஸவம் பிறகு காலக்ரமத்தில் நடந்தேறாமல் நின்று விட, வெகுகாலத்திற்குப்பின் நம் தர்சநஸ்தாபகாசாரியரான எம்பெருமானார் "பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே ஆள்கின்ற செங்கோலுடைய திருவரங்கச் செல்வனாரின்" திருவுள்ளத்தை யடியொற்றித் திருவாய்மொழியோடு மற்ற முதலாயிரம் முதலிய பிரபந்தங்கட்கும் வேத

acharya.org

ஸாம்யமுண்டென்பது ப்ரகாசிக்குமாறு மார்கழிமாஸத்துச் சுக்ல பக்ஷ ஏகாதசிக்கு முன்பு பத்து நாள்களில் முதலிரண்டாயிரத்தையும் ஸ்ரீவைகுண்ட ஏகாதசி தொடங்கிப் பத்துநாள்களில் திருவாய் மொழியாயிரத்தையும் திருவாய்மொழி முடிந்த மறுநாள் இயற்பாவாயிரத்தையும் நம்பெருமாள் வடமொழி வேதத்தோடு திருச்செவிசாத்தும்படி ஏற்பாடு செய்தருளினார். அப்படியேற்பாடு செய்கையில் திருக்கார்த்திகையானதும் ஸ்ரீரங்கத்திலுள்ள பரிஜனம் பலவற்றோடும் ஆழ்வார்திருநகரிக்குப் பயணமாகி நம்மாழ்வாரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து கலியனையும் முன்னிட்டு உத்ஸவத்தை விமர்சையாக நடப்பிக்கலானார். திருக்கார்த்திகையானதும் ஆழ்வாரை யெழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து திவ்யப்ரபந்தங்களைப் பெரியபெருமாள் திருச்செவிசாத்தியருளுங் காலவெல்லையே இந்தத் தென்மொழி வேதத்துக்கு அத்யாயோத்ஸர்ஜனகாலமாகும். முதற் பத்துநாள்களில் நடக்கும் உத்ஸவம் மத்தியான்ன காலத்திற்குள் திவ்யப்ரபந்தத்தைப் பெருமாள் திருச்செவி சாத்தும்படி இருப்பதால், அது பகற்பத்து என்னவும், பின்பு ஸ்ரீவைகுண்ட ஏகாதசி தொடங்கி நடக்கும் உத்ஸவத்தில் திருவாய்மொழிப்ரபந்தம் இராத்திரியில் திருச்செவி சாத்தும்படியிருத்ததால், அது இராப்பத்து என்றும் வழங்குவதாயிற்று. இந்த உத்ஸவங்களில் வடமொழி வேதத்தோடொப்ப திவ்யப்ரபந்தங்களும் சேவிக்கப்பட்டுப் பெரிய பெருமாளால் மிகவும் திருவுள்ளவுகப்போடு திருச்செவி சாத்தப்படுவதால் இந்த உத்ஸவம் திருவத்யயன உத்ஸவமென்று பெரியோர்களால் வழங்கப்படுவதாயிற்று. (அத்யயனமென்றால்—வேதமோதுதல்) இப்படி நடந்து வராநின்ற உத்ஸவம் கால தௌஷ்ட்யத்தால் ஆழ்வார் திருநகரியினின்று ஆழ்வாரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து நடத்துவது கஷ்டசாத்யமாய்விட பிற்காலத்துள்ள பெரியோர் திருவரங்கம் திருப்பதியில்தானே ஏறியருளப்பண்ணின நம்மாழ்வாரைக்கொண்டு மேற்படி உத்ஸவத்தைச் சிறப்பாக நடத்தலானார்கள்.

தமிழ் மொழியில் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்று வழங்குகிற மூவகைத்தமிழில் இயற்பாதவிர மற்றை மூவாயிரங்களும் இசைத்தமிழும் நாடகத்தமிழுமாகையால் அந்தப்ரபந்தங்

களை அறையர், பண்ணிசையோடு சேவிப்பதும் அபிநயிப்பதும், மற்றையோராயிரமும் இயற்றமிழென்பதை யாவரும் அறியுமாறு முன்னையோர், இவற்றிற்கு இயற்பா (இயற்றமிழாலானபா) என்று நாமதேயமிட்டதற்கு ஏற்ப அவ்வாயிரத்தை அறையர் பண்ணிசையோடு சேவிப்பதில்லையாக, இதர ஸ்ரீவைஷ்ணவர்கள் பெருந்திரளாக இருந்து அநுசந்திக்க நம்பெருமாள் கட்டளையால் இன்னும் இருபத்தொருநாள்களில் திவ்யப்ரபந்தம் முழுவதையும் திருச்செவிசாத்துதல் நடந்துவருகின்றது.

இப்படி நடந்துவராநிற்கிற திருவத்யயநோத்ஸவத்தைத் திருவரங்கம் திருப்பதிக்குப்போய் சேவிக்கப்ராப்தியில்லாதவர்கள் அக்குறை யொருவாறு தீர மேற்படிஉத்ஸவம் பலதிவ்ய தேசங்களில் நடக்கின்றது. அந்த உத்ஸவம், ராஜதானியாய் ஸ்ரீகீதாசாரியன் எழுந்தருளிஇருக்கப்பெற்ற திருவல்லிக்கேணி என்ற ஸ்ரீகைரவிணீ க்ஷேத்திரத்தில் ப்ரதிஸம்வத்ஸரமும் தொண்டர்கள் கண்டு அக மகிழ்ந்துவாழுமாறு வெகு விமர்சையாக நடந்துவாரா நிற்கின்றது.

தையில் மகம்

திருமழிசை கோ. க. அப்பன் இராமாநுஜாசாரியார்

திருமழிசைப்பிரான் 'த்ரதசத்வாதசோமாஸே' என்றும் 'பன்னிருத்திங்கள் வயிற்றிற்கொண்ட' என்றும் சொல்லுகிறபடி ராமக்ருஷ்ணர்களைப்போலே, பன்னிரண்டு மாதம் கர்ப்பவாஸம்பண்ணி அவதரித்தார். இதைப்பற்றியே, திருமழிசை, சதுர்சாஸ்த்ர ப்ரவீணரான அண்ணுவப்பங்கார்ஸ்வாமி,

மாஸேத்வாதசகே முநீந்த்ரக்ருஹிணீ ஸா த்வாபரே தைஷ்யகே
ஸித்தார்த்திந்யஹிமாம்சுவாரஸஹிதே தாரே மகாக்யாதரே
ராகாயா அபரேத்யுரஸ்யஜகத: க்ஷேமாய ஸௌதர்சகம்
ப்ராஸூதோல்பவிவேஷ்டநாவ்ருததநும் பிண்டம் ப்ரசண்டார்சிஷம்.

என்றும் அருளிச்செய்தார். இந்தஸ்லோகத்தின் தாத்பர்யம், த்வாபரயுகம், ஸித்தார்த்திவருஷம், தைமாஸம், ஞாயிற்றுக்கிழமை, ப்ரதமாதிதியோடுகூடிய மகாநக்ஷத்திரத்திலே, பார்க்கவமுநீந்த்ரருடையபத்நி, பன்னிரண்டுமாதம் கர்ப்பம்தரித்திருந்து, பூலோகத்தின் க்ஷேமார்த்த

acharya.org

மாக, சக்ராம்ஸமாய், தோல்பையால் மறைக்கப்பட்ட ஆகாரத்தோடு கூடிய, மஹா தேஜஸ்ஸையுடைய பிண்டாகாரமான ஆழ்வாரைப் பெற்றாள் என்பது. இவ்வாறு பிறப்பிலும், தேஜஸ்ஸிலும் ஸ்ரீராம க்ருஷ்ணர்களுக்கு ஒப்பான ஆழ்வார், துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலநம் பண்ணின அவர்களைப்போல், தாமும், பாஹ்யக்குத்ருஷ்டி மதங்களை நிரஸித்து பரமஸாத்விகமான விசிஷ்டாத்வைத மதத்தை ப்ரவ்ருத்திப்பித்தார்.

நான் முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் என்கிற இரண்டு ப்ரபந்தங்களாலும், தத்வஹித புருஷார்த்தங்களைச் சேதநர்களுடைய உஜ்ஜீவனார்த்தமாக அருளிச்செய்து, நம்புவியில் நாலாயிரத்தெழுநூறு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்து பிறகு பரமபதத்தையடைந்தார். அநந்தரம், 'பின்னானார் வணங்குஞ் சோதி' என்கிற படியே, எம்பெருமான் விபவாவதாரத்திலே உதவப் பெறாதவர்களுக்காக அர்ச்சாவதாரமா யெழுந்தருளியிருக்குமாப்போலே, இவ்வாழ்வாரும் அர்ச்சாவதாரமாய் திருமழிசையில் எழுந்தருளியிருக்கிறார். இவ்வாழ்வாருக்கு யுவஹூ தைமீ 17வ (30-1-36) தொடங்கி, பத்து தினங்கள் திவ்யோத்ஸவம் நடைபெற்று, தைமீ 26வ (8-2-36) தையில் மகத்தில், சாற்றுமுறை உத்ஸவம் மிகவும் விமர்சையாய் நடைபெற்றது.

தையில் மகம்.

பத்ராதிபர்.

தையில் மகத்தன்று இப்பத்ரிகை அவதரிக்கும்படி நேர்ந்தது ஒருபெரியபாக்யமே. அத்தினத்தைச் சிறிது ஆராய்வோமானால் அத்தினத்தில் அவதரித்த ஆழ்வாரின் பெருமையும் அவர் அவதரித்த திவ்ய தேசத்தின் பெருமையும் நமது புத்திக்குத் தோன்றாமற் போகாது. ஏகஸம்பந்திஜ்ஞானம் அபரஸம்பந்திஸ்மாரகமிறே! மற்ற தினங்களைக்காட்டிலும் இந்தத்தையில் மகத்திற்குண்டான ஏற்றத்தை மஹாநுபாவரான மாமுனிகள் துய்யமதிபெற்ற மழிசைப்பிரான் பிறந்தநாளென்று பேசியிருப்பது நன்குணரற்பாற்று—மாமுனிகள் மற்ற ஆழ்வார்களுக்கு அடைமொழி அருளிச்செய்யுங்கால் எப்புவியும் பேசுபுகழ்ப்பொய்கை என்றும் "நற்றமிழால் நூல்செய்து நாட்டையுய்த்த பெற்றிமையோர் என்றும்

acharya.org

வாய்த்தபுகழ் மங்கையர்கோன் என்றும் தின்னுபுகழ் மாமறையோன் தொண்டரடிப்பொடி என்றும் அருளிச்செய்து இவ்வாழ்வாருக்கு அடைமொழி அருளிச்செய்யுமிடத்து தூய்யமதிபெற்ற மழிசைப்பிரான் என்று அருளிச்செய்தமை ஆராயத்தகுந்ததே.

தூய்யமதிஎன்பதை ஆராயுமிடத்து அதற்கு விருத்தமான மதிகள் சில உண்டென்பதும் அவைகளை நீக்கி தூய்யமதியை இவ்வாழ்வார் பெற்றார் என்பதும் குறிக்கொள்ளத்தகுந்தது. இதை இவ்வாழ்வாரே "சாக்கியம் கற்றோம் சமணம் கற்றோமச்சங்கரனாராக்கிய ஆகமநூலாராய்ந்தோம் பாக்கியத்தால் செங்கட்கரியானைச் சேர்ந்தியாம் தீதிலோமெங்கட்கரிய தொன்றில்" என்ற பாசுரத்தினால் நன்கறிவித்திருக்கின்றார்.

தீயமதிகளை நன்கறிந்து அவற்றைக்காற்கடைக்கொண்டு தூய்யமதியைப்பெறுவதே பெறுமையுடைத்து. அவ்வாறின்றி முதலடியிலேயே உண்டாகும் தூயமதி அவ்வளவு சிறப்புடையதாகாது என்பது உற்றுணரத்தகும்.

மதியாவது மூன்று வகைப்படும். அதமம் மத்யமம் உத்தமம் என்று—அவைகளில் அதமமதியாவது தேவதாந்தரங்களுக்கு சேஷமென்றிருக்கை. மத்யமமதியாவது எல்லாம் அவன் மூர்த்தியாகையால் எல்லாத்தெய்வங்களுக்கும் நாம் சேஷமென்றிருக்கை. உத்தம மதியாவது எம்பெருமானுக்கே சேஷமென்றிருக்கை. அதையே தூய்யமதி என்று மாமுனிகள் அருளிச்செய்தது— அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதானம் என்றும் விரோதி போயனுபவிக்கவேண்டும் என்றும் உலகாரியன் உலகுய்ய உபகரித்த ஸ்ரீஸூக்திகள் உத்கோஷிக்கின்றதும் இவ்வர்த்தத்தையே. இவ்வாழ்வாரும் நான்முகனை நாராயணன் படைத்தான் என்றும் தேருங்கால் தேவன் ஒருவனே என்றும் மெய்ப்பொருளை யானறிந்தவாறு என்றும் உபக்ரமித்து வேறொருவரில்லாமை நின்றான் என்றும் மாதவனை ஏத்தாதார் ஈனவரே என்றும் உன்னையன்றியிலேன் கண்டாய் என்றும் கூரம்பனல்லால் குறை இலை—என்றும்—விண்ணவற்கு நற்பொருள் நாராயணன் என்றும் ஆதிநெடுமால் அணைப்பார் கருத்தனாவான் என்றும் காகுத்தனல்லால் ஒரு தெய்வம்யானிலேன் என்றும் திருவில்லாத்தேவரைத் தேறேல்மின் என்றும் பெருங்

குருந்தம் சாய்த்தவனே என்னெஞ்சமானவர் என்றும் விடையேற்றான் வெவ்வினைதீர்த்தாயானுக்கு ஆக்கினேன் அன்பு என்றும் கனிக்குநிறைபொருளாய் நின்றானை நேர்பட்டேன் பார்க்கில் மறைப்பொருளும் அத்தனையே என்றும் நால் வேதமாத்தவமும் நாரணனே என்றும் கழற்காலமன்னனையே கண்ணனையே தொழக்காதல்பூண்டேன் என்றும் சொல்லுகிற மதியே துய்யமதி என்றும் சொல்லி அறியார் சமணர் அயர்த்தார் என்றும் எத்தாதார் ஈனவர் என்றும் மறந்தும் புறந்தொழாமாந்தர் என்றும் தேவதாந்த விஷயமான மதிகளைக்கழித்து இனி யறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம் இனியறிந்தே னெம்பெருமானுன்னை இனியறிந்தேன் காரணன்நீ கற்றவை கற்பவைநீ நற்கிரிசை நாரணன்நீ நன்கறிந்தேன் நான் என்று முடித்திருக்கிற திவ்யப்ரபந்தத்தால் நன்கறிவித்திருக்கின்றனர்.

இது போலவே இவ்வாழ்வார் அவதரித்த திவ்யதேசத்தின் பெருமையும் உலகு மழிசையுமுள்ளுணர்ந்து என்கிற பாசுரத்தினுல் நன்கு விளங்காநிற்கும் இவ்வாழ்வாரின் பெருமையையும் அவ ரருளிச்செய்த திவ்யப்ரபந்தத்தின் பெருமையையும் அவரவதரித்த திவ்யக்ஷேத்ரத்தின் பெருமையையும் நாம் ஸ்மரிக்கும் படியாகச் செய்த இந்தத் தையில் மகத்தன்று இந்த இராமாநுஜஸித்தாந்த வைஜயந்தியின் மூன்றுவது ஸஞ்சிகை வெளிவந்தது மிகவும் போற்றற்குரியதே.

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தவைஜயந்தீக்ராஹக மஹாஶயர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

இப்பத்ரிகையானது யதிஸார்வபௌமரான எம்பெருமானுர்க்குப்பின் இரண்டு மாலைகளாகப் பிரிந்திருக்கின்ற உபயஸம்ப்ரதாயார்த்தங்களை நிஷ்பக்ஷபாதமாய் வெளியிட்டும் அவைகளுக்குண்டாயிருக்கும் ஐககண்ட்யத்தை யாவருமறிய தெரியப்படுத்தவும் உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள மஹாவித்வான்கள் அநுக்ரஹிக்கும் விஷயங்களைச் சிரமேற்கொண்டு வெளியிடவும் அவ்வாறு வெளியிடுவதில் அதிவாதங்களில்லாமல் லோகோபகாரமான விஷயங்

களையே ப்ரசுரப்படுத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் ஆரம்பிக்கப் பட்டு இரண்டு ஸஞ்சிகைகள் வெளிவந்து இத்துடன் மூன்று ஸஞ்சிகைகள் ஆகின்றன. பத்ரிகையில் விஷயதானமருள வாக் களித்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கும் ஸ்வாமிகள் ஸன்னிதி யில் அடியேன் நேரில்சென்று அடிபணிந்து வேண்டிக்கொண் டிருக்கிறேன். அவர்களும் விஷயதானம் செய்வதாக வாக்களித் திருந்தாலும் இதுகாறும் ஷை ஸ்வாமிகள் ஒருவரும் ஒருவிஷய மும் அநுக்ரஹிக்கவில்லை. அதற்கு அந்த ஸ்வாமிகளிடத்தில் யாதொருகுறைகளையும் கூறுவதற்கு அவகாஶலேசமும் கிடை யாது.—மத்பாபமே வாத்ரநிமித்தம் என்றுதான் சொல்லவேண்டும். இனிமேலாவது ஷை ஸ்வாமிகள் அறிவொன்றுமில்லாவடியே னுடைய குறைகளைக் குறிக்கொள்ளாமல் குறைவொன்றுமில்லாத தங்கள் நிறைவுகளையே நினைத்து விஷயமருள்புரிய வேண்டுமென்று ஸாஷ்டாங்கப்ரணதிபூர்வகம் விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

இந்த நிலைமையில் பெருமாள்கோவில் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசார்யஸ்வாமி பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி அருளிச்செய்கிற விஷயங்களை மாத்திரமே அச்சிட்டு வருகிறேன் இவ்வாறு மற்றவர்கள் அநுக்ரஹிக்கும் விஷயங்களை யும் அச்சிடும்பாக்யம் அடியேனுக்குண்டாகும்படி அருள்செய்யு மவர்கள் எவரேலும் அவர்திறத்து தலையல்லால் கைமாறிலேன்.

அவ்வாறு விஷயதானம் அருள் செய்யுமவர்கள் கடிதத்தில் ஒரு பக்கத்தில் ஸ்பஷ்டமாக எழுதி அநுக்ரஹித்தால் அப்படியே அச்சடிக்கக் கொடுக்கப்படும். அவர்கள் அநுக்ரஹிக்கும் விஷயங் களில் ஏதாவது ஏற்றத்தாழ்வுகளேற்பட்டால் அவை விஷயதாநம் செய்தவர்களைச் சேர்ந்ததே ஆகும். அதற்குப் பத்ராதிபர் ஒரு விதத்தாலும் உத்தரவாதியாகமாட்டார்.

இங்ஙனம்: ஸ்ரீவைஷ்ணவதாஸ பாததூளி

வடகரை : இராமாநுஜாசாரி.

பத்ராதிபர் S. R. S. வைஜயந்தீ.

acharya.org

ஸ்ரீ

பாடப் பிறழ்வுகள்.

[பெருமாள் கோயில்

ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்]

ஸம்ஸாரிகளான நாம் உஜ்ஜீவிப்பதற்காக நமது பூர்வர்களான ஆழ்வார்களும் ஆசாரியர்களும் அருளிச்செய்துள்ள திவ்ய ஸ்ரீஸூக்திகளில் பல காரணங்களினால் பாடப் பிறழ்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. திவ்யப்ரபந்த மூலம், ஸ்தோத்ர பாடங்கள், ரஹஸ்யங்கள், ரஹஸ்ய வ்யாக்யானங்கள், அருளிச்செயல் வியாக்கியானங்கள் முதலிய ஸகல க்ரந்தங்களிலும் பல இடங்களில் உண்மையான பாடம் தவறி வேறான பாடம் வந்து புகுந்திருக்கின்றதென்பதை விவேகிகள் ஆராய்ந்து உணரவேண்டும்.

உண்மையான பாடம் பிறழ்ந்து போவதற்குப் பல காரணங்களுண்டு. ஞானமில்லாதவர்கள் தாங்கள் ஒருவிதமாக க்ரஹித்துப் பிறர்களுக்கும் அப்படியே சொல்லிவைப்பதனால் சில பிறழ்வுகள். ஞானமுள்ளவர்களாகவே யிருந்தாலும் ஏதோ வொருவிதமாகத் தாங்கள் ப்ரமித்து ஒரு பாடத்தை ஆதரித்து அதையே ப்ரவசனம் செய்வதனால் சில பிறழ்வுகள். ஏடு பார்த்து எழுதுகிறவர்கள், [illegible] (பரம பரமார்த்தி)களாலே ஒருவிதமாக எழுதிவைத்து விட அதனால் சில பிறழ்வுகள். அச்சிடுங் காலத்தில் சொற்களிலே மாறுவதும் எழுத்துக்களும் பதங்களும் வாக்கியங்களும் விகாரப்படுவதும் விட்டுப்போவதும் ஆகிய இவற்றால் பல பிறழ்வுகள்.

ஆகவிப்படிப் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகள் ஆங்காங்குப் பிறழ்வெய்தியிருப்பதானது விபரீதமான அர்த்தங்களைத் தருவதற்கும் ஹேதுவாகின்றமையால் ப்ராமாணிகர்களாயும் சிறந்த விவேகிகளாயுமுள்ள மஹநீயர்களின் உதவியைக் கொண்டு பிழைதிருத்தங்களைப் ப்ரகாசப்படுத்திவைக்க வேண்டுமென்று நமக்குப் பெரிதும் ஆவலுள்ளது. [illegible] (பரம பரமார்த்த)ங்கள் எவர்களுக்குமே ஸம்பா

acharya.org

விதமாதலால் க்ரமமாகவேயுள்ள பாடத்தையும் சிலர் திருத்திவிடக் கூடும், ஆதலால் எந்த உண்மையான பாடமென்று நம்புவது— என்று சிலர் கருதக்கூடும். மானிடராய்ப் பிறந்தாரெல்லார்க்கும் ப்ரம ப்ரமாத (பரம பரமாத)ங்கள் ஸஹஜங்களே யென்பதில் ஆக்ஷேபமில்லை. நம்முடைய ஸ்வதந்த்ரமான புத்தியைக் கொண்டு திருத்தவேணுமென்பது நமது அபிப்ராயமன்று. தகுந்த ஆதாரங்கள் கிடைத்தால் அவற்றில் ஔசித்யமும் தோன்றினால் திருத்துவது நலம் என்பதே நமது கருத்து.

திருக்கச்சி நம்பிகள் அருளிச் செய்த தேவராஜாஷ்டகத்தில் "ஸம்ஸார மருகாந்தாரே துர்வ்யாதி வ்யாக்ரபீஷணே! விஷய க்ஷுத்ர குல்மாட்யே த்ருஷாபாதப சாலிநி" || என்கிற ச்லோகத்தில் முதல் மூன்று பாதங்களினுடைய முடிவும் ஏகாரமாக இருப்பதால் கடைசிப் பாதமும் அப்படியேதானிருக்க வேண்டுமென்றெண்ணியோ? வேறு காரணத்தினாலோ 'த்ருஷாபாதபசாலிநே' என்று பலரும் சொல்லி வருவது ப்ரஸித்தம். இப்படிப்பட்ட ச்லோகங்கள் மிக்க இளம் ப்ராயத்திலேயே கற்பிக்கப்படுவதால் ஈரமரத்தில் அடித்த ஆணிபோல் சிக்கென க்ரஹிக்கப்படுகிற பாடம் ப்ரௌடித்வம் பெற்ற வளவிலும் மாறமாட்டாமல் நிற்கிறது. சிறந்த வித்வான்களாகவுள்ளவர்கள் அநுஸந்தித்தாலும் அதில் ஒரு ஆராய்ச்சியின்றியே பால்ய பாடப்படியே அநுஸந்தித்து வருவதைக் காணுகின்றோம். இது பிழையல்லவா? என்று உணர்த்தினால் ஆமென்று இசைகின்றார்கள். ஆனாலும் மறுபடியும் பழையபாடமே அவர்களுடைய வாக்கில் வந்துவிடும். இதை வாஸிதாநுவ்ருத்தி (பாதிதாநு வ்ருத்தி) யென்பார்கள்.

மணவாளமாமுனிகளின் திநசர்யை, யதிராஜவிம்சதி முதலான ஸ்துதிகளும் இளம்ப்ராயத்திலேயே கற்பிக்கப்படுவதால் அவற்றிலும் எவ்வளவோ பாடப்பிறழ்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. உத்தரதிநசர்யையின் முடிவில்

"[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||"

acharya.org

ஸ்பபத ஸ்வரூபாநு குணைவ்யனமிந்
ஸாவோத்தரோயதர மந பரஸாக ।
ஸதபிஸஸமம தைவதமேவ தேஶம
பராபதம பரபதயே பவதங்ரிமூலம ॥

என்கிற ஶ்லோகம் அநுஸந்திக்கப்பட்டு வருவது அனைவர்க்கும் தெரியும். இதற்கு என்ன அர்த்தமென்று நாம் பல பண்டிதர்களைக் கேட்பதுண்டு. இப்போதும் கேட்கிறோம். அதிலுள்ள பாடப்பிழையைத் திருத்தாமல் அர்த்தஞ் சொல்ல முடியுமா? என்று பாருங்கள். எத்தனையோ பதிப்புகள் அச்சாகி யிருக்கின்றதே, ஒன்றிலாவது உண்மையான பாடம் காணப்படுகிறதா வென்றும் பாருங்கள். இது ஒரு சிறிய த்ருஷ்டாந்தமாகக் காட்டப்பட்டது. இப்படியே ஆழ்வான் பட்டர் முதலானோர் அருளிய பஞ்சஸ்தவாதி(தி)களிலும் பல பிறழ்வுகள் நெடுநாளைக்கு முன்னமே நேர்ந்துவிட்டன என்பதும் க்ரமேண நிரூபிக்கப்படும்.

காலக்ஷேப க்ரந்தங்களாகவுள்ள வ்யாக்யான க்ரந்தங்களில் உள்ள பிறழ்வுகளை யெல்லாம் இந்தப் பத்ரிகை மூலமாகத் திருத்த வேணுமென்கிற நமது ஆவலைப் பல மஹான்களே பூர்த்தி செய்வித்தருளவேணும். எல்லாம் திருத்தமாகவே அச்சிடப்பட்டிருக்கின்றதென்றும், புதிதாக யாதொரு திருத்தமும் செய்ய வேண்டியதில்லை யென்றும் சொல்லுமவர்களைப்பற்றி நாம் யாதொன்றும் சொல்லுகின்றிலோம். அச்சுப் புத்தகங்களில் பல பாடப்பிழைகள் புகுந்துவிட்டன என்பதை இசைந்து அவற்றைத் திருத்தியருளத் திருவுள்ளம் பற்றியிருக்கும் மஹான்கள் தம்தமக்குத் தெரிந்த திருத்தங்களை உதவியருளவேணும்.

ஒரு அக்ஷரம் மாறிவிடுவதனால் மஹத்தான க்ஷோபம் உண்டாய்விடுகிறதென்பதை நாம் சொல்லவேணுமோ? சிறியவுதாஹரண மொன்று காண்மின்,—ஆசார்ய ஹ்ருதயத்தில் நாரைகொக்கு குருகுகளுக்கு ஸ்வாபதேச மருளிச்செய்கிற ‘‘ஆசறுதூவி யென்னும்’’ என்கிற சூர்ணிகையின் ஜீயர் வ்யாக்யானத்தில், ‘தாய் வாயிலுண்ணும் பிள்ளைக்கு இரைதேடி’’ என்ற வாக்கியத்திற்குப் பொருள் விவரிக்குமிடத்தில்

acharya.org

"தங்கள் வாக்கால் உபகரிக்கும் பகவத் விஷயத்தை உபஜீவித்திருக்கும் குறைச்சரக்கான் சிஷ்யர்களுக்குப் பாயாநுகுணமாக ஸாத்ம்யமான பகவத் விஷயார்த்தங்களை சாஸ்த்ரங்களிலே ஆராய்ந்து உபகரித்து"

என்கிற ஸ்ரீஸூக்தியில் "சிஷ்யர்களுக்குப் பாயாநு குணமாக" என்கிற பங்க்திக்கு என்ன அர்த்தம் என்று ஆராய்ந்து பாருங்கள். பல ஸ்வாமிகளை அடியேன் கேட்டிருக்கிறேன், 'உபாயாநு குணமாக' என்றது அந்வயியாது தான், 'வயோநு குணமாக' என்றிருக்கும் — என்று சிலர் ஸாதித்தார்கள். எப்படியும் திருத்த வேண்டியது ஆவச்யகமே என்பதை அனைவரும் அங்கீகரிப்பார்கள். நம்முடைய புத்தியைக் கொண்டு நாம் ஸ்வதந்திரமாகத் திருத்துவதிற் காட்டிலும் ஒரு ஸ்ரீகோசத்தைக் கொண்டு திருத்தலாமென்று பார்த்தபோது, ஸுப்ரஸித்தராக எழுந்தருளியிருந்த ஸ்ரீ காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி, ஒரு ஸ்ரீகோசத்திலிருந்து தாம் திருத்தியிருப்பதாக ஸாதித்தது

யகாரஸ்தானே ககாரஃ வாச்யஃ
டகாரஸ்தானே ககாரபாட

என்றருளிச் செய்தார். அதாவது — 'சிஷ்யர்களுக்கு பாயாநுகுணமாக" என்பதை 'சிஷ்யர்களுக்கு பாகாநு குணமாக" என்று திருத்தவேணுமென்று ஸாதித்தபடி. இப்போது எவ்வளவு அழகாக அர்த்தமாகிறதென்று பாருங்கள். சிஷ்யர்களுடைய ஜ்ஞான பாகத்திற்குத் தகுந்தபடி ஆசார்யர்கள் ஆராய்ந்து உபதேசிப்பார்களென்று சொல்லுவது மிகவும் பொருத்தமானதன்றோ. ககாரத்தை யகாரமாக மாற்றிவிட்டதனால் உண்டான க்லேசம் எவ்வளவென்று பார்க்க.

திருப்பாவையின் வ்யாக்யான அவதாரிகையிலே —

"தானும் ப்ராப்த யௌவனையாய் அவர்களுக்கும் யௌவனம் வந்து தலைக்கட்டினவாறே"

என்கிற ஸ்ரீஸூக்தி காணப்படுகிறது. இப்படியே பல பதிப்புகளை ஏறிவிட்டன (ஆபச்சிகளுக்கு) யௌவனம் வந்து தலைக்கட்டினதாக இருக்கக் காண்கிறது. இப்படியே காலக்ஷேபபரர்களான ஸ்வாமிகளும் ஸாதித்துவரக் காண்கிறோம். யௌவனம் வந்து தலைக்கட்டிற

acharya.org

ஜெணரூல என்ன ஆததம எனபதை ஆலோசியாமலும அநத ஸ்ரீஸூக்தியில ஒரு விபரதிபததியுமிலலாமலும இருநது வருகிறோம நமபெருமாள ஸந்நிதியில அரையா திருபபாவை வியாகயானம ஸேவிககுமபோது குறிககொணடு கேட்டிருககையில

"யௌவநம வநது தலைகாட்டினவாறே"

எனறு ஸேவிககக கேட்டுப பரமாநநத மடைநதோம ஓலை ஸ்ரீகோசஙகளில கா எனனு மெழுததைக கூட்டெழுததாக எழுதினால கக எனறும வாசிகக நேரநதுவிடுகிறது அவவிதமாக நோநத பிறழவே இது இஙகு விபாயயம ஸவலபமேயானாலும ரஸபஙகம வாசாமகோசரமனறோ இஙஙனே காட்டககூடிய பிறழவுகள பலபல இருபபதனால பெரியோாகளிடம நாம கேட்டவற்றை கரமேண எழுதிவருவோம, இஙஙனமே மற்றும பல மஹானகளும தாமதாம கரஹிததுளள திருததஙகளை இபபததிரிகை வாயிலாக ரஸிகாகளுககு உபகரிககவேணும

T S ராமானுஜாசாரயா

வட்கரை இராமாநுஜாசாரியாருககு எழுதிய பததிரிகை

13. ஆனைககட்டி வீதி,
சினன காஞசீபுரம.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாயநம

தாஸஸயாநநத பரணதி பூரவிகேயம விஜஞபதி

உபய குசலோபரி

தேவரீா அனுபபிய மூனறு பததிரிகையும வநது சோநதன. ரொமபவும ஸநதோஷம அதில திருககோட்டியூா ஸவாமியையும விஷயதானம செயபவரில ஒருவராக எழுதபபட்டிருககிறது. அது ஸரியலல எனபதாககவே இபபொழுது அடியேன விகஞாபிபபது தேவரீா இஙகு எளளியிருநத ஸமயம அநத ஸவாமியின திருமாளி

acharya.org

கைக்கு ஏள்ளி விக்ஞாபித்ததெல்லாம் ஞாபகமிருக்கலாம். இருந்தாலும் அடியேன் ஞாபகப்படுத்துகிறேன். அதாவது—அண்ணங்கராசார்யஸ்வாமி தேசிகஸூக்தி விஜயத்வஜமாலா என்று ஒரு பத்திரிகை பிரசுரித்து அதற்கு தேவரீரை காரியதரிசியாக ஏற்படுத்தியதாக தேவரீரிடத்தில் ஸாதித்ததாகவும் அதற்கு தேவரீர் இந்த சண்டைப் பத்திரிகைகளுக்கு நான் காரியதரிசியாக இருக்கமாட்டேன் ஆனால் சண்டையில்லாமல் ராமானுஜ ஸித்தாந்த வைஜயந்தீ என்று ஒரு பத்திரிகை ஆரம்பித்து நடத்தலாமென்று சொன்னதாகவும் அவரும் அதற்கு ஸரி என்று ஆமோதித்ததாயும் ஆதலால் அப்பத்திரிகை நடத்தப்போவதாயும் அதற்கு ஏதாவது விஷய தானம் செய்ய வேண்டுமெனவும் பிரார்த்தித்தீர் ஆனால் அந்த ஸ்வாமி நான் ஒரு பத்திரிகைக்கும் விஷயம் எழுதுவதில்லை. எனக்கு கலஹங்களை பிடிப்பதில்லை நான் எழுதினால் அதில் யாராவது தப்பு கண்டுபிடித்து புஸ்தகம் எழுதுவார்களென்றும் அப்புறம் பிரகிருதி வாஸனைப்படி எனக்கும் எழுதத்தோன்றும் ஆதலால் நான் எழுதுகிற வம்புக்கே போகமாட்டேன் என்னை வாயால் சொல்லச் சொன்னால் எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லுகிறேன் என்று ஸாதித்தார் அதற்கு தேவரீரும் அதை ஒத்துக்கொண்டு இந்த சண்டைகளை எனக்கு பிடிப்பதில்லை அண்ணங்கராசாரியார் ஸ்வாமியையும் சண்டை வேண்டாமெனவும் தடுத்துவருவதாயும் சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டீர் இப்பொழுதோ என்றால் முதல் புஸ்தகம் அநுஞேகபத்திலேயே தேவரீரே சண்டைக்கிகச்சம் கட்டிவிட்டீர் அதுபோனாலும் பொது விஷயங்களையே அந்த பத்திரிகையில் பிரசுரிக்கப் போகிறேனென்று சொல்லிவிட்டு இப்பொழுது சண்டைக்கு விஷயமான வியாஸம் ஒன்று எழுதியிருக்கிறது அதாவது ஒரு வியாஸத்தில் பகவானுடைய பாதாரவிந்தமடைவதற்கு ஸம்பந்த ஞானம் ஒன்றே போதும் வேறு ஒன்றும் வேண்டாமென்று எழுதியிருக்கிறது இது கலஹாஸ்பதமே என்று தேவரீரே அறிந்திருக்கும் இப்பேர்ப்பட்ட விஷயத்தை பிரசுரித்துவிட்டு விஷயதானம் செய்யமாட்டேனென்று ஸாதித்த ஸ்வாமி திருநாமத்தையும் விஷயதானம் செய்பவராக எழுதப்பட்டிருக்கிறது தேவரீர் ரொம்ப ஸாத்விகர் என்று எண்ணியிருந்தேன். ஆனால் ஸஹவாஸ தோஷம் தேவரீர் என்ன செய்யும் பாவம். தேவரீர் தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணை ஸபை பத்திரிகைக்கு

acharya.org

ஏதோ எழுதியிருந்ததாயும் அவர்கள் ஸரியாக ப்ரசுரிக்கவில்லை யென்றும் எழுதியிருக்கிறது. அவர்கள்மேல் குற்றம் சாட்டுவதால் தேவரீர் எந்த விஷயமாயிருந்தாலும் ப்ரசுரிக்குமென்று தோன்றுகிறது. ஆதலால் இதை அவசியம் தேவரீர் பத்திரிகையில் ப்ரசுரிக்க வேண்டுமாய்ப் ப்ரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,
T S ராமாநுஜ
காஞ்சீ.

சரியான்பிரதி

வடகரை இராமாநுஜாசாரியார்

T. S ராமாநுஜாசாரியாருக்கு எழுதிய பத்திரிகை

25, ஆசாரப்பன் தெரு,
சென்னை.
6—2—36

ஸ்ரீ
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அடியேன் வடகரை ராமாநுஜாய தாஸன் தாளுந்தடக்கையுங்கூப்பிப் பணிந்துசெய்யும் விண்ணப்பம் உபய குசலோபரி. சீலமில்லாச் சிறியனை அடியேனைப் பொருளாக்கி அநுக்ரஹித்த திருமுகத்தைச் சிரஸால் வஹித்துப் பேரானந்தமடைந்தேன். அடியேன் பெருமாள் கோவிலுக்கு விடை கொண்டிருந்த காலத்தில் ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில் பத்திரிகைக்கு விஷயதானமருள வேண்டுமென்று வேண்டிக்கொண்ட காலத்தில் ஸ்வாமிக்கும் அடியேனுக்கும் நடந்த ஸல்லாபங்களில் சில விஷயங்கள் மாத்திரமே ஸ்வாமி திருமுகத்தில் அநுவதிக்கப்பட்டிருக்கிறது. அதைச்சிறிது ஆலோசித்தால் அத்திருமுகம் ஸ்ரீ ஸ்வாமியுடன் கலந்து அநுக்ரஹித்ததாகக் காணப்படவில்லை. தேவரீரும் அன்று அவ்விடமிருந்ததாகவே நினைக்கின்றேன். அவ்வாறிருந்திருந்தால் இவ்வாறு அநுக்ரஹிக்க இயலாது. ஒருசமயம் மறந்திருக்கலாமென்றும் எண்ணுவ

acharya.org

தற்கிடமாகின்றது ஆதலால் அதுவிஷயத்தில் "ஸமர்ப்யே த்வாம் நபரிக்ஷயே" அதாவது ஸ்ரீ ஸ்வாமி ஸன்னிதிக்கு அடியேன் விண்ட கொண்டிருந்த காலத்தில் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் மூலமந்த்ராதிகாரம் காலக்ஷேபம் நடந்துகொண்டிருந்ததாக ஞாபகம் அச்சமயம் தேவரீரும் இன்னும் 2, 3, திருநாமங்கள் எழுந்தருளியிருந்தார்கள் அவர்களை அடியேன் இன்னாரென்றறியேன் அதுசமயம் அடியேன் ஒரு விளம்பரப் பத்திரிகையையும் ஸ்ரீ ஸ்வாமி ஸன்னிதியில் ஸமர்ப்பித்து இப்பத்திரிகை ஸ்ரீ ஸ்வாமி அநுக்ரஹத்திற்கு பாத்ரமாம்படி கருணை பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொண்டேன் அதற்கு ஸ்ரீ ஸ்வாமி நான் ஒரு பத்திரிகைக்கும் விஷயதானம் செய்வதில்லை இதற்கும் நான் ஒன்றும் செய்யமாட்டேன் என்றும் சொல்லிக் கடைசியாக திருக்குடந்தைக்கு எழுந்தருளியிருந்த காலத்து நடந்ததொரு விருத்தாந்தத்தைச் சொல்லியருளி அவரவர்களுக்கு அவரவர்கள் ஸம்ப்ரதாயத்தில் அபிமானமில்லாமற் போகாது அப்படி ஏதாவது அவசமாய்ச் சொன்னாலும் அதையும் குற்றமாகக் கண்டிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு திரியும்வர்கள் சிலரிருக்க நீ ஏன் என்னை இவ்வாறு நிர்ப்பந்திக்கிறாய் என்று நியமித்தருளினார் அதற்கு அடியேன் அவ்வாறு பக்ஷபாதமிருப்பது ஆவஸ்யகமே அதுவும் இப்பத்திரிகையில் வெளிவர வேண்டியதுதானே? என்று வேண்டிக்கொண்டேன் அதன்பேரில் ஸ்ரீஸ்வாமி அடியேனைப் பூர்ணமாகக் கடாக்ஷித்து நீ, நினைத்தபடி எல்லாம் உனக்குக் கைகூடும் இப்பத்திரிகையும் ஒழுங்காக நடைபெறும் நானும் எப்போதாவது பட்டணம் வருவேன் வந்த காலத்தில், உன் பத்திரிகைக்கு விஷயமும் தானம் செய்கிறேன் என்றும் அநுக்ரஹித்தருளினார் அவ்வார்த்தையை அடியேன் "மாயனன்று தெய்வத்தேரினில் செப்பிய மெய்ம்மைப் பெருவார்த்தை" போலவே நம்பி விடைகொண்டு வந்திருக்கின்றேனாதலால் பத்திரிகையிலும் ஸ்ரீ ஸ்வாமி திருநாமத்தைக் குறிப்பிடவும் நேரிட்டது இது நிற்க, அருஞேயத்தில் ஸ்ரீ உ. வே. கோபாலாசார்ய ஸ்வாமிக்கும் அடியேனுக்கும் நடந்த வாதப்ரதிவாதமான பத்திரிகைகளை அச்சிடப்பட்டிருக்கிறது அதில் அடியேன் சிற்றறிவிற்கு விஷயமான பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த அர்த்தங்களையே விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறேன் அதில் ஏதாவது விருத்தமாக ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளம் பற்றினால் அதையும்

acharya.org

பத்ரிகை மூலம் ப்ரசாரம் செய்கிறேன். மேல் இரண்டு ஸஞ்சிகை களிலும் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார் அநுக்ரஹித்த விஷயங் களே "அதில் பகவானுடைய பாதாரவிந்த மடைவதற்கு ஸம்பந்த ஜ்ஞாநம் ஒன்றே போதும். வேறு ஒன்றும் வேண்டாம்" என்று எழுதியிருக்கிறதாகவும் அது கல்ஹாஸ்பத மென்றும் ஸ்வாமி திரு வுள்ளம் பற்றியிருப்பதாக அநுக்ரஹிக்கப் பட்டிருக்கிறது. அது ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி அநுக்ரஹித்த விஷயமே. அடி யேன் அறிந்ததும் அப்படியே. அது ஒன்று போதாது வேறும் சில வேண்டுமென்று தேவரீர் திருவுள்ளமானாலும் மிகவும் அழகியதே. பகவத்விஷயத்தில் நாம் எவ்வளவு செய்தாலும் அவன் செய்யும் உப காரத்திற்கு போதுமென்று நினைப்பதும் பொருந்தாதே. ஆதலின் ஒரு அபிப்ராயத்தால் போதுமென்று நினைக்கவும் கூடும். மற்றொரு அபிப்ராயத்தால் அது போதாது என்று நினைக்கவும் ப்ராப்தம். ஆதலின் இவ்விரண்டு அபிப்ராயங்களும் அழகியதாகவே அடியே னுக்குக் காணப்படுகின்றது, ஒருக்கால் ஸ்வாமி திருவுளத்திற்குத் தவறாயிருந்தாலும் சரியானதொரு ஆர்த்தத்தை அநுக்ரஹித்தா லும் அதையும் வைஜயந்தியின் வாயிலாய் ப்ரசுரப்படுத்தி தநயனு வேன். தேவரீர் அநுக்ரஹித்த திருமுகத்தையும் அடியேன் விண் ணப்பித்துக்கொண்ட இப்பத்ரிகையையும் இந்த மாதத்தில் தையில் மகத்தன்றே வைஜயந்தீ அகில ஸ்ரீ வைஷ்ணவர்களும் அறியுமாறு ப்ரசாரம் செய்ய ஆரம்பிக்கும். இவ்வாறு அடியேனுக்கு ஹிதமான அமுதமொழிகளை அடிக்கடி அநுக்ரஹிக்க வேண்டுமப்படி ஸ்ரீ ஸ்வாமி ஸன்னிதியில் அடியேனுக்காகத் தேவரீர் ப்ரார்த்திக்க வேண்டுகி றேன். வாசிகதோஷா: க்ஷந்தவ்யா:

இங்ஙனம் அடியேன் வடகரை,

ராமாநுஜார்ய தாஸ:

பத்ராதிபர் S. R S வைஜயந்தீ.

acharya.org

ஸ்ரீ

ஸ்ரீயை நம:

ஸ்ரீவானமாமலை ராமாநுஜஸ்வாமி திருவடியான
வடகரை இராமாநுஜாசார்யரால் எழுதப்பட்டது

புருஷகாரவைபவம்.

நம: ஸ்ரீரங்கநாயக்யை யத்ப்ரூவிப்ரமபேதத: ।
ஈசேசிதவ்யவைஷம்ய நிம்நோந்நதமிதம் ஜகத் ॥

புருஷகார ஸப்தார்த்தம்

புருஷம், கரோதி இதி புருஷகார: புருஷகாரஸ்ய வைபவம் புருஷகார வைபவம் என்று விரியும்.

பூர்ணத்வாத் புருஷ: என்கிற நிருக்தியினாலே தயை, வாத்ஸல்யம் முதலான குணங்களால் பூர்ணன் புருஷ ஸப்தத்தால் சொல்லப் படுகிறான். ஆதலின் சேதனன் செய்த பாவங்களைப் பார்த்து ஸ்வதந்த்ரனான ஸர்வேச்வரன் ஒருக்கால் "க்ஷிபாமி அஜஸ்ரமசுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு" (அசுபமான காமங்களைச் செய்தவர்களை பாபயோநிகளில் தள்ளிவிடுவேன்) என்று சீற்றமுடையனாயிருந்தானேயாகில் அச்சீற்றத்தையும் அதற்கடியான ஸ்வாதந்த்ர்யத்தையும் தலை சாய்ப்பண்ணி தயை முதலான குணங்களை தலையெடுக்கும்படி செய்கை புருஷகாரமாகும்.

அன்றிக்கே புரு பாலநபூரணயோ: என்கிற தாதுவினாலுண்டான புருஷ ஸப்தமானது, ரக்ஷிக்கிறவனைச் சொல்லுகிறது. இதனாலே மஹாபராதத்தைப் பண்ணின சேதனனை ஸிக்ஷித்தல்லது நிற்க ஒண்ணாதபடி கோபித்துத் தலையறுக்கத் தயாராயிருக்குமவனை "க்ருபயா பர்யபாலயத்" என்கிறபடி ரக்ஷகனாகப் பண்ணுகை புருஷகாரமென்று சொல்லப்படும்—இவ்விரண்டு வ்யுத்பத்திகளாலும் ஈஸ்வரன் விஷயத்தில் பண்ணும் புருஷகாரம் சொல்லிற்றாயிற்று.

புர அக்ரகமநே என்கிற தாதுவில் வ்யுத்பந்நமான புருஷ ஸப்தமானது அபிமுகமாகச் செல்பவனைச் சொல்லாநிற்கும். இதனால் ஏற்படும் அர்த்தம் யாதெனில்? பரமகாருணிகனான ஸர்வேச்வரன் நிர்ஹேதுகமான தன்னுடைய கருணையினாலே சேதனனைப் பெற நினைக்கும்போது அநாதிகாலம் பண்ணிப்போந்த பாபவாஸனையால் அவனுடன் "த்வம் மே அஹம் மே" (நீ எனக்கு சேஷபூதன் என்றால் நான் எனக்கு சேஷபூதன் என்று எதிரம்புகோத்து) அலமந்து நெடுந்தடக்கைக்கும் எட்டாதபடி கைகழிய ஓடி விழுகனாய்த் திரியும்

acharya.org

சேதனனை உபதேஶாதிகளால அவனுககு அபிமுகனுமபடி பணணுகை இது சேதனன விஷயததில பணணும புருஷகாரமாகும

இபபுருஷகாரததைச செயவதறகு 'கேவலதேவோ ஹரி பிதா'' எனறும 'பூதாநாம அவயய பிதா' எனறும சொலலபபடுகிற ஜகதபிதாவான ஸாவேஶ்வரன விஷயததிலும, பரஜைகளான சேதனாகள விஷயததிலும 'தவமமாதா ஸாவலோகாநாம'' எனகிறபடி ஸமஸதமான சேதனாகளுககும தாயாய 'விஷணுபதநீ'' எனகிறபடி அவனுககுப பததியாயுமிருககிற பெரியபிராடடியாரே உரியவள

இவள சேதனாகளுககு "தவமமாதா எனகிறபடி நிருபாதிக தாயாய சேதநாகளுடைய கலேஶம பொறுககிலலாதவளாய ஸதநநதயபரஜைககுததான மருநதுணணும மாதாவைபபோலேயும "கூபததிலவிழும குழவியுடன குதிதது அவவாபததைததீககும அனனைபோலேயும" இவாகளுககாகததான நாடடில பிறநது படாதன படுமபடியான பரம தயையை யுடையவளாகையாலும சேதனாகளுடைய 'நினறவா நிலலா நெஞசில' ஜநமாநதர ஸஹஸரங களில இவன புததிபூாவகமாகச செயயாததாயும அவன திருவுளளததால நினைககபபடடதுமான யாதருசசிக ஸுகருதவிஶேஷ மடியாக பகவதவிஷயததில அதவேஷ ஆபிமுகயஙகளுணடாய ஆஶரயிகக இசசையுணடானால அசசமயம இவள ஸாநநிதயம உணடோ? இலலையோ? எனறு ஶஙகிககவொணணாதபடி "அகல கிலலேன இறையுமெனறு" ஒருமாநொடியும பிரியாமல நிதய வாஸம பணணுமவளாயும "பிததா பனிமலாமேல பாவைககு" எனகிறபடி ஸவாணமயமான மருகததை "ஆநயைநம மஹாபாஹோ கரீடாாததம நோ பவிஷயதி" (நீணடகைகளையுடையாய இம மானைககொணாநது தரககடவாய நமககு லீலையின பொருடடு ஆகும) எனறு அவளகேடக இளையபெருமாள இது மாயாமருகம எனறு தெரிவிததாலும தானும இது மாயாமருகமெனறு அறியும படியான அறிவுடையவனாயிருககச செயதேயும, அவளுடைய "ஏவம பருவாணம காகுதஸதம பரதிவாய ஶுசிஸமிதா" எனகிற மநதஹாஸததில மயஙகி அவளசொனனபடி செயததலலது நிறக வொணணாதபடி இனிய விஷயமாயிருககையாலும அவளசெயயும புருஷகாரமே கணணழிவறற புருஷகாரமாகும

acharya.org

இப்புருஷகாரத்திற்கு க்ருபை பாரதந்த்ரியம் அநந்யார்ஹத்வம் ஆகிய மூன்று குணங்கள் அத்யாவச்யங்களாக ஆகும்.

க்ருபையாவது பரதுக்கத்தை ஸஹியாமல் மிகவும் வருந்துதல் அதாவது நிருபாதிகமாத்ருத்வ ப்ரயுக்தமான ஸம்பந்தத்தால் சேதநர்கள் படும் துக்கம் தன்னுடைய துக்கமாய் அத்துக்கம் இனிப்பிதுக்கவருகில்லை என்னும்படி ஸஹிக்கமாட்டாத தன்மையுடையளாயிருக்கை

பாரதந்த்ரியமாவது பர (இதர) தந்த்ர (ப்ரதாந்) ஸ்ய ஸ பரதந்த்ர (யாவனொருவனுக்கு ப்ரதானமானவன் அந்யனோ அவன் பரதந்த்ரன்) தஸ்ய (அவனுடைய) பாவ (தன்மை) பாரதந்த்ரியம் அதாவது தன்னபேக்ஷிதத்தை அவனைக்கொண்டே செய்துகொள்ள வேண்டும்படியாயுள்ள ஸ்வரூபத்தையுடையளாயிருக்கை.

அநந்யார்ஹத்வமாவது அந்யஸ்ய (வேறொருவனுக்கு) அர்ஹ (போக்யனாயிருப்பவன்) அந்யார்ஹ (மற்றொருவற்கு யோக்யமானவன்) அந்யார்ஹோ நபவதி இதி (மற்றொருவற்கு யோக்யனாகாதவள்) அநந்யார்ஹா (அநந்யார்ஹை), அநந்யார்ஹஸ்ய பாவ (அநந்யார்ஹையுடைய தன்மை) அநந்யார்ஹத்வம் — அதாவது அவனையல்லது மற்றொருவர்க்கு யோக்யமல்லாத தன்மையுடையளாயிருத்தல்

க்ருபை சேதநர்களுடைய துக்கம் கண்டு பொறுக்கமாட்டாத தன்மையளாய ஈச்வரனோடு சேதநர்களைச் சேர்ப்பிக்கைக்கு உரியது

க்ருபை யுண்டானாலும் தான் ஸ்வதந்த்ரமாய் சேதநரக்ஷணத்தில் ப்ரவ்ருத்தியாமைக்கும் அவனை ப்ரவர்த்திப்பிக்கைக்கும் பாரதந்த்ரியம் வேணும்

இவள் நம்மையல்லது மற்றொருவர்க்கு யோக்யையல்லாதவளாகையால் இவள் அபேக்ஷித்ததை தலைக்கட்டுவது நமக்கன்றோ கடமை என்று இவளபேக்ஷிதத்தைச் செய்கைக்கு அநந்யார்ஹத்வம் ஆவச்யகம்

க்ருபை பரமகாருணிகனான ஸர்வேச்வரனிடத்திலுமுள்ளதேயாயினும் அவனுடைய க்ருபைக்கும் இவளுடைய க்ருபைக்கும் நெடுவாசியுண்டு

acharya.org

ஈஶ்வரன் நிரங்குஶமான ஸ்வாதந்த்ரியமுடையனுப் சேதநர்களுடைய புண்யபாபங்களை நிறுத்து நிக்ரஹாநுக்ரஹங்களைப் பண்ணக்கடவனாயிருக்கையால் அவனுடைய க்ருபை ஸ்வாதந்த்ரியத்தால் அமுக்குண்டு ஓரோர் சமயங்களில் தலைகாட்டுமதாயிருக்கும். இவள் "காருண்யரூபயா" என்கிறபடி காருண்யமே வடிவெடுத்து வந்தாற்போலிருக்கையாலும் இவள் க்ருபையைத் தடுக்க வேறொன்றுமில்லாமையாலும் நிருபாதிகமாத்ருத்வப்ரயுக்தமாகையாலும் இவளுடைய க்ருபை வாசாமகோசரமாயிருக்கும்.

இவ்விடத்தில் "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேதத் அகர்ஹிதம்" (மித்ரபாவத்தோடுவந்தடைந்தவனை வருந்தியும்விடச் சக்தனல்லேன். அவனிடத்தில் என்னுடைய புத்தியால் தோஷம் கிடையாது. உங்கள் புத்தியால் தோஷமுண்டாயிருந்தாலும் வாத்ஸல்யாதி குணங்களையுடைய எனக்கு அது போக்யமாயே இருக்கும்) என்றும் "என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார்" என்றும் சொல்லும் ஸ்வபாவனான ஸர்வேஶ்வரனுடைய நாராயணத்வப்ரயுக்தமான ஸ்வாபாவிக ஸம்பந்த ஜ்ஞாநமுடைய சேதநனுக்கு ஸர்வேஶ்வரனை ஆஶ்ரயிக்கும்போது புருஷகாரம் வேண்டுவானேன்? என்று சங்கிக்கக்கூடும். அநாதிகாலம் அபராதத்தைப் பண்ணிப்போந்த இச்சேதநன் ஸர்வேஶ்வரனை ஆஶ்ரயிக்கும்போது அவனுடைய ஸ்வாமித்வ ஸௌலப்ய ஸௌஶீல்ய வாத்ஸல்யாதிகுணங்களை ஶாஸ்த்ரமுகத்தாலும் ஆசார்யோபதேசாதிகளாலும் அறிந்திருக்கச்செய்தேயும் அவனுடைய நிரங்குஶ ஸ்வாதந்த்ரியத்திற்கீடான புஂஸ்த்வப்ரயுக்தமான பித்ருத்வ ஸம்பந்தத்தால், பரிபூர்ணமாக பாபத்தைச்செய்த சேதநன் விஷயத்தில் ஒருக்கால் நீரிலே நெருப்புக்கிளருமாப்போலே குளிர்ந்த திருவுள்ளத்தில் சீற்றமுண்டாய் ஹிதரூபமான தண்டனையைச் செய்யவும் கூடும் என்று அஞ்சி அவ்வபராதங்களை மறப்பித்து ஸ்வாதந்த்ரியம் தலைசாய்ந்து வாத்ஸல்யாதிகுணங்கள் தலையெடுக்கும்படி செய்து அவனை வஶீகரிக்கைக்கு புருஷகாரம் அவஶ்யாபேக்ஷிதம்.

இவ்வாறு புருஷகாரம் அபேக்ஷிதமானாலும் "பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய ப்ரஸீத மத்வ்ருத்தமசிந்தயித்வா" (என்னுடைய வருத்தத்தைச் சிந்திக்காமல் என்னுடைய பிதாமஹரான

acharya.org

நாதமுனிகளைப் பார்த்து அநுக்ரஹிக்க வேண்டும்)" என்று ஆள வந்தாரும் "ராமாநுஜார்ய சரணௌ அபி குலப்ரதீப: த்வாஸீத் ஸ யாமுநமுநே: ஸ ச நாதவம்ஸ்ய — வம்ஸ்ய: பராங்குஸமுநே: ஸ ச ஸோऽபி தேவ்யா தாஸஸ் தவேதி வரதாஸ்மி தவேக்ஷணீய:" (அடியேன் எம்பெருமானாருடைய திருவடியை ஆஸ்ரயித்தவன் பரம்பரகுலவிளக்கான எம்பெருமானாரும் யமுனைத்துறைவரான ஸ்ரீ ஆளவந்தாருடைய திருவடி ஆகின்றார் ஸ்ரீ ஆளவந்தாரும் நாதமுனிகளின் வம்ஸத்தில் அவதரித்தவர் நாதமுனிகளும் பராங்குஸரான நம்மாழ்வாரின் திருவடியை ஆஸ்ரயித்தவர் ஆழ்வாரும் தேவரீருடைய திவ்யமஹிஷியான பெரியபிராட்டியாரின் திருவடியை ஆஸ்ரயித்தவர் தேவரீர் ஆஸ்ரயித்தவர் அபேக்ஷிதங்களை அளிப்பவர் ஆதலின் தேவரீருக்கு தாஸனென்று கடாக்ஷிக்கத் தகுந்தவன்) என்று ஆழ்வானும் அருளிச்செய்திருக்கின்றமையாலும் "அந்தோऽநந்தக்ராஹ்யவஸகோ யாதி ரங்கேஸ யத்வத் - பங்குர் நௌகா குஹர நிஹிதோ நீயதே நாவிகேந: புங்க்தே போகாந் அவிதிதந்ருப ஸேவகஸ்யார்ப்பகாதி - த்வத் ஸம்ப்ராப்தௌ ப்ரபவதி ததா தேஸிகோ மே தயாளு: ॥ (கண்ணில்லாதவன் கண்ணுடையான் கையைப்பற்றிக்கொண்டு எவ்வாறு செல்கிறானோ? ஓடக்காரனாலே முடவன் ஓடத்தில் வைக்கப்பட்டவனாய் எவ்வாறு அடைவிக்கப்படுகிறானோ? அரசனை அறியாத ராஜபுருஷனுடைய அர்ப்பகாதிகள் போகங்களை எவ்வாறு அநுபவிக்கின்றனவோ? அவ்வாறே உன்னை அடைவிப்பதில் பரம தயாளுவான என்னுடைய ஆசார்யன் சமர்த்தனாகிறான்) என்று நம் நிகமாந்த மஹாதேசிகனும் அருளிச்செய்திருக்கின்றமையாலும், பரமதயாளுவான ஆசார்யன் இச்சேதநனை முதலடியிலேயே மதீயன் என்று அபிமாநித்து பரிபூர்ணமான ஜ்ஞாநபக்த்யாதி குணங்களையுடையனாகையால் பகவானுக்கு அத்யந்தம் அபிமத பூதனாய் "ஜ்ஞாநீத்வாத்மைவமே மதம்" (ஜ்ஞாநீ எனக்கு ஆத்மா) என்று அவன் வாயாலே சொல்லும்படியான பெருமை வாய்ந்தவனாகையாலும் ஆசார்யனுக்கு சேதநேஸ்வரர்களுடைய ஸம்பந்த முண்டாகையாலும் ஆசார்யனுக்கே புருஷகார யோக்யத்வம் புஷ்கலமாகையால் வரணீயனான ஸித்தோபாயத்திற்கு விஸேஷணமான ஸ்ரீ ஸப்தத்தால் சொல்லப்பட்ட பெரியபிராட்டியாருக்கு ஸப்தஸித்தமான உபாயவிஸேஷணத்வ மொழிய புருஷ

acharya.org

காரத்வம் கொள்கிற வித்தால் ஒரு ப்ரயோஜநமுமில்லையே என்று ஶங்கிக்கக்கூடும்.

இவ்விடத்தில் ஶப்தஸ்வபாவத்தால் உபாயவிஶேஷணத்வமுண்டாயிருக்கச்செய்தேயும் விடவொண்ணாத ஸம்பந்தமான மாத்ருத்வப்ரயுக்த வாத்ஸல்யாதி குணாதிஶப்தத்தாலும் தன்னுடைய பூர்வாபராத நிமித்தமாய் ஈஶ்வரனுடைய திருவுள்ளத்தில் சீற்றமுண்டானால் அச்சீற்றத்தை ஆற்றுகைக்குறுப்பாய் அவனுக்கு அபிமதமான ஸ்வரூப ரூப குண விபவாதி வைலக்ஷண்யத்தாலுண்டான வால்லப்யாதிஶப்தத்தாலும் பெரிய பிராட்டியாருடைய புருஷகாரமே கண்ணழிவற்ற புருஷகாரமாகும். மேலும் "ஆகிஞ்சந்யைகஶரணா கேசித்பாக்யாதிகா புந: । மத்பதாம்போருஹத்வந்த்வம் ப்ரபத்ய ப்ரீதமாநஸா: ॥ லக்ஷ்மீம் புருஷகாரேண வ்ருதவந்தோ வராநநே (தன்னிடம் கைமுதலொன்றுமில்லாததொன்றையே புகலாகவுடைய சில பாக்கியவான்கள் என்னுடைய சரணஸரோஜங்களிரண்டையும், லக்ஷ்மியைப் புருஷகாரமாகக்கொண்டு உபாயமாகப்பற்றி க்ருதார்த்தர்களாகிறார்கள்) என்றும் மத்ப்ராப்திம் ப்ரதி ஜந்தூநாம் ஸம்ஸாரே பததாமத: । லக்ஷ்மீ புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி: ॥ மமாபி ச மதம் ஹ்யேதந் நாந்யதா லக்ஷணம் பவேத் । அஹம் மத்ப்ராப்த்யுபாயோவை ஸாக்ஷால் லக்ஷ்மீபதி: ஸ்வயம் ॥ லக்ஷ்மீ புருஷகாரேண வல்லபா ப்ராப்தியோகிநீ । ஏதஸ்யாஶ்ச விஶேஷோயம் நிகமாந்தேஷு ஶப்த்யதே (ஸம்ஸாரத்தில் அழுந்தாநின்ற ஆத்மாக்கள் என்னைப் பெறுவதற்குப் பெரியபிராட்டியார் புருஷகாரமாக பரமருஷிகளால் சொல்லப்பட்டிருக்கிறாள் எனக்கு அபிமதமும் அதுவே வேறுவிதமானவழி கிடையாது என்னையடைவதற்கு உபாயம் லக்ஷ்மீபதியான நானே எனக்கு வல்லபையான பெரியபிராட்டியாரே அடைவிப்பதற்கு யோக்யமானவள் இவ்வர்த்தம் வேதாந்தங்களால் கோஷிக்கப்படுகிறது) என்று ஶாஸ்த்ரங்களிலும் ப்ரபத்த்யதிகாரியான சேதனன் பெரியபிராட்டியாரையே புருஷகாரமாகப்பற்றக்கடவன் என்று சொல்லியிருக்கின்றமையாலும் இவளையே புருஷகாரமாகப்பற்ற வடுக்கும்.

ஈஶ்வரன் புருஷோத்தமப்ரயுக்தமான நிரங்குஶ ஸ்வாதந்த்ரியத்தாலுண்டான கடினஸ்வபாவத்தால் நிருபாதிக ஸம்பந்த

acharya.org

முண்டாயிருக்கச்செய்தேயும் பிதாவைப்போலே நம்முடைய ஆஜ்ஞா ரூபமான ஶாஸ்த்ரங்களை அதிக்ரமித்து அபராதங்களைச்செய்யுங்கின்ற சேதநர்களைக்குறித்து ஒருக்கால் திருவுள்ளம் கலங்கி "க்ஷமாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: । மாயயாபஹ்ருத ஜ்ஞாநா ஆஸுரம் பாவமாஶ்ரிதா: ॥ தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம் ஸாரேஷு நராதமாந் । க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு ॥ ஆஸுரீம் யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி । மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம் கதிம் ॥" என்று பாபயோநிகளில் தள்ளி நரகாதிகளை அநுபவிக்கும்படி செய்வேன் என்று தன்வாயாலே சொல்லுகையாலே மிகவும் க்ரூரரான சேதநர்களைத் தானே அங்கீகரித்துத் தன்னுடைய வாத்ஸல்யாதிஶயத்தாலே ஸர்வேஶ்வரனை வஶீகரித்து அபராதங்களை க்ஷமிப்பித்து அங்கீகரிக்கும்படி பண்ணுகிறதும்.

இவ்வளவாக புருஷகாரஸ்பதார்த்தமும் அப்புருஷகாரத்தைச் செய்வதற்கு பெரியபிராட்டியாரே யோக்யமானவள் என்பதையும் அவள் சேதநன்விஷயத்திலும் பரமசேதநன் விஷயத்திலும் பண்ணும் புருஷகாரத்தின் படியையும் ஜீவேஶ்வரர்களிடத்தில் இவளுக்குண்டான ஸம்பந்தத்தையும் ஸர்வேஶ்வரன் இவள் விஷயத்தில் பண்ணும் ப்ரேமாதிஶயத்தையும் புருஷகாரத்திற்கு ஆவஶ்யகமான குணங்களையும் அக்குணங்களின் உபயோகத்தையும் ஸர்வேஶ்வரனுடைய க்ருபைக்கும் இவளுடைய க்ருபைக்குமுள்ள வாசியையும் இவளைப்புருஷகாரமாகப்பற்றாவிடில் நிரங்குஶ ஸ்வதந்த்ரனான ஸர்வேஶ்வரன் ரக்ஷிக்காமலிருப்பதுடன் ஶிக்ஷிக்கவும் கூடும் என்பதையும் ஆசார்யன் பண்ணும் புருஷகாரத்தைக் காட்டிலும் அவனுக்குப் பத்நியாய் வாத்ஸல்யமுடையவளாய் அவனோடு நித்ய வாஸம் பண்ணுமவளாயிருக்கும் இவள் புருஷகாரமே கண்ணழிவற்ற புருஷகாரமென்பதையும் சொல்லித்தலைக்கட்டியிருக்கிறது.

இவ்வர்த்தங்களையெல்லாம் நாம் ஶாஸ்த்ர முகத்தாலே அறியப் ப்ராப்போமாகை ஶாஸ்த்ரங்களில் வைத்துக்கொண்டு "வேதாச்சாஸ்த்ரம் பரம் நாஸ்தி" என்று சொல்லப்படுகிற அபௌருஷேயமான வேதமும் "அநந்தா வை வேதா:" என்கிறபடி

அநந்தங்களாய் அதிலும் அர்த்தம் அறியப்புகுமிடத்து அநேக ஶாஸ்த்ராபேக்ஷையுடையதாய் அல்ப அறிவுடையார்க்கு அறிய வரிதாய் மறையாயிருக்கும். ஸ்வயோக மஹிமையால் அவ் வேதார்த்தங்களை ஸாக்ஷாத்கரித்த பரம ருஷிகளால் அவ்வேதார்த்தப் ப்ரதிபாதகங்களாக அநுக்ரஹிக்கப்பட்ட ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களும் அவ்வோ அதிகாரிகளுக்கு அநுகுணமாகப் பல புருஷார்த்தங்களைப் பலவகைகளாகப் பேசுமவைகளாதலால் ஸாரா ஸார விவேகிகளுக்கல்லது அறிய வரிதாயிருக்கும்.

மேற்சொன்னவைகள் போலன்றிக்கே ஸம்ஸாரி சேதநர்களுடைய உஜ்ஜீவநார்த்தமாய் ஸர்வேச்வரன் தானே ஆசார்யனாய் நின்று ஸ்வஶிஷ்யனான நரனை வ்யாஜீகரித்து உபதேசித்த ஸகல வேதஸார மான திருமந்த்ரமும் அஷ்டாக்ஷரமாய் 'அகாரத்திலே லக்ஷ்மீ ஸம் பந்தம் அநுஸந்தேயம்' என்றும், 'அவன் மார்பை விட்டுப்பிரியில் இவ்வக்ஷரம் விட்டுப் பிரிவது' என்றும் சில யுக்திகளைக் கொண்டு அறிய வேண்டும்படியா யிருக்கும். ஸமஸ்த ஶாஸ்த்ரதாத்பர்யபூத மான த்வயம் அவ்வாறின்றி அகாரத்தில் ஆர்த்தமாகக் கிடைத்த ஸ்ரீஸம்பந்தத்தை சாப்தமாகவும் நமச்சப்தத்தாலும் நாராயணபதத் தாலும் சொல்லப்பட்ட உபாயோபேயாம்சங்களை அழகாக அறிவிக்கு மதாய் அதிலும் அவ்வர்த்தநிஷ்டர்களுடைய அநுஷ்டாநரூபமாயிருக் கும் தொன்றுகையால், அநந்தங்களாய் மறைகளாயிருக்கும் வேதங் களைக் காட்டிலும் பல புருஷார்த்தங்களையும் பலவாறாகக் கலசிப் பேசும்படியான இதிஹாஸாதிகளைக் காட்டிலும் அதி சுருக்கமாய் அர்த்தங்களைக்கொண்டு ஊஹித்தறியவேண்டிய திருமந்த்ரத்தைக் காட்டிலும் இதராபேக்ஷயின்றியில் சேதநோஜ்ஜீவனத்திற் குறுப் பான ஸகலார்த்தங்களையும் சாப்தமாக நன்கறிவிக்கும். மேலும் ஸகல ஸாஸ்த்ரங்களும் சேதநனுடைய விஶிஷ்ட வேஷத்திலே நோக் காய் ஸதாநாநுஷ்டாநம் பண்ணயோக்கியமான தேகத்தாலேயே புருஷார்த்தஸித்தி என்னாநிற்கும். திருமந்த்ரம் சேதநனுடைய நிஷ்க்ருஷ்ட வேஷத்திலே நோக்காய் சேதநன்ஸ்வரக்ஷணத்தில் நின் றும் கைவாங்கினாலொழிய அகாரவாச்யனான ஸர்வேச்வரனுடைய ரக்ஷகத்வம் ஜீவியாதாகையால் அவனுடைய ரக்ஷண ப்ரவ்ருத்திக்கு விரோதியான ஸ்வப்ரவ்ருத்தியை விட்டிருக்கும் ஆத்மாவுலே பேறென்று சொல்லாநிற்கும்.

(தொடரும்)

acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீ பரகாலாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
யஸ்ஸ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஸீஸமத் ||

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
யஸ்ஸ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஸீஸமத் ||

வேதவேதாந்த வேதாங்க ஸத்தர்க்கதயாத்தவர்ஷிணீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

வேத வேதாந்த வேதாங்க ஸத்தர்க்கதயாத்தவர்ஷிணீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த
ப்ரகாஶக பத்ரிகை

பத்ராதிபர்

வடகரை இராமாநுஜாசாரியார்

தொகுதி 1.] [பகுதி 4.

பத்ராதிபரின் விஜ்ஞாபனம்.

மாசிப் புனர்பூசம்

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தியின் நான்காவது பகுதி மாசிப் புனர்பூசத்தில் அவதரிக்க நேர்ந்ததுபற்றி அம்மாசிப் புனர்பூசத்தின் பெருமை இங்கு யதோசிதம் தெரிவிக்கப்படுகிறது. ‘மாசிப் புனர்பூசத்திற்குப் பெருமை என்’? எனில், ஆழ்வார்களில் ராஜவம்ஸ்யர் நம் குலசேகரன் அவதரிக்கும் பாக்யம் பெற்றதே. இவ்வாறு இப்புனர்பூசத்தில் அவதரித்த ஆழ்வார் ஸ்ம்ருதி விஷயமானவரே. அவ்வாழ்வாரின் பெருமையைப் பேசாமலிருக்க முடியுமோ? இவ்வாழ்வார் கவி

acharya.org

யுக ... இருபத்தேழு சென்ற பராபவ வருஷம் மாசிமாதத்தில் புனர்பூச நக்ஷத்திரத்தில் சுக்ல பக்ஷத்வாதசியுடன் கூடிய வியாழக் கிழமையில் கௌஸ்துபாம்ஸராய் சேரன் குலத்திற்கு ஸேகரராய் நம்மை உஜ்ஜீவிப்பதற்கு திருவவதரித்தருளினர். இவ்வர்த் தத்தை ... மாலையில்:

கல்யப்தே ஸாக ஸங்க்யயா வ்யபகதே மாஸேச மாகாபிதே
வர்ஷேராபி பராபவே ஸாரகுரோர்வாரே சபக்ஷே ஸாசள
த்வாதச்யாக்யதிதௌ புநர்வஸுதிநே ப்ரீத்யாக்யயோகான்விதே
த்ராதும் ந: குலசேகர: க்ஷிதிபதி: ஸ்ரீ கௌஸ்துபாத்மாऽபவத் ||

என்கிற ஸ்லோகம் தெரிவியாநிற்கும். இவ்வாழ்வார் சக்ரவர்த் தித் திருமகனான பெருமாளைப் போலவே க்ஷத்ரிய வம்சத் திலே அவதரித்துப் பெரியது சிறியதை நலியாதபடி செங்கோல் செலுத்தி பரமோதாரரா யெழுந்தருளியிருந்தபடியால் குலசேகரப் பெருமாள் என்றும் போற்றப்படுவர். இவ்வாழ்வார் எம்பெருமா னால் மயர்வற மதிநல மருளப்பெற்று எம்பெருமானுடைய ஸ்வரூப குண விபவாதிகளை ஸாக்ஷாத்கரித்து வேதவேத்யனை ஸர்வேஸ் வரன் சக்ரவர்த்திக்குப் புத்ரனாய் அவதரித்தாற்போல் வேதமும் வால்மீகி முகத்தில் நின்றும் ராமாயணமாக அவதரித்திருக்கின்றமை யாலும் "கற்பார்இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ" என்றும், "மனத்துக்கினியான்" என்றும் சொல்லப்படுகிற ஸ்ரீ ராம வ்ருத்தாந் தத்தைக் கேட்டுப் போராநிற்க - "சதுர்தஸ ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீம கர்மணாம் | ஏகஸ்ச ராமோ தர்மாத்மா கதம் யுத்தம் பவிஷ்யதி" என்கிற ஸ்லோகத்திற்கு இளைய பெருமாளைப் பிராட்டிக்குத் திரு மேனிக் காவலாக வைத்துவிட்டு தர்மாத்மாவான பெருமாள் தான் ஒருவராய் அதிபயங்கரமான க்ருத்யங்களைச் செய்யும் ராக்ஷஸர்களாய் அதிலும் பதினாலாயிரமான கரதூஷணாதிகளோடு யுத்தத் திற்கு எழுந்தருளினர் அங்கு எவ்வாறு முடியுமோ? என்று ருஷி வருந்துகிறான் என்று அர்த்தம் சொல்லக்கேட்டவாறே பெருமாளிட முள்ள ப்ரேமாதிஸயத்தாலே கலங்கி, வாளும் வில்லுங்கொண்டு பின்செல்வாரில்லாத குறை தீர்க்கத் தான் சதுரங்கபலத்தோடு புறப் பட்டு எழுந்தருளா நிற்க, இவருடைய கலக்கத்தைத் தவிர்ப்பிக்க மந்த்ரிகள் சில வைஷ்ணவோத்தமர்களை எதிரே வரவிடுத்து அவர் களின் வாயிலாய், "தம் த்ருஷ்ட்வா" என்கிற ஸ்லோகத்தை வ்யாக்யா னிக்கும்படிசெய்ய அவர்களும் "பதினாலாயிரம் ராக்ஷஸர்களையும் தான்

acharya.org

ஒருவனுக்கே ஸிரவித்த ஆசாரம் எழுந்தருளா நின்ற பெருமாளின் விரத்திறுக்குந்து ஜனக்குல ஸுந்தரியான பிராட்டி பர்த்தாவான பெருமாளை ஆலிங்கனம் பண்ணி ஆச்வஸிப்பித்தாள்" என்று சொல்லக்கேட்டு, ஆழ்வாரும் அதிலீடுபட்டாராய் மீண்டு எழுந்தருளினார். அப்பால் மந்திரிகள் இவர்க்கு இவ்வைஷ்ணவ ஸஹவாஸத்தாலன்றோ இவ்வாறு கலங்கும்படி ஏற்படுகிறது என்று கருதி இவர்கள் ஸஹவாஸத்தை ஒழிக்க உபாயம் தேடித் திருவாராதனப் பெருமாளின் ஆரத்தை எடுத்து மறைத்து வைத்து வைஷ்ணவர்கள் அபஹரித்தார்கள் என்று சொல்ல, ராஜன் பரமபுருஷனிடத்தில் பக்தி பண்ணும் பரமபாகவதோத்தமர்கள் பர (அந்யர்களின்) வஸ்துவை ஆசைப்படார்கள் என்று ப்ரதிஜ்ஞை பண்ணிப் பாம்புக்குடத்திலே கையிடுவேன் என்று சொல்ல, மந்திரிகளும் இவருடைய அத்யவஸாயத்தைப் புகழ்ந்து தாங்கள் செய்த அக்ருத்யத்தை விண்ணப்பம் செய்து ஆரத்தை ஆழ்வாரிடம் ஸமர்ப்பித்தார்கள். அப்பால் ஆழ்வாரும் இத்தீயர்களுடன் இவ்வரசாளும் பெருமையை வெறுத்து நல்லார்கள் வாழும் நளிரரங்கமாகிற திருவரங்கம் திருப்பதி சென்று திருக்காவேரி திரைக்கையால் அடிவருடத் திருவனந்தாழ்வான் மேலே திருப்பள்ளிகொண்ட திருமேனியழகைக் கண்ணாரக்கண்டு வாயாரப் புகழ்ந்து அநுபவித்து அவ்வநுபவ பரீவாஹ ரூபமாகப் பெருமாள் திருமொழி என்கிற திவ்யப்ரபந்தத்தை அருளிச்செய்து இவ்வுலகை வாழ்வித்தருளினார். இவ்வாறு இவ்வாழ்வாரின் பெருமையை நாம் அநுபவிக்கும்படி செய்த இந்த மாசிப்புனர்பூசத்தின்று வைஜயந்தியின் நான்காவது பகுதி வெளிவந்ததும் ஒரு ஸௌபாக்யமே.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம்

கீழ் ஸஞ்சிகையில் ப்ரமாணங்களைப்பற்றி ஸங்க்ஷேபித்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அப்ரமாணங்களால் அறியக்கூடிய ப்ரமேயங்கள் இவைகள் என்பது நிரூபிக்கப்படுகிறது.

ப்ரமேயங்கள் என்றால் ப்ரமாணங்களால் அறியத் தகுந்தவைகள். அவைகள் ஸ்வஸ்வரூபம், பரஸ்வரூபம், புருஷார்த்தஸ்வரூபம், உபாயஸ்வரூபம், விரோதிஸ்வரூபம் என்று சொல்லப்படுகிற அர்த்த பஞ்சகங்கள்.

அவைகளில், ஸ்வஸ்வரூபமாவது ஆத்மஸ்வரூபம் எனப்படும். ஆத்மஸ்வரூபமாவது தேக இந்த்ரியமந: ப்ராண புத்திகளைக்காட்

acharya.org

டிலும் வேறுபட்டதாய் நித்யமாய் நிர்விகாரமாய் ஜ்ஞாநத்திற்கு ஆச்ரயமாய் ஜ்ஞாநமாய் அணுவாய் ஈச்வரனுக்கு சேஷமாய் பரதந்த்ரமாயிருக்கும்

தேஹாதிகளைக் காட்டில் ஆத்மா வேறுபட்டது என்று சொல்லுவது எப்படி? எனில், காணப்படுகிற தேஹம், என்னுடைய தேஹம் என்று சொல்லப்படுகின்றமையாலும் ஆத்மா நான் என்று தோற்றுகையாலும் இந்த தேஹமானது ஜாகரத்தசையில் (விழித்துக்கொண்டிருக்கும்பொழுது) நான் பருத்தவன் சிறுத்தவன் என்று ஆத்மாவாகத் தோற்றினாலும் ஸுஷுப்தி தசையில் (உறங்கும்பொழுது) அவ்வாறு தோற்றக் காணாமையாலும் ஆத்மா உறங்குவதற்குமுன் எல்லாவற்றையும் அறிந்திருந்து உறங்கும் பொழுது என்னுடம்பைக் கூட நான் அறிந்திலேன் என்று உறங்கி எழுந்தபொழுது சொல்லக் காண்கையாலும், ஸுஷுப்தி தசையோடு ஜாகரத்தசையோடு வாசியற எப்பொழுதும் தோற்றுகையாலும் ஆத்மா தேகத்தைக் காட்டிலும் வேறுபட்டவன் மேலும் இந்த தேஹம் செவி, வாய், கண், மூக்கு, உடல் முதலான அநேக அவயவங்களின் ஸங்கா (கா) தம் (சேர்க்கை) ஆகையாலும் அஹம் (நான்) என்கிற வ்யவஹாரார்ஹன் ஆத்மா ஒருவனுக்குத் தோற்றுகையாலும் தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்டவன் இன்னமும், “நான் முன்பு கண்ணும் செவியுமுள்ளவனாயிருந்தேன் இப்போது குருடனும் செவிடனுமானேன் முன்பு என் மனது நன்றாயிருந்தது ஆதலால் எதையும் நன்றாயறியுமவனுமிருந்தேன் இப்போது அது அவ்வளவு ஸரியாயில்லாமையால் நான் ஒன்றும் அறிந்துகொள்ள முடியாதவனாயிருக்கிறேன் முன்பு ஜ்ஞாநமுடையவனாயிருந்தேன் இப்போது ஜ்ஞாநமில்லாதவனாய் விட்டேன் என்று வ்யவஹரிக்கக் காண்கின்றமையாலும், ஆத்மா தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்டவன் இவ்வாறு ப்ரத்யக்ஷத்தாலும் அநுமானத்தாலும் ஆத்மா தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று தோற்றக் கடவதாயிருக்கும் மேலும் “பஞ்ச விம்சோயம் புருஷ:” “பஞ்ச விம்ச ஆத்மா பவதி” ய: பர: ப்ரக்ருதே: ப்ரோக்த: புருஷ: பஞ்சவிம்சக:। ஸ ஏவ ஸர்வ பூதாத்மா நர இத்யபிதீயதே ।। என்று ஆத்மா இருபத்தைந்தாவது தத்வமென்றும் அவனே புருஷன் என்று சொல்லப்படுகிறான், என்றும் சப்த ப்ரமாணங்களாகிற ச்ருதிஸ்ம்ருதிகளாலும் ஆத்மா தேஹாதிகளைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று சொல்லப்படுகிறது

acharya.org

நித்யமாவது ஸர்வகாலத்திலும் உண்டாயிருக்கை. இவ்விடத்தில் ஆத்மா நித்யனாகில் பிறந்தான், இறந்தான் என்று சொல்லுவானேன்? என்னில், தேஹ ஸம்பந்தத்தைப் பெற்றபொழுது பிறந்தான் என்றும் தேஹவியோகத்தை அடைந்தபொழுது இறந்தான் என்றும் வ்யவஹரிக்கின்றார்களே அல்லாமல் ஆத்மா பிறந்தான், இறந்தான் என்று அர்த்தமில்லை இவ்வர்த்தத்தை "ந ஜாயதே ம்ரியதே வா விபஸ்சித்" "ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஸநீஸௌ" "நித்யோ நித்யாநாம்" என்று ஸ்ருதியும், "ப்ரக்ருதிம் புருஷஞ் சைவ வித்த்யநாதீ உபாவபி" "ந ஜாயதே ம்ரியதே வா கதாசித்" என்று கீதையிலும் மற்றும் அநேக ஸ்தலங்களிலும் சொல்லப்படுகையால் ஆத்மா நித்யன் என்று சொல்லப்படுகிறான். நிர்விகாரன் என்பது அசித்துப்போல் விகாரப் படாமல் எப்போதும் ஒரு படிப்பட்டிருக்கை இவ்வர்த்தத்தை "அம்ருதாக்ஷரம் ஹர:" என்றும் "ஆத்மா ஶாந்தோக்ஷர:" என்றும் சொல்லப்படுகிற ஸ்ருதி வாக்யங்கள் அறிவியாநிற்கும்.

ஜ்ஞானத்திற்கு ஆஸ்ரயமாயிருக்கையாவது, விளக்கும், விளக்கின் வெளிச்சமும் தேஜஸ்ஸாயிருந்தாலும் விளக்கு வெளிச்சத்திற்கு ஆஸ்ரயமாயிருக்குமாப் போலே ஆத்மா ஜ்ஞானமாயிருக்கச் செய்தேயும் ஜ்ஞானத்திற்கு இருப்பிடமாயுமிருக்கும். இவ்விடத்தில் ஆத்மா, ஜ்ஞானத்திற்கு ஆஸ்ரயமாகில் ஸாஸ்த்ரங்களில் இவ்வாத்மாவை "விஜ்ஞாநமய:" என்றும், "விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே" என்றும், ஜ்ஞாநமென்றும் சொல்லுவானேன்? என்று சங்கிக்கக்கூடும். இவ்வாத்மாவிற்கு ஜ்ஞாநம், ப்ரதாந குணமாய் ஸ்வஸ்வரூபத்திற்கு நிரூபகதர்மமாயிருக்கையாலும் ஆத்மாவை ஜ்ஞாநம் என்றும் சொல்லக் குறையில்லை இவ்வர்த்தத்தை "தத்குண ஸாரத்வாத்து தத்வ்யபதேஶ:" என்கிற ஸூத்ரம் தெரிவியாநிற்கும்.

அணுவாயிருக்கையாவது ஹ்ருதயத்திலிருக்கையும், அதில் நின்றும் வெளியேறிச் செல்லுதலையும் மறுபடியும் வருகையையும் சொல்லுகையாலே அணுவாகக் கடவன் விபுவானால் இவ்வாறு செல்லக்கூடாதிறே இவ்வர்த்தத்தை "ஏஷோணுராத்மா சேதஸா வேதிதவ்ய:" முதலான ஸ்ருதிகள் அறிவியாநிற்கும்.

இவ்வாத்மா ஈஸ்வரனுக்கு சேஷமாயிருக்கும் கீழ்ச்சொன்ன ஸ்வரூபங்களைக் காட்டிலும் சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம் என்பது ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம். இந்த சேஷத்வ விவரணம் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்

acharya.org

ப்ரஹ்ம ஸூத்ரமும்—ராமாநுஜ ஸித்தாந்தமும்

[பெருமாள கோயில
ப்ரதிவாதி பயங்கரம ஸ்ரீ உ வே அணணஙகராசாரியார]

உபநிஷததுககளின ஒரு மிடறுன தாறபரியததை நிரணயம செயவதறகு பரவாததிததவா வயாஸ மஹாஷி இவா இயறறியது சாரீரக மீமாமஸை இதுவே பரஹமஸூதர மெனபபடும அதறகுப பல பாஷயஙகள அவதரிததிருநதாலும நம இராமாநுசமுனி அருளிச செயத ஸ்ரீ பாஷயமே ஸூதரகாரருடைய ஹருதயததை நனகு அநுஸரிததது எனபது பிராமாணிகாகளின கொளகை

அநத பரஹமஸூதரததில முதல அதயாயததில நானகாவது பாததில ஆறாவது அதிகரணம வாகயாநவயாதிகரண மெனபது இதன ப்ரமேயததை ஆராயநது பாாததால ஸ்ரீராமாநுஜ ஸிததாந தததின ஆாஜவம விளஙகும

பருஹதாரணயகமெனனும உபநிஷததில மைதரேயீ பராஹ மணம எனனும பகுதியில (6—5—6) “ ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி ஆத்மனஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி ” (நவா அரே பதயு காமாய பதி பரியோபவதி ஆதம னஸது காமாய பதி பரியோ பவதி) எனறு தொடஙகி, “ந வா அரே ஸர்வஸ்ய காமாய ஸர்வம் ப்ரியம் பவதி ஆத்மனஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: ” (நவா அரே ஸாவஸய காமாய ஸாவம பரியம பவதி ஆதமநஸது காமாய ஸாவம பரியம பவதி ஆதமாவா அரே தரஷடவய ஶரோதவயோ மநதவயோ நிதிதயாஸி தவய) எனறு ஓதபபடடிருககினறது மோக்ஷோபாயம எது? எனறு கேடகிற மைதரேயியை நோககி யாஜஞவலகயா ஆதமோபாஸநததை மோக்ஷோபாயமாக உபதேசிககிறாரகள இதில உபாஸய வஸதுவாகச சொலலபபடடிருககிற ஆதமா ஜீவாதமாவா? பரமாதமாவா? எனகிற ஸமசயததைப போககுவதறகாக இநத வாகயாநவயாதிகரணம பரவாததிததிருககினறது

இஙகே காடடியுளள மைதரேயீ பராஹமண வாககியததில உளள இநத மேல வாககியஙகளாலும பரமாதம விஷயமாகவே

acharya.org

அபேக்ஷிக்கக் கூடியவையாயிருப்பதால்-ஜீவாத்ம விஷயமாகச் சிறிதும் அபேக்ஷிக்கமாட்டாமையால் இங்குள்ள ஆத்மா என்கிற பதம் பரமாத்மாவைக் காட்டுமேயல்லது ஜீவாத்மாவைக் காட்டமாட்டாது என்பதாக ஸித்தாந்தம் செய்கிறது [வாக்யாந்வயாத்] வாக்யாந்வயாத் என்னும் ஸூத்ரம்.

இந்த அதிகரணத்தில் இதற்குமேல் மூன்று ஸூத்ரங்கள் இருக்கின்றன. அவை எதற்காக வந்தவையென்னில், மேற்குறித்த மைத்ரேயீ ப்ராஹ்மணத்தில் பரமாத்மோபாஸநமே விவக்ஷிதமாகில் ஜீவாத்மவாசியான ஆத்மா என்கிற சொல்லாலே பரமாத்மாவைச் சொல்லியிருப்பானேன்? என்கிற கேள்விக்கு விடையளிப்பதாக அந்த மூன்று ஸூத்ரங்கள் வந்தன. "ப்ரதிஜ்ஞாஸித்தேர்லிங்கமாச்மரத்ய:" (ப்ரதிஜ்ஞா ஸித்தேர் லிங்கம் ஆச்மரத்ய) "உத்க்ரமிஷ்யத ஏவம்பாவாதித்யௌடுலோமி:" (உத்க்ரமிஷ்யத ஏவம் பாவாதித்யௌடுலோமி) என்கிற இரண்டு ஸூத்ரங்களைக் கடந்த பிறகு உள்ள அவஸ்திதேரிதி காசக்ருத்ஸ்ந: (அவஸ்திதேரிதி காசக்ருத்ஸ்நன.) என்கிற மூன்றாவது ஸூத்ரத்தை இப்போது எடுத்துக் கொள்வோம். இதனால் என்ன சொல்லப்படுகின்றதென்றால், ஆத்மா என்கிற சப்தத்தினால் பரமாத்மாவைச் சொல்லுவது பொருந்தும், அது ஜீவாத்மவாசக சப்தமாகவேயிருந்தாலும் ஜீவாத்மாவினுள்ளே பரமாத்மா உயிராக இருக்கின்றாரென்பது "ய ஆத்மநி திஷ்டந் ஆத்மநோऽந்தரோ யமாத்மா ந வேத யஸ்யாத்மா சரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி ஸ த ஆத்மாऽந்தர்யாம்யம்ருத:" (ய ஆத்மனி திஷ்டந் ஆத்மனோ அந்தரோ யமாத்மா ந வேத யஸ்யாத்மா சரீரம் ய ஆத்மானமந்தரோ யமயதி ஸ த ஆத்மா அந்தர்யாம்யம்ருத) இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்களினாலே ஸித்தமாதலால், தனக்கு சரீரமான ஜீவாத்மாவில் ஆத்மாவாய்ப் பரமாத்மா இருப்பதனால் ஜீவசப்தத்தாலே ப்ரஹ்மத்தை ப்ரதிபாதனம் பண்ணினபடி என்று காசக்ருத்ஸ்நர் என்பவர் அபிப்ராயப்படுவதாக இந்த ஸூத்ரத்தினால் சொல்லப்படுகிறது.

சரீராத்மபாவத்தைக் கொண்டு அபேதச்ருதி நிர்வாஹம் செய்யத்தக்கது என்பதே இந்த ஸூத்ரத்தினால் தேறியதாகும். ஸ்ரீ பாஷ்யத்திலும் வேதாந்த ஸாரத்திலும் வேதாந்த தீபத்திலும் இந்த ஸூத்ரத்தை விவரிக்குமிடத்தில் எம்பெருமானார் இவ்வர்த்தமே ஸூத்ரகாரர்க்கு அபிமதம் என்பதை நிரூபித்தருளியிருக்கிறார்.

acharya.org

இந்த ஸூத்ரத்திற்குக் கீழ் இரண்டு ஸூத்ரங்களால் கூறப்பட்டுள்ள விஷயம் இந்த ஸூத்ரத்தின் அர்த்தத்தோடு இணங்க மாட்டாமையாலும் வ்யுத்பத்தி க்லிஷ்டமாகையாலும் இதற்குமேல் வேறொரு அபிப்ராயத்தைக் காட்டாமல் இவ்வளவோடு நிறுத்தி விட்டபடியாலும் இதுவே வ்யாஸர்க்கு அபிமதம் என்று அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஸூத்ரத்திற்கு பாஷ்யமிட்டாரின்ற ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளும் “काशकृत्स्नीयं मतं श्रुत्यनुसारीति गम्यते” (காஶக்ருத்ஸ்நீயம் மதம் ஶ்ருத்யநுஸாரீதி கம்யதே) என்று எழுதியுள்ளார். ஆனால் அவர் பரக்ருத ஸூத்ரத்தின் அர்த்தத்தை வேறு வகையாக உரைத்திருக்கின்றார். अवस्थितेः (அவஸ்திதே) என்று ஸூத்ரத்திலுள்ள பதத்திற்கு ‘இருப்பதனாலே’ என்று பொருள். எங்கே எது எவ்விதமாக இருப்பதனாலே? என்று கேள்வி பிறக்கும். ஜீவாத்மாவினிடத்தில் பரமாத்மா உயிராக இருப்பதனாலே என்று சொல்லவேண்டும். இங்ஙனமே நம்முடைய பாஷ்யகாரர் அருளிச் செய்தார்.

சங்கராசார்ய ஸ்வாமிகளோவென்னில், “अस्यैव परमात्मनोऽनेनापि विज्ञानात्मभावेनावस्थानादुपपन्नमिदमभेदेनोपक्रमणमिति काशकृत्स्न आचार्यो मन्यते” (அஸ்யைவ பரமாத்மந அநேநாபி விஜ்ஞாநாத்மபாவேந அவஸ்தாநாத் உபபந்நமிதம் அபேதேந உபக்ரமணமிதி காஶக்ருத்ஸ்ந ஆசார்யோ மந்யதே) என்று தமது பாஷ்யத்தில் எழுதியுள்ளார். ‘பரமாத்மாவே ஜீவாத்மாவாக இருப்பதனாலே’ என்பது இவருடைய அர்த்தமாகத் தேறுகிறது. ஸூத்ரகாரர் இவ்வர்த்தத்தை விவக்ஷித்திருக்கமாட்டாரென்பது अवस्थितेः (அவஸ்திதே) என்கிற பதத்தின் ஸ்வாரஸ்யத்தை உணர்ந்தவர்கட்கு எளிதாகத் தெரியும். [illegible] பற்றிப் பிறகு விரிவாகப் பேசுவோம். இரண்டாவது அத்யாயத்தில் மூன்றாவது பாதத்திலுள்ள “चराचरव्यपाश्रयस्तु स्यात् तद्व्यपदेशो भाक्तस्तद्भावभावित्वात्” (சராசரவ்யபாஶ்ரயஸ்து ஸ்யாத் தத்வ்யபதேஶோ பாக்தஸ்தத்பாவ பாவித்வாத்) என்கிற ஸூத்ரத்தாலும் शरीरवाचिशब्द (சரீரவாசிஶப்த)ங்களுக்கு ஶரீரிபர்யந்தத்வம் நிர்ணயிக்கப்படுவதால் இதனை உபஜீவித்தே अपृथ

விசிஷ்டம் (அபேதநிர்தேசம்) ஆகியவைகளும் செய்யப்படுவதாகக் கொள்வது மிகவும் பொருத்தமுள்ளது.

இவ்விஷயத்தை நமது நெஞ்சில் திடமாகத் தேக்கிக் கொள்ளு மாறு ஸ்ரீரங்கராஜஸ்தவ-உத்தரசதகத்தில் பட்டர் இரண்டு ச்லோ கங்களை அருளிச்செய்துள்ளார் "தேஹோ தேஹீதி காரணே விக்ருதய:" (தேஹோ தேஹீதி காரணே விக்ருதய) என்பதும் "ஸித்யுத்பத்தி ப்ரவ்ருத்தி" (ஸித்யுத்பத்தி ப்ரவ்ருத்தி) என் பதும் அவை. அந்த இரண்டு ச்லோகங்களின் பொருளை நன்கு உணரப்பெற்றால் ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸாரத்தை நாம் உணர்ந்தோ மாவோம். அடுத்த ஸஞ்சிகையில் அதனை விவரிப்போம்.

நம்முடைய ஸித்தாந்தத்தில் நாம் முக்கியமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம் ஸகல சேதநாசேதநங்களும் ஸர்வேச்வர னுக்கு சரீரம்; அவன் சரீரி என்பதேயாம். இதுவே சரீராத்மபாவம் என்னப்படும். இது ஸகல வேதாந்தப் பெட்டிகளுக்கும் ஒரு திறவு கோல்போன்றது. இதை வைத்துக்கொண்டு எந்த உபநிஷத் வாக்யத் தையும் திறந்து நாம் நிராயாஸ(மாக)மாக அநுபவிக்கலாம். இதற்கு ப்ரதாந ப்ரதி தந்த்ரம் என்று வ்யவஹாரம். நம்முடைய ஸித்தாந்தத் திற்கு அந்தரங்கமாகவுள்ள அர்த்தவிசேஷங்களுள் இந்த சரீராத்ம பாவமே முதன்மைபெற்றதென்றும், இதைச் செவ்வனே தெரிந்து கொண்டால் ஒரு ப்ரதிபக்ஷியும் நம் எதிரே நின்று ஒரு கோலாகலமும் செய்யமுடியாதென்றும் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய் கிறார்- "பத்ந்யம் பதிஸாவஹளேகஹிதம் விப்ராதிவிப்ராதய: வ்யத்யஸம் வ்யதிதஜ்ஞீபேதே கஷிசிவஷிதா: | தந்த்ரைகதந்த்ர ஜடிதப்ரதிபந்தம் விஷயம் தத்தந்மதஸ்தாபகா: ஹேவாகப்ரதமாநஹாஸ்தகதா கலலோலகோலாஹலா: ||" (பித்பேதம் பதிஸார்வபௌமகதிதம் விதபாதவியாதம். பாதபூஷம் பாதிதந்தா மந்த்ரயுகே கம்பித விப்ரமிதம்:—தந்த்ரைகதந்த்ர ஜடிதபு வைதி விஷயம் தத்தந்மதஸ்தாபகா ஹேவாக ப்ரதமாநஹஸ்தக கதா கலலோல கோலாஹல.—என்பது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் தேசிகனுடைய திவ்ய ஸூக்தி. எம்பெருமானாருளிச்செய்த சரீர சரீரிபாவமாகிற இந்த ப்ரதாநப்ரதி தந்த்ரமானது அவித்யையாகிற இருளைத் தொலைக்க வல்லது, இதனை நன்றாக ஒருவன் தெரிந்து கொள்வானாயின் அவனே மஹாபண்டிதன், அப்படிப்பட்ட ஒருவனை

acharya.org

இருந்தாலும் போதும்; எத்தனை வாதிகள் கூடி எவ்வளவு குதர்க்க கோலாஹலங்கள் செய்தாலும் அவற்றையெல்லாம் ஒரு நொடிப் பொழுதில் அவலீலையாக ஒழித்திட அவ்வொரு வ்யக்தியே போதும் என்று இதனால் பரம கம்பீரமாக அருளிச் செய்தாராயிற்று.

நவவித ஸம்பந்த விவரணம்

[பெருமாள் கோயில்
ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்]

எம்பெருமானோடு நமக்குள்ள உறவைத் தெரிந்துகொள்வதே சிறந்த தவமென்றும், அந்த உறவு ஒன்பது வகையாகத் திருவெட்டெழுத்தெனும் திருமந்திரத்தில் தேறுகின்றதென்றும் முன்னம் நிரூபித்தோம். அவ்வுறவுகளை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்யப் புகுவோமினி.

திருமந்திரத்தில் முதலெழுத்தாகிய அகாரத்தில் ப்ரக்ருதி சக்தியினால் எம்பெருமானை ஸகல ஜகத்காரணபூதன் என்று விளங்குகின்றதென்று நிரூபித்திருக்கிறோம். அவன் காரணபூதனானால் உலகமெல்லாம் அவனுடைய காரியப்பொருள் என்பது சொல்லாமலே விளங்குகின்றது. அவன் பிதாவாய் நாமெல்லாரும் அவனுடைய மக்கள் ஸ்தானத்திலே யிருக்கின்றோமென்றவாறு.

எம்பெருமான் விபவாவதாரங்களில் தன்னுடைய பித்ருத்வத்தை மறைந்துக்கொண்டு தசரத புத்திரன் வஸுதேவ புத்திரன் என்றாற்போலே சிலர்க்குப் புத்திரனாயிருக்குந் தன்மையை ஏறிட்டுக்கொண்டாலும் அவனுக்குக் காரணத்வம் பறியுண்டு கார்யத்வம் வந்துவிடாது. தன்னுடைய க்ருபாதிசயத்தினால் பிறக்கிறானேயல்லது நம்மைப்போலே கருமத்தினால் பிறக்கிறானல்லன். இதை "𑌅𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑍋 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌿𑌜𑌾𑌯𑌤𑍇 | 𑌤𑌸𑍍𑌯 𑌧𑍀𑌰𑌾𑌃 𑌪𑌰𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌯𑍋𑌨𑌿𑌮𑍍" (அஜாயமானோ பஹுதா விஜயதே தஸ்யதீரா: பரிஜாநந்தியோநிம்) என்றும் "𑌪𑌿𑌤𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑍇𑌣 𑌪𑌿𑌤𑍃𑌮𑌾𑌨𑍍 𑌯𑍋𑌨𑌿𑌯𑍋𑌨𑍌 𑌨𑌾𑌵𑍇𑌦𑌵𑌿𑌨𑍍𑌮𑌨𑍁𑌤𑍇 𑌤𑌂 𑌬𑍃𑌹𑌨𑍍𑌤𑌮𑍍" (பிதாபுத்ரேண பித்ருமாந் யோநியோநௌ நாவேதவிந் மநுதேதம் ப்ருஹந்தம்) என்றும் வேதபுருஷன் ஓதுகின்றான். நாம் பலயோனிகளிலும் பிறப்பது போலவே அவனும் பலபல யோனிகளில் பிறப்பதாகக் கேள்விப்படுகிறோம். கீதையில் தானே அருளிச் செய்கிறான் "𑌬𑌹𑍂𑌨𑌿

acharya.org

மே வ்யதீதாநி ஜந்மாநி தவார்ஜுந" (பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவசார்ஜுந) என்று. மேன்மை காட்டும் அதிகமாகவே அவன் பிறக்கிறான் என்றும் சொல்லலாம். ஆனாலும் நம்முடைய பிறப்புக்குக் கருமம் காரணமாயிருப்பதுபோல் வல்லாமல் கேவலம் கருணையே அவனுடைய அவதாரங்களுக்குக் காரணமாயிருக்கின்றமையால் பிறக்கப் பிறக்க அவனுக்குத் தேசு பொலிகின்றது. இதை "ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந:" (ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந:) என்றும் "பலபிறப்பாய் ஒளிவரும்" என்றும் உபய வேதங்களும் அறைந்தன. மகனொருவர்க்கல்லாத மாமேனி மாயனை அவனுடைய அவதார சீர்மைகளை மற்றொருகால் அனுபவிப்போம். இப்போது அவனது காரணத்வப் பெருமையைப் பற்றிப் பேசுவோம்.

பரப்ரஹ்மத்தைப் பற்றிப் பேசத் தொடங்கிய உபநிஷத்து முகத்துமுனையம் "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" (யதோவா இமானி பூதானி ஜாயந்தே தத்ப்ரஹ்ம) என்று ஜகத் காரணத்வத்தையே ஓதிற்று. "அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" (அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா) என்று ப்ரஹ்மவிசாரம் செய்யப்புகுந்த வியாஸரும் அடுத்த ஸூத்ரத்திலே "ஜந்மாத்யஸ்ய யத:" (ஜன்மாத்யஸ்ய யத) என்று சொல்லி ஜகத் காரணத்வத்தையே ப்ரஹ்மலக்ஷணமாகப் பேசினார். பரப்ரஹ்மமாகத் தம்மை அனுசரிக்கப்புகுந்த நம்மாழ்வாரும் "கடல்ஞாலம் செய்தேனும் யானே யென்னும்" என்று முந்துறப் பேசினது இதனையே. மாறனடி பணிந்துய்ந்த இராமானுசனும் ஸ்ரீ பாஷ்யத்தின் உபக்ரமத்தில் "அகிலபுவநஜந்ம" (அகிலபுவனஜன்ம) என்று இந்தக் காரணத்வத்தையே பேசியிருந்தார். உபநிஷத்துக்களெல்லாம் ஒரு மிடறாக "காரணம் து த்யேய:" (காரணந்து த்யேய) இத்தியாதிகளாலே காரணவஸ்துவையே உபாஸிக்கும்படி விதித்திருப்பதனால், எம்பெருமானைக் காரண பூதனாக நன்றாகத் தெரிந்துகொள்ளவேணும்.

இவ்வுலகத்திற்குக் காரணமான வஸ்து யாதொன்றும் இல்லையென்றும், எல்லாம் இயற்கையாகவே ஜனிக்கிறதென்றும் கூறுகிற இதராவாதிகளை விட்டிடுவோம், அனுமானத்தாலே ஒரு ஈச்வரனை ஸாதித்து அவனை ஜகத்காரணமாகக் கொள்ளுகிற நையாயிகர்களையும் விட்டிடுவோம். ஶாஸ்த்ரத்தையே கண்ணாகக்கொண்டு அதனாலேயே ஈச்வரனையும் அவனுடைய காரணத்வத்தையும் பேசுகின்ற பரம வைதிகர்களின் உக்திகளையே பின்சென்று நாம் பேசக்கடவோம்.

acharya.org

முற்காலத்தில் ஒருவன் ஶாஸ்திரங்களையெல்லாம் படித்திருந்தும் ஆஸ்திக்ய மில்லாமையினாலே ஈஶ்வரன் காரணமல்லன் என்றே யெண்ணியிருந்தான்; அவன் ஒருநாள் வெளியே புறப்பட்டுப் பற்பல வற்றையும் ஆழ்ந்து நோக்குமிடத்து, இப்படி விசித்திரமான பிரபஞ் சங்களைப் படைத்தவன் விலக்ஷணசக்தியுக்தனான வொரு முழுமுதற் கடவுளாகவேயிருக்கத் தகும் என்றெண்ணி, வழிநடந்துகொண்டே போம்போது மிகப் பெரிய ஆலமரமொன்றையும் பூசினிக்கொடியை யும் பார்த்து, ப்ரபஞ்ச கர்த்தாவான ஈச்வரன் புத்திசாலியல்லன் போலும் என நினைத்தான்; ஏன்? மிகப் பெரிதான ஆலமரத்திற்கு மிகச் சிறிய காய்களையும், மிகச் சிறிதான பூசினிக்கொடிக்கு மிகப் பெரிய காய்களையும் படைத்திருக்கக் கண்டதனால்.

இங்ஙனே சிந்தித்துக்கொண்டே அவன் வழிநடந்த ஆயாசத்தி னால் அந்த ஆலமரத்தினடியிலேயே கிடந்து நெடுநேரம் உறங்கிவிட் டான். பிறகு கண்விழித் தெழுந்ததும் தன் உடல் முழுவதிலும் ஆலங்கனிகள் விழுந்திருந்ததைக் கண்டு, 'அஹஹ! எம்பெருமா னுடைய புத்தியின் பெருமையை என்ன சொல்லுவேன்!' என்று மிகவும் வியந்தான். முன்பு தான நினைத்தபடி அவ்வாலமரத்திற்குப் பெரிய காய்கள் இருந்திருக்குமானால் அவை விழுந்து தன் மார்பு பிளந்திருக்குமன்றோ. ஆலமரம் மற்ற மரங்களைப்போலல்லாமல் நிழ லுக்காக அனைவராலும் ஆஶ்ரயிக்கப்படக் கூடியதாதலால் இதற்குப் பெருத்தகாய்கள் இருக்கலாகாதென்றும், பூசினிக்கொடி நிலத்தின்மீது படர்வதாதலால் எவ்வளவு பெரிய காயாயிருப்பினும ஸர்வம்ஸஹை யான பூமிப்பிராட்டி தாங்குகின்றாளாதலால் அதற்குப பெரிய காய் கள் இருக்கலாமென்றும் இவ்வளவு விசாலமாகத் திருவுள்ளங் கொண்டு ஒவ்வொரு அமைப்பையும் ஜனங்களின் ஸௌகரியத்திற்கு ஏற்பவே செய்தருளியிருக்கின்ற மிகு ஞானச் சிறு குழவியான ஸர் வேஶ்வரனை புத்திஹீநனாக நினைத்தேனே பாவியேன்! என்று தன் னைத் தானே நொந்துகொண்டனனாம்.

இங்ஙனம் பாமரர்களும் அதிசயிக்கக்கூடிய விலக்ஷணமான சக்தி யும் ஞானமும் வாய்ந்த பரமபுருஷனையே இவ்வுலகம் காரணமாகக் கொண்டிருக்கவும் அவனுக்குக் காரணத்வத்தை இசையாதே ப்ர க்ருதியே காரணமென்றும் ஜீவனே காரணமென்றும் கூறுகின்ற பிறசமயிகள் கிடக்க. எம்பெருமானே ஸகல ஜகத்காரண பூதன் என்று நாம் தெரிந்துகொண்டபின் அதிலுமுட்புகுந்து இன்னமுஞ் சில விஷ

acharya.org

பங்களை தெரிந்துகொள்ளவேண்டியவையுண்டு. உலகில் ஒரு காரியப் பொருள் பிறக்கவேணுமானால் மூவகையான காரணப்பொருள்கள் இருந்தீரவேண்டும். பானையென்கிற ஒருபொருள் உண்டாகவேணுமானால் மண் வேண்டும், தண்ணீர் தடி சக்கரம் முதலியனவேண்டும், குயவன் வேண்டும் இப்படியே துணியென்கிற ஒருபொருள் உண்டாகவேணுமானால் நூல் வேண்டும், நசவுப் பலகை முதலியன வேண்டும், சேணியன்வேண்டும் இத்தகைய காரணப்பொருள்களை உபாதான காரணமென்றும் ஸஹகாரி காரணமென்றும் நிமித்தகாரணமென்றும் சாஸ்த்ரஜ்ஞர்கள் கூறுவார்கள் எந்த வஸ்துதானே காரிய வஸ்துவாக மாறுதலையடைகின்றதோ அது உபாதான காரணமெனப்படும். மண்தானே பானையாக மாறுகின்றது, நூல்தானே துணியாக மாறுகின்றது ஆகவே அவை உபாதான காரணமாம் தண்ணீர் தடி சக்கரம் முதலியவை பானையை யுண்டாக்குவதற்குத் துணைக் கருவிகளாக நிற்பதனால் அவை ஸஹகாரி காரணமெனப்படும். மேற் கூறிய இருவகைக் காரண வஸ்துக்களையுங் கொண்டு கர்த்தாவாக நிற்கிறவன் நிமித்தகாரண மெனப்படுவான் காலம் அத்ருஷ்டம் முதலியனவும் இவ்வகுப்பிற் சேரும் ஆக இப்படிப்பட்ட மூவகைக் காரணங்களும் ஸ்ருஷ்டிக்கு இன்றியமையாதனவாதலால் மிக விரிவான இந்த ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டிக்கு ஸர்வேச்வரன் நிமித்த காரணமென்கிற ஒரு காரணமாகத்தானே இருக்கமுடியும், மற்ற உபாதான காரணமும் ஸஹகாரி காரணமும் எவை? என்று கேள்வி பிறக்கக்கூடும் மூவகைக் காரணங்களும் பகவானே என்று சாஸ்த்ரங்கள் கூறும் அது எங்ஙனே பொருந்தும் என்கிற ஆக்ஷேபங்களும் அவற்றின் ஸமாதானங்களும் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்

நம்பெருமாள் திருமஞ்சனமும் பட்டர் ஈடுபாடும்

[பெருமாள் கோவில்
ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ வே அண்ணங்கராசாரியார்]

கூரத்தாழ்வான் திருக்குமாரராகிய ஸ்ரீ பராசர பட்டர் கோயிலில் வாழும் நம்பெருமாளுடைய திருமஞ்சனங்களை ஸேவிக்கும் காலங்களில் அந்த ஸந்நிவேசத்தில் ஈடுபட்டும் வடிவழகில் ஈடுபட்டும் சமத்காராதிசயம் பொலியப் பலச்லோகங்களை அருளிச் செய்திருக்கி

acharya.org

றார். அவை நாளைக்கும் அவருடைய திருவம்சஸ்தர்களால் திருமஞ்சன ஸமயங்களில் விண்ணப்பம் செய்யப்பட்டு வருகின்றன. அவற்றுள் "த்வம்ஸேஹம்ஸே" என்கிற ஒரு ச்லோகம் மிகவும் அற்புதமாக அமைந்தது. இதனை நம் ஆசாரியர்கள் வியாக்யான க்ரந்தங்களிலே கையாண்டு வருகின்றனர். இதன் அரிய பெரிய பொருள் இங்கு விவரிக்கலாகிறது. ஸ்ரீ ரங்கநாதன் தோளிணை மேலும் நன் மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாய் மாலையையுடையனாய்த் திருமஞ்சனங் கொண்டருள ஸந்நத்தராயிருக்கும் படியைப் பார்த்தால் பிரமாணம் செய்ய ஸித்தராயிருக்கிறாரோ என்று உத்ப்ரேக்ஷிக்கலாம்படி யுள்ளது என்று பட்டர் திருவுள்ளம் பற்றுகிறார். உலகத்தில் பிரமாணம் செய்பவர்கள் துளசிமாலை யணிந்துகொண்டு ஒரு முழுக்குப் போடுவது வழக்கமாதலால் எம்பெருமானும் அங்ஙனே செய்கிறானோ என்று உல்லேகிக்கிறார். பிரமாணம் செய்யவேண்டிய ஆவச்யகதை எம்பெருமானுக்கு என்ன வந்தது என்னில், உலகத்தில் பிரமாணம் செய்பவர்கள் எதற்காகச் செய்வது வழக்கம் என்று பார்த்தால், ஒருவன் தன்னுடைய ஸொத்தைப் பிறன் கொள்ளை கொண்டால் அதைத் தனக்கு ஸ்வாதீனப் படுத்தித் தரவேணுமென்று நியாயாலயத்தில் விண்ணப்பம் செய்துகொண்டு உண்மையில் அந்த ஸொத்து யாருடையது என்று தெரிந்து கொள்வதற்காக ஸாக்ஷி விசாரணை முதலியன செய்யப்படுங் காலத்திலே தகுந்த ஆதாரங்களைக்கொண்டு உண்மையை ஸ்தாபித்துக்கொள்ள முடியாமல் அந்தோ! நம்முடைய ஸொத்தை அநியாயமாக இழந்துவிட நேருகின்றதே! என்கிற அநுதாபமுடையார் கடைசியாக ஒரு வார்த்தை சொல்லுவதுண்டு. "இது என்னுடைய ஸொத்துதான் என்று பிரமாணம் செய்ய நான் துளசிமாலை யணிந்து முழுக்கிட்டு விடுகிறேன்; நியாயாதிபதிகள் அது கொண்டாவது உண்மை யுணரவேண்டும்" என்பர்கள். நியாயாதிகாரிகளும் அதனை ஆதரித்துத் தீர்ப்புக் கொடுப்பதுண்டு. இது இன்னமும் வழக்கத்திலுள்ளது. இவ்விதமாகவே எம்பெருமானுக்கும் பிரமாணம் செய்யவேண்டிய ஆவச்யகதை நேர்ந்துவிட்டதாம். அது ஏதெனில், சேதநவர்க்கம் என்கிற ஸொத்து எம்பெருமானுடையது; ஆனால் அந்த ஸொத்தை "கிம்தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா" என்றும் "பண்டே யுன் தொண்டாம் பழவுயிரை யென்னதென்று கொண்டேன்" என்றும் சொல்லுகிறபடியே ஸம்ஸாரிகள் கொள்ளை கொண்டார்கள். இந்த

acharya.org

ஸொத்து என்னுடையது என்கிறான் எம்பெருமான். ஸம்ஸாரிகளோ 'இது உன்னுடையதல்ல, எங்களுடையதே' என்கிறார்கள். விவாதம் முற்றிவிட்டது. ஸம்ஸாரிகள் அடாவடியில் பலிஷ்டர்களானபடியாலே அவர்களுடைய வாதமே மேம்பட்டு எம்பெருமானுடைய வாதம் தோல்வியடையும்படியான நிலைமையிலே வந்துவிட்டது. அந்தோ! அபாயமாய் நம்முடைய ஸொத்தை இழந்துவிட நேருகின்றதே! என்கிற பரிதாபம் எம்பெருமானுக்கு உண்டாய்விட்டது. 'இந்த ஸொத்து என்னுடையதுதான் என்று ப்ரமாணம் செய்தாகிலும் இதனை நாம் இழவாமல் அடைந்தே தீரவேண்டும்' என்கிற அபிநிவேசம் எம்பெருமானுக்கு உண்டாய்விட்டது. அது துளசி மாலை யணிந்து முழுகியிட்டுச் செய்யவேண்டிய காரியமாதலால் இந்தத் திருமஞ்சனமென்கிற வ்யாஜத்தாலே அது செய்யப்படுகிறது போலும் என்பது பட்டருடைய உல்லேக சமத்காரம்.

ஈச்வரனுக்கும் சேதநனுக்கும் நடந்த விவாதம் ஒரு ஸம்வாத ரூபமாக இந்த ச்லோகத்தில் அழகாய்க் காட்டப்படுகிறது. ச்லோகம் வருமாறு —

த்வம் மே(அ)ஹம் மே குதஸ்தத் ததபி குத இதம் வேதமூலப்ரமாணாத், ஏதச்சாநாதிஸித்தாதநுபவவிபவாத் ஸோபி ஸாக்ரோச ஏவ | க்வாக்ரோச: கஸ்ய கீதாதிஷு மம விதித: கோத்ர ஸாக்ஷீ ஸுதீ: ஸ்யாத் ஹந்த த்வத்பக்ஷபாதீ ஸ இதி ந்ருகலஹே ம்ருக்யமத்யஸ்தவத் த்வம் ||

த்வம் மே(அ)ஹம் மே குதஸ் தத் ததபி குத இதம் வேதமூலப்ரமாணாத், ஏதச்சாநாதிஸித்தாதநுபவவிபவாத் ஸோபி ஸாக்ரோச ஏவ க்வாக்ரோச: கஸ்ய கீதாதிஷு மம விதித: கோத்ர ஸாக்ஷீ ஸுதீ: ஸ்யாத் ஹந்த த்வத்பக்ஷபாதீ ஸ இதி ந்ருகலஹே ம்ருக்யமத்யஸ்தவத் த்வம்.

இதன் பொருள் சுருக்கமாகக் காட்டப்படுகிறது

த்வம் மே - இது எம்பெருமான் ஸம்ஸாரிசேதநனை நோக்கிச் சொல்லும் வார்த்தை. சேதநா! நீ என்னுடைய சரக்கு என்கிறான் எம்பெருமான். அதாவது நீ எனக்கு அடிமைப்பட்டவனென்றபடி. சேதநன் ஸ்வாதந்திரியம் பாராட்டி வணங்காமுடியனனாய்க் கிடந்தபடியாலே எம்பெருமான் இந்தவார்த்தையைச் சொல்லவேண்டியதாயிற்று.

acharya.org

அஹம் மே - அதற்கு ஸம்ஸாரி பதில் சொல்லுகிற வார்த்தை இது. நான் உனக்கு அடிமைப்பட்டவனல்லேன், எனக்கு நானே அரசன் என்றான் ஸம்ஸாரி. எம்பெருமான் "த்வம் மே" என்றது போலே ஸம்ஸாரியும் பதிலுக்கு 'த்வம் மே' என்னலாமே; அப்படி ஏன் சொல்லவில்லை? 'நானு உனக்கு அடிமைப்பட்டவன், நீதான் எனக்கு அடிமைப்பட்டவன்' என்று ஸம்ஸாரி சொல்லியிருக்க லாமே; ஏன் அங்ஙனம் சொல்லவில்லை என்னில், இப்படிப்பட்ட பதில் ஸம்ஸாரி சொல்லியிருந்தானாகில் எம்பெருமான் பெரும்பேறு பெற்றானவனே; தான் சேஷியாயிருப்பதிலுங்காட்டில் சேஷபூதனா யிருக்குமிருப்பிலே மிகவும் குதூஹலமுடையானன்றோ அவன். ஏதேனுமொருபடியாலே சேதநனோடு தனக்கு ஸம்பந்தம் ஏற்பட்டால் போதும் என்று பாரிப்பவனன்றோ அவன்; சேஷியாகவே தா னிருக்கவேணுமென்கிற எண்ணம் இல்லையே அவனுக்கு. ஸம்ஸாரி கள் தன்னோடு உறவை அறுத்துக்கொண்டுபோகாமல் தன்னை அடியவ னாக்கொண்டு பரிமாறினாலும் பரமதிருப்தி பெறுபவனன்றோ அவன். அது தோன்றவன்றோ 'த்வம் மே' என்று ஸாவசேஷமாய்க்கிடக் கிறது. த்வம் மே தாஸ: என்றோ, த்வம் மே ப்ரபு: என்றோ விவ க்ஷித்துச் சொன்னபடி. ஏதேனுமொருபடிக்கு ஸம்ஸாரி இசைந்திடு வனோ என்று பார்த்தான் எம்பெருமான். ஸம்ஸாரி மஹாசதுரனாகை யாலே 'இவனோடு நமக்கு எவ்விதமான உறவும் தேவையில்லை; அவன் நமக்கு அடியவனாக இருக்க இசைந்தாலும் அதற்கும் நாம் இசையவே கூடாது; அடியவன்போல இருந்து காலக்ரமத்தில் நம் மையே அடிமைப்படுத்திக்கொள்ளவல்ல கிறியான் அவன்; ஆதலால் அவனுடைய எல்லையிலும் நாம் செல்லாமல் இருந்துவிடுவதே நமக் குத் தகுதி' என்று ஸம்ஸாரி நினைத்தானாகையாலே அஹம் மே என்று, எம்பெருமானுக்குப் பிடிகொடாமலே விடையளித்து விட் டான். இவனும் த்வம் மே என்று பதில் சொல்லி யிருந்தானாகில் அவ் வளவோடு விவாதம் சாந்தமாகியிருக்குமே; எம்பெருமானே வெற்றி பெற்றானாய்விடுவனே.

குதஸ் தத் - (தத் குத:?) 'அஹம் மே' என்று சொன்ன ஸம்ஸாரியை நோக்கி எம்பெருமான் கேட்கிறான். எதனால் அப்படிச் சொல்லுகிறாய்? என்று.

தத் அபி குத:? நீ த்வம் மே என்று சொன்னாயே, அது எதைக்கொண்டு சொன்னாய்? என்று ஸம்ஸாரியின் பதில்கேள்வி இது.

acharya.org

இதம் வேதமூலப்ரமாணாத் - சேதந! வேதமாகிற மூலப்ரமாணத்தைக்கொண்டு நான் த்வம் மே என்று சொன்னேன் என்கிறவிது எம்பெருமானுடைய பதில் — "பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம்" "க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:" இத்யாதி ப்ரமாணங்கள் இங்குக் கொள்ளத்தக்கன.

ஏதச்ச அநாதிஸித்தாத் அநுபவவிபவாத் - (இது ஸைமலாரியின் பதில் வார்த்தை) நீ சொல்லுகிற ப்ரமாணம் ஓலைப்பட்ட ப்ரமாணமாகையாலே வெளிக்கு வரமாட்டாதது, அஹம் மே என்று சொன்ன எனக்கு ஸாதகமான ப்ரமாணம் அப்படிப்பட்டதன்று அநாதிகாலமாக ஸ்வாதந்த்ரியத்தை நான் அநுபவித்துக்கொண்டு வருவதால், அநுபவமே ப்ரபல ப்ரமாணமாகையால் இதனால் உன்னுடைய வேதம் அடிபட்டொழிந்தது என்றான். உலகத்திலும் ஒரு க்ருஹம் ஒருவனுடையதென்று சாஸனபத்ரங்கள் இருந்தாலும் நெடுநாளாக அந்த க்ருஹத்தை வேறொருவன் அநுபவித்துவந்தால் அவனே அதற்குச் சொந்தக்காரனாய் ஆய்விடுவன் என்றும், உண்மையான உடையவன் இழந்துபோய்விடுவான் என்றும் காண்கிறோம். அதுபோல, எம்பெருமானே உடையவனென்று சாஸ்த்ரமிருப்பினும் அநாதியான அநுபவம் ஸைமலாரியினுடையதாகையாலே அந்த சாஸனம் துர்ப்பலமாக இவனால் நிரூபிக்கப்பட்டது ஸைமலாரியும் க்ரமமான வழியிலேயே வழக்காடுகிறான் போலும்.

ஸோபி ஸாக்ரோஶ ஏவ - (அதற்கு எம்பெருமானுடைய பதில் இது) சேதந! நெடுங்காலமாக உனக்கு ஸ்வாதந்த்ரிய அநுபவம் உண்டென்பது உண்மையே, அதை நான் அபலபிக்கவில்லை. ஆனால் அந்த அநுபவம் நிராக்ஷேபமாக இருந்தாலன்றோ செல்லும். அப்படியில்லையே உனது அநுபவம் ஆக்ஷேபத்தோடு கூடியதாயிற்றே! அதனை நீ சொல்லிக்கொள்வதனால் உனக்கு லாபமில்லையே என்றான் எம்பெருமான். உலகத்திலும் ஒரு க்ருஹத்தை இதரன் ஒருவன் நெடுநாளாய் அநுபவத்தில் வைத்துக் கொண்டிருந்தாலும் அந்த அநுபவத்தை அடிக்கடி சொந்தக்காரன் ஆக்ஷேபித்துக் கொண்டிருந்ததாகப் புலப்பட்டு விட்டால் அவ்வநுபவம் செல்லமாட்டாதென்பது ப்ரஸித்தம்.

ஆக்ரோஶ: க்வ? கஸ்ய ஆக்ரோஶ:?—(இது ஸைமலாரியின் வினா) என்னுடைய ஸ்வாதந்த்ரியாநுபவம் ஆக்ஷேபத்தோடு கூடியதென்று நீ சொன்னாயே, அப்படிச் சொல்லிவிட்டால் போதுமா? ஆக்ஷேபம்

acharya.org

செய்திருப்பது யார்? ஆக்ஷேபம் எவ்விடத்தில் செய்யப்பட்டிருக்கிறது? அதையெல்லாம் விசதமாகச் சொன்னாலல்லவோ உன்னுடைய வாதம் ஏறும்.

கீதாதிஷு மம விதித:— (இது எம்பெருமானுடைய மறுமொழி.) க்வ என்று கேட்டதற்கு 'கீதாதிஷு' என்பது பதில். கஸ்ய என்று கேட்டதற்கு 'மம' என்பது பதில். சேதநா! பகவத் கீதை முதலானவற்றிலே (உன் ஸமூஹத்தில் தலைவனான அர்ஜுனனென்கிற வொருவனை வைத்துக்கொண்டு) சேதநஸ்வாதந்திரியத்தை நான் ஆக்ஷேபித்திருக்கிறேனென்பதை நாடு நகரமும் நன்கறியும். என்றைக்கோ ஒருநாள் ஏதோவொரு மூலையிலே நீ ஆக்ஷேபித்திருந்தால் அது செல்லுமோவென்று ஸம்சாரி சொல்லுவதற்கு இடமில்லாதபடி 'விதித:' எனப்பட்டது. கீதை நடையாடாத இடமில்லை; கீதைக்கு ப்ரசாரமில்லாத காலமுமில்லை; கீதையைத் தெரிந்து கொள்ளாத வ்யக்தியுமில்லை என்ற அபிப்ராயங்கள் இச்சொல்லில் பொதிந்துள.

அத்ர க: ஸாக்ஷீ— (இது ஸம்ஸாரியின் கேள்வி.) வ்யவஹாரம் என்று வந்துவிட்டால் ஸாக்ஷி விசாரணை இருந்தே தீரவேண்டும். எத்தனை சாஸநபத்திரங்கள இருந்தாலும் ஸாக்ஷிகளைக்கொண்டு நிரூபிக்கவேண்டியது முறைமை. உனக்கு ப்ரமாணமான வேதங்களும் கீதை முதலியனவும் கிடக்கட்டும். பெட்டியின்மீது ஏறிச் சொல்லுவதற்கு ஒரு ஸாக்ஷி வேணுமே. யார் ஸாக்ஷி? என்கிறான் ஸம்ஸாரி. எம்பெருமான் தவிர மற்ற எல்லாச் சேதநர்களும ஸம்ஸாரிகளே யாதலால், அவர்களும் அஹம் மே என்றிருப்பவர்களேயாதலால் இவனுக்கு ஸாக்ஷிகள் எங்ஙனம் கிடைக்கப் போகிறார்களென்பது சேதநனுடைய எண்ணம். எம்பெருமானுடைய பாக்யததாலே ஸம்ஸாரிகளினிடையே முமுக்ஷுக்களும் சிலர் இருப்பதால் அவர்கள் தனக்கு ஸாக்ஷிகளாக இருக்கத் தகுதியுடையார் என்றெண்ணின எம்பெருமான் ஸுதீ: ஸ்யாத் என்றான். ஞானிகளெல்லாரும் என் பக்ஷத்தில் ஸாக்ஷிகளாக நிற்கக்கூடும் என்றபடி. (ஸுதீ: என்பதை ஜாத்யேகவசநமாகக் கொள்க.) அஸ்தி என்று உறுதியாகச் சொல்லாமல் ஸ்யாத் என்று சொன்னது ஏனெனில், இவ்விருள் தருமா ஞாலமானது ப்ரஹ்லாதாழ்வானையு முட்பட எதிரம்பு கோக்கப் பண்ணினதாகையாலே ஞானிகளும் ஸமயத்திலே நம்மைக் கைவிடும்படி நேர்ந்துவிடுமோ என்னவோ என்கிற அதிசங்கை தோன்றி அதை ஸ்யாத் என்பதனால் காட்டினனென்க. "விண்ணுளார் பெருமாற்கு

acharya.org

அடிமை செய்வாரையும் சேரும் ஸம்புலனில்லை" ஆகையால் யாரையும் நம்புவதற்கில்லையே என்றெண்ணினான் போலும்.

ஹந்த! த்வத்பக்ஷபாதீ ஸ - (இது ஸமலாரியின் பதில்) ஸாக்ஷிகள் மத்யஸ்தர்களாக இருக்கவேண்டும். உறவினர்களையே கொண்டு சொல்லுவிக்கப்படுகிற ஸாக்ஷ்யம் உபயோகப்படாது. ஞானிகளை ஸாக்ஷியாகச் சொன்னது பொருந்துமோ? "ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்" என்று கீதையில் நீயே சொல்லியிருக்கிறாயே, உனது உயிர் நிலையாகவன்றோ ஞானிகள் இருப்பது; வாதியே ஸாக்ஷி என்று சொன்னதாகத் தேற்றதேயல்லது பிறனொருவன் ஸாக்ஷியாகக் கூறப் பட்டானில்லையே என்றான் ஸமலாரி.

இதற்குமேல் எம்பெருமான் என்ன செய்வான்! ஸமலாரிகள் யாவரும் ப்ரதிவாதிகளாக ஆய்விட்டபடியால் அவர்களில் ஒருவரும் ஸாக்ஷிகளாக நில்லார். முமுக்ஷுக்களோ தன் வகுப்பில் சேர்ந்து விட்டபடியாலே அவர்களுடைய ஸாக்ஷ்யம் அப்ரயோஜகமென்று கண்ணழிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட ஸமலாரிகளையும் விடமாட்டிற்றிலன். வ்யவஹாரத்திலோ தான் தோல்வியடையவேண்டியவனாக முடிந்துவிட்டது. 'நம்முடைய சாக்ஷிகளை நாம் அநியாயமாய் இழந்துவிட்டது!' என்று பரிதபிக்கிறான். இந்த நிலைமையில் தைவாதீனமாய் ஒரு உபாயம் ஸ்புரித்ததாம், அதாவது, ஸமலாரியி னுடைய வாயாடித்தனத்தினாலே நமக்கு வ்யவஹாரத்தில் பழுது ஏற் பட்டாலும் ஸொத்து நம்முடையதேயென்பது ஸத்யமாதலால், கடைசியாக ப்ரமாணம்பண்ணிக்கொடுத்து ஸொத்தைப்பெற்றுக் கொள்வதான முறைமையும் அரசாங்கத்தில் இருப்பதால் அந்த வகையில் நாம் வெற்றிபெறக்கடவோம் என்று தோன்றிற்றாம்.

[இதி ந்ருகலஹே ம்ருக்யமத்யஸ்தவத் த்வம்]

இதி - இவ்விதமாக, ந்ருகலஹே - சேதநனோடு விவாதமுண் டாகித் தனக்குத் தோல்வி விளைந்த வளவில், த்வம் ம்ருக்யமத்யஸ்த வத் (ப்ரகாசஸே) = தேவரீர் ப்ரமாணம் செய்ய ஸந்நத்தர்போலே விளங்கா நின்றீர் "வ்ரணம் கதூஷ்ணீஹ்யதேக்ஷா ஸ்ருஹ்ருயேஷு உத்யதே" என்பது நிகண்டு.

இந்த உத்ப்ரேக்ஷையினால் நமக்குக் கிடைக்கும் பொருள் யாதெனில், எம்பெருமானோடு நாம் விவாதப்படாமல் இருக்குமளவே போதுமென்பதும், எவ்வகையினாலேனும் நம்மை அடிமைப்படுத்திக் கொள்ள அவன் வழிதேடுகின்றவன் என்பதும், நமெல்லாம் அவ

acharya.org

னுடைய உடைமை யாதலால் நம்மை ஆட்படுத்திக்கொள்வதிலேயே நோக்குடையனான அவனை நினைத்து நாம் மார்பிலே கைவைத்துறங்கலா மென்பதுமாம்.

பட்டர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஆத்ம ஸமர்ப்பணம்

[C. நரஸிம்மாசாரியார், அட்வகேட், திருவல்லிக்கேணி]

ஆத்ம ஸமர்ப்பணம் என்பது ச்ருதிகளில் ச்லாக்யமாகச் சொல்லப்படும் மோக்ஷோபாயமாம். ஆத்ம ஸமர்ப்பணம் என்றால் ஜீவாத்மாவை பரமாத்மாவுக்கு ஸமர்ப்பித்தல் என்று பொருள்படும். ஆனால் ஜீவாத்மா "அதனுள் நேர்மை ஒன்றும் ஒருவர்க்கும் உணரல் ஆகாது" என்கிறபடி பாஹ்யேந்திரியங்களுக்கு விஷயமாகாததாலும் பரமாத்மாவும் அதீந்திரியனுகையாலும் இந்த ஸமர்ப்பணம் புஷ்பம் மாலையை ஒரு அர்ச்சாவதாரத்து எம்பெருமானுக்கு ஸமர்ப்பிப்பது போல் கைகளால் செய்யும் காரியமன்று. நம் பூர்வாசாரியர்கள் ஜீவாத்மா பரமாத்மாவுக்கே உரித்தானது என்று ஸம்வித்தைதான் ஸமர்ப்பணம் என்பார்கள். இந்த ஸம்வதம் கேவலம் நெஞ்சினால் நினைத்த மாத்ரமாவது வாயினாற் சொல்லிய மாத்ரமாவது ஸித்திக்காது. மனோவாக்குக்காயம் என்கிற த்ரிவித காரணங்களாலும் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவந்து காரியகரமாக்க வேணும். நெஞ்சினால் நினைப்பதும் வாயினாற் சொல்வதும் ஒன்றாய், செய்வது வேறொன்றானால் அது வஞ்சனையும் கூத்துமாகும். "பொய்யே கைம்மை சொல்லி" என்றும் "என்றென்றே சில கூத்துச் சொல்ல" என்றும் ஆழ்வார் ஸர்வேஶ்வரனை வஞ்சிக்க முடியாது என்பதற்கு அவரவர்கள் மனச்சாக்ஷியமே ப்ரமாணமாகும் என்பர். ஆகையால் ஆத்ம ஸமர்ப்பணத்துக்கு "யான் எனது என்று இராதே", "யானும் நீயே என் உடைமையும் நீயே" என்கிற திடாத்ய வஸாயத்தோடு நம்முடையது என்கிற ஸர்வஸ்வத்தையும் எம்பெருமானுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். இந்த அர்ப்பணம் காரியகரமாவது கைங்கரியத்தாலன்றி மற்றெவ்வகையாலும் முடியாது என்பதை ஆழ்வார்களும் ஆசாரியர்களும் ஓமிட்டு ஸாதிப்பார்கள். அந்த கைங்கரியம் ப்ரீதிகாரிதமான பாகவத கைங்கரிய பர்யந்தமான பகவத் கைங்கரி

acharya.org

யம் என்று அறிந்திட்டான். பாகவத கைங்கர்யமே பகவத் கைங்கர்யமாய் பர்யவஸிக்கும். கைங்கர்யத்தில் "யான் எனது" என்னும் அஹங்கார மமகார ஞானம் தன்னடையே கழிந்துபோய் "என் தாவியார்? யான் ஆர்? தந்த நீ கொண்டு ஆக்கினையே" என்கிற ஞானம் பிறந்து, அந்த ஞானம் அநுஷ்டானத்தில் பரிமளிக்கும். இதனையே "Love & Service" என்று இன்ப பதத்தாலே எல்லாரும் கொண்டாடுகிறார்கள். இதுதான் வேதஸாரமாய ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் ஸாரமுமாகும்.

ஆனால் இத்தகைய அத்யவஸாயம் பிறக்காமல் தடுக்கும் பலமான பகைவர்கள் நம்முடைய பஞ்சேந்திரியங்களே. "விண்ணுளார் பெருமாற்கு அடிமை செய்வாரையும் செறும் ஐம்புலன் இவை மண்ணுள் என்னைப் பெற்றால் என் செய்யா" என்றும் "தீமருந்து இன்றி நைந்து நோய் ஆடும் செக்கிலிட்டுத் திரிக்கும் ஐவர்" என்றும் ஆழ்வார் இந்த்ரிய பலத்தைப் பார்த்து நடுநடுங்குகிறார். அல்லாதார்கள் படும்பாடு சொல்லவேண்டா. நமக்கு இருந்தா இருந்த விவேக ஞானம் இருந்தபோதிலும் நன்மையும் தீமையும் விவேகிக்க ப்ரதீபமான சாஸ்த்ர ஞானம் உண்டாயிருந்தாலும் விஷயாந்தரங்களில் மனத்தை இழுத்துச் செல்லும் வீர்யமுடையன நம் இந்த்ரியங்கள். மனுஷ்ய ஸஞ்சாரமில்லாத காட்டில் கிடந்தாலும் நம்மை விட்டபாடில்லை. ஆதிபரதன் மான் பின்னே சென்றும், ஸௌபரி நீரில் முழுகிக் கிடக்கச் செய்தேயும் மீன் பின்னே சென்றும் விஷயபரவசரானார்கள்.

தாமஸீய ஞானத்தாலே ஹ்ருஷ்டரான ரிஷிகள் காமஜ்ஞான ஸமலங்காரங்களாகிற யோகாப்யாஸங்களாலே இந்த்ரியங்களை ஜயிக்கும் வழிகள் காட்டியுள்ளார். ச்ருதிகளில் வேதனம், உபாஸனம், ஸேவை, த்யானம் என்று இம்முறைகளை பல்வகையாக கூறப்பட்டுள்ளன. லோபப்ருமஹணை சாஸ்த்ரங்களில் சொல்லியபடி இந்த்ரிய ஜயம் பெற்று பக்தியை அடையும் வழியைப் பார்த்தால் லௌகிக பாவத்திகளான அடியேன் போன்ற பேலவர்களுக்கு "கால் ஆழும் நெஞ்சு அழியும் கண் சுழலும்." எங்ஙனே யென்னில் "ஜங்கமாந்தர ஸஹஸ்ர நற்றவங்களாலே ஆய்ந்த குலங்களிலே பிறந்து எழுந்து வாஸித்து தத்வஜ்ஞராய்" காயசுத்தமாக த்ரிகால ஸ்நானம் செய்து ஸந்த்யா வந்தனம், காயத்ரீ ஜபங்கள், பஞ்ச மஹாயஜ்ஞங்கள், ஷட்கர்மங்கள் முதலான நித்ய நைமித்திக கர்மானுஷ்டானங்களால் பரிபூர்ணமாய் -துப்பச்சாய யோகத்தை பிறந்தவர்க்கே காட்டப்போய் உஷ்ண காலத்தில் மலைச் சிகரத்திலும் பஞ்சாக்நி மத்தியிலும் நின்றும், குளிர்காலத்

acharya.org

[illegible]த்தில் மூழ்கியும் ஜீர்ணபர்ணபலாசநராய் காயசோஷம் [illegible], சமம், தமம் முதலான ஆத்மகுணங்கள் பரிபூர்ண[illegible]ந்தான எம்பெருமான் வடிவைக் "கண்கள் சிவந்திற்" [illegible]கொண்டு ஆத்மஸாக்ஷாத்காரம் செய்து பிறகு பகவத் ஸாக்ஷாத்காரம் செய்யவேணும். இத்தகைய கர்மஞான ஸம்ஸ்க்ரு[illegible]ர்களைக் காண்பது மிகவும் துர்லபம். "இன்னதோர் காலத்து இனியார் இது பெற்றார் என்னவும் கேட்டறிவதில்லை" என்றார் மங்கை மன்னனும். வேதத்தின் உட்பொருளை நம் நெஞ்சுள் நிற்கப் பாடின நம்மாழ்வார் இந்த ஆத்ம ஸமர்ப்பணக்ரமத்தை "விடுமின்" என்கிற இரண்டாந்திருவாய் மொழியில் ஸர்வஸுலபமாக யாவரும் எளிதில் அறியும்படி உபதேசித்திருக்கிறார். இந்த உபதேசத்துக்கு சாஸ்திர ப்ரமாணமாவது ஸதாசார்ய உபதேசமாவது வேண்டுவதில்லை. ஆஸ்திக நாஸ்திகர்கள் அனைவரும் அறியக்கூடியது. அது எப்படி என்னில், தேகமும் தேகஸம்பந்தமான சுகதுக்கங்களும் அநித்யம் என்பதை "மின்னின் நிலையில" என்கிற பாசுரத்தில் விஸதரித்தார். இது யாவரும் கண்டு அநுபவிக்கும் விஷயமே. ஆகையால் அநித்யத்தைக் கைவிட்டு நித்யத்தைக் கைப்பிடிப்பது இயற்கையறிவாகும். நித்யமும் நித்யானுபவமும் இன்னதென்பதை முதல் திருவாய் மொழியில் பல காரணங்களைக்கொண்டு நிரூபித்தார். சில வருஷங்களுக்கு முன் நவீன சாஸ்த்ர ஆராய்ச்சிக்காரர் பலர், நிரீசுவரவாதிகளாயிருந்தார்கள். தற்சமயம் அவ்வாராய்ச்சிக்காரர் பலரும் ஈச்வரதத்வம் ஒன்று இருந்தலே வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அமெரிக்கா தேசத்துப் பண்டிதர் ஒருவர் சூரிய மண்டலத்திலிருந்து இரண்டு வகையான கிரணங்கள் வருகின்றன என்றும், அதில் ஒன்று உயிரை அளிக்கும் என்றும், மற்றொன்று அழிக்கும் என்றும் அழிக்கும் கிரணம் வாயுமண்டல ஸ்பர்சமானவுடன் அங்கேயே தங்கி அக்காற்றை சுத்தமாக்கி நமக்கு பிராணாதாரமான சுத்தக் காற்றை உண்டுபண்ணுகிறது என்கிறார். இது யாருடைய மஹோபகாரம், யார் செய்யும் நன்மை? அவர் தான் "உயர்வற உயர் நலமுடையவன்" என்றார் ஆழ்வார். அவ்வுயர் நலமுடையவனை அடையவேண்டுமானல் அகங்கார மமகாரங்களை ஸவாஸனையற விடவேண்டும் என்று "நீர் நுமது" என்கிற பாசுரத்தில் ஸாதிப்பர். நான், எனது என்கிற புத்தி நீங்கினால் நானும் எனதும் ஸர்வேச்வரனுடைமையாம். அவ்வுடைமையாக்குதல்தான் ஆத்மஸமர்ப்பணம். மனதை அடக்கி ஆளும் திறமைதான்.

acharya.org

அத்திறமை அடையும் வழியைக் காட்ட "உண்ணுமின்," "சேமின்" "புலகு," "பற்று," "அடங்கு," "ஒடுங்கு" என்னும் ஷட்பதப்ரயோகம் செய்தார். இவற்றின் ஸாரஸ்யத்தைச் சற்று ஆராய்வோம். அறுகால் சிறுவண்டு சாகா ஸஞ்சாரியாய் மதுவைத் திரட்டுமாப்போலே ஆழ்வாரும் சாகோபசாகையான உபநிஷத்துக்களின் ஸாரத்தை க்ரஹித்து இவ்வாறு பதப்ரயோகம் செய்தார் என்று காலக்ஷேப கோஷ்டியில் சில ஸத் வ்ருத்தர்கள் அநுபவிப்பார்கள். "உண்ணுமின்" என்பதற்கு ஸ்மரணம் என்று பொருள். ஸ்மரித்த பிறகு "சேமின்" என்று (ஸங்கம்) நெருங்குதல் வேண்டும். நெருங்கின பிறகு "புலகு" என்று பஜனத்திலே மூட்டுகிறார். பஜித்த வஸ்துவில் "பற்று" என்று விடாது கைப்பிடிக்க வேண்டும் என்கிற அத்யவஸாயம் பிறக்கும். அவ்வத்யவஸாயம் பிறந்தவாறே "அடங்கு" என்று எல்லா சேஷவ்ருத்திகளையும் அவனுக்கே செய்ய வேண்டும் என்கிறார். அப்படிச் செய்தால் "ஒடுங்கு" என்கிற ஸாயுஜ்ய பதவி தானே கைகூடும். இம்மாதிரி படிப்படியாக எம்பெருமானைச் சேர்தல்தான் ஆத்ம ஸமர்ப்பணமாகும். பேருளாளன் ஸந்நிதியில் "உனக்கே நாமாட் செய்வோம்" என்று அநவரதம் பரிசயம் பண்ணிவந்த ஓர் பெருந்துறவி "உண்ணுமின், சேமின்" பரபக்தி தசையையும் "புலகு, பற்று" பரஜ்ஞான தசையையும் "அடங்கு, ஒடுங்கு" பரமபக்தி தசையையும் காட்டும் என்று நிர்வஹித்துப்போருவர். இந்த தசா விபாகங்களை "காதல்," "அன்பு," "வேட்கை," "அவா" என்றும் ஸங்க, காம, அநுராக, ஸ்நேஹாத்யவஸ்தாதி நாமங்களாலே பரபக்தி, பரஜ்ஞான, பரமபக்தி தசைகளாகக் காட்டுமென்பர்.

இவ்வாழ்வார் பரமக்ருபையாலே அஸ்மதாதிகளுக்கு பரமோபதேசம் பண்ணினதால் "தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே." இவர் ஆசார்யபதம் நிர்வஹிக்காமலும், க்யாதிலாப பூஜாபேக்ஷை இல்லாமலும், ஒரு விதிபரதந்த்ராய் இல்லாமலும், பிராட்டி, ப்ரஹ்லாதாழ்வான் போல "ஞாலத்தார் பந்த புத்தியும் அநர்த்தமும் கண்டு ஆற்றாமையும் மிக்க க்ருபையுமிறே" என்று இவருடைய க்ருபையின் ஆதிக்யம் சிக்ஷோபகாரத்தில் ஸித்தமாயிற்று. இவர் தான் அநுபவித்த விஷயம் ஜொள்ளு மாளா இன்பவெள்ளமாதலால் பெருக்கெடுத்து ஒன்று பத்து நூறு ஆயிரமாகப் பல தலைத்து "நீர் பால் நெய் அமுதான வ்ரி நெளிக்குமாப்போல பரபக்த்யாதி ஞானமருதாபத்தி வாய்கரைமிடைந்து மொழிபட்டு அவரில் அந்தாதி என்பபோ

பெறறது" குளததுபபடியில குருவி குடிததுபபோம வீராணத தேரி நாடுபோயும ஆகையாலதான இவரை நாம பரமாசாரயனுகக கொணடாடுகிறோம

போலிக போலிக போலிக

ஸ்ரீமதேராமானுஜாய நம:

பூாவாசாாய தவயாபிமத அஷடாதஶபேத ஸஙகருஹம.

திருமழிசை கோ க அபபன ராமானுஜாசாரியரால பூாவாசாாய ஸமபரதாயதவய விஷயமான கரநதஙகளில, ஸ்ரீ லோகாசாாயா, ஸ்ரீ வேதாநதாசாாயா இவாகளுடைய ஸமபரதாயாாதத நிாவாஹ பேதஙகள, ஆராயநதெடுககபபடடு சுருககமாகவும, ஸுஸபஷடமாகவும ஶலோகருபேண எழுதபபடடதாய 'பூாவாசாாயதவயாபிமதாஷடாதஶ பேதஸஙகருஹம' எனனும பெயருடன, சில ஆஸதிகாகளின பரோணையினபேரில ஸ்ரீமுக ௵ (1934)-ல மணிபரவாள வயாகயானததுடன தெலுஙகு லிபியிலும தமிழ லிபியிலும அசசிடபபடடிருககிறது இககிரநதததின விஷயஙகளைப பாாததும, அநதப பூாவாசாாயாகளுடைய ஸமபரதாயாாதத தாதபாயஙகள பராமாணிகமாயும, தெளிவாயும புலனபடும. ஸ்ரீலோகாசாாயா அருளிசசெயத அஷடாதஶ ரஹஸயகரநதஙகளையும ஸ்ரீ வேதாநதாசாாயா அருளிசசெயத ரஹஸயதரய ஸாரததையும ஆராயநது பாாககவேணடிய கலேஶம படவேணடாம இககிரநதநதனனில, அநதநத நிாவாஹஙகளின பரஸபரம தாரதமயமாவது, வைஷமயமாவது ரஷததும காடடபபடவிலலை திவய பரபநத வயாகயானஙகளில ஸ்ரீ உடையவா, எமபாா, கூரததாழவான, படடா இவாகளுடைய நிாவாஹ பேதஙகள போலவே இநத நிாவாஹபேதஙகளும உளளன 'பிணஙகியமாா பிதறறும, எனகிறவிடததில, விஷயவைலகஷணயாதீனமான பிணககமபோலவே, இஙகும ஸமபரதாயாாதத விஷயவைலகஷணய மடியாகப பிணககம நோநதால, உபாதேயமாகவே கொளளலாம அலலாத போதிறே தயாஜயமாகிறது

மேறசொலலபபடடக கிரநததனை திருமழிசை கோ க அபபன ராமானுஜாசாாயா எனகிற விலாசததிறகு எழுதிபபெறறுககொளளலாம.

---

acharya.org

கோயிலுத்ஸவங்கள்.

மாசி 21உ (4-3-36) தெப்பத்திருநாள் ஸம்ப்ரயைப, பந்தக்காக்ஷி, சாற்றுமுறை.

" 28உ (11-3-36) திருவெள்ளறைத்திருநாள்.

பங்குனி 1உ (13-3-36) உறையூர் தெப்பத்திருநாள்.

" " திருவெள்ளறைப் பெருமாள் வட திருக்காவேரி தீர்த்தம்.

" 7உ (19-3-36) ஸர்வைகாதசி, உறையூர் பந்தக்காக்ஷி, திருவெள்ளறைத்தேர்.

" 14உ (26-3-36) திருமுளை.

" 15உ " ஸேனை முதலியார் நகர் சோதனை.

" 16உ " ப்ரஹ்மோத்ஸவ ஆரம்பம், த்வஜாரோஹணம்.

" 24உ " பங்குனி உத்திரம், கோரதம்.

" 25உ " பூர்ணிமை, ஸப்தாவரணம், சாற்றுமுறை

திருமலை உத்ஸவம்.

[ஸ்ரீமான் பரிசோதகர் மையூர் பண்டித விஜயராகவாசாரியார்.]

அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கை யுறையும் திருமார்பையுடைய திருவேங்கடமுடையான் "கலியுகத்தில் கண் முன்னே விளங்கும் தெய்வம்" என்று உலகத்தார் கொண்டாட ஆநந்தநிலய விமானத்தில் வீற்றிருந்து பக்த கோடிகளை அநுக்ரஹித்துவரும் விஷயம் கையிலங்கு நெல்லிக்கனிபோல் அனைவரு மறிந்ததே.

மண்ணோடும் விண்ணோடும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் மங்களாசாசநம் செய்யும் ஸ்ரீநிவாசனுடைய வாசஸ்தானமாகிய திருமலை, வ்ருஷகிரி, கருடகிரி, ஸிம்ஹகிரி, க்ருஷ்ணகிரி, அஞ்சனகிரி, வேங்கடகிரி, நாராயணகிரி, அல்லது சேஷகிரி என்கிற ஏழு திருநாமங்களையுடைய பர்வதங்களையும் அனேக புண்ய தீர்த்தங்களையுமுடையதாய் விளங்கா நிற்கும். இவ்வளவு மஹிமைவாய்ந்த திருமலையில் திருக்கோயில்கொண்ட திருவேங்கடமுடையானுக்கு உத்ஸவாதிகள் சாஸ்த்ரமான ரீதியை அநுஸரித்தே நடைபெறும்.

acharya.org

1936 மார்ச் 23உ (பங்குனி 11உ) சாந்த்ர ஸம்வத்ஸராதி ஆஸ்தாநம் என்னும் உத்ஸவம் நடைபெறும்.

ஷெ தினத்தில் ப்ராத:காலத்தில் பெரிய ஜீயர், ஏகாங்கி, அர்ச்சகாள், ஆசார்ய புருஷர்கள் முதலான கோயில் அதிகாரிகள் அனைவரும் சன்னிதிக்குவந்து ஸுப்ரபாதம் முதலான நித்யாராதனமும் சாற்றுமுறையும் நடந்தபின் முன்மண்டபத்தில் எழுந்தருளி விசேஷச் சிறப்புகள் அமுது செய்து பஞ்சாங்க ச்ரவணாநந்தரம் கோஷ்டி விநியோகமான பிறகு ஆஸ்தாநம் எழுந்தருள்வர். அப்பால் அப்யாகதர்களனைவர்க்கும் தர்மதர்பணம் நடைபெறும். அதே தினத்தில் கீழ்த்திருப்பதியில் கோவிந்தராஜன் ஸன்னிதியிலும் சக்ரவர்த்தித்திருமகன் சன்னிதியிலும் அதே உத்ஸவம் நடைபெறும்.

காஞ்சீபுரம் உத்ஸவங்கள்.

[ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்]

தேவப்பெருமாள் ஸந்நிதியில் நாளது பங்குனிமீ 1உ 7 நாள் பல்லவோத்ஸவம் நடைபெறும். தினப்படி பகல் 11 மணிக்குப் பெருமாள் நூற்றுக்கால் மண்டபத்திற்கு எழுந்தருளிப் பலவித சிதோபசாரங்களுடன் ஸ்தலபுராணம் வாசிக்கக் கேட்டருள்வது, இரவில் திருவீதிப் புறப்பாடு. 19-3-36உ ச்ரவண நக்ஷத்ரத்தில் முடிவுபெறும்.

ஷெ ஸன்னிதியிலேயே 30-3-36உ முதலாக ஏழுநாள் பங்குனி யுத்திரத்திருநாள் நடைபெறும். இது மலையாள நாச்சியாருடைய திருக்கல்யாணத்திற்காக இந்த திவ்ய தேசத்தில் நடத்தப்படுமுத்ஸவம். 5-4-36உ ஞாயிற்றுக்கிழமை இவ்வுத்ஸவம் முடிவுபெறும். அன்று திருக்கல்யாண மஹோத்ஸவமும், மறுநாள் கந்தப்பொடி வஸந்த மஹோத்ஸவமும் அன்றிரவு பெரிய திருவீதி புறப்பாடும் மிக அழகானவை.

ஸ்ரீயதோக்தகாரி ப்ரஹ்மோத்ஸவம்.

ஸ்ரீ காஞ்சீபுரியில் வெஃகா என்கிற திவ்ய தேசத்து எம்பெருமானாகிய சொன்னவண்ணஞ்செய்த பெருமாளுக்கு 20-3-36உ முதலாக ப்ரஹ்மோத்ஸவம் பரமவிலக்ஷணமாக நடைபெறும். நித்தியம் இரண்டு வேளையும் தேவப்பெருமாளுடைய மாடவீதி

acharya.org

...யும் அலங்கரித்து நடைபெறும் இவ்வுத்ஸவம் அனேகம் பக்தர்களுக்கு ஸேவிக்கவரியது.

ஸ்ரீ ராஜமன்னார் ஸந்நிதி ப்ரஹ்மோத்ஸவம்.

இந்த திவ்ய தேசத்தில் பதினெட்டு நாள் ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறுவது வழக்கம் 11-3 36 தேதி முதலாக இது நடைபெறும் இது இரண்டு ப்ரஹ்மோத்ஸவமாகும் முதல் ஒன்பது நாள் ஸாதாரணமான உத்ஸவமாயிருக்கும் பிந்தின ஒன்பது நாள் மிகவும் ஆச்சரியமான மஹோத்ஸவம் பங்குனியீ ரோஹிணீ நக்ஷத்திரத்தில் உண்டாகிறது. அந்த மஹோத்ஸவத்தில் வித்வத் ஸபைகள் விசேஷமாக நடந்து கொண்டிருந்தன இடையில் சில வருஷமாக நடைபெற வில்லை இவ்வருஷத்தில் பழையபடி நடைபெறுமென்று பலர் எதிர்பார்க்கிறார்கள்

திருவல்லிக்கேணி உத்ஸவங்கள்.

இத்தலத்தில் ஸ்ரீ பார்த்தஸாரதி பெருமாளுடைய திவ்ய விமானத்தில் சில திருப்பணிகள் நடக்கவேண்டியதற்காக, சென்ற தை மாதத்தில் பாலாலய ப்ரதிஷ்டை நடந்திருப்பதால் சில மாதங்களுக்கு ஸ்ரீ பார்த்தஸாரதியின் ஸகல உத்ஸவங்களும் நிறுத்தப்பட்டிருக்கின்றன அழகிய சிங்கருடைய உத்ஸவங்கள் மாத்திரமே நடை பெறுகின்றன நாளது சித்திரை மாதத்தில் ஸ்ரீ பார்த்தஸாரதி ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறுவது அருமையே. மஹா ஸம்ப்ரோக்ஷணம் முடிந்தபிறகு ஷை ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறும். ஷை ஸந்நிதியின் தர்மகர்த்தாக்களில் ஒருவரான ம-ள-ள-ஸ்ரீ வேமூர (ராவ் பஹதூர்) ரங்கநாதம் செட்டியாரவர்களின் பெருமுயற்சியினால் ஷை திருப்பணி விரைவாகவே நடந்து வருகிறது

ஸ்ரீவில்லிபுத்தூர்

[ஸ்ரீ வைஷ்ணவதாஸ பாகவதன்]

இந்த க்ஷேத்ரத்தில் ஆண்டாளவதரித்த திருப்பூர மண்டபத்தில் சுமார் 2, 3, வருஷங்களாக தி கிடாம்பி தேவஸிகாமணி அய்யங்கார் ஸ்வாமிகளால் ப்ரதிதினம் கால க்ஷேபம் நடந்துவருகிறது திருப்பல்லாண்டு முதலாக முதலாயிரம் முடிந்து திரு

ஸ்ரீமான் ஸா ரா ஸ்ரீராமுலு செட்டியார்.

ஸ்ரீமான் ஸா ரா சுப்பைய செட்டியார் என்ற மஹானுபாவர் இச்சென்னை மாநகரில் பகவத்பாகவத ஆசார்ய கைங்கர்ய நிரதராய் சென்னை வந்தா முத்தியப்பன் தெருவிலிருக்கும் ஸ்ரீ உடையவர் சன்னிதிக்கு தர்மகர்த்தராயிருந்து விசேஷமான திருப்பணி முதலான கைங்கர்யங்களைச் செய்து பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம் என்கிறபடி அடியார் நிலை நின்ற வைகுந்தம் சென்றிருக்கிறார் அம்மஹானுபாவரின் ஸத்புத்ரரான ஸ்ரீமான் ஸா ரா ஸ்ரீராமுலு செட்டியாரவர்களும் தூணாதபரதோபம என்கிறபடி அவரைப்போலவே ஆத்ம குணங்களால் •அலங்கரிக்கப்பட்டவராய் பகவத்பாகவத ஆசார்ய கைங்கர்ய துரந்தரராய் ஷை உடையவர் சன்னிதிக்கு தர்மகர்த்தராய் கோபுரமண்டப திருத்தேர் முதலான விசேஷ கைங்கர்யங்களைச் செய்துகொண்டு வருகிறார் இவர் பல்லாண்டு பல்லாண்டாக இக்கைங்கர்யங்களைச் செய்துகொண்டு இருக்கும்படி எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் புரிவாராக இம்மஹானுபாவர் நமது வைஜயந்தி பத்ரிகைக்கு அருசிகைதோறும் ஒரு ரீம் காகிதம் வாங்கிக்கொடுப்பதாக வாக்களித்து அவ்வாறே இந்த மாசிப்புனர்பூச பத்ரிகைக்கு ஒரு ரீம் காகிதம் வாங்கிக்கொள்ளும்படி ரூபா 3—4 . 0 கொடுத்துபகரித்தார் இதேமாதிரி ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தத்தில் அபிநிவேசமுடைய ஆரிய பரபுக்கள் யதோசிதம் பொருளுதவிசெய்து இப்பத்ரிகை சாஸ்வதமாய் நடைபெறுமாறு அநுக்ரஹிக்க வேண்டும்

இங்ஙனம் V இராமானுஜாசாரியார்

பத்ராதிபர்

What an Advocate says —

I have great pleasure in testifying to the efficacy of "VITABS" The tablets were used by me for about 2 or 3 weeks They undoubtedly produced a visible effect in toning up the tired nerves and restoring lost health I understand that very valuable and efficacious ingredients are mixed in the getting up of the same

I congratulate the manufacturer in launching forth this preparation in the midst of other similar preparations that are found in the medical world to-day A trial will convince the weak and anaemic patient.

N KASTURIRANGA IYENGAR,
ADVOCATE, G.T , MADRAS.

THE NATIONAL AGENCIES,

No. [illegible] BROADWAY. 1 G. T MADRAS.

acharya.org

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசக பத்ரிகை

தொகுதி 1	பத்ராதிபர் வடகரை இராமாநுஜாசார்யர்	பகுதி 5

ஸ்ரீ:

ஸ்ரீரங்கநாதாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
யஸ்ஸ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமசீசமத் ||

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
யஸ்ஸ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமசீசமத் ||

வேதவேதாந்த வேதாங்க ஸத்தத்த்வார்த்தப்ரகாசிநீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

வேத வேதாந்த வேதாங்க ஸத்தத்த்வார்த்தப்ரகாசிநீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் |

பங்குனி உத்திரம்

[ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசார்யர்]

நமது வைஜயந்தியின் ஐந்தாவது ஸஞ்சிகை இன்று வெளிவருகின்றமைபால இன்றைத்தினத்தின் பெருமையையும் சிறிது நாம் அநுபவிக்கப் ப்ராப்தமாகின்றது. பங்குனி யுத்திரமென்னும் இந்நாள் பெரும்பாலும் புவனமெங்கும் கொண்டாடப்படுவதாகும்,

8

acharya.org

இது பெரிய பிராட்டியாருடைய திருநக்ஷத்திரமென்று பெரியோர்களால் போற்றப்படுகின்றது. இங்குச் சில விமர்சங்கள் செய்ய நேர்ந்திருக்கையால் அது செய்வோம்.

இது நம்மாழ்வாருடைய திருநக்ஷத்திரமென்றும், இது திருமங்கையாழ்வாருடைய திருநக்ஷத்திரமென்றும் இங்ஙனே ஒரே திருநக்ஷத்திரத்தை ஒவ்வொரு மஹநீயருடைய திருநாளாக நாம் வழங்கி வருவதானது இந்நிலவுலகில் அவரவர்கள் திருவவதாரஞ் செய்தருளின நாளென்பது பற்றியே யாம். எம்பெருமானும் ஸ்ரீராம க்ருஷ்ணாதி ரூபேண திருவவதாரஞ் செய்தருளின காலத்து இருந்த நக்ஷத்திரத்தையிட்டு ஸ்ரீராம பிரானுடைய திருநக்ஷத்திரம் புநர்வஸு என்றும், கண்ணபிரானுடைய நக்ஷத்திரம் ரோஹிணியென்றும் ஸ்ரீந்ருஸிம்ஹ மூர்த்தியின் நக்ஷத்திரம் ஸ்வாதியென்றும் இப்புடைகளிலே வழங்கி வருகிறோம்.

கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலிய அர்ச்சாவதாரத் திருப்பதிகளில் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு திருநக்ஷத்திரத்தை எம்பெருமானுடையதாகக் கொண்டாடக் கண்டு வருகிறோம். திருவேங்கடமுடையானுக்குத் திருவோணமென்றும், அழகிய மணவாளனுக்கு ரேவதியென்றும், பேரருளாளனுக்கு ஹஸ்தமென்றும் இங்ஙனே வழங்கி வருவதானது அந்தந்தத் திருப்பதியெம்பெருமான்கள் அந்தந்தத் திருநக்ஷத்திரங்களில் திவ்ய மங்கள விக்ரஹ பரிக்ரஹம் பண்ணியருளினார்களென்பதை நிமித்தமாகக் கொண்டது என்று பெரியோர்கள் அருளிச்செய்யக் கேட்டிருக்கை.

நித்யஸூரிகளாகிய ஸேனை முதலியார், பெரிய திருவடி, திருவாழியாழ்வான் முதலானோர்க்குப் பூராடம், சித்திரை, ஸ்வாதி முதலிய திருநக்ஷத்திரங்கள் திருவவதார நாட்களாக வழங்கப்பட்டு வருகின்றனவே, இதற்கு என்ன நிதானம்? இந்தத் திருநக்ஷத்திரங்கள் ஸகல திவ்ய தேசங்களிலும் ஒரே விதமாகவே கொண்டாடப்பட்டு வரக் காண்கையாலே, ஸ்ரீராம க்ருஷ்ணாதிகள் விபவாவதாரஞ் செய்தருளி ஒவ்வொரு திருநக்ஷத்திரத்தைப் பெற்றதுபோல ஸேனை முதலியார் முதலான ஸூரிகளும் ஏதேனும் விபவாவதாரம் செய்தருளி ஒவ்வொரு திருநக்ஷத்திரத்தைப் பெற்றார்களோ? என்று சிலர் கேட்க நேருகின்றது. இவ்வண்ணமே பங்குனியுத்திரம் பெரிய பிராட்டியார் திருநக்ஷத்திரமென்றால் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் எந்த அவதாரத்தைப்பற்றி இந்த வ்யவஹாரம் நிகழ்ந்தது?

acharya.org

(ராகவத்வேऽபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி, விஷ்ணோ ரந்யேஷு சாவதாரேஷு ஏஷா அநபாயிநீ) தேவத்வே தேவதேஹோயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ, விஷ்ணோர் தேஹாநுரூபாம் வை கரோத்யேஷாத்மநஸ் தநும்" என்று ஸ்ரீபராசரபகவான் பேசினபடியே ஸ்ரீ மஹாலக்ஷ்மியும் ஸீதை யென்றும் ருக்மிணி யென்றும் பலபல திருநாமங்களோடே செய்தருளியிருக்கும் விபவாவதாரங்களில் எந்த அவதாரத்தில் பங்குனி யுத்திரம் திருநாளாக வாய்த்தது? என்றும் பலர் கேட்க நேருகின்றது.

இவ் விஷயத்தில் பெரியோர்கள் ஊஹமாக அருளிச் செய்யும் சில வார்த்தைகளை இங்கு விஜ்ஞாபிக்கிறேன். எம்பெருமான் அர்ச்சாவதாரங்களில் ஒவ்வொரு தலத்தில் ஒவ்வொரு திருநக்ஷத்திரத்தைப் பெற்றிருந்தாலும், பொதுவாக எம்பெருமானுடைய திருநக்ஷத்திரம் திருவோணமென்று ஒரு ப்ரஸித்தியுள்ளது. நரஸிம்ஹாவதாரம் ஸ்வாதியில் என்று ப்ரஸித்தமாயிருக்கவும் "திருவோணத் திருவிழவில் அந்தியம்போதி லரியுருவாகி" என்று பெரியாழ்வார் அருளிச் செய்யக் காண்கிறோம். கண்ணபிரான் ரோஹிணியில் திருவவதரித்தானென்பது ப்ரஸித்தமாயிருக்கவும் "நீ பிறந்த திருவோணம் இன்று நீ நீராடவேண்டும்" என்றும் "திண்ணார் வெண் சங்குடையாய் திருநாள் திருவோண மின்றேழுநாள்" என்றும் யசோதை கூறுவதாகப் பெரியாழ்வார் பணிக்கக் காண்கிறோம்.

நீ பிறந்த திருவோணமென்றவிடத்து வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகள் அருளிச்செய்வதாவது—"இதுதான் வைஷ்ணவ நக்ஷத்ரமாகையாலும் அவதாராந்தரங்களிலே இந்த நக்ஷத்ராந்வய முண்டாகக் கூடுகையாலும் தாமி ஐக்யத்தைப்பற்றச் சொல்லுகிறது" என்று. வேதத்திலும் ச்ரோணா நக்ஷத்ரம் விஷ்ணுர்தேவதா "ச்ரோணா நக்ஷத்ரம் விஷ்ணுர் தேவதா" என்று ஓதப்பட்டிருக்கிறது. திருவோணம் ஸ்ரீமஹாவிஷ்ணுவை தேவதையாகக்கொண்ட நக்ஷத்ரமென்பது பொருள். வேதமானது எந்தக் காரணத்தைக்கொண்டு திருவோணத்தை விஷ்ணு நக்ஷத்திரமாக ஓதிற்று என்பதைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்யத் தேவையில்லை. காரணம் இருக்கவுமாம், இல்லையாகவுமாம். விஷ்ணுவுக்குத் திருவோணம் நக்ஷத்திரமென்று வேத புருஷன் ஓதியிருக்கிறானென்று நாம்கொள்வோம்.

acharya.org

“ஜ்யேஷ்டே விம்ஸதிஸம் வ்யதீதாஸு—மத்யே விரிஞ்ச கிரீசம் ப்ரதமாவதார:” என்று பட்டரும், “விம்ஸயோஸ்து ஜ்யேஷ்டாஸு விஷ்ணுரிதி ய: வ்யதீதாஸு—விதீசயோஸ்தே மத்யேது விஷ்ணுரிதி ய: ப்ரதமாவதார:” என்று ஆழ்வானும், ‘ஜ்யேஷ்டே விம்ஸதிஸம்வ்யதீதாஸு ஹிதாவதார: மத்யே விரிஞ்ச சிவயோர் விஹிதாவதார:” என்று தேசிகனும் அருளிச் செய்தபடியே விஷ்ணுவான முதல் திருவவதாரம் திருவோண நக்ஷத்ரத்திலாயிற்று என்று கொள்ளலாமென்பர். அதுபோலவே ஸ்ரீமஹாலக்ஷ்மியும் திருப்பாற்கடலிலிருந்து திருவவதரித்த ஸமயமோ அல்லது ப்ருகு மஹர்ஷிக்குப் புத்ரியாகத் திருவவதரித்த ஸமயமோ பங்குனி யுத்திரமாக இருந்திருக்கக் கூடுமென்கிறார்கள். பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளில் ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு உத்திரத்திலும், ஸேனை முதலியாருக்குப் பூராடத்திலும், கருத்மானுக்குச் சித்திரையிலும் — — — விசேஷத் திருவாராதனங்களும் நிவேதனங்களும் ஸமர்ப்பிக்குமாறு கட்டளையிட்டிருப்பதாகவும், அதுபற்றியே ஸேனை முதலியார் முதலானோர்க்குப் பூராடம் முதலியன திருநக்ஷத்திரமாகக் கொள்ளப்பட்டனவாகவும் சில பெரியோர்கள் பணிக்கின்றனர். இவ்விஷயத்திற் குறிப்பான ஸ்ரீ பாஞ்சராத்ர ப்ரமாணங்களை மற்றொரு சமயம் ஸங்க்ரஹித்து வெளியிடுவோம். சாஸ்த்ர பலத்தாலே பங்குனி யுத்திரத்தை ஸ்ரீ மஹா லக்ஷ்மியின் திரு நக்ஷத்திரமாகக் கொள்வதென்று இதனால் தேறுகின்றது.

மற்றுஞ் சில பெரியோர்கள், ஸ்ரீரங்கநாதனுடைய திரு நக்ஷத்திரம் சித்திரையில் ரேவதி யென்று ஏற்பட்டதுபோல ஸ்ரீரங்கநாச்சியாருடைய திரு நக்ஷத்திரம் பங்குனி யுத்திரமென்று ஏற்பட்டிருக்கிறது, இது அர்ச்சா விக்ரஹ பரிக்ரஹ நிபந்தநம்—என்கிறார்கள். இங்ஙனேயாகில், இத் திருநாள் ஸ்ரீ ரங்கத்திற் போலவே மற்றும் பல பல திவ்ய தேசங்களிலும், திவ்ய தேசமல்லாத க்ஷேத்ரங்களிலும் மிக்க விபவமாகக் கொண்டாடப் படுதற்கு யாது காரணம்? என்று கேள்வி பிறக்கின்றது. ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தினுடையவும் ஸ்ரீரங்கநாச்சியாருடையவும் ப்ராதாந்யத்தை இசைந்தே இத்திருநாள் எங்குங்கொண்டாடப் படுகின்றது என்று சிலர் விடையளிப்பதுமுண்டு. பஹுச்ருதர்களான பெரியோர்கள் தாம் நிஷ்கர்ஷிக்க வேண்டுமிவ்விஷயத்தில் மிகச் சிற்றறிவாளனாகிய நீசனேன் என்ன நிர்த்தாரணம் செய்யலாகும்! பொதுவில் இது பெரிய

acharya.org

பிராட்டியாருடைய திரு நக்ஷத்ரமென்ற கொள்கை ஸர்வஜ்ஞ ஸம்மத மாகையாலே அதையடியொற்றி இன்றைத் தினத்தின் பெருமையை அநுபவிக்கவேண்டிய ஸ்தானத்தில் பெரிய பிராட்டியாருடைய குணாநுபவத்தைச் சிறிது செய்வேன்.

எம்பெருமானுக்குப் பிராட்டியால் ஏற்றமா? பிராட்டிக்கு எம்பெருமானால் ஏற்றமா? என்கிற வொரு விசாரம் நமது ஆசார்ய கோஷ்டியில் உண்டு இந்த விசாரமே அநாவச்யகம் என்றும், ஒருவரைத் தாழ்த்தி மற்றொருவரை ஏற்றமாகச் சொல்லவேண்டியது எதற்காக என்றும் சிலர் கூறுவர் பிராட்டியும் மற்ற சேதநர்களைப் போலே எம்பெருமானுக்கு அடிமைப்பட்டவளே யாதலால் இவளால் எம்பெருமானுக்கு ஏற்றமென்று சொல்வதற்கு என்ன ப்ரஸக்தி யென்பர் சிலர் ச்ருதிஇதிஹாஸ புராணங்களைப் பின்பற்றி நம் ஆசார்யர்கள் பரம ரஸமாக அருளிச் செய்தவற்றை இங்கு விஜ்ஞாபிக்கிறேன் "[illegible]—சரத்தயா தேவோ தேவத்வமச்நுதே" என்பது ஒரு வேதவாக்யம். இதை நம் ஆசாரியர்கள் உதாஹரித்து வியாக்கியானிக்குமிடத்து எம்பெருமான் பிராட்டியினாலேதான் தெய்வத்தன்மை பெறுவதாகக் கூறுவதை இவ்வாக்கியத்தின் பொருளாக அருளிச்செய்துள்ளார்கள்.

இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீ ராமாயணத்தில் இராவணனுக்கு மாரீசன் ஹிதமுரைக்குமிடத்தில் '[illegible]—அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா" என்கிறான் இராவணா ' நான் விச்வாமித்ர யாகத்தில் அந்த ஸ்ரீராமனுடைய வீரம் கண்டிருக்கிறேன், அப்போது அவன் பிரமசாரியாயிருந்தான், அந்த நிலைமையிலேயே அவனுடைய பிரா அஸஹ்யமாயிருந்தது பிறகு அவன் ஜநகராஜன் திருமகளைக் கைப்பிடித்தவனாயினான் அதனால் அவனுக்குண்டான அதிசயம் சொல்லிமுடியுமோ? பிராட்டியைக் கைப்பிடித்ததனாலே விலக்ஷணமான வொரு தேஜஸ்ஸை வடிவெடுத்தவனாக வன்றோ இராகவன் இராநின்றான்—என்றான் மாரீசன். முன்னே காட்டிய வேத வாக்கியத்திற்கு இது உபப்ருமஹணமாகவுள்ளது

இவ்வர்த்த விசேஷத்தை நம் ஆசார்யர்கள் தங்கள் திவ்ய ஸூக்திகளாலே மிகவும் உபப்ருமஹித்தருளினார்கள் பட்டர் ஸ்ரீ குணரத்ந கோசத்தில் பிராட்டியின் வைபவமாக அருளிச் செய்த வற்றில் சில அர்த்தங்களை இங்கு அநுபவிப்போம்.

acharya.org

"வேதாஜ்ஞா லக்ஷ்யவிஜ்ஞாநம் ஶாஸ்த்ரஹீநாஸ்ஸவி யத்ராஹவிப்ரேஷு ஹூராஜீ— வேதாந்தாஸ் தத்த்வசிந்தாம் முரபிதுரஸி யத்பாதசிஹ்நைஸ் தரந்தி" என்கிற ஸ்ரீஸூக்தி மிக அற்புதமானது. எது பரதத்துவம்? என்று விசாரிக்கப்புகுந்த வேதாந்தங்கள் ஸ்ரீமந் நாராயணனுடைய திருமார்பில் பிராட்டியின் திருவடிச் சுவடுகண்டு 'இவனே பரம புருஷன்' என்று நிர்ணயித்துக் கவலை தீர்கின்றனவாம். இதனால் பிராட்டியின் ஏற்றம் அறியற்பாலது. ஆனதுபற்றியே நம் ஆசார்யர்கள் எம்பெருமானை விசேஷிக்குமிடங்களில் ஸ்ரிய:பதியாய் என்பதை முந்துற அருளிச் செய்கிறார்கள்.

பட்டர் ஸ்ரீரங்கநாதனை இருநூற்று முப்பத்து ச்லோகங்களால் துதித்துவிட்டுப் பின்பு ஸ்ரீரங்க நாச்சியாரைத் துதிக்கவிழைந்து பத்தெட்டு ச்லோகங்கள் பணித்து மீண்டும் ஸ்ரீரங்கநாதனிடஞ் சென்று அப்பெருமானை நோக்கி ஒரு ச்லோகம் கூறுகின்றார்—

ஶ்ரிய: ஶ்ரீ: ஶ்ரீரங்கேஶய தவ ச ஹ்ருத்யாம் பகவதீம் ஶ்ரியம்
த்வத்தோऽப்யுச்சைர் வயமிஹ பணாம: ஶ்ருணுதராம் ।
த்ருஶௌ தே பூயாஸ்தாம் ஸுகதரலதாரே ஶ்ரவணத:
புநர்ஹர்ஷோத்கர்ஷாத் ஸ்புடது புஜயோ: கஞ்சுகஶதம் ॥—

ச்ரிய: ஸ்ரீ: ஸ்ரீரங்கேசய! தவ ச ஹ்ருத்யாம் பகவதீம் ச்ரியம் த்வத்தோப்யுச்சைர் வயமிஹ பணாம: ச்ருணுதராம், த்ருசௌ தே பூயாஸ்தாம் ஸுகதரலதாரே ச்ரவணத: புநர் ஹர்ஷோத்கர்ஷாத் ஸ்புடது புஜயோ: கஞ்சுகசதம்" என்று (இதன் கருத்து) திருவுக்குந் திருவாகிய திருவரங்கநாதனே! தேவரீருக்கும் இனியளான நாச்சியாரை தேவரீருக்கு மேற்பட உயர்த்திப் புகழப்போகிறேன், தேவரீர் பொறுமையினால் ஆதரவோடு திருச்செவி சாத்தியருளவேணும்; அங்ஙனம் தேவரீர் கேட்டருள்கிறீரென்பதை இங்கு எல்லாரும் தெரிந்துகொள்ளவேணும், நாச்சியார் விஷயமான துதிமொழிகளை அடியேன் விஜ்ஞாபிக்கும்போது தேவரீருடைய திருக்கண்கள் ஆனந்த மிகுதியினால் கருவிழி சுழன்று மிளிரவேணும். அவ்வளவே போதாது, ஆனந்தத்தினால் திருமேனி பூரித்துக் கவசம் இருபிளவாகி யொழியவேணும், மறுபடியும் புதிய கவசம் கொணர்ந்து சாத்துவார்கள், அதுவும் பிளவுண்ணவேணும். இப்படியே நூற்றுக்கணக்கான கவசங்கள் பிளவுபடுமாறு தேவரீர் ஆனந்தமிகுதியைக் காட்டிக்கொண்டே திருச்செவி சாத்தவேணும்

acharya.org

என்பதாம். இதனாலும் பிராட்டியின் வைபவம் மிக்க மேம்பாடுடைய தென்பது விளங்கும்.

மற்றொரு ச்லோகமும் காண்மின் —"ஸ்வாமீ ஸ்ரீயா: ஸோ யதீச்வரி ஸ்ரீரங்கத்தாத்ரீ—அபாங்கா ஸ்ரீயம் ஸோ யதுபரி பரம் பாரம்யம் தத்பூத" என்கிறார். பிராட்டியின் கடாக்ஷாதிசயங்கள் பட்டே விட்டும் பாரம்யம் என்கிறது இதனால்.

எம்பெருமானுடைய பெருமை பிராட்டியின் ஸம்பந்தத்தினால் வந்தது என்பதற்கும் பிராட்டியின் பெருமை இயற்கையானது என்பதற்கும் த்ருஷ்டாந்தம் காட்டுகிறார், —புஷ்பத்திற்கு ஏற்றம் எதனாலே என்று உலகத்தில் கேள்வி பிறப்பதுண்டு, பரிமளத்தினால் என்று விடை யளிப்பதுண்டு. இதுபோல 'பரிமளத்திற்கு எதனால் ஏற்றம்?' என்று உலகில் கேள்வி பிறப்பது கிடையாது. இயற்கையாகவே அதனுடைய ஏற்றம் ப்ரஸித்தம். இவ் வண்ணமாகவே, எம்பெருமானுக்கு யாரால் ஏற்றம் என்கிற கேள்வியும், பிராட்டியினால் என்கிற விடையும் உண்டு, பிராட்டிக்கு யாரால் ஏற்றம்? என்கிற கேள்வியே கிடையாது, அவளுடைய ஏற்றம் ஸ்வதஸ்ஸித்தம் என்றும் அருளிச் செய்கிறார்.

(தத்வமுக்தாகலாப மித்யாதி ச்லோகம் காண்க)

எம்பெருமானுடைய பெருமை பிராட்டியதீனம் என்று சொன்னால் அப்பெருமைக்கு ஒருகுறைபாடு ஏற்படாதோ? என்று சிலர் சங்கிப்பதை அநுவதித்து விடையளிக்கு மழகு ஆச்சரியமானது, மாணிக்கமானது ஒளியினால் மேன்மை பெறுவதாயினும் பராதீன மென்கிற குறைபாடு அதற்கு உண்டாவதில்லையன்றே என்கிற த்ருஷ்டாந்தம் இங்குக் காட்டியருளுகிறார். ஆக இவற்றால் ஏற்படுவ தென்ன? பூவும்மணமும் மணியுமொளியும் போலே பெருமாளும் பிராட்டியும் விட்டுப்பிரியகில்லாதவர்களென்றதாகிறது. மணத்தைக்கொண்டு புஷ்பத்தை விரும்புவது போலவும் ஒளியைக்கொண்டு ரத்னத்தை விரும்புவது போலவும் பிராட்டியைக்கொண்டு எம்பெருமானை விரும்புகிறோமென்று காட்டும் முகத்தால் பிராட்டியின் பெருமை விளக்கப்பட்டதாகும்.

கம்பர் வாலிவதப் படலத்தில் பிராட்டியின் பெருமையை விளக்கியிருக்கும் பரிசும் இங்கு ப்ரஸங்காத் குறிப்பிடலாகிறது. வாலி ஸ்ரீ ராம பாணத்தினால் அடிபட்டு வீழ்ந்து பெருமானை நோக்கிப

acharya.org

பல்பல பேசுகையில் "அரக்கரோர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறோர், குரக்கினத்தரசைக் கொல்ல மனுநெறி கூறிற்றுண்டோ, இரக்கமெங் குகுத்தாயென்பால் எப்பிழை கண்டாயப்பா, பரக்கழி யிது நீ பூண்டால் புகழை யார் பரிக்கற்பாலார்?" என்று கேள்வி கேட்டான். இதற்குப் பெருமாள் பணிக்கிற விடைகள் ஒரு புறமிருக்க, வாலிதானே தானறிந்த விடையொன்று விளம்புகின்றான் காண்மின் —

"கோவியல் தருமமுங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுதவொண்ணா வுருவத்தா யுடைமை யன்றோ?
ஆவியைச் சனகன்பெற்ற வன்னத்தை அமிழ்தின்வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனைபோலுஞ் செய்கை."

என்ற செய்யுளில் பின்னடிகள் நோக்கத் தக்கன. பிராட்டி உடனிருந்தால் நீ இத்தகைய இரக்கமற்ற செயல் செய்திருக்கமாட்டாய், அவள் பிரிவுற்றதனாலேயே நீ இங்ஙனே செய்யலாயிற்று என்றபடி. மஹாவித்வானான அரசாணிபாலை, வெங்கடாசாரியஸ்வாமியும் இக்கருத்தைத் தமிழ் லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் ஒரு சுலோகம் கூறியுள்ளார்,—

"த்வய்யேவாயத்தே க்ருபா
ரகுபதேர்தேவஸ்ய ஸத்யம் யதோ
வைதேஹி த்வத்ஸங்கினீ
பகவதா வாலீ நிராகா ஹத: ।
நிர்தயே காபி வதம் வத்ஸ
த்வது ஸாந்த்வயே த்வதங்க வ்யதாம்
க்ராவாணோப*யவித: பதங்க ஸரண:
காகோ விவேகோஜ்ஜித: " ॥

த்வய்யேவாயத்தே க்ருபா
ரகுபதேர்தேவஸ்ய ஸத்யம் யதோ
வைதேஹி த்வத்ஸங்கினீ
பகவதா வாலீ நிராகா ஹத
நிர்தயே காபி வதம வத்ஸ
த்வது, ஸாந்த்வயே த்வதங்க வ்யதாம
க்ராவாணோப*யவித பதங்க ஸரண:
காகோ விவேகோஜ்ஜித:

* அவித: ரக்ஷிக்கப்பட்டது

acharya.org

இதனைக் கருத்து — பெரிய பிராட்டியாரே! பெருமாள் காருணிகரென்று பேர்பெற்றிருந்தாலும் அவருடைய கருணை உம்முடைய அதீனமேயாகும் இஃது எங்ஙனே தெரிகிறதென்னில், அப் பெருமாள் உம்மோடு கூடியிருந்த காலத்தில் செய்த செயலையும் உம்மைப் பிரிந்திருந்த காலத்தில் செய்த செயலையும் நோக்குமிடத்து இது நன்கு தெரிகின்றது. காகாஸுரனிற் காட்டில் கொடிய பாதகியில்லை, பெருந்தீமையனான அவனையும் பெருமாள் காத்தருளினது உம்முடைய ஸாந்நித்ய ப்ரபாவத்தினாலன்றோ? நீர் ஸந்நிதியிலில்லாத காலத்தில் அவர் தாடகையென்கிற ஒரு பெண்ணைக் கொலைசெய்தார், நீர் இலங்கையம்பதியிலிருந்த காலத்து அவர் வாலியை வதஞ் செய்தார் ஆகவே உம்முடைய ஸம்ச்லேஷம் அவர்க்குக் காருண்யத்தை ஊட்டுகின்றதென்றும், உம்முடைய விச்லேஷம் அவர்க்கு அதனை ஓட்டுகின்றதென்றும் சொல்லத் தட்டுண்டோ? என்றவாறு

"ஸஹவஸதிஷு த்வம் ஸ்வாமிந: ஸம்ச்லிஷ்டதஜ்ஜயந்தாத்ய அநுக்ரஹஸ்யைம் மமோ நிக்ருஹ்யஜாதநிக்ரஹஸ்யாத்—ஸஹதாமஸீம சௌரே: ஸ்ம மந்த்ரிதஜக்தித்வாம் அநுக்ரஹமயீம் வந்தே நித்யமஜ்ஞாத நிக்ரஹாம்" என்ற தேசிக திவ்யஸூக்தியும் பிராட்டியின் பெருமையை வெகு அழகாகக் காட்டும் இன்னும் விரிப்பிற் பெருகும்.

எம்பெருமானார் கத்யத்ரயமருளிச் செய்ததும் இப் பங்குனி யுத்திரத் திருநாளினன்றே

ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தம்

[பத்ராதிபா வடகரை இராமாநுஜாசாரி]

சேஷத்வமே ஆத்மாவிற்கு ஸ்வரூபம் என்று கீழ் ஸங்கிகையில் சொல்லப்பட்டிருக்கிறது இதனால் சேஷித்த அபிப்ராயத்தை விளக்கை சேஷபூதனுக்கு ஸ்வரூபம் என்று அர்த்தமாயிற்று அந்த சேஷத்வம் சேஷசேஷிக ளிருவர்களுடைய இச்சையினாலும், இருவர்களுடைய இச்சையன்றியில் வேறொருவனுடைய இச்சையினாலும், சேஷபூத னொருவனுடைய இச்சையினாலும், சேஷியினுடைய விச்சை மாத்ரத்தாலுமாக நான்கு வகைப்பட்டிருக்கும்

acharya.org

(1) யஜமானனுககு பருதயன சேஷ பூதனுமிடததில இவன நமககுக கிஙகர வருததியைச செயது அதிஶயததை யுணடுபண ணக கடவனுதலின இவன நமககு வேணடுமெனகிற ஶேஷியான யஜமானனுடைய விசசையினுலும, இநத யஜமானனுககு நான அதி ஶயததை யுணடுபணண விருககினறமையால இவன விஷயததில நனருகக கைஙகாயஙகளைச செயயவேணடும எனகிற சேஷபூத னுன பருதயனுடைய விசசையினுலும உபாதேயனு யிருககையி னுலே சைதனயமுளள சேஷிககு சைதனயமுளள பருதயன சேஷபூதனுகக கடவன

(2) யாகததிறகு பாராசயோதீசயாத யஙகஙகள சேஷ பூதங களாமளவில அவவிரணடிறகும யாதொரு விசசையுமினறிககே யிருகக அஙகியான யாகததிறகு அஙகமாகிய இக காமஙகளெலலா மதிஶயாவஹஙகளா யிருககையால இவைகள இநத யாகததிறகு வேணடும எனகிற யஜமானனுடைய இசசையினுல உபாதேயஙகளா யிருககையாலே அசேதனமான சேஷி விஷயததில அசேதநஙக ளாகிற பராயோசதீசயாத யஙகஙகள சேஷபூதஙகளாகக கடவன

(3) யாகததிறகு ருதவிகாதிகள சேஷபூதாகளாகுமபொழுது சேஷியான யாகம அசேதனமா யிருககையால அதறகு யாதொரு விசசையு மினறிககேயிருகக இநத யாகததை யாதொரு குறைவின றிககே அதிஶயித திருககுமபடி நாமெலலோரும ஜாகரூகாகளாக விருநது இநத யாகததை நடததக கடவோம எனகிற சேஷபூதா களான ருதவிகாதிகளுடைய விசசையினுல அசேதனமான யாக மாகிற சேஷிககு சைதநயமுளள ருதவிகாதிகள சேஷபூதாகளாகக கடவாாகள

(4) யஜமானனுககு கருஹாதிகள சேஷமாமபொழுது அசே தனஙகளாகிற கருஹாதிகளுககு யாதொரு விசசையுமினறிககே யிருகக இவைகளில நாம ஸுகமாக வாஸம பணணுகையால இவை கள நமககு அதிஶயாவஹஙகளா யிருககு மாதலின இவைகள நமககு வேணடும எனகிற யஜமானனுன சேஷியி னிசசையினுல கருஹாதிகள சேஷபூதஙகளாகக கடவன

இவவாறு நானகு வகைபபடட சேஷதவ பேதஙகளை இசசயா யதுபாதேயம யஸயாதிஶயஸிததயே உபயாநுப யைகைக ஜுஷா

acharya.org

தேள சேஷ சேஷிணள என்று பூருவாகள சொலலி வைததாாகள இபபடியே மறற விடஙகளிலும பரகதாதி ஶயாதாநேசசயா உபாதே யதவ மாதரமே சொலலபபட்டிருககிறது இவவாறு சேஷசேஷித வஙகள சேஷ சேஷிகளிருவாககும அதிஶயாவஹஙகளாகப பொது வாக்க கூறபபட்டிருநதாலும தரயஏவ அதநா ராஜந பாாயா தாஸ ஸததாஸஃத: யததே ஸமதிகசசநதி யஸயைதே தஸய தததநம ॥ சேஷ பூதாகளுடைய வதிஶயஙக ளெலலாம சேஷியி னுடையதே என்று மஹா பாரதததில சொலலபபட டிருககையிலை சேஷ பூதனுககு ஸவாதிஶய மொன்று மிலலாமையால பரகதாதிஶயாதா நேசசயா உபாதேயதவமேவ யஸய ஸவரூபம ஸ: ஶேஷ: பர: ஶேஷீ என்று அவதாரணாததமான ஏவகாரததோடு கூடிய சேஷததமே நிதயோதாஷமான சேஷதவம என்று திருவுளளம பறறி எமபெரு மானு மருளிச செயதது

இநத சேஷதவமே சேஷியினுடைய இஷடபபடி விநியோ காா ஹமா யிருககும இஷட விநியோகாாஹதவமாவது சேஷியான ஸாவேஶவரன தனனுடைய அபிபராயநுகுணமாக விநியோகம கொளளுகைககு இச சேதனன யோகயனா யிருககை அதாவது அசிததுப போலே தனககெனறொரு பரயோஜனமினறிககே அவ னுககே அா ஹனாயிருககை

இவவாததததை யறிவிபபது பரணவ நமஸஸுககள பரண வததால மநஜஞானே எனகிற தாதுவிலே நிஷபநநமாய ஜ ஞாநாதத வசியான மகாரததாலே பரகருதி விலகஷணமாய இருபததைநதா வது ததவமாய ஜஞாநமாய ஜஞாதாவுமான ஆதமா அகாரவாசயனான ஸாவேஶவரனுககே சேஷபூதன என்று சொலலபபடுகிறது இத னால ஈஶவரன ஸவதநதரனாகையால தனககே யாயிருபபன அசிதது சைதனய மிலலாததாகையால தவமமே என்றால அஹமமே என்று சொலலுகைககு யோகயதை யினறிககே பராாததமாகவே யிருககும அகாரததிலுளள லுபத சதுாததியினால சொலலபபட்ட ஶேஷதவததையும, மகாரததால சொலலபபட்ட ஜஞாதருதவத தையு முடையனான சேதனன, ஜஞாதருதவபலததால ஸவபரயோ ஜனபரனாகைககும சேஷதவ பலததால பரனுடைய பரயோஜநம தனககு பரயோஜந மெனகைககும பொதுவா யிருககுமெனபது சொலலபபட்டது

acharya.org

நம: (தனக்குரியன் அன்று) என்கிற வித்தால் பரனுடைய ப்ரயோஜநார்த்தமா யிருக்கை யொன்றையே தனக்கு ஸ்வரூபமாக வுடையவன் என்பது சொல்லப்பட்டது. அதாவது அசித்துப் போலே யிருக்கை. இதையே நம்மாழ்வாரும் தனக்கே யாக வெனைக்கொள்ளுமீதே. யான் வேண்டுவதென் றருளிச்செய்தார். அவனுக்கே யாகவுமன்றிக்கே அவனுக்கும் தனக்குமாகவு மன்றிக்கே தனக்கேயாக வெனைக் கொள்ளவேணும் என்கை. இதனால் ப்ரணவ நமஸ்ஸுக்களால் ஸம்ஸிக்ஷிதமான ஸ்வரூப யாதாத்ம்யஜ்ஞாநமுடைய வதிகாரிக்கு ஈஶ்வரன் முகமலர்த்திக்கே யுறுப்பாகத் தன்னை ஸ்வாபிமத கைங்கர்யங்களிலே அசித்தைப்போலே விநியோகம் கொள்ளுகைக்கு யோக்யனா யிருக்கை யாகிற சேஷத்வமே ஆத்மாவிற்கு ஸ்வரூபமென்றதாயிற்று இவ்வர்த்தத்தை பரதாழ்வானும் ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய(ராஜ்யமும் ராமனுக்குசேஷம் அதுபோலே நானும் ராமனுக்கு சேஷம் சேஷத்வத்தில் ராஜ்யத்திற் காட்டில் எனக்கு ஒரு விசேஷமும் கிடையாது) ஆதலின் இவ்விஷயத்தில் ராஜ்யமும் நானும் ஒன்றே. எனறு விளக்கிக்காட்டினனிறே. ... அடுத்த சித்திரையில் செய்ய திருவாதிரையில் இவ் வாத்மாக்களின் பேதங்களும், அவைகளின் ஸ்வரூபங்களும் யதாமதி தெரிவித்துக் கொள்ளப்படும்.

ஸ்ரீ

ராமாயணத்தின் புருஷாகார பாவப்ரதிபாத ப்ரகாரம்

திருமழிசை கோயில்

[கந்தாடை அப்பன் அய்யன் ராமாநுஜாசார் ஸ்வாமி]

ஸ்ரீராமாயணமானது உபக்ரமம் தொடங்கி பரிஸமாப்தியளவும் ஒவ்வொரு காண்டத்திலும் புருஷகாரபாவத்தை ப்ரதிபாதிக்கிறது. எங்ஙனே யென்னில், பால காண்டத்திலே, ஜனக மஹாராஜன் பெருமாளைப் பார்த்து 'ஸஹதர்ம சரீ தவ,' "நீர் உபாயமாமிடத்தில் இவள் புருஷகார பூதையா யிருப்பள்" என்று பணித்துப் பிராட்டியை நீர்வார்த்துக் கொடுத்தமையால் புருஷகார யோகம் வெளியிடப்பட்டது. அயோத்யா காண்டத்தில் இளைய பெருமாள் பெருமாளை யனுவர்த்தித்துக் காட்டில் சென்று ஸர்வவித கைங்கர்யங்.

acharya.org

களையும தான பணணுவதை அவா அஙகீகரிபபதறகாக 'ஸீதா முவா சாதியஸா:' என்று பிராட்டியைப் பாாதது "புருஷகாரமாக வேணும" என்று பணிததமையால புருஷகார பரிகரஹம சொல்லபபடடது ஆரணய காண்டததில மஹரிஷிகள பிராட்டி முன னிலையில 'தே வயம பவதா ரக்ஷயா:' என்று ஆஸரயிககப பெரு மாளும ராக்ஷஸாகளை நிரஸிபபதாக அவாகளிடம பரதிகஞை பணண, அநத பரதிகஞையை நிலை நிறுததுகைககாகப பிராட்டி, பெருமாளை நோககி நிரபராதி ஹிமஸா தோஷததைச சொலலி, தான ரிஷிகள திறததில பணணின புருஷகார கருதயததின காரய கரதவ தாரதமயததைப பரீக்ஷிததமையால, புருஷகார பாவம ஸூசித மாயிறறு கிஷகிநதா காணடததில பிராட்டி கழறறி யெறிநத திரு வாபரணஙகளை ஸுகரீவன பெருமாளுககு 'இதம பஸய' என்று காட்டினமையால, ஸுகரீவ ரக்ஷணததிலும பிராட்டி புருஷகார முணடு, என்கை வயககதமாயிறறு. மேலும இக காணடததில இளைய பெருமாளுடைய ஜயாகோஷம கேடட மஹாராஜா பயாதி ஸயததால தன கழுததுமாலையை யறுபபது முதலான சில காரய வருததிகளைச செயய பிராட்டி பரிகரமான திருவடி 'அநதரேணாஞ் ஜலிம பதவா லக்ஷமணஸய பரஸாதநாத' "இளைய பெருமாள் திறததில நீ அஞஜலிபணணி யனுவாததிததா லொழிய ஜீவிகக விரகிலலைகாண" என்றுரைதது இளைய பெருமாளை யனுவாத திககச செயததமையால திருவடியின புருஷகாரபாவம பரதி பாதிககபபடடது பிராட்டிககுப போலே, பிராட்டி ஸமபநதம பெறறவா களுககும புருஷகார பாவமுணடு என்பது 'ஏததவா பேக்ஷ ஸமபநதாத அநயேஷாம அமலாதமனாம தேவி ஸூரி குருணாஞச கடகதவம நதுஸவத ||' என்கிற ஸ்ரீ வசன பூஷணத தில காட்டிய பரமாணததால ஸிததமிறே ஸுநதர காணடததில பிராட்டி விரோதியான ராவணனைக குறிதது 'மிதரமௌபயிகம காததும ராமஸதாநம பரீபஸதா,' "பெருமாளுடன தோழமை கொள்ளுகை இபபோது உனககுச செயய அடுபபது" என்று உப தேஸிததமையால விஸலேஷததில சேதநனைததிருததுகையாகிற- புருஷகாரகருதயம வயகதமாயிறறு யுதத காணடததில லஙகையில பிராட்டியின கடாக்ஷம பெறற விபீஷணன, பெருமாளை ஸரணாகதி பணணுமபோது 'நிவேதயத மாம க்ஷிபரம' என்று பிராட்டி கடா க்ஷமபெறற ஸுகரீவாதிகளை முனனிட்டு ஆஸரயிததபடியாலும,

acharya.org

மேலும், பிராட்டி தன்னைப் பத்துமாஸம் தர்ஜநபர்த்ஸநாதிகளைப் பண்ணின ராக்ஷஸிகள் விஷயமாக ராவணவதாநந்தரம் ப்ரியம் சொல்லவந்த சொல்மருக்கனை திருவடியுடன் மன்றாடி 'கார்யம் கருணமார்யேண நகஸ்சிந் நாபராத்யதி' என்று விரோதிகளுக்கு முட்பட புருஷகாரம் செய்தமையாலும் புருஷகாரபாவம் வெளியிடப்பட்டது. இப்படி ஸ்ரீராமாயணத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிற பிராட்டியின் புருஷகார பாவத்தின் ஏற்றத்தைப் பூர்வாசார்யர்கள் 'இவள் ஸந்நிதியாலே காகம் தலை பெற்றது; அது இல்லாமையாலே ராவணன் முடிந்தான்' என்றருளிச் செய்தார்கள். இப்ரபந்தத்திற்குப் புருஷகாரத்திலே நோக்கு என்பதை 'காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயா: சரிதம்மஹத்' என்று ஸ்ரீவால்மீகி பகவானும், 'ஸ்ரீமத் ராமாயணமபிபரம் ப்ராணிதித்வச்சரித்ரே' என்று பட்டரும் "ஸ்ரீ ராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றம் சொல்லுகிறது" என்று ஸ்ரீலோகாசார்யரும் அருளிச் செய்தார்களிறே.

எம்பெருமானாரும் தேசிகனும்

[ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்]

நம் இராமாநுச தர்சனத்தை வளர்த்தருளின ஆசாரியர்களில் ஸ்ரீ மந்நிகமாந்த மஹா தேசிகன் முதல் ஸ்தானம் பெறுவர். இவர் பல படிகளாலும் ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தைப் பெருமைப் படுத்தினவர். ஸ்ரீ பாஷ்யத்திற்குக் காப்பாகப் பல பல க்ரந்த ரத்தினங்களை யருளிச் செய்தும், ஸ்ரீ பாஷ்யத்தைப் பலகால் ப்ரவசநஞ் செய்தருளியும், ஸ்ரீ பாஷ்யார்த்த தூஷகர்களைப் பலவாறு கண்டித்தும்; ஸ்ரீபாஷ்யகாரரைப் பல பல ச்லோகங்களாலும் பாசுரங்களாலும் ஏத்தியும்—இப்படியே தமது வாழ் நாளைக் கழித்தருளின மஹாநுபாவர் இவர். ந்யாயஸித்தாஞ்ஜநம், தத்வமுக்தாகலாபம், ஸர்வார்த்தஸித்தி, அதிகரண ஸாராவளி, தத்வடீகா, சததூஷணீ, தாத்பர்ய சந்த்ரிகை—இத்யாதிகளான உத்க்ரந்தங்கள் நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு அணி விளக்காக இவ்வாசிரியரால் அருளிச் செய்யப்பட்டவை.

இவர் முப்பது தடவை ஸ்ரீபாஷ்யப்ரவசநம் செய்தருளினவர் என்பது ஸங்கல்பஸூர்யோதயத்தில் இவர் தாமே பணித்த "த்ரிம்சத்வாரம் ச்ராவிதசாரீரகபாஷ்ய:" த்ரிம்சத் வாரம்

acharya.org

ச்ராவித சாரீரக பாஷ்ய:” என்ற ஸ்ரீஸூக்தியால் விளங்கும். அந்த நாடக க்ரந்தம் அருளிச் செய்கிறவரையில் முப்பது தரம் ஸ்ரீபாஷ்ய ப்ரவசநம் செய்தருளினவரென்றால் அதற்குப் பிறகும் பல தடவை ப்ரவசநமாகியிருக்கவேணும். இருபத்தெட்டாவது தடவையாக ப்ரவசநஞ் செய்தருளும்போது தத்வடீகை என்கிற க்ரந்தம் அருளிச் செய்யப்பட்டதென்று அது தனிலுள்ள “ஶ்ரவ்ய நவ்யாவஷ்டாவிம்ஶே ஜயத்வஜ வஷ்டிகா—ப்ரவச்நவிதா வஷ்டாவிம்ஶே ஜயத்வஜ படீகா” என்னும் ஸ்ரீஸூக்தியினால் விளங்கா நின்றது.

“நிவிஷ்டம் யதிஸார்வபௌம ஸேவயா ஸார்வஜ்ஞ்யம் வந்தே” என்றும் “யதிப்ரவர பாரதீ ரஸபரேண நீதம் வய: ப்ரபுல்லபலிதம் ஶிர:” என்றும், “ஆரண நூல் வழிச் செவ்வை யழித்திடும் கைதவக்கோர் வாரணமாயவர் வாதக் கதலிகள் மாய்த்தபிரான், ஏரணி கீர்த்தியிராமாநுசமுனி யின்னுரைசேர், சீரணி சிந்தையினோம் சிந்தியோ மினித் தீவினையே” என்றும் இவர் தாம் அருளிச்செய்யும் ஸ்ரீஸூக்திகளினால், ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதிகளையே இவர் ஓவாத ஊணாகவுடையவர் என்பது தெற்றென விளங்கும்.

எம்பெருமானார்தாமே மறுபடியும் தேசிகனாக ஒரு திருக்கோலம் பூண்டு திருவவதரித்தாரோ! என்றும் மஹான்கள் உல்லேகிப்பதுண்டு. “வேங்கடேஶாவதாரோயம் தத்கண்டாம்ஶோதவா பவேத் யதீந்த்ராம்ஶோதவேத்யேவம் விதர்க்யாயாஸ்து ஸம்மதம் ॥” என்று குமாரவரதாசார்யர் கூறியருளினார்.

தேசிகன் எம்பெருமானாரைத் துதித்த அமுதமொழிகள் விடுதி விடுதியாகப் பல பல இருந்தாலும் யதிராஜஸப்ததியென்கிற இதம்ப்ரதமான ஸ்தோத்ரம் வெகு அமைதியுடன் அமைந்ததாகும். உடையவர் ஸம்பந்தமுடையவர்களுக்குத் தான் நேரே எம்பெருமானவரையில் இடையறாத தொடர்பு உண்டு என்பதைத் தெரிவித்தருள்வதற்காக “கமப்யாத்யம் குரும் வந்தே” என்று தொடங்கி, பெருமான், பிராட்டி, ஸேனை முதலியார், நம்மாழ்வார், நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி இவர்களை ஒவ்வொரு ச்லோகத்தினால் ஏத்தி யிறைஞ்சி வழியடைவில் எம்பெருமானார் துதியில் இழிந்திருக்கிறார்

acharya.org

acharya.org

படையோடு நாந்தகமும் படர்தண்டும், ஒண்சார்ங்க வில்லும் புடை யார் புரிசங்கமும் இந்தப் பூதலம் காப்பதற்கென் றிடையே, இராமா னுச முனியாயின இந்நிலத்தே" என் றருளிச் செய்யப்பட்டுள்ள பாசுரத்தைத் தழுவி, பஞ்சாயுதாழ்வார்களும் ஒன்று சேர்ந்து எம் பெருமானாராகத் திருவவதரித்தபடியோ! என்று பெரியோர்கள் உல்லேகித்துக்கொண் டிருந்த விஷயத்தை யெடுத்துரைத்தருளினார் அதற்கடுத்த ச்லோகத்தில் "ராமாநுஜன், என்கிற திருநாமத்திற்கு விலக்ஷணமான வொரு விசேஷார்த்தத்தை நிர்வஹித்தருளா நின்று கொண்டு தம்முடைய பாண்டித்ய ப்ரகர்ஷம் நன்கு விளங்குமாறு ஸூக்தி விந்யாஸம் செய்தருளி யிருக்கிறார் இது இன்சுவையே வடிவெடுத்த ச்லோகமாதலால் ரஸிகர்களின் உள்ளம் உக்குமாறு ஈண்டு ஸங்க்ரஹேண விவரிக்கப்படுகிறது

"ஶமிதோதய ஶங்கராதி கர்வ:
ஸ்வபலாதுத்த்ருத யாதவப்ரகாஶ: |
அவரோபிதவாந் ஶ்ருதேரபார்த்தாந்
நநு ராமாவரஜஸ்ஸ ஏஷ பூய: "

[சமிதோதய சங்கராதி கர்வ: ஸ்வபலாத் உத்த்ருத யாதவப்ரகாச:, அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந் நநு ராமாவரஜஸ் ஸ ஏஷ பூய:] என்பது அந்த ச்லோகம் இதில் அற்புதமான சிலேடை அமைந்திருக்கின்றது எம்பெருமானார்க்கு ராமாநுஜன் என்ற திருநாமம் மாதுலரான திருமலை நம்பியால் இடப்பட்ட தென்பர் பெரியோர் அது இளைய பெருமாளுக்கு பர்யாயமாக வழங்கி வரும் திருநாமம் லக்ஷ்மணன் கைங்கர்ய ஸாம்ராஜ்யமே நிரூபக மாக இருந்ததுபோலே இவரும் கோயில் திருமலை பெருமாள் கோயில் திருநாராயணபுரம் முதலான திவ்யதேசங்களில் நித்ய கைங்கர்ய துரந்தரராக எழுந்தருளி யிருக்கப்போகிறா ரென்பதை உட் கண்ணா லுணர்ந்து நம்பிகள் இவர்க்கு இந்த திருநாமமிட் டருளினா ரென்று ஸம்ப்ரதாய வ்ருத்தர்கள் ஸாதிப்பது. ராமாநுஜ நாம பர்யாய மாகவே லக்ஷ்மணமுநி யென்கிற திருநாமமும் வழங்கி வருகின்றது

கண்ணபிரான் பலராமனுக்குத் தம்பியாக அவதரித்ததனால் ராமாநுஜ னென்று அவனையும் சொல்வதுண்டு "ஹே ராமாநுஜ! ஹே ஜகத்ரயகுரோ ஹே புண்டரீகாக்ஷ!" என்று முகுந்த

acharya.org

மாலையிலுமுள்ளது. உடையவரை இளைய பெருமாளுடைய அபராவதாரமென்று சொல்லுவது போலவே கண்ணபிரானுடைய அபராவதார மென்றும் சொல்லத் தகுதியுண்டு. கண்ணன் அஷ்டம கர்ப்பமாக அவதரித்தது போல உடையவரும் குரு பரம்பரையில் எட்டாவது ஆசார்யராக அவதரித்துள்ளார். உலகுக்கெல்லாம் மாதா பிதாக்களாகிய பெருமாளையும் பிராட்டியையும் ஸ்ரீக்ருஷ்ண மாதா பிதாக்களான வஸுதேவ தேவகிகளின் ஸ்தானத்தில் வைத்துவிட்டு, ஸேனை முதலியார் முதலாகக் கணக்கிட்டால் ஆசார்ய பரம்பரையில் எட்டாவது ஸ்தாநம் உடையவருடையதேயாம். [ஸேனை முதலியார், நம்மாழ்வார், ஸ்ரீமந்நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, எம்பெருமானார் என அடைவு காண்க.] கண்ணன் "சாது சனத்தை நலியுங்கஞ்சனைச் சாதிப்பதற்கு ஆதியஞ் சோதியுருவை அங்கு வைத்திங்குப் பிறந்த" என்கின்றபடியே கம்ஸனை வதைப்பதற்காக அவதரித்தாற் போலே உடையவரும் "இராமானுசனித்தலத்துதித்து—இறந்தது வெங்கலி" என்று அமுதனார் அருளிச் செய்தபடியே கலிபுருஷனுடைய வதத்திற்காகவே அவதரித்தார். அந்தக் கம்ஸனுடைய வதமானது க்ருஷ்ணாவதாரத்திற்கு நெடுநாள் முன்னமே ஆகாசவாணியினால் உலகிற் பரவினாற்போல் உடையவரால் விளையக்கூடிய கலி புருஷவதமும் இவருடைய திருவவதாரத்திற்கு நெடுநாள் முன்னமே ஆகாச வாக்குப் போன்றதான "கலியுங்கெடும் கண்டுகொண்மின்" என்ற நம்மாழ்வா ரருளிச் செயலினால் உலகிற் பரவியது. கண்ணபிரான் கம்ஸ வதத்திற்கு அங்கமாகப் பூதநாசகடயமளார்ஜுநாதிகளான பலபல தீப்பப் பூடுகளடங்க வுழக்கினாற்போலே உடையவரும் கலிபுருஷவதத்திற்கு அங்கமாக "சாருவாகமத நீறு செய்து சமணச் செடிக்கனல் கொளுத்தியே சாக்கியக் கடலை வற்றுவித்து மிகு சாங்கியக் கிறி முறித்திட மாறுசெய்திடு கணாத வாதியர்கள் வாய் தகர்த்தறமிகுத்து மேல்வந்த பாசுபதர் சிந்தியோடும் வகை வாதுசெய்த வெதிராசனார் கூறுமா குருமதத்தொடோங்கிய குமாரிலன் மதமவற்றின்மேல் கொடிய தர்க்க சரம் விட்டபின் குறுகி மாய வாதியரை வென்றிட, மீறிவாதில் வரு பாற்கரன் மத விலக்கடிக் கொடியெறிந்து போய் மிக்க யாதவ மதத்தை மாய்த்த பெரு வீரர் நாளு மிக வாழியே" என்றும்,

acharya.org

" தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ் சடையோன் சொற் கற்ற சோம்பரும் சூனிய வாதரும், நான் மறையும் நிற்கக் குறும்பு செய் நீசரும் மாண்டனர் நீணிலத்தே பொற் கற்பகம் எம்மிராமா னுச முனி போந்த பின்னே " என்றும் சொல்லுகிறபடியே பல்பல் நிய வாதிகளை நிரஸித்தருளினார். கண்ணபிரான் யாதவ குலத்திற் பிறந்து ஆயர் குலத்தில் ஒளித்து வளர்ந்தாப் போலே உடையவரும் ஸ்ரீ வைஷ்ணவ குலத்திலே பிறந்து அத்வைதி ஸந்யாஸி கோஷ்டி யிலே ஒளித்து வளர்ந்தார் இங்ஙனே அனேக வகைகளால் கண்ண பிரானுக்கும் எம்பெருமானாருக்கும் ஒற்றுமை நயம் நிர்வஹிக்கக் கூடியதா யிருக்கின்றது

ப்ரக்ருதத்தில், மேலே உதாஹரித்த சமிதோதயே தயாதி சலோ கத்தில் தேசிகன் உடையவர்க்கும் கண்ணனுக்கும் சலேஷ சமத் காரம் பொலிய ஒரு ஒற்றுமை நயங் கூறி யருளுகிறார் [சமிதோயே சங் கராதி காவ:] கண்ணனுக்கும் உடையவர்க்கும் பொதுவான விசேஷ ணம் பாணாஸுர யுத்தம் முதலான ப்ரகரணங்களில் " காத்தி கையானும் கரிமுகத்தானும் கனலும் முக்கண் மூர்த்தியும் மோடி யும் வெப்பும் முதுகிட்டு" என்கிறபடியே சங்கரனுகிய சிவபிரான் முதலான தெய்வங்களின் செருக்கை யடக்கியவன் கண்ணபிரான் உடையவரோ வென்னில், சங்கராசாரியர் முதலான புறமதத்தவர்க ளின் துர்வாதச் செருக்கை யடக்கினவர்

[ஸவபலாத உத்ருத்யாதவபரகாச]

" மௌஸலானௌ யாத³வம்வம்ஶம் உத்³ஹ்ருத்ய ஸம்ரக்ஷிஷ்யதி— கோபாலோ யாதவம் வம்சம் மக்நமப்யுத் தரிஷ்யதி" என்கிற படியே யயாதி சாபத்தாலே மங்கிக் கிடந்த யாதவர்களின் ப்ரகாசத் தைத் தனது வலிமையினால் விளைவித்தவன் கண்ணபிரான். உடையவரோ வென்னில்; முதலில் தமக்கு உபாத்யாயராயிருந்த யாதவ ப்ரகாசரையும் தமக்கு அடிமைப் படுத்திக்கொண்டு அவரை வாழ்வித் தருளினவர்

[அபாரத்தாந சருதே அவரோபிதவாந] இதில் முற்பதம் 'அ- —பாரத்தாந ' என்றும், ' அப—ஆரத்தாந ' என்றும் பிரியும். சருதி யென்று வேதத்திற்கும் பெயர், கீதைக்கும் பெயர் பார்த் தன் என்று ஆஜ்ஞைசொல்லி ஆஜ்ஞா விரோதிகளான துர் யோதநாதிகளை அபாரத்தாகளென்கிறது அவர்களைக் கண்ண பிரான் [சருதே: அவரோபிதவாந] கீதையிலிருந்து கீழே யிறக்கி

விட்டான். பாண்டவ பக்ஷபாதியா யிருந்து நூற்றுவரைத் தொலைத்தானென்றபடி. எம்பெருமானாரோ வென்னில், [ச்ருதே: அபார்த்தாந் அவரோபிதவாந்] இதர மதஸ்தர்கள் வேதங்களுக்குச் செய்த அபார்த்தங்களை நிரஸித்து ருஜுவான அர்த்தங்களை ஸ்தாபித்தருளினாரென்றபடி. ஆக இப்படிகளாலே கண்ணபிரானுடைய காரியங்களும் எம்பெருமானாருடைய காரியங்களும் ஒற்றுமை கொண்டிருக்கையாலே, பலராமாநுஜனான அந்தக் கண்ணபிரானே மீண்டும் ஸ்ரீராமாநுஜராக ஒரு திருவவதாரம் செய்தருளினான் என்னலாம் என்று ச்லேஷமர்யாதையிலே பரமரஸமாகப் பேசி யநுபவித்தார். [உடொதாயிகூஉநூ)ஓாஹவிஷூ)தி]

ஸ்ரீ யதிராஜ ஸப்ததியில் நாதமுனிகளிடம் தேசிகன் ஈடுபாடு.

[ஏ. வி. கோபாலாசாரியார், அட்வகேட்,
பத்திராதிபர் தேசிக ஸூக்தி ஸம்ரக்ஷிணீ]

நாதமுநிகளிடம் தேசிகன் ஸப்ததியில் நிரதிசயமாக ஈடுபட்டுள்ள வழிகளில் ஈடுபடவேண்டுமென்ற அவாவினால் எம் சிற்றறிவுக்குத் தக்கபடி கொஞ்சம் பேசுவோம்.

நம் பெரியோர்களிடம் நமக்கு ச்ரத்தா ப்ரயுக்தமான பக்தியிருப்பதுமட்டும் போதாது. சிலருக்குப் பிறவியாலேயே தத்தம் பெரியோர்களிடம் அசைக்ககூடாத (அகம்பநீயமான) ச்ரத்தை அமைந்திருக்கும். அது குணமானாலும் அதுமட்டும் போதாது. தம் பெரியோர்கள் உண்மையில் மஹிமை யுடையவரா யிருக்கலாம். அப்படிக்கு இல்லாமலு மிருக்கலாம். அவர்கள் மஹிமையை நன்கு அறிந்து அவர்களிடம் பக்தி செய்வதே சிறந்த நிலையாகும். தமக்கு ஜ்யேஷ்ட ப்ராதாவானது பற்றி தகப்பனைப் போல் பூஜ்யனும், ஸர்வேச்வரனும், ஸர்வசேஷியும், யதோசிதம் ஸர்வ கைங்கர்யங்களையும் செய்பவரும் சேஷனென்று அஸாதாரணமாக திருநாமம் பெற்றவருமான சேஷனுக்கு விசிஷ்டசேஷியுமான இராமனிடத்தில் லக்ஷ்மணன் அவர் குணங்களால் அடிமையாகி அவரை நெருங்கினேன் என்றார். ஞானனுஷ்டானங்களாலும், ஸத்ஸம்ப்ரதாயாந்வயத்தாலும், சமதம கருணாதி ஸகல கல்யாண

acharya.org

குணங்களின் பூர்ணதையாலும், ஸமாச்ரியர்கள் பூர்ணர்களென்று நாம் தெரிந்துகொண்டு அவர்கள் திருவடிகளில் அடிபட்டோமன்றோ நம்முடைய ஆசார்ய பக்தி விலக்ஷணமாகும். ஆசார்யத்வ மாத்ரத்தால் பக்தி விஹிதமாயிருந்தாலும், அது மாஹாத்ம்ய ஞான பூர்வகமாயிருப்பது அழகு. எம்பெருமானார் தரிசனம் "நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்" (நாதன் முதல் தொடங்கியது) லக்ஷ்மீ நாதனிடம் குரு பரம்பரை ஆரம்பிப்பதால் ஸ்ரிய:பதியே இந்த தரிசனத்திற்கு முதல் குருவான நாதன் என்பதைப்பற்றி இந்த ஸப்தத்தில் அவனிடமிருந்து குரு பரம்பரா நமஸ்காரம் தொடங்கப்பட்டிருக்கிறது. ஸர்வார்த்த ஸித்தியின் முடிவில் நம் தரிசனம் நாதமுனிகளிடம் ஆரம்பித்து ஸூர்யோதயம்போல் அஜ்ஞானவிருளை நிஶ்ஶேஷமாய் அகற்றி எல்லா தத்வங்களையும் உள்ளபடி விளக்கியது என்று பொருள் ஸாதித்ததை யனுஸரித்து நாதமுனிகளை இந்த தரிசனத்திற்கு ப்ரவர்த்தகராக ஒருவாறு சொல்லலாம். ஆழ்வாரால் ஸர்வலோகோபஜீவ்யமான வேதம் போன்ற திவ்ய ப்ரபந்தங்களால் நம் தரிசனம் அனுபவ ப்ராயந்தமாகி ஸ்தாபிக்கப்பட்டிருந்தும் அந்த ஸம்ப்ரதாயம் கீதோக்த யோகங்களின் ஸம்ப்ரதாயம் போல் விச்சின்னமாய்ப் போயிருந்ததை நாதமுனிகள் திவ்ய ப்ரபந்த ஸாகரத்தைப் பானம்பண்ணி ஒரு விலக்ஷண மேகம்போல் அப்படியே நமக்கு வர்ஷித்தபடியால் அவர் ப்ரவர்த்தகரென்பதும் உசிதமே.

அருளிச் செயல்களில் வழங்கும் பாடங்களைப் பற்றின ஆராய்ச்சி

[வை. மு. கோபால க்ருஷ்ணமாசாரியார், திருவல்லிக்கேணி]

'சுத்தமான பாடங்களைக் கண்டறிவதற்குப் பல மார்க்கங்கள் உள்ளன — அவை - பழைய பல தாள ஸ்ரீ கோசங்களை வைத்துப் பார்த்தல், வ்யாக்யானங்களில் எப்படி அர்த்தம் முன்னோர்களால் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றது பார்த்தல், பிற நூல்களின் ஸாம்யத்தால் அறுதியிடுதல் முதலியன.

அவற்றுள் ஸ்ரீ கோசங்களை வைத்துப் பார்த்தலால் திருத்தமான பாடம் கண்டறிவதற்கு உதாஹரணமாக முன்னை வைஜயந்தியில் ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி ஸாதித்த

acharya.org

தாக ஶிஷ்யர்களுக்கு 'பாகாநுகுணமாக' என்று வெளிவந்தது, ஸஹ்ருதயஹ்ருதயாஹ்லாதகரமான விஷயம்.

இனி, வ்யாக்யானத்தில் முன்னோரால் எப்படி அருளிச்செய்யப்பட்டிருப்பது என்று பார்த்து அவ்வழியாற் பாடஞ் சுத்தஞ் செய்து கொள்ளப்படக் கூடியதாவதற்கு ஒரு உதாஹரணங் காட்டுவேன். (அடியேன் எழுதுமவற்றில் பிழையெனத் தோன்றுவதை யெடுத்துக் காட்டினால் அப்படிக் காட்டுபவர் திறத்துக் கார்த்தஜ்ஞ்யம் வஹிப்பேன்.)

பெரிய திருமொழியில் ஐந்தாம்பத்தில் அ—ஆந் திருமொழி "ஏழையேதலன்" என்கின்ற தஶகத்தில் ஒன்பதாம் பாசுரத்தில் "பூர்வார்த்தத்தை" "துளங்கு நீண் முடியரசர் தங்குரிசில்தொண்டை மன்னவன் திண்டிறலொருவற்கு, உளங்கொளன்பினோடின்னருள் சுரந்தங்கோடு நாழிகை யேழுடனிருப்ப" என்று பலரும் அநுஸந்தித்துபோருவதைக் கேட்டுள்ளேன். இதில் அங்கோடு நாழிகை என்பதற்கு என்ன வ்யாக்யாநமிட்டுள்ளதென்று பார்ப்போம்; ராஜ்ய தூரோடே கூட வ்யர்த்தமேகழிகிற காலத்திலே என்றுள்ளது. இந்த வாக்யத்தை ஊன்றிப் பார்த்தால், ஓடு நாழிகையென்று கொண்டு வ்யர்த்தமே கழிகிற காலத்திலே என்று அருளிச்செய்திருக்கலாமென்று தோன்றுகின்றது. மேலும், அங்கொடு என்று ஒருசொல் வேறெங்கும் வந்திருப்பதாகவும் தெரியவில்லை. தாள ஸ்ரீ கோஶங்களில் 'கொ, கோ' என்பவற்றிற்கு வ்யத்யாஸம் தெரிய எழுதுகிற வழக்கமில்லாமையும், வ்யாக்யானத்தில் ராஜ்ய தூரோடுகூட என்று இருப்பதும் அங்கோடு நாழிகை என்று பலரால் வழங்கப்பட்டதற்குக் காரணமாக இருக்கலாம்.

இனி, வேறு நூல்களின் ஸாம்யத்தைக்கொண்டு திருத்திக் கொள்வதற்கு இரண்டிடங்களை ப்ரதர்ஶநம் பண்ணுவேன் (தமிழறிஞர் சிலரின் கருத்தையொட்டி அடியேன் இங்ஙன் காட்டுகின்றேனேயன்றி, ஸ்வதந்த்ரனாக யாதொன்றும் எழுதுகின்றேனல்லேன். ஆதலால், அறிஞர்கள் அடியேன் எழுதுவது குறித்து அந்யதாவாகத் திருவுள்ளம் பற்றக்கூடாது.)

நாச்சியார் திருமொழியில் பதின்மூன்றாந் திருமொழியாகிய "கண்ணனென்னும்" என்ற தஶகத்தில் ஐந்தாம் பாசுரத்து இரண்டாம் அடி "தழுவி முழுசிப் புகுந்தென்னைச் சுற்றிச்

சுழன்று போகானலே" என்று வழங்குகின்றது அங்ஙனமே பெருமாள் திருமொழியில் ஒன்பதாந் திருமொழியில் ஏழாம் பாசுரத்தின் இரண்டாமடி "தழுவாதே முழுசாதே மோவாதுச்சி" என்று வழங்குகின்றது இவ் விரண்டிடங்களிலும் முழுசுதல் என்பதற்குப் பொருள் என்ன? என்று பார்ப்போம். திசைத்தல் என்பது திசைத்தல் என்று வழங்குவதுபோல், முழுகுதல் என்பது முழுசுதல் என்று வழங்கியதாகு மென்றுதோன்றலாம். அங்ஙனமாயின், அதற்கு நன்கு அவகாஹித்தல் என்று பொருளாம் "முழுசிவண்டாடிய தண்டுழாயின" என்று பெரிய திருமொழியிலும் வந்துளது ஆகவே, தழுவி முழுசிப் புகுந்து *** போகான் என்று நாச்சியார் திருமொழியில் வருவதற்கு என்னைத் தழுவி (என்னிடத்தில் அவகாஹித்துப் புகுந்து சுற்றிச் சுழன்று திரிவ தன்றி என்னைவிட்டுப் போகானென்று பொருளாகலாம் அங்ஙனமே பெருமாள் திருமொழியில் "தழுவாதே முழுசாதே மோவாதுச்சி" என்பதற்கு புத்திரனை ஸ்ரீ ராமனைத் தழுவாமலும் அவனிடத்து அவகாஹியாமலும் உச்சிமோவாமலும் என்று பொருளாகலாம் நாச்சியார் திருமொழியில் வியாக்யானத்தில் முழுசி என்பதற்கு 'ஓரவயவத்திலே நின்று சுழி சுழிக்குமாயத்து' என்று உள்ளது பெருமாள் திருமொழியில் தழுவாதே முழுசாதே என்பதற்கு ஏகதத்தவமெனனுமபடி தழுவி முழுசாதே என்று காணகின்றது இந்த வியாக்யானங்களால் முழுசுதலென்பதற்குப் பொருள் அவகாஹித்தலென்பதுதா னென்று ஸ்பஷ்டமாக ஜ்ஞாதமாவதில்லை.

இனித் தமிழறிஞர் கூறுவது —சைவசமயத்தைச் சார்ந்த மாணிக்கவாசகரின் திருக்கோவையார் என்ற நூலில் 227-ம் பாட்டில் "வந்தென முலைமுழுவித் தழுவி" என்று வந்துள்ளது' அங்குப் பேராசிரியர் 'முலையை முத்தங்கொண்டு, என்னைப் புல்லி என்று உரைவகுத்துள்ளார் அதை யொப்பவே, "தழுவி முழுவிப் புகுந்தென்னை என்று நாச்சியார் திருமொழியிலும், தழுவாதேமுழுவாதே மோவாதுச்சி" என்று பெருமாள் திருமொழியிலும் பாடம் இருக்கவேண்டும் இவ் விருவிடங்களிலும் முழுவி யென்றும் முழுவாதே என்றும் பாடங்கொண்டு, முத்தமிட்டு என்றும், முத்தமிடாதே என்றும் கூறின், பொருள் சிறப்பதன்றிப் பாட்டிலும் ஓசை சிறந்து காணுமென்கின்றனர் இவ் விஷயத்தை அறிஞர்கள் ஆராய்வாராக.

acharya.org

பத்திராதிபரின குறிப்பு

மேறகணட பாட ஆராய்சசிக ளிரணடும மெசசத தகுந தவையே. பெரிய திருமொழிககுத திவயாரதத தீபிகை யுரை ஸ்ரீ காஞசி அணணஙகரா சாரியா ஸவாமியினுடையது எறகனவே வெளிவநதிருககினறது அதில "அஙகோடு நாழிகை யேழுட னிருபப" எனற விடததது, "அஙகோடு எனறு பலரும ஓதுவாக ளாயினும, அதறகுச சேர அருமபதவுரைகாரா 'ஓடு எனறது குறுகிக கிடககிறதாய, ஓடுகிற—கழிகிற' எனறு உரைபபராயினும அபபாடம மறுககததககது 'விரிததல தொகுததல வருஞ செய யுள வேணடுழி' எனறனரே இலககணமுளளது ஓடு எனபது ஒடு எனக குறுகியதெனறு கொளளப பொருததமே யிலலை பொருட குப் பொருநதாமையோடு யாபபுககும பொருநதாது ஓடு எனற பாடமே பொருடகுப பொருநதுவதோடு முனபினனடி கடகு அள வொததுமாம" எனறு எழுதபபடடுளளது ஆதலால இப பாடத திருததம முனனமே உலகிற பரவி யிருககினற தெனபதை இஙகு விஞஞாபிததுக கொளளுகிறேன

'தழுவி முழுசி' எனற விடததது முழுவி எனறும, தழுவாதே முழுசாதே' எனற விடததது 'முழுவாதே' எனறும பாட மிருகக வேணடும எனறும ஸ்ரீ வை மு கோபால கிருஷ்ணமாசாரிய ஸ்வாமி எழுதியிருபபது பறறி மறறுமுளள நிரூபகாகளும நனகு ஆராயநது தருள வேணடும. முழுவுதல எனற சொலலுககுக கொளளப படுகினற பொருளே முழுசுதல எனற சொலலுககும கொளளப படலாமெனறு சில பெரியோகளின திருவுளளம காணகிறது வகரமான பாடததில இயலினபம மிகவு முளளது எனறது உணமையே ஆராயசசியில மிகவலலவரான ஸ்ரீ வை மு சடகோப ராமாநுஜாசாரய ஸவாமியும 'தழுவாதே முழுசாதே' எனற வழககப பாடததையே ஆதரிததிருபபதாகக கலாசாலைப பாடஙகளுககு அநத ஸவாமி வெளியிடடுளள [டெகஸட நோடஸ] குறிப புரையினறு தெரிகினறது

—பததிராதிபா.

கமபனும் கஸதூரி ரங்கனும்

(பநதலகுடி பாரதவாஜ மாடபூசி ரெ திருமலை ஐயஙகார்,
காரியதரிசி, திருவலலிககேணித தமிழசசஙகம)

உலகில உலவிவரும பாஷைகளிற சிறநதன ஆரியமும செந தமிழும எனபது அறிஞா அபிமதம இவறறில முனனையது தேவ பாடை பினனையது பிராட்டி பாஷை என ஆனறோா கூறக கேளவி. சிறை யிருநதவளேறறம சொலலுகிற ஸ்ரீராமாயணததைத தமிழப பாககளால பாடியது கமபன எனபது நாடறிநத விஷயம கலவியிற பெரியன கமபன இவன பரம வைஷணவனானதால கமபநாட டாழவான எனக கொணடாடபபடுகினறான கோயில எனபது திருவரஙகததை விசேஷிததுக குறிககும இஙகு திருககோயில கொண டெழுநதருளி யிருககும கஸதூரிரஙகனைக கமபன பாராட டும முறையைச சறறு விளககுவாம குறறஙகளைநது குணங் கொளக.

ஜனகராஜன நவரததின கசிதமான மணடபததில வீறறிருக கிறான அஙகு தவமுனி விசுவாமிததிரன, சகரவாததிதத திருமக னும இளைய பெருமாளும தனனருகிலிருகக வீறறிருககிறான மிதி லாதிபதி, இருநத குலககுமாரதமை இருகண இனமுகநதது அழகு பருக நோககுகிறான. உடனே அருநதவனை அடிவணஙகுகிறான சனகன. பின அவனை நோககி, "அடிகாள! இக குமாா யாவா? இவா இததனமையரெனறு சொலலவேணடும" எனறு கேடகிறான. கௌசிக முனிவன கூறுகிறான். "நினனுடைய விருநதினாகள நினனுடைய வேளவி காணியவநதாா. நோநதால விலலும காண பூர். இவாகள பெரு தகைமைத தயரதனதன புதலவா" சூரிய வமிசததரசாது வரலாறு கூற ஆரமபிததது,

"பிணியரஙக வினையகலப பெருஙகாலந தவமபேணி
மணியரஙக நெடுமுடியாய மலரயனை வழிபடடுப
பணியரஙகப பெருமபாயற பரஞசுடரை யாஙகாண
அணியரஙகந தநதானை யறியாதா ரறியாதாா"

எனக கொணடாடுகிறான இக்ஷ்வாகுவை,

acharya.org

(நவரத்தினங்களும் அழுத்திப் பதிக்கப்பெற்ற அழகிய நெடு முடியை அணிந்த ஜனக மஹாராஜனே ! நோய்கள் கெடவும் அவைகட்குக் காரணமாகிய வினைகள் ஒழியவும் அநேக காலம் தவத்தை வழுவாமற் செய்து தாமரை மலரில் வாழ்கின்ற பிரமனை வழிபட்டு அவனிடத்துப் பெற்று ஆதிசேஷனாகிற இடங்கொண்ட பெரிய பாயலையுடைய பரஞ்சோதியாகிய ஸ்ரீரங்கநாதனை யாம் கண்டு உய்ய அழகிய திருவரங்கம் என்னும் திவ்ய தேசத்தில் எளிதிற் கொண்டுவந்து கொடுத்த இக்ஷ்வாகுவை அறியாதவர்கள் அறிவில்லாதவர்களேயாவர்)

பணி அரங்கப் பெரும்பாயற் பரஞ்சுடரை யாங்காண அணி அரங்கம் தந்தானை என்பதற்கு பிரமதேவனது திருவாராதனத்தில் எழுந்தருளி யிருந்த ஆதிசேஷனது உடம்பினிடத்தைப் பெரிய திருப்பள்ளி மெத்தையாகக் கொண்டுள்ள சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களினும், மேம்பட்ட ஒளி வடிவமான நம் பெருமாளை எம்போலியருந் தரிசித்து உய்யுமாறு அழகிய ஸ்ரீரங்க விமானத்துடனே சத்திய லோகத்திலிருந்து பூலோகத்துக்குக் கொண்டுவந்த இக்ஷ்வாகு மஹாராஜனை என்று கொள்வதும் ஒன்று.

பிரணவாகாரமான ஸ்ரீரங்க விமானத்திலே பிரமதேவனது ஆராத்ய தெய்வமாகவிருந்த ரங்கேசன் இட்சுவாகு முதல் இராமனீராகவுள்ள இரவிகுல மன்னர்க்குக் குல தெய்வமாக விளங்கி இராமபிரானால் விபீஷணாழ்வானுக்கு வழங்கப்பட்டு இலங்கையர் கோன் பெருமாளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு தனதூர் நோக்கிச் செல்லுங்காலத்து இடைவழியில் உபய காவேரி மத்தியில் பெருமான், விமானத்துடன் நிலை நின்றருளினன் என்பது புராணப் பிரசித்தம்.

"கங்கையிற் புனித மாய காவிரி நடுவு பாட்டு
பொங்கு நீர் பரந்து பாயும் பூம் பொழிலரங்கம்"

"வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும்சோலை
கொண்டல்மீ தணவும்சோலை குயிலினம் கூவும் சோலை
அண்டர்கோன் அமரும் சோலை அணி திருவரங்கமே"

கம்பர் மாண் கதைக் கோரிறையாய இராமபிரான். சீதா விவாஹத்து முன்னர் திரு மஞ்சனம் கண்டருளினார் என்றும்,

acharya.org

திருமண காபபுத தரிததாரெனறும கூறி மேல தம குலதெயவ மாகிய பெருமாளே வணஙகினா எனறு

"கோதறு தவததுத தஙகுலததுளோா தொழும
ஆதியஞ சோதியை யடிவணஙகினன
காதியல கயலவிழிக கனனிமாாகளே
வேதியாக கருமறை விதியினலகியே"

எனறப பாசுரததால விளககிப போநதான.

(குறறமறற தவததையுடைய தம குலததிலுளளோா வணஙகாநினற ஆதியஞ சோதியாகிய ஆயிர மெனவிப பிரானை ஸ்ரீரஙக நாதனுடைய திருவடிகளே வணஙகி காதளவும உலாவு கினற் சேலபோனற கணகளேயுடைய கனனிப பெணகளே அநத ணாககு அரிய வேத விதிபபடி தானஞ செயதான)

கோசலே இராம படடாபிஷேக மாகிற மஙகலசசெயதி சொனனவாகடகு வெகுமதிகள மிகவும கலகி சுமிததிரையோடு மினனு நேமியன மேவிடம மேவினள.

"மேவி மெனமலரா ணிலமாதெனுந
தேவிமா ரொடுந தேவாகள யாவாககு
மாவியு மறிவும முதலாயவன
மாவுலா மலாபபாதம வணஙகினள"

(கோசலே மேவி நில மகள திருமகள எனும தேவியாகளோடும எலலாத தேவாகளுககும உயிரும ஞானமும ஆதியும ஆனவனை ஸ்ரீமந நாராயணனுடைய (ஸ்ரீரஙக நாதனுடைய) வணடுகள உலாவு கினற தாமரை மலாபோனற பாதஙகளே வணஙகினள)

உலகம யாவையும தன திருவுதரத்துள அடககிய மாயனைத தன் வயிறறி லடககிய கோசலே அவ வரஙகநாதனே நோககி "இனறு என்னிடததுப் பிறந்த ஸ்ரீ ராமனுககு அனுககிரகம் புரிவது உன்றனைத்துளளது" எனறு பிராாததிததனள பின் தவசி யாக்குக் கோதானஙகளேயும அநதாணககுப் பலவகைத தானஙகளே யும புரிநதாள

"நலகி நாயகன நாள மலாபபாதததைப
புல்லிபபோறறி வணஙகிப புரையிலா
மலலன மாளிகைக கோயில வலஙகொளாத
தொலலே நோனபுகள யாவுந தொடஙகினள"

acharya.org

(தானஞ்செய்து அரங்கநாதனது அன்றலர்ந்த தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தழுவி, பலபடியாகத் துதித்து சேவித்து அத் திருக்கோயிலை பிரதக்ஷிணஞ் செய்து குற்றமற்ற வளர்ப்பமான அரண்மனையில் தொல்லை நோன்புகள் யாவும் செய்யத் தொடங்கினாள்.)

இங்ஙனம் கவி அரங்கனிடம் ஈடுபடுகிறார்.

கவிச் சக்கிரவர்த்தியான கம்பர், பரமபதநாதன் பூலோக வைகுந்தமான திருவரங்கச் செல்வனாயமர்ந்தருளியிருப்பதில் ஈடுபட்டுப் பல்படியாகத் தாம் இயற்றிய இராமாயணத்தில் புகழ்ந்துள்ளார். விரிக்கிற் பெருகும்.

"ஒரு வில்லால் ஓங்கு முந்நீரடைத்து உலகங்களுய்ய
செருவிலே அரக்கர்கோனைச் செற்ற நம் சேவகனார்
மருவிய பெரியகோயில் மதிள் திருவரங்கமென்னா
கருவிலே திருவிலாதீர்; காலத்தைக் கழிக்கின்றீரே"

"வையமுண்டு ஆலிலைமேவும் மாயன், மணி நீள்முடி
பைகொள் நாகத்தணையான் பயிலும் இடமென்பரால்
தையல் நல்லார் குழல் மாலையும் மற்றவர் தடமுலை
செய்யசாந்தும் கலந்திழிபுனல் சூழ் தென்னரங்கமே"

வர்த்தமானங்கள்

ஸ்ரீ பெரும்பூதூர் உடையவர் உத்ஸவம்

இவ் வுத்ஸவம் எல்லா திவ்ய தேசங்களிலும் நடைபெறுமாயினும், தானுகந்த திருமேனி, தமருகந்த திருமேனி, தானான திருமேனி என்று சொல்லப்படுகிற திருமேனிகளோடு எழுந்தருளியிருக்கும் (திவ்ய தேசங்களில்) கோயில், திருநாராயணபுரம், ஸ்ரீபெரும்பூதூரில் நடக்கும் உத்ஸவம் மிகவும் சிறப்புடையது. அதிலும் தமருகந்த திருமேனி தானான திருமேனி தானுகந்த திருமேனி ஆகிய மூன்று திருமேனிகளும் ஸ்ரீ பெரும்பூதூரிலேயே என்று சில ஸம்பரதாய வ்ருத்தர்கள் நிர்வஹிக்கும்படி யெழுந்தருளியிருக்கும் திருமேனி ஸ்ரீ பெரும்பூதூரில் ஆதலால் அவ்விடம் ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டிகள் பெருந்திரளாகக் கூடி ஸேவாகாலம் இயல் கோஷ்டி முதலான வைபவங்களுடன் மிகவும்

acharya.org

சிறபபாய நடைபெறுமது கண்டார கணகளைக் கவருமபடியா யிருககும

ஷை உத்ஸவம சித்திரை 5உ (17-4-36) ஆரமபம.
,, 14உ (26-4-36) சாறறுமுறை
,, 15உ (27-4-36) முதலியாண்டான [சாறறு முறை.

ஸ்ரீரஙகம

யுவஷு பஙகுனி 31உ (12-4-36) சைதரோதஸவம, [தவஜாரோஹணம

தாதுஷு சித்திரை 3உ (15-4-36) கருடஸேவை
,, 8உ (20-4-36) திருததோ
,, 9உ (21-4-36) ஸபதாபரணம
,, 10உ (22-4-36) ஆடும பலலககு
,, 14உ (26-4-36) கோடைத திருநாள
,, 18உ (30-4-36) ஸ்ரீராம நவமி

திருமலை திருபபதி உதஸவஙகள்

[சிலாசாஸன பரிசோதகா மையூா-பணடிட, விஜயராகவாசாரியாா]

யுவஷு பஙகுனி மீ நடநதேறிய உதஸவஙகள்

திருமலை —சென்ற மாதததில பிரசுரிதத நானகாவது ஸஞசிகையின 51 பககததில வெளியிடடபடி திருமலை எனனும மேல திருபபதியில ஸ்ரீ திருவேஙகட முடையானுககு (24-3-36-ல) வாஉதஸவததுராதி சூஷாநத எனனும யுகாதி உதஸவம விசேஷச சிறபபுடன நடைபெறறது. பிறகு (6-4-36-ல) பஙகுனி பௌா்ணமியில ஷை திருமலையின வடபாகததில 8 மைல தூரததில விளங்கும துமபுருதீாததததில முக்கோடி எனனும உதஸவஸநாநச சிறபபும நடைபெறறது

திருபபதி — (1) இநத நகரின வடபககததில திருககோயில கொணடு விளஙகும ஸ்ரீ ராமபிரானுககு பிரமமோதஸவம இநத பஙகுனிமீ 8உ அஙகு ராாபபணம செயயபபடடு 12உ கருடோதஸவமும, 15உ ரதோதஸவமும, 16உ தீாததவாரியும நடநதேறிய பிறகு 18உ ஸ்ரீ ராமநவமி ஆஸதான உதஸவமும நடததபபடடது (2) ஸ்ரீ கோவிநதராஜன ஸனனதியில ஸ்ரீ புணடரீகவலலிததாயாா எனனும, ஸ்ரீ சாலைநாசசியாா எனறும புகழபபடும ஸ்ரீ மஹாலக்ஷ்மீ

தேவிக்கு பங்குனிமீ 23உ (5-4-36-ல்) சாலைநாச்சியாரின் உத்ஸவ சாத்துமுறையும், மறுதினமாகிய பங்குனி உத்திரதினம் ஸ்ரீ கோவிந்த ராஜனுக்கு பூலங்கி உத்ஸவமும் சிறப்புடன் நடைபெற்றது.

தாதுஸ்ரீ சித்திரைமீ நடைபெறக்கூடிய உத்ஸவங்கள்.

திருமலை :—திருமலையில் திருவேங்கட முடையான் ஸன்னிதியில் முதல் ப்ராகாரத்தில் உடையவர் ஸன்னிதிக்கு ஸமீபத்தில் ஸ்ரீ நரஸிம்மனுக்கு மேற்கு முகமாய் ஒரு ஸந்நிதி விளங்குகிறது. 'வேங்கடத்தரியை' என்று திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட அழகிய சிங்கர் இவரே. இந்த நரஸிம்மனுக்கு நரஸிம்ம ஜயந்தி தினமாகிய தாதுஸ்ரீ சித்திரைமீ 23உ (5-5-36-ல்) நரஸிம்ம ஜயந்தி உத்ஸவம் மாலை 6-மணிக்கு நடைபெறும்.

திருவேங்கட முடையான் ஸன்னிதியில் எழுந்தருளியிருக்கும் நமது ஸித்தாந்தப்ரவர்த்தகரான ஸ்ரீ பாஷ்யகாரருக்கு சித்திரைமீ 5உ (17-4-36-ல்) முதல் 10 நாளைக்கு காலையிலும் மாலையிலும் திருவீதிப் புறப்பாடு உத்ஸவம் 26-4-36-ல் உடையவர் சாத்துமுறை உத்ஸவமும் வெகு விமரிசையாய் நடைபெறும். திருவேங்கட முடையான் திருவடி ஸமீபம் வரையில் ஸ்ரீ பாஷ்யகாரர் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தல் மிகவும் ஸேவிக்க உரிய உத்ஸவம் என்பதில் ஸந்தேக முண்டோ ?

திருப்பதி :—இம்மாதிரியே கீழ்திருப்பதியிலும் ஸ்ரீ கோவிந்த ராஜன் ஸன்னதியில் வீற்றிருக்கும் ஸ்ரீ ராமாநுஜனுக்கு 10 நாளைக்கு திருவீதிப் புறப்பாடு உத்ஸவமும், விசேஷச் சிறப்புடன் சாத்து முறையும் நடைபெறும். தவிர, சித்திரைமீ 21உ முதல் மூன்று நாளைக்கு கீழ்திருப்பதியில் ஸ்ரீ கோவிந்த ராஜனுக்கும் நாச்சிமார்களுக்கும் புக்கை (ஓர் விதமான வாபீ) உத்ஸவம் வெகு சீதளோபசாராதி விமரிசைகளுடன் நடைபெறும். பிறகு சித்திராபௌர்ணமியின் மாலையில் (6-5-36-ல்) திருச்சானூருக்குச் சமீபத்திலிருக்கும் வானூர மகாவருர என்னும் புன்னைக்கால்வாய்க்கரையில் கட்டப்பட்ட மணடபத்துக்கு ஸ்ரீ கோவிந்த ராஜன், உபய நாச்சிமார். ஸ்ரீ ஆண்டாள், சேனை முதலியார் இவர்கள் எழுந்தருளி திருமஞ்ஜனம் கண்டருளி ராத்திரியில் சித்திரா பௌர்ணமி உத்ஸவத்தை ஸ்வர்ண முகி நதியில் கண்டருளி, பிறகு திருச்சானூரில் திருவீதிப் புறப்பாடு உத்ஸவத்தையும் உகந்து பிறகு மறுதினம் காலைவேளையில் தமது திருக்கோவிலுக்கு திரும்பி எழுந்தருள்வர்.

acharya.org

திருமாலிருஞ் சோலைமலை சித்ரா பௌர்ணிமை உத்ஸவம்

"தென்னன் உயர் பொருப்பும் தெய்வ வடமலையும் என்னும் இவையே முலையா வடிவமைந்த" என்று சொல்லுகிறபடி பூமிப்பிராட்டிக்கு ஸ்தனமாய எம்பெருமானுக்குப் பரமபோக்யமான ஸ்தானமாயிருக்கும் 'திருமாலிருஞ் சோலைமலையில்' கோயில்கொண்டருளாநின்ற குழலழகர், வாயழகர், கண்ணழகர் என்று போற்றப்படும் அழகருக்கு சித்ராபூர்ணிமை உத்ஸவம் நடைபெறும் தல்லாகுளம் எழுந்தருளி வைகையாற்றின் வடக்குக்கரையாக எழுந்தருளி பக்தகோடிகளுக்கு ஸேவை ஸாதிக்கும் ப்ராகாரம் வாசாமகோசரம். பக்தர்களுக்குப் ஸேவிக்க உரியது

ஷடி உத்ஸவம் சித்திரை 24௳ (6-5-36) நடைபெறும்

(ஸ்ரீ வானமாமலை)

சைத்ரோத்ஸவ:

[தே திருமலாசாரியார் வானமாமலை]

யாத்ரு வருஷம் சித்திரை மீ 12௳ வானமாமலைப் பெருமாள் திருநக்ஷத்திரமான ரோஹிணி யன்று த்வஜாரோஹணம் அதற்கு முன் பெரிய பெருமாளுக்கு ஒரு கோட்டை எண்ணெய்க் காப்பு ஸஹஸ்ரஸம்வாஹிஷேகம் முதலியது விசேஷமாக நடைபெறும் ராத்திரி யாகசாலையில் திருவாராதனம் ரக்ஷாபந்தனம் ஹோமம் முதலியது ஆனதும் உபயநாச்சிமாரோடு தெய்வநாயகன் ஒரு தோளுக்கினியானிலும் ஸ்ரீவரமங்கை நாச்சியார் ஒருதோளுக் கினியானிலுமாக ஸ்ரீபலி மண்டப ப்ராகாரம் வலம்வந்து வாஹனமண்டபத்தில் தாயாரும் பெருமாளும் அடைவே ஹஜலக்ஷி வாஹனத்திலும் பெரிய திருவடியின்மேலிலும் வீற்றிருந்து வீதியார எழுந்தருளி ஸேவை ஸாதிப்பார்கள் 2 வது உத்ஸவம் முதல் 4 வது உத்ஸவம் முடியக் காலைவேளையில் உபயநாச்சிமாரோடு பெருமாள் ஒருதோளுக் கினியானிலும் ஸ்ரீவரமங்கை நாச்சியார் ஒருதோளுக் கினியானிலும் எழுந்தருளுமது சாலவுமழகியதே ராத்திரி 2, 3 உத்ஸவங்களில் தாயாரும் பெருமாளும் தனித்தனி

acharya.org

யாக 2 வாஹனங்களில் எழுந்தருளுமழகு வாசாமகோசரம். 4 வது உத்ஸவம் ராத்திரி ஆஸ்சர்யகரமான ஆளும் பல்லக்கில் இருவருமான சேர்த்தியாக எழுந்தருளி ஸேவைஸாதிப்பர். 5 வது உத்ஸவம் காலையில் ஆண்டாள் நாச்சியார் பெருமாள் மூவருமாக திருப்பல்லக்கிலும் ராத்திரி மூவரும் மூன்றுவாஹனங்களிலும் எழுந்தருள்வர்கள். 6வது உத்ஸவம் காலை இருவருமான சேர்த்தியாகத் திருப்பல்லக்கிலும் ராத்திரி 2 வாஹனங்களிலும் 7வது உத்ஸவம் காலை மங்கள கிரியிலும் ஸாயங்காலம் வஸந்தோத்ஸவ விநோதத்திலும் ராத்திரி கண்ணாடிச் சப்பரத்திலும் இருவருமான சேர்த்தியாகவே திருவீதி வலம் வருவர்கள் 8வது உத்ஸவம் திருப்பல்லக்கில் இருவருமான சேர்த்தியாய் வீதிவலம் வந்து மேல மாடவீதியிலிருக்கிற மறவர் மண்டபத்திற்கு எழுந்தருளி விசேஷமாகத் திருமஞ்சனம் திருப்பாவாடை நடைபெற்று ராத்திரி 2 வாஹனத்தில் தாயாரும் பெருமாளும் எழுந்தருள்வர்கள். 9வது உத்ஸவம் காலை திருப்பல்லக்கில் தாயாரும் பெருமாளும் மாடவீதி வலம் வந்து மடத்தின் திருமுன்பு ஸமர்ப்பிவித்திருக்கிற அங்குமணிகள் எல்லாம் கடாக்ஷித்து விசேஷமான அருளிப்பாடுகளெல்லாம் ஆனதும் திருவீதிகளெல்லாம் வலம்வந்து மடத்திற்குள் எழுந்தருளும்போது நடைபாவாடை ஸமர்ப்பிவித்து ஸ்ரீபாதம் தாங்குவோர்முதலியவர்களது திருவடிகளைச் சோதிக்கஸுவர்ணாவிக்ரஹமாய் எழுந்தருளி இருக்கிற ஸ்ரீஒன்றான வானமாமலை ஸ்வாமி ஸூஊாரம் பெருமாளுக்கு ஸஹி முகமாக எழுந்தருளி மங்களாசாஸநம்பண்ணியருள பெருமாளும் ஸ்ரீ வரயஶைலாதிக்கும் தத்வராவதாரமான வதுமானஸ்வாமிக்கும் திருமாலை திருப்பரிவட்டம் ஸ்ரீசடகோபன் முதலிய மரியாதைகள் செய்தருளி இயல்சாற்றுமுறையானதும் விடாயாத்துத் திருமஞ்சனம் பெருந் திருப்பாவாடைமுதலியன ஸமர்ப்பிவித்து நூதனமான திருப்பீதாம்பரங்கள் ஸ்ரீ ஸ்வாமி, பஞ்சாதிவஸ்த்ரகமாக சமர்ப்பிவிக்க தாயாரும் பெருமாளும் சாத்திக்கொண்டதின் பிறகு சாத்துமுறை தீர்த்தவிநியோகமஹோத்ஸவ முடிந்ததும் ராத்திரி ஸ்ரீ பெரிய பட்டர்பிரான் ஸ்வாமிக்கு மைசூர் மஹாராஜாவால் ஸமர்ப்பிக்கப்பெற்று வருடம் 4 தடவை நாச்சியாரால் சாத்திக்கொள்ளப்படுகிற விலை மதிப்பில்லாத ரத்நங்களிழைத்த மகர கண்டிகை சாத்திக்கொண்டு திருவாராதனம் விசேஷ

acharya.org

போகம் முதலியது கண்டருளி மொஷ்டியானதும் நாச்சியாரும் பெருமாளும் திருப்பல்லக்கில் எழுந்தருளி ஸ்ரீ ஒன்றுன ஸ்வாமி யும் வர்த்தமான ஸ்வாமியும் திருப்பல்லக்குக்குப் பின்னே எருந்தருள மொபுரவாசல் மண்டபம் எழுந்தருளினதும் ஸ்ரீவ்யூஹஸ்வாமிக் கும் வர்த்தமானஸ்வாமிக்கும் திருமாலை திருப்பரிவட்டம்ஸ்ரீசடகோபன் முதலிய மரியாதைகள் வ்யூஹாஹித்து வந்த்ரவ்யூஹா வாஹனத்தில் தாயாரும பெருமாளும் இருவருமான சேர்த்தியாக எழுந்தருளி பெரிய திருத்தேரைக் கடாக்ஷித்து திருவீதிக ளெல்லாம் எழுந்தரு ள்வர். 10வது உத்ஸவத்தனறு பெரிய திருத்தேரில் பெருமாளும் தாயாரும் திருவீதியெல்லாம் எழுந்தருள்வர். நிலைக்கு எழுந்தருளி னதும் ஸ்ரீஸ்வாமிக்கு விசேஷமான திருத்தேர் மரியாதையாகி 11ம் பத்து திருமொழி தொடங்கி அரங்கநகரப்பன் ஸன்னிதி திருமுன்பு ஸேவை மொஷ்டியானதும் தாயாரும் பெருமாளும் தனித்தனி இரண்டுதோளுக் கினியானில் வீற்றிருந்து மடத்தின் திருமுன்பு திருமாலை மாற்றியருளி திருமொழி சாத்துமுறை தீர்த்தவிநியோக கோஷ்டியாகி ஸன்னிதிக்கு எழுந்தருள்வர். ராத்திரி 2 திருப்பல் லக்கில் தாயாரும் பெருமாளும் திருத்தேர் எழுந்தருளின வீதிகள் மாத்திரம் எழுந்தருளும்படியிருக்கும். 11வது உத்ஸவம் சேற்றுத் தாமரையில் தாயாரும் பெருமாளும் தீர்த்தபேரருடன் அவப்ருத மாகி ஸன்னிதியில் தீர்த்தகோஷ்டி நடைபெறும். அன்று ராத்திரி ஒரு விளாமிச்சவேர் சப்பரத்தில் உபயநாச்சிமாரொடு பெருமாளும் ஒன்றில் தாயாரும் ஸப்தாவரணம் கண்டருளி த்வஜாரோஹணம் நடைபெற்று ஸ்ரீஸ்வாஹி, ஸன்னிதியில் ஸகல மரியாதைகளும் பெற் றுக்கொண்டு ஸகலவாத்ய கோஷங்களுடன் மடத்திற்கு எழுந்தரு ள்வர்.

ஸ்ரீ பெரிய ஸ்வாஹி (சின்னக் கலியன் ஸ்வாமி) திருநக்ஷத்திர மஹோத்ஸவம்

சித்திரையில் அசுவதி.

யாதுவருஷம் சித்திரைமீ 9உ ஸ்ரீ பெரியஸ்வாமி திருநக்ஷத் திரமான அசுவதி யன்று, வானமாமலைப் பெருமாள் ஒருகோட்டை எண்ணெய்க் காப்பு ஸஹஸ்ர ஸம்வாஹிஷேக மானதும்

acharya.org

விசேஷமான ஸௌரியை கண்டருளி நூதனத் திருப்பவித்ரம் சாத்திக்கொண்டு திருப்பவித்ரோத்ஸவ ஸாத்துமுறை யுடன் ஸ்வாமி ஸகலமரியாதைகளுடன் வாஹன கோஷ்டிகள் கடல்போலமுழங்க மடத்திற்கு எழுந்தருளவார் பிறகு மடத்தின் திருமுன்பு ஸ்ரீ வர்த்தமான ஸ்வாமி நவதிருப்பதி முதலிய திவ்யதேசங்களின் திருமாலை திருப்பரிவட்டம் முதலிய வஸ்துக்களைப் பெற்றுக்கொண்டு அரங்கநகரப்பன் ஸந்நிதியில் சாத்துமுறையானதும் மடத்தில் விசேஷமான ததீயாராதனம் நடைபெறும் ராத்திரி பெருமாளும் தாயாரும் அடைவே பெரிய திருவடியிலும் கஜேந்திர வாஹனத்திலும் வீதியார எழுந்தருளும் உத்ஸவம் ஸேவிக்க உரியது

விளம்பரம்

1. "திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகை" யென்னும் பெயரால் திருவாய்மொழி வியாக்கியானம் மாதந்தோறும் 40 பக்கங்கள் கொண்ட ஸஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருக்கிறது. ஆசார்ய ஹ்ருதயமும் அத்துடன் ஒவ்வொரு பாரமாக வெளிவருகின்றது. இதுவரை 15 ஸஞ்சிகைகள் வெளியாயின 170 பாசுரங்களுக்கு உரை வெளிவந்துள்ளது ஆஸ்திகர்களனைவரும் சந்தாதாரராயச் சேர்ந்து ஆதரிக்க வேணும்

வருஷச் சந்தா	ரூ 3—0—0
போஸ்டேஜ் (வெளியூர்களுக்கு)	ரூ 0—12—0

மாதிரி ஸஞ்சிகை தேவையானவர்கள் 6 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

2. வேதாந்த தேசிகர் அருளிச்செய்த க்ரந்தங்களுக்கெல்லாம் எளிய நடையில் தெளிவிய தமிழுரை வெளியிட ஆரம்பமாகி விட்டது வைராக்ய பஞ்சகம் என்கிற தேசிக க்ரந்தத்திற்கும் நயினாராசார்யர் அருளிய தேசிக மங்கள க்ரந்தத்திற்கும் உரை வெளிவந்திருக்கிறது தேவையானவர்கள் 0—5—0. ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்க

3. தூப்புல் நயினாராசார்யர் அருளிச்செய்த பிள்ளையந்தாதியின் தமிழுரை வெளிவந்திருக்கிறது, விலை அ 0—4—0 வெளியூர்களுக்கு [illegible] ஸ்தோத்ரஸ்துதி வியாக்கியானம் விரைவில் வெளிவரும்

acharya.org

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசக பத்ரிகை

தொகுதி 1	பத்ராதிபர் வடகரை இராமாநுஜாசாரியார்	பகுதி 6

ஸ்ரீரஸ்து

ஸ்ரிய:காந்தாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
ய: ச்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமசீசமத் ||
வேதவேதாந்த வேதார்த்த ஸத்ஸம்ப்ரதாய வர்த்திநீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

சித்திரையில் செய்ய திருவாதிரை

[ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்]

எழுபாருமுய்ய எதிராசருதித்தருளும் சித்திரையில் செய்ய திருவாதிரை இன்று.

"ஆழ்வார்கள் தாங்கள் அவதரித்த நாள்களிலும் வாழ்வான நாள் நமக்கு" இதுவேயாகும். இதுவே நாற்றிசையுங் கொண்டாடும் நாள்.

நமது பத்திரிகையோ ராமாநுஜ சித்தாந்த வைஜயந்தி. இராமானுசனுடைய திருவருளைப் பெற்று அவருடைய ஸித்தாந்தத்தின் ஸாரப் பொருள்களை வெளியிடுதற்கென்றே உலாவுகின்ற இப்பத்திரிகை இன்று அவ்விராமானுசனுடைய திருக்குணங்களில் சிலவற்றை அநுபவிக்கவும் நண்பர்களை அநுபவிப்பிக்கவும் குதூகலிக்கின்றது.

இந்த நன்னாளின் சிறப்பை மணவாளமாமுனிகள் ஒரு சீரிய செய்யுளினால் வெளியிட்டருளியுள்ளார், அது வருமாறு:—"சங்கர பாக்கர யாதவ பாட்ட ப்ரபாகரர் தங்கள் மதம், சாய்வுற வாதியர்

acharya.org

மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திருநாள், வெங்கலி யிங்கினி வீறு நமக்கிலையென்று மிகுத்தளர்நாள், மேதினி நஞ்சுமை யாறுமெனத் துயர்விட்டு விளங்கியநாள்; மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடுநாள், மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடுநாள், செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளுஞ் சிறந்தபெரும்பூதூர்ச், சீமா னிளையாழ்வார் வந்தருளியநாள் திருவாதிரை நாளே'' என்பதாம்.

இஃது ஆர்த்திப் பிரபந்தத்துள் முப்பத்திரண்டாவது பாசுரமாகும். எம்பெருமானார் திருவவதரிப்பதற்கு முன்னே பலபல மாயமதத்தவர்கள் இவ்வுலகில் மலிந்து வேதங்களுக்கு ஏலாத பொருள்களை ஏறிட்டுரைத்துத் தத்வார்த்தங்களுக்கு க்ஷேபத்தை விளைந்திருந்தார்கள். அதனால் வேதங்களும் 'நமது கதி இப்படியாயிற்றே !' என்று சாலவும் வருந்திக் கிடந்தன. எம்பெருமானார் திருவவதரித்தவன்றே அவற்றின் வருத்தம் தொலைந்து அவை வாழ்ச்சிபெறத் தொடங்கிவிட்டன.

அன்றியும், இந்நிலத்தில் கலிபுருஷன் நெடுநாளாகச்செங்கோல் செலுத்திக்கொண்டு தன்னுடைய பாராக்கிரமமே எங்கும் ஓங்கி வருமாறு அரசாட்சி புரிந்து வந்தான்; அன்னவனும் எம்பெருமானார் திருவவதரித்தவன்றே ''கலியுங் கெடுங்கண்டு கொண்மின்'' என்ற மூதுவர்மொழி பலிக்குங்காலம் வாய்ந்ததுபோலுமென்று துணிந்து இனி நாம் மாள்வதன்றி வாழ்வதற்கில்லையென்று தளர்ச்சியடையத் தொடங்கிவிட்டான்.

அன்றியும், பூமிப்பிராட்டியானவள் 'ஸர்வம் ஸஹா' என்று பெயர் பெற்றிருந்தாலும் நல்லார்கள் பலபல கோடிக்கணக்காகத் தன் மீது வாழப்பெற்றாலும் அவர்களைப் பஞ்சுச் சுருள் போல் சிறிதும் ஆயாஸமின்றித் தாங்கி நிற்பள். தீயவர் ஒருவரிருவர் இப்பினும் இரும்பு மூட்டை தாங்குவதனால் போல் மிக மெலிந்து நிற்பள். உடையவர் திருவவதாரத்திற்கு முன்னே நல்லார்கள் மிக மெலிந்து தீயார்களே மிக மலிந்திருக்கப் பெற்றதனால் பூமிப் பிராட்டி பொறுக் கொணாச் சுமையினால் மிகவும் துயருற்றுக் கிடந்தாள்; அன்னவள் எம்பெருமானார் திருவவதரித்தவன்றே, இனி இந்நிலவுலகில் தீயார் ஒருவருமின்றிக்கே அனைவரும் நல்லாராகவே வாழ்ச்சி பெறுவர்களென்று சிக்கனத் துணிந்து இனி நமக்குப் பொறுக்க வொண்ணாத பாரம் சிறிதுமிராதென்று தேறித் துயர் விடத் தொடங்கினள்.

அன்றியும், பல ஆழ்வார்களும் ஆசாரியர்களும் ஏற்கனவே திருவவதரித்து அருமருந்தன்ன ஸ்ரீஸூக்திகளை உதவியருளியிருந்தாலும் அவற்றுக்கு ஸர்வதோ முகமான ப்ரசாரம் ஏற்படாமலும் அழகிய வியாக்கியானங்கள் அமையாமலு மிருந்ததனால் 'நம்

முடைய அரிய பெரிய காரியங்கள் உலகுக்குப் பெரிதும் பயன்படவில்லையே!' என்று அவர்களெல்லாம் களிப்பின்றியே குன்றியிருந்தனர், எம்பெருமானார் திருவவதரித்தவன்றே 'இனி ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயாதி திவ்யக்ரந்தங்கள் ஓங்கப் பெறுமாதலால் நமக்கொரு குறையில்லை, நாம் செய்திருந்த காரியங்களெல்லாம் சதசாகமாகப் பலிக்கும்படியான பாக்கியம் வாய்க்க நற்சமயம் விளைந்திட்டது, என்று துணிந்து அன்னவர்கள் அளவிலாத ஆனந்தம் எய்தத் தொடங்கினர்.

அன்றியும், எம்பெருமான்தான் பரமபதத்தில் பரவாஸுதேவனாக வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செலுத்தியிருக்கும் இருப்பிலும், திருப்பாற் கடலில் அடியார்களின் கூக்குரல் செவிப்படுமாறு வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை மெத்தையாக விரித்து அதன் மேலே கள்ள நித்திரை கொண்டு உறங்குவான் போல் யோகு செய்திருக்கும் இருப்பிலும், ஹிரண்யாக்ஷ ஹிரண்யகசிபு ராவண கம்ஸ சிசு பாலாதிகளைத் தொலைத்திட்டு உலகை வாழ்விக்க ராமக்ருஷ்ணாதி விபவாவதாரங்கள் செய்தவற்றிலும், கருதரிய உயிர்க்குயிராய்க் கரந்து எங்கும் பரந்துறையும் இருப்பிலும், திருப்பதி பெருந்தே கோயில் திருமலை பெருமாள் கோயில் திருநாராயணபுரம் முதலான திருப்பதிகளிலே பின்னானார் வணங்கும் சோதியாய் நித்யஸந்நிதி பண்ணியிருந்தும், அந்தத் திருப்பதிகளைத் திருத்திப் பணி கொள்வாரில்லாமையாலே அர்ச்சாவதாரமும் அப்ரயோஜநமாக ஆய்விட்டதே! என்று வருந்த வேண்டியிருந்தது. எம்பெருமானார் திருவவதரிப்பதற்கு முன்னே இப்பெரியார் இவ்வுலகினிற் போந்தவன்றே "ஸர்வதேச தசாகாலேஷு அவ்யாஹத பராக்ரமா, ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்" என்று நீடூழி யூழி நாடெங்கும் போற்றும்படியாக ஸகல திவ்ய தேசங்களிலும் அற்புதமான சீர்திருத்தங்களும் கைங்கர்ய அபிவிருத்திகளும் இனி ஒளி மலருமென்று துணிந்து அர்ச்சாவதார எம்பெருமான்கள் குறை தீர்ந்து மகிழத் தொடங்கினர். ஆக இங்ஙனம் வேத வேதாந்தங்கள் களிப்புறவும், கலிபுருஷன் தேய்வுறவும், மண்மாது மகிழ்வுறவும், பூருவர்கள் யாவரும் பொலிவுறவும், எம்பெருமான்கள் இன்புறவும் அமைந்த நன்னாள் இத்திருவாதிரை யொன்றேயாகும்.

இத்திருநன்னாளில் தோன்றிய பேராசிரியர் ஆதிசேஷனுடைய அபராவதாரமென்றும் பஞ்சாயுதாழ்வார்களின் ப்ராதுர்ப்பாவமென்றும் விஷ்வக்ஸேநருடைய அவதாரமென்றும் இங்ஙனே பலவாறாகப் பெரியோர் பணிப்பர். நூற்றந்தாதியில் "அடையார் கமலத்தலர் மகள் கேழ்வன் கையாழி யென்னும் படையோடு நாந்தகமும் படர்தண்டும், ஒண்சார்ங்க வில்லும்புடையார் புரிசங்கமும் இந்தப்பூதலங்காப்பதற்கென்றிடையே இராமாநுச முனி

acharya.org

யாயின வித்தலத்தே" என்னும் பாசுரத்திலும், "[illegible] — ப்ரதயந் விமதேஷு தீக்ஷ்ண பாவம் ப்ரபுர ஸமத்பரிரக்ஷணே யதீந்த்ர:; அப்ருதக்ப்ரதிபந்நயந் மயத்னவர் வஸுதே பஞ்சபிராயுதைர் முராரே:" என்ற யதிராஜஸப்ததிஸூக்தியிலும் பஞ்சாயுதாழ்வார்களின் திருவவதார மென்னும் விஷயம் காட்டப்பட்டுளது. "[illegible] — விச்வம் த்ராதும் விஷயநியதம் வ்யஞ்ஜிதாநுக்ரஹஸ்ஸந் விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத்வேத்ரஸாரஸ் த்ரிதண்ட:;" என்கிற யதிராஜஸப்ததி ஸூக்தியொன்றில் விஷ்வக்ஸேநாவதாரமென்னும் விஷயம் கூறப்பட்டுளது.

திருவனந்தாழ்வானுடைய திருவவதார மெனனும் விஷயத்தைப் பற்பல ஆசிரியர்கள் பேசியுள்ளார்கள்.

எம்பெருமானாருடைய அந்தரங்க சிஷ்யர்களில் ஒருவரான திருமலை அனந்தாழ்வான் தாமருளிய ஸ்ரீ வேங்கடாசல இதிஹாஸமாலா என்கிற திவ்யக்ரந்தத்தில், "[illegible]...." என்கிற கத்யத்தையும், "[illegible]" என்கிற பத்யத்தையும் ப்ரஸாதித்துள்ளார். எம்பெருமான் தனது அத்தாணிச் சேவகனும் படுக்கையுமான திருவனந்தாழ்வானை நோக்கி 'நீ நிலவுலகத்திற் சென்று பிறந்து எவ்வுயிரையும் ஸம்ரக்ஷிக்கக் கடவை' என்று நியமித்தருள, அந்த நியமநத்தைச் சிரமேற்கொண்டு ஆதிசேஷன் அப்படியே திருவாதிரையில் ஸ்ரீ கேசவ ஸோமயாஜிகளுக்குப் புதல்வராகப் பிறந்தானென்பது மேற்குறித்த ப்ரமாணங்களின் பொருள்.

acharya.org

இப்படியே, மற்றொரு சிஷ்யரான வடுகநம்பி யருளிச்செய்த சுலோகரூபமான யதிராஜவைபவகரந்தத்தில்—"வேதாந்த ஸித்தாந்த ஸமர்த்தநாய பாஹ்யாந்தராந்தஸ்தமஸாம் ச ஶாந்த்யை ஶேஷாம்ஶக: கேஶவயஜ்வபத்ந்யாம் தேஜோநிதி: கஶ்சிதிஹாவிராஸீத்" ॥ என்றுள்ளது. வேதாந்த தத்துவப் பொருள்களை நிலைநாட்டுதற்காகவும் தாமஸங்களைத் தொலைப்பதற்காகவும் திருவனந்தாழ்வானுடைய அம்ஸபூதராய்த் தேஜோநிதியான ஒரு மஹான் கேசவ ஸோமயாஜிகளின் தேவியாரிடத்தில் அவதரித்தார் என்பது இந்த சுலோகத்தின் பொருள். இவ்வடுக நம்பிகள் தாமே அருளிச்செய்த ஸ்ரீராமாநுஜ அஷ்டோத்தரசத நாமஸ்தோத்ரத்தில் "ஶ்ரீகேஶவாத்வரே ஸூநு: விஷ்ணுவம்ஶோத்பவ: கவி: | ஸஹஸ்ரஸூர்யஸங்காஶ: ஶேஷாம்ஶோ வ்ருத்தஸம்ஶய:" என்பது இருபத்து மூன்றும் சுலோகம்.

எம்பெருமானுடைய பூர்ண கடாக்ஷ பாத்ர பூதராய் அவர் திறத்துத் தேவும்மற்றறியாதே ஈடுபட்டிருந்த மஹா ப்ராஜ்ஞரான கருடவாஹந பண்டிதர் பணித்த திவ்யஸூரி சரிதமென்னும் மஹா காவ்யத்தில் பதினேழாவது ஸர்க்கத்தில் ஸ்ரீராமாநுஜ வைபவம் சொல்லப்புகுந்த விடத்து, "ஸாஜங்கம் வபுர்விஹாய ஶேஷோ ஹரி யதிரூபம் ஸ்வபாவநவஸ்திதம் ஜகாம" [திருவனந்தாழ்வான் தனது உரகவுடலை விட்டொழிந்து இராமாநுச முனியாகத் திருவுருவத்தை யடைந்தான்] என்றும், "த்ரஸ்யாம்யஹம் தவ ஸவிதோபஸ்திதாச்ச ஶேஷாம்ஶஜாந் முநிவராத் ஜகதவதாரிண:" (யாதவ ப்ரகாசனை நோக்கி ப்ரஹ்மரக்ஷஸ்ஸின் வார்த்தை இது; உமது பக்கத்திலிருப்பவரும் லோக ஸம்ரக்ஷணார்த்தமாகத் திருவனந்தாழ்வானுடைய அம்ஸமாக வந்து திருவவதரித்தவருமான, இந்த [ராமாநுஜ னென்கிற] மஹானிடத்தில் நான் அஞ்சுகின்றேன்) என்றும் சொல்லப்பட்டுள்ளது.

ஆசார்ய கோஷ்டியிற் சேராதவர்களாய் முந்நூறு நானூறு வருஷங்களுக்கு முன்னே யிருந்தவர்களான பல மஹா வித்வான்களும் இவ்வழியையே ஆதரித்துப் பேசியுள்ளார்கள். ஸூரபுரம் ஸ்ரீ வேங்கடாசாரிய ஸ்வாமிகள் இயற்றின யதிராஜ தண்டகத்தில்—"நரவேஷாய சேஷாய குரவே பரவேதிநே" என்று மங்கள சலோகத்திலும் 'தோஷாதிதோஷாய ஶேஷாவதாராய' என்று முடிவிலும் மொழிந்துள்ளமை காண்க. அரசாணிபாலை ஸ்ரீவேங்கடாத்வரிகளும்

விச்வ குணதர்சத்தில் ஸ்ரீ பெரும்பூதூர்வர்ணந ப்ரகரணத்தில் " ராமாநுஜாய முநயே நரவேஷாய போகிநே ஶேஷாய யதயே கலயே கலயே ப்ரணமாமஹே " [மநுஷ்யாவதார மெடுத்த ஆதிசேஷனையும் கலியைக் கெடுத்தவராயுமுள்ள எம்பெருமானாரைத் தொழுகின்றேன்] என்று சொல்லியுள்ளார்.

ஸ்ரீ தேசிகனை யடிபணிந்து உய்ந்து போந்த ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி பணித்ததாக ப்ரஸித்தமாயுள்ள திவ்யஸூரிஸ்தோத்ரத்தில் " சைத்ரார்த்ராஸம்பவம் விஷ்ணோர் தர்ஶநஸ்தாபநோத்ஸுகம் । துண்டீரமண்டலே ஶேஷமூர்த்திம் ராமாநுஜம் பஜே ॥" [எம்பெருமானுடைய தர்சநத்தை ஸ்தாபித்தருளச் சித்திரைத் திருவாதிரையில் தொண்டை நாட்டில் அவதரித்த ஆதிசேஷமூர்த்தியாகிய ஸ்ரீ ராமாநுஜனைத் தொழுகின்றேன்] என்று சொல்லப்பட்டுளது.

இராமாநுச நூற்றந்தாதியில் "நல்லார் பரவு மிராமானுசன்" என்ற எண்பதாம் பாசுரத்தின் வியாக்யானத்தில்—" அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்து தத: பரம் பலபத்ரஸ்த்ருதீயஸ்து கலௌ ராமாநுஜஸ்ம்ருத:—அநந்த: ப்ரதமம் ரூபம லக்ஷ்மணஸ்து தத: பரம், பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌ ராமாநுஜஸ் ஸ்ம்ருத:." என்கிற ஆர்ஷவசநம் உதாஹ்ருதமாகக் காண்கிறது. இந்த ச்லோகத்தில் கலௌ கஶ்சித்பவிஷ்யதி என்கிற பாடமாகவும் கடையடி காண்கிறது.

இங்ஙனே பல ஆசிரியர்கள் எம்பெருமானாரை ஆதிசேஷாவதாரமாக அருளிச் செய்திருக்க, நூற்றந்தாதியிலும் யதிராஜஸப்ததியிலும் பஞ்சாயுதாவதாரம்—விஷ்வக்ஸேநாவதாரம் என்றிப்படி அருளிச் செய்ததேன்? என்று சிலர் சங்கிக்கக்கூடும். இதற்குப் பெரியோர்கள் பகர்வதாவது:—சரித்திர நூல் என்பது வேறு, ஸ்தோத்ர நூல் என்பது வேறு. சரித்திர நூல்களில் அவதார ரஹஸ்யம் உள்ளது உள்ளபடி உரைக்கப்படும். ஸ்தோத்ர நூல்களிலோவெனில், கவிகளின் புத்தி சமஸ்காரத்திற்குத் தக்கபடியும் ப்ரதிபாத்யர்களின் ப்ரபாவ விசேஷங்களுக்கு ஏற்றபடியும் பலவகையான வர்ணனைகள் இருக்கக்கூடும். சரித்திர நூல்களால் அறுதியிடப்படுகிற அவதார ரஹஸ்ய தத்துவங்களை ஸ்தோத்ர நூல்களிலுள்ள உக்திகள் உபமர்த்திக்க வல்லமையல்ல.

இதற்கு ஒரு நிதர்சநம் காணலாம். தேசிகன் திருமணியவதாரமென்று சரித்திர நூல்களால் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டுளது.

acharya.org

ஸ்தோத்ர நூல்களிலே சொல்லியில. "ஸேஷோ வா ஸைந்யநாதோ வா ஸ்ரீபதிர் வேதி ஸாத்விகை: விதர்க்யாய மஹாப்ராஜ்ஞை: ..." என்று பலவாறு உல்லேகிப்பதாகச் சொல்லப்படுகிறது. சரித்திர நூல்களில் ஒருவகையான நிஷ்கர்ஷம் இருக்கும்போது இப்படிப்பட்ட உத்ப்ரேக்ஷைகள் எதுக்கு? என்னும் கேட்கலாகுமோ? வைபவ விசேஷங்களைப் பார்த்தால் பல்படியும் சொல்லாயிருக்கையாலே "அதிஜமத்கரிப்பங்க திருவனந் தாழ்வானுடைய புகவாணகரமாவதாரமோ! வ்யாஸர் திருவேசமோ! மூதுவர்க்கரை கண்டோர் சீரியரிலே ஒருவரோ! முன்னம் கோற்ற அனந்தன் மேல் புண்ணியங்கள் பலித்தவரோவென்று சங்கிப்பர்கள்" (ஆசார்யஹ்ருதயம்) என்று நம்மாழ்வார் திறத்திலே போலவே மற்றுமுள்ள பெரியார் திறத்திலும் பலபடியாக உல்லேகிப்பது உரியதேயாகும். எம்பெருமானார் திறத்திலும் இப்படிப்பட்ட உல்லேகத்தை வடுகநம்பிகளும் "ஸேஷோ வா ஸைந்யநாதோ வா ஸ்ரீபதிர் வேதி ஸாத்விகை: விதர்க்யாய மஹாப்ராஜ்ஞை: யதிராஜாய மங்களம்" என்ற ச்லோகத்தினால் காட்டியருளினர்.

இங்கு ஸாரமாக ஒன்று விஜ்ஞாபிக்கிறேன். இன்ன ஆழ்வாரின் அவதாரந்தான் என்று நிர்த்தாரணம் செய்து தீரவேண்டிய அவசியமில்லை. நித்யஸூரிகளில் ஒருவர் வந்து அவதரித்திருக்கலாம். நித்யமுக்தர்கள் பலரும் திரண்டு வந்து ஒரு வடிவு கொண்டு அவதரித்துமிருக்கலாம். 'அந்த ஸூரியின் அவதாரமன்று, இந்த ஸூரியின் அவதாரந்தான்' என்று ஒன்றை மறுத்து ஒன்றை ஸ்தாபிக்கவேண்டிய ஆவச்யகதை சிறிதுமில்லை. 'எம்பெருமானார் பஞ்சாயுதாவதாரர்' என்று ஒருவர்க்குக் கொள்கையாயின் அதனை மறுத்துவிடக்க ஒருவர் முற்பட வேண்டா. பெரிய திருவடியின் அம்சமென்று மற்றொருவர்க்குக் கொள்கையாயின், அதுவும் மறுத்துத் தீரவேண்டிய விஷயமன்று. நித்யஸூரிகளில் ஆரேனும் ஒருவருடைய அம்சமாக ஆசார்யரைச் சொல்லுவது பூஷணமேயல்லது தூஷணமன்றே. பஞ்சாயுதாழ்வார்களுள் ஒருவரான திருவாழியாழ்வானொருவரே எம்பெருமானாராகத் திருவவதரித்தாயக் கூறில் குறையொன்றுமில்லாதிருக்கச் செய்தேயும் பஞ்சாயுதாழ்வார்களும் ஒன்று சேர்ந்து வந்து திருவவதரித்ததாக அமுதனார் அருளிச் செய்த கணக்கிலே அனந்த கருட விஷ்வக்ஸேநாதிகளான பல நித்யஸூரிகளும் ஒன்று சேர்ந்து எம்பெருமானாராகத் திருவவதரித்தனர் என்று ஒரு பக்த சிரோமணி திருவுள்ளம் பற்றினால் அது தானும் மறுத்துரைக்க வேண்டிய விஷயமோ? அன்று

acharya.org

'அவருடைய அவதாரமன்று, இவருடைய அவதாரந்தான்' என்று ஒரு ஆக்ரஹம் தோற்ற நிர்ப்பந்திக்கப் புகுதல் உரியதன்று. நிர்ப்பந்தித்தேயாக வேண்டிய அவசியமுளதாகில் எம்பெருமானாரைப் பற்றின வரையில் சேஷாவதாரமென்று ஸித்தாந்தப் படுத்துவதே ஸஹ்ருதய ஹ்ருதயங்கமம்.

அபரிச்சேத்ய ப்ரபாவ விசேஷங்கள் மிகுந்த இவ்வாசார்ய சிகாமணி தம்முடைய திருவடிஸம்பந்தத்தினால் பின்புள்ளாரனைவர்க்கும் உஜ்ஜீவநம் தந்தருளியது போலவே தமது திருவடி ஸம்பந்தத்தினால் முற்பட்ட ஆசார்யர்களுக்கும் உஜ்ஜீவநம் தந்தருளியதாக அக்காலத்திலிருந்த மஹான்கள் உபச்லோகித்துள்ளார்கள். இதைச் சிலர் அதிசயோக்தி என்று கொண்டாலும் அங்ஙனம் சிறப்பித்துக் கூறுதற்கு ஏற்ற பெருமேன்மை இப்பெரியார் பக்கல் நிரம்பியிருந்ததென்று நிஷ்கர்ஷிக்கத் தட்டில்லையாயிற்று.

அஸ்மதாதிகள் புதிய புதிய நரக ஸ்ருஷ்டிக்கு ஹேதுவான மஹா பாதகங்களை க்ஷணந்தோறும் அளவுகடந்து செய்பவர்களாயிருக்கச் செய்தேயும் 'நம்மிராமாநுசனையுடையோம்' என்று மார்பு நெறிக்கப் பெற்று நாமும் நற்கதி நண்ணுதற்குத் தடை சிறிதும் கிடையாதென்பதை தேசிகனும் மணவாளமா முனிகளும் ஸ்பஷ்டமாக அருளிச் செய்தருளினர். தேசிகன் ந்யாஸதிலகத்தில் "உக்த்யா தநஞ்ஜய விபீஷண லக்ஷ்யயா தே ப்ரத்யாய்ய லக்ஷ்மண முநேர் பவதா விதீர்ணம் । ச்ருத்வா வரம் ததநுபந்த மதாவலிப்தே நித்யம் ப்ரஸீத பகவந் மயி ரங்கநாத ॥" ச்லோகத்தில் ஸ்ரீரங்கநாதனை நோக்கியுரைக்கும் முகமாகத் தெரிவித்தருளின சீரிய பொருளை மணவாளமா முனிகள் யதிராஜவிம்சதியில் "காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய சரணம் பகவத்க்ஷமைவ । ஸா ச த்வயைவ கமலாரமணேऽர்த்திதா யத் க்ஷேமஸ் ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ச்ரிதாநாம் ॥" என்ற ச்லோகத்தில் எம்பெருமானாரையே விளித்து வெளியிட்டருளினர்.

அறுசமயச் செடியதனை யடியறுக்க, அடர்ந்து வரும் குதிட்டிகளை அறத்துறக்க, செறுகலியைச் சிறுது மறத் தீர்த்துவிட, தென்னரங்கர் செல்வம் முற்றுந் திருத்திவைக்க, மறையதனிற் பொருளனைத்தும் வாய்மொழிய, மாறனுரை செய்த தமிழ்மறை வளர்க்க அழகாரு மெதிராசர் அறமிகு நற்பெரும் பூதூரில் அவதரித்த இந்தத் திருவாதிரையையே மறவா திரு நெஞ்சே!.

acharya.org

ஸ்ரீமத உபயவேதாநத விதவச சிகாமணி
காரபபஙகாடு - சிஙகபபெருமாள ஸவாமி

acharya.org

ஸ்ரீ:.

ஸ்ரீமத். உபய வேதாந்த வித்வச் சிகாமணி

காரப்பங்காடு. சிங்கப்பெருமாள் ஸ்வாமி.

(ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசாரியர் எழுதுவது.)

ஸ்ரீ வைஷ்ணவ வுலகத்தில் இந்த ஸ்வாமியின் திருநாமத்தைக் கேளிவிப்படாதவர்கள் பெரும்பாலும் இருக்கமாட்டார்கள். இவர் திருநாட்டுக்கெழுந்தருளி இரண்டு மூன்று ஸம்வத்ஸரங்களாயின. இவருடைய திருவுருவப்படம் இந்த ஸஞ்சிகையில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. நேரில் ஸேவிக்கப் பெறுதவர்களும் இப்போது ஸேவித்து க்ருதார்த்தர்களாகக் கடவர்கள்.

இவருடைய ஞானனுஷ்டான வைபவங்களைப்பற்றி விரிவாக விஜ்ஞாபனம் செய்ய அடியேனுக்கு யோக்யதையில்லை. ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களிலும் த்ராவிட சாஸ்த்ரங்களிலும் மிகத் தெளிவான ஞானம் பெற்று ஸ்ரீபாஷ்ய பகவத் விஷய ரஹஸ்யாதி க்ரந்தங்களை அநேக பர்யாயம் சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதித்து, அநேக வித்வத் ஸபைகளிலும் அம்ருதமொழிகளை அடிக்கடி வர்ஷித்து நாடெங்கும் பரவிய நற்புகழ்பெற்ற மஹாநுபாவர் இவர். அநேக ஸம்வத்ஸரம் திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருந்து உபய வேதாந்த ரஹஸ்யார்த்தங்களைப் பலர்க்கு உபதேசித்தருளினவர். ஜ்யோதிச் சாஸ்த்ரத்திலும் மஹா நிபுணர். எந்த விஷயத்திலும் ஸம்சய விபர்யயமில்லாமலும் புஸ்தகத்தைக் கடாக்ஷியாமலும் தாராளமாகச் சொல்லிக்கொண்டிருந்தவர். ஸ்ரீ பாஷ்யம், ச்ருதப்ரகாசிகை, வேதாந்த தேசிகனுடைய க்ரந்தங்கள், உபநிஷத் பாஷ்யகாரரான ரங்கராமாநுஜ ஸ்வாமியின் க்ரந்தங்கள், மைஸூர் அனந்தாழ்வானுடைய வேதாந்த வாதாவளிகள், ஸ்ரீவசநபூஷண மீமாம்ஸா பாஷ்யம் ரஹஸ்யத்ரய மீமாம்ஸா பாஷ்யம் முதலிய ஸகல க்ரந்தங்களும் இந்த ஸ்வாமிக்கு வாசோவிதேயம். இதிஹாஸ புராணங்களிலும் தர்மசாஸ்த்ரங்களிலும் ஞாபக சக்தி அளவிட முடியாதது. ஆசார்ய ஹ்ருதயம் என்கிற திவ்ய ரஹஸ்யக்ரந்தம் இவர்க்கு அஸாதாரண நிதியாக வாய்ந்தது.

acharya.org

இந்த ஸ்வாமி ஸந்நிதியில் அத்யாத்ம சாஸ்த்ரார்த்தங்களை க்ரஹித்து ப்ரஸித்த வித்வான்களாகப் பல மஹான்கள் விளங்கி வருகிறார்கள். காரப்பங்காடு தேசிக. வரதாசாரியர் ஸ்வாமி, சேனங்குளம் பஹுகுடும்பி ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி, காரப்பங்காடு கிடாம்பி வெங்கடாசாரியர் ஸ்வாமி, உத்தமசீலி. [ஸ்ரீரங்கம்] ரங்கஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி ப்ரப்ருதிகள்.

இந்த ஸ்வாமியின் தௌஹித்ரரும் ஸ்வீக்ருத குமாரருமாகிய ஸ்ரீமதுபயவே. (ந்யாய வேதாந்த வித்வான்) வெங்கடாசாரியர் ஸ்வாமி இப்போது இவருடைய திருமாளிகையில் எழுந்தருளியிருந்து உபய வேதாந்த க்ரந்த ப்ரவசநம் செய்தருளி வருவது மிகவும் பாராட்டத்தகுந்தது.

பூர்வாசார்யர்களைப் போலவே கௌரவிக்கத் தகுந்த பெருமை வாய்ந்த இந்த சிங்கப்பெருமாள் ஸ்வாமி விஷயமாகச் சில ச்லோகங்களையும் செய்யுட்களையும் விஜ்ஞாபிக்கும்படியான பாக்கியம் சில மஹான்களின் நியமனத்தினால் அடியேனுக்கு வாய்த்தது. அவை வருமாறு:—

श्रीकारपङ्काट-सिंहपूर्णार्य-स्वामि
विषयक श्लोकाः ॥

आत्रेयान्वयदुग्धवारिधिविधुः श्रीवेङ्कटार्यात्मजः
श्रीरामानुजसंयमीन्द्रचरणाम्भोजद्वयीषट्पदः ।
श्रीशेषार्यकवीन्द्रवेङ्कटगुरोः श्रीवादवर्ष्माश्रितं
[illegible] सिंहार्यसूरिं
भजे ॥

आत्रेयवेङ्कटगुरूत्तमपुत्ररत्नं
श्रीश्रीनिवासगुरु[illegible] ।
रामानुजार्यमतराजकृपात्तबोधं
श्रीशैलसिंहगुरुवर्यमहं प्रपद्ये ॥

[illegible]
[illegible]

ஜாதா த்ரயோம்ஶீ । திவ்யஶ்ரீஸூக்திஸம்க்ரஹஸாரஸாரஸ்ரீ வர்ஷே க்ருஷ்ணவாஸர: ஸோமாயம் ஸிம்ஹாயஸூரீ: ஸ்வயம் ததாஹஸ்திராநவே ஸமயந்தாம் ॥

யஸ்த்ரய்யந்தயுகாந்தவாஸிவிவிதஶ்ரீஸூக்திரத்நாஶயாத் ஸாரம் ஸாரதமம் வ்யஶிஷ்ய நிவஹாந்நேதீயஸ்த்வேந பஹுஶ: ஶ்ரீபரிஜ்ஞாநாதிதி க்ஷிதிதலே வ்யாதநோதா தாராரோஸாயம் ஸர்வலோகாவிராஜநியமோ ஜாகர்தி தே தே ॥

ஶ்ரீரங்கேந்தோ: பதஸரஸிஜத்வந்த்வஸேவைகநிஷ்ட: ஸித்தாந்தம் நித்யம் நிகமஶிகராம்ஶம் ததஸ்தாதி । வர்ஷம் வர்ஷம் விதநுதநவோ ஹ்யஸம்ஸ்பர்ஶமாநோ ஸ்ராக்ஷ்யம் ப்ரக்ஷேந ஸம்ரதாராமோஸ்யதாயோமதிந: ॥

ஶம் தேவேஶோ தேவேஶதேவதேவேஶா
ஸ்துதிதா ஸ்துதிதா ஸ்துதிதா க்ருதிஷு ।
சதுஸ்த்ரிம்ஶதிம் விஷயம்
நரஸிம்ஹம் தேவம் ஸததம் ஸ்துதிம் ॥

ஸத்யப்ரமாணஸம்ஸ்துத்யதம ஸூக்திஸம்ஹதி ஸமர்ப்பிதோ தேஸஸ்ய நரஸிம்ஹஸூரிணா க்ருத: । ஸதாம் ஸமஸ்தம் ஸஹிதம் ஸதஸ்யா ஸமர்ப்பிதம் விதேயாந கஶ்ருஷ்டம் நரஸிம்ஹம் ஹரிம்பஜே ॥

ஸத்வம் ஸம்ப்ரதாயஸ்துதிஸ்ரீஶ்ரீ ஶ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹஸ்வாமீ விதஸ்வபர: । ஸ்ரீஸ்துத்யஸிம்ஹாயபர: ஸவித்ர: ஶதே ஶதே ஸமதம் விஹதி ॥

அகாராதிஸ்துதிமாலா ॥

அநந்தவைகுண்டநிவாஸதேவ ஸஹஸ்ரஶீர்ஷஶயந ஸ்ரீஶ । ஸ்ரீமந் ஸிம்ஹாஸநஸ்த நித்யம் விஜயஶ்ரீ ஸதே ॥ க ॥

acharya.org

[illegible]

[illegible]

வாழி திருநாமம்

தரணியி லிருள்செகவந் துதித்தபிரான் வாழியே
தாழ்வாது பிறகலைகள் தரித்துரைத்தோன் வாழியே
ஏரணிசீர் வேங்கடவ ரிணையடியோன் வாழியே
எழில்திருவாய் மொழிப்பொருளை யினிதுரைப்போன் வாழியே
தாரணியும் புளிங்குடி மாமுனி பணிந்தோன் வாழியே
தகவுடனே பாஷ்யத்தைத் தெரிந்துரைத்தோன் வாழியே
காரணிந்த காரப்பங் காடுதித்தோன் வாழியே
கருணைமிகு புகழ்ச் சிங்கப் பெருமாள் தாம் வாழியே

மணவாள மாமுனிவன் மன்னுரைகள் வாழ்த்த
தணவாத வேதியர்தாம் வாழ்க—குணவாளா
சென்னிதிகழ் சேவடியோய் சிங்கப் பெருமாளே
இன்னமொரு நூற்றாண் டிரும்

சந்ததமும் வடதென்மொழி மாமறை சீர்பொரு ளீந்தவா நாள்
சாதுசனங்க ளுவந்திட ஆழ்பொருள் சாரமளித்த தவாநாள்
அந்தமில் நற்கலை யத்தனையுந்திரு நாவிலமர்ந்த தவாநாள்
ஐயமறத் தெளிவாக வரும்பொரு ளன்பொ டுரைத்தவா நாள்
சிந்தைமகிழ்ந் துலகாரியர் நன்மொழிச் சீர்மை தெரித்தவா நாள்
சீர்மிகு நன்மணவாளமுனித் திருவுள்ள முரைத்தவா நாள்
உய்ந்தது மாநிலமென்ன விளங்கிய சிங்ககுருப்பெருமாள்
உத்தமமாவந்து பிறந்திடுமைப்பசியனுடந்தெனுநாளே

சிங்கப்பெருமாள் திருவடிகளே சரணம்

---

acharya.org

கச்சிமேய களிறு

(பிரதிவாதிபயங்கரம் - அண்ணங்கராசாரியார்)

வேதாந்ததீபிகை —சென்ற ஆவணிமாதம் வெளிவந்த இப்பத்திரிகையில், ஸ்ரீமதுபயவே ஸ்ரீ நரஸிம்மாசார்யர், அட்வகேட், ஸ்வாமியாகிய எமது உயிர்நண்பர் "அத்திகிரி அருளாளனும் ஆழ்வார்களும்" என்ற தலைப்பின்கீழ் எழுதியுள்ள விஷயங்கள் இன்சுவையே வடிவுகொண்டவை. அதிலுள்ள ஒரு பாரா மாத்திரம் சிறிது பரிஷ்கரிக்கப்படவேணுமென்று அடியேன் கைகூப்பி வணங்கி வேண்டிக்கொள்ளுகின்றேன். அதாவது—

"கல்லுயர்ந்த நெடுமதில்சூழ் கச்சிமேய களிறு—என்பது திருநெடுந்தாண்டகம். இது பாடகத் தெம்பெருமானைக் குறிக்கும் என்பர் சிலர். பாடகத்தில் கல்லுயர்ந்த நெடுமதில்களேயில்லை. அது ஒரு சிறு கோயில். களிறு என்னும் ப்ரயோகம் ஹஸ்திகிரிநாதனுக்கு அமையுமேயன்றி மற்றொருவருக்கும் அமையாது 'ஐயன்பாழியில் ஆனை போக்கு உரித்தாமோ'?"

என்று ஒரு பாரா எழுதியுள்ளார். பூருவாசாரியர்களின் திருவடிகளையே தஞ்சமாகக் கொண்டிருக்கின்ற அடியேன்போல்வார்க்கு இந்த வாக்கியங்கள் வருத்தத்தை விளைவிக்கின்றனவென்று ஸவிநயம் விஜ்ஞாபனம் செய்யாதிருக்க முடியவில்லை. "கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சிமேய களிறே!" என்ற திருநெடுந்தாண்டகப் பாசுரத்திற்குப் பாடகத்தெம்பெருமான் விஷயமான வியாக்கியானமருளிச் செய்தவர் ஸர்வஜ்ஞராய ஆசார்ய ஸார்வபௌமரான பெரியவாச்சான் பிள்ளையாவர். அன்னவர் தகுதி நோக்கியே ஆழ்ந்து அருளிச்செய்த பொருளை "என்பர் சிலர்" என்ற சொல்லால் அநுவதிப்பது அழகோ?

அடியேனும் திருநெடுந்தாண்டகத்திற்கு விரிவான உரை [திவ்யார்த்த தீபிகை] எழுதி வெளியிட்டுள்ளேன். ப்ரக்ருத ஸ்தலத்திற்கு ஆங்கு அடியேன் வரைந்துள்ளவற்றைக் கீழே குறிப்பிடுகின்றேன்,—

acharya.org

“ இஙகுக கசசிமேய களிறு எனகிறது திருபபாடடகதது நாய ஞரை எனபா பெரியவாசசானபிளளை திருவததிமாமலையில நினறருளாநினற பேரருளாளப பெருமாளை எனறு அருளிச செயதிருககலாம, அவருடைய திருவுளளம அஙஙனே நெகிழுந்தபடி திருபபாடடகதது நாயஞராக அருளிச செய ததறகு ஒரு பொருததமுணடு, + நினறதெந்தை யூரகததி ருநத தெநதைபாடடகதது, அனறு வெஃகணைக கிடநதது + எனறு திருமழிசைபபிரானை அநுபவிததபடியை இமமூனறு ஸதலததிலும அநுபவிககிறுள இவள—எனறு மேலே நிரவ ஹிததருளுகையாலே அததறகுப பொருநதும திருவழுநதூ ரில் நினற திருககோலமும திருபபாடடகததில வீறறிருநத திருககோலமும திருபபாறகடலில பளளிகொணட திருக கோலமுமாக அநுபவிககிறுரெனறு நிாவஹிபபதில ஒரு சமத காா அதிசயமுணடு காணும ”—எனறேன

வாஸதவததில திருமஙகையாழவாருடைய திருவுளளததிறகு நனகு பொருநதவே பெரியவாசசானபிளளையின வியாககியான முளளது ஸ்ரீஹஸதிகிரி நாதனிடததில அவாககுப பகையா? ராஜாதிராஜனுயும களிறு எனகிற சொலலுககு ஏறறவனுயுமெழுந தருளி யிராநினற பேரருளாளனை விடடு ஒரு மூலையிலே யிருக கினற பாணடவதூதப பெருமானை யிடடுப பெரியவாசசான பிளளை வியாககியானஞ செயதருளினரெனருல ஸாவஜஞரான அவருடைய திருவுளளததைக கணடு பிடிகக முயலவதனறே நமக குப பணி நமமுடைய புததியில தோனறுகிற ஆததம அவரு டைய விசாலபுததியில தோனருமற போகுமோ?

“ பெரியவாசசான பிளளை பினபுளளவைககுந
தெரிய வியாககியைகள செயவால—அரிய
அருளிச செயலபொருளை ஆரியாகடகிபபோது
அருளிச செயலாயத தறிநது ”

எனறு உபதேச ரத்தினமாலையில மணவாளமா முனிகளருளிச செயவதை நோககுஙகால அருளிசசெயற பொருள விஷயததில பெரியவாசசான பிளளை திருவடிகளொழியத தஞசமுணடோ நமககு?

acharya.org

“பாடகததில கலலுயாநத நெடுமதிளகளே யிலலே, அது ஒரு சிறிய கோயில” எனறு நமது நணபா எழுதியுளளாா இது எதறகாக எழுதபபடடதோ? பாணடவதூதன ஸநநிதியைக கல லுயாநத நெடுமதிள சூழநதிருபபதாக ஆழவாா அருளிச செய திருககவிலலேயே நெடுமதிலசூழ எனபது கசசிககு அடைமொழி யாகவுளளதததனே காஞசீபுரததில நெடு மதிளகளுளளன எனபதில எனன விவாதம? அபபடிபபடட காஞசீபுரததில வீறறிருநத திருககோலமாக ஸேவை ஸாதிககினற பாணடவ தூதனே! எனபதில எனன வழு? கசசியெனபது நகரப பொதுப பெயரலலவோ?

திருநாஙகூரைச சோநத பதினொரு திருபபதிகளேப பறறிய திருமஙகையாழவாா பாசுரஙகளே உறறு நோககவேணடும நாஙகூா எனபது ஒவவொரு பதிகததிலும வரும இடும அடைமொழிக ளெலலாம நாஙகூரில அநவயிககும அதுபோலவே இஙகும கசசி யில அநவயிககினறது ஆகவே, கலலுயாநத நெடுமதிள கசசியி லுணடா இலலேயா எனகிற விசாரம பராபதமாகுமே யலலது பாட கததிலுணடா இலலேயா எனகிற விசாரம பராபதமாக வழியிலலே

அனறியும பேரருளாளன ஸநநிதியைச சுறறி இபபோது காணபபடுகினற திருமதிளேயா ஆழவாாகள பேசி •யிருபபது? ஆழவாாகள காலததில இபபோதைய திருமதிள நிாமாணமாக விலலேயெனறு பிராமாணிகாகள கூறுகினறாாகள அது ஏறபு டையதெனறே இசையதத தககது திருககணணபுரததைப பறறி நமமாழவாா பாடியுளள பதிகததில *வேலே மோதும மதிளசூழ திருககணணபுரம* வெளளி யேயநத மதிளசூழ *வானேயுநது மதிளசூழ* ஙனபொனேயநத மதிளசூழ* கலலிலேயநத மதிள சூழ* எனறுளள திருவாககுககள காணததககன இபபடிபபடட அருளிச செயலகள மறறும பலபல திருபபதிகளேப பறறியும பல பலவுளளன எமபெருமானுடைய திருபபதிகடகு இததகைய அமைதிகள நேரவேணுமெனகிற ஆசமலையினுலே ஆழவாாகள மிகச சிறபபிததுக கூறுகினறாாகள உணமை இபபடி யிருகக, பாடகமெனபது கலலுயாநத நெடுமதிள சூழபபெறாத சிறு

acharya.org

கோவில எனனத தருமோ? ஆழவாரகள திருவுளளததிலை சிறு கோவில எதுவுமிலலையே ஸ்ரீபாஷயததின தொடககததில பரஹம சபதாரதத நிருபணம செயதருளா நினற எமபெருமானூர பெருமை யெனனும குணததை இரணடு வகையாகப பகுததுக கூறுகினறார. உருவததினால ஏறபடும பெருமை ஒனறு, குணங களினால ஏறபடும பெருமை ஒனறு இவறறுள குணஙகளினலாகும பெருமை சிறநதது அநதப பெருமை உகநதருளின நிலங களெலலாவறறிறகும தலையமெனபதே ஆழவாரகளின திருவுளளம "மருவிய பெரிய கோயில மதிள திருவரஙகம" எனற தொணடரடிபபொடியாழவாரும அநதப பெருமை தனனையே விவகஷிததுப பெரிய கோயிலெனறார பராகார கோபுர மணட பாதித திருபபணிகளினாலாகிய உருவப பெருமையும உணடானால அதை மறுககவேணடிய அவசியமிலலை யெனக

பாடகததிற காட்டிலும சிறு கோவிலாகிய (ஆழவார திருநகரி ஸமீபததிலுளளதான) திருததுலைவிலலிமஙகலததை ஆழவார *துவளில மாமணிமாடமோஙகு துலைவிலலி மஙகலம* எனகிறார ஒரு அநதணாகூட இலலாத அநதத தலததை *சிறகும நானமறைவாணா வாழ துலைவிலலி மஙகலம* எனகிறார இவவகைப பாசுரஙகளைப பொருநத விடுகிற ரீதியிலே *கலலுயாநத நெடுமதிலசூழ பாடகம* எனறு ஒரு பாசுரமிருநதால அதனையும தாராளமாகப பொருநதவிடலாமே உணமையில பாடகததைப பறறின விசேடணம ஒனறுமே யிலலாமலிருகக, அததலததைக குறிதது நமது நணபா எழுதியுளள வாாததைகள இலலாமலிருககலாமெனறு தலைவணககிக கைகூபபி விஜஞாபிககினறேன "கலலுயாநத நெடுமதிளசூழ கசசிமேய களிறே!" எனறருளிய திருமஙகையாழவார திருவுளளததில திருபபாடகதது நாயனார தாம களிறாக விளஙகினார எனறு திணணமாகக கொளளவேணடும "கலலார மதிளசூழ கசசி நகருள நசசிபபாடகததுள, எலலா வுலகும வணஙகவிருநத வமமான" எனறு இவவாழவாரதாமே பெரிய திருமொழியிலு அருளிச செயதுளளார அவவிடததுளள விசேடணம போலவேதான திருநெடுந தாணடகததிலுளளதும சிறிதும வாசியிலலை கசசி எனகிற பதததிறகே பாடகமெனகிற

acharya.org

பொருளைப பெரியவாசசான பிள்ளை கொணடதாக காஹிபபதற குச சிறிதும இடமிலலை "கசசி வெஃகாவிற கிடநதிருநது நின றதுவுமஙகு" எனற பேயாழவாா பாசுரததிறகும அடியேனுடைய திவயாாதத தீபிகை நோககததககது தேவபபெருமாள ஸநநிதி யில எழுநதருளியுள்ள அழகிய சிஙகா வீறறிருநத திருககோலமே யானாலும அவரைச சோதது ஆாததம பணணுவது பொருதத முடையதாகத தோனறவிலலை பல திவய தேசஙகளில நருஸிம ஹன சககரவாததித திருமகன கணணன முதலான எமபெருமான கள காலகரமததிலே பகதாகளால பரதிஷடிபபிககபபடுவதுணடு இதறகுமேல இஙகு விரிவு வேணடாவென விடபபடுகினறது

"ஜயனபாழியிலானை போாககு உரிததாமனறு" எனகிற வாககியம தேவதாநதரஙகளை நோககி நமபிள்ளை யீடடில அருளிச செயததாகும அதனை பரவிதத திவய தேசததெமபெருமான விஷயததிலே பிரயோகிததல பொருநதுமோ?

வாககுத தூயமையிலாத நீசனேனுடைய வாசகஙகளில உள்ள குறறஙகுறைகளை நமது உயிா நணபா இயறகையினனருளால பொறுததருளவாராக

ஸ்ரீராமாநுஜஸித்தாந்தம்

(பததராதிபா)

செனற பஙகுனியிலுததிரததில சேஷதவததின பேதங் களையும அவைகளில அசிததுபபோலே தனககேயாக வெனைக் கொள்ளவேணடுமெனறிருககும சேஷதவமே ஆதமாவிறகு ஸவரூபம எனறு சொலலபபடடது

இபபோபபடட சேஷதவததை ஸவரூபமாகவுடைய ஆத மாககள, பததாகள, கேவலாகள, முமுக்ஷுககள, முகதாகள, நிதயாகள எனறு ஐநதுவகைபபடடிருபபாகள

இவாகளில பததாகளாவாா அடிகாண முடியாத அவிதயா வாஸநாருசி பாகருதி ஸமபநததததால ஸமஸாா சககரததி

acharya.org

லகபபடடு, பகவ தாயதத ஸவரூபஸதிதி பரவருததிகளையுடையவா களாகையால அவனுககே சேஷபூதாகளாயிருககும ஸவாஸாதா ரண ஸவரூபததிறகனுகுணமான அவனுடைய முகமலாததிககே யுறுபபான கைஙகாியஙகளிலேயே பரமபரீதியை யுடையவா களாய ஸாவபரகார பரிபூரண பகவதநுபவததாலே உணடான அளவிலாவானநததைதை யடைவதறகு யோகயாகளாயிருககும தஙகளை பெருமையை மறநது அததை இழநதோமே எனகிற துககலேசமுமினறிககே துககததிறகிருபபிடமாய ஸுகலேசமு மினறிககேயிருககும தாய வநத வழியறியவாிதாய தஙகளால தவிாபபிததுககொளள முடியாததாயும பரகருதி ஸமபநததா லுணடான ஜநமஙகளிலிருநது விடடுபபோகாமைக குறுபபாய பலவகைபபடடதாய, அளவிலா வறிவுடையாரையும கலஙகப பணணுமதாய அதயாஸசாயாவஹமா யிருநதுளள ஶபதாதி விஷயஙகளில ஆழநது பகவானுடைய மாயையினால மறைககப படட ஸவபரகாஶததை யுடையவாகளாய அநாதயஜஞாநாநதா களாகையால அநயதாஜஞாந விபாீதஜஞாந முடையவாகளாய அதனடியாக உணடான ராகதவேஷஙகளை யுடையவாகளாய அதறகநுகுணமான காமஙகளைச செயயாநினறுகொணடு அநத வாஸநாபலததாலே விருததியடையபபடட விபாீத ருசியை யுடையவாகளாய அததாலே சமபாதிககபபடட புணயபாபரூப மான அநாதி காம பரவாஹததாலேறபடட தேவதிாயகமநுஷ யஸதாவர ரூபமான நானகுவித ஶரீரஙகளையும பாிகாஹிதது அவ வோஶாீரஙகளில காபப, ஜநம, பாலய, யௌவந, வாாதகக, மரண, நரகஙகளாகிற அவஸதா ஸபதகம [ஏழு] களிலும ஆதயாதமிக ஆதிபௌதிக ஆதிதைவிகஙகளாலேறபடட அனேகவித கஷடங களை யனுபவிதது அநத தேக ஸமபநதததைப பறறிய பாாயா புதராதி ரக்ஷணாததமாக ஙதநதயுதித ஆதிதயே எனகிறபடி சூாயோதயமானதும உணடியே யுடையே எனறு உகநதோடி ஙதநதயஸதமிதேரவளா எனகிறபடி சூாயாஸதமந மானவளவில வேறகணணாகலவியே கருதிக களிததுத திரியும பரஹமாதிகீடபா யநத (பரஹமாமுதலாயபுழுககளீருயுளள) ஆதமாககள கேவலா கள எனபவா, ஸமஸாரமாகிற மருகாநதாரததில கருதயா

acharya.org

க்ருதய விவேகமின்றி அங்கு மிங்கு மலையா நின்றுகொண்டு ஆத்யாத்மிகாதிதாபத்ரயத்தால் வருந்தாநிற்க, ஏதோ ஒரு ஸுக்ருத விசேஷத்தால் ஶாஸ்த்ராப்யாஸத்தைப் பண்ணி அதனால் ப்ராக்ருதாத்ம விவேகமுண்டாய் அதனடியாய் ப்ரக்ருதியின் தீமையையும் எண்பெருக்கந்நலத்தொண் பொருள் என்கிறபடி விலக்ஷணமான ஜ்ஞாநத்தைக் குணமாகவுடையதாய் ஸ்வயம் ப்ரகாஶமாய் ஸ்வதஸ்ஸுகியாய் அப்ராக்ருதனாய் நித்யனாயிருக்கும் ஆத்ம ஸ்வரூபத்தின் நன்மையையும் நன்கறிந்து கொடுமைக்குக் கொள்கலமான ஸம்ஸாரத்தை ஒழித்து ஆத்மாநுபவமாகிற ஆநந்தத்தை யடைவதற்கு யோக்யமான ஜ்ஞாநயோகத்திலிழிந்து உணர்முழு நலம் என்ற பரமாத்மாவின் ஸ்வரூபத்தை யறியாதே அநந்தமில் பேரின்பமாகிய பகவதநுபவத்தைக் காற்கடைக்கொண்டு அசித்தைக்காட்டிலும் சிறிது விலக்ஷணமான ஆத்மாநுபவத்தையே புருஷார்த்தமாகக் கைப்பற்றி அவ்வநுபவத்தைப் பண்ணா நின்றுகொண்டு ஆத்மாவுள்ள வளவும் அஶரீரியாய்த் திரியு மவர்களாவர் முமுக்ஷுக்கள், கீழ்ச் சொன்னபடியே ஸம்ஸாரமாகிற சக்ரத்தில் புநரபிஜநநம் புநரபி மரணம் என்கிறபடி சுழலாநின்றுகொண்டு மஹத்தான து:கத்தை யடையாநிற்க ஜந்மாந்தர ஸஹஸ்ரங்களில் இவனறியாமல் ஏற்பட்ட யாத்ருச்சிக ஸுக்ருத விசேஷமடியாக பகவானுடைய நிர்ஹேதுக ஜாயமாநகால கடாக்ஷத்தால், பகவத் விஷயத்தில் பக்தியுண்டாய் அதனடியாக ஸம்ஸாரத்தில் வெறுப்புமுண்டாய் ஸம்ஸாரத்தினுடைய கொடுமையை நினைத்து, ஓ! உலகினதியல்வே என்றும் நண்ணாதார் முறுவலிப்பநல்லுற்றார் கரைந்தேங்க எண்ணாராத்துயர்விளைக்குமிவையென்னவுலகியற்கை என்றும் ஓலமிட்டுக் கூப்பிட்டு இந்த ஸம்ஸாரத்தைவிட்டு ஒரு தேஶ விசேஷத்திலேபோய் பகவதநுபவத்தைப் பண்ண விசஸியா நின்றுகொண்டு ஜ்ஞாநாந்மோக்ஷமாகையால் அதை அடைவதற்கு ஒரு ஆசார்யனைக்கிட்டி அவனுபதேஶத்தால் ஸம்ப்ரதாய பரம்பரா ப்ராப்தமான ரஹஸ்யத்ரயோக்தமான அர்த்தபஞ்சக ஜ்ஞாநத்தைப் பெற்று அதனடியாக உண்டியேஉடையே என்று கந்தோடும் ஸம்ஸாரிகளோடு ஸஹவாஸம் பண்ணுகை து:ஸஹ

மாய கூவிககொளளுமகாலமினனம குறுகாதோ எனறும கருத கருதயா பரதீக்ஷநதே மருதயும பரியமிவாதிதிம எனறும சரீர வியோக காலததை எதிாபாாதது இடையில இருககும நாடகளில இளஙகோயில எனறு அவனுகநதெழுநதருளியிருக கும திவயதேசஙகளிலே பரவணாய குணாநுபவ கைஙகாயங களால காலக்ஷேபம பணணுகினறுகொணடும இவவாறு குணாநு பவம•பணணிககொணடிருககும ஸ்ரீ வைஷ்ணவாகளின பெருமை யைப பெரிதும பாராடடி திருமநதாததிலும தவயததிலும நியத னாய அததை அநுகாஹிதத ஆசாாயன விஷயததில கருதஜஞ னாய எமபெருமானிடததில மிகுநத பரேமததையுடையனாய ஜஞாநமும விரகதியும ஸாநதியுமுடையனான பரமஸாதவிகாக ளோடு ஸஹவாஸம பணணிககொணடு இவவிருளதருமாஞாலத தைத தஙகளுபதேஸாதிகளால தெருளதருமா ஞாலமாககிக் கொணடெழுநதருளியிருககும பரமபாகவதோததமாகள

முததாகளாவாா, கீழசசொலலபபடட முமுக்ஷுககள பெரிய பிராடடியாா புருஷகாரமாக எமபெருமான திருவடிகளை உபாய மாகபபறறி பகவதாஜஞாரூபமான நிதயநைமிததிகாதிகாமஙகளை பகவதகைஙகாய புதயாவநுஷ்டிதது பகவதபாகவத ஆசாாயாபசா ரஙகளை அறவேயொழிதது தேஹாவஸாநஸமயததில பகவதபாக வத ஆசாாய விஷயததில இவனறியாமல எதேனுமபசார முணடா யிருநதால அதறகு க்ஷமாபணமவேணடி விடைபெறறு தாஙகள செயதிருககும புணயபாபஙகளை அநுகூலாபககளிலும பரதிகூலா பககளிலும சோபபிதது அருளாழிபபுடகடவீா எனறு இவாகளா சைபபடடபடியே பெரியதிருவடியினமீது எழுநதருளி ஸேவை ஸாதிதது ஆதிவாஹிகரைககொணடு ஸதகரிபபிகக இநதரியாம நஸிஸமபதயமானை எனகிறபடி பாஹயேநதரியஙகள மனஸ ஸிலேலயிகக மனஸஸு-பராணனோடு சோநது பராணன ஆதமா வோடு சேர ஆதமா பூதஸூக்ஷ்மவிஸிஷ்டனாய பரமாதவோடு சோநது ஹாாததன (ஹருதயகமலததில எழுநதருயிருககும பரமாதமா) வழிகாடட முகதிமாாகக வாயிலான ஸு-ஷு-மனை, எனகிற நாடியின வழியாக பரஹமாநதரததைப பேதிதது வெளி யேறி பாதேயம புணடரிகாக்ஷநாமஸஙகீாததநம' எனகிறபடி

acharya.org

பகவந்நாமஸங்கீர்த்தநத்தைப் பாதேயம் (கட்டுசாதம்) ஆக்க் கொண்டு அர்ச்சிராதிமார்க்கமாக விரஜாநதியைக்கிட்டி ஸ்நாநம் செய்து ஸூக்ஷ்மஶரீரத்தையும் ஒழித்து அமாநவகரஸ்பர்ஶத்தால் அப்ராக்ருத திவ்யமங்களவிக்ரஹத்தைப் பெற்று ஐந்நூறு திவ்யாப்ஸரஸ்ஸுக்களால் அலங்கரிக்கப்பெற்று ஸ்ரீ வைகுண்ட மாநகரையடைந்து அங்குள்ள அனந்தகருடவிஷ்வக்ஸேநாதி நித்யஸூரிகள் “விஷயங்கள் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே இருக்கும்போது அநந்ய ப்ரயோஜநர்களாய் பகவத்குணாநுபவம் பண்ணப்பெற்ற இம்மஹாநுபாவர்கள் விண்ணுளாரிலும் சீரியர் நம்மைக்காட்டிலும் பெருமையுடையவர்கள் இவ்விடம் எழுந்தருளியது நம்முடைய பாக்யமன்றோ” என்று வாயாரப்புகழ, அவர்களைத் தெண்டன் ஸமர்ப்பித்து அவர்களை முன்னிட்டு மஹாமணிமண்டபத்தையடைந்து, தர்மாதிபீடத்தின்மேல் பத்மாஸநத்தில் சாமரஹஸ்தர்களான விமலாதிகளால் ஸேவிக்கப்பட்டும், ஸ்ரீபூமி நீளைகளான தேவிமார்களோடு கூடினவனாய், ஶங்க சக்ராதி திவ்யாயுதங்களாலும் கிரீடாதி நூபுர பர்யந்தமாயுள்ள திவ்யாபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவனும் எல்லையில்லாத கல்யாண குணங்களையுடைய எம்பெருமானைக் கண்ணாரக்கண்டு வாயாரப் புகழ்ந்து தன்பாதங்களால் பர்யங்கம் மிதித்தேறி பகவானால் தொடையிலேவைத்துக்கொள்ளப்பட்டு நீயார் என்று கேட்க? நான் ராஜகுமாரன் என்று சொல்ல, அதைக்கேட்டுத் திருவுள்ள முகந்து இவ்வளவுகாலம் இவர்களைவிட்டுப் பிரிந்திருந்ததற்கு மிகவும் வருந்திப் பூர்ணமாகக் கடாக்ஷிக்க இவர்களும் அவனுடைய கல்யாணகுணங்களை அநுபவித்து அவ்வநுபவத்தாலுண்டான ப்ரீதிக்குப்போக்குவீடாக ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவிதகைங்கர்யங்களையும் செய்துகொண்டு அஸ்தாநே பயஶங்கிகளான, அயர்வறுமமரர்களோடே ஒரு கோவையாகச் சூழ்ந்து பல்லாண்டுபாடிக்கொண்டு யாவத்காலம் எழுந்தருளியிருக்குமவர்கள்

நித்யர்களாவார் ஒரு காலத்திலும் ஸம்ஸாரஸம்பந்தமில்லாதவர்களாய் அதனால் நிர்தோஷர்களாய் பகவானுக்கு முகோல்லாஸமாயிருக்குமதையே தங்களுக்குப் புருஷார்த்தமாகக் கருதுமவர்களாய் ஜ்ஞாநஸங்கோச ப்ரஸங்கமில்லாதவர்களாய் வானிளவரசான

வைகுந்தநாதனுக்கு விண்ணாட்டவர் முதல்வர் என்கிறபடி முப்பரான மந்திரிகளாய ஸர்வேஶ்வரனுடைய கம்பீரமான அபிப்ராயத்தை அநுஸரித்து ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைப்பண்ணவும் ஶக்தர்களாய பரவ்யூஹாதிஸர்வாவஸ்தைகளிலும் தொடர்ந்து குற்றேவல்செய்யும் பாக்யமுடையவர்களாய எழுந்தருளியிருக்கும் அநந்தகருட விஷ்வக்ஸேநாதிகள்

தானமுந்தவமும்

[பந்தலகுடி பாரத்வாஜ மாடபூசி ரே திருமலை ஐயங்கார்
காரியதரிசி, திருவல்லிக்கேணித்தமிழ்ச்சங்கம்]

புருஷனால் விரும்பப்படுவது புருஷார்த்தம், அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் புருஷார்த்தம் எனப்படும் இதனை வடநூலார் முறையே தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பர் அறம் பொருளின்பங்களை திரிவர்க்கமெனவும் மோக்ஷத்தை அபவர்க்கம் என்றும் கூறுவர் திரிவர்க்கத்தினின்றும் நீங்கல் அபவர்க்கம் அறமாவது மநு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம் அறம் இல்லறம், துறவறம் என இருவகை நிலையுடைத்து அறமுதலியவற்றிற்கு, ஔவை மூதாட்டியார்

"ஈதலறந்தீவினை விட்டீட்டல் பொருளெஞ்ஞான்றுங்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதேயின்பம் பரனை நினைந்திம்மூன்றும்
விட்டதே பேரின்பவீடு"

என இலக்கணங் கூறினார்

தானமாவது அறநெறியால் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடுங் கொடுத்தல் தவமாவது மனம் இந்திரியங்களின் வழியிற்போகாது நிற்றற்பொருட்டு விரதங்களினால் உணவைக் குறைத்தலும், சித்திரைமாதமுதல் ஆடிமாதம் ஈறாயுள்ள வெயிற் காலத்தில் வெயிலில் நிற்றலும், ஆவணிமாத முதல் கார்த்திகை

acharya.org

மாதமிருயுள்ள மழைககாலததிலும, மாாகழிமாதமுதல பஙகுனி மாதமிருயுள்ள பனிககாலததிலும நீாநிலையில நினறுககொண டிருததலும, ஈரததுணியைப போாததுககொள்ளலும படசோப வாசம, மாதோபவாசமிருததலும, மரததின கீழவசிததலும முத லிய செயலகளை மேறகொணடு அவறறுல தமமுயிாககு வருநதுன பஙகளைப பொறுதது பிறவுயிாகளைப பாதுகாபபதாம பெரும பானமைபறறித தானம இலலறததின மேலும தவம துறவறத தின மேலும நினறன இதனை திருவளளுவா

" தானநதவமிரணடுநதஙகா வியனுலகம
வானம வழஙகாதெனின" எனபா

வானஞசுருஙகில தானஞசுருஙகும மாரியலலது காரியமிலலை என பன இநத நோககறபாலன

தானமெனினும ஈதல எனினும கொடையெனினும ஒககும

' ஈதல இசைபடவாழதல அது வலலது
ஊதியம இலலை உயிாககு"

(வறியவாககுக கொடுககககடவா அவவாறு கொடுததலால புகழுணடாக வாழககடவா அபபுகழலலாமல மககள உயிாககுப பயன வேறெனறு இலலை)

வறியாாககு ஒனறு ஈவதே ஈகை ஈதறகுரியவா ஒனபதின மரெனறும, ஈதறகுரியரலலாதாா ஒனபதினமரெனறும காசி காணடம கூறும

' மாணபுடையாளா கேணமையா தததம
வழிமுறையொழுககினிலமாநதோா
சேணபடு நிரபபினெயதினோா புரபபோா தீாநதவா
தநதைதாய குரவா
காணடகு முதவிபுரிநதுளோாரினையோரொனபதின
மருமுளஙகளிபப
வேணடுறுநிதிய மளிபபின மறறெனறே
கோடியாமெனமறை விளமபும

acharya.org

“முகனெதிரொன்றும் பிரிபின் மற்றொன்று மொழிபவர் விழைவுறு துறைதர், அகன்ற கேள்வியிலாரரு மருத்துவர்களரும் பொருள் கவருநர் துறைததர், புகலருந்தீமை புரிபவர் மல்லர் செருக்கினர் புன்றொழிற் றீயோர், இகழ்தரும்பிணியோ ரொன்பதுபெயர்க்கு மீந்திடல் பழுதென விசைப்பர்”

அறப்பயன் தக்கார் கைப்பட்டக்கால் வானினும் பெரிதாகும் இதனை.

“உறக்குந் துணையதோ ராலம் வித்தீண்டி
யிறப்ப நிழற்பயந்தாஅங்—கறப்பயனுந்
தான்சிறிதாயினுந் தக்கார் கைப்பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்துவிடும்”

என்ற நாலடியார் வற்புறுத்தும்.

கம்பர் வாமனன் திரிவிக்ரமனானதைக் கூறிடத்து,

“கயந்தரு நறும்புனல் கையிற் றீண்டலும்
பயந்தவர்களு மிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினன்
உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே”

எனவும்,

“ஞானமுன்னிய நான்மறை யாளர்க்குத்
தானமென்னத் தழைத்தது நீத்தமே”

எனவும் தானப்பலன் பெருக்கலை விவரித்ததமை காணக.

ஓவகையோடுங் கொடுத்தலே தானம் ‘உள்ளியுள்ள வெல்லா முவந்தீயுமவ் வள்ளியோரின் வழங்கின மேகமே’ என்பர் கம்பர்

தானம் பலவகைப்படும் ஷோடச மஹாதானங்கள் என்பன பிரசித்தம் ஸ்ரீராமாயண பாராயணம் பண்ணுவோருக்கு அநேக தானப்பலன் உண்டாகும்.

“அன்னதான மகில நற்றானங்கள்
கன்னிதானம் கபிலை யின்றானமே
சொன்னதானப் பலனெனச் சொல்லுவர்
மன்னி ராமகதை மறவாக்கரோ”

பசியால் சகல நன்மைகளும் அழியும்

“மானங்குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந்தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்

acharya.org

கசிவந்த சொல்லியாமேற் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்துபோம்"

ஆதலால் அன்னதானம் விசேடம் என்பர்

'அற்றாரழிபசி தீர்த்தல் லஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி"

என்றார் குறளாசிரியர் பொருளைப்பெற்றவன் அதனைத் தனக்கு உதவ வைக்குமிடம் வறியவர் பசியைத் தீர்க்கும் அறமாம் என்பது இக்குறட் கருத்து

மேலும் தவத்திற்கு உரு உற்ற நோய் நோன்றல் உணவைச் சுருக்குதல் முதலியவற்றால் தம் முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்தலும் தாம் பிற வுயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமே தவமாகும்

'தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்' 'செயற்கரிய செய்வார் பெரியர்' 'துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து, 'இறந்தாரை யெண்ணிக்கொண்டற்று' என்பவற்றால் நீத்தார் பெருமை நனகு புலப்படும் துறந்தாரிடம் காணப்படுவன ஒன்னார்த்தெறலும், உவந்தாரை யாக்கலும், வேண்டிய வேண்டியாங் கெய்தலும், தன் னுயிர் தானறப்பெறலும், கூற்றங் குதித்தலும் எனக்

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தான்கொல்
மற்றையவர்கள் தவம்"[1]

இக்குறளுக்குப் பரிமேலழகர் உரைதருதும்

"இல்லறத்தையேபற்றி நிற்பார் துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவலை விரும்பித் தாந்தவஞ் செய்தலை மறந்தான் போலும்

துப்புரவு-அனுபவிக்கப்படுபவன 'வேண்டிய வேண்டியாங் கெய்தற்' பயத்ததாதலின் யாவராலுஞ் செய்யப்படுவதாய தவத்தைத் தாஞ் செய்யுந்தானத்தின் மேல் விருப்ப மிகுதியான் மறந்தார் போலு மெனவே தானத்திற்றவம் மிக்க தென்பது பெற்றாம்" தானத்திலும் தவம் உயர்ந்த தென்பது இங்குக் குறிக்கப்பட்டுளது இங்ஙனம் கூறிய நாயனார்,

"ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்"

என இல்லறத்தாரை உயர்த்திக்கூறியுள்ளார் தாமும் பசித்துப் பிறரையும் அப்பசி தீர்க்கமாட்டாத் தவத்தினரது வல்லமையிலும்

acharya.org

தாமும் பசியாது பிறரையும் அப்பசி தீர்ப்பவராகிய இல்லறத்தாரது வல்லமை நல்ல தென்பதாம்.

தவத்தை விருத்தியாகச் செய்கின்றவருக்குப் பாவம் நீங்கித் தத்துவ ஞானம் உண்டாகும். தன்னுயிரைத் தனக்குரியதாகப் பெற்றவனை யெல்லா வுயிரும் வணங்கும். செல்வர் சிலரும் தரித்திரர் பலருமாக இருத்தற்குக் காரணம் தவஞ்செய்வார் சிலரும் அது செய்யாதார் பலருமாக இருத்தலேயாம். "அறந்தானியற்று மவனி லுங் கோடி யதிகமில்லீந, துறந்தானவனிற் சத கோடி யுள்ளத் துற வுடையோன்" என்றபடி ஜனகன் முதலியோர் மனத்துறவு பூண் டிருந்தனர்.

விசுவாமித்திரர் அரசவைக்கு வந்ததைக்குறித்து தசரதன்
"நிலஞ்செய் தவமென்றுணரி னன்று நெடியோயென்
நலஞ் செய்வினை யுண்டெனினு மன்று நகர் நீயென்
வலஞ் செய்துவணங்க வெளிவந்தவிது முந்தென்
குலஞ் செய்தவ மென்றினிது கூற முனிகூறும்"

என்பது கம்பராமாயணம். இதனால் தவத்தினது உயர்வு விளங்கும். தவத்தினது மகிமையை ஆழ்வார்,

"யானே தவஞ்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான்—யானே
இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது"

"தவஞ்செய்து நான்முகனே பெற்றான் தரணி
நிவந்தளப்ப நீட்டிய பொற்பாதம்—சிவந்ததன்
கையனைத்தும் ஆரக்கழுவினான் கங்கைநீர்
பெய்தனைத்துப் பேர்மொழிந்து பின்"

என்கின்றார்.

தவஞ் செய்தலை திருமங்கை மன்னன்
,, —நான்கினிலும்
பின்னையது பின்னைப்பெயர் தருமென்பது ஓர்
தொன்னெறியை வேண்டுவார் வீழ்கனியும் ஊழிலையும்
என்னும் இவையே நுகர்ந்து உடலம் தாம் வருந்தி
துன்னும் இலைக்குரம்பைத் துஞ்சியும்—வெஞ்சுடரோன்
மன்னும் அழலநுகர்ந்தும் வண்தடத்தி னுட்கிடந்தும்

acharya.org

இன்னதோர் தன்மையராய் ஈங்கு உடலம் விட்டெழுந்து
தொன்னெறிக்கண் சென்றார்''

என்றுரைத்தலுங் காண்க

''கருமமும் கருமபலனுமாகிய காரணன் தன்னை
திருமணிவண்ணனைச் செங்கண்மாலினைத் தேவபிரானை
ஒருமை மனத்தினுள்வைத்து உள்ளம் குழைந்தெழுந்தாடி
பெருமையும் நாணும் தவிர்ந்து பித்தற்றுமின் பேதைமை தீர்ந்தே'

ஸ்ரீ யதிராஜ ஸம்பத்தியில் நாதமுனிகளிடம் தேசிகன் ஈடுபாடு

[ஏ வி கோபாலாசாரியார், அட்வகேட்,
பத்திராதிபர் ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸம்ரக்ஷிணீ]

(பங்குனியிலுத்திரத்தின் 77 வது பக்கத்தின் தொடர்ச்சி)

நாதமுனிகள் கீழ்ப் பத்திரிகையிற் சொல்லியபடி ப்ரபந்தங்களை உலகத்திற்கு அப்படியே மீட்டுக் கொடுத்ததைத் தவிர தாமாக இயற்றிய க்ரந்தமுமுண்டு ஸம்ஸ்க்ருத பாஷையில் நம்முடைய தரிசனத்தின் படிக்கு தத்வங்களை யெல்லாம் விளக்கிய 'ந்யாயதத்வம்' என்னும் ப்ரகரணக்ரந்தம் அவர் இயற்றியதே வித்யாஸ்தானங்கள்—14, அவை தர்மஸ்தானமுமாகும் வேதங்கள்—4, வேதாங்கங்கள்—6, மீமாம்ஸை, ந்யாயவிஸ்தரம், புராணம், தர்மசாஸ்திரம், ஆகப் பதினான்கு. இதில் ந்யாயவிஸ்தரம் என்னும் வித்தியாஸ்தானமாக கௌதம ந்யாயஸூத்ரங்களே வழங்கி வரப்பட்டன அதில் சில பாகங்கள் சாரீரகாதி விருத்தமாயிருப்பதைப்பற்றி ந்யாயதத்வ மென்னும் க்ரந்தத்தால் பகவன் நாதமுனி ந்யாயமார்க்கத்தை விளக்கியருளினாரென்று ந்யாயபரிசுத்தியில் ஸாதிக்கப்பட்டது ந்யாயதத்வக்ரந்தம் ஸ்ரீபட்டர், ஸ்ரீதேசிகன் காலங்களில் ப்ரசாரத்திலிருந்தது தத்வரத்நாகரம் என்னும் ஸ்ரீபட்டர்க்ரந்தத்திற்கு அது மூலமென்பது ந்யாயபரிசுத்தியிலும், ந்யாயஸித்தாஞ்ஜனத்திலும் பரிக்ரஹிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீஸூக்திகளால் தெரிகிறது தத்வரத்நாகரக்ரந்தம் பூர்த்தியாவதற்கு முன் ஸ்ரீபட்டர் இளம்பிராயத்திலேயே திருநாட்டலங்கரிக்கும்படி சேர்ந்துவிட்டது மூலப்ரக்ருதியின் ஸ்வரூபத்தையும், தமஸின் (இருட்டின்) ஸ்வரூபத்தையும் விசாரித்துக் கொண்டிருக்கையில்

acharya.org

“இநத விஷயததில தததவிததுகள கூறினுர்கள” என்று தொட ஙகிய ஸலோகததோடு அநத ஸ்ரீகோஸம விகனபபடடு நினறு போனதாக நயாயஸிததாஞ்சனததில ஸாதிககபபடடுளளது, பரமா ணஙகளாகிய பரதயக்ஷம, அனுமானம, ஸபதம இவறறைபபறறி அநதகரநதம முதலில முழுவதும விசாரிககபபடட தெனறும, மேலே பரமேயஙகளை விசாரிததுக கொணடிருககையில மததியில விகனம வநது விடடதெனறும அறிகிறோம அநத காநததகதிலி ருநது அநேக சலோகஙகளும, வாகயஙகளும நபாயபரிஸுததி, நயாயஸிததாஞ்சனம, தததவடீகை முதலிய ஸ்ரீதேசிககரநதஙகளி லிருநது உதாஹரிசகபபடடுளளன ஸ்ரீதேசிககரநதஙகளிலிருநது அநதகரநதஙகளின பெருமையை நாம தெரிநது கொளளுகிறோம நயாபதததவததின சில வாகயஙகள ஸ்ரீயாமுனகரநதஙகளிலும, தேசி சனகரநதஙகளிலும உதாஹரிககபபடடுள பரமாதருபாதம, கரண பாதம, முதலிய பாதஙகளால கரநதமமைநததெனறும, ஒவவொரு பாதமும பல அதிகரணஙகளாலமைககபபடட தெனறும அறிகி றோம தமமுடைய யோஹமதமையாலோ பரபஞச ஸவபாவங களை நனருக கவனிபபதாலோ, ஜநதுககளின ஸ்வபாவஙகளை அழகாக வாணிததிருககிறா காண (இநதரிய) பாததில “ஸாப பஙகள பாதமெனறும, சரீமெநதரியமிலலாமலே மாாபாலே செலலு கினறன, அவறறிறகு மாாபில கமனஸகதி, ஆகையால உரகங களும, பனனகஙகளுமாகும” எனறு ஸாதிததாா உரகம எனப தறகு ‘மாாபால நகருவது’ எனறு பொருள ‘பனனகம எனப தறகு’ காலால நடககாதது’ எனறு பொருள வாகயஙகள ஸூத ரஙகள போனறன நயாயதததவததை நாம விதயாஸதானமான நயா யவிஸதரமாகக கொளளலாமெனறு ஸ்ரீதேசிகன ஸாதிததிருபப தறகுக காரணம அவை ஸூதரஙகள போல மிகசசுருககமாயும, மிகத தெளிவாயும, எலலோா மனதிலும உடனே அழகாகபபதியும படியாயுமிருபபதே ஸூதரஙகள அலபாக்ஷரஙகளாயிருநதாலும, ஸநதேஹலேஸமுமிலலாமல மிகத தெளிவாய (அஸநதிகதமாய) இருகக வேணடும நம தரிசனததிறகு வேணடிய நயாயஸாஸதரத திறகு நாத முனிகள ஸூதரகாராரவா எனபதைபபறறி “நாயோவஜ்ஞும வ்யூஹம” எனறு நம தாயனததை வா ணிததாகவும சொலலலாம அவா உயாநதயோகி எனபது பரஸிததம அபபடிச சிறநதயோகியாக இலலா விடடால அழ

வாரை ஸ்ரீமதுரகவியின் மதுரவாக்கைக் கொண்டு நிரந்தரம் த்யானம் செய்து அடியோடு மறைந்து கிடந்த தமிழ் மறையை எவ்விதம் அப்படியே ஸாக்ஷாத்கரிக்கக் கூடும்? அவர் மஹா யோகியாயிருந்ததால் தான் அவருக்கு அது ஶக்யமாயிற்று. அவர் யோகத்தால் ஸ்ரீவைஷ்ணவலோகம் உஜ்ஜீவிக்கிறது. ந்யாயதத்வத்தில் பெருமாள் விஷயமான மங்களஶ்லோகத்தில் "யோவேத்தியுகபத்ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதாஸ்வதஃ" என்று பெருமாள் லக்ஷணத்தை ஸாதித்திருப்பது ப்ரஸித்தம். எப்போதும் ஜகத்காரணமென்று ப்ரஹ்மலக்ஷணங் கூறுவார்கள். "உள்ளங்கை நெல்லிக்கனி போல காலத்ரயத்திலுமுள்ள எல்லாவற்றையும் ஸர்வகாலமும் ஸ்வதஃ தம்ப்ரபாவத்தாலேயே (பிறராதீன மில்லாமல், உயர்வற, ஸ்வாபாவிகமாக) ப்ரத் யக்ஷீகரிக்கிறாரோ, அந்த ஹரியை ப்ரணமம் பண்ணி ந்யாயதத்வதைநன்கு விவரிப்போம்" என்று அந்தஶ்லோகம். யோகிகள் பகவானை யோகீஶ்வரராகத் தொழுவர் பகவானுடைய ஸர்வப்ரத்யக்ஷீகரணயோகமஹிமை அவருக்கு ஸ்வதஸ்ஸித்தம். அந்யாதீனமல்ல. மற்ற யோகிகளுக்கு அந்த மஹிமை அவராதீனம். பதஞ்சலி முனிவர் யோகஸூத்ரத்தில் பகவானுடைய லக்ஷணத்தை ஜகத்காரண மென்று கூறவில்லை. "க்லேஶகர்ம விபாகாஶயங்களால் தொடப் படாத புருஷவிஶேஷன். (தொடரும்.)

வர்த்தமானங்கள்

ஸ்ரீரங்கம்

வைகாசி 15௳ (28-4-36) வஸந்தோத்ஸவ ஆரம்பம்.
,, 22௳ (4-5-36) ஸ்ரீ நரஸிம்ம ஜயந்தி
,, 23௳ (5-5-36) ஏகவஸந்தம், சாற்றுமுறை

(2) காஞ்சீபுரம் பெருமாள் கோவில்

வைகாசி 21௳ (3-6-36) கருட ஸேவை
,, 25௳ (7-6-39) ரதோத்ஸவம்

(3) ஆழ்வார் திருநகரி

ப்ரபன்னஜந கூடஸ்தரான நம்மாழ்வாரவதரித்த திவ்ய க்ஷேத்ரம் இந்த க்ஷேத்ரத்தில் வைகாசிமீ 12௳ (25-4-36)ல் ஆழ்வார் உத்ஸவ ஆரம்பம் வைகாசி 21-3-36ல் சாற்றுமுறை.

acharya.org

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶக பத்ரிகை.

தொகுதி 1.	பத்ராதிபர் வடகரை இராமாநுஜாசாரியார்	பகுதி 7.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁
𑌶𑍍𑌰𑌿𑌯𑌃𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌯 𑌨𑌮𑌃
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌤𑌸𑍍𑌮𑍈 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌾𑌯 𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌯𑍋𑌗𑌿𑌨𑍇 ।
𑌯𑌶𑍍𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑍍 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌜𑍍𑌵𑌰𑌮𑌶𑍀𑌶𑌮𑌤𑍍 ॥
𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤 𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑍀 ।
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤 𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀 𑌵𑌿𑌜𑍃𑌮𑍍𑌭𑌤𑌾𑌮𑍍 ॥

ஏரார் வைகாசி விசாகம்

[பெருமாள் கோவில் ப்ரதிவாதி பயங்கரம்
ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்]

* சீராரும் வேதந் தமிழ் செய்த மெய்யன் எழில் குருகை நாதன் அவதரித்த நாளாகிய ஏரார் வைகாசி விசாகத்தின் ஏற்றம் பாரோர் பலரு மறிந்ததே. ஆயினும் இன்று நாம் இதனைச் சிறிது பேசி யநுபவிப்போமாக.

இக்கலியுகத்தின் தொடக்கத்தில் திருவவதரித்துத் தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல் மாலைகள் சொன்ன நம்மாழ்வார் நம்முடைய ஸ்ரீ வைஷ்ணவ தரிசனத்திற்கு இந்த யுகத்தில் ப்ரதம ப்ரவர்த்தகராக விளங்கினர். ஸ்ரீமந் நாதமுனிகள் தொடங்கி ஆளவந்தார் எம்பெருமானர் ஆழ்வான் பட்டர் பிள்ளை லோகாசாரியர் தேசிகன் மணவாள மாமுனிகள் முதலான ஆசிரியர்கள் அநேக திவ்ய க்ரந்தங்களால் இவ்வுலகை வாழ்வித்தருளின தெல்லாம் இவ்வாழ்வாருடைய திவ்ய ப்ரபந்தங்களை மூலமாகக் கொண்டே யாம்.

acharya.org

" 𑌨𑌾𑌥𑍋𑌪𑌜𑍍𑌞𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌬𑌹𑍁𑌭𑌿𑌰𑍁𑌪𑌚𑌿𑌤𑌂 𑌯𑌾𑌮𑍁𑌨𑍇𑌯 𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑍈𑌃 𑌤𑍍𑌰𑌾𑌤𑌂 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑍈𑌰𑌿𑌦𑌮𑌖𑌿𑌲𑌤𑌮𑌃 𑌕𑌰𑍍𑌶𑌨𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌨𑌃 " நாதோபஜ்ஞம்ப்ரவ்ருத்தம் பஹு பிருபசிதம் யாமுநேய ப்ரபந்தை: த்ராதம் ஸம்யக் யதீந்த்ரைரித மகில தம: கர்ஶநம் தர்ஶநம் ந: என்று அருளிச்செய்த தேசிகன் தாமே ஸ்ரீ குரு பரம்பராஸாரத்தில்—" ஸ்ரீமந் நாதமுநிகளுக்கு ஸ்ரீ மதுர கவிகள் முதலாக வுண்டான ஸம்ப்ரதாய பரம்பரையாலும் திரு வாய்மொழி முகத்தாலும் யோகதசையிலே ஸாக்ஷாத் க்ருதராயும் நம்மாழ்வார் ஆசார்யரானார் " என்றருளிச் செய்திருக்கையாலும், ஆளவந்தார் தமது ஸ்தோத்ர ரத்நத்தில் ஆழ்வாரைத் துதிக்கும் ச்லோகத்தில் " 𑌆𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌃 𑌕𑍁𑌲𑌪𑌤𑍇𑌃 ஆத்யஸ்ய ந: குலபதே: " என்றே அருளிச் செய்கையாலும் நம்மாழ்வாரே ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு முதன்மையான ப்ரவர்த்தகர் என்னத் தட்டில்லை.

உபநிஷத்துக்களில் த்வைத பரமாகவும் அத்வைத பரமாகவுங் காண்கின்ற பற்பல வாக்கியங்களை முறையே அத்வைதிகளும் த்வைதிகளும் அநாதரித்தது போலல்லாமல் விசிஷ்டாத்வைதிகள் எல்லாவற்றையும் அழகாகவே ஆதரித்து நிர்வஹித்து வருவதானது ஸர்வேச்வரனுக்கும் சேதநாசேதநங்களுக்குமுள்ள சரீராத்ம பாவத்தைக் கொண்டேயாகும். இதனை முதன் முதலாக நமக்கு விளங்கக் காட்டிக் கொடுத்தருளின ஆசிரியர் நம்மாழ்வாரே யாவர். திருவாய்மொழியில் முதற் பதிகத்தில், " திடவிசும் பெரிவளி நீர் நிலமிவை மிசை, படர்பொருள் முழுவதுமாய் அவையவை தொறும், உடன் மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன், சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே." என்றுள்ள பாசுரம் ஸ்ரீ பாஷ்யம் முதலிய ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்தங்களனைத்துக்கும் ஜீவாதுவாகும். இங்ஙனே ஆழ்வார் காட்டியருளின வழியைப் பின்பற்றியே ஆசாரியர்கள் பேதாபேத ச்ருதிகளை ஒருங்கவிட்டார்கள்.

மற்றும் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு உள்ளீடான அர்த்த விசேஷங்கள் யாவும் ஆழ்வாருடைய திவ்ய ஸூக்திகளிலிருந்தே ஸ்ரீ ஆளவந்தார் எம்பெருமானார் முதலான ஆசாரியர்களால் நிஷ்கர்ஷிக்கப்பட்டவை யாகும். "பாஷ்யகாரர் இதுகொண்டு ஸூத்ர வாக்யங்கள் ஒருங்க விடுவர்" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீ ஸூக்தியும், "செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய வோதித்

தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே" என்ற தேசிக ப்ரபந்தப் பாசுரமும் இவ்விஷயத்தை வற்புறுத்தி நிற்கும்.

அமையப் பெற்ற திவ்யதேசமிது. விக்ரஹமே வெகுலக்ஷணமும் உத்ஸவத்தின் வீறுபாடும் சால அழகியதாயிருக்கும். அஃதென்னவெனில்? இவ் வானமாமலையின் திருவடிகளை, ஸ்வீகாரங்களில் வைத்துக்கொண்டு ஒப்புயர்வற்ற வர்மதஸ்வீகாரத்தினால் ஆகிஞ்சந்யாநந்யகதித்வ ஸ்வரூபமாக உபாயமாகப் பற்றி இப்பேருபகாரத்திற்கு கைம்மாறு காணப்பெறாமல் தடுமாறின ஏற்றத்திற்குத் தகுதியாகவும் ஸகலதிவ்யதேசங்களிலும் வழங்கப்பெறுகிற ஸ்ரீசடகோபன் என்ற திருநாமத்துக்கு ப்ரகாசகமாகவும் விக்ரஹாநுஸ்வீகாரமன்றியில் பெருமாள் திருவடி நிலைகளோடு அசேதந சிறிய திருமேனியை ஸ்வீகரித்து எழுந்தருளி யிருக்கும் நிலையும் திருநக்ஷத்திர மஹோத்ஸவத்தில் பெருமாள் திருவோலக்கத்திலேயே தினம் ஒரு சதகமாக திருவாய்மொழி திருச்செவி சாய்த்தருளும் பெருமையும் திவ்யதேசாநுபவ ரஹஸ்யமென்று அறியத்தக்கது.

வஸந்தமஹோத்ஸவம் — இந்த திவ்யதேசத்தில் இந்த மஹோத்ஸவமானது வைசாகமாஸத்தில் பூர்ணிமைக்கு 10 தினம் முன்னுக ப்ராரம்பமாகி ப்ரதிதினங்களிலும் ஸாயங்காலத்தில் ஆஸ்தானத்தினின்று தோளுக்கினியானில் நாச்சியாரும் பெருமாளும் இருவருமான சேர்த்தியாகவே எழுந்தருளி மௌக்திகாலங்காரங்களால் ஸம்பூர்ணமான ஜயந்தீ மண்டபத்தில் வீற்றிருந்து அடியார் குழாங்கள் நின்றபடியே சிறிய திருமடலை செவிக்கினிய செஞ்சொல்லால் ஸேவிக்க அதனைக் கேட்டருளினபடியே திருவாபரணங்களும் ஸுகந்த புஷ்ப பரிமளிதமான திருமாலைகளும், ஸுகந்த பரிமளிதமான சந்தனங்களும் சாத்திக்கொண்டு தத்காலோசிதமாய மௌக்திகாலங்காரானுரூபமான போகங்களமுது செய்தருளி தீர்த்தவிநியோக கோஷ்டியானதும் தேனமாம் பொழில் திருத்தோப்பில் மூன்று ப்ரதிபத்தி உலாவியருளி முன் எழுந்தருளியிருந்த மண்டபத்தில் ஸமர்ப்பிக்கப்பெற்ற ஆஸநத்தில் அமர்ந்தருளி திருவாராதனம் கண்டருளினதும் திருப்பாவையும் திருவாய்மொழியில் தினம் ஒரு பத்தாகவும் கேட்டருளி தளிகை அமுது செய்தருளி சாத்துமுறை கோஷ்டியானதும் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளுவர். வைசாகபூர்ணிமையன்று சேற்றுத் தாமரையில் திரு ஊரல் உத்ஸவம் கண்டருளி அவ்விடத்திலேயே திருவடிவிளக்குதல் திருவந்திக்காப்பு முதலியன ஆகி திருமடல் சாத்துமுறை தீர்த்த கோஷ்டி ஆனதும் ஸந்நிதியில் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி திருவாராதனம் ஆகி திருப்பாவை திருவாய்மொழி கேட்டருளி விசேஷமாக பால் மாங்காய் அமுது செய்தருளி சாத்துமுறை தீர்த்தவிநியோக கோஷ்டி நடைபெறும். தே. திருமலாச்சாரியார்.

acharya.org

ஸ்ரீ

பீதாம்பர பண்டித ப்ரஸங்க பராமர்சம்

பீதாம்பரபண்டிதரென்று உலகமெல்லாம் புகழ் நின்ற மஹாநுபாவர் நிகழும் வைகாசி மாதத்தில் வெளியிட்ட தமது பத்ரிகையில் "புஸ்தக விமர்சம்" என்ற மகுடத்தின்கீழ் ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசார்யஸ்வாமியின் "அத்யமே ச்லோகார்த்த தத்வப்ரதிஷ்டா" என்கிற க்ரந்தத்தைப்பற்றி ஒரு விமர்சம் வெளியிட்டிருப்பதைக் கண்டோம். மேற்குறித்த பண்டிதர் ஏற்கனவே தாம் இப்பற்றி வெளியிட்டிருக்கும் சில புத்தகங்களில் அபத்தமும் அஸமஞ்ஜஸமுமான விஷயங்கள் தவிர வேறு கிடையாதென்பதைச் சில மஹான்கள் க்ரந்தரூபேண வெளியிட்டு உலகமெங்கும் பரவ வைத்திருக்கிறார்கள். அவற்றுக்கெல்லாம் ஸமாதானம் சொல்வதாக ஏதோ எழுத ஆரம்பித்தவர் சாஸ்த்ரீய மார்க்கமாக ஸமாதானம் எழுதுவதை விட்டுப் பெரியவர்களை அநாவச்யகமாக தூஷித்துக் கொண்டும் ஆத்மப்ரசம்ஸையை அளவுக்குமீறிச் செய்து கொண்டும் காலம் கழித்து வருகிறார். இவர் தம்முடைய க்ரந்தங்களைக் கடாக்ஷித்து விஸ்மயப்படாத மஹான்கள் இந்த லோகத்திலேயே கிடையாரென்று பஹு பரிச்ரமப்பட்டு வெகுவிரிவாக நிரூபிக்கிறார். வாஸ்தவமாய் இவருடைய ஸ்வேச்சாதுர்யத்தில் ஆச்சரியப்படாதவர்கள் உபயவிபூதியிலுமே கிடையாதென்று அனைவரும் நிச்சயித்த விஷயமே. தட்ஸத்பரிசீலநமென்னும் புத்தகத்தில் (பக்கம் 5ல்) * பீதாம்பரதரம் * என்கிற திருநாமத்திற்கு விசேஷார்த்த வ்யாக்கியானம் எழுதப்பட்டிருக்கிறதே, அதைப் பார்த்து ஆச்சரியப்படாதவர்கள் எவ்வுலகிலாவது உண்டோ? அப்படியே இவருடைய விசேஷார்த்தங்களைக் கண்டும் ஆச்சரியப்படாதவர்களும் ஆனந்தம் பொங்கி அபிநந்தனம் செய்யாதவர்களும் எங்கும் இருக்கவேமாட்டார்களென்பதை யாரேனும் மறுக்கமுடியுமோ? ஸித்தஸாதநமாக ஏதுக்கு எழுதுகிறீரென்றே விடுக்கிறோம். தமக்கு நேர்ந்த ஆபத்துக்களில் லவலேசமும் போக்கிக்கொள்ள முடியாமல் பரிதபித்து நிற்கும் இவர் பாரகீய விசாரங்களில் அநாவச்யகமாகத் தலையிட்டுக் கொண்டு இன்னமும் பௌரவநீயஉபஹாஸத்தை அதிகமாக அடைந்திடுவது ஏதுக்கோ?

acharya.org

அதயமேசலோகாாதத விஷயததில இவா எழுதியிருககும
விஷயஙகள பணடிதாகளால இகழததககவையே எனபதை இஙகுச
சுருககமாகததெரிவிபபோம ஸ்ரீஅணணஸவாமியின ததவபரதிஷடா
கரநததததை இவா தாம ஸேவிததாகவும, அதிலுளள அநேகவிஷயங
களைத தாம கருதஜஞதையோடும சலாகையோடும அஙகீகரிபபதாக
வும, அதயமே சலோகப பொருளைமாததிரம வெறுபபதாகவும
முகவுரைகூறி, பேலே அதயநதம அஸமபததமாக இரணடரை
பககம எழுதியிருககிறா.

ஸ்ரீராமாயணததில * அதயமே சலோகமுளளவிடம பராயோப
வேசபரகரணமுமலல, சரணாகதிபரகரணமுமலல எனறு தீரமானிக
கிறா இவா. திருவாயமொழியில யானேடியேனுள எனகிறபாசு
ரததின ஈடுமுபபததாறாயிரபபடியிலுளள ஒரு ஸ்ரீஸூகதி விஷயமாக
இநத அதயமேசலோகாாதத விசாரம பெருகியிருபபதாலும, ஈடு
அருளிசசெயதவரான வடககுததிருவீதிபபிளளையினுடையவும, அவ
ரது திருககுமாரரான பிளளை லோகாசாாயருடையவும ஸ்ரீஸூகதி
களையே தஞசமாககக கொணடிருககும மஹானகளுககே இவ
வாதத விசாரமபரஸகதமாயிருபபதாலும அநத மஹாசாாயாகளின
ஸ்ரீஸூகதிகளுககு விருததமாக இநதப பிதாமபரபணடிதா தீா
மானிபபது கடலோசையோடுஒககுமததனை வேல வெடடிபபிளளை
ககு நமபிளளையருளிசசெயத வாாததையை ஈடடில காடடியிரு
ககுமிடததில பெருமாள ஸமுதரராஜனிடததில செயதது சரணாகதி
யே யெனபது ஸபஷடம ஸ்ரீவசநபூஷணததிலும பரபததிககு அதி
காரி நியமமிலலை யெனபதையும ஸமநியமமிலலை யெனபதையும
விவரிககவநத இரணடு ஸூதரஙகளாலும சரணாகதியெனபதே
ஸதிரீகரிககபபடடிருககிறது திருநெடுநதாணடக வயாகயாந பரவே
ஸ ததிலும சரணாகதியெனறேயுளளது இவறறுககு விரோதமாக
ஸாராஸவாதிநீஸாரபரகாசிகைகளில ஏதோ எழுதியிருபபதாக இப
பணடிதா உதாஹரிபபது வபாததம சரணாகதி யெனகிற பகஷத
தையே யிசைநதவாகளுககுளளே பரஸபரம நடககும விவாதததில
சரணாகதியலலவெனறு இவா சொலலிககொணடு வருவது அஸ
மஞஜஸம

' பராயோபவேசமுமனறு" எனறு இபபணடிதா எழுதுவதும
பராயோபவேசநதானெனறு இவரே ஸதாபிததபடியாகிறது எஙங
னே யெனனில்; "பராயோபவேசம கஷதரியருககு விஹிதமனறு

acharya.org

என்று பரதனை நிஷேதித்த பெருமாள் அதர்மத்தை அநுஷ்டித்தனரோ?" என்று இவர் எழுதுகிறார். இதனால், சித்ரகூடத்தில் பரதன் ப்ராயோபவேசம் பண்ணினதாகவும் அதைப் பெருமாள் தடுத்ததாகவும் இவர் ஸ்பஷ்டமாக எழுதினராகிறார். அங்கு ஸ்ரீபரதாழ்வான் செய்ய நினைத்தது ப்ராயோபவேசமென்று தீர்மானித்துக் கொண்டவர், பெருமாள் ஸமுத்ரக்கரையில் செய்ததும் ப்ராயோபவேசந்தான் என்று அவசியம் தீர்மானித்தேயாகவேண்டும். ஏனென்னில்,

அயோத்யா காண்டத்தில் 111-ஆவது ஸர்க்கத்திலுள்ள இஹ மே ஸ்தண்டிலே ஶீக்ரம் குஶாநாஸ்தர ஸாரதே। ஆர்யம் ப்ரத்யுபவேக்ஷ்யாமி யாவந்மே ந ப்ரஸீததி ॥ * ஸௌஷ்டு வர்ஸ்தாஸ்தாரயாம் ஸாவஞ்ஜ்ருத்தியாஸ்ஸ்தி। குஶோத்தரமுபஸ்தாப்ய பூமாவேவாஸ்திதஸ்ஸ்வயம் * என்கிற ச்லோகங்களைக் கொண்டேதானே பரதன் ப்ராயோபவேசம் பண்ணினதாக இவர் எழுதுகிறார். ப்ராயோபவேசமென்கிற சப்தாநுபூர்வி அங்கு வால்மீகி வாக்கில் சிறிதுமில்லை. கடற்கரையில் பெருமாள் செய்த காரியத்தை என்ன சப்தங்களாலே வால்மீகி கூறியிருக்கின்றாரோ அந்த சப்தங்களால்தான் பரதன் செய்த காரியத்தையும் கூறியிருக்கின்றார். ப்ரதிஶயநம், ப்ரத்யுபவேஶநம் என்கிற பதங்களுக்கே வ்ருத்திநிமித்தைக்யமுள்ளது. அங்கு பரதன் செய்த கார்யம் வேறு, இங்குப் பெருமாள் செய்த காரியம் வேறு என்று ஸாதிக்கப் ப்ரமாணமுமாகாது. பரதன் செய்த காரியத்தைப் பெருமாள் தடுத்தது உண்மையே. க்ஷத்ரியர் செய்யத்தகாதென்று சொல்லித் தடுத்ததாக இவர் எழுதுவது மருள். * ந து மூர்த்தாபிஷிக்தாநாம் விதி: ப்ரத்யுபவேஶநே * என்பது அங்குள்ள வால்மீகி ஸூக்தி. 'அபிஷிக்தக்ஷத்ரியாணாம்' என்பது வியாக்கியானம். கைகேயியின் வரத்தின்படியும் தசரதருடைய இசைவின்படியும் பெருமாள் திருவுள்ளத்தின்படியும் பரதன் ராஜ்யாபிஷேகத்திற்கு ப்ராப்தனாய்விட்டபடியால் இப்படிப்பட்ட அவன் ப்ரத்யுபவேசம் பண்ணுவது அதர்மம் என்று பெருமாள் கூறினாரேயல்லது வேறில்லை. பெருமாள் கடற்கரையில் போனபோது அபிஷிக்த க்ஷத்ரியத்வம் தமக்கில்லாமையால் அக்காரியத்தைத் தாம் அநுஷ்டித்தது அதர்மமாகாது, ஸ்வோக்தி விருத்தமுமாகாது

acharya.org

ந.ந.—' சித்திரகூடத்தில் பரதாழ்வான் செய்த காரியம் வேறு தான்; கடற்கரையில் பெருமாள் செய்த காரியம் வேறுதான். வால்மீகி யின் உக்தியில் இது விளங்கா நின்றது. * யாவந்ந ப்ரஸீததி* என்றும் * யாவந்ந ப்ரதியாஸ்யதி * என்றும் பரதன் சொன்னப் போலே வசநவ்யக்தி கடற்கரையில் இல்லை' என்று சொல்ல வருவ ரேல், தஸ்ய ம்ருஷா வாதம் வதஸி. அந்த வார்த்தை இருக்கவுமாம், இல்லையாகவுமாம். அநுஷ்டாநோபக்ரமத்தில் அந்த நிலைவு எவர்க் கும் இருந்தே தீரும். ஸாவதி, பரதன் செய்தது ப்ராயோபவேச மென்று தீர்மானித்தெழுதிய இப்பண்டிதர்க்குப் பெருமாள் செய் ததும் ப்ராயோபவேசந்தானென்று இசைந்தே தீரவேண்டியதாய் விட்டபடியால் * அத்யமே ச்லோகத்திற்கு ஆசார்ய ஸ்வாமி வெளியிட் டிருக்கும் அர்த்தமே இவர்க்கும் தஞ்சமாய் வந்து முடிந்ததென்று தேறிவிட்டது. தத்வப்ரதிஷ்டையில்: 60 + 64 பாராக்கள் பார்க்க

மேலும் இப்பண்டிதர் எழுதியிருக்கிற விநோதத்தை நோக்குங் கள்; "அத்ய வா மரணம் மம தரணம் என்று ஒரு கல்பம்; ஸாகரஸ்ய வா மரணம் மம தரணம் என்று ஒரு கல்பம்; வா இரண்டிலொன்று; ஸாகரஸ்ய வா இரண்டிலொன்று. இப்படிக் கும் அந்வயம் கொள்ளலாம்" என்று முடிவில் எழுதுகிறார். இரண் டாவது வாக்கியத்தில் (அத) என்பதைக் கூட்டாமல் (ஸாகரஸ்ய வா மரணம் மம தரணம்) என்று ஒரு கல்பம்—என்கிறவிவ ருடைய விவக்ஷிதத்தை எம்பெருமான்தான் அறியவேணும். மரண தரணங்கள் ஸாகரத்திற்கே எப்படி ஸம்பவிக்கும். ஸாகர கர்த்ருக தரண மல்லது வேறொன்றை இவர் இங்கு விவக்ஷிக்க முடியாதே. கடல் எந்த வஸ்துவைக் கடக்கவேணுமோ அறி யோம். தரண மென்பதற்கு க்ஷேமமென்று அர்த்தமென்று இவர் எழுதுவதும் பிசகு. இந்த அஸம்பத்த பாஷிதம் கிடக்கட்டும். * அத்ய வா மரணம் மம தரணம் * என்று இவர் எழுதுகி றார் இதனால், பெருமாள் தம்முடைய முடிவைக் கூறுவதான ஒரு பக்ஷத்தையும் தாம் அங்கீகரிப்பதாக நன்கு காட்டுகிறார். ஸாக ரஸ்ய மரண மென்பதும் அந்தப் பக்ஷத்திலேயே உண்டு—என்று

acharya.org

இவர் எழுதினாலும் ஸர்வஸ்ய சரண மென்கிற விசத பக்ஷத்தை இவர் அங்கீகரித்துவிட்டதாக விளங்கிவிட்டது. "வ்ருக்ஷஸ்யைவ நிஷண்ணஸ்ய வ்ருக்ஷச்சேதம் விருப்யதே" என்றதுதான் இங்கு நினைவுக்கு வருகிறது. 'கடலுக்கே சரணமாகக் கொள்ளாமல் பெருமாளுக்கு சரணமாகக் கொண்டால் மஹா தோஷம்' என்று ஸாதிக்கத் தொடங்கினவிவர் ஸ்வ சரணமென்று அவலம்பிக்கிற பக்ஷமும் கொள்ளத்தக்கதுதான் என்று ஸ்வஹஸ்தம் எழுதுவது என்னே! ஸாமான்ய சரண மென்று சொல்லக்கூடாதென்று அண்ணஸ்வாமி யெழுதியிருப்பதை மறுப்பதில் மாத்திரம் எனக்கு நோக்கேயல்லது ஸ்வ சரண மென்று யோஜிக்கக்கூடாதென்பதில் எனக்கு நோக்கில்லை' என்றே இனியிவர் சொல்லித் தீர வேண்டும். அப்படியானாலும், ஸ்வ சரண மென்று யோஜிக்குமளவில் மஹத்தான அநர்த்தம் வந்துவிடும் என்று இவர் முதலெடுத்து எழுதினதெல்லாம் பாழ்தானே. ஸ்வ சரண மென்றாலும் அது பெருமாளுடைய விசேஷணம் என்றும், ஸமுதாயத்தின் சரணத்தில்தான் அதுவும் பர்யவஸிக்கு மென்றும் இப்பண்டிதர் எழுதினார். ஸ்வ சரண மென்று யோஜித்துவிட்டு அதன் தாத்பர்யத்தை இவர் எங்ஙனே இழுத்துக்கொண்டு போனாலும் அதில் நமக்கு விப்ரதிபத்தியில்லை. அந்வயக்ரமத்தில் விரோதமே யொழிய தாத்பர்யத்தில் விரோதமே யில்லை. இவர் எழுதுகிற தாத்பர்யத்திற்கு மேற்பட்ட பல தாத்பர்யங்களை அண்ணஸ்வாமி எழுதியே யிருக்கிறார். *ஊர்த்வம் மாஸாந்ந ஜீவிஷ்யே* என்ற பிராட்டியின் வார்த்தையைத் திருவடி சொல்லக் கேட்ட பெருமாள் உடனே *ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம்* என்றார். இதற்கு என்ன அர்த்தம்? இனி ஒரு நொடிப்பொழுதும் பிழைத்திராமல் இப்போதே நான் முடிந்துவிடுவேன் என்பதுதானே இதற்கு அர்த்தம். அப்படி முடிந்துவிட்டாரோ? இல்லை. அதற்கு அது தாத்பர்யமன்று என்னவேணும். இப்படி தாத்பர்ய நிர்வாஹம் பண்ணி ஒழுங்கு படுத்தவேண்டிய பெருமாள் வார்த்தைகள் பலவுண்டு. ஸர்வஸ்ய ஸ்வ சரண மென்றவிதுவும் அப்படியேயாகிறது. பெருமாள் முடிவதாகக் காட்டுகிற அந்வயம் ஆபத்துக்கிடம் என்று ஆக்ரஹம் கொண்டவிவர் அந்தோ! அந்த ஆபத்துக் குழியிலேயே தாமும் ஏன் விழுகிறார்? என்பதே இங்கு நாம் கேட்பது.

acharya.org

ஸாமாந்யஶரண மென்று மிகவும் தவறான ஒரு அர்த்தத்தையும் கூடக் கூட எழுதிவருமிவர் இராமபிரானை தூஷிக்க வந்தவராமத்தனை. ஸ்ரீராம குணங்களுக்கு வேறுநிந்தை வேண்டா.

'பெருமாள் அநுஷ்டித்தது ஸவிகல்பஶரணாகதியன்று' என்று எழுதாநின்றவிவர் விகல்பஶரணாகதி யென்று ஒப்புக் கொண்டாராகிறார். சில அங்கங்கள் தவிர்ந்து சில அங்கங்களோடே கூடின சரணாகதி யென்கிறீரே; தவிர்ந்த அங்கங்கள் போகட்டும்; இசைந்த அங்கங்கள் எவை? ஏதேனுமொன்றை ஒப்புக்கொண்டாலும் ஸாகல்ய ஶரணமென்பதை நெஞ்சால் நினைக்கவும் வழியில்லையே. *ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநமித்யாதிகளில் எந்த அம்ஶம் பெருமாளிடத்திலிருந்தது? பெருமாள் குணபூர்த்தி யில்லாதவன் திறத்தில் சரணாகதி செய்தாராகையாலே அது பலிக்கவில்லை என்று ஆசார்யர்கள் ஸாதித்தார்களே யல்லது ஆநுகூல்ய ஸங்கல்பத்திற்கு எதிராக ப்ராதிகூல்ய ஸங்கல்பம் செய்து கொண்டாராதலால் பலிக்கவில்லை? யென்று ஒரு ஆசார்யரும் ஸாதித்திருக்கவில்லை ஸாமாந்ய ஶரணமென்கிற அர்த்தம் ஆசார்ய கோஷ்டியில் ப்ரஸித்தமாகில் அதைக்கொண்டு எவ்வளவோ சாஸ்த்ரார்த்தங்கள் அவச்யம் சிக்ஷிக்கப்பட்டிருக்குமே. இது நிற்க.

பெருமாள் பக்கலில் ஸர்வேஶ்வரபாவம் கழற்ற வொண்ணாததாயினும், இருக்குமிடம் தெரியாதபடி அதனை மறைத்து மநுஷ்யத்வத்தையே பெருமாள் பெரும்பாலும் காட்டிவருகிறார் என்பது ஸ்ரீராமாயணத்தில் ஆழ்ந்த அவகாஹநமுடையாருடைய ஸித்தாந்தம். ஆகவே அந்த மநுஷ்யத்வத்திற்கு மிகவும் சேரக் கடலரசனை த்ரிகரண சுத்தியோடு வேண்டிக்கொண்டு அக்கரை செல்ல நினைத்துக் கரையிலே தரைக்கிடை கிடந்த பெருமாள் அந்த ஸமயத்திலே ருஜுவாக நெஞ்சால் நினைப்பதோ வாயாற் சொல்லுவதோ எப்படியிருக்க வேண்டு மென்பதை நாம் விவரிக்க வேண்டுமோ? 'தண்ணீர்த் தெய்வமே! நீ வழிவிட்டாலொழிய எனக்கு வேறு கதியில்லை; இப்போது உன் தயவை எதிர்பார்க்க வேண்டியதாக நேர்ந்துவிட்டது; நீ தயவு செய்து வழிவிட்டால் தான் நான் ஸபரிவாரனாய் அக்கரை சென்று எதிரிகளை முடித்துப் பிராட்டியை லபித்து வாழலாகும்; இல்லையேல் இங்கேயே முடியவேண்டியதாகுமத்தனை' என்று இங்ஙனே அநுஸந்

acharya.org

திப்பதன்றோ ப்ராப்தம். 'வழி விடுகிறாயா? அல்லது உன்னைத் தொலைத்துவிடட்டுமா?' என்று உபக்ரமத்திலேயே உரைப்பதானது வணங்குகிறவனுடைய காரியமாகுமோ? காட்டிலே வழிபறிக்கவரும் கள்ளர்கள் கத்தியைக் காட்டி 'உடைமைகளைக் கொடுக்கிறாயா? உயிரை வாங்கிவிடட்டுமா?' என்று சொல்வது உண்டு அந்த நிலைமையிலா பெருமாளை வைத்துப் பேசுகிறதென்று விவேகிப்பாரில்லையே!

கடன் வாங்கிக்கொண்டு போனவர்களிடமிருந்து கடனை மீட்டுக்கொள்ள நினைப்பவர்கள் 'தயவு செய்து கடனைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்' என்று வணங்கிக் கேட்பது ஒரு ஸமயம்; 'கொடுக்கிறீரா? அல்லது, சிறையில் புகுந்து பரிபவப்படுவீரானவளவு முயற்சியை யெடுத்துக் கொள்ளட்டுமா?' என்று வெருட்டிக் கேட்பது ஒருஸமயம். இங்ஙனே வெருட்டிக் கேட்கிற வார்த்தையே முதலடியில் வெளிவந்துவிட்டால் அதற்கு, வணங்கிக் கேட்கிற ஸமயமென்று பேருண்டோ? இந்த மிகச்சிறு விஷயத்தைக் கூட நெஞ்சில் வாங்கிக் கொள்ளாமல் வாது செய்பவரோடு எதிர்வாது புரிவது ஸத்யமாய் நமக்கு வெட்கமாகவே யிருக்கிறது.

ஒருவரிடத்தில் நாம் பணம் கொடுக்கும்போது இதை நாம் மறுபடியும் திருப்பிப் பெற்றுக் கொள்வது எங்ஙனே என்று ஒவ்வொருவரும் ஆலோசிப்பதுண்டு. அப்போது மூன்று விதமாய் மனத்தை ஸமாதானப்படுத்திக் கொள்வர்கள்; (அதாவது) அப்பா! தாயே! என்று வேண்டிக்கொண்டு காலைக் கையைப் பிடித்து அந்த வழியிலாவது வாங்கிவிடுவோம்; அவ்வளவுக்கு அவகாசமில்லாதபடி அவனே எளிதாய்க் கொடுக்கவாவது பெற்றுவிடுவோம்; இல்லையேல் நமக்குள்ள உரிமையைக் கொண்டு நியாயாலயத்தில் பிடித்திழுத்து பலாத்காரத்தாலே பெற்றுக் கொள்வோம்—என்கிற இம் மூன்று வழிகளையும் முதலிலேயே தீர்மானித்துக் கொள்வர்கள் அதுபோலவே பெருமாளும் விபீஷணன் தம்பக்கலில்வந்து சேருவதற்கு மிகமுன்னமேயே திருவடியை நோக்கி "தபஸா ஸேதுபந்தேந ஸாகரோச்சோஷணேந வா। ஸர்வதா ஸாகரோத்தீர்ணே ஸாமர்த்யஸ்யாஸ்ய ஸம்பதே॥" என்று மூன்றுவகையான உபாயங்களையும் சிந்தையிற் கொண்டு வெளிப்படவு மருளிச் செய்து, கடலைக் கடத்தல் எவ்வகையிலும் தமக்கு எளிதே யென்பதை வெளியிட்டருளினர்.

acharya.org

அதற்குப் பிறகு விபீஷணாழ்வான் வந்து சேர்ந்தான் அவனை நோக்கி ஸுக்ரீவ மஹாராஜரும் திருவடியும் "கதம் ஸாகரம் அக்ஷோப்யம் தராம வருணாலயம் । ஸைந்யை: பரிவ்ருதா: ஸர்வே வாநராணாம் மஹௌஜஸாம் ॥ உபாயம் நாதிபச்யாமோ யதா நதநதீபதிம் । தராம தரஸா ஸர்வே ஸஸைந்யா வருணாலயம் ॥" என்று கடல் கடக்கும் வழி யாதோவென்று கேட்டார்கள் அதற்கு விபீஷணன் சொன்ன பதிலாவது—' ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி । கானித: ஸகரேணாயம் அப்ரமேயோ மஹோததி: ॥ கர்துமர்ஹதி ராமஸ்ய ஜ்ஞாத்வா கார்யம் மஹோததி: " என்பதாம் ரகுகுலத்திற்கு ஸாகரம் மிகவும் உபகாரகமாக அவதரித்ததாகையால் இது மிகவும் பெருமையுடையது, (மனுஷ்ய பாவனையிலே நிற்கிற) பெருமாளுக்கும் இக்கடல் பரமபூஜ்யமானது, ஆதலால் இதனை வணங்கி வழிபட்டு வழி கேட்பது யுக்தமென்று எனக்குத் தோன்றுகிறது, இதைப் பெருமான் ஸந்நிதியிலும் விஜ்ஞாபித்துத் திருவுள்ளமானபடி செய்வது—என்றார் விபீஷணாழ்வான்

"ஏவம் விபீஷணேனோக்தோ ராக்ஷஸேந விபச்சிதா । ஆஜகாமாத ஸுக்ரீவோ யத்ர ராமஸ் ஸலக்ஷ்மண: ॥ ததாக்யாதும் ஸமாரேபே விபீஷணவச: சுபம் । ஸுக்ரீவோ விபுலக்ரீவ: ஸாகரஸ்யோபவேசநம் ॥"—விபீஷணன் சொல்லிவிட்ட அபிப்ராயத்தை உடனே ஸுக்ரீவ மஹாராஜர் பெருமாள் ஸந்நிதியிலே போந்து விண்ணப்பித்தார் [ப்ரக்ருத்யா தர்மசீலஸ்ய ராகவஸ்யாப்யரோசத] இயற்கையாகவே ருஜுமார்க்கத்திலேயே செல்பவரான பெருமாளுக்கும் ஸமுத்ரராஜனை வணங்கி வேண்டிக்கொள்வதென்கிற அந்த விஷயம் திருவுள்ளத்திற் பாங்காகப் பட்டது

உடனே பெருமாள் இளைய பெருமாளையும் மஹாராஜனையும் நோக்கி, ஸமயத்தில் நல்ல வுபாயத்தை நினைப்பூட்டின விபீஷணனுக்கு உரிய வெகுமதி யளிக்குமாறு நியமித்துவிட்டு, விபீஷணஸ்ய மந்த்ரோऽயம் மம லக்ஷ்மண ரோசதே । ப்ரூஹி த்வம்

acharya.org

ஸஹஸுக்ரீவஸ்சாபி யதிரோசதே ॥] லக்ஷ்மணா! விபீஷணன் தெரிவித்த விஷயம் எனக்கு மிகவும் யுக்தமாகத் தோன்றுகிறது. நீயும் ஸுக்ரீவனும் நன்கு ஆலோசித்துப்பார்த்து இதில் உங்களுடைய அபிமதியையும் தெரிவிக்கவேணும்—என்றார். அது கேட்ட ஸுக்ரீவ லக்ஷ்மணர்கள் [கிமர்த்தம் நோ நரவ்யாக்ர! நரோசிஷ்யதி ராகவ। விபீஷணேந யச்சோக்தம் அஸ்மின் காலே ஸுகாவஹம் ॥...விபீஷணஸ்ய மந்த்ரஸ்ய யதார்த்தம் க்ரியதாம் வச: ।] பெருமானே! எங்களுடைய அபிமதியைத் தனியே தெரிவிக்கவேண்டியதென்னவிருக்கிறது? இந்த ஸமயத்திற்கு இணங்கிய உபாயத்தையே விபீஷணன் கூறியிருக்கின்றாராதலால் அதுவே எங்களுக்கும் ருசிக்கின்றது; அப்படியே செய்தருளவேண்டியதுதான் என்றார்கள். [ததஸ்ஸாகர வேலாயாம் தர்ப்பாநாஸ்தீர்ய ராகவ: । ஸம்விவேஶ ததா ராமோ வேத்யாமிவ ஹுதாஶந: ॥] பிறகு பெருமாள் கடற்கரையிலே தர்ப்பங்களைப் பரப்பி நீறுபூத்த நெருப்புப்போலே சயனித்தருளினார். (இவ்வளவோடு பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.) மேல் இருபதாவது ஸர்க்கத்தில், சார்த்தூலனென்கிற வொரு ராக்ஷஸன் சாரனாக இங்குவந்து மீண்டதும், மறுபடியும் சுகனென்கிற ஒரு ராக்ஷஸன் ராவணனது கட்டளையினால் இங்குவந்து பரிபவப்பட்டுப் போனதுமான சில கதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேல் இருபத்தோராவது ஸர்க்கத்தில் (பத்தொன்பதாவது ஸர்க்கத்தின் முடிவிலுள்ள கதையின் தொடர்ச்சியாக) * ததஸ்ஸாகர வேலாயாம் தர்ப்பாநாஸ்தீர்ய ராகவ: । அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிஶிஶ்யே மஹோததே: * என்று தொடங்கி * ஸத்ரிராத்ரோஷிதஸ்தத்ர நயஜ்ஞோ தர்மவத்ஸல: । உபாஸத ததா ராம: ஸாகரம் ஸரிதாம் பதிம் ॥* என்னுமளவாகப் பதினொரு ச்லோகங்களினால் பெருமாளுடைய தரைக்கிடை பேசப்பட்டது. இந்த இடத்தில்தான் * சாபமாநய ஸௌமித்ரே ஶராம்ஶ்சாஶீவிஷோபமான் * என்பது எட்டாவது ச்லோகமாக வுள்ளது. பன்னிரண்டு ச்லோகங்களுக்குமேல் பெருமாளுடைய கோபாவேசமும் அதனால் விளையும் காரியமும் பேசப்படுகின்றன. அந்த ப்ரகரணம் வேறு, கீழுள்ள ப்ரகரணம் வேறு. வணங்கி வழிபட்டுக் கிடந்த

acharya.org

ஸமயத்திலே பெருமாளுடைய திருவுள்ளம் எங்ஙனே யிருக்கக் கூடியது? எங்ஙனே யிருந்தது? என்பது மாத்திரம் ஆராயப்போப் தும் *ஸக்ருதேவ ப்ரபந்நாய* என்றும், *ந த்யஜேயம் கதஞ்சந* என்றும் இந்த ப்ரகரணத்திலேயே உள்ள சப்தங்களையும் அவற்றுக்குப் பெரியார் வியாக்கியானம் செய்கின்ற அர்த்தத்தையும், அடுத்த படியாகப் பெருமாள் தாமே ஸாதிக்கிற *ப்ரஹர்ஷ க்ஷமாசைவ ஸுஜந்மம் ப்ரியவாதிநா। ஸ்வஸ்தம் ஹ்ருஷ்டோஸ்மி நிபபாத ஶரணாந்வேஷீ ஸதாம் ஸந்நிதௌ॥* என்கிற வார்த்தையையும் விமர்சித்தால், காரணத்ரய நியமாநுவிப்ரவஸ்தராய் வணங்கிக்கிடந்த காலத்திலே கடலரசனை முடிப்ப தான வொரு திருவுள்ளமும் பெருமாளுக்கு உடனிருந்தது என்று சொல்வது எங்ஙனே பொருந்தும்?

விபீஷணன் வந்து சேர்வதற்கு முன்னே பொதுப்படையாகப் பெருமாள் கூறியிருந்த *தவ ஸைந்யேந ஸாகரோ ஶோஷணேந வா। ஸர்வதா ஸர்வஸைந்யேந ஸாகரஸ்ஸ்தரணீய வை॥* என்கிற வார்த்தை உபாய விசேஷ நிர்த்தாரண மின்றிக்கே ‘இஙஙனே எனக்கு ஸாத்யமான பல வுபாயங்களுண்டு’ என்பதை மாத்திரம் ஸ்ப்ரஷ்டவ யோஜதாரார்த்த வ்யக்தமாகத் தெரிவிக்கப் பிறந்ததாதலால், பிறகு ஆப்த வசனங்களாலே சரணாகதியாகிற உபாய விசேஷம் கைக்கொள்ளப்பட்டு அதனை ஸங்கியமாக அநுஷ்டிக்கப்புகுந்த காலத்திலே ஸாகரஶோஷண நினைவையும் கூடவே வைத்து அர்த்தம் பண்ணுவதற்கு அந்த வார்த்தை இடம் தரவேமாட்டாது. அந்த வார்த்தையின் உண்மையான பொருளும் மேலே இனிது விளங்கும்.

ஒரு க்ரந்தத்தைத் தானே பார்த்துப் பரிச்ரமப்பட்டுப் பொருள் தெரிந்துகொள்ள வல்லமை வாய்ந்த வொருவன் ஆப்த வசநாதிகளாலே ஒரு ஆசார்யரிடம் சென்று அவரிடத்திலே அதிகரித்து க்ரஹிப்பதாக நிச்சயித்துச் சென்று வணங்கும்போது ‘நீர் சொல்லுகிறீரா? நானே புஸ்தகம் பார்த்துத் தெரிந்து கொள்ளட்டுமா? என்று வெருட்டிச் சொல்லுவது முண்டோ? அவ்வாசிரியர் இரங்கிச் சொல்லிக் கொடாவிடில் இவன்தானே ஏடுபார்த்துத் தெரிந்து கொள்ளவே போகிறானெனினும்,

acharya.org

வணங்கி வேண்டிக்கொள்ள வந்தபோது விபரீதமான நினைவும் சொலவும் இருக்கத்தகவே தகாதன்றோ. ஸாமாந்யர்களான நம்முடைய படியே யிதுவானால் *ஸ்ரூத்தா யசஸ்வீ*யென்னப் பட்ட பெருமாளுடையபடி இதற்கு விபரீதமாயிருக்க வடுக்குமோ? "சணல்கண்ட ப்ரஹ்மாஸ்த்ரம் போலே" என்று ஆசாரியர்கள் ஸாதிக்கிற கணக்கிலே ஸாரணவாரணாநுஷ்டாநமும் உசேணா வாயாநுஸந்தாநமும் ஸாக்ஷாத்ஸ்வவேதநாவ ஒரு வ்யக்தியி னிடத்தில் கூடாததாதலை—என்கிற ஒருவார்த்தையே அண்ணா ஸ்வாமியின் விஸ்தரங்களுக்கெல்லாம் ஸாரமான ஜீவாது.

„ யதா தே தேஹஸ்ய ஹவத்ஸ யதி ஜீவிதஸ் சேவஷி—என்பதில் என்ன ஸநாஜஸ்வம்?" என்று பீதாம்பர பண்டிதர் எழுதுவது அர்த்தமில்லாத வார்த்தை. * தேந தேஹஸ்ய ஹவத்ஸ தே யதி ஜீவிதஸ் சேவஷி * என்று இராவணனை நோக்கிப் பிராட்டி அருளிச் செய்திருப்பதுண்டு. இங்ஙனே பெருமாள் அருளிச் செய்யவும் ப்ராப்தம் இதற்கு உபதேசமொழி யென்று பெயரே தவிர வணக்கமொழி யென்று பெயர் கிடையாது. 'பாவீ! அநியாயமாய்க் கெட்டுப் போய்விடாதே; பெரியாரோடு ஒத்துவாழ்; இல்லாவிடில், நீ பாழாய்ப் போய்விடுவாய்' என்று வயிற்றெரிச்சலோடு சிறியார்க்குப் பெரியார் சொல்லும் வார்த்தை உலகில் கிடையாதென்று யாரும் சொல்லவில்லை. சரணாகதி செய்யுங் காலத்திலே அப்படிப்பட்ட உபதேச மொழிக்கு ப்ரஸக்தி யேது?

இது ஸர்வேச்வரனுடைய சரணாகதி ப்ரகரணமாகையால் அவனுடைய தன்மைக்குத் தகுதியாக அப்படியும் சொல்லலாம் என்பது பாலிசபாஷிதம். ஸர்வேச்வரத்வாகாரத்தை இங்கு நினைப்பதற்கே வழியில்லை. வெறும் மநுஷ்யத்வாகார மொன்றுதான் இங்கு வைத்துப் பேசவுரியது. அல்லாவிடில், பெருமாள் தரைக்கிடை கிடந்ததே தவறான காரியமாகும். ப்ரபுத்வத்திற்குப் பொருந்த ஆஜ்ஞாபக ரூபமாகவே காரியம் செய்திருக்க வேண்டும். புல்லைப் பரப்பிப் படுக்கை போடாமல் நின்றுகொண்டே மந்த்ர பலத்தாலோ மற்றும் எந்த சக்தி விசேஷத்தாலோ கடலரசனை எதிரே தோன்றப் பண்ணி [ஆண்டாள் * ஆழிமழைக் கண்ணாவென்று தேவதையை யழைத்து நியமித்ததுபோலே] 'வருணா! எனக்கு வழிவிடாய்'

என்று நியமித்துக் காரியங் கொள்ளாதே, ப்ரதிஸ்யநம் பண்ணினது ஏன்? * யதா த்வம் ஸமநுஜ்ஞாதோ ஹ்ருஷ்டோ யோகாநநந்தத் ஸாநு * என்று பெரியவுடையார்க்கு வழி காட்டின பெருமிடுக்கர் * யதா யூயம் ஸமநுஜ்ஞாதா: தீர்த்வா ஹ்ருஷ்டா வாநரா:! * இத்யாதிப் புடைகளிலே வாநரமுதலிகளை நியமித்தும் * யதா த்வம் ஸமநுஜ்ஞாதோ ஜாநந்ஸாகரோ ஹ்ருஷ்டகோ ஹவ * என்று கடலரசனை நியமித்தும் எளிதாக எழுந்தருள்வதற்குப் பெருமாள் அசக்தரோ? ஆற்றலையெல்லாமடக்கிக்கொண்டு வணக்கங்கொண்டு காரியங்கொள்ளப் பார்த்தவிடத்திலே பாரதவத்தையும் கூடவே வைத்துப் பேசுவது என்ன அழகு? விஷயங்களைக் கலந்த கட்டியாகப் பிசிறிப் பிசைந்து பேசுவது பண்டித க்ருத்யமன்று. இராகவன் இப்போது எந்த நிலைமையில் இருந்து வருகிறானென்பதைக்கூட ஆலோசியாமல் நெஞ்சில் தோன்றினபடியும் வாயில் வந்தபடியும் சொல்லிவிடுவது பிராமாணிகர்கட்குப் பணியன்று.

"செய்யும் ப்ரணயத்தில் குறைவில்லை; ஸம்ஶம் பண்ணுல் ஊண்டபாதம். இந்த பயத்தை முன்பே காட்டாவிடில் அநார்ஜவம் நியதம்" என்கிறார் பீதாம்பரபண்டிதர். ப்ரணயமென்கிற சொல்லுக்கு என்ன பொருள்? இங்குப் பெருமாளுக்கும் கடலரசனுக்கும் எவ்வகையான பரிமாற்றம்? ப்ரணய கலஹ மித்யாதி ஸ்தலங்களிலே கொள்ளப்படும் ப்ரணய பதத்திற்கு இங்கு என்ன ப்ரஸக்தி? பல்லைக்காட்டிக் காரியங்கொள்ள வந்தவன் வில்லையும் கூடவே காட்டி அச்ச முறுத்திக்கொண்டே வணங்கினுனென்பது எங்ஙனே சேரும்? அச்சமுறுத்துகிற ப்ரகரணம் இதுவன்று கிடீர். ஆர்ஜவம் அநார்ஜவம் என்பதற்கு இன்னது பொருள் என்றே தெரிந்து கொள்ளாமல் அந்தப்பதங்களை ப்ரயோகிப்பார்க்கு நாம் என் சொல்லவல்லோம். கரணத்ரய ஸாரூப்யத்தை ஆர்ஜவமென்று சாஸ்த்ரஜ்ஞர்கள் கூறியுள்ளார்கள். இங்கே உடல் வணங்கியும் மனம் தண்டனையில் நெறிப்புக் கொண்டும் இருந்ததாகப் பொருள் கூறினுல் இது செவ்வைக் கேடேயல்லது செவ்வையாகவே மாட்டாது. 'அச்சமுறுத்துவதை முன்பே காட்டாவிட்டால்தான் ஆர்ஜவக்குறை பெருமாளுக்கு வந்து சேரும்' என்று பீதாம்பர பண்டிதர் எழுதுவது தவறு. ஸுக்ரீவ விஷயத்தில் * ஶாவாம்ருதி வயமநுவ்ரதா: * இத்யாதியாகப் பிறகு தெரிவித்த வார்த்தைகளை

acharya.org

முன்னமே தெரிவித்திருப்பதுண்டோ? அங்ஙனம் தெரிவியாமையி ஞல் பெருமாள் செவ்வைக்கேடர் என்று சொல்லுவாருண்டோ? * ஸ்வாம் வத்ஸ்ருத்ய நிதாஷீ தேசிக ஸ்ரீஸூக்திப்படியே ஆவஹாநயேதாஷீயான பின்பு நிகழ்ந்த சீற்றச் செயலும் அருள் பொலிந்ததே யென்று அண்ணுஸ்வாமி யெழுதியிருக்கும்போது அதில் அநார்ஜவம் சங்கிக்க அவகாசலேசமு மில்லையே. பாரண வாரண ஸமகாலத்திலேயே கடலைத் தொலைத்துவிடுகிறேனென் கிற ஸங்கல்பந்தான் செவ்வைக் கேடாகும். ஒரேகாலத்தில் உத்தம குணர்கள் பக்கலில் ஒன்று சேர்ந்திருக்க முடியாதவைகளான ஸாம தண்ட சிந்தனைகள் பெருமாளிடத்தில் ஒருங்கே கூடியிருந்தன வாகக் காட்டக்கூடிய இடம் ஸ்ரீராமாயணத்திற்குள் சிறிதேனும் கிடைக்குமோ? முழுதும் தேடிப்பார்க்க.

“ஸுகரமேண வத்வாய மென்றால் ஹிதபாஷணம் அநார்ஜவமோ?” என்கிருர் பீதாம்பர பண்டிதர். சாஸ்த்ரம் நம் மிடத்தில் சரணுகதி செய்ய வந்ததன்று. * பாஹ்யம் து வஹ ஸம்ஹித மென்று முறையிடப்பட்டுளது. பெருமாள் இங்கு பாஹ்யாவான முறைமையிலேயா தரைக்கிடை கிடக்கிருர்? ராஜ்ய தந்த்ர மென்கிற பேச்சுக்கு இங்கு என்ன ப்ரஸக்தி? ப்ரத்யுப வேசந தந்த்ரமன்றோ இது. இவையெல்லாம் அஸம்பத்த வாக் விலஸிதங்கள்.

“இங்கே தக்ஷிண பாஹு வர்ணநம் நயம் பயம் இரண்டையும் காட்டுகிறது” இத்யாதிகளான பீதாம்பர பண்டித வாக்யங்கள் எடுத்துக் கழிக்கவும் தகாதவை. ‘தரைக்கிடை கிடந்த காலத்திலே பெருமாளுடைய திருவுள்ளம் எப்படிப்பட்டது?’ என்று விமர்சிக் கும் ப்ரகாணத்திலே இத்தகைய காடுபாய்ந்த வாக்யார்த்தங்கள் காட்டிலே கூறத்தக்கன. இவ்விடத்திலே கோவிந்தராஜீய வ்யாக்யா நத்திலுள்ள பதப்ரயோஜந விவரணங்களையும் அவதாரிகைகளையும் நோக்கிஞல் ஸாகரமாரண நினைவு பெருமாள் திருவுள்ளத்தில் (12 ச்லோகம் வரையில்) எள்ளளவும் எட்டிப்பார்க்கவே யில்லையென்பது தெளிவாகும்.

acharya.org

ஶரணவரணாநுஷ்டாநமும் உஜ்ஜீவநோபாயாநு ஸந்தாநமும் ஶாஸ்த்ரஜ்ஞாநமும் ஒரு வ்யக்தியினிடத்தில் எப்படியிருக்கத் தகாதவையோ அப்படியே விசேஷஜ்ஞாநமுமாவி இருக்கத் தகாதவைதான்; அதுமாத்திரம் இராகவனிடத்தில் எங்ஙனே கூடிற்று? என்று சிலர் கேட்கக்கூடும். இதனால், பெருமாள் சரணாகதிக்கு, அல்லது ப்ரத்யுபவேஶநத்திற்கு அதிகாரி யல்லர் என்பதும், மநுஷ்ய பாவனைக்குச் சேரப் பல காரியங்களையும் செய்துபோந்த கணக்கிலே இதனையும் செய்தார் என்பதும் சொல்ல வேண்டிற்றாகு மத்தனை யல்லது வேறொன்றும் சொல்லப்போகாது. பல்லைக் காட்டிக் கொண்டு யாசிக்கும் ஸமயத்திலேயே வில்லைக்காட்டி வெருட்டுவதான க்ருத்யமும் மநுஷ்யர்கள் பக்கலில் காணக்கூடியதே யாதலால் மநுஷ்ய பாவனையில் நின்ற பெருமாளுக்கு அதுவுந்தான் பொருந்தினதாக இருக்கட்டுமே என்று சொல்லப் பார்ப்பது பெருமாளை காவ்யபாஷ கோஷ்டியிலே வைத்துப் பேசுவதாகும். பாலகாண்ட ப்ரதம ஸர்க்கத்திலும் அயோத்யாகாண்ட ப்ரதம த்விதீய ஸர்க்கங்களிலும் விரித்துரைக்கப்பட்ட ஸ்ரீராம குணங்களுக்கு விரோதமாகக் கூறும் கூற்றுக்கள் செவியிலு மேற்கத் தகாதவை.

“பெருமாளை முடிக்கவா நாலுமந்திரிகள் மந்த்ராலோசனை செய்து இவ்வுபாயத்தை நிச்சயித்தார்கள்? இவர் மந்த்ரியாயிருந்தால் எப்படியோ?” என்று பீதாம்பர பண்டிதர் எழுதியிருப்பதும் பொருளற்ற பேச்சு. ‘கடலைக்கடந்து வைரியை வென்று வைதேஹியைப் பெற முடியாமற் போனால் மரண மடைவது தவிர வேறு செய்யகில்லேன்’—என்கிற தாத்பரியமே தேறுமாறு சொல்லிக் கொண்ட விதனால் யாதொரு குறையும் சங்கிக்கப் போகாது. மஹாவீரர்களுக்கு ஏற்ற பேச்சே யிது. மரண மென்று திருவாக்கினால் சொல்லிக்கொண்ட மாத்திரத்திலேயே அது ப்ராப்தமாய்விட்டதாக நிச்சயித்து ஆக்ஷேபம் செய்வாருடைய மேதை அற்புதமாகவே யுள்ளது. மந்த்ரிகள் பெருமாளை முடியச் சொன்னதாக யார் சொல்லுகிறார்கள்? மந்த்ரிகளும் முடியச் சொல்லவில்லை. சரணாகதிக்கு மரண ஸங்கல்பம் அங்கமுமன்று. அங்ஙனே பெருமாள் செய்து கொள்ளவுமில்லை. உத்தேசித்ததொரு காரியத்தை ஸாதித்தே தலைக்கட்டுவதென்று தீவ்ரமான உறுதி கொண்டிருக்குமவர்கள் அவ்வுறுதியைக் காட்டுவதற்கு ஶேஷபூதமாகவே வார்த்தைப்

acharya.org

பாடாக ஸ்வமரணத்தையும் ஒரு கல்பமாகப் பேசுவது எங்குமுள்ள வழக்கம். * சுரா வணா உராஉவா * இத்யாதிகள் இவ்வகுப்பில் தானே சேர்ந்தவை இவ்வகையிலே அமைந்த 'மே மரணம் வா' என்ற வார்த்தையின்மீது எத்தனை ஆக்ஷேபம்! எத்தனை படைெப்பு!. * ஸ-ுயா நெஹா வுரிகாரஃ வு திக-ுஉவுெக்ஷ.*

"ப்ரபந்நரான விபீஷணனை சத்ருவான ராவணன் கையில் ப்ரதிப்ரதாநம் பண்ணும்படி தாமே முடிய நினைத்தாரோ? தேவர்கள் சரணாகதியை ஜொவமாக்கஸங்கல்பித்தாரோ?" என்று வெகு அவலீலையாக எழுதுகிறார் பீதாம்பரபண்டிதர். ஸ்ரீராமாயணத்தில் எத்தனை ஸந்தர்ப்பங்களில் பெருமாள் தம்முடைய மரணப்பேச்சை வாய்விட்டுக் கதறியிருக்கிறாரென்று தெரியுமோ? * வீ தயா ரஹிதொ தாஹம்வெ • நஹிஜீவாநி ஞக்ஷணா । ஜுதம் மொ க்ஷெந உஹதா வீதாஹரணெஜந ௭ா। வுரஷொகெ உஹாராஜொ நுநம் ஜுக்ஷூதி ஜெவிதா ॥.....சுயா விர ஹிதாமாஹம் ஜொஜெக்ஷூ ஜீவிதஅதூநஃ ॥ * இத்யாதிகள் ஆரண்ய காண்டத்தில் பெருமாள் உக்திகள். இப்படியே யுத்தகாண்டத்திலும் 'சுரா வணா உராஉவா' என்றும் 'சுஜ ராஉவஸ ராஉசுவம் வமூந்தா ஊவஸயாெெ' என்றும் சொன்ன அடுத்த க்ஷணத்திலேயே * நஹி யாெஉந ஜெகாய-ம் ஜெநவ வுாஜெணாந- வீதயா।...கிம்ஜெ ராஜெந கிம்வுாஜெணஃ யாெஜ காய-ம் நவிஜூதெ।...ஐஜெஹவ உரணம்ரூயஃ நதா ஙம்யாவிஜ ஹ-ணா * இத்யாதிகள் பெருமாள் திருவாக்கில் நிரம-மாக வந்திருக்கின்றன. தரைக்கிடை கிடவாமல் மஹாவீரனும் உஹா யீரயளரெயனும் ஸ்ரீராமன் காரியஞ் செய்யுமிடங்களிலேயே இப்படிப்பட்ட பேச்சுக்களிருந்தால் அவ்விடங்களில் விளையாத ஆக்ஷேபம் தரைக்கிடை கிடக்குங்காலத்ததான அத்யமே மரண மென்பதில் என்ன விளையக்கூடும்? * சுவிஞ-வீதவாவ வாநர ஹஜெடீஃ * என்றுப்போலே ஸ்ரீராமாயணத்தை ஓரிடத்திலும் ஆழ்ந்து பாராமல் மேலெழவும் பாராமல் நெஞ்சில் தோற்றுகிறபடியெல்லாம் ஆக்ஷேப தூஷணைகளைச் செய்து கொண்டிருப்பார்க்கு நம்முடைய உக்திகள் எங்ஙனே பயனளிக்கும்? இப்போது இதில் நாம் காட்டியுள்ள விஷயங்கள் ஏற்கனவே அண்ணஸ்வாமியின் க்ரந்

தங்களில் பரக்க நிரூபிக்கப்பட்டிருப்பவையே. ஆனாலும் இங்கு ஸாரமாக எடுத்துக் காட்டினோமத்தனை. [அத்ய மே ஸாகரஸ்ய தரணம் வா (மே) மரணம் வா] என்கிறவொரு அந்வயம் தவிர மற்றைப் படி இவர்காட்டுமவ அந்வயங்கள் பெருமாளுடைய திருவுள்ளத்திற்கும் வால்மீகியின் அபிப்ராயத்திற்கும் வெகு தூரத்திலே நிற்கும்.

மே என்பதற்கு 'என்னிடமிருந்து' என்று பஞ்சமியாக அர்த்தங்கூறி, „மத்த: மரணம் வா! அத்ய தரணம் வா ஸாகரஸ்ய என்றால் என்ன வ்யுத்க்ரமம்?" — என்று கேட்கிறார் பீதாம்பர பண்டிதர். இப்போது இவர் காட்டுகிற அந்வயக்ரமம் ஒரு பொருளையும் தரமாட்டாதது. ஒரு வியாக்யாநகாரரும் காட்டினதுமன்று. மே என்பதற்குப் பஞ்சமியாகப் பொருள்கொள்ள அவசியம் ஏற்பட்டால் கொள்ளலாம். அதை மறுப்போமல்லோம். இங்கு அப்பொருள் அஜாகளஸ்தந துல்யமாகும். ஸாகரத்திற்கு என்னிடமிருந்து தரணமாவது-என்று ஒரு விலக்ஷணமான அர்த்தம் இவர் கூறவருகிறாரே, இதில் ரஸமறிந்தவர் இவரொருவரே யாகவேணும். விசாரமோ ஈட்டு ஸ்ரீஸூக்தியை யநுஸரித்துப் பிறந்துளது. அதற்கிணங்காத வேறொரு அஸமஞ்ஜஸப் பொருளைச் சொல்லிக்கொண்டு 'இப்பொருளில் என்ன வ்யுத்க்ரமம்? என்று கேட்பது விவேகிகளின் பணியாகுமோ? மூலத்தில் மே மரணம் என்றுள்ள பதச்சேர்த்தியைப் பிரிக்காமல் அந்வயிப்பது க்ரமிகாந்வயம்; அதைப்பிரித்து மிகவும் வ்யவஹிதமான வேறொரு பதத்தோடே சேர்த்து அந்வயிப்பது வ்யுத்க்ரமாந்வயம். காவ்யம் வாசிப்பவர்களுக்கும் இது எளிதாகத் தெரியுமே. அந்தோ! ஒவ்வொன்றையும் முறை கேடாகவேயா எழுத வேண்டும்?

"உபாய விகல்பத்தில் இரண்டு கல்பத்திலும் பலன் ஒன்றேயாகவேணும்" என்று தொடங்கி இவர் எழுதியிருப்பதும் தவறு. இங்கு உபாய விகல்பமாக பாலிசனும் நினைக்க முடியாது. ப்ரத்யுபவேசநமாகிற உபாயம் ஒன்றே நிஷ்கர்ஷித்துப் பரிக்ரஹிக்கப்பட்டு விட்டது. அதில் விகல்பமே கிடையாது. தரணம் என்பது இவ்விடத்தில் பலனே யல்லது உபாயமன்று. ஸ்ரீவசநபூஷணத்தில் இது ஸுஸ்பஷ்டம். மேல் விளைய வேண்டிய ராவணவத ஸீதா ப்ராப்திகளைப்பற்ற இது உபாயமன்றோ என்ன வேண்டா. ஒன்றுக்கு ஒன்றைப்பற்ற உபாயத்வமும் மற்றொன்றைப்பற்ற ஹேதுத்வமும் சாஸ்த்ர

acharya.org

ஸித்தம். ஶரணவரணமாகிற உபாயத்தினால் ஶரணத்தை இங்குப் பலனாகக் கொண்டாரே யல்லது உபாயமாகக் கொண்டாரல்லர். இதை நாம் எடுத்துச் சொல்லுவது சிறு குழந்தைகளுக்குச் சொல்வதுபோலவே யுள்ளது. ப்ரகரணம் உபாய பரிக்ரஹ ப்ரகரணந்தான். அந்த வுபாயம் விபீஷணாதிகளின் வார்த்தையினாலும் பெருமாள் தம்முடைய ருசியினாலும் ஶரணவரணமே யென்பதாக உறுதி செய்யப்பட்டு அநுஷ்டிக்கப்பட்டுமான பின்பு அதில் விகல்பமென்கிற பேச்சுக்கு ப்ரஸக்தி யேது? "மே மரணமென்கிற ஒரு கல்பமுமுண்டு" என்று ஒரு தடவைக்கு இரு தடவையாக எழுதி யிருக்குமிவர் தம்முடைய கருத்துக்கே மறுப்பாகக் காட்டும் தூஷணங்கள் பரிஹாஸ்யங்களே யல்லது வ்யாக்யேயங்களல்ல என்று, இவருடைய அபத்தச் சுவடியின் வீக்ஷணத்தில் விரமிப்போமிப்போது.

அறிவிற் சிறந்த ஆரியர்களே! ஈட்டில் ஜைவக வ்யாக்யாதாக்களினால் ஸம்வதிதமான "இத்தை முடித்தல் கடத்தல்" என்கிற வாக்கியமே இத்தனை விசார விரிவுகளுக்கு மூலமாயிற்று. அந்த வாக்கியம் அப்படியிருந்திருக்கத் தகுதியுண்டா வென்று ஆராய்ச்சி செய்யலாமே. அங்கு நம்பிள்ளை தாத்பரிய ஸரணியில் ஸாதித்தவரே யன்றிப் பதவுரை முறையில் ஸாதித்தவரல்லரே. வாய்திறக்கும்போதே இத்தை முடித்தல் என்று ஸாதிப்பரா? கடலைக் கடத்தல் நேராவிட்டாலன்றோ அதனை முடித்தல் வேண்டும். இத்தைக் கடத்தல் முடித்தல் என்று ஒழுங்குபாடாக ஸாதிப்பதில் என்ன தடை? முறைதவறி யிருப்பதுகொண்டே இங்கு ஏதோ பிழை புகுந்திருத்தல் வேண்டும் என்று ஏன் தெளிந்து கொள்ளலாகாது? இற்றை முடிதல் கடத்தல் என்பது மாத்திரம் முறைமையோ? என்ன வேண்டா. ஸ்ரீராமாயண ச்லோகத்தின் ஆநுபூர்வியில் ஆர்க்கும் விப்ரதிபத்தி யில்லையே. மூலமுள்ளபடிக்குச் சேருகிறது என்பதே யல்லாமல் மற்றுமுண்டான தகுதிகளும் தத்வப்ரதிஷ்டையில் நிரூபிக்கப்பட்டே யுள்ளன. ஸ்ரீராமாயண மூலத்தையே மாற்றிவிடப் புகுந்தவர்களும் உள்ளார்களெனினும் அன்னவர்களைப் பொருள்படுத்தி நாமுரைக்க வேண்டுவ தொன்றுமில்லை. வ்யாக்யாதாவான நம்பிள்ளை திருவாக்கில் இத்தை முடித்தல் என்பது முந்துற இருப்பதற்கு எள்ளளவேனும் தகுதியுண்டா? என்று நெடுந்தூரம் திரும்பிருந்தும் காண்மின்,

acharya.org

இரண்டாவது:—இந்த விபரீதார்த்தம் ஸ்ரீராமாயண ப்ரகரணத்திற்குப் பொருந்தவில்லை யென்ப தொன்றேயோ? ஈட்டு ப்ரகரணத்திற்கும் இறையேனும் பொருந்தவில்லையே. ஆழ்வாரை மேன்மேலும் உகப்பிப்பதில் எம்பெருமானுக்குத் திருவுள்ளமே யல்லது ஆழ்வாரைத் தொலைத்துவிடுவதாக எம்பெருமான் ப்ரதிஜ்ஞை பண்ணினானென்று உண்மையான ஸ்ரீவைஷ்ணவர் வாயில் வருவதுமுண்டோ? ஆழ்வாருடைய ஒவ்வொரு பாசுரத்தையும் அல்லது ஒவ்வொரு அக்ஷரத்தையும் எடுத்துக் கொள்வோம். ஓரிடத்திலாவது இத்தகைய ரஸாபாஸப் பொருள்படுமாறு ஸ்ரீஸூக்தியுளதோ? * தண்டாமஞ் செய்து என் எண்தானானே * என்று ஆழ்வார் ஸாதிப்பதையும் அதற்கு நம்பிள்ளை பணித்த ஸுநவஹாவஹாநத்தையும், மற்றும் "வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணிலென்று, ஆர்வுற்ற என்னை யொழிய என்னில் முன்னம் பாரித்துத் தானென்னை முற்றப்பருகினான்" என்பது முதலான பாசுரங்களையும் ஸேவிக்கப் பெற்றவர்களுமா ஆபாஸப் பொருளை அகத்திற் கொள்வது? * எங்கள் குழுவினில் புகுரவிட்டோமென்கிற பீதாம்பர பண்டிதஜ்ஞாதிகளான ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டீவிஷ்டர்கள் யாதானும் சொல்லுக. ஆழ்வாரளவிலே எம்பெருமான் படுகாடு கிடக்கிறபடியைப் பாசுரந்தோறும் அறியவல்ல பாக்யசாலிகளுமா நெஞ்சால் நினைக்கவுமொண்ணாத பொருளைப் பேசவேண்டும்?

* பாவியேனைப் பலநீ காட்டிப்படுப்பாயோ * இத்யாதி பாசுரங்கள் இல்லையோ? * நலிவானின்ன மெண்ணுகின்றாய் * என்றீ பதிகம் பதிகமாகப் பேசவில்லையோ ஆழ்வார்?—என்று, அருளிச் செயலின் போக்கறியாதார் சிலர் க்ஷேபிப்பரேல், அப்பாசுரங்களைப்பற்றி ஸ்ரீவசநபூஷண ஆசார்ய ஹ்ருதயாதிகளில் அருளிச்செய்யுமதை ஸதாசார்ய ஸந்நிதியில் கேட்டுணர்மின் என்போமத்தனை. கொடுவுலகத்திலிருப்பைப் பொறுக்கமாட்டாமல் ஆர்த்திமிக்குப் பேசும் பாசுரங்கள் தனிப்பட்டவை. * யானொட்டி யென்னுள் * என்கிற பாசுரங்கொண்ட பதிகம் பரமானந்தம் பொலியப் பேசியது. இதில் ஆர்த்தியின் கந்தமும் எட்டிப் பார்ப்பதன்று. எம்பெருமானுடைய ஒப்புயர்வற்ற இனிமையைப் பேசுவது இத்திருவாய்மொழிக்கு ப்ரமேயமென்று மணவாளமாமுனிகளும் நூற்றந்தாதியில் அருளினார். அப்படிப்பட்ட திருவாய்மொழியில், எம்பெருமான் ஆழ்வா

acharya.org

ரைத தொலைததுவிடுவதாக ப்ரதிஜ்ஞை செய்தானெனபதும, “அதறகுத தாதபாய மெனனவெனறால்” எனறு பேசததொடஙகிக் காடுபாயவதும ஆதரிககவும தகாதவை

இறவை முடிதல் எனறால ஈடடு ப்ரகரணததிறகு நனகு பொருநதுகிறதே யெனில், ஆசசரியமாகப பொருநதுகிறது. இதை நாம உபபாதிகக அதிகபரிசரமம கொளள வேணடாம். திருநெடுநதாணடக வியாககியான அவதாரிகையில (பெரியவாசசானபிளளை)

‘ இனி முகஙகாடடா தொழியில ஜகதது அநீசவரமாமெனறு பாாதது ஆழவாாககு முகஙகாடடி, தானும இவரும ஜகதது முணடாமபடி பணணினான ’’

எனறருளிச செயதிருக்கும ஸ்ரீஸூகதி யொனறைக காணமின. இதைபபறறின விரிவுகளை அணணஙகராசாரிய ஸவாமி தகக ஸமயஙகளில வெளியிடுவா. எமபெருமான ஆழவாா பககலிலே * [illegible] ஸஹசாரி * எனறாறபோலே குடியிருகக விருமபுவதும, ‘இப பெருபபேறு நமககுக கிடைககுமோ கிடைககாதோ’ எனறு அவன தான தளுமபி நிறபதும, ‘இது கிடைககாவிடில பினனை யிருநது நாம ஜீவிபபதுமுணடோ?’ எனறு அவன ஸவஸததையில வெறுபபுக கொளவதும, ‘ஆழவாா நமமை அஙகீகரிததாலதான நமககு ஸததையுணடு, இலலையேல சசவிஷாணாதிகளைப போலே நமககும துசசவமேயததனை’ எனறு அவன எணணுவதும ஆக இபபடிப்பட்ட ரஸமயப பொருளகளை ஈடடில வாரி யிறைததிருககினற நமபிளளை திருவுளளததில அவதயமயமான வொரு வாககியம வநததாக ஸதாபிகக முயலவாருமுணடாவதே!. எமபெருமானைப பெறாமல ஆழவாா முடியகிறபதும, ஆழவாரைப பெறாமல எமபெருமான முடியகிறபதுமாக நமபிளளை போலவாா வியாககியானஙகளில அடிககடி காணகிறோம. எமபெருமான ஆழவாரை முடிததுவிடுவேனெனறு ப்ரதிஜ்ஞை பணணுவதான பொருள ஸாவதா அஸமபாவிதமே. “ஆழவாா, தனனைப பிரிநது துவணடு முடிநதுபோமளவாக எமபெருமான செயவதுணடே, அதுதான முடிததலாக இஙகுக கொளளலாகாதோ?” எனனில, “புணாதொறு மெனனக கலநது பிரிநது ஜஞாந பககிகளை வளாத

acharya.org

தது கனங்குழையிடக் காது பெருக்குதலும் மாஸோபவாஸி போஜனப்புறப்பூச்சும் போலே ஆற்றநல்ல மாபோகச் சிரமமாக." என்ற ஆசார்ய ஹ்ருதய திவ்யஸூக்தியின் சுவடறிவார் இங்ஙனே பேசார்.

* ஸ்வஜந்மஸ்த்ரீக்ஷா ஸ்வஸ்வாஸ்யம் ஸமாதிப்படியே ஏதுக்கு இத்தனை அநர்த்தங்கள்? * யத்ராஸ்த்ராமஸமஸ்த ரகுவீர! வீக்ஷ்ய விக்ருத்யதாமிதி ஸம்ரோஷிய ஸமுத்ராஜஸ:। லோகாயம் க்ருணை: க்ருதகோடிமுக்த: க்ஷமாநுவா க்ஷஸ்ய ஹ்லாதிதஸ்வத் ஸமேஹா வத க்ஷஸ்ய ஹர்ஷ:! * (அதிமாநுஷஸ்தவம்) என்று அகங்குழையும்படியான திருக்குணம்வாய்ந்த ராகவன் * ஸமுத்ர இவ காம்பீர்யே இத்யாதிகளாலே பக்தனால் கொண்டாடப்பட்ட கடலரசன் திறத்தில் குற்றம் காணுதவளவிலேயே க்ரூர நினைவைக் கொண்டாரென்னும் பேச்சை மீண்டுமீண்டும் பேசாதீர்கள். இப்படிப்பட்ட அபார்த்தம் நம்பிள்ளை பணிக்கவும் தகாது, இராகவன் இதற்கு இலக்காகவும் தகாது.

* தவஸா ஸேதுபந்தேந ஸாகரோச்சோஷணேந வா ஸர்வதா ஸுமஹாவீர்ய ஸாகரஸ்யாஸ்ய லங்கநே ॥ * என்று விபீஷண சரணாகதிக்கும் முன்னமே பெருமாள் பேசியிருக்கும் பேச்சுக்குப் பாங்காகவே யுளது இவ்வர்த்தம்— என்கின்றவர்கட்கு ஒரு ரஹஸ்யார்த்த முபகரிப்போமிங்கு. 'ஸாகரோச்சோஷணேந வா' என்றதற்கும் அத்யமே ச்லோகத்திற்கும் யாதொரு புணர்ப்பு மில்லையென்று பண்டே பரக்க நிரூபிதம். மற்றொன்றும் மதியிற் கொண்மின். ஸாகரோச்சோஷணேதி ந ஶோஷயதேர்ல்யுட்; அபி து ஶுஷ்யதே:. ஸாகரஸ்ய ஶுஷ்கீகரணமிதி நார்த்த:; அபி து ஶுஷ்கீபாவோऽர்த்த:. ராக்ஷஸகர்த்ருக ஸாகர கர்மக ஶோஷணம் நார்த்த:. ஸாகரஸ்ய உபாயீந: ஸ்வத ஏவ ஶுஷ்கீபாவோऽர்த்த:. 'கடலரசன் நாம் அணைகட்டிச் செல்லுமாறு உடன்பட்டோ, அல்லது அந்த ப்ரயாஸமும் நமக்கு வேண்டாமல் நடந்தே நாம் செல்லும்படி தன்னை வற்றிக்கொடுத்தோ உபகரிக்க நாம் கடந்துவிடலாம்' என்று பெருமாள் கூறுவதாகக் கொள்வதே இங்கு மிகச்சிறந்த பொருள். பரத்வப்பிடாரைக் காட்டவல்ல பொருளைக்காட்டிலும் நீர்மைக்

acharya.org

குணத்தைக் காட்டவல்ல பொருளே ஸ்ரீராகவன் திறத்தில் ஏறும் என்பது நம் ஆசார்யர்களின் ஸித்தாந்தமாதலாலும், மஹாவ்ருத்தி யொன்றுமின்றியே எளிதாகக் கிடைக்கும்பொருளே கொள்ளற்பாலது.

* ஸக்ருத்தேவ து உநாகஷி தவும் ஜநதவிநாசூஜ வஷ்ஷுஅஷறு। ரவிஷதாஉதிஜுவு ரஆவதிம் ஷவுஷி ஷோஷவிஸவோவாநயக ॥ * என்று யாதவாப்யுதயத்தில் தேசிகன் பணித்தபடியும் அதற்கு மூலமாக ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலுள்ளபடியும் ஸமுத்ரராஜன் யமுனையாறு தன்னை வற்றிக்கொடுத்தாற்போலே இராகவனுக்கும் அங்ஙனே கடல் செய்யலாமாதலால் அந்த ரீதியே இங்கு விவக்ஷிக்கப்படுகின்றதென்கை மிகப்பொருந்தும்.

முடிவில் சிறியதோர் விண்ணப்பம். அபார்த்தங்களையுங்கூட ஸதர்த்தங்களாகவே கொண்டு ஸமர்த்திக்க மஹான்களுங்கூட ஸாஹஸங்கள் செய்வது பிசகு என்று நாம் எண்ணவே முடியாது. * ஊவஹாஸதா ஊஜிஉதஃ ...ஹாதம் நமெ உதிராஜு வரஉாயிராஜ * என்று ஆழ்வானே பணிக்கும்போது நாமெல்லாம் எந்த மூலைக்கு? நன்றே தீர்த்தார், ஒரு வழியில் வாஸனை பண்ணிவிட்டால் அதில் நின்றும் நெஞ்சைப்போப்பது எம்மாண்பினார்க்கும் எளிதன்றுதான். பிடிவாதமென்பது ஜந்துக்களுக்கு அவர்ஜநீயமே. இதில் வியப்பொன்றுமில்லை. அச்சுப் புத்தகங்களிலும் ஓலைப்புத்தகங்களிலும் ஆராய்ச்சியில்லாமே விச்வாஸம் வைத்தவர்கள் காமேண பலபல விஷயங்களை ஆராய்ந்தால் திண்ணமாகத் தாங்களே தெளிவு பெற்றிடுவர்கள் என சிற்றறிவுக்கெட்டிய ஒன்றிரண்டு விஷயங்களை நான் காட்டுகிறேன், காண்மின்,—பெருமாள் திருமொழியில் * வளையவொரு சிலையதனால் மதிளிலங்கை யழித்தவனே * என்றதற்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் “ஸஹாஸ்ராதிகள் வாய்மடியும் மூரை மநுஷ்யத்வத்துக்கு ஏகாந்தமான வில்லாலே அவனுடைய ஊரை அழியச் செய்தவனே” என்று காண்கிறது. இதில் “வாய்மடியும் ஊரை” என்பதற்கு எங்கே அந்வயம்? “அவனுடைய ஊரை” என்பதற்கு எங்கே அந்வயம்? இப்படியா பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்

acharya.org

திருப்பர். இப்படியே பாடம் பல பதிப்புக்களிலும் ஏறிவருகின்றது. அதிலேயே * ஆலிநகர்க்கதிபதியே *. என்றவிடத்து "வாலியைக் கொன்று ஊரிலிதன்னைத் துணையாகக் கொள்ளப் பெற்றதே!" என்று ஒரு பதிப்பில் பாடமும், மற்றொரு பதிப்பில் மற்றொரு வகையான பாடமும் காண்கிறது. ஒன்றாவது பொருந்துமா என்று பாருங்கள். ஆசாரியர்கள் அமுத மொழிகளை நமக்குச் சேமநிதியாகவே இட்டருளினர். அவை நாளடைவில் பல காரணங்களால் பலவகைப்பட்ட விக்ருதிகளை அடைந்திட்டால் அவற்றையெல்லாம் ஒருவர் எடுத்துரைக்க நாம் இசைந்திடுவதா என்கிற பொறுமையுடையார் நல்ல அர்த்தங்களையும் சுத்த பாடங்களையும் அநியாயமாய் இழந்தே போகவேண்டுமெத்தனை.

பல பெரியார்கள் வெகுநாளாக ஆதரித்து ஓதிவருகிற பாடங்களை ஒருவருடைய உத்போதநத்திற்காகத் திருத்திக் கொள்ள வேண்டும்படியாக நேர்ந்துவிடுகிறதே யென்கிற வருத்தம் அல்லது வெட்கம் சில மஹான்களுக்கு இருக்கக்கூடியதே. அதற்கு நாமென் செய்வோம். பெரிய திருமொழியின் சாற்றுப் பாசுரமாகிய * குன்றமெடுத்து ஆநிரை காத்தவன் தன்னை * என்கிற ஈற்றுப் பாசுரத்தின் இரண்டாமடியை "மன்றில் மலி புகழ்" என்றே உலகமெங்கும் ஸேவித்துவருவதை நாம் காண்கிறோம். வேறுவகையான பாடம் ஒருவருடைய வாயிலும் வந்ததாக இதுவரை நாம் கண்டதில்லை; காணப்போகிறதுமில்லை. ஆனால் வழங்கிவருகிற பாடம் என்றைக்கோ தவறாக வந்துபுகுந்து உலகமெல்லாம் பரவிவிட்டது என்று தான் சொல்லித் தீர வேண்டியதாயிருக்கிறது. அப்பெரிய திருமொழியின் பதினோராம் பத்திலேயே இரண்டாவது திருமொழியின் இறுதிப் பாசுரமாகிய * வென்றி விடையுடன் * என்கிற பாட்டின் இரண்டாமடியில் "மன்றில் மலி புகழ்" என்கிற பாடம் உண்டேயன்றி மேற்குறித்த சாற்றுப் பாசுரத்தில் அது கிடையாது, பொருந்தாது. அதைப்பற்றி அண்ணஸ்வாமி (பெரிய திருமொழி) திவ்யார்த்ததீபிகையில்—(அப்பாசுரத்தினுரையில்)

"இரண்டாமடியில் 'மன்றில் புகழ்' என்ற பழைய பாடம் மறைந்து போய் 'மன்றில் மலி புகழ்' என்ற புதிய பாடமே எங்கும் பரவிநின்றாலும் அது பெரியோர்க்கு உடன்பாடன்று; இத்திருமொழியில் நேரசை முதலான பாசுரங்கள்தோறும்

acharya.org

> ஒவ்வோரடியும் ஒற்றொழித்துப் பன்னிரண்டெழுத்தும் நிரையசை முதலான பாசுரங்கள்தோறும் ஒவ்வோரடியும் ஒற்றொழித்துப் பதின்மூன்றெழுத்தும் அமைந்துள்ளன வென்பதைக் கண்டறிந்தால் இப்பாட்டில் 'மலி' என்பது அதிகப்படியான பாடமென்று எளிதிற் புலனாகும்"

என்று அழகாக நிரூபணமும் காட்டியிருக்கிறார். அதைக் கண்டவன்றோ, "ஶுஷ்கேஸ்வாந்ந தோஷ:, ஹாஜவஸ்வாந்ந தோஷ: என்றிருப்பதுபோலே பொருந்தவிடக்கூடாதா என்ன? அது தவறான பாடமென்று ஏதுக்கு எழுதவேணும்?" என்று சீறிப்பேசுகிற ஸ்வாமிகள் மிகையாகக் காணப்படுகிறார்களே யன்றி ஶுஷ்கேஸ்வ ஹாஜவஸ்வாதிகளைக் கொண்டு ஸமாதானம் பண்ணுகிற வழியைப் பெரியவாச்சான்பிள்ளை முதலான பூருவாசாரியர்களும் விட்டிட்டு இலக்கண வழியைப் பின்சென்றே பல திருத்தங்களை வியாக்கியானங்களில் காட்டியுள்ளார்களென்பதை யாராய்ந்து தெளிவு பெறுவார் சிலரே. ஸஹ்ருதயர்களும் தமிழ்ப்பண்டிதர்களுமான பல மஹான்கள் திருத்திப் பதிப்பித்திருக்கின்ற திவ்யப்ரபந்தப் பதிப்புகளிலெல்லாம் (நாம் மேற்காட்டிய விடத்தில்) மலி என்பதின்றியே 'மன்றில் புகழ்' என்ற பாடமேயுள்ள தென்பதையும் நோக்காமல், எதற்கும் மறுப்புக் கூறிக்கொண்டே யிருக்கவேணுமென்கிற நோக்குடன் எதையேனும் சொல்லிக் கொண்டிருப்பாருள்ள விடங்களில் அன்னவர்களுடைய அபிநிவேசத்திற்கும் அபிமானத்திற்கும் தகுந்தபடியே சொல்லிக்கொண்டும் எழுதிக்கொண்டும் 'ராமாயஸ்வஸ்தி, ராவணாயஸ்வஸ்தி,' என்று பேசிப் போது போக்குவாரைப்போலே யிருக்கவேண்டுமென்பது காலநிலைமைக்கு ஒத்ததாயினும், உண்மைகளை மறைத்து அடக்கிவைத்து, அபத்தங்களை யெல்லாம் ஆதரித்திருக்கமாட்டாத தன்மையே காரணமாக இவ்வுலகத்தாருடைய வருத்தத்திற்குப் பாத்திரமாகும்படி சில மஹான்களுக்கு நேர்ந்துவிடுகின்றது. இதுவுமொரு பகவத் ஸங்கல்பமே!

இங்ஙனம் —

அடியார்க்கு அடியேன்,

தி. வி. சிங்கராய தாஸன்.

acharya.org

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசக பத்ரிகை.

தொகுதி 1.	பத்ராதிபர் வடகலை இராமாநுஜாசாரியார்	பகுதி 8

ஸ்ரீரஸ்து

ஶ்ரிய:காந்தாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே ।
ய: ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ॥
வேதவேதாந்த வேதாம்போ ஸம்பூர்ணாம்ருதவர்ஷிணீ ।
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ॥

ஆனிதன்னிற் சோதிநன்னாள்.

[பெருமாள் கோவில் ப்ரதிவாதி பயங்கரம்
ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்]

இன்று மாநிலத்தில் முன் நம் பெரியாழ்வார் வந்துதித்த ஆனி தன்னிற் சோதி யென்னும் நன்னாள். நன்றிபுனை பல்லாண்டு பாடிய நம் பட்டர்பிரான் வந்துதித்த நல்லானியிற் சோதியென்று பெரியார் பெருமை பாராட்டும் நாள் இது. இந்நாளுக்குப் பெருமை பயந்த பெரியாழ்வாருடைய பெருமையை இன்று சிறிது அநுபவிப்போம்.

பெரிய ஆழ்வாரென்று இவரை எது கொண்டு கூறினார்? மற்ற ஆழ்வார்களிற் காட்டில் இவர் வயதிற் பெரியரல்லர்; பெரிய பெரிய பிரபந்தங்களை இயற்றினருமல்லர். உண்மையில், இவரினும் வயதிற் பெரியராயும் ஆயிரக்கணக்கான பாடல்களையுடைய பெரிய பிரபந்தங்களைப் பணித்தவராயுமுள்ள ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வாரைப் பெரியாழ்வாரென்னாது, விட்டுசித்தரைப் பெரியாழ்வார்

acharya.org

ரென்றது என்னே! என்னில்? இதற்கு இரண்டு ஆசார்ய சிகாமணி கள் இரண்டு வகையான காரணங்களை வெளியிட்டருளினர்.

ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் சூடிக்கொடுத்த நாச்சியார் விஷய் மாக அருளிச்செய்த கோதாஸ்துதியில்—“ 𑌤𑌾𑌤𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 𑌮𑌧𑍁𑌭𑌿𑌦𑌃 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌲𑍇𑌶𑌵𑌶𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌣𑌾𑌮𑍃𑌤𑍈𑌃 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌶𑌤𑍈𑌰𑌨𑌵𑌾𑌪𑍍𑌤𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 । 𑌤𑍍𑌵𑌨𑍍𑌮𑍌𑌳𑌿𑌗𑌨𑍍𑌧𑌸𑍁𑌭𑌗𑌾𑌮𑍁𑌪𑌹𑍃𑌤𑍍𑌯 𑌮𑌾𑌲𑌾𑌂 𑌲𑍇𑌭𑍇 𑌮𑌹𑌤𑍍𑌤𑌰𑌪𑌦𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌮𑍍 ॥ [தாதஸ்துதே மதுபித: ஸ்துதி லேஶவஶ்யாத் கர்ணாம்ருதை: ஸ்துதிஶதை: அநவாப்த பூர்வம். த்வத்புக்தமால்ய ஸுபகா முபஹ்ருத்ய மாலாம் லேபே மஹத்தர பதாநுகுணம் ப்ரஸாதம்.] என்றுள்ள ச்லோ கத்தை நோக்குமிடத்து, ஆண்டாள் சூடிக்களைந்த பூமாலையைப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்ததனாலேயே விஷ்ணுசித்தர், பெரியாழ்வார் என்கிற பட்டப் பெயரைப் பெற்றருளினார் என்று தேசிகன் திரு வுள்ளம் பற்றுவதாகப் புலப்படுகின்றது. ஆழ்வார்க்கு விசேஷண மான பெரிய என்னும் பதத்தையே மஹத்தரபத மென்று தேசிகன் குறிப்பிடுகிறா ரென்பது ஸம்ப்ரதாயம். ஆனால் அவ்விடத்திற்கு உரை யெழுதியுள்ள சில மஹான்கள் மஹத்தரபத மென்றதற்கு மிகச் சிறந்த ஸ்தானமாகிய நித்யவிபூதி யென்று பொருள் கொண் டார்கள். அங்கு தேசிகனுடைய ஹ்ருதயத்தை ஸம்பிரதாயம் வல்ல பெரியோர்கள் தெரியக்கண்டு கொள்வது.

இனி, மற்றொரு ஆசார்ய சிகாமணியின் நிர்வாஹத்தை நிரூ பிப்போம்.

“ மங்களா சாசனத்தில் மற்றுள்ள வாழ்வார்கள்
தங்கள் ஆர்வத்தளவு தானன்றிப்—பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்
பெரியாழ்வா ரென்னும் பெயர்.”

என்பது உபதேச ரத்தினமாலையில் மணவாள மாமுனிகளின் பாசுரம். மற்றுள்ள ஆழ்வார்களுக்கும் மங்களா சாஸனத்தில் ஊற்ற மிருந்தாலும் அவர்களுக்கு அது எப்போதோ ஒருகாலுள்ளதே யன்றி இப் பெரியாழ்வார்க்குப் போலே நித்யமாயும் முக்கியமாயு மிராது. அவர்கள் எம்பெருமானை ரக்ஷகனாகப்பற்றி அவனிடத்தில் தங்களுடைய வாழ்ச்சியைப் பெறுவதற்கு விரும்புவர்கள். இவ்வாழ் வார் அப்படியல்லாமல் எம்பெருமானுடைய வாழ்வையே தமக்கு

acharya.org

வாழ்வாக நினைத்துப் பெருமானுக்கு என்ன தீங்கு வருகிறதோ வென்று பயப்பட்டுக் காப்பிடத் தேடுகிற பரமபக்தராவர். ஆனது பற்றியே மற்றுள்ள ஆழ்வார்களைவிட மிக்க பெருமையை யுடையரானது காரணமாகவே இவர்க்குப் பெரியாழ்வாரென்ற பரவிருதி யுண்டாயிற்று என்பது இப்பாசுரத்தின் கருத்து இரண்டு வகையான நினைவுகளும் அழகியவே

இனி, இவ்வாழ்வார்க்கு பரத்வநிரூபகமான மங்களாசாஸனத்தைப்பற்றிச் சிறிது பேசுவோம் அவாப்த ஸமஸ்தகாமனென்றும் ஸர்வ ரக்ஷகனென்றும் ப்ரஸித்தனான ஈச்வரனைக் கண்டால் தமக்கு வேண்டிய மங்களங்களை அவனிடத்துப் ப்ரார்த்தித்துப் பெற வேண்டியிருக்க, தாம் அவனுக்கு மங்களமுண்டாகுமாறு ஆசாஸிப்பது தகுதியோ வென்னில், பகவத் கிருபையினால் கிடைத்த பக்தியினால் அந்த பகவானுடைய ஸர்வ ரக்ஷகத்வம் முதலான திருக்குணங்களை அடியோடு மறந்து ‘இப்பகவான் குறையொன்று மில்லாம விருப்பதே நமக்கு மங்களம்’ என நினைந்து மங்களாசாஸநத்தில் ஒருப்படுகின்றாராதலால், இதுபக்தி நிலைமைக்குப் பாங்காகவே அமையும்

ஜ்ஞான தசை யென்றும் ப்ரேம தசையென்றும் இரண்டு நிலைமைகள் உண்டு அவற்றுள், ஸர்வேச்வரனை ரக்ஷகனாகவும், தான் அவனாலே ரக்ஷிக்கப்படுகிறவனாகவும் ப்ரணவம் முதலியவற்றில் சொல்லுகிறபடியே தெளிவாகக் கண்டு அநுஸந்திக்கும் நிலைமை ஜ்ஞானதசையாகும் அப்போது “அண்ணா அடியேனிடரைக் களையாயே” “நெடியாய அடியேனிடர் நீக்கே” “அடியேன் வினையாயின பாற்றே” என்றாற்போன்ற பாசுரங்கள் திருவாக்கில் வெளிவரும்

இனி, ஸர்வேச்வரனுடைய ஜ்ஞான சக்திகளையெல்லாம் மறந்து அவனது ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களையே அநுஸந்தித்து ‘இப்படிப்பட்ட அழகிய திருமேனிக்கு என்ன தீங்கு விளைந்திடுமோ?’ என்று அச்சம் சங்கித்து வியாகுலப்படும் நிலைமை ப்ரேம தசையாகும் அப்போது ஈச்வரனை ரக்ஷிக்க வழி தேடித் தடுமாறுவார்கள், பல்லாண்டு, போற்றி என்று காப்பிடத் தொடங்குவார்கள்

மங்களாசாஸனம் பண்ணுகிறவர்கள் ஸர்வ ரக்ஷகனான ஈச்வரனை ரக்ஷ்யனாகவும், அவனாலே ரக்ஷிக்கப்பட வேண்டிய தங்களை

acharya.org

ரக்ஷகர்களாகவும் நினைக்க நேரிடுகிறபடியால் இந்த நினைவு விபரீத வுணர்ச்சியேயன்றோ? மயர்வற மதிநலம் பெற்றவர்களான ஆழ்வார்களுக்கு இத்தகைய விபரீதஞானம் கூடாதேயென்று சிலர் சங்கிப்பர்கள். தீவினையின் பயனாக வருகிற விபரீத ஞானம் ஹேயமே யொழிய எம்பெருமானது வைலக்ஷண்யமடியாக வருகிற விபரீத ஞானம் ஹேயமல்ல; மிக உத்தேச்யமாகவு மிருக்குமென்று நம் முதலிகள் ஸமாதான மருளுகின்றனர்.

அயர்வறு மமரர்களென்று போற்றப்பட்ட நித்யஸூரிகளுக்கும் இந்த விபரீத ஞானமுண்டு. 'ஹாவு ஹாவு ஹாவு' என்கிற ஸாமகான கோஷத்தைக் கேட்கும் திருவனந்தாழ்வான் அந்த ஸாம கோஷத்தை அஸுர ராக்ஷஸர்களின் கோலாஹலமென்று மயங்கிச் சீறி அழலை யுமிழ்கின்றானென்று திருமழிசைப்பிரான் தமது உட்கண்ணினாற் கண்டு பேசுகின்றார்:—"ஆங்காரவாரமது கேட்டு அழலுமிழும் பூங்காரரவு" என்பது அவ்வாழ்வாருடைய பாசுரம்.

பட்டரும் ஸ்ரீ குணரத்ந கோசத்தில் "ஹூஹாக்ஷ்வேடா ந ரக்ஷா வ்யஸநிஸிரஸம் ஸாஜ்ஞவக்த்ராஸிஸேவைஃ ஆநந்தைகாணவம் ஸ்ரீ ஸகுமவதி யஸவயோராஹஸாவாஸ்தாநாத்நம்—ஸ்நேஹாத் அஸ்தாந ரக்ஷாவ்ய ஸநிப்ரபயம் சார்ங்க சக்ராஸி முக்யை: ஆநந்தை கார்ணவம் ஸ்ரீ:! பகவதி யுவயோராஹ ராஸ்தாந ரத்நம்" என்கிறார். பரமபதத்தில் பஞ்சாயுதாழ்வார்களும் ப்ரேமத்தாலே கலங்கிக் காப்பிடா நிற்பர்களென்கிறது இதில்.

இவ்விபூதியிலும் ப்ரேம பரவசர்கள் பலர்க்கும் மங்களா சாஸநமே யாத்திரையாயிருக்கும்: இதற்குச் சான்றாக இதிஹாஸ புராணாதிகளிலிருந்து சில செய்திகளை யெடுத்துக் காட்டுவோம். பரிபூர்ண சக்தியுக்தன் என்கிற உணர்ச்சியும் நம்பிக்கையு மிருக்கும் போதும் ப்ரேமத்தினால் கலங்கி அஞ்சுவது உண்டு என்பதனை மூதலிக்கச் சில புராண புருஷர்களைக் காட்டுவர்கள் நம் ஆசாரியர்கள்.

இராமபிரான் பிராட்டியைத் திருமணம் புரிந்துகொண்டு மிதிலாபுரியில் நின்றும் அயோத்திக்கு மீண்டுவரும்போது பரசுராமன் என் வில் வலிகண்டு போவென் றெதிர்வந்த காலத்தில் தசரத சக்ரவர்த்தி அப்பிரானுடைய பிரபல சக்தி விசேஷங்களை முற்றும் மறந்து இளமையையும் ஸௌகுமார்யத்தையுமே பார்த்து அஞ்சிப்

acharya.org

பரசுராமனிடத்திலே அபயம் பிரார்த்தித்தான். “அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம்” என்று உறுதியாகக் கூறின விச்வாமித்ர முனிவனது உக்தியைக் கேட்டுவைத்தும், தாடகா தாடகேய நிரஸநம், அஹல்யா சாப விமோசனம், சிவதநுர்ப்பங்கம் முதலிய அரும்பெருஞ் செயல்கள் செய்தமையைக் கேட்டுவைத்தும் தயரதன் கலங்கினானென்றால் இது ப்ரேமத்தின் கனத்தினாலல்லது வேறொன்றாலன்றே.

கௌஸல்யையும் ஸ்ரீராமசந்திரனுடைய பிரபாவங்களை அறிந்திருந்தும் அவன் வநவாஸத்திற்குப் புறப்படும்போது “தத் தே பவது மங்களம்” என்று பலகாலுஞ் சொல்லி ஆசாஸித்தாள்.

ஸீதாபிராட்டியும் ஸ்ரீராமபிரானுடைய வைபவமெல்லாம் அறியுமவளாயிருக்கச் செய்தேயும் திருவபிஷேகம் பண்ணுகைக்காக ஸர்வாலங்காரங்களும் செய்துகொண்டு அவர், சக்ரவர்த்தி திருமாளிகைக்கு எழுந்தருளுகிறபோது அவரது அழகிலே தோற்று இதற்கு என் வருகிறதோவென்று ப்ரேமத்தாலே கலங்கி “𑌪𑌤𑌿𑌸𑌂𑌮𑌾𑌨𑌿𑌤𑌾 𑌸𑍀𑌤𑌾 𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌸𑌿𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌾 । 𑌆𑌦𑍍𑌵𑌾𑌰𑌮𑌨𑍁𑌵𑌵𑍍𑌰𑌾𑌜 𑌮𑌙𑍍𑌗𑌳𑌾𑌨𑍍𑌯𑌭𑌿𑌦𑌧𑍍𑌯𑍁𑌷𑍀 ॥ பதிஸம்மாநிதா ஸீதா பர்த்தாரமஸிதேக்ஷணா, ஆத்வாரமநு வவ்ராஜ மங்களாந்ய பிதத்யுஷீ.” என்று திருவாசலளவும் தான் மங்களா சாஸநம் பண்ணிக்கொண்டு பின்சென்று “பூர்வாம் திசம் வஜ்ரதர:” என்று தொடங்கி யமன் வருணன் முதலிய திக் பாலகர்களையும் இவர்க்கு ரக்ஷகராக வபேக்ஷித்தாள்.

அயோத்யா வாஸிகளான ஸகல ஜனங்களும் காலையும் மாலையும் இராமபிரானுடைய மங்களங்களை ஆசாஸித்து எல்லாத் தெய்வங்களையும் வழிபடும்படியை “𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌸𑍍𑌤𑌰𑍁𑌣𑍍𑌯𑌶𑍍𑌚 𑌸𑌾𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌤𑌃 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌾𑌃 ॥ 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌨𑌮𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌯𑌶𑌸𑍍𑌵𑌿𑌨𑌃 — ஸ்திரியோ வ்ருத்தாஸ் தருண்யஸ் ச ஸாயம் ப்ராதஸ் ஸமாஹிதா: ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யசஸ்விந:” என்ற சலோகத்தினால் தெரிவித்தார் வான்மீகிமா முனிவர்.

குஹப்பெருமாள் இராமபிரானுடைய சக்தி விசேஷங்களையும் நன்கறிந்தவர்; பரதாழ்வானுடைய பக்தியின் கனத்தையும் நன்கறிந்தவர்; அப்படியிருந்தும், நல்ல ப்ரதிபத்தியோடே வந்துகொண்டிருந்த அப்பரதாழ்வானை நோக்கி விபரீதமாகச் சங்கித்து,

acharya.org

"அஞ்சன வண்ணனென் னுயிர்நாயக னளாமே
வஞ்சனையாலர செய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சர மென்பன தீயுமிழ்கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போய்விடின் நாய்க் குகனென்றெனையோசாரோ?
ஆழ நெடுந்திரையாறு கடந்திவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
ஏழைமை வேடனிறந்தில னென்றெனை யேசாரோ?" (கம்பர்.)

என்கிறபடியே அதி ப்ரவ்ருத்திகள் செய்யப் பார்த்ததும், இவ் வண்ணமாகவே பரத்வாஜ மாமுனிவரும் "கச்சிந் ந துஷ்டோ வ்ரஜஸி ராமஸ்யாக்லிஷ்டகர்மண:—கச்சிந் ந துஷ்டோ வ்ரஜஸி ராமஸ்யாக்லிஷ்ட கர்மண:?" [பரதா! உன்னைப் பார்த்தால் எனக்கு மிகவும் அதிஶங்கை யுண்டாகிறதே; இராமனுக்கு ஏதோ தீங்கிழைக்கப் போகிறாய் போலே தோன்ற நின்றாயே; அப்படியில்லையா?" என்று கேட்டது மெல்லாம் ப்ரேமத்தின் கனத்தாலே யல்லவோ?

தண்டகாரண்ய வாஸிகளான மஹர்ஷிகளும் தங்களுடைய ஆபத்தைப் போக்கவும் அபிமதங்களைக் கொடுக்கவும் ஸ்ரீராமபிரான் எழுந்தருளி யிருக்கிறாரென்று அறிந்து வைத்தும் அதை மறந்து அவருடைய வடிவழகில் ஈடுபாட்டாலே மங்களா சாஸநம் பண்ணினார்களென்பது "தே தம் ஸோமமிவோத்யந்தம் த்ருஷ்ட்வா வை தர்மசாரிண: | மங்களாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்யக்ருஹ்ணந் த்ருடவ்ரதா: தே தம் ஸோமமிவோத்யந்தம் த்ருஷ்ட்வா வை தர்ம சாரிண: மங்களாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்ய க்ருஹ்ணந் த்ருடவ்ரதா:" என்கிற ச்லோகத்தினால் ஸ்ரீராமாயண ப்ரஸித்தம்.

ஸ்ரீ ஜடாயு மஹாராஜர் பிராட்டிக்காக இராவணனோடே பொருது குற்றுயிராய்க் கிடக்கிற தம்மைப் பெருமாள் வந்து கண்டவளவிலே ஜநஸ்தானத்திலிருந்த பதினாலாயிரம் இராக்கதப் படைகளையும் தனி வீரம் செய்து நின்று கொன்ற தோள்வலியை அறிந்திருக்கச் செய்தேயும், இனிமேல் என்னாய் விளையப் புகுகிறதோ! என்றஞ்சி ஆயுஷ்மந் என்று கூறும் முகத்தாலே மங்களா சாஸநம் பண்ணினார். [யாம் ஓஷதிமிவ ஆயுஷ்மந்! அந்வேஷஸி மஹாவநே. ஸா தேவீ மம ச ப்ராணா: ராவணேந உபயம் ஹ்ருதம்] என்றது காண்க.

acharya.org

ஸுக்ரீவமஹாராஜர் வாலிவதம் முதலியவற்றால் பெருமானுடைய நிகரற்ற சக்தியைக் கண்டிருக்கச் செய்தேயும் ஸௌகுமார்யத்தையே பார்த்துக் கலங்கி, ஸ்ரீ விபீஷணாழ்வான் நாலு பேரும் தானுமாய் வந்ததைக்கண்டு, நமக்கெல்லாம் ஓருயிரான பெருமாளை நலிந்து நம்மை யெல்லாம் முடிப்பதாக வருகிறானிவன் என்று அறுதியிட்டு முதலிகளுக்குக்காட்டி இவனைச் சித்திரவதம் பண்ண வேணுமென்றதும் இவனை யங்கீகரிக்கவே கூடாதென்று பெருமாளைக் கால் கட்டினதும ப்ரேமத்தின் பாரவசயத்தாலேயன்றோ ?

கிருஷ்ணாவதாரத்திலும் விதுரர் கண்ணபிரானுடைய ஸர்வஜ்ஞத்வம் ஸர்வசக்தியுக்தத்வம் முதலியவற்றை அறிந்திருந்தும், துர்யோதந கோஷ்டியில் கண்ணன் எழுந்தருளினபோது பொய்யாஸநமிட்டுச் சிறிது அநர்த்தம் விளைவித்த படியைக் கண்டு அஞ்சி ப்ரேமாந்தராகித் தம்முடைய திருமாளிகையில் தாமிட்ட ஆஸனத்தையும் அதிசங்கை பண்ணித் தம் கையாலே அமுக்கிப் பார்த்தாரென்பது “ஸம்ஸ்ப்ருஶ்யாஸநம் ஶௌரே: விதுரஸ் ஸ மஹாமதி: ஸம்ஸ்ப்ருசந் ஆஸநம் சௌரே: விதுரஸ் ஸ மஹாமதி:” என்ற ச்லோகத்தினால் சொல்லப்பட்டது.

எம்பெருமானாரால் திருத்திப் பணி கொள்ளப் பெற்ற பிள்ளையுறங்கா வில்லிதாஸர், நம்பெருமாள் புறப்பாட்டில் என்ன அவத்யம் விளைகின்றதோவென்று அதிசங்கைபண்ணி பிச்சுவாய் என்கிற கத்தியை உருவிப் பிடித்துக்கொண்டு கூடவே உலாவுவர் என்பது ப்ரஸித்தம். இங்ஙனே மற்றுமுள்ள இதிஹாஸங்கள் பலபல. இவர்களெல்லாரையும் அதிசயித்த பெருமேன்மை பொருந்தியவர் இப்பெரியாழ்வார். இவருடைய திருவாக்குக்களுள் திருப்பல்லாண்டுக்கு அமைந்த ஒப்புயர்வற்ற சிறப்பை

“கோதிலவாமாழ்வார்கள் கூறுகலைக் கெல்லாம் ஆதி திருப்பல்லாண்டானதுவும்—வேதத்துக்கு ஓ மென்னுமது போல் உள்ளதுக்கெல்லாம் சுருக்காய்த்தான் மங்கலமாதலால்.”

என்ற உபதேச ரத்தினமாலை கொண்டு அறிக.

மற்றுள்ள ஆழ்வார்களிற் காட்டிலும் இவ்வாழ்வார்க்கு விலக்ஷணமான ஒரு அதிசயமு முண்டு: வியாஸர் வால்மீகி முதலிய முனிவர்களின் அகக்கண்ணுக்கும் புலனாகாத பகவத் சரித்திரங்களும் இவர்க்குப் புலனாயிருக்கின்றன வென்பர். பெரியாழ்வார் திரு

acharya.org

மொழியில் (5-4-6.) "உன்னுடைய விக்கிரமம் ஒன்றொழியாமலெல்லாம், என்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழி யெழுதிக்கொண்டேன்" என்ற விடத்து வியாக்கியான மருளாநின்ற பெரிய வாச்சான் பிள்ளை—"எல்லாம் என்னுநிற்க ஒன்றொழியாமல் என்றது வ்யாஸ வால்மீகிகளுக்கு ப்ராகாசியாதவையும் இவர் தமக்கு ப்ரகாசிக்கையாலே. 'சீமாலிகன்' 'மல்லிகை மாமாலை' இத்யாதி," என்றருளிச் செய்துள்ளார்.

மஹர்ஷிகளும் மற்றுள்ள ஆழ்வார்களும் அநுஸந்திக்கப் பெறாத இரண்டு பகவச் சரித்திரங்கள் இவ்வாழ்வார் தம்மால் அநுஸந்திக்கப்பட்டிருக்கும்படியைச் சிறிது விவரிப்போம். பெரியாழ்வார் திருமொழி (2-7-8.) "சீமாலிகனவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமாறவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலை கொண்டாய்," என்பது ஒரு (அபூர்வ) க்ருஷ்ணாவதார சரித்திரம். அதாவது—மாலிகன் என்பானொருவன் கண்ணபிரானுக்கு உயிர்த் தோழனாய் அவனிடத்திற் பலவகை ஆயுதப் பயிற்சிகளையும் பெற்று ஒருவர்க்கும் அஞ்சாமல் அஹங்காரியாய் ஸாது ஜனங்களை ஹிம்ஸித்துக் கொண்டிருக்க, நண்பனாகிய இவனை நாம் கொல்வது தகாதே! என்ன செய்யலாம்' என்று வியாகுலப்பட்டு, ஒரு நாள் அவனை நோக்கி 'நீ இப்படிச் செய்வது தகாது' என்ன, ஆஸுரப்ரக்ருதியான அந்த மாலிகன் தன் வாயில் வந்தபடி பிதற்றி 'நீ எல்லா ஆயுதங்களையும் எனக்குக் கற்பித்தும் சக்ராயுதப் பயிற்சி மாத்திரம் செய்விக்கவில்லையே' என்று குறை கூற, 'இதில் பழகுவது உனக்கு முடியாது; இது எனக்கே அஸாதாரணமானது' என்ன; 'என்னால் முடியாததும் ஒன்றுண்டோ? நீ அவசியம் அதைக் கற்பிக்கவேணும்' என்று அவன் நிர்ப்பந்திக்க, கண்ணன் 'இதுதான் தக்க ஸமயம்' என்று திருவுள்ளத்திற் கொண்டு சக்கராயுதத்தை யெடுத்துத் தன் ஒற்றை விரலால் சுழற்றி மேலெறிந்து கையில் ஏற்க, 'இது எனக்கு அரிதோ?' என்று மாலிகன் சொல்ல, 'இது உனக்கு அரிதே' என்று கண்ணன் சொல்லவும் அதை அவன் கேளாமல் அச் சக்ராயுதத்தை வாங்கிச் சுழற்றி யெறிந்து பிடிப்பதாக நினைத்துத் தன் கை விரலைக் கழுத்துக்கு அடுத்து வைத்து நிற்க, அச் சக்கரம் சுழன்று வருவதற்கு இடம் போதாமையாலே அதன் வீச்சு இவன் கையிற் பிடிபடாமல் இவன் தலையை அரிந்து விட்டது என்பதாம்.

acharya.org

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனார் அயோத்தியி லிருந்த காலத்தில் பிராட்டியும் தாமுமாக இராக் காலங்களில் ஏகாந்தமான விடத்தில் உல்லாஸமாக இருக்கையில் பிரணய மிகுதியினால் பிராட்டி பெருமாளை மல்லிகை மாலையைக்கொண்டு ஒரு முஹூர்த்த காலம் கட்டிப் போட்டுவைத்திருந்தா ளென்பது (3-10-2.) "எல்லியம் போதினி திருத்த விருந்ததோரிடவகையில், மல்லிகை மாமாலை கொண்டு அங்கு ஆர்த்ததுமோ ரடையாளம்" என்ற பாசுரத்தினால் வெளியிடப்பட்ட அபூர்வமான வொரு இதிஹாஸம்.

ஆகவிப்படி வ்யாஸ வால்மீகிகளிற் காட்டிலும் மற்றுள்ள ஆழ்வார்களிற் காட்டிலும் சிறப்புற்றோங்கி விளங்கின இவ்வாழ்வார்க்கு நாம் என் செய்ய வல்லோம்? இவர் கற்பித்த மங்களா சாஸனத்தையே இவர் திறத்து நாமும் விநியோகித்து வாழ்வோமாக.

ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தம்.

[பத்ராதிபர்]

[ஏரார் வைகாசி விசாகத்தின் 134-வது பக்கத்தின் தொடர்ச்சி]

பரனாவான். ஈஶ்வரன். அவன் ஜகத்காரண பூதனாய் ஸர்வ ரக்ஷகனாய் ஸ்ரீய: பதியாய் ஸமஸ்தகல்யாண குணாத்மகனா யிருப்பான் என்று சொல்லப்பட்டது.

இப்பேர்ப்பட்ட ஸர்வேஶ்வரன் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களையும் பண்ணக்கடவனா யிருப்பன்.

அதெங்ஙனே யெனில்!, சதுர்முக ப்ரஹ்மாதிகளுக் கந்தர்யாமியாய் நின்று ஸ்ருஷ்டியைப் பண்ணா நிற்பன். அவ்வாறு ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஆத்மாக்களைத் தானே விஷ்ணு ரூபமாய் நின்று பரிபாலியா நிற்பன். ருத்ராதிகளுக் கந்தர்யாமியாய் நின்று ஸம்ஹாரத்தைப் பண்ணா நிற்பன்.

இவ்வாறு தன்னால் படைத்துப் பரிபாலிக்கப்படா நின்ற சேதனர்களைத் தானே ருத்ராதிகளுக் கந்தர்யாமியாய் நின்று ஸம்ஹாரத்தையும் செய்கிறான் என்பது, ஸர்வ ரக்ஷகனாய் தயா, வாத்ஸல்யாதி கல்யாண குணங்களையுடையவனா யிருக்கும் ஸர்வேஶ்வர

acharya.org

னுடைய ஸ்வபாவத்திற்கு ஸர்வவிதத்தாலும் பொருத்தமுடைய தன்று, என்று சங்கிக்கக்கூடும். அது சரியன்று.

ஸம்ஹரித்தலாவது, தேஹவியோகத்தைப் பண்ணுதல். அதாவது தன்னை வணங்கி உஜ்ஜீவிக்கக் கொடுத்த கரசரணாதி (கைகால் முதலான) அவயவங்களைக்கொண்டு அபதே (கெட்ட மார்க்கத்தில்) செல்லா நின்ற சேதனர்களை அவ்வாறு செல்லாமற்செய்வதற்காகவே உலகத்தில் ந்யாயாதிபதிகள் தீமை செய்யுமவர்களை விலங்கிட்டுச் சிறைச்சாலையிற் சில காலம் வைத்து தண்டிக்குமாப் போலே சேதநர்களின் ஹிதத்தையே சிந்தியாநின்ற பரமகாருணிகனான ஸர்வேஶ்வரனும் விபரீத மார்க்கத்திற்செல்ல யோக்யமான சேதனர்களின் கரசரணாதிகளை ஒழித்துச் சிலகாலம் வைத்துப் பின்னையும், நிர்ஹேதுகமான தனது பரம க்ருபையாலே கரசரணாதிகளைக் கொடாநிற்கும் ஆதலின்;ஸம்ஹாரமும் சேதனர்களின் ஹிதத்தைக் கருதியே செய்யா நிற்குமென்ற தாயிற்று.

இந்தப்ரகாரம். ஸர்வஜகத்காரண பூதனாய் ஸர்வரக்ஷகனாய் ஸ்ரீய:பதியாய் ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய் ஸ்ருஷ்டி ஸ்தித ஸம்ஹாரங்களையும் பண்ணுமவனாயிருக்கும் ஸர்வேஶ்வரன், பர வ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதார ரூபங்களால் ஐந்து ப்ரகாரமாக எழுந்தருளியிருந்து நித்யமுக்த பக்தர்கள் என்கிற த்ரிவித (மூன்றுவித) மான ஆத்மாக்களையும் ஆனந்திப்பியா நிற்பன்.

இதில் பரனாவான். த்ரிபாத் விபூதியென்கிற ஸ்ரீ வைகுண்டத்தில் அனேகமாயிரம் ரத்நஸ்தம்பங்களா லலங்கரிக்கப்பட்டு உபய விபூதியிலுமுள்ளா ரனைவரும் ஒரு மூலையிலடங்கும்படி அதி விஶாலமாய் அளவிலா வானந்தத்தை உண்டு பண்ணக் கூடிய திருமாமணி மண்டபத்தில் ஸர்வாஶ்சர்ய மயமான கோப்புடைய சீரிய சிங்காதனத்தில் பன்னிரண்டிதழ்களையுடையதாய் நாநா ஶக்தி மயமான திவ்ய கமலத்தின் கர்ணிகையில் புஷ்பங்களால் பரப்பப்பட்ட திவ்யபர்யங்கத்தில் (கட்டிலில்) அனேகமாயிரம் சந்த்ரர்களை உருக்கிவார்த்தாப் போலே குளிர்ந்த புகரையுடையனாய் "சென்றால் குடையாம்" என்கிறபடியே ஸர்வவித கைங்கர்யங்களிலும் அந்வயிக்குமவனாய் பகவதநுபவத்திற்குப் போக்கு வீடாகப்பல வாய் தலைகளையுடையனாய்,"ஆங்காரவாரமது கேட்டு" என்கிறபடி பகவத்குணாநுபவம் பண்ணாநின்ற நித்யமுக்தர்களின்

acharya.org

"ஹாவு ஹாவு ஹாவு" என்கிற ஸாமகாநத்தைக் கேட்டு ஸர்வேஶ்வரனுக்கு என்ன தீங்கு வருமோ? என்று பயசங்கை பண்ணி அக்நி ஜ்வாலையை உமிழா நின்றவனாய் ஶைத்ய மார்த்தவ ஸௌரப்யாதி குணங்களுக்குக் கொள்கலமாய் அனந்தன் என்றும் சேஷன் என்றும் சொல்லப்படுகிற திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே, "பதிம் விஶ்வஸ்ய" என்கிற ஸர்வேஶ்வரனுக்கும் தன்னுடைய ஸம்பந்தத்தால் "அப்ரமேயம்ஹி தத்தேஜ: யஸ்ய ஸா ஜநகாத்மஜா" (யாதொருவனுக்கோ ஜநககுல ஸுந்தரியான பிராட்டி அவனுடைய தேஜஸ்ஸு அப்ரமேயம்) (அளவிட வரியது) என்கிறபடி பெருமையை யுண்டுபண்ணுமவளாய் அனைத்துலகுமுடைய வரவிந்த லோசநனின் நீண்டவப் பெரியவாயகண்களையும் அல்பமாகப் பண்ணும்படியான வடிக்கோல வாணெடுங் கண்களையுடையவளாய் "பித்தர் பனிமலர் மேற்பாவைக்கு" என்கிறபடி அவனையும் மையலேற்றி மயக்கும்படியான ஸௌகுமார்யத்தையுடையளாய், போகோ போத்காத கேளியிலே பகவானுடைய விஶ்வரூபத்தையும் அல்பமாகப் பண்ணும்படியான பெருமையையுடையவளான பெரிய பிராட்டியார் வலது பக்கம் எழுந்தருளியிருக்க, அவளுக்கு நிழல்போலே யிராநின்ற பூமி நீளா தேவிகளிருவரும் இடது பக்கத்தில் ஸேவித்திருக்க, சங்க சக்ராதி திவ்யாயுதங்களா லலங்கரிக்கபபட்ட நான்கு திருக்கைகளையுடையனாய் கிரீடாதி நூபுராந்தமான அபரிமித திவ்ய பூஷணங்களால அலங்கரிக்கப்பட்டவனாய் அஸ்தாநேபய சங்கிகளான அநந்த கருட விஷ்வக் ஸேநாதிகளான நித்ஸூரிகளாலும் முக்தர்களாலும் நிரந்தரம் பரிசர்யமாண சரண நளினனாய் ஜ்ஞாந சக்த்யாதி ஆறு குணங்களையுடையனாய் "அவாகீ அநாதர:" என்கிறபடி அதி கம்பீரமான ஸ்வபாவத்தை யுடையனாய் பரவாஸுதேவாதி ஶப்தவாச்யனாய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமந்நாராயணன்.

acharya.org

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அத்யமே ஶ்லோகார்த்த தத்வப்ரதிஷ்டா கண்டனம்

[சேனங்குளம் கந்தாடை இராமாநுஜாசாரியார்]

ஸ்ரீ க்ருஷ்ண பாதபாதாப்ஜே நமாமி ஶிரஸா ஸதா
யத்ப்ரஸாதப்ரபாவேந ஸர்வஸித்திரபூந்மம ||

1. ஸர்வஜ்ஞரான ஸ்ரீ நம்பிள்ளைகள் ப்ரஸாதித் தருளும் மார்க்கத்தை அநுஸரித்து பரமோதாரரும் பரமக்ருபாளுவுமான ஸ்ரீ வடக்குத் திருவீதிப்பிள்ளை, மாறன் மறையாகிய திருவாய் மொழியில் மறைந்து கிடக்கும் மஹார்த்தங்களை மந்த மதிகளும் அறிந்து வாழும்படி ஈடு முப்பத்தாறாயிரம் எழுதிவைத்தாரென்று ஸர்வ ப்ரஸித்தம்.

2. பரம ரஹஸ்யமான அர்த்தங்களை பத்ரேக்ஷணம் பண்ணாமல் உபதேசத்தில் கேட்டுத் தெளியவேண்டி, கம்பீரமான நடையில் இவர் வ்யாக்கியானம் செய்தருளினர். இந்த ரஸமறியாதார் பல வ்யாக்கியானம் செய்துள்ளார். இவைகளை ஈ ஆடுவதோ என்று பெரியோர்களும் பேசியுள்ளார்.

3. ஸ்ரீ ராமாயண ஶ்லோகங்களை இவர் திருவுள்ளம் பற்றினல் ஸாமான்யமான அர்த்தங்களை விட்டு மற்றொருவர்க்குப் புலப் படாத உஜ்வலார்த்தங்களையே உபதேசித்தருளுவர் என்னும் வ்யாப்தியுண்டு. இவரது வார்த்தைகளை பிச்சை கொள்ளுமவர்களும் பெருமதிப்பாக ஜீவிக்கப் பெருகிறர்கள் என்பதும் குற்றமற்றது.

4. ஸ்ரீ ராமாயணம், ஸங்க்ஷேபவ்ருத்தாந்தம் ஸங்க்ஷேபாவதிதம் என்னும் ஸமாதியில், அமைக்கப்பட்டது என்பதை மாநிஷாத துடங்கி கடைசி வரையில் நிர்வஹிக்கலாம். ஆபாத ப்ரதீதியில் ஒரு அர்த்தமும் பர்யவஸானத்தில் வேறர்த்தமும் தோற்றும்.

5. உஜ்வல மாணிக்கத்தையும் மலர்ந்து மணந்த புஷ்பத்தையும் பரீக்ஷிக்குமவர்கள் பின்புறத்தை விட்டு சிலாக்யமான முகத்தையே பார்க்கவேணும். கப்யாஸம் என்னுமதுக்கு அர்த்தம்

acharya.org

கேட்ட ஸ்ரீ பாஷ்யகாரர் கண்ணீரைச்சொரிந்தார். தடாகம் என்னும் ஸ்லோகம் விசேஷணஸாரஸ்ரக வெறுக விருக்கவேணும் என்று சொன்னவர் : பரிஹாஸ்யரானார்.

6. காந்தாஸம்மித காவ்யத்தின் முகத்தை மாத்திரம் பார்த்துக் களிப்பது போதாது. உநாரஹஸ்யத்தையும் நன்குணர்ந்து ரஸிக்கவேணும்.

உத்ரபோத்காத: |

7. ராஜவித்யா ராஜகுஹ்யமித்யாதி பரமபாவனமாய் பரம குஹ்யமாய் அத்யுத்தமமான பக்தி ப்ரபத்திகளை வெளியிடவும், ஆசரிக்கவும், ஆசரிப்பித்துப் போதவுமிறே அவதார விசேஷங்கள்.

8. பரமருஷி துடங்கி பக்ஷிபர்யந்தம் பிரஸித்தமான ஶரணாகதியாகிற பரம தர்மத்தை ஆதியோடந்தமாகப் பேசவிறே ஸ்ரீராமாயணம் அவதரித்தது.

9. பலரும் தம்மிடத்தில் அனுஷ்டித்து பலம் பெற்ற இத் தர்மத்தின் ரஸ மறிவதற்காகவே கிம்ஷிக்வ்யாஜேந ஸுக்கிரீவ மஹாராஜரைச் சரணம்புக்கது ஸ்ரீ பெருமாள்.

10.. சுவுஹம் ஜீவிதம் என்னும் கயம்வந என்னும் கயிகிம்ஷிக• என்னும் கயிஜீவத்ரவிவரொ என்னும் பிரமாண மதிகளை ஆராய்ந்தால் இத் தர்மத்தைத் தவறினவர்களுக்கு ஜீவன ஹானியேயபிகைக்ஷ என்று புலப்படும். இது எல்லாருக்கும் ஸமமே. ஆகையால்தான் ஸ்உயதிஷ என்றும் தர்மாதநி கராந்த மென்னும் மஹாராஜரைச் சொன்னது.

11. இந்த ஒரநுஷ்டானம் போதா தென்று பார்த்து உள்ள படியே விபீஷணன் உபதேசிக்க ஸமுத்திர ராஜன் பக்கலிலும் இத்தர்மத்தை அனுஷ்டித்தார். அதை அவன் ஏற்காமல் உபேக்ஷிக்க தர்மாதிக்ரமணம் கண்டு சிக்ஷிக்கதுடங்கினார். இந்த ஸங்கல்பம் முன்னமேயுண்டு. திருவடிக்கு உபசரிக்குமவன் நாம் பரம ஸம்ஹ்ரமத்துடன் வர எதிர் கொள்ளாமலும் உபசாரங்களை செய்யாமலும் உ[illegible]தால் இவனை என்ன செய்வதென்று ஆலோச்னை வர மஹா ராஜருடன விபீஷணன்—குலமர்யாதையா

acharya.org

லும் அவதாரத்தாலும் இவனை ஶரணம்-செய்யத்தகுமென்று விண்ணப்பிக்க-தானுன தன்மையை யுணர்ந்து நம்மபிப்ராயமான தண்டமோவிபீஷணாபி ப்ராயமான தாரணமோ பலிக்கு மென்று, புத்தி பண்ணியாயிற்று ஶரணாகதி பண்ணிற்று. தன்னபிப்ராயமே பலித்தது, ஆயுதமெடுத்து அரண்யத்தில் புக்கது அரக்கர்களையும் அரக்கர்போல் வாரையும், தேடிப்பிடித்துத் தண்டிக்கவே' விநாஶாய ச து³ஷ்க்ருதாம் இதி.

1. நிகழ்வது யாதெனில் - ஸமுத்³ரம் இதரதி ஈக்கு பழைய பாடமே பாடமாகும். திருத்தம் வேண்டாம் - ஸமுத்³ரமிதாநீம் இப்பொழுது - ரம் - என்பதற்கு—கர்தத்ரர்தே-ஸஹிர் தார்த்தேவா-ஷஷ்டீ - ரஸகத்ரு ஸமிதிர்யாதம் – தஸ்கிமிதிரெபக்ஷாயாம் ஸாமரஸ்ய ரணம் ஸம்வாரணம் ஸாமாஸமுக ரண தாரணார்தாநஸ இதி வாக்யமுடீ இவ்வர்த்தம் ஈட்டின் வாக்கியத்தால் நன்குணரலாம். இத்தை ஸாமரஸ்ய இது என்று பிள்ளை நிஶேடுஶம் காண்க. முடித்தல்-மரணம்-கடத்தல் ஸம்வாரணம்-செய்யுமதுக்கு மேற்படவில்லை- ஸமுத்ரம்- செய்யுமது என்று ஸூகர்த்ருத்வத்தையும் காலத்தையும் சொல்லி எதிர் மறையால்-தார்டயத்தையும்—சொன்னபடி.

2. இப்பொழுது நான் செய்ய வேண்டுவது கடலை முடிக்கவோ-அல்லது-தாண்டவோ என்று ஆலோசித்து-ரஹா ஸாஹு வான ஸ்ரீராகவன் அளவிட முடியாத ரஹா தநியை-நவிஶ்ரதி என்பது அல்லாமல் திவ்யகடாக்ஷம் செய்து சாஸ்திரம் சொன்ன முறை தவறுமல் மூன்று கரணங்களாலும் தண்டனிட்டு சயனித்தார். அசேதனங்களும் எழுந்தாடவேண்டும் ஆர்த்திகண்டும் கடலுக்கு இரக்க மெழவில்லை ஒருக்ஷணம் ஒரு முஹுர்த்தம் ஒரு பகல் மூன்று நாள் பொறுத்தார். கொண்டுவா தக்காளே என்றூர் பிறகு. இதி ஸந்தர்ப்பார்த்த:

3. அசேதனங்களும் எழுந்தாடு மார்த்திகண்டும் கடலரசன் இவர் திருவுள்ளத்தில் கோபத்தை எழுப்பி-அரக்கர்களை முடிக்க நினைத்து உடம்பு சுட்டவுடன் எழுந்துவந்தான் நஜாநெநிய மதவஶ்ய என்று சொல்லும் வஞ்சன் போல் இவனும் ஒத்தான்.

acharya.org

9—ல்-ஶ்ரூஹாஸ்திரமாகப் பேசபெற்ற வ்யாபோவமெளநத்தை-அறிஞர்கள் சொல்லுவது-ஸமூலமா-நிர்மூலமா என்று விசாரித்தால். கிஷ்கிம்யா காண்டத்தில் அங்கதப் பெருமாளுடைய வ்யாமோஹ மௌநத்தைப் பேசினபடி ஏதேனும் பதங்களுண்டா?-அயோத்தியா காண்டத்தில் ஸ்ரீபரதனுடைய உபவேசனத்தை பேசினபடிதான் ஏதேனும் பதங்களுண்டா? - அப்படி இல்லாமலிருக்க-எங்ஙனே சொல்லுவது. பட்டினிவிட்டு விட்டுக் கிடந்ததைப்பற்றி பாட்டிகள் சொல்லும் கதை வ்யாமோபவேசம்.

10. முதல்முதல்-வ்யதிஜநாஹாநிர்|| ஸக்ருமேவடி வெடுத்துப் பொய்யே அறியாத பெருமாள்-தான் முடிய நினைத்துக்கடலை முடிக்க நினைத்தால் தான் கள்ளனாகுவர் - அப்பக்ஷத்தில் தான் அபசாரம் நேரிடும.

11. ஆர்ஜவகுணத்தால்தான் முதலுபாயமான ஸாமத்தில் புகுந்தது. மூன்று நாளும் அவை பலியாமையால் தான் பேதங்கள் கூடாமையால்-தாமோபாயத்தில் நின்றது. ஸௌலபயம் பலியாவிடத்து பரத்வம் அழகியது. 12-14-வரை-வொக்ஷ்) வரிஹாரம் மந்தம்-சிறிது திருவுள்ளம்-சென்றது என்பது வழு-வழு. யஜுவிஷூகாம் ஹந்ராம் என்பது ஸ்ரீராமாயணம்.

15. இது விருத்தஹேது. வி்யவயஸ்யனை ஸுக்ரீவன் தூங்கினல்-அவனைக் கால் கட்டினவர் பிந்தித்தான் எப்படி கோபிக்கத் தகும்-தான் முடியவே தகும். இதனல் தர்மம் தவறினவர்கள்-தானுக்வுமாம் சூஶ்ரூதாரகவுமாம்-விரோதிகளாகவுமாம் விசேஷமில்லை. தண்டனைக்குள்ளாவாரென்றே சித்தாந்தம். இந்நினைவு எப்போது முண்டு.

16-26-வரை அஸ்தானே ஸம்ப்ரம: 27- பெருமாளுக்கு எப்போதும் தெைந்ரம் கிடையாது. ப்ரொஷாத்தநாயகராகையால்-பிரதிஜ்ஞையில் தன்னை முடித்து கொள்வதாகப் பேசுவது காபுருஷ வார்த்தை-ஸாாஜம் எனபது ராவணுபிப்பிராயம் - ஸாராவண மென்பது பெருமாளபிப்பிராயம், ஜஜாண மென்பது அஸாரம்.

28. ஶங்கா ஸமாதானம் மந்தம்.

29. விகல்பங்களில் கோடித்வயங்கள் விஷமங்களாயிருக்கவேண்டு மென்பது ஶாஸ்த்ர ஸரணி-இங்கு விஷமம் இன்ன

தென்று தெரியவில்லை-விரோதம் விவக்ஷிதமானால் – உஜ்ஜீவ-யதி – ஸஞ்ஜீவயதி – யாசேத் – யஜ்ஞேவர்த்தயதி என்னுமிடத்தில் விரோதம் காணப்படவில்லையே-விகல்பமெப்படி விரோதம் எப்படி-உபபாதனம் வேண்டும்.

30. கோடித்வயங்களாவன- ஸமுத்ரராஜனை ஜீவனத்துடன் வைத்து. ஜலாவாதக நாசகமான ஸேதுபந்தம் பண்ணிக்கடப்பதும்-ஜீவனத்தைப் போக்கி ஸேதுபந்தம் பண்ணாமல் தரையில் நடப்பதும் இவை பரஸ்பர விருத்தமே,

31. சரணத்வம் சரணாயத்வம் தரணத்வம் தரணாயத்வம் | வ்யக்தேர்ஜ்ஞப்த்யா விகல்ப ஸம்பவம்

32-37. ந்யாய விசாரம் ஸுஸ்பஷ்டம் ||

38. கேசித் பக்ஷமே ஸமீசீநம்

39. ஜீயாது அகர்மகமானாலும் மாரணம் ஸ்வார்த்தமாகையால் அதற்கு கர்மா ஸமுத்திரம் ப்ரபாரணார்த்த ஜலத்ராதி வ்யாபாரஸ்ய க்ருதி: ப்ரேரணம் ஹாரதஸ்ய என்னுமிடத்தில் ஹிணாயத்வம் த்ரஷ்டம். வேறு ப்ராயும் காட்டலாம்.

40. ஸ்யாஹாரமும் லக்ஷணாதிகளுமில்லாமல் வாக்கியார்த்தம் முன் எழுதினபடியால் யதாச்ருதத்தில் எஞ்ஞான்றும் எங்கும் நிறைந்து நின்ற மெய்ஞ்ஞானச் சோதிக்குத் தான் குறை கூறப்படும்.

41. ஸ்ரீ ராகவன் புத்திமான் நிதிமான் ஜ்ஞாந ஸம்பந்நன் சால பீரு பஸீ—பாம்பு கண்டு கோலெடுப்பவரல்ல. ஏற்கனவே கோலெடுத்தவர். ரஸ விசேஷம் தோற்ற க்ரமம் மாறுவதும் நம்பிள்ளைக்கு ஆவச்யகமே.

42. கீழும் மேலும் கூட்டி நினைத்தால் இதுவே ஒருபடி பொருந்தும். சரணாகதி செய்யுமவர் அர்ஜுனன் போலவும் விபீஷணன் போலவும், ஆழ்வார் போலவும் பற்றவடுச்சும் நான் முடிவன் என்றுதான் ஏன் பற்றவேணும்.

43. மளிச்சுக்கு சேரதானைப் பிடித்தார். வீரத்துக்கு சேரதனுவைப் பிடிக்கவும் நினைவுண்டு.

acharya.org

44. விநாஸாயச என்று அவதாரத்துக்கு முன்னமே ஸங்கல்பமுண்டு. அது விஸிஷ்டு இங்கு இவனிரங்காவிட்டால் முடிப்போம் என்று உதித்தது. இது வஜ்ர லிகிதம்.

45. 63 வரை சாகா ஸம்க்ரமணம்|| 61 வ்ரஜாமியோசமேவமெமேன்றொரு ஊசிகொண்டு மலை துளைக்க வ்யத்நம். சுஷ்டு என்று அர்த்தம் கொண்டால் ஏன் மூன்று நாள் கழித்து எழுந்திருக்க வேண்டும். இப்பொழுது என்று கொண்டால் விவக்ஷித காலமென்று தோற்றும். அது மூன்று நாளைக்கு அவகாசம் பெறும்.

65. ஸ்ரீ பெரியவாசசாள பிள்ளை உபந்யாஸம்.

70. வரை மிகவும் ரூதபத்திரமா யிருக்கிறது. மிகவும் ஸங்கடம். 71. மத்ஸ்தாரோதுல குலம் என்பதிற்கு ஸ்ரீஹாஷ்யகாரர் அர்த்தமிட்டதுபோல் இங்கும் கவிழ்ந்த ரத்நத்தை கலிஜிசு நேரே வைத்தார். காளிதாஸன் சுன்னம் அதிகம் என்பதுபோல் ஸஹ்ருதயர்க்கு வஜூவிதாநம் அன்றோ.

72–73. குருதக்ஷிணை கொடுப்பதும் வழக்கமே.

74–78. சுவ்ரஸதவிஸ்தாரம்.

79. ஸ்வஸித்தாம்தம் காம்தரோதீயம் வஸ்து இதி ||

80. உமெது ஈசுவிஷ்டு என்றே நம பிள்ளைக்கு திருவுள்ளம். 81–83. அதிவாதங்கள்.

84. ஸ்வஸிஜாம்தம் மிக்க வழகியது. இங்கு பிரதிஜ்ஞாஸாரூப்யம் கேட்கலாம். கடலைக் கால்பிடித்துக் கடக்க கேட்கிறோம். ஸம்மதித்தால் உயிருடன் வைத்து நோக்குகிறோம் இல்லையாகில் முடித்து தரையில் நடக்கிறோம். அதுபோல் ஆழ்வார் திருவுள்ளத்தில் நிர்ஹேதுகமாக புகுந்து நித்யானுபவம் பண்ணச் செய்கிறோம். அதுக்கு இசைந்து தானும் கில்லான் என்னும்படி மனஸை வைத்து மேல்மேலன த்ருஷ்ணையை ஆணையிட்டு வளர்க்கும்படி வளர்த்து பூர்ணானுபவம் பண்ணினுறுகில் "ஸந்தமேநம்" என்கிறபடியே வாழ்விக்கிறோம். இல்லையாகில் அஸஜேவ என்னும்படி நம்மைப் பிரித்து நின்னலாவி லேன்காண் என்னும்படி முடியச் செய்கிறோம். மாயும் வகையறியேன் பணிகண்டாய் உத்ராதி மாறி மாறி என்று கீழாக்கினவன் மேல்செய்யமாட்டான் என்பதில்லை. களபிஷேஸதி என்பது நோக்கத்தக்கது.

85. ஊசிமேல் ஸூாஸி. அதுமேல் மஜம். தஜஸவமேராஃ ||
இதி ஸுஸீநாநிர்வாஹ: |

86. ஸ்ரீ பேரவிஷ ராஜீயவ்யாக்யாஸக்தி: யதா ஸூத்ர தவாதிநாம ஸுலபமாக அர்த்தம் கொள்ளலாம். ஸந்தர்ப்ப பர்யாலோசநாகிஜயம்

5

87-91. தமிழர்கள் ஸிஜாம்தம் ஸோபகாநபிமதமாகலாம்

91. பெரியோர்கள் ஆண்டவிஷயம் - பக்தி பரவசர்கள் ஆழ்வார்கள். ஜ்ஞாநாதிக்யமுடையவர்கள் - ஆசாரியார்கள் - யதார்த்தில் கூடா தென்று திருவுள்ளம்.

93. வ்யாக்யாநிகர்கள் ஸரணியிதுவே

94. அச்சுப் பிழையை பெரிதாகப் பேசுவது உசிதமல்ல

95. நஹி நஹி ஜாநாஸி ஜாதுஷீமஹீஷீ

96. ஆசாரியர்கள் கேட்டே அறிவதற்காக-லலிதமான வழியல்லாமல், ஸங்கேதமாக வ்யவஹரிப்பதுமுண்டு. அவ்வண்ணம் ஜ்ஞாநவதார்த்திகளின் உதாஹ்ருதி அவ்வண்ணம். அம்மை என்பது குறைத்தலாய்- அசசெரி என்று சொலலவேண்டிற்று. அதை மஹா முனிகளும் திருவுள்ளமபற்றி ஆய்ச் சேரியென்று வ்யாக்யானித்தார் அல்லது. வ்யக்தபாடத்தைபிடித்தல்ல

97. தென்மொழியில் தான் பிரஸங்கமென்றிருந்தோம் கண்டது வடமொழியிலும்; கண்டதே பாண்டித்யம் உத்கட ஏகதா கோடிச ஸம்ஶயஸ்ஸம்ஹாவநா என்று ஸம்க்ரஹத்தில் படித்தது. ஈட்டிலும ஸம்ஹாவனையில்லை என்று வ்யாக்யானம். இரானெனில் யானேட்டுவேனென- எனில் என்கையால் விட ஸம்ஹாவனையில்லை. என்றபடி-என்றது ஸ்ரீஸாஷ்ய ஞாபகம் ஸம்ஹாவநாதிகா ஶங்கா. ஸம்ஹாவ ஸஹாவயோ: நவிஶேஷ: |

98. பெரியோர்கள் வார்த்தையும் இதுவே தான்.

99. அச்சுப்பிழை.

100. அரும்பத உரைகள் ஸ்பஷ்டமாக கூறியிருக்க ஸம்ஶய நிஶ்சயங்கள் ஆஶ்சர்யமே.

101-104. நவகம்பளோயம் தேவதத்த: என்றால். நாஸ்ய நவகம்பளாநிஸந்தி குதோ நவகம்பளா: எனனுமாப்போலே.

105. ஆசார்யர்களிடமும் ஸஹ தீயர்களிடமும் பரிதாபமும் நிவேதநமும் கொள்ளை கொள்ளுமவர்கள் பாபஹரமான பகவத்பாகவத நாமங்களிருக்க அநபேக்ஷமான வைதீக பில என்னும்போல தேசீய நாமங்களைச் சில மஹான்கள் திருத்திக்கொண்டது போல திருத்த ப்ராப்தம்.

126. ஹடாத் க்ருஷ்டநாம என்பதிற்கு விஷயமாகாமல்-யுக்தியுக்தம் என்பதிற்கு |விஷயமாய்-யதாயதம் ஶாஸ்த்ரமேவ வாத் என்று சில எழுதப்பட்டது ஸஹ்ருதயர்க்கு விஸ்தாரம் வேணடுவதில்லை-ஸம்க்ரஹேணலம்.

ஸ்ரீக்ருஷ்ணவாத வாதாஸ்ஞ ஶேகரம் நி தேவிணா

ராமாநுஜாய தாஸேந ரசிதேயம் விஜாவந்தரா ||

acharya.org

அத்யமே ஶ்லோகார்த்தவிசார :

[பத்ராதிபர்]

இந்த அத்யமே ஸ்லோககார்த்த விஷயமாய் ஸ்ரீ வைஷ்ணவர்க ளிடையே இரண்டு விதமான கக்ஷிகள் ஏற்பட்டு அதன் மூலமாய் அனேகம் பெரியோர்களுக்கு வருத்தமும் விரோதமு மேற்பட்டிருக் கின்றன. ஆதலின் |இது விஷயமாய அதிவிசாலமான புத்தியை யுடைய பெரியோர்கள் ஆராய்ச்சி செய்யவேண்டியது ஆவஶ்யகமே.

மேலும் நமது ஸம்ப்ரதாயத்தில். ஆளவந்தாரருளிச செய்வர். பட்டர் பணிப்பர். அபியுக்தாருளிச் செய்வர். என்று பல அபிப்ராய பேதங்கள் காணப்படுகின்றமையால், அவ்வாறே இவ்விடத்திலும் அபிப்ராய பேதமுள்ளதாகக் கொண்டும் ஸமாதானமடையலாம்.

எவ்விதத்திலும் நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தில் ஒருவர்க் கொருவர் வருத்தமடைவதற்கு எள்ளளவும் அவகாசமில்லை. இவ் வாறு வருத்தமன்றியில் அவரவர்களுக்குத் தோன்றும் விஷயங்களை வெளியிடுவதும் உசிதமே. அவ்வாறு வெளியிடும் காலத்தில் ஒருவர்க் கொருவர் வீணாக வருத்தமடைவது மாத்திரம் மிகவும் வருந்தத் தக்கது.

இதுநிற்க இது விஷயமாய் அறிவிற் சிறிய வடியேன் சில விஷ யங்களை எழுதுவது உசித மனறுறாலும். ஊராமிலைக்கக்குருட்டா மிலைக்குமாப்போலவே அடியேனுக்குத் தோன்றிய சில விஷயங்களை வைகாசி விசாகத்தில் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். அப்பால் சில பெரியோர்களுடன் இது விஷயமாய்ச் சர்சசை நிகழ்ந்த காலத் தில் ப்ரஸ்துதங்களான சிலவிஷயங்களை இங்கு தெரிவித்துக் கொள் கிறேன்.

இத்தை முடித்தல் கடத்தல் என்று ஈட்டுப் பங்க்தியிருப்பதா லும் அதற்கநுகுணமாக அரும்பதவுரை காணப்படுவதாலும் கோவிந்தராஜர் "அத்யமே தரணம் ஸாகரஸ்யமரணம்" என்று அந்வயித்திருப்பதாலும் நான் கடலைக் கடப்பேன் அல்லது கடலை முடிப்பேன் என்று சொல்லுவதே பூர்வாசார்யர்கள் திருவுள்ள மென்கிறது ஒரு பக்ஷம்.

இற்றை முடிதல் என்பது இத்தை முடித்தல் என்று தவறி யிருப்பதாகவும். கோவிந்தராஜர் இற்றைமுடிதல் என்பதையடி யொற்றியே "அத்யமே தரணம் ஸாகரஸ்ய, மரணம் வா" என்றே அந்வயித்திருக்கின்றமையாலும், அரும்பத உரை சிற்சில விடங்க ளில் தவறுதலாகக் காணப்படுவதாக ஸம்ப்ரதாய வ்ருத்தர்கள் நிர்வ ஹித்துப் போருகின்றமையால் இவ்விடத்திலும் அவ்வாறே இருக் கக்கூடுமென்றும் யாநெட்டி யென்னுள் என்கிற பாசுர வ்யாக் யாநத்தில் இதை யெடுத்து உதாஹரித்திருக்கின்ற ப்ரகாரணத்திற்

acharya.org

கிவ்வர்த்தம் பொருந்தாதாகையாலும், ஶரணாகதி பண்ணும்போதே அவனைக் கொல்லவும் நினைத்தான் என்பது பொருந்தாததோடு பெருமாள் ஸ்வபாவத்திற்கும் பொருந்தாது. ஆகையால் "இத்தை முடித்தல்" என்றது அச்சுப்பிழை "இற்றை முடிதல்" என்பதே நம் பிள்ளை திருவுள்ளம். அதாவது 'இன்று நான் கடலைக் கடப்பேன் இல்லாவிடில் முடிவேன்' என்பது ஒருபக்ஷம்'

இதுவிஷயமான விவாதங்கள் வைகாசி விசாகத்திலும் ஸ்ரீ. அண்ணங்கராசாரியா ரநுக்ரஹித்த தத்வ ப்ரதிஷ்டையிலும் விசேஷமாக எழுதப்பட்டிருப்பதால் அவைகளைவிட்டு அங்கு காணப்படாத சில விஷயங்களை இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்யமே மரணம் வா இத்யாதிக்கு இத்தை முடித்தல் கடத்தல் என்பதாக வ்யாக்யாந மிருந்திருக்க முடியாதென்பதை விவேகிகள் எளிதி லுணருமாறு ஒரு சிறு விஷயம இங்கு தெரிவிக்கப் படுகிறது. மேலே "ஸாகரம் ஶோஷயிஷ்யாமி" முதலான ப்ரதிஜ்ஞைக்குச் சேரவே முன்னம் ஸமுத்ர மாரணம் மனதால் நினைக்கப் பட்டது என்பதாகவே பலரும் சொல்லி வருகிறார்கள். "ஸாகரோச் சோஷணே ந வா" என்பது 19வது ஸர்க்கத்திலேயே ப்ரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. அங்கு ப்ரஸ்துதமான விஷயமே "அத்யமே மரணம்" என்பதில் மனதால் ஸங்கல்பிக்கப்பட்டு அப்பால் "ஸாகரம் ஶோஷயிஷ்யாமி' என்று காரியத்திலும் காட்டப் பட்டதாக வருளிச்செய்கிறார்கள். இவ்விடத்தில் விவேகிகள் விமர்சிக்கவேண்டிய விஷயம் ஒன்றே! மரணமென்பதும் ஸாகர ஶோஷணம் என்பதும் பர்யாயமாகுமா? என்பது.

நன்கு ஆராய்வோமாகில் இவை பர்யாய மாகாது. ஶோஷணம் நீரை வற்றச் செய்தல் மரணம் ப்ராணவிமோசநம், ஸமுத்ரத்திற்காவது ஸமுத்ர தேவதைக்காவது ப்ராண விமோசநமென்கிற வார்த்தை உதிக்க அவகாஶமே கிடையாது. ஸாகர ஶோஷணத்தையே தேவதையினுடைய மரணமென்போமாகில் அது எப்படிப் பொருந்தும். நாம் நமது கிணற்று நீரையோ மற்றும் ஏரிதடாகங்களின் நீரையோ வற்ற வடித்து நமக்கு ஆகவேண்டிய காரியங்களை நிறைவேற்றிக் கொண்டால் இது வருண தேவதையை மரணம் செய்வித்ததாக ஆகுமோ? சரணாகதி செய்தது வருண தேவதையைக் குறித்து அவன் முகங்காட்டா விட்டவாறே பெருமாள், அவனை அவன்கிடக்கட்டும் கடலை வற்றுவித்து நாம் அக்கரை செல்வோம என நினைத்து ஸாகரஸலில ஶோஷணத்திலே ஒருப்பட்டார். அதுகண்டகடற்கரையன் அந்தோ! நமது ஸொத்து பாழாய்ப்போகுமே யென்று பதறி வந்து முகங் காட்டி அணைகட்ட அநுகூலனானான்.

இதனால் "ஸாகரோச்சோஷணே ந வா" என்ற விடத்திலும் "ஸாகரம் ஶோஷயிஷ்யாமி" என்றவிடத்திலும் கடல் நீரை

acharya.org

சோஷித்தாவது—என்றும் கடல் நீரை சோஷிப்பேன், என்று அர்த்தமாகுமே யல்லாமல் ஸமுத்ர மாரண மென்பதான வார்த்தைக்கு உதயமே கிடையாது. இவ்வாறிருக்க முன்னுக்கும் பின்னுக்கும் 'பொருந்தவே இத்தை முடித்தல் என்று வ்யாக்யாதம்' என்கிறவாதம் எவ்வாறு பொருந்தும்.

தண்ணீர் வருண தேவதையின் சரீரமாதலால் அதை வற்றச் செய்வதே தேவதையின் மரணம் என்று சொல்லுவதும் பொருந்தாது. உலகத்தில் ஏதேனும் ஒரு ஜலாஶயத்தை வற்றச்செய்தாலும் வருண மாரணம் வந்து விட்டதாகச் சொல்ல வேண்டிவரும்.

தவிரவும் உலகமெல்லாம் எம்பெருமானுடைய ஶரீரமே யாதலால் சிலசேதனு சேதனங்களுக்கு நேரும் விநாஶமும் பகவந்மரணம் என்ன வேண்டிவரும். வருணனும் ஸ்ரீ ராமபிரானுக்கு ஶரீரபூத னென்பது வேதாந்த ஸித்தமாதலால் இங்குச்சொல்லும் வருணனுடைய மரணமும் ஸ்ரீ ராமனுடைய மரணமாகவே முடிகிற தென்று சொல்லவும் நேரும். ஆதலால் இத்தை முடித்தல்- என்பது இற்றை முடிதல் என்றே இருந்திருக்கவேண்டு மென்பதே சில பெரியோர்கள் திருவுள்ளமாகக் காணப்படுகிறது.

இன்னமும் திருவிருத்தத்தில் "இறையோ விரக்கினும்" என்கிற பாசுரத்தின் வியாக்கியானத்தில் "தனக்கு ஶரணமென்றால் இரங்குமதன்றே; தனக்கு மரணமானு லிரங்கு மதிறே" என்று பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய் திருக்கையாலே [ஸாகரத்திற்கு மரணம்] என்கிற அர்த்தம் அவர் திருவுள்ளத்தில் உள்ளதாகப் புலப்படுகின்றதே யென்று சில ஸ்வாமிகள் ஸாதிக்கிறார்கள். இதைப்பற்றி தத்வப்ரதிஷ்டையில் அண்ணுஸ்வாமி விரிவாக ஸமாதானமு ஸாதித்திருந்தாலும் அடியேனுடைய சிற்றறிவிற்குத் தோற்றுகிற ஸமாதானத்தை இங்கு விண்ணபிக்கிறேன். மேற்குறித்த வாக்கியம் ஸ்ரீராமாயணத்தில் ஸமுத்ரசரணாகதிப் ப்ரகரண விஷயம் என்று நினைப்பதற்கும் ப்ரஸக்தியில்லையே. அந்த ஸ்ரீஸூக்தியிருக்கிற ஸந்நிவேசத்தைச் சிறிது உற்று நோக்கினுல் இதை எளிதில் அறியலாம். அவ்விடத்தில் மூன்று வாக்கியங்கள் உள்ளன :—

1. "இதுதான் ஶரணமென்றால் இரங்கு மதன்றிக்கே அம்புக்கு முகங்காட்டுமதிறே.

2. அது ஆர்த்திக்கு இரங்குமதல்லவே, அம்புக்கு இரங்குமதிறே; 3. தனக்கு ஶரண மென்றால் இரங்குமதன்றே; மரணமானல் இரங்குமதிறே." என்பன அங்குள்ள மூன்று வாக்கியங்கள். இவற்றுள் முதல்வாக்கியத்தினுல் அநுஸந்திக்க செய்யபட்ட அர்த்தமே சிறிது விவரண ரூபமாக முந்பேதே

இரண்டாம் வாக்கியத்தினால் அருளிச் செய்யப்பட்டது. அந்த அர்த்தமே மூன்றாம் வாக்கியத்தினாலுமருளிச் செய்யப்பட்டதென்கை அழகியதாகுமோ? வாக்கியமும் அதற்கு இணங்கினதாக இல்லையே. "தனக்கு ஶரணமெனறால்" என்பதில், தனக்கு என்றது யாரைச் சுட்டுகிறது. ஸாகரத்தைச் சுட்டுகிறது என்று பிறர் சொல்ல வேண்டும். அப்படியானால் ஸாகரத்திற்கு ஶரணம் என்கிற விந்த வாசகம் அர்த்தமற்றதாகும். ஸாகரத்தை ஶரணமென்று பெருமாள் கொண்டாரேயல்லது ஸாகரத்திறகுத் தான் ஶரணமென்று சொல்லியிருக்கவில்லையே. அன்றியும் "தனக்கு மரணமானால் இரங்குமதிறே" என்பதும் பிறருடைய அபிப்ராயப்படிக்கு அநுவயிக்கவே மாட்டாது. [மரணமனால்—ஸாகரத்திற்கு மரணமானால்] என்று கொண்டால், மரணமான பிறகு இரங்குவதற்கு என்ன ப்ரஸக்தி?

ஶரணமென்றால் என்றது போலே மரணமென்றால் என்று பங்கதி யிருந்திருக்குமானால் ஒருவாறு பிறரது அபிப்பிராயம் பொருந்தலாம். பங்க்தி அப்படியில்லையே. மரணமானால் என்றிருப்பதை உற்று நோக்க வேணும். அதற்கு அடுத்தபடியாக முகங்காட்டு மதிறே என்றிராமல் இரங்குமதிறே என்றிருப்பதும் முக்கியமாக நோக்கத்தக்கது. ஆதலால் அது பொருளன்று. அந்த மூன்றாவது வாக்கியம் ராமாயண ப்ரகரணத்தை நோக்கியதேயன்று. தனக்கு என்றது பராங்குச நாயகி தனக்கு என்றபடி.

இக் கடலை இத் தலைமகள் இப்போது ஶரணமென்று வணங்கியிருக்கிறாள்; இப்போது இது இரங்கிற்றில்லை; "ஈங்கிவள் தன் நிறையோ இனியுன் திருவருளாலன்றிச் சாப்பரிதால் முறையோ" என்றபடி இவள் முடியும்படியான நிலைமையில் உளளாதலால் அந்த நிலைமை இவளுக்கு நேர்ந்தபிறகு 'அந்தோ! முன்னமே முகங் காட்டாதொழிந்தோமே!' என்று பிறகு இரங்குமபோலும் என்பதாகவே இங்குக் கருத்துத் தோன்றுகின்றது. இக் கருத்தில், தனக்கு என்று இரண்டிடத்திலுமுள்ளது தலைமகளையே சுட்டுதலால் வைரூப்யமில்லாமல் பொருந்திவிடுகிறது. இங்ஙனம் ஸ்ரீஸூக்தி தாத்பரியம் அடியேனுடைய சிற்றறிவில் தோன்றியதை விஜ்ஞாபித்தேன். பெரியார் ஆழ்ந்து நிரூபித்து யுக்தமாக எது தெரிவித்தருளினாலும் சிரஸா வஹிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் பிடித்ததையே சாதிக்கவேணுமென்கிற ஆக்ரஹம் சிறிதுமுடையேனல்லேன். "நம் பெரியோமல்லோம் நாம் நன்றும் தீதும் நமக்குரைப்பாருளரென்று நாடுவோமே."

acharya.org

வர்த்தமானம்.

திருவாடிப்பூரமஹோத்ஸவம்.

[பத்ராதிபர்.]

அடுத்த மாதம் ஆடி மாதம். ஆடிதனிற் பூரத்தில் நமது வைஜயந்தீ பத்ரிகையின் 9 வது ஸஞ்சிகை வெளிவரப் போகின்றமையால் அத்திருவாடிப் பூரத்தில் ஆண்டாளின் பெருமையைப் பற்றி யதோசிதம் ப்ரசுரிக்கப்படும். அத்திருவாடிப் பூர உத்ஸவம் ஆனியிலேயே ஆரம்பிக்கப்படுவதால் ஆனி தன்னிற்சோதி நன்னாளிலேயே அவ்வுத்ஸவம் நடைபெறும் ப்ரகாரத்தை யனைவருமறியுமாறு அடியேனறிந்தபடி தெரிவித்துக்கொள்கிறேன். ஷை உத்ஸவம் ஸ்ரீமான் ஆ. வா. பெ. பெரிய வாலகுரு வாரேட்டியாரவர்களின் ஆதரவில் அதிவிமர்சையாய் நடைபெறும.

அநேகம் வித்வான்களின் உபந்யாஸங்களும், சங்கீதக் கச்சேரிகளும், மேளக்கச்சேரிகளும் நடைபெறும். மத்யானத்தில் ஸன்னிதியில் விசேஷமாய் ததீயாராதநம் நடைபெறும். இரவு ஆங்காங்கு அநேகம் பேர்களின் உதவியிலேற்படும் த்ரவ்ய ஸஹாயத்தைக் கொண்டு ததீயாராதனம் நடைபெறுவது வழக்கம்.

12-7-36 ஆனி 29-ல் அங்குரார்ப்பணம் புறப்பாடு

13-7-36 ,, 30 மாலை ஸேனை முதலியார்

14-7-36 ,, 31 காலை த்வஜாரோஹணம்
,, மாலை 16-வண்டிச சப்பரம்

15-7-36 ,, 32 காலை தங்கப்பல்லக்கு தந்தப்பல்லக்கு
இரவு சந்த்ரப்ரபை ஸிம்மவாஹநம்

16-7-36 ஆடி 1. காலை தங்க, தந்தப்பல்லக்குகள்
இரவு-தந்த நாற்காலி சிறிய திருவடி

17-7-36 ,, 2-காலை பல்லக்குகள்.
இரவு சேஷவாஹநம் கோவர்த்தநகிரி

18-7-36 ,, 3-இன்று ஐந்தாவது உத்ஸவம் இவ்வுத்ஸவத்தை கண்ணாரக்கண்டு ஸேவித்தனுபவிக்க வேண்டுமேயலலாமல் எழுதவும் பேசவும் இயலாது.

காலை வடபத்ரஸாயீ. 1. திருவேங்கட முடையான். 2 சுந்தரராஜன். 3. திருத்தண்காலப்பன். 4. ஆண்டாளுடன் ரங்கமன்னார் (5) ஆக இவ்வைந்து திருநாமங்களும் பெரிய கொட்டகையில் எழுந்தருள, பெரியாழ்வார் தந்தத் தோளுக்கினியானி

acharya.org

லெழுந்தருளி மங்களாசாசநம் பண்ணும் வைகரியையும் அப்போது அவ்விடத்தி லெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டிகளின பெருமையையும் பார்த்தனுபவிக்கப் பதினுயிரம் கண்கள் வேண்டும். ராத்திரி ஐந்து திருநாமங்களும் ஐந்து பெரிய திருவடியின்பேரிலும் ஆண்டாள் பெரிய ஹம்ஸ வாஹனத்திலும் பெரியாழ்வார் சிறிய ஹம்ஸவாஹநத்தின் பேரிலுமாக வீதி எழுந்தருளும் ஸேவை வாசா மகோசரம்.

19-7-36 ஆடி 4 காலை பல்லக்கு இரவு தண்டியல் ஆனைவாஹநம்

20-7-36 ஆடி 5 காலை தோளுக்கினியான் மாலை ஸ்ரீ கிருஷ்ணன் ஸன்னிதியில் ஶயநத்திருக்கோலம்

ஜநககுல ஸுந்தரியான ஸீதாப்பிராட்டியின் மடிமீது ரகுகுல திலகனை பெருமாள் ஶயநித்துக்கொண்டிருந்தவன்று அவ்வழகை அநுபவிக்கப்பெறுத அஸ்மதாதிகளை இன்று அநுபவிப்பிப்பதற் கென்றே இத் திருக்கோலம் பூண்டதென்று சொல்லலாம். இரவு கண்ணாடிச் சப்பரத்தில் கண்டார் கண்கள் களிக்குமாறு எழுந்தருளி ஸேவை ஸாதிப்பர்கள்.

21-7-36 ஆடி 6 காலை பல்லக்கு

இரவு தங்க வட்டவணையில் ஆண்டாளும் மன்னார் சுதிரை நம்பிரான்மேலிலு மெழுந்தருளி வடக்கு ரதவீதியில் வையாளி ஸேவை ஸாதித்து திருத்தேரைக் கடாக்ஷித்து எழுந்தருள்வர் 22-7-36 ஆடி 7 இன்றே நமக்காக ஆண்டாளவதரித்த திருவாடிப்பூரம். காலையில் திருத்தேருக்கு எழுந்தருள்வர்கள். இந்தத் திருத்தேர் மிகவும் பெரியது. இந்தமாதிரியான திருத்தேர் மற்றெங்கும் கண்டிருக்க முடியாது. இனிமேலும் காணவும் நேராது. இத் திருத்தேர் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ வானமாமலை 19வது பட்டம் பெரிய பட்டர்பிரான் ராமாநுஜஸ்வாமி, பட்டர்பிரான் கோதைக்குப் பாங்காகப் பண்ணி ஸமர்ப்பித்தது. இத் திருத்தேர் ஆண்டாள் திருவுள்ளப்படி 1 நாளிலும் 1 வாரத்திலும் 1 மாதத்திலும் நிலைக்கு வரும்படி நேரும். அவ்வாறு நிலைக்கு வந்ததும் முத்துக்குறி உத்ஸவம். மறுநாள் தீர்த்தவாரி மாலை ஆஸ்தானம் அலங்கரிப்பர்கள்.

இவ்வுத்ஸவத்தில் கூடும் ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டிபோல மற்றெங்கும் காணக்கிடையாது ஆதலின் "அணியரங்கள் திருமுற்றத் தடியார் தங்களின்பமுறு பெருங்குழுவு கண்டு யானுமிசைந்துடனே என்று கோலோவிருக்கும் நாளே என்று பெருமக்கள் ப்ரார்த்தித்த படியே நமக்குக் கிடைத்திருக்குமித் திருவாடிப்பூர உத்ஸவத்தில் அடியார்கள் குழாங்களைக் கண்ணாரக் கண்டு வாயாரப் புகழ்ந்து அநுபவிப்போமாக.

acharya.org

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶக பத்ரிகை.

தொகுதி 1.	பத்ராதிபர் வடகரை இராமாநுஜாசாரியார்	பகுதி 9.

ஸ்ரீரஸ்து

ஶ்ரிய:காந்தாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
ய: ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||
வேதவேதாந்த வேதாம்ஶ ஸம்ப்ரதாயப்ரவர்த்திநீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

திருவாடிப்பூரம்.

[பெருமாள் கோவில் ப்ரதிவாதி பயங்கரம்
ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்]

இன்று பெரியாழ்வார் பெண்பிள்ளையாய் ஆண்டாள் பிறந்த திருவாடிப்பூரம். இத்திருநன்னாளின் சிறப்பு சொலப்புகில் வாயமுதம் பரக்கும்.

"பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே" என்று நாடோறும் ஸ்ரீ வைஷ்ணவ வுலகம் ஸேவிக்கிற வாழித் திருநாமத்தின்படி இவ் வாண்டாள் பெரியாழ்வார் திருமகள் என்று ப்ரஸித்தி பெற்றிருந்தாலும் ஆழ்வார்கள் பதின்மர்க்கும் இவள் ஒரு திருமகள் என்பது பூருவாசாரியர்களின் ஒருமிடறான திருவுள்ளம். மணவாளமாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் "அஞ்சு குடிக்கொரு சந்ததி" என்றருளிச் செய்கிறு ராண்டாளை. அஞ்சுகுடி யென்பதற்கு இரண்டுவகையான பொருள் ஏற்கும். பொய்கையாழ்வார் தொடங்கிப் பெரியாழ்வாரளவுமுள்ள ஆழ்வார்

acharya.org

களைக் கணக்கிட்டால் ஆழ்வார்கள் குடி ஐந்து என விளங்கும். எங்ஙனே யென்னில்; பொய்கை பூதம் பேயாழ்வார் மூவருஞ் சேர்ந்து முதலாழ்வார்களென்று ஒரு ஸமுதாயமாக வழங்கப் பெறுதலால் அம்மூவருஞ் சேர்ந்து ஒரு குடி. திருமழிசைப் பிரான், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார் ஆகிய நால்வரும் நான்கு குடி: ஆகவே அஞ்சுகுடி யென்றது ஆண்டாளுக்கு முன்னே திருவவதரித்திருந்த ஆழ்வார்களனைவரையும் சொல்லிற்றாகி, அவர்கட்கெல்லாம் ஒரு சந்ததியாகத் தோன்றியவள் ஆண்டாள் என்றதாக ஒரு நிர்வாஹம்.

இனி மற்றொரு நிர்வாஹமாவது, அஞ்சுகுடி யென்பதை 'அஞ்சுகின்ற குடி' என [வினைத்தொகையாக]க் கொண்டு ஆழ்வார்கள் பதின்மரையும் விவக்ஷிக்கிறபடி. எம்பெருமானுக்கு என் வருகிறதோ வென்று அஞ்சுகின்ற தன்மை பெரியாழ்வாருக்கு மிகவும் விசேஷித்து இருப்பினும் ஆழ்வார்கள் பதின்மர்க்கும் அந்த அச்சம் ஸாதாரணமாகவுண்டு. இது "மங்களா சாசனத்தில் மற்றுள்ள வாழ்வார்கள் தங்கள் ஆர்வத்தளவு தானன்றி" என்ற உபதேச ரத்தினமாலைப் பாசுரத்தினாலேயே நன்கு காட்டப்பட்டது. பெரியாழ்வார்க்குப் போலே பொங்கும் பரிவு மற்றையோர்க்கு இல்லையெனினும் மங்களாசாசனத்தில் ஆர்வம் அனைவர்க்கு முண்டு என்று மாமுனிகள் தாமே அருளிச் செய்தாராதலால் அஞ்சுகுடி யென்பதனால் ஆழ்வார்களனைவரையும் கொள்வதும் பொருத்த முடைத்தேயாகும். ஆகவே, பதின்மர்க்கும் ஆண்டாள் ஒரு சந்ததி யென்றதாயிற்று.

ஸ்ரீமத் வேதாந்த தேசிகனும் கோதா ஸ்துதியில்—
"𑌭𑍋𑌕𑍍𑌤𑍁𑌂 𑌤𑌵 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌮𑌂 𑌭𑌵𑌤𑍀𑌵 𑌗𑍋𑌦𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌨𑌿𑌜𑌾𑌂 𑌪𑍍𑌰𑌣𑌯𑌭𑌾𑌵𑌨𑌯𑌾 𑌗𑍃𑌣𑌨𑍍𑌤𑌃 𑌉𑌚𑍍𑌚𑌾𑌵𑌚𑍈𑌰𑍍𑌵𑌿𑌰𑌹𑌸𑌙𑍍𑌗𑌮𑌜𑍈𑌰𑍁𑌦𑌨𑍍𑌤𑍈𑌃 𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌗𑍁𑌰𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌾𑌃=போக்தும் தவ ப்ரியதமம் பவதீவ கோதே! பக்திம் நிஜாம் ப்ரணய பாவநயா க்ருணந்த:, உச்சாவசைர் விரஹஸங்கமஜை ருதந்தை: ஶ்ருங்காரயந்தி ஹ்ருதயம் குரவஸ் த்வதீயா:" என்ற ச்லோகத்தில் 'த்வதீயா: குரவ:" என்ற ஸ்ரீ ஸூக்தியினால் ஆழ்வார்களனைவர்க்கும் ஆண்டாள் திருமகள் என்னுமிடத்தை ஸூசிப்பித்தருளினார். மேற்குறித்த ச்லோகத்தின் தாற்பரிய விசேஷம் மிக்க சுவையுடைத்தாதலால் அதனை இங்கே சிறிது விவரிப்போம்.

acharya.org

கோதாய்! புருஷோத்தமனான எம்பெருமானை யநுபவிக்குந் திறத்தில் ஆண்மையுடையார் அநுபவிப்பதிற் காட்டிலும் பெண்மையுடையார் அநுபவிப்பது சிறக்கும். நீ இயற்கையிற் பெண்ணாகப் பிறந்தாயாதலால், "கண்ணீர்கள் முலைக் குவட்டில் துளி சோரச் சோர்வேனைப், பெண்ணீர்மை யீடழிக்குமிது தமக்கோர் பெருமையே" என்றும் "கொங்கைமேல் குங்குமத்தின் குழம் பழியப் புகுந்தோருநாள், தங்குமேல் என்னாவி தங்கு மென்றுரையீரே" என்றும், 'பெண்ணின் வருத்த மறியாத பெருமான்" என்றும் "கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும் அள்ளிப்பறித்திட்டவன் மார்விலெறிந்து என்னழலைத் தீர்வேனே" என்றும் "கொம்மை முலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல்" என்றும் செயற்கையாகவன்றிக்கே இயற்கையாகவே பேசியநுபவித்தாய்; உனது திருத்தகப்பன்மார்களான ஆழ்வார்கள் இங்ஙனே பேசுவதற்குப் பாக்கிய மற்றவர்களாய் ஆண்மக்களாக அவதரித்தவர்களாயிருந்துவைத்தும் நீ பேசியிருக்குங் கட்டளையிலே தாங்களும் பேசப் பாரிப்புக்கொண்டு தங்களுடைய பக்தியை ப்ரணயமாக மாற்றிப் பெண்மையை மாநஸிகமாக ஆவாஹனம் செய்துகொண்டு பாசுரங்களைப் பாடி உவந்தனர் என்றபடி. இதனால், எம்பெருமானை அநுபவிக்கும் வகையில் மற்றையாழ்வார்களிற் காட்டிலும் ஆண்டாளே மிக்க வீறுபாடுடையாள் என்பது தெற்றென விளங்கிற்று.

இவ்வாண்டாள் அருளிச் செய்த திவ்வியப் பிரபந்தங்களிரண்டனுள் திருப்பாவையின் சிறப்பு உலகமுணர்ந்ததேயாகும். "கோதை தமிழ் ஐயைந்துமைந்தும் அறியாத மானிடரை வையஞ் சுமப்பதும் வம்பு" என்ற ஆன்றோர் திருவாக்கு ஒன்றே போதும் அதன் பெருமையைப் பாரோர் நன்கு அறிதற்கு. அதற்கு வியாக்கியான மிட்டருளின ஒரு மஹான் "கோதை தமிழ் ஐயைந்துமைந்தும் வாசோவிதேயமாக வேணுமென்கிறதன்று; ஆண்டாள் ஸ்ரீ ஸூக்தியாக ஒரு முப்பது பாசுர முண்டு என்றறியுமத்தனையே போதுமாய்த்து; அவ்வறிவு மில்லாதார் பூபாரமேகிடீர்." என்றுரைத்த சுவை அற்புதமானது.

திருப்பாவையில் ஆறுவது பாசுரந் தொடங்கிப் பதினைந்தாவது பாசுரத்தளவும் பத்துப் பாசுரங்களினால் ஆண்டாள் தன்னுடைய திருத்தகப்பன்மார்களான ஆழ்வார்கள் பதின்மரையும்

acharya.org

திருப்பள்ளி யுணர்த்துகிறாளென்பது பெரியார் நிர்வஹித்துப் போரும் ஒரு பரம ரஸ்ய ரஹஸ்ய விசேஷார்த்தம். ஆழ்வார்களை எந்த அடைவில் ஆண்டாள் பேசியிருக்கின்றாளென்னில், தன்னைப் பெற்றெடுத்து வளர்த்த பெரியாழ்வார் தொடங்கி அவரோஹணக் கிரமமாகப் பொய்கை யாழ்வாரளவுஞ் சென்று, அவ் வேழு திரு நாமங்களையும் ஏழு பாசுரங்களினாலுணர்த்தி, பிறகு தன் காலத்திற் குப்பின்பு திருவவதரிக்கப் போகின்ற அன்பர் தாள் தூளி, நற் பாணன், நன்கலியன் என்ற மூன்று ஆழ்வார்களையும் அகக் கண்ணினாலுணர்ந்து அவர்களை மூன்று பாசுரங்களில் அடைவே உணர்த்தித் தலைக்கட்டுகிறாள்.

ஆகவே ஆழ்வார்கள் திருப்பள்ளி யெழுச்சியான இப்பத்துப் பாசுரங்களில் ஒவ்வொரு பாசுரத்தில் ஒவ்வொரு ஆழ்வார்க்குண் டான சொற் பொருத்தம், பொருட் பொருத்தம் முதலியன ஈண்டுச் சுருக்கமாக நிரூபிக்கப்படுகின்றன.

1. புள்ளுஞ் சிலம்பினகாண்.—இது பெரியாழ்வாரைத் திருப் பள்ளியுணர்த்தும் பாசுரம். பிள்ளாய்! என்பது இதில் விளி. அறிவில்லாதவனைப் பிள்ளை யென்பது. எம்பெருமானுடைய ஸர்வரக்ஷகத்வம் முதலிய திருக்குணங்களை மறந்தே இவ்வாழ்வார் மங்களா சாஸனத்தில் ஈடுபட்டாராதலால் பிள்ளை யென்னத் தகுதியுடையாராயினர். "ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞானத் தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும்" என்ற ஸ்ரீ வசநபூஷண திவ்யஸூக்தியும் மங்களா சாஸநத்திற்கு அஜ்ஞானத் தையே மூலமாகக் காட்டிற்று. இவ்வாழ்வார் பெரும்பாலும் நந்த வனத்திலேயே போது போக்குவராதலால் அவ்விடத்து அடை யாளமாகிய 'புட்களின் சிலம்புதல்' முன்னே கூறப்பட்டது. புள்ளரையன் என்று பெரிய திருவடியின் ப்ரஸ்தாவம் செய்திருப்ப தில் இப்பெரியாழ்வார் பெரிய திருவடியின் அம்ஸமாகத் திருவவ தரித்தவர் என்று குருபரம்பராப்ரபாவாதிகளிற் கூறியுள்ள விஷயம் முத்ராலங்காரரீதியில் ஸூசிதமாகிறது.

'வெள்ளைவிளிசங்கு' என்கிற சொல்தொடர் முதன் முத லாகப் பெரியாழ்வாருடைய திருவாக்கில் தோன்றியது. (பெரியாழ் வார் திருமொழி 4-1-7 காண்க.) அதனை இங்கு அநுவதித்துக் காட்டுவது ஒருவகையான லிங்கம். [பேய்முலை நஞ்சுண்டு.] பெரி யாழ்வார் திருமொழியில் (சீதக் கடலில்) கண்ணபிரானுடைய சரித்

திரங்களில் பேய்முலை நஞ்சுண்ட கதை முதன் முதலாக அநுஸந்திக்கப்பட்டது. "பிறங்கிய பேய்ச்சி முலை சுவைத்துண்டிட்டு" என்றது காண்க. மறுபடியும் அந்தச் சரித்திரத்தை அநுஸந்திக்கையில் சகடாஸுரபங்கத்தையும் கூட்டி யநுஸந்தித்தார். "நாள்களோர் நாலைந்து" என்ற பாசுரங்காண்க. அதற்குப் பொருந்த இங்கு "பேய்முலை நஞ்சுண்டுகள்ளச சகடங் கலக்கழியக் காலோச்சி" என்றது. "வெள்ளத்தரவில்" என்று தொடங்கிப் பெரியாழ்வார்க்குள்ள 'விஷ்ணுசித்தர்' என்னுந் திருநாமமும் அதற்கு விவரணமான "அரவத்தமளியினோடும்" "பனிக்கடலில் பள்ளிகோளை" என்ற பாசுரங்களின் தாற்பரியமும் நன்கு ஸூசிதம்.

2. கீசுகீசென்றெங்கும்.—இது, பெரியாழ்வார்க்கு அடுத்த முந்தினவரான குலசேகராழ்வாரையுணர்த்தும் பாசுரம். 'பேய்ப்பெண்ணே!, நாயகப் பெண்பிள்ளாய்!, தேசமுடையாய்!, என்ற மூன்று விளிகளும் குலசேகராழ்வாரை வற்புறுத்துவன. பெருமாள் திருமொழியில் *மெய்யில் வாழ்க்கையை *என்ற வொரு பதிகத்தினால் தம்மைப் பெரும்பேயராகச் சொல்லிக்கொண்டவர் இவ்வாழ்வார். *ஏர்மலர்ப் பூங்குழல், ஆலைநீள் கரும்பு, மன்னுபுகழ்க் கௌசலை தன் * என்ற பதிகங்களில் பல பெண்களின் தன்மையையடைந்து பேசினாரிவர். "கொல்லி காவலன் கூடல் நாயகன்" என்று அரசரான தன்மை தோற்றப் பேசினராதலால் நாயகப் பெண்பிள்ளாய் என்றது. அன்றியும, ஒரு ஹாரத்தில் நட்ட நடுவிலுள்ள மணியை 'நாயகக்கல்' என்பதுண்டு. குரு பரம்பரையில் எம்பெருமானாரை நடுநாயகமென்று யதிராஜஸப்ததியில் தேசிகன் கூறினர்; "யதிராஜோ நிபத்த நாயக ஸ்ரீ: மஹதீ குருபங்க்தி ஹாரயஷ்டி:" என்றார். அது போலவே ஆழ்வார்களுள் குலசேகரர் நடுநாயகமாகவுள்ளவர். பொய்கையார் பூதத்தார் பேயார் மழிசையர் மாறன் என முன்னே ஐவர்; பட்டநாதன் கோதை தொண்டரடிப் பொடிகள் பாண்பெருமாள் கலியன் எனப் பின்னே ஐவர்; நடுவே குலசேகரர். ஆகவே இதுபற்றியும் நாயகப் பெண்பிள்ளாய் என்ற விளி நன்கு பொருந்தும். [தேசமுடையாய்!] பகவத்கீதையில் [18—43.] "ஶௌர்யம் தேஜோ த்⁴ருதிர் தா³க்ஷ்யம்—க்ஷாத்ரம் கர்ம ஸ்வபா⁴வஜம்." [ஶௌர்யம் தேஜோ த்ருதிர் தாக்ஷ்யம—க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்.] என்று தேஜஸ்ஸு க்ஷத்ரியதர்மமாகச் சொல்லப்பட்டிருப்பதற்கிணங்க இந்த விளி

acharya.org

இவ்வாழ்வாருடைய க்ஷத்ரியத்வத்தைத் தெரிவிக்கும். அன்றியும், "தேவத்வமும் நிந்தையானவனுக்கு ஒளிவரும் ஜநிகள் போலே ப்ரஹ்ம ஜன்மமும் இழுக்கென்பார்க்குப் பண்டை நாளில் பிறவி உண்ணாட்டுத் தேசிறே." என்ற ஆசார்யஹ்ருதய ஸ்ரீ ஸூக்தியின்படியும், அதற்கும் மூலமான "மண்ணாட்டிலாராகி யெவ்விழிவிற்றானாலும், ஆழியங்கைப் பேராயற்கு ஆளாம் பிறப்பு—உண்ணாட்டுத் தேசன்றே" என்ற பெரிய திருவந்தாதிப் பாசுரத்தின்படியும் பகவத் சேஷத்வத்திற்கு அநுகூலமான பிறப்பே தேஜஸ்ஸென்று நிர்ணயிக்கப்படுகிறது; அப்படிப்பட்ட பிறப்பை *ஊனேறு செல்வத்து *என்ற பதிகத்தில் பாசுரந்தோறும் ஓரோவிதமாக விரும்பினவர் இவ்வாழ்வாரேயாதலால் தேச முடையார் இவரேயாகத் தகும். இப்பாட்டில் "ஆனைச் சாத்தன்" என்ற பதப்பிரயோகம் கவனிக்கத்தக்கது. இச் சொல் மலையாள பாஷையிலிருந்து திசைச சொல்லாகத் தமிழில் வழங்குவதென்பர். (ஆனசாதம் என்று மலைநாடர் வலியனென்னும் பறவையை வழங்குவராம். இவ்வாழ்வார் மலை நாட்டில் திருவவதரித்தவராதலால் அத்திசைசசொல் இங்குப் பரவசமாகவே அமைந்ததுபோலும்.) காசும் பிறப்பும் என்று ஆபரண விசேஷங்களைப் பற்றின ப்ரஸ்தாவமிருப்பது இவ்வாழ்வாருடைய சரிதையில் ஆபரண ப்ரஸ்தாவமுள்ளவாற்றை ஒருவாறு நினைப்பூட்டும். "ஆரங்கெடப் பரனன்பர் கொள்ளாரென்று அவர்களுக்கே வாரங்கொடு குடப்பாம்பில் கையிட்டவன்" என்ற தனியனும் ஸ்மரிப்பது. "வாசநறுங்குழலாய்ச்சியர் மத்தினொலோசைபடுத்த தயிரரவம்" என்றது, பெருமாள் திருமொழியில் "கெண்டை யொண்கண் மடவாளொருத்தி கீழையகத்துத் தயிர் கடையக் கண்டு...வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ.......தண் தயிர் நீ கடைந்திட்ட வண்ணம்" என்ற பாசுரத்துச் சொற்சுவைகளை நன்கு நினைப்பூட்டும். [நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும்] கிருஷ்ணாவதாரத்தில் குதிரைவடிவாக வந்த கேசியென்னு மஸுரனை வதஞ் செய்ததனால் கேசவனென்றது. இவ்வாழ்வார் தமது திருமொழியில் முதன் முதலாக இந்த வரலாற்றையே பேசி யநுபவித்தார்—*மாவினை வாய்பிளந்து கந்தமாலை * என்று. ஸ்வப்ரபந்தத்தை "நலந்திகழ் நாரணனடிக் கீழ் நண்ணுவாரே" என்று நாராயணனைப் பாடித் தலைக் கட்டினார். [கேட்டே கிடத்தியோ] இவ்வாழ்வார் நாடோறும் அந்தணர்களைக்

acharya.org

கொண்டு ஸ்ரீராமாயண பாராயணஞ் செய்வித்துத் தாம் கேட்டவர். கேட்டு, இருந்த விடத்திலிராமல் படைபெடுத்துஞ் சென்றவர்.

3. கீழ்வானம் வெள்ளென்று.—குலசேகரர்க்கு அடுத்த முந்தினவரான நம்மாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. கோதுகல முடைய பாவாய்! என்றவிளி நம்மாழ்வாரை வற்புறுத்தும். ['கோது குல முடைய' என்று வழங்கிவரும் பாடம் பரமக்ருபையுடன் மறக்கத்தக்கது. அப்பாடம் நெடுநாளாகவே நாடெங்கும் பரவியதனுலாய அநர்த்தம் பெரிதுமுண்டு. ஸ்ரீபரகாலஸ்வாமி வியாக்கியானம் செய்தருளுமிடத்து "குலம் குலமாக வுனக்குப் பரிசர்யை பண்ணும்படி......" என்றுரைத்திட்டார். அது, 'கோதுகுலமுடைய' என்கிற (தவறுதலான) பாடத்தில் அபிநிவேசத்தினுல்போலும். வஸ்துதஸ்து, வட மொழியில் கௌதூஹலம் என்றசொல் தமிழில் கோதுகலமெனத் திரிந்தது. இதில் குகரம் நுழைய ப்ரஸக்தியில்லை. "கோதுகலமுடைக் குட்டனேயோ" என்றார் பெரியாழ்வாரும்.) கோதுகலமாவது ஆசை; ஆசையையுடைய என்றது - எம்பெருமானிடத்தில் ஆசையையுடைய, அல்லது எம்பெருமானுடைய ஆசையைத் தன்னிடத்திலே கொண்டுள்ள-என்று இருவகையாகவும் பொருள்படும். பட்டர் நம்மாழ்வாரைப் பற்றிப் பேசும்போது "ரிஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ணத்ருஷ்ணாதத்வமிவோதிதம்" என்று க்ருஷ்ண குதூஹலமே நம்மாழ்வாராக வடிவெடுத்தது என்றார். க்ருஷ்ண தருஷ்ணா என்றதும்-க்ருஷ்ணனிடத்தில் த்ருஷ்ணை, க்ருஷ்ணனுடைய த்ருஷ்ணை என இருவகையாகவும் விரியும். இதனுல் தேறின பொருளை "கைம்மா துன்பொழித்தாயென்று கைதலை பூசலிட்டே, மெய்ம்மாலா யொழிந்தேன் எம்பிரானு மென்மேலானே" என்ற பாசுரத்தினுல் நம்மாழ்வார்தாமே வெளியிட்டருளினர். "ப்ரியோஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம் அஹம், ஸச மம ப்ரிய:"— ப்ரியோஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம் அஹம், ஸச மம ப்ரிய:" என்றபடி, நானும் எம்பெருமானிடத்துக் குதூகலங் கொண்டேன், அவனும் என்னிடத்துக் குதூஹலங் கொண்டான் என்றருளிச் செய்தவர் நம்மாழ்வார். பாவாய்! என்ற விளியும் இவர்க்குப் பொருந்தும்: திருவாய்மொழியில் "சூழ்வினை யாட்டியேன் பாவையே" என்றும் "என்பாவை போயினித் தண்பழனத் திருக்கோளூர்க்கே" என்றும் பலவிடங்களில் தம்மைப் பாவையாகச் சொல்லிக்கொண்ட

acharya.org

வர் இவ்வாழ்வார். 'எழுந்திராய்' என்ற சொல்லாற்றல் நன்கு நோக்கத்தக்கது; உட்கார்ந்திருப்பவரையன்றோ எழுந்திரா யென்பது. மற்றையாழ்வார்களெல்லாரும் அர்ச்சையில் நின்ற திருக்கோலமாகவேயுள்ளார்; நம்மாழ்வாரொருவரே வீற்றிருந்த திருக்கோலம். "பத்மாஸநோபவிஷ்டம்" என்கிற பூர்வாசார்யச்லோக ரத்னமும் இங்கு அநுஸந்தேயம். [கீழ்வானம் வெள்ளென்று.] உதயகாலத்தில் கிழக்கு வெளுக்கும். இங்கும் வகுளபூஷண பாஸ்கரோதயமாதலாலும், அதுதானும் கலியுகத்தின் உதயகாலத்திலாதலாலும் கிழக்கு வெளுத்ததாகச் சொல்லிற்று. கீழ்வானமென்றபோதே மேல்வானம் நினைவுக்குவரும். நித்தியவிபூதி மேல் வானமாகும். லீலாவிபூதியானது நம்மாழ்வாருடைய திருவாய்மொழி யவதாரத்தாலே "ஓராயிரத்துளிப்பத்து உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்" "வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே" இத்யாதிப்படியே தானே பரமபதமாயிற்று. ஆகவே கீழ்வானமான இவ்விபூதிவெள்ளென்றது. [எருமை சிறுவீடு மேய்வான்] வீடு என்று மோக்ஷம்; சிறு வீடு என்று கைவல்ய மோக்ஷம். இந்த ஸங்கேதமிட்டருளினவர் நம்மாழ்வார்; திருவாய் மொழியில் (4-1-10) "குறுக மிகவுணர்வத்தொடு நோக்கி" என்ற பாசுரத்தின் பொருள் கொண்டு இதை அறியத்தக்கது. எருமை யென்பது தாமஸப்ரக்ருதிகளை. நம்மாழ்வார் திருவவதாரம் செய்தருள்வதற்கு முன்னே பலரும் தாமஸப்க்ருதிகளாய் நல்வீடு செல்லாது சிறுவீடு முதலியவற்றிற் சென்று பாழாயினர் என்பது இங்கு ஸூசிதம். [மிக்குள்ள பிள்ளைகளுமித்யாதி.] மற்றைப் பிள்ளைகளையும் போகவொட்டாமல் தடுத்து இப்பிள்ளைவாசலில் வந்து துவள்வதனால் இவளுக்குண்டான விலக்ஷணமான ஏற்றம் தோற்றுவதுபோல, மற்றையாழ்வார்களிற் காட்டில் நம்மாழ்வார்க்குண்டான ப்ரபந்நஜந கூடஸ்தத்வமாகிற ஏற்றம் தோற்றுவிக்கப்பட்டது. "போவான் போகின்றாரை" என்ற பிரயோகம் வெகு ஆச்சரியமானது. 'போவதற்காகப் போகிறவர்கள்' என்று சொல்லுவதுண்டோ? இல்லை; அப்படியிருக்க ஏன் சொல்லிற்று? போவதுதானே ஸ்வயம் ப்ரயோஜன மென்று காட்டுவதற்காகவே சொல்லிற்று. இத்தகைய பிரயோகம் முதன் முதலாக நம்மாழ்வார் திருவாக்கில்தான் வந்தது; திருவிருத்தத்தில் "போவான் வழிக்கொண்ட மேகங்களே!"

acharya.org

என்றார். [உன்னைக் கூவுவான் வந்துநின்றோம்.] "கூவிக்கொள்ளுங் காலமின்னங்குறுகாதோ" "என்னைக் கூவியருளாய் கண்ணனே" "கூவிக்கொள்ளாய் வந்தந்தோ" என்று பலகாலும் விரும்பினபடியே கூவுவான் வந்து நின்றோமென்கிறாள். [மாவாய் பிளந்த தேவாதிதேவனை] இப்போது ஆண்டாள் நோற்பது போல நம்மாழ்வாரும் ஒரு திருவாய்மொழியில் நோன்பு நோற்றார்; வீற்றிருந்தேழுலகும் என்ற திருவாய்மொழியில் "ஏற்ற நோற்றேற்கு" என்று முதலிலும் "வீண்டமிழ்நூற்க நோற்றேன்" என்று முடிவிலும் வருவதுகாண்க. அங்ஙனம் நோற்ற திருவாய்மொழியில் தேவாதிதேவனை அநுபவிக்கின்ற ஆழ்வார் மாவாய் பிளந்தானென்ற விசேஷணத்தையே முதற்பாட்டில் இட்டருளினர்; "வெம்மாபிளந்தான் தன்னை" என்றதுகாண்க. ப்ரதமப்ரபந்தத்தில் "இமையோர் தலைவா!" என்றும், சரமப்ரபந்தத்தில் "அயர்வறுமமரர்களதிபதி" என்றும் தேவாதி தேவனையே முந்துற முன்னம் சேவித்தாராழ்வார். [சென்று நாம் சேவித்தால்] "வானநாயகனே! அடியேன் தொழவந்தருளே" என்று தேவாதி தேவனை நீர் உம்மிடம் வருமாறு அழைத்தீர்; அங்ஙனமல்லாமல் அவனிடம் நாம் சென்று சேவிக்கலாம் வாரும் என்றழைக்கிறாள் போலும். [ஆவாவென்று] "ஆவாவென விரங்கார் அந்தோவலிதே கொல், மாவாய் பிளந்தார் மனம்" என்றும், "அடியேற்கு ஆவாவென்றாயே" என்றும் நீர் விரும்பினபடியே மாவாய்பிளந்த பெருமான் உமக்கு ஆவாவென்பன் என்று காட்டுகிறபடி. [ஆராய்ந்து] "ஆரென்னையாராய்வார்" என்ற உம்முடைய குறையும் தீரும் என்று காட்டியபடி.

4. தூமணிமாடத்து. நம்மாழ்வார்க்கு அடுத்த முந்தினவரான திருமழிசைப்பிரானை யுணர்த்தும் பாசுரமிது. இதில் மாமான் மகளே! என்ற விளி ஒருவகையான தேஹஸம்பந்தத்தில் நோக்குடையது. ஆண்டாளுக்கும் திருமழிசை யாழ்வார்க்கும் ஒரு வகையான தேஹஸம்பந்தமுண்டு: அதாவது — ஸ்ரீதேசிகன் கோதாஸ்துதியில் "கமலாமிவாந்யாம் கோதாம்" என்றும் "ஸந்தஃ பயோதி துஹிதுஸ் ஸஹஜாம் விதுஸ்த்வாம்" என்றும் அருளிச்செய்த படியே ஆண்டாள் ஸாக்ஷாத் ஸ்ரீமஹாலக்ஷ்மியாவள். "ஹாமஹவீ லோகஜநநீ க்ஷீரஸாகரஸம்பவா — பார்க்கவீ லோகஜநநீ க்ஷீரஸாகரஸம்பவா" என்ற அமரகோசத்தின்படியும்

acharya.org

இதிஹாஸபுராண வரலாற்றின் படியும் லக்ஷ்மி (ஆண்டாள்) ப்ருகு குலத்தில் தோன்றியவள் திருமழிசைப்பிரானும் ப்ருகுகுலத்தில் தோன்றியவரென்பது சரித்ரஸித்தம். இத்தகைய ஸமாந குலஸம்பந்தம் இங்கு நோக்கத்தக்கது. ரிஷிகுலத்திலே பிறந்து பிரம்பன் குடியிலேயானார் அவர்; ப்ராஹ்மண குலத்திலே பிறந்து கோபாலர் குலத்திலேயானாள் இவள். இதுவும் ஒரு ஒற்றுமைநயம். [தூமணி மாடத்து] சிறந்த மாணிக்கக் குப்பியினுள்ளேயுள்ளது வெளியில் நிழலிட்டுத் தோன்றும். திருமழிசைப்பிரான் "உட்கிடந்த வண்ணமே புறம் பொசிந்து காட்டிடே" என்று வேண்டிக் கொண்டபடியே உள்ளிருந்த திருமால் அப்படியே வெளியிற் பொசிந்து காட்சிதந்தமையால் இவர் தூமணிமாட மென்னத் தகுதியுடையார். [சுற்றும் விளக் கெரிய] விளக்காவது ஞானவொளி. "சாக்கியங் கற்றோஞ் சமண்கற்றோம் சங்கரனாராக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம்" என்றபடி இவ்வாழ்வார் ஸகலமதங்களிலும் புக்கு ஸர்வதோமுகமான ஞானவிளக்கம் பெற்றவராதலால் சுற்றும் விளக்கெரிதல் இவர்க்கு அஸாதாரணம். "யானறிந்த வாறு-ஆரறிவார்" என்றும் "என்மதிக்கு விண்ணெல்லா முண்டோ விலை" என்றும் இவரது பாசுரங்களினாலும் இது ஸித்தம். [தூபம் கமழ] சிறந்த ஞானமிருத்தல்மாத்திரம் பயன்படாது; அது நன்கு பரிமளிக்க வேண்டும். எம்பெருமானையன்றி வேறொரு தெய்வத்தைத் தொழாதிருத்தலே ஞானத்திற்குப் பரிமளம். "மறந்தும் புறந் தொழாமாந்தர்" என்பது இவ்வாழ்வாருடைய திருவாக்காகும். [துயிலணை மேல் கண்வளரும்] இவ்வாழ்வாருடைய திருக்கண் செல்வது சயனத்திருக்கோலமான எம்பெருமான் களின்மீதுதான். கச்சி வெஃகாவிலும் திருக்குடந்தையிலுமே பெரும்பாலும் இவர் காலம் கழித்தது. சயனத்திருப்பதிகளையே ஒரு கோர்வையாக வெடுத்துப் பாசுரம் பாடினவரும் இவ்வாழ்வார்; "நாகத்தணைக் குடந்தை வெஃகாத் திருவெவ்வுள், நாகத்தணையரங்கம் பேர் அன்பில்-நாகத்தணைப் பாற்கடல் கிடக்குமாதி நெடுமால், அணைப்பார் கருத்தனாவான்" என்றது காண்க. [துயிலணை மேல் கண்வளரும் மாமானுடைய மகளே!] மகள் என்றதனால் விதேயத்வம் சொன்னபடி. மகள் சொற்படி தந்தை கேட்பதும் தந்தை சொற்படி மகள் கேட்பதும் வழக்கம். மாமான் என்றது மஹா மஹான் என்றபடி. துயிலணைமேல் கண்வளரும்மாமான் யதோக்தகாரி

acharya.org

யெம்பெருமான்; அப்பெருமாள் இவ்வாழ்வார் சொற்படி கேட்டவர்; "கணிகண்ணன் போகின்றான்—நீயுமுன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்" என்ற போது அப்படியே சுருட்டிக் கொண்டு புறப்பட்டார்; "உன்றன் பைந்நாகப்பாய் விரித்துக் கொள்" என்ற போதும் அப்படியே. இனி, துயிலணை மேற்கண்வளரும் மாமான்—ஆராவமுதன்; அப்பெருமாளும் "எழுந்திருந்து பேசு வாழி கேசனே" என்ற இவ்வாழ்வாரது வேண்டுகோளின்படி எழுந்திருந்தவர் என்பது ப்ரஸித்தம். [உன் மகள்தான் ஊமையோ] வாய்திறவாமலே ஹஸ்தசேஷ்டை முதலியவற்றால் காரியம் செய்வது ஊமைகளின்பணி. இவ்வாழ்வாரும் யாத்திரையடைவில் பெரும்புலியூரென்னும் கிராமத்தில் ஒரு வேதியன் வீட்டுவாசல் திண்ணையில் சிறிது பொழுது எழுந்தருளியிருக்க அங்கு வேதமோதிக் கொண்டிருந்த அந்தணர்கள் நீறு பூத்த நெருப்புப் போலுள்ள ஆழ்வாருடைய மஹிமையைத் தெரிந்து கொள்ளாமல் அவரைக் கீழ்ச்சாதியாரகவெண்ணி வேதாத்யயநம் அவருடைய காதிற் படலாகாது என்று கருதி ஓத்துத் தவிர்ந்திருக்க, அக்குறிப்பையறிந்த ஆழ்வார் அவ்விடத்தை விட்டுத் தூரத்திற் சென்று வேறோரகத்து மேடையில் வீற்றிருக்கையில் அந்த வேதியர்கள் மீண்டும் வேதமோதத் தொடங்கி, விட்ட வாக்கியம் தோன்றாது மயங்கி நிற்க, ஆழ்வார் அதுகண்டு கறுப்பு நெற்களைக் கையுகிராலே இடந்துபோட, அப்பொருளுள்ள வேதவாக்கியம் அவர்கட்குத் தோன்றிற்று: அதாவது—"க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணாம் நகநிர்பிந்நம்" என்பது. உடனே அவர்கள் ப்ரதக்ஷிண ப்ரணாமாதிகளால் இவரை உபசரித்து க்ருதார்த்தராயினர் என்பது சரித்திரவரலாறு. இங்ஙனமாக, வாய்திறவாமலே இங்கிதத்தினால் காட்டினது பற்றி ஊமையோ என்றது. சொன்ன சொற்களைச் செவியேற்காதவர் செவிடர்: அந்தச் செவிடும் இவரது சரிதையில் ப்ரஸித்தம்: முன் சொன்ன பெரும்புலியூரில் அந்தணரடிகள் யாகஞ் செய்து கொண்டிருந்த விடத்தில் இவ்வாழ்வாரை எழுந்தருள்வித்துக் கொண்டு போய்ச் சில மஹான்கள் இவர்க்கு அக்ரபூஜை செய்விக்க, அப்போது அங்கிருந்த பல சிசுபாலஜ்ஞாதிகள் எண்ணிறந்த வசை மொழிகளை வர்ஷிக்க, அவற்றை இவ்வாழ்வார் செவியேற்காதிருந்தனர் என்ற வரலாறு காண்க. [அனந்தலோ] தூக்கமோ என்றபடி. பரமைகாந்திகட்குத் தூக்கமாவது பாஹ்ய

acharya.org

விஷயங்களிற் சிறிதும் நெஞ்சு செல்லா திருக்கப்பெறுதலை. "உன்னைத் தெரித் தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கிவழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" என்றும் "தொழிலெனக்குத் தொல்லைமால் தன்னுமமேத்தப் பொழுதெனக்கு மற்றதுவே போதும்" என்றுமருளிச் செய்யு மிவ்வாழ்வார்க்கு இந்த நிலைமையே அனந்தலாகும். [ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ] மற்றை யாழ்வார்களிற்காட்டிலும் இவ்வாழ்வாருடைய பரனிமகாந்தித்வம் மிக விலக்ஷணம் என்பது இங்கு அறியத்தக்கது. "பிதிரு மனமிலேன் பிஞ்ஞகன்றன்னோ டெதிர்வன், அவனெனக்கு நேரான்" என்னும் படியான திருநாவீறு இவர்க்கே அஸாதாரணமன்றோ. இதுதான் பெருந்துயில்; எம்பெருமானை யொழிந்த மற்றையோரைக்கண்கொண்டு பாராமையிற் பெருமை.

[மாமாயன்] "மாயமென்ன மாயமே" என்றும், "மாயமாய மாக்கினாய் உன்மாயமுற்றுமாயமே" என்றும் பலகாலும் எம்பெருமானது மாமாயங்களைப் பேசுகிறவர் இவ்வாழ்வார். [மாதவன்] "மாதவனை யேத்தாதார் ஈனவரே" என்றவரும் இவ்வாழ்வாரே. "திருவில்லாத் தேவரைத் தேறேன்மின் தேவு" என்றதுங்காணலாம். [வைகுந்தன்] "வைகுந்தச் செல்வனார் சேவடிமேல் பாட்டு" என்றவர் இவ்வாழ்வாரே. வைகுந்தனது சேவடிமேல் தாம் பாசுரம் பாடினவராகச் சொல்லிக் கொண்டார். ஆகவே, மாமாயன், மாதவன், வைகுந்த னென்ற திருநாமங்கள் இவ்வாழ்வார்க்குப் பரமபோக்யங்களென்பது ஸூசிதம்.

5. நோற்றுச் சுவர்க்கம்.—திருமழிசை யாழ்வார்க்கு அடுத்த முந்தினவரான பேயாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. ஓடித்திரியும் யோகிகளாய் ஒருவரோடு ஒருவர் சேராமல் ஸஞ்சரித்துக் கொண்டிருந்த பொய்கையார் பூதத்தார் பேயார் [illegible] ஒன்று சேர்த்து அநுபவிக்கக் கருதிய எம்பெருமான் ஒரு பெருமழையை வியாஜமாக்கித் திருக்கோவலிடை கழியில் நெருக்கியநுபவித்தானென்பது வரலாற்றின் சுருக்கம். இப்பேயாழ்வாரைப் பற்றித் திருவரங்கத் தமுதனார் நூற்றந்தாதியில் அருளிச் செய்யுமிடத்து "மன்னிய பேரிருள் மாண்டபின் கோவலுள் மாமலராள் தன்னொடுமாயனைக் கண்டமை காட்டும் தமிழ்த் தலைவன்" என்றார். பொய்கையாரும் பூதத்தாரும் இருவிளக்கேற்றி யிருளையகற்ற, இவ்வாழ்வார் "திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன்" என்று

acharya.org

தொடங்கிப் பலாநுபவம் செய்தருளினுர் என்பர் ஆன்றோர். அவ் வர்த்தமே யிங்கு முதலடியிற் பொலியும். நோற்று—மற்றை யிரண்டு ஆழ்வார்களும் விளக்கேற்றுகையாகிற உபாயாநுஷ்டானஞ் செய்யவே என்றபடி. சுவர்க்கமாவது ஆனந்தாநுபவம். "யஸ்த்வ யாஸ்ஹ ஸஸ்வர்க்கோ நிரயோ யஸ் த்வயாவிநா" என்று ஸ்ரீ ராமா யணத்தில் இளைய பெருமாள் அருளிச் செய்ததுங்காண்க. "வாசல் திறவாதார்" என்றது பேயாழ்வார்க்கு மிகவும் பொருத்தமான லிங்கம். திருக்கோவலிடைகழியில் பொய்கையார் முன்னே புகுந்து தாளிட்டுக் கொண்டார்; பிறகு பூதத்தார் வந்து சேர அவர்க்கு அப்பொய்கையார் வாசல் திறந்தார். பிறகு வந்து சேர்ந்த பேயார்க்குப் பூதத்தார் வாசல் திறந்தார். இப் பேயார்க்குப் பிறகு ஒருவரும் வந்து புகாமையினுல் வாசல் திறக்க வேண்டிற்றில்லை ஆகவே வாசல் திறவாதார் என்றது பேயாழ்வார்க்கு மிகப்பொருத்த மாக அமைந்த குறிப்பு. [நாற்றத்துழாய்முடி நாராயணன்] இவ் வாழ்வாருடைய பாசுரங்கள் திருத்துழாய்மயமாகவே யிருக்கும். *திருக்கண்டேனுக்கு அடுத்த பாசுரம் "பொன்தோய் வரை மார் பில் பூந்துழாய்" என்பது. அதற்கடுத்த பாசுரம் "மலராள் தனத்துள்ளான் தண்டுழாய்மார்வன்" என்பது. முடிவுபாசுரத்தி லும் "தண்டுழாய்த்தார் வாழ்வரை மார்பன்" என்றுர். இடையி லும் பலபாசுரங்கள் காண்க. ஒன்பதாவது பாசுரத்தில் [நாமம் பல சொல்லி யென்பதில்] நாராயணனையும் திருத்துழாயையும் கண் ணனையும் சேர்த்துப் பாடினுர் பேயார். இதுவும் ஒரு சிறந்தபொருத் தம். "காண்காணென விரும்புங்கண்கள்" என்று ஒரு நொடிப் பொழுதும் கண்மூடி யிருக்க மாட்டாமையைச் சொல்லிக்கொண்ட நீர் கும்பகர்ணனுக்கும் மேலாக இன்னமும் துயில் கொள்ளல் தகுதியோ என்கிருள் பண்டொரு நாளென்று தொடங்கி. இப்பாட் டில் நட்ட நடுவில் இராமபிரானுடைய திவ்விய சரித்திரமொன்றை ஆண்டாள் அமைத்தது பேயாழ்வாருடைய திருவந்தாதியில் நட்ட நடுவில் "அவனே—இலங்காபுரமெரித்தானெய்து" என்றும் "எய்ததுவும் தென்னிலங்கைக் கோன்வீழ" என்றும் அருளிச் செய்தமைக்கு நன்கு ஒக்கும். திருமழிசையாழ்வாரை யுணர்த்தின கீழ்ப்பாட்டில் அனந்தலோ என்று வெறும் அனந்தலே சொல்லிற்று. இப்பாட்டில் ஆற்றவனந்தலுடையாய்! என்கிறது. மழிசையர் கோனுக்கும் இவ்வாழ்வார் ஆசாரியராதலால் விசேஷணமிட்டபடி.

acharya.org

அனந்தல் என்று ஹேயமான உறக்கமன்று சொல்லுகிறது. “உரோவிந்யஸ்தஹஸ்தாஸ்தே நித்ராயந்தே ஸுநிர்ப்பரா:—உரோ விந்யஸ்த ஹஸ்தாஸ்தே நித்ராயந்தே ஸுநிர்ப்பரா:—” என்று பகவச் சாஸ்திரங்களில் கொண்டாடப்பட்ட ‘அனந்தல்’ பரமை காந்தித்வ ஸீமா பூமியைக் காட்டுமது. [அருங்கலமே!] எம்பெருமானது திருவருளை மிக அருமையாகப் பெற்ற ஸத்பாத்ரமே! என்றபடி. பாசுரந் தொடங்கும்போதே “திருக்கண்டேன் பொன் மேனி கண்டேன்” என்று ஆனந்தமாகத் தொடங்கப் பெற்ற பகவத் பரமக்ருபா பாத்ரபூதர் மற்றொரு ஆழ்வாரில்லையே. [தேற்றமாய் வந்து திற] உம்முடைய திருநாமமோ பேயார்; பேய்த்தனமாக வாராமல் தேறிவந்து திறவும் என்கிறாள்.

6. கற்றுக் கறவை. பேயார்க்கு அடுத்த முந்தினவரான பூதத்தாரை யுணர்த்தும் பாசுரமிது. இதில், “குற்ற மொன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே!” என்ற விளி பூதத்தார்க்கு நன்கு பொருந்தும். பல பொருள்களை யுடையதான கோ என்னும் சொல் மொழி என்ற விடத்திற்போல ஸ்ரீஸூக்தியைச் சொல்லுகிறதிங்கு. கோவலர்—ஸ்ரீஸூக்திகளை யருள வல்லவர்களான ஆழ்வார்கள். “குற்ற மொன்றில்லாத” என்ற விசேஷணம் முதலாழ்வார்கள் மூவர்க்கே பொருந்தும். யோநிஜத்வமாகிற வொரு குற்றம் மற்றை யாழ்வார்களுக்குண்டு. அக்குற்ற மொன்றும் இல்லாத கோவலர்—முதலாழ்வார்கள்; அவர்களுள் பொற்கொடியே! =“கோல் தேடி யோடுங் கொழுந்ததே போன்றதே மால்தேடி யோடும் மனம்” என்கிற பாசுரத்தினால் தம்மை ஒரு கொடியாகச் சொல்லிக்கொண்டவர் பூதத்தாழ்வாரே யாவர். எம்பெருமானாகிற உபக்நத்தைத் தேடிச் செல்லுகின்ற கொடிபோல்வேன் நான் என்றவர் இவரேயிறே. “கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து” என்றது முதலாழ்வார் மூவர்க்கும் பொதுவான வாசகம். கற்றுக் கறவை—கன்றாகிய கறவை, (கறவை யென்பதனால் ஸ்ரீஸூக்தி விவக்ஷிதம்.) மற்றை யாழ்வார்கள் பெரிய பெரிய பாசுரங்களை யளித்தார்கள். முதலாழ்வார்கள் அங்ஙனன்றிக்கே வெண்பாவாகிய மிகச் சிறிய பாசுரங்களை யளித்தார்கள். பொய்கை யாழ்வாரருளிய திருவந்தாதி கறவைக் கணம்; பூதத்தாழ்வார் திருவந்தாதியும் சேர்ந்து கறவைக் கணங்கள்; பேயாழ்வார் திருவந்தாதியும் சேர்ந்து கறவைக் கணங்கள் பல. க்ரமேண ஏகவசந த்விவசந பஹுவசநங்கள் இணங்கின

acharya.org

அழகு காண்க. [செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்] தேச மெங்கும் திரிந்து பகவத் விரோதிகளை நிரஸிக்க வேணுமென்கிற அர்த்தத்தை "எண்டிசையும் பேர்த்தகரம் நான்குடையான் பேரோதிப் பேதைகாள்! தீர்த்தகரராமின் திரிந்து" என்ற பாசுரத்தினால் வெளியிட்டவர் இவ்வாழ்வாரே. "புற்றரவல்குல்" என்பது இடை யழகை வருணிப்பதாகும். ஸ்வாபதேசத்தில் இடையழகாவது பக்தியின் பெருமை. ஞானம் பக்தி விரக்தி என்ற மூன்றில் பக்தியானது இடைப்பட்டதாதலால் இடையழ கென்பது பக்தியின் அழகேயாகும். இவ்வாழ்வார் தம்முடைய திருவந்தாதியை முடிக்குமிடத்து "என்றனளவன்றால் யானுடைய வன்பு" என்றே முடித்தார். இதனால் இவரது இடையழகு நன்கு வெளிப்பட்டதாயிற்று. அன்பிலே தொடங்கி அன்பிலே தலைக் கட்டினார். புனமயிலே! என்ற விளியும் இவர்க்கு அழகாகப் பொருந்தும். பொழிலிடத்தே வாழும் மயில்; இவ்வாழ்வார் தோன்றிய தலமோ திருக்கடல்மல்லை; அதனைப் பாடின கலியன் "கடி பொழில் சூழ்கடன் மல்லை" என்றே பன்முறையும் பாடினர். மயில் மேகத்தைக் காண்பதிலே மிக்க குதூஹல முடைத்தாதலால், மேகம் நீர்பருக வருமிடமான கடற்கரையிலே மயில்கள் மகிழ்ந்து நிற்கும். இவ்வாழ்வார் நின்ற விடமும் கடற்கரையிலே யிறே. [சுற்றத்துத் தோழிமாரித் யாதி.] இவர்க்குப் பொய்கையாரும் பேயாரும் சுற்றத்தவர்கள்; மற்றையாழ்வார்கள் தோழிமார். [முகில் வண்ணன் பேர் பாட.] முந்துற முன்னம் முகில் வண்ணன் பேர் பாடினவர் இவ்வாழ்வாரே யாவர்; "உலகேழும் முற்றும் விழுங்கும் முகில் வண்ணன்....ஏத்துமென்னெஞ்சு" என்ற இவர் பாசுரம் காண்க. புனமயில் முகில் வண்ணனைத் தானே பாடும்.

7. கனைத் திளங்கற் றெருமை. பூதத்தாழ்வார்க்கு அடுத்து முந்தினவரான பொய்கை யாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. தங்காய்! என்ற விளி இவர்க்கு நன்கு பொருந்தும். உலகில், தங்கையென்று ஸ்ரீ மஹாலக்ஷ்மியையும் தமக்கையென்று மூதேவியையும் வழங்குவர்கள். 'சேட்டை தம் மடியகத்து' என்ற திருமாலைப் பாசுரத்தில், தமக்கைக்கு வாசகமான ஜ்யேஷ்டா என்ற சொல்லால் மூதேவியைக் குறித்தமை காண்க. ஸ்ரீ மஹாலக்ஷ்மி தாமரை மலரிற் பிறந்தவள். 'வனச மலர்க்கருவதனில்வந்தமைந்தான் வாழியே' என்கிறபடியே பொய்கை யாழ்வாரும் தாமரைப் பூவில்

தோன்றியவர். இந்த வொற்றுமைநயம் பற்றித் தங்காய்! என விளிக்கத் தகுதியுடையாரிவ் வாழ்வார். "நனைத்தில்லஞ் சேறாக்கும்' என்ற விசேடணமும் இவர்க்கு வெகு நேர்த்தியாகப் பொருந்தும். ராவணவதாநந்தரம் திருவயோத்திக்கு மீண்டு எழுந்தருளா நின்ற பெருமாளை நோக்கி பரத்வாஜ மஹர்ஷி "பங்கதிக்தஸ்து ஜடிலோ பரதஸ் த்வாம் ப்ரதீக்ஷதே" என்றார். இங்கு பரதாழ்வான் சேறு பூசப் பெற்றிருப்பதாகச் சொல்லப்பட்டதன் கருத்து யாது? இரவும் பகலும் நிசசலும் அழுதழுது நனைத்தில்லம் சேறாக்கினன் என்றபடி. "வண் பொன்னிப் பேராறு போல் வரும் கண்ண நீர் கொண்டு அங்கன் கோயில் திருமுற்றம் சேறு செய் தொண்டர்" என்றார் குலசேகரப் பெருமாளும். அவ்வண்ணமாகவே பொய்கை யாழ்வாரும் "பழுதே பல பகலும் போயினவென்று அஞ்சி யழுதேன்" என்று தாமே பேசினபடியே அழுதவராதலால் நனைத்தில்லஞ்சேறாக்கின ரென்க.

[கனைத்து] முதன் முதலாகப் பேசத் தொடங்கும் போது கனைப்பது இயல்பு. பொய்கையார்க்கு முன்னம் பேசினவர்கள் யாருமில்லை. இவரே முதன் முதலாகப் பேசத் தொடங்கினவரென்பது இவ்வினையெச்சத்தினால் தோற்றுவிக்கப்படும். [இளங் கற்றெருமை] எருமை யென்றால் மஹிஷீ; லக்ஷித லக்ஷணாக்ரமத்தால் தேவ தேவ திவ்யமஹிஷீ என்றவாறு. எம்பெருமானுக்கு திவ்ய மஹிஷியான பிராட்டியை யொப்பவர் இவ்வாழ்வார் என்பது ஸூசனை. "இளங் கன்றுகளையுடைய" என்று விசேஷண மிட்டதனால், மற்றை யாழ்வார்களனைவரும் இவர்க்கு வத்ஸ ஸ்தாநீயர்களாய் இவர் மாத்ரு ஸ்தாநீயர் என்று காட்டினபடி. ஆழ்வார்களுள் முதல்வரிறே யிவர். [கன்றுக் கிரங்கி] இவர் ஸ்ரீ ஸூக்தியருளிச் செய்யத் தொடங்கினது கன்றுகளான நம்போல்வார் பக்கலிலுள்ள பரம க்ருபையா லென்கை.

[நினைத்து முலைவழியே நின்றுபால் சோர.] பகவத் குணங்களை நினைத்தவாறே அந்த நினைவுதானே ஊற்றாகப் பால் போன்ற ஸ்ரீ ஸூக்திகள் பெருகப்புக்கன என்றபடி. [பனித்தலைவீழ நின் வாசல் கடைபற்றி] இவர் பொய்கையில் தோன்றினவராதலால் இவரது வாசற் கடையைப் பற்றுவார்க்குப் பனித்தலை வீழ ப்ராப்தமே யாகுமிறே. [சினத்தினு லித்யாதி.] இது ஸ்ரீராம குண

கீர்த்தனம். மஹர்ஷிகளின் ஞானக் கண்ணுக்கும் இலக்காகாத வொரு ஸ்ரீராம சரிதம் இவ்வாழ்வாருடைய அகக்கண்ணுக்கு இலக்கானமை "பூமேய மாதவத்தோன் தாள் பணிந்த வாளரக்கன் நீண் முடியைப், பாதமத்தா லெண்ணினான் பண்பு." என்ற இவரது பாசுரத்திற் பொலியும். அதில் "நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே!" என்றதற்குப் பொருந்த "மனத்துக் கினியானை" என்றாள். [இனித் தானெழுந்திராய்] "பழுதே பல பகலும்" என்கிற பாசுரம் பேசின பிறகுங்கூட உறங்கலாமோ? என்கை. முமுக்ஷுப்படியில் "பழுதே பல பகலும் போயினவென்று இழந்த நாளைக்குக் கூப்பிடுகிறவனுக்கு உறங்க விரகில்லை" என்ற ஸ்ரீ ஸூக்தியும் இங்கு அநுஸந்தேயம். [அனைத்தில்லத்தாரு மறிந்து] "அறியுமுலகெல்லாம் யானேயு மல்லேன்" என்ற இவ்வாழ்வாரது பாசுரத்தை அழகாக நினைப்பூட்டுகிறபடி காண்மின்.

இப்பாசுரத்தோடு ஆண்டாளுக்கு முந்தின ஆழ்வார்களை யெல்லாம் உணர்ததிற்றாயிற்று. "ஆழ்வார்கள் பன்னிருவர்" என்றுமுள்ள ஸம்ப்ரதாயப்படிக்கு ஸ்ரீ மதுரகவிகளும் ஆண்டாளும் ஆழ்வார் கோஷ்டியில் சேர்ந்தவர்களாதலால் இவ்விருவரையு முணர்த்துவதும் இப்பாட்டிலேயே அறியக் கிடக்கிறது. எங்ஙனே யென்னில்; நற்செல்வன் தங்காய்! என்றது நற்செல்வன் தங்கையே! என்று பொருள்படுதலால் நற்செல்வன் தன்னுடைய கையாக இருப்பவனே! என்றபடியாகும். இங்கு நற்செல்வ னென்பது நம்மாழ்வாரை. அவர் திருவாய் மொழி அருளிச் செய்கையில் மதுரகவிகள் அவருடைய கையின் ஸ்தாநீயராயிருந்து பட்டோலை கொண்டாராதலால் இந்த விளி மதுரகவிகட்குப் பொருந்தும்.

இனி நற்செல்வனென்று எம்பெருமானுரைச் சொல்லிற்றாகி அவருடைய தங்கையென்று ஆண்டாளையுஞ் சொல்லக் குறையில்லை. "கோதற்றஞானத் திருப்பாவை பாடிய பாவை தங்கை" என்றும், "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே" என்று முள்ளவை காண்க. ஆண்டாள் தன்னைத்தானே உணர்த்திக் கொள்ளுகை பொருந்துமோவென்று விரஸமாக வினவுவார்க்கு நாம் விடை யளிக்க வல்லோமல்லோம். சொற்சுவை அமைந்திருக்கு மழகை அநுபவித்துப் போருகிறோ மத்தனை.

இனிமேல் மூன்று பாசுரங்கள் ஆண்டாளுக்குப் பிறகு தோன்றிய மூன்று ஆழ்வார்களை அடைவே உணர்த்துவன. பிந்திய

acharya.org

ஆழ்வார்களின் படிகள், முந்தியே ஆண்டாளுக்கு எங்ஙனே தெரியுமென்று சிலர் சங்கிப்பரேல், "யேயஶ்ச வைதிகா: கேசித் யம் ஶ்ரீஹரே நாநுபாஷிண:" என்ற ஆளவந்தார் ஸ்ரீ ஸூக்தியையும் "ஜக்ஷீணாம் வஞ்ச னாநாம் வாஸ்ரயேத்யாதி" என்ற பவபூதிபாஷிதத்தையும் அன்னவர்கட்கு நினைப்பூட்டுவோம்.

8. புள்ளின்வாய் கீண்டானை.—இது ஆண்டாளுக்கு அடுத்த தொண்டரடிப் பொடியாழ்வாரை யுணர்த்தும் பாசுரம். [போது அரிக் கண்ணினாய்!] புஷ்பங்களை ஹரிப்பதிலேயே த்ருஷ்டியைச் செலுத்துபவரே! என்றபடி. புஷ்ப கைங்கரிய பரரிறே இவ்வாழ் வார். "துளபத் தொண்டாய தொல் சீர்த் தொண்டரடிப்பொடி" "தொடை யொத்த துளவமுங் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி" என்றவை காண்க. பாவாய்! என்ற விளியும் இவர்க்கு நன்கு பொருந்தும். பதிவ்ரதா சிரோமணியைப் பாவை யென்பர். இவ்வாழ்வார் அரங்கனொருவனுக்கே வாழ்க்கைப் பட்டு வேறொரு திருப்பதி யெம்பெருமானை நெஞ்சிலும் நினையாதவ ராதலால் இவ்வகையான கற்புச் சிறப்பு குறிக்கொள்ளத்தக்கது. திருவேங்கடமுடையானை திரே ஒருவர் "பதின்மர் பாடும் பெரு மாள்!" என்று ஏத்த, அதைக்கேட்ட பெரிய கேள்வி ஜீயர், 'சோழி யன் கெடுத்தான் காணும்; அந்த ஏற்றம் நம் பெருமாளுக் கில்லையே; நம்பெருமாளொருவர்க்கே' என்றார் என்ற ஐதிஹ்ய மும் இங்கு நினைக்கத் தக்கது.

[நன்னாளால்] 'மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால் என்ற திருவாக்கிலேயே இச் சொல்லும் வருகின்றது. தொண்ட ரடிப் பொடிகள் திருவவதரித்தது மார்கழித்திங்களே யாதலால் நன்னாளென்னத்தட்டுண்டோ? [கள்ளந் தவிர்ந்து] 'சூதனாய்க் கள்வனாகி' என்றும் 'கள்ளமேகாதல் செய்து' என்றும் 'கள்ளத் தேனானுந் தொண்டாய்' என்றும் பலகாலும் தமது கள்ளத்தைப் பேசிக் கொண்டாரிவ்வாழ்வார். இவரது சரிதையிலும் பொன் வட்டில் விஷயமான கள்ளம் அடிபட்டுக் கிடக்கிறது. அது தவிர்ந்து பகவத் பாகவத கோஷ்டியில் கலந்த படியை ஈற்றடி தெரிவிக்கின்றது. பெரியாழ்வார் போலவே இவ்வாழ்வாரும் பெரும்பாலும் பூம்பொழில் வாஸ முடையவராதலால் அவ்விடத்து அடையாளமாகப் புள்ளும் சிலம்பினகாண் என்பது இப்பாட்டிலும் புகுந்தது. [குள்ளக் குளிரவித்யாதி.] நீராட்டம் முதலிய நித்ய

acharya.org

கர்மாநுஷ்டானங்களையும் தவிர்ந்து சிலகாலம் பள்ளிக்கிடந்தமை இவ்வாழ்வாரது சரிதையிற் காணத்தக்கது. புள்ளின்வாய் கீண்டானை யென்று தொடங்கிக் கண்ணபிரானுடையவும் இராமபிரானுடையவும் கீர்த்திமை பாடினபடி சொல்லுகிறது. இவ்வாழ்வார் திருமாலையின் முடிவில் 'வள வெழுந்தவளமாட மதுரைமாநகரந் தன்னுள், கவளமால் யானை கொன்ற கண்ணனை யரங்கமாலை' என்று கண்ணபிரானுடைய கீர்த்திமையையும், திருப்பள்ளியெழுச்சியில் "மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதமாட்டிய வடுதிறலயோத்தி யெம்மரசே யரங்கத்தம்மா!' என்று இராமபிரானுடைய கீர்த்தியையும் பாடினமை யுணர்க. 'பிள்ளைகளெல்லாரும்' என்றது ஆண்டாள் தனக்கு முந்தின ஆழ்வார்களெல்லாரையுஞ் சொன்னபடி.

9. உங்கள் புழைக்கடை.—தொண்டரடிப் பொடிகளுக்கு அடுதத திருப்பாணாழ்வாரையுணர்த்தும் பாசுரமிது. இதில், நங்காய்! நாணாதாய்! நாவுடையாய்! என்ற மூன்று விளிகளும் பாண்பெருமாளுக்கு நன்கு பொருந்தும். நங்கை யென்பது குணபூர்த்தியைச் சொல்லுகிறது. லோக ஸாரங்க மஹாமுனிகள் வந்து என் தோளின் மீது ஏறிக் கொள்ளுமென்ன, அத்யந்த பாரதந்திரிய ஸ்வரூபத்தை நினைத்து அதற்கு உடன்பட்டமை குணபூர்த்தி, அங்ஙனம் அந்தணர் தலைவரது தோளின்மீது ஏறி யிருக்கச்செய்தேயும் சிறிதும் செருக்குக் கொள்ளாமல் 'அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன்' என்றே பேசினவராதலால் நாணாதவர். (நாண்—அஹங்காரம்.) 'பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தும் பழமறையின் பொருளென்று பரவுமின்கள்' என்று தேசிகன் பணித்தபடி ஸகல வேதார்த்தங்களையும் பத்துப் பாசுரத்திலே அடக்கிப் பேசின பரம சதுரராதலால் நாவுடையார். "கையினார் சுரிசங்கனலாழியர்' என்று சங்கொடு சக்கரமேந்தின வழகையநுபவித்தமை சுட்டியும், 'கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள்' என்று கண்ணழகில் ஈடுபட்டுப் பேசினமை சுட்டியும் 'சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன் பங்கயக் கண்ணானைப் பாட' என்றாள். இவ்வாழ்வார் தமது சாதிநிலைமைக்கு ஏற்ப வாழ்ந்த விடத்தைக் கருதி உங்கள் புழைக்கடையித்யாதி அருளிச் செய்யப்பட்டது. இவரது சரிதையில் ஸம்பந்தப்பட்ட லோகஸாரங்க மஹாமுனிகளின் தன்மையைக் காட்டுவது

acharya.org

போலுள்ளது செங்கற் பொடிக் கூறையித்யாதி. 'எங்களை முன்னமெழுப்புவான்வாய் பேசும் நங்காய்' என்பதில் ஒரு அழகிய பொருள் தொனிக்கும். (அதாவது—)எழுப்புவதாவது—தூக்கிக் கொள்வது. எங்களை என்றது பாகவதர்களை யென்றபடி. பாண் பெருமாளே! உம்முடைய முதற்பாசுரத்தில் 'அடியார்க் கென்னை யாட்படுத்த விமலன்' என்ற சொல் நயத்தை நோக்குங்கால் பாகவதர்களை நீர் தோளில் தூக்கிக் கொண்டாடுபவர் போலத் தெரிகின்றது. உமது கதையோ அப்படியில்லை.

மஹாபாகவதரான லோகஸாரங்க மஹா முனியின்தோளின் மீதேறி நீர் இருந்ததாகவுள்ளது. ஆகவே, முந்துறமுன்னம் பாகவத சேஷத்வத்தை நீர் சொல்லிக்கொண்டது வாய்பேசு மத்தனையே போலும் என்று விநோதமாகக் கூறுகிறபடி.

10. எல்லேயிளங்கிளியே.—பாண் பெருமாளுக்கு அடுத்த வரும் ஸர்வகநிஷ்டருமான திருமங்கை யாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. இவ்வாழ்வார் இரண்டு ஆய்ச்சிகளுக்குப் பரஸ்பர ஸம்வாதமாக * மானமரு மென்னோக்கி என்றொருபதிகம் அருளிச்செய்தவராதலால் இவரையுணர்த்தும் பாசுரமும பரஸ்பர ஸம்வாதரூப,'மாகவே அமைக்கப்பட்டது. 'கிளிபோல் மிழற்றி நடந்து மென்கிளிபோல் மிக மிழற்று மென்பேதையே' என்று பல பாசுரங்களில் இவர் தம்மைக் கிளியாகச் சொல்லிக்கொண்டவராதலால் கிளியே! என்ற விளி இவர்க்குப் பொருந்தும். அன்றியும், சொல்லிற்றையே சொல்லுவது கிளியின் இயல்பு அதுபோல இவர் 'மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கம் கூற' என்றபடி நம்மாழ்வார் ஸ்ரீ ஸூக்திகளை யநுஸரித்தே அருளிச் செய்பவராதலாலும் கிளியென்றது. இரண்டாமடி திருமங்கையாழ்வாருடைய விடையளிப்பு. [வல்லையுன் கட்டுரைகள் பண்டே உன்வாயறிதும்.] இது கலியனைநோக்கி ஆண்டாள் கூறுமது. 'வாசிவல்லீரிந்தளூரீர்! வாழ்ந்தேபோம் நீரே' என்று நீர் மிகக் கடினமாகப் பேச வல்லீரென்பது எனக்கு, [பண்டே—நீர் அவதரித்துப் பாசுரம் பேசுவதற்கு முன்னமே] தெரியுங்காணும் என்றாள். அதுகேட்ட கலியன் வல்லீர்கள் நீங்களே = 'கொள்ளுமபயமொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும், அள்ளிப்பறித்திட்டவன் மார்பிலெறிந்து என்னழலைத் தீர்வேனே' என்று அற வெட்டிதாகச் சொன்ன உன் பேச்சு கடினமா? என்

acharya.org

பேச்சு கடினமா? நீயே பார்க்கலாம்—என்றார். என்ற வுடனே *நண்ணாதவாளவுணர் *கண்சோர வெங்குருதி *முதலிய திருமொழி களில் தாம் அநுஸந்தித்த பாகவத சேஷத்வ காஷ்டையை நினைத்து *நானே தானாயிடுக என்றார். “உனக்கென்ன வேறுடையை” என்றது திருமங்கை யாழ்வார்க்கு அஸாதாரணமான திருமடல்திவ்ய ப்ரபந்த வக்த்ருத்வத்தை யுளப்படுத்தியதாகும். [எல்லாரும் போந்தாரோ இத்யாதி.] கலியனுக்கு முன்னமே மற்றுள்ள ஆழ்வார்கள் அவதரித்து, பன்னிருவர் என்கிற ஸங்கியை இவரோடு நிரம்பிற்று என்று தெரிவிக்கப்பட்டது.

[வல் ஆனை கொன்றானை—மாயனைப் பாட.] ஆனையைக் கொன்ற விஷயத்தை ஒரு ஆச்சரியமாக எடுத்துப் பேசினவர் கலியன். “ஆவரிவை செய்தறிவார் அஞ்சனமாமலை போலே” என்ற பெரிய திருமொழி காண்க. அடிக்கடி கலியன் வாய்வெருவுவதும் வல்லானை கொன்ற வரலாற்றையே; “கவள யானைகொம் பொசித்த கண்ணனென்னும்” இத்யாதிகள் காண்க. [மாற்றாரை மாற்றழிக்க வல்லானை மாயனைப் பாட] எம்பெருமான் தன் திறத்தில் மாறு செய்பவர்களது செருக்கை வெகு ஆச்சரியமாக அடக்குபவன் என்பதைக் காட்டுகின்ற சரிதைகளுள் கோவர்த்த நோத்தரண கதை மிகச் சிறந்தது. மாறு செய்த இந்திரனுக்கு ஒரு தீங்கு மிழைக்காமலே கண்ணன் அவனது கொழுப்பை யடக்கினனிறே. இக் கதையிலே கலியன் மிக்க ஆற்றமுடையவர்; பெரிய திருமொழியை முடிக்கும் போதும் “குன்றமெடுத்து ஆநிரை காத்தவன் தன்னை” என்றார்; சரமப் பிரபந்தமாகிய திருநெடுந் தாண்டகத்தை முடிக்கும் போதும் “குன்றெடுத்த தோளினானை” என்றே தலைக் கட்டினார்.

ஆக விங்ஙனேயுள்ள பல்வகைப் பொருத்தங்களினால் ஆண்டாள் ஒவ்வொரு பாசுரத்தாலும் ஒவ்வொரு திருத் தகப்பனாரை யுணர்த்தினளென்று நிர்வஹிக்கும்படி. இப்பொருத்தங்களை இன்னமும் விவரிக்கப் புகுந்தால் “பன்னி யுரைக்குங்கால் பாரதமாம்” என்ற கணக்கிலே விரிவு பெரிதுடைத்தாகுமென்று ஸம்க்ஷிப்தமாயிற்று.

காஞ்சீவாதிஹயக்ரீவம்ஶ்யாணாம் ஹராயுக் ஸம்க்ஷிப்தா |
மோதாவஸித்த ஹஸ்த்ய ப்ரகாஶிகேஷா ஸதாம் உத்தேஶ்யாத் ||

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம்.

[பத்ராதிபர்.]

165வது பக்கத்தின் தொடர்ச்சி

வ்யூகமாவது ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை நிர்வஹிப்பதற்காகவும் ஸம்ஸாரி சேதனர்களின் அநிஷ்டங்களை யகற்றி இஷ்டங்களை அளித்து ரக்ஷிப்பதற்காகவும், ஸம்ஸாரத்தின் கொடுமையை நினைத்து இந்த ஸம்ஸாரத்தை யொழித்து தன்னை யடையவேண்டுமென்று நினைத்துத் தன்னை யுபாஸிக்கு மவர்களுக்கு ஸம்ஸாரத்தை யொழித்துத் தன்னையடையும்படி யான யநுக்ரஹத்தைப் பண்ணுவதற்காகவும் வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த பேதத்தால் நான்கு வகைப்பட்டிருக்கும்.:....

1. இதில் வாஸுதேவர் நித்யோதிதரான பரவாஸுதேவனிடத்தில் நின்றும் உத்பன்னராய் ஶாந்தோதிதர் என்கிற பெயரை யுடையராய் ரூப குணங்களால் பரவாஸுதேவரை யொத்து ஸங்கர்ஷணாதி வ்யூஹத்திற்குக் காரண பூதராய் பகவத் விஷய ஜ்ஞாநத்தால் அடையப்பட்ட ஸ்வரூபத்தையை யுடைத்தான சேதநர்களால் உபாஸிக்கத் தகுந்தவராயிருப்பர்.

2. ஸங்கர்ஷணர். வாஸுதேவரிடத்தில் நின்றும் உண்டானவராகையால் ஜ்ஞாநாதிஷட் (ஆறு) குணங்களையு முடைத்தாயிருந்தாலும் தான் செய்யவேண்டிய கார்யங்களுக் கநுகூலமான ஜ்ஞாந பலங்களாகிற விரண்டு குணங்களோடுங் கூடி அசித்தோடு அவிசேஷமாய்க் கிடக்கு மாத்ம தத்வத்தை யதிஷ்டித்து தன்னுடைய அதிஷ்டான விசேஷத்தால் ஆத்மாவை ப்ரக்ருதியில் நின்றும் விவேகித்து நாமரூபங்களை யுடையதாகச் செய்து வேதாதி ஶாஸ்த்ர ப்ரவர்த்தநத்தையும் ஜகத் ஸம்ஹாரத்தையும் பண்ணக்கடவராய் சேதநர்களின் ஸுஷுப்தி தசையில் ஹ்ருத் கர்ணிகையை ஸ்தாநமாகக் கொண்டு பாஹ்ய விஷயங்களையும் ஸ்வாப்ந விஷயங்களையும் அநுபவிப்பியாமல் ஜீவாத்மாவின் ஸ்வரூபமான ஆனந்தத்தை யறிவித்து அநுபவிப்பியா நிற்பர்.

3. ப்ரத்யும்நர். ஐஶ்வர்ய வீர்யங்களாகிற விரண்டு குணங்களை யுடையராய் ஜ்ஞாந ப்ரஸரணத்திற்கு யோக்யமான மநஸ்தத்வத்தை யதிஷ்டித்து ஶாஸ்த்ரோக்தமான தர்மாநுஷ்டான யோக்யமான

acharya.org

வுபதேசத்தையும் ஸூத்தஸத்வநிஷ்டர்களாய் முகபாஹூருபாதங் (முகம் தோள் தொடை கால்)களிலிருந்து முண்டான ப்ராஹ்மணாதி முநு சதுஷ்டய மிதுநங் (ஸ்திரீ புருஷர்)களை ஸ்ருஷ்டிக்கக் கடவராய் சேதநர்களின் ஸ்வப்ந தசையில் கண்டத்தை ஸ்தாநமாகக் கொண்டு ஜாக்ரத்தசையில் (விழித்துக்கொண்டிருக்கும்பொழுது) கண்களால் காணப்பட்ட பதார்த்தங்களின் பழக்கத்தாலுண்டான விஷயங்களையும் ஜாக்ரத்தசையில் காணப்படாத தாத்காலிகமாக ஸ்ருஷ்டிக்கப்பட்ட பதார்த்தங்களையும் தோற்றுவித்து அநுபவிப்பியா நிற்பர். . . . . . .

4. அநிருத்தர். ஶக்தி தேஜஸ் என்கிற இரண்டு குணங்களோடுங் கூடி ஜகத் ரக்ஷணத்தையும் ஜகதுஜ்ஜீவந ஹேதுவான ஜ்ஞாநப்ரதாநத்தையும், ராஜஸதாமஸகுணப்ரசுரர்களாய், ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய் ஸர்வ நியந்தாவாய் ஸர்வரக்ஷகனாயிருக்கும் ஸர்வேஶ்வரனையறியாதே அவன் விஷயமான ஜ்ஞாந பக்திகளின்றிக்கே பகவந்நிந்தையைப் பண்ணா நின்றுகொண்டு பூர்வஜன்மங்களில் பண்ணப்பட்ட கர்மத்தின் பலமாக ஸ்வர்க்காதிகளில் ரமித்து பலாவஸாநத்தில் அத: பதிதர்களாய் "புநரபிஜநநம்புநரபி மரணம்" என்கிற படியே மாறி மாறிப்பல பிறவிகளை யடைந்து ஸம்ஸார மார்க்கத்தி லிசசை யுடையர்களாய்த் திரியா நிற்கும் மிஶ்ரவர்க்க ஸ்ருஷ்டியைப் பண்ணக்கடவராய் சேதனர்களின் ஜாக்ரத்தசையில் வலதுகண்ணை வாஸஸ்தாநமாகக் கொண்டு பாஹ்யமான பதார்த்தங்களை யறிவித்து அநுபவிப்பியா நிற்பர்.

கந்தாடை ராமாநுஜார்ய ஸூக்தி விமர்ச:

(பி. ஆர். ஆராவமுதய்யங்கார்.)

வாசாமெடாக்ஷுள வாமஹூதெவா ஸுகவீநாம்
ஶ்லோகவ்ருஜ்ஞாஸுஜூர்த்யேரா ஹஜ ஹவதி |
மொரோயடிநாம் கொகிலயடிநாேவி ஶஜ்ஜைஷு
ஶகாகாரா ோநவஸூத்ிஜோஹிஷாணாழ் ||

ஆனிதன்னிற் சோதி நன்னாளில் அவதரித்த வைஜயந்தீ பத்திரிகையில், ஸ்ரீமத். சேனங்குளம் கந்தாடை ராமாநுஜாசாரியார் ஸ்வாமியின் வியாஸமாக "அத்யமே ச்லோகார்த்த தத்வ ப்ரதிஷ்டா

acharya.org

கண்டனம்” என்பதைப் படித்தேன். ஷெடி ஸ்வாமி தம்முடைய வியாஸத்திற்கு, ‘கண்டன’மென்று திருநாமம் சாத்தி அவ்வளவிலேயே பரமானந்த மெய்தினர் போலும். பாமரர்களுங்கூட உகப்பதற்கு விஷயமாகாதபடி “ததாபி’ ப்ரேமேண’ ப்ருவாமி ‘ச்லோகம்’ ச்ரோத்ரப் புடத்தோஷகரம் ந்ருணாம்’ என்றபடிக்கு யமகனுவுள்ள ஷெடி ஸ்வாமியின் ஸப்தார்த்த விந்யாஸங்களைப் பொருள்படுத்தி விடையளிக்க வேண்டிய அவசியம் சிறிதும் தென்படாமையால் அது பற்றி அடியேன் யாதொன்றும் எழுதத்தேவையில்லை.

அத்யமே ச்லோகார்த்த விஷயமாக அண்ணுஸ்வாமி யெழுதியிருக்கும் விஷயங்கள் ஒருபுறமிருக்கட்டும். பத்ராதிபரான ஸ்ரீமான் வடகரை ஸ்வாமி சுருக்கமாகவும் கல்நெஞ்சும் கரையும்படியாகவும் வெகு அழகாக எழுதி வெளியிட்டிருக்கின்ற விஷயங்கள் போதுமே விவேகிகளின் உள்ளம் குளிர்வதற்கு. நேற்று ஆனி மாதப் பத்ரிகையிலும் அவர் நாலே பக்கத்தில் ஸாரமாக வெளியிட்டிருக்கின்ற விஷயத்திற்கு மேல் யாருக்கும் வக்தவ்யமான விஷயலேஸமும் கிடையாதென்பது திண்ணம். ஸம்ஸ்க்ருத பாஷையில் பரிசய முள்ளவர்கள், அத்யமே ச்லோகத்திலுள்ள மரண பதத்தை மே என்பதிலிருந்து பிரித்து ஸாகரஸ்ய என்பதோடே கூட்டுவதற்கு நெஞ்சிலும் நினையார்கள். இதற்கு மேல் இங்கு நாம் எழுதுவது பிஷ்ட பேஷணமே யாகும்,

இல்லாததும் ஏலாததுமான அர்த்தத்தை நம்பிள்ளையினுடையதாகப் பழி சுமத்திப்பேசுமவர்கள், க்ரமமான அந்வயத்திலே கிடைக்கிற பொருளை விட்டு அக்கிரமமான அந்வயத்தை என்ன அர்த்த ஸ்வாரஸ்யங் கொண்டு நம்பிள்ளை திருவுள்ளம் பற்றினரென்று சிறிது நிரூபிக்கவேண்டுமே. ஸமுத்ர சரணாகதி ப்ரகரணத்தில் பெருமாள் பட்டினிவிட்டுக் கிடந்ததைக் கொண்டு ப்ராயோபவேசமென்கிறது பாட்டிகள் கதையென்று ஷெடி கண்டன ஸ்வாமி யெழுதுகிறார். அந்த பாட்டிகள் தாம் மஹா வித்வான்களாய் ஆக்ஷேபகர்களாக எழுந்திருக்கிறார்களென்பதை இவர் அறிந்திலர்போலும். பட்டினி விட்டுக்கிடப்பது தானே ப்ராயோபவேஸமும். வேறு என்ன? “ஸ்ரீராமாயணம் [illegible] [illegible] என்கிற ஸமாதியில் அமைந்தது” என்று எழுதியுள்ள இவர் “இற்றை முடிதல் கடத்தல்” என்கிற பாடத்தையே நன்கு ஸ்தாபித்தவராகிறார். மே மரணமென்று [illegible]

acharya.org

ஸாமாநம் ஸௌஷுப்திஷேந்த்ராதி என்று க்ருதோபலக்ஷிதம். இங்ஙனல்லாமல் அத்யமே ச்லோகத்திலேயே ஸாகரமரணமும் ஸங்கல்பித மென்பார்க்கு யதாவகாசம் தத்ராவஸித மென்னவேண்டு மத்தனை யாகையால் ஸந்த்யாவகாசாத மென்றது பொருந்தவே மாட்டாது. மணல்சோற்றில் கல் ஆராய்வது போன்ற ப்ரவ்ருத்தியில் அடியேன் தலையிடுதல் அழகல்லாமையால் இவ்விசாரத்தில் இவ்வளவோடு நிற்கின்றேன்.

ஷடி கண்டன ஸ்வாமி எழுதி வருகையில், 97 லக்கமிட்டு "தென்மொழியில்தான் ப்ரஸங்கமென்றிருந்தோம்; கண்டது வடமொழியிலும் கண்டதே பாண்டித்யம்" என்றொரு அதிகமான ப்ரஸங்கம் செய்திருக்கிறார். 'எப்படிப்பட்ட ஸ்ரீகோசங்களிலும் பரிதாபகரமான பாடப் பிழைகள் புகுந்துவிட்டன' என்று அண்ணாஸ்வாமி தத்வ ப்ரதிஷ்டையில் பஹுளமாக நிரூபித்து வருகையில் ஸ்ரீ பாஷ்யத்திலும் முதலிலும் முடிவிலும் இரண்டு பாடப் பிழைகள் ஸம்பதிதங்களாய்விட்டன என்று ப்ராமாணிக பண்டிதர்கள் கொண்டாடும்படியாக நிரூபித்திருக்கிறார். அதில் பரிஹாஸமாக இந்த ஸ்வாமி இங்ஙனம் எழுதுகிறார். சென்னையில் நாலாறு மாத காலமாய்ச் சில வித்வான்கள் கூடி ஸ்ரீ பாஷ்யத்தை அநேக வியாக்கியானங்களுடன் தேவநாகரலிபியில் மாஸ ஸஞ்சிகையாகப் பதிப்பித்து வருகிறார்கள். அதில், சித்திரைமாதத்தில் வெளிவந்த ஸஞ்சிகையில் "வ்யூதி வ்யவஸவ ஸம்ஹவாகு" என்று பிழையான பாடத்தையே பதிப்பித்திருந்தார்கள். அங்ஙனம் பதிப்பித்த வித்வான்கள் காஞ்சீபுரம் வைசாகோத்ஸவத்திற்கு எழுந்தருளி யிருந்தபோது, ஷடி பிழையான பாடத்தை நீங்களும் பதிப்பிக்கலாமோ? என்று அண்ணாஸ்வாமி கேட்டார். அது எப்படிப் பிழை? என்று அவர்கள் கேட்டார்கள். ஶாஸ்த்ரஜ்ஞர்கள் முன்னிலையில் அண்ணாஸ்வாமி நிரூபித்துக் காட்டினார். ஸ்ரீ பாஷ்ய தாள கோஶத்தையும் ஸம்பாதித்துக் காட்டினார். அவர்கள் பரம த்ருப்தி யடைந்து, அடுத்த ஸஞ்சிகையில் அண்ணாஸ்வாமியின் திருவுள்ளப்படி வ்யதிவ்யவஸவ ஸஹோவாகு என்று திருத்தி வெளியிட்டுவிட்டார்கள். தேசிகன் தத்துவடீகையில் ஸத்பாவாத் என்கிற பாடத்தையே கொண்டிருக்கிறாரென்பதையும் வித்வான்கள் அறிவார்கள். சென்னை பச்சையப்பன் காலேஜ் ஸம்ஸ்க்ருத பண்டிதரான ஸ்ரீ. உ. வே. வி. அனந்தாசாரியர் ஸ்வாமியே

acharya.org

அண்ணாஸ்வாமியுடன் இந்த ஆராய்ச்சியைச் செய்து தெளிவுபெற்றவர். அந்த ஸ்வாமியே இப்போது திருத்தம் வெளியிட்டிருப்பவர். இங்ஙனம் அண்ணாஸ்வாமியின் ப்ராமாணிக நிரூபணங்களை ஆதரிக்கச் சில பாக்யசாலிகளே ஏற்படுவர்கள். "கற்றோர்கள் தாமுகப்பர்" என்கிற மணவாள மாமுனிகளின் பாசுரம் பழுதுபடாமே உபயவித அதிகாரிகளும் என்றைக்கு மிருப்பதில் வியப்பில்லை. (ஸ்ரீபாஷ்ய) சரமஸூத்ர பாஷ்யத்தில் ஸம்ஹாவாஶங்கா என்கிற பாடம் ஸம்ஹாவநாஶங்கா என்று மாறிற்று என்பது அண்ணாஸ்வாமி யெழுதியிருப்பது. ஸம்பாவநா என்பதற்கே ஶங்கா என்று அர்த்தமாதலால் மீண்டும் ஶங்கா என்பது புநருக்தியாகிப் பொருந்தாதென்பது வித்வான்கள் எளிதாகவுணரக்கூடிய விஷயமிது. [ஸம்ஹாவநாதிஶங்கா ஶங்கா] என்று இந்த கண்டனஸ்வாமி பாஷ்யம் ஸாதிக்கிறார். வெங்கடாசலவைபவம் ... என்பதுமாகிய ஸ்ரீஸூக்திகளையும் கண்டோமுக்கு இதிலும் வியப்பில்லை.

அந்தோ! இத்தகைய மேதாவிகள் தங்களுக்குரிய விதூஷணத்தைப் பூண்டு விளங்குதல் அழகியதாகுமோ!.

இதற்கு மேல் இது விஷயமான கண்டனம் அங்கீகரிக்கப்பட மாட்டாதென்பதை ஸவிநயம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பத்ராதிபர்

வர்த்தமானங்கள்

ஸ்ரீரங்கம்

ஆவணி 12. (27-8-36) திருமுளை, ஆவணி 13. (28-8-36) திருபவித்ரோத்ஸவம், ஆவணி 21. (5-9-36) சாற்றுமுறை, ஆவணி 2 (8-9-36) ஸ்ரீஜயந்தி பெரியவாச்சான்பிள்ளை திருநக்ஷத்திரம்.

காஞ்சீபுரம்

ஆவணி 6. (21-8-36) உலகளந்த பெருமாள் சன்னிதியில் பவித்ரோத்ஸவம், (26-8-36) பூர்ணாஹுதி. யதோக்தகாரி. 1-9-36-ல் பூர்ணாஹுதி. தேவப்பெருமாள், 1-9-36-ல் ஆரம்பம், 7-9-36-ல் முடிவு

acharya.org

ஸ்ரீ꞉.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம꞉.

அத்யமேச்லோகார்த்த தத்வவிமர்சம்.

[காரப்பங்காடு வித்வான் சிங்கப்பெருமாள் ஸ்வாமி தமையனார் குமாரர் சேனங்குளம் வித்வான் வெங்கடாசாரியார்.]

ஸ்ரீராமாயணத்தில் கடலைநோக்கிப் பெருமாள் சரணம்புகுந்ததாகச் சொல்லுமிடத்திலுள்ள (அத்யமே மரணம்வாபி தரணம் ஸாகரஸ்யவா) என்கிற ச்லோக விஷயமாக ஸ்ரீ அண்ணாஸ்வாமி திருவாய்மொழி திவ்யார்த்த தீபிகையில் முன்னம் வெளியிட்ட நிரூபணங்கள், அதன்மேல் விளைந்த ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானமாக அவதரித்த தத்ப்ரதிஷ்டை, தத்வபரிசிஷ்டம், பிறகு வைஜயந்தீ பத்ரிகையில் வெளிவந்தவைகள் ஆகிய இவையெல்லாம் அடியேன் ஸேவிக்கப்பெற்றேன். இவற்றால், ஏற்கனவே பலவருஷ காலமாக அடியேனுக்குண்டாயிருந்த ஸம்சயம் நீங்கி ஒருபடி தெளிவுபெற்ற முறையை இங்கு ஒருவாறு விண்ணப்பிக்க எண்ணமுண்டாகியது.

இதில் அடியேனுடைய அபிப்ராயத்தைக் கேட்டார் ஒருவருமில்லை. "உன்னுடைய அபிப்ராயம் எப்படி?" என்று சிலர் கேட்பதற்கும் அடியேன் ஒருவிதத்திலும் அர்ஹனுமல்லேன். வ்யக்தி ஒன்றிருப்பதாக நினைத்து அவஜ்ஞை செய்வதற்குகூட நினைவுக்கு விஷயமாகக்கூடியவனல்லன் அடியேன். அப்படியிருக்கவும் அடியேன் இங்கு விண்ணப்பிக்கத் தொடங்கியது என்னெனில்; என் சொல்லுவேன்? "காக்கைவாயிலும் கட்டுரைகொள்வர்" "பல்லியின் சொல்லும் சொல்லாக்கொள்வதோ வுண்டுபண்டுபண்டே" இத்யாதிக்கணக்கிலே யாகுமத்தனை.

acharya.org

ஸ்ரீ. உ. வே. ஆஸூரி. ராமாநுஜாசாரியர் ஸ்வாமிக்கும் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியர் ஸ்வாமிக்கும் இதுவிஷயமான அபிப்ராய பேதம் ஏற்பட்டிருப்பதாய்த் தெரிந்தது. இரண்டு மஹா கஜங்களுக்கு ஏற்பட்டிருக்கிற விஷயத்தில் மஶகஸ்ய மஶக ஶ்ராயணை அடியேன் ஸ்வாபிப்ராயத்தை ஒருவிதமாக எடுத்துக் காட்டுவதென்பது வஹ்நிதவாத ஸாயாஹ்நே ந ஹாஸ்யஸாநாஹத்துக்கு ஏற்பட்டதொரு விதூஷகவ்யாபார விஶேஷமாகும். ஆகையால், "அடியேனுக்குப்பட்ட முறை இப்படி; பெரியாருடைய அபிப்ராயபேதமோ அப்படி; அடியேன் தெளிந்துகொள்ளும் முறை எப்படி?" என்று தெரிந்துகொள்வதற்காகவே அடியேன் சிறிது விண்ணப்பிப்பது என்று கொள்வது.

முதலில் ஒரு முக்கியவிண்ணப்பம். இக்காலம் பொதுவாகவே பண்டிதர்களும் விவேகிகளும் குறைந்த காலம். அதிலும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் மிகக்குறைவு. அதிலும் தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தில் மிகக்குறைவு. அப்படிப்பட்ட இக்காலத்தில் ஸ்ரீ. ஆஸூரி. ராமாநுஜாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உ. அண்ணங்கராசார்ய ஸ்வாமி ஆகிய இரண்டு திருநாமங்களும் நம் தர்ஶனத்திற்கு இரண்டு மஹாரத்னம். அடியேனுக்கு இவ்விரண்டு திருநாமங்களிடத்திலும் யதோக்திஸந்திகை என்கிற பொதுவான முறையன்றிக்கே பூருவாசாரியர்களிடம்போல் அவதார விஶேஷமென்கிற ப்ரதிபத்தியே கனத்திரா நின்றது. இது ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் உத்த்ருத்ய புஜமுச்யதே | விஶேஷஜ்ஞர்கள் குறைந்துவரும் இக்காலத்தில் கிடைத்திருக்கிற அருமருந்தான இவ்விரண்டு திருநாமங்களையும் கருவிலே திருவிலாத அடியேன்போல்வாரான இக்காலத்திலுள்ளாரும் பிற்காலத்தவரும் நெடுங்காலம் அநுபவித்து வாழும்படி இவ்விரண்டு ஸ்வாமிகளின் காலம் பல்லாண்டு பல்லாண்டாய்ச் செல்லும்படி ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களான தேவப்பெருமாளும் எம்பெருமானாரும் பரிபூர்ணகடாக்ஷம் செய்தருளவேணுமென்று பிரார்த்திக்கிறேன்.

ஆசார்ய ஸ்ரீஸூக்திகள் காலப்பழமை முதலிய பல ஹேதுக்களாலே பலவிதமான மாறுதலடைந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. அதை இக்காலத்தில் ஆராய்ந்து நிர்ணயிப்பார் ஆரு

மில்லை. அச்சு ஏற்பட்டது ஒரு பெரிய குறை. தாள கோசங்களும் பிழையற்றது கிடைப்பதரிது. இருக்கிற தாள கோசங்களும் பல விடங்களில் கரையானுக்கு இரையாயின. ஆகையால் ஸ்ரீஸூக்தி களில் பல பிழைகளிருப்பதை இருந்தபடியே அநுபவிக்கவேண்டி வருகிறது.

அடியேன் பல பல க்ரந்தங்கள் ஓலையில் ஏறியருளப்பண்ணி யிருக்கிறேன். ஸ்ரீராமாயண மஹாபாரதாதிகளுக்கு மேல்பட்டி ருக்கும் அடியேனேறியருளப்பண்ணின க்ரந்தங்கள். அடியேனு க்கு ஒருவர் ஏடுபார்த்துச் சொல்லவில்லை. அடியேனே பங்க்தி களைப் பார்த்துப் பார்த்து எழுதியது. அவற்றில் எத்தனையோ விடங்களில் (ற்ற) என்னவேண்டு மிடங்களில் (த்த) என்றும், (ன்ற) என்னவேண்டு மிடங்களில் (ன்ன) என்றும் இப்படி எத்தனை யோ விபர்யாஸங்களுடன் எழுதியிருக்கிறேன். கொஞ்சநாள் அதற்காக ஏடுகளை அடித்தும் கிழித்துமிருக்கிறதாக நினைத்துக் கொண்டிருக்கிற அடியேனுக்கும் ஸ்வப்ராவஸ்வாவஸ்தையே ஏற்பட்டு எழுத்துக்கள் மாறுபட்டிருக்கிறது. மணிப்ரவாள ஸ்ரீ கோசங்களை எந்தத் திருமாளிகையிலிருந்து எடுத்து ஸேவித்தா லும் தமிழிலக்கண ரீதிக்குப் பொருந்தின அக்ஷர விந்யாஸங்க ளோடு கூடின தாளகோசம் ஒன்றுகூட இல்லையென்று அடியேன் ஸத்யமாக விண்ணப்பிக்கமுடியும். இந்த விண்ணப்பத்தைப் பொய் யாக்குவதற்காகவாகிலும் ஒருவர் ஒரு நல்ல தாளகோசத்தை ஸம் பாதிக்க முயற்சிகொண்டு பார்க்கலாம். பூருவாசாரியர்கள் தம்தம் திருக்கையால் ஏறியருளப்பண்ணின ஸ்ரீகோசம் நமது பாக்ய வசத்தால் கிடைத்தாலொழிய, மற்றைப்படி பின்புள்ளார் திரு வெழுத்துச்சாத்திய தாளகோசங்களெல்லாம் ஒரேவகையான ஸம்சயங்களோடு கூடியவையே காணப்படும்.

ஆதலால் யாறெட்டி யென்னுள் பாசுரத்தி னீட்டில் அண்ணா ஸ்வாமி நிரூபித்திருப்பதுபோன்ற மாறுதல் ஸாதாரணமாக ஸம் பாவிதமே யென்கிற எண்ணம் அடியேனுடைய நெஞ்சைவிட்டு அகலவில்லை; அடியேன் சிலநாள் திருநாராயணபுரத்தில் இருந்த துண்டு. அங்கு ஸ்ரீமண்டயம் ஆழ்வார் ஸ்வாமி திருக்குமாரர் மஹாவித்வான் ஸ்ரீ தார்தாசாரியர் ஸ்வாமி ஸ்வஹஸ்தத்தால் தெலுங்கு லிபியில் ஒரு மணிப்ரவாள க்ரந்தம் ஏறியருளப்பண்ணி

acharya.org

யிருந்தார். அதை சோதிப்பதற்கு அடியேனைக்கூட இருக்கும்படி நியமித்தார்; சோதிக்கும்போது ["ஊன்வாட வுண்ணுதென்கிற படியே"] என்று வந்தவிடத்தில் தெலுங்கு லிபியில் (உஊன்வாட) என்றெழுதியிருந்தார். இங்ஙனே பல மாறுதல் இருந்தன. அவை களைத் திருத்தினேன். தெரிந்தவர்களுக்கும் இப்படி பல பிழை கள் ஸம்பவித்துவிடுகிறது. நல்ல நிரூபகர்கள் ஏதேனும் ஒரு தாள கோசத்தை யெடுத்து ஆநுபூர்வியாக ஊன்றி ஸேவிக்கப்புகுந் தால் எல்லாம் அவரவர்களின் திருவுள்ளத்திற்கே நன்றாய்ப் புலப் படும். எல்லாரும் இப்போது அச்சு ஸ்ரீகோசங்களிலேயே பழகி வருவதால் ஓலை ஸ்ரீகோசங்களின் தன்மைகளை அநுபவமுடை யார் எடுத்துரைப்பது சிற்றத்திற்கு உடலாகிறது. இது நிற்க.

ஜகத்ப்ரஸித்தராக எழுந்தருளியிருந்த (அடியேனுடைய வித்யாகுருவானவரான) காரப்பங்காடு. ஸ்ரீ. உ. வெ. சிங்கப்பெரு மாள் ஸ்வாமி ஸந்நிதியில் அடியேன் ஸ்வரூப க்ரந்தங்களை அதிக ரிக்கும்போது பகவத்விஷயத்தில் யானொட்டியென்னுள் பாசுரம் வந்தவாறே அப்போது சுருக்கமாகவும் விஷயமாக நேர்ந்த வனவயும், ஸ்ரீ; உ. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் திரு வாய்மொழி திவ்யார்த்த தீபிகையில் இதுவிஷயமான விபுல விசா ரத்தை ஸேவிக்க நேர்ந்தபோது, அடியேனுக்கு தகவுஸாஹ்ய மாவகரும் ஸஹ்ருதயமானுமான ஸ்ரீ. உ. வே. சேரங்குளம் பஹுகுடும்பி வரதாசார் ஸ்வாமி ஸாதித்த ப்ரகாரமும், இதை யொட்டி அடியேனுக்குப்பட்டதொரு ப்ரகாரமுமாகிய இவை களை யதாமதமாக விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ சிங்கப்பெருமாள் ஸ்வாமி ஸந்நிதியில் யானொட்டியென் னுள் பாசுரம் காலக்ஷேபமாகும் ஸமயத்தில், அத்யமே ச்லோகத் தில் ஸ்வாமி நம்பிள்ளை வ்யுத்க்ரமாந்வயம் காட்டியிருப்பதற்கு நிதானமென்ன என்கிற கேள்வி பிறந்தது. மேல்வாவனோநய என்றி ருப்பதைக் கடாக்ஷித்து வ்யுத்க்ரமாந்வயம் திருவுள்ளம் பற்றியது என்று அரும்பதத்திலிருப்பதான வார்த்தையும் நடந்தது. சரணா கதி காலத்திலேயே நிக்ரஹாபி ஸந்தியையும் பெருமாள் உள்ளத்தே கொண்டாரென்பது பெருமாளுடைய சீலத்திற்குப் பொருந்துமா என்கிற ப்ரஸ்தாவமும் விளைந்தது. ஏட்டில் பாடம் தவறியிருக்

acharya.org

குமோ என்கிற ஸம்ஶயமும் உண்டாயிற்று. அரும்பதக்காரர் விவரித்திருப்பதால் பாடம் மாறுதலும் கொள்ள இடமில்லையே என்னும் வார்த்தையும் நடந்தது. கடைசியில், இந்த இடத்தில் நெடுநாளாய் ஶங்கை ஜநிப்பதுண்டு என்கிற பேச்சுமுண்டாயிற்று. ஆனால், இவ்விடத்தில் உள்ளபடியே கொள்ளவேண்டியது இது தான் என்றுவது, பாடபேதம் இருந்திருக்கத்தான் வேணுமென்றுவது முடிவு பிறந்ததாக இப்போது ஞாபகமில்லை. ஶங்கைகள் தோன்றிய ப்ரஸ்தாவம் நடந்ததுமட்டும் இப்போது நன்றாக ஞாபகத்திற்கு வருகிறது.

ஸ்ரீ அண்ணாஸ்வாமியின் திவ்யார்த்த தீபிகையை ஸேவித்த பிறகு பழைய ப்ரஸ்தாவமெல்லாம் ஒருபடி ஞாபகத்திற்குவந்தது. இந்தஸமயம் சித்தியா எழுந்தருளியிருந்தால் இதுவிஷயமாக ஸ்வாமி திருவுள்ளம்பற்றும் முறை எப்படி யிருக்குமென்று தெரிந்துகொள்ளப் பெறலாமேஎன்றும் தோன்றிற்று. ஸ்ரீஸ்வாமி சித்தியா (சிங்கப்பெருமாள்) அடிக்கடி ஸாதிப்பது ஒன்றுண்டு; அதாவது — ஸ்வாமி மணவாளமாமுனிகளுக்குப் பின்னிட்டாருடைய க்ரந்தங்களில் யாவதம்ஶமும் ஸ்வரஸமன்று என்று கொஞ்சம் ஸதூஷியாய் ஸாதிப்பதுண்டு. அடியேனுக்கும் அந்த வாஸனையே ஏறி அரும்பதவுரைகளில் ஆங்காங்கு அடியேனும் தோஷங்களை நினைப்பதுண்டு.

ப்ரக்ருதத்தில் ஸ்ரீ அண்ணாஸ்வாமி காட்டியபடி பாடபேதம் புகுந்தபடியையும் அரும்பதவுரைக்கு அந்யதாஸித்தி ஸாதித்திருக்கிற முறையையும் ஸேவிக்கும்போது வாஸ்தவமாய் பரமத்ருப்தி யுண்டாயிற்று, அந்தஸமயம் சேனங்குளத்தில் ஸ்ரீ பஹுகுடும்பி வரதாசாரியர் ஸ்வாமி ஹழவஷிஷய ப்ரவசநம் நடத்திக்கொண்டிருந்தார். அதேஸமயத்தில் அடியேனிடத்திலும் பகவத்விஷயம் ப்ராரம்பித்து ஸேவித்து வந்தார்களு முண்டு. இரண்டிடத்திலும் ப்ராயேண ரஸிகர்களாயே சேர்ந்திருந்தார்கள். அடிக்கடி அண்ணாஸ்வாமியின் க்ரந்தங்கள் கிடைக்கும்போதெல்லாம் அவற்றை காலக்ஷேப கோஷ்டியில் பலரும் கேட்க வாசித்து அநுபவிப்பது வழக்கம். அநேகநாள் அதுவே காலக்ஷேபமாக முடிவதுமுண்டு, அத்யமேச்லோகார்த்தவிஷயமான அண்ணா

acharya.org

ஸ்வாமியின் திவ்யார்த்ததீபிகை கிடைத்தபோதும் அப்படியே கோஷ்டியில் வாசித்து அநுபவித்து ஆனந்தித்துவிட்டு, ஸ்ரீ உ. வே. பஹுகுடும்பஸ்வாமி ஸந்நிதிக்குக் கொண்டுபோனேன். அந்த ஸ்வாமி அடியேனையே ஸேவிக்கச்சொல்லிக் கேட்டருளி, சற்றுப் போது மௌநமாக இருந்துவிட்டு—"இந்தவிடம் நெடுநாளாகவே கொஞ்சம் கதூஹியாயிருந்தது; இந்தவிடத்தில் பாடபேதம் புகுந்தமை காட்டியிருப்பது முதலிய நிரூபணங்கள் வெகு அழகாகவும் மிகவும் பொருத்தமுடையதாகவும் இருக்கிறது. ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமியினுடைய ஆராய்ச்சிகள் மிகவும் அழகியவை" என்று நெடும்போது கொண்டாடி, பின்னையும், "யதிரேஜ ஸஹஸ்ரவதநாதி வைஸவ ஶிதாஶீப்படியே அவருடைய ஸ்ரீஸூக்திப் பெருமைகளைக் கொண்டாடுவதற்கு நாம் ஆர்" என்று ஸாதித்துவிட்டு, இந்த நிரூபணம் மிகவுமழகியது; பரமாநந்த ஜநகமா யிருக்கிறதென்று தாம் சொன்னதாக எழுதும்படிக்கும் அடியேனிடம் நியமித்தார். அந்தஸ்வாமி பரவசமாய்ப் பேசினது முழுவதையும் அடியேன் இங்கு எழுதவில்லை. அப்போதே அண்ணஸ்வாமி ஸந்நிதிக்கு எழுதிக்கொண்ட விண்ணப்பத்திலும் இங்ஙனே சுருக்கமாகவே சிலது விஜ்ஞாபித்தேன். அப்போது கோஷ்டியிலிருந்தார் பலரும் திவ்யார்த்த தீபிகையிலுள்ளபடி கேட்டுப் பரமரஸமாகக் கொண்டாடினார்கள்.

"ஸ்ரீ அண்ணங்கராசாரியர்ஸ்வாமி இதுவரையில் ஸூயநிகர்களை மட்டும் தூஷித்துவந்தார்; இப்போது பூருவாசாரியர்களையும் தூஷிக்கத்தொடங்கிவிட்டார்" என்று சில விபக்ஷிகள் சொல்லக் கேட்டேன். ஶாந்தம் பாபம், ஶாந்தம் பாபம் என்று செவி புதைக்கவேண்டிய வார்த்தைகள் இவை. பூருவாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளின்மீது அணுமாத்திரம் அவத்யம் சொன்னாலும் ஸஹிக்கமாட்டாமல் ஸர்வப்ரகாரங்களாலும் ச்ரமங்களை ஸஹித்து எல்லிப் பகலென்னு தெப்போதும் படாதன பட்டு வருகின்ற அண்ணஸ்வாமிக்கு இப்படிப்பட்ட வார்த்தைகளினாலாவது சிலர் கைம்மாறு செலுத்துகின்றார்களே யென்று வியந்தேன். அண்ண ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகளை யநுபவித்து ஆநந்திக்க ப்ராப்தி யில்லாதாருடைய திரளிலே அடியேனை எம்பெருமான் நிறுத்தாமைக்கு மிகவும் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் பண்ணி நிற்கிறேன்

acharya.org

ஸ்ரீஸூக்த விஷயத்தில் அண்ணங்கராசார்ய ஸ்வாமி இவ்வளவு நிரூபணம் செய்தருளாதிருந்தால் ஸ்வாமி நம்பிள்ளைபக்கலில் சிலர் அவத்யம் சங்கிக்கவும் இடமுண்டாகுமே. அதற்கு அவகாசமறுப்ப தன்றோ அண்ணங்கராசார்யஸ்வாமி செய்தருளும் கைங்கரியம். பூருவாசாரி யர்கள் தவறாக எழுதிவிட்டார்களென்று அண்ணங்கராசார்யஸ்வாமி எழுது கிறாரோ? அதில் பாடபேதம் புகுந்துவிட்டது என்றன்றோ நிரூபித் திருக்கிறார். காட்டிய முறையில் குறையுண்டாகில் சொல்லலா மத்தனை போக்கி வீணே த்வேஷம் காரணமாக அவலம்பத்தோக்தி களை ஏதுக்காகப் பெருக்கவேண்டுமென்று மறுத்துரைத்தேன், பூருவாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளை நன்கு பாதுகாப்பதற் காகவே அண்ணங்கராசார்யஸ்வாமியின் க்ரந்தங்கள் அவதரிக்கின்றன வென்று உண்மையுணர்ந்து உகப்பவர்கள் பொலிக பொலிக.

ஸ்ரீஸூக்தவிஷயத்தில் அடியேனுடைய புல்லிய அறிவுக்குப் பட்டதொரு முறையை இங்கு எடுத்துரைப்பேன். அண்ணங்கராசார்ய ஸ்வாமி "இற்றை முடிதல் கடத்தல்" என்கிற பாடபேதம் காட் டியபிறகுதான் அடியேன் சிறிது ஆராயப்புகுந்தேன். இற்றை முடிதல் என்கிற பாடத்திற்குப் பொருத்தமாகவே சில உபபத்தி கள் நெஞ்சிலே பட்டன. அடியேனுக்குப்பட்டவைகளும் அதற்கும் மேற்பட்ட அம்சங்களும் பலமுகமாக வெளிவந்திருந்தாலும் இரண்டொன்றைமட்டும் இங்கு முக்கியமாக விஜ்ஞாபயே.

(இத்தை முடித்தல்) கடத்தல் என்கிறபாடமே நம்பிள்ளை திரு வுள்ளமாயிருக்குமானால், மூலத்திலுள்ள ஸாகரபதத்திற்குத் தகுதி யாக(கடலைமுடித்தல் கடத்தல்) என்ன ப்ராப்தமாயிருக்க, அப்படி யில்லாமல் (இத்தை) என்றது சேராது. மூலத்தில் ஸர்வநாம ப்ரயோகமில்லையே. ஸ்ரீஸூக்தம் ஸாகரவதகமாகவே வியாக்கி யானம் செய்வதாயிருந்தால் (இத்தை) என்று நிர்த்தேசித்திருந் தாலு மிருக்கலாம். விஷயீதாமாக அருளிச்செய்யுமிடத்தில் (இத்தை) என்று ஸாதிப்பது நம்பிள்ளை மௌலிக்கு ஒத்ததாகத் தோற்றவில்லை. (இற்றை) என்று பாடமானால் மூலத்தில் அத்ய என்பதற்கும் இதற்கும் எவ்வளவு பொருத்தமென்பதையும் இதன் ஸ்வாரஸ்யத்தையும் ரஸிகர்கள் உணரலாம்.

"இற்றைப் பறைகொள்வான்" என்று திருப்பாவையிலும் "இற்றை யிரவிடை யேமத்தென்னை" என்று பெருமாள்

acharya.org

திருமொழியிலும் இன்னம் அநேக இடங்களிலும் இற்றை யென்கிற பிரயோகமிருந்தாலும் இப்பிரயோகம் வசனங்களில் அவ்வளவாகக் காணவில்லையே என்று சிலர் சங்கிப்பதும் அழகிய தல்ல, (என்றிய) என்றும், (குவால்) என்றும் இப்படி பல பதங் களை ஈட்டில் அபூர்வமாகவே பிரயோகித்திருக்கக் காண்கிறோம். இது வொருவிஷயமாகாது. முழுதும் ஊன்றி ஆராய்ந்தவர்களு மில்லை.

இத்தை என்கிற பாடங்கொண்டு கடலைக் குறிப்பதாகக் கொள்ளுமளவில் ஶரணாகதி காலத்திலேயே நிக்ரஹாபிஸந்தியை யும் பெருமாள் நெஞ்சிலே கொண்டாராகக் கொள்ளவேண்டி வருகிறது, அது பெருமாள் ஶீலத்துக்கு மிகவும் பொருந்தாது. ஸாமாந்யமாயுள்ள ஒருகுரங்கையும் இசைவிக்க இழிந்தவர் ஹாவஹேஷம் துளியுமில்லாமே (ஸுக்ரீவம் ஶரணம் கத:) என்று ஶரணாகதியைத்தானே நெஞ்சிலே கொண்டார். வேறு உபா யத்தை நெஞ்சிலே கொண்டதாக இல்லை. இங்குக் கடலரையன் ஒரு தேவஜாதியாயிருக்க, அவனைக் கால்கட்டும்போது நிக்ரஹாபி ஸந்தியையும் நெஞ்சிலே கொண்டாரென்பது பொருந்துமோ?

தவிர, மஹாராஜர் புதியர்; அவருடைய ஹாவம் ஒருவ்கை யாலும் தெரிந்துகொள்ள வழியில்லை. இங்குக் கடலரையன் பெரு மாள் திறத்தில் விஶேஷாபிநிவேஶத்தை ஆதரத்தோடு முந்தியே காட்டியவன். பிராட்டியைத் தேடிச் சென்ற திருவடி கடலைக் கடக்கும்போது அவர் விஷயத்தில் மைநாகத்தையிட்டு மரியாதை செய்தான். அந்த ஸமயம் அநுமானுக்குக் கடலரையன் அங்ஙனம் மரியாதைசெய்யவேண்டிய அவசியமில்லை. செய்யாவிடில் கடலை நிந்திப்பார் ஆருமில்லை. அப்படி யிருக்கவும் திருவடி விஷயத்தில் அஸ்தாநே பயஶங்கையும், தான் ஏதேனும் கிஞ்சித்கரித்ததாக வேணுமென்கிற ஆதராதிஶயமும் காரணமாகவன்றோ கடலரச னுக்குப் பரபரப்பு உண்டானது. பகவத்விஷயத்தில் அஸ்தாநே பயஶங்கை விளைந்து துடிக்கும் அதிகாரிகளைக்காட்டிலும் பாகவத் விஷயத்தில் அங்ஙனே துடித்துப் பரபரப்புக்கொண்ட இக்கடலை உத்தமாதிகாரியாகக் கொள்ளவேண்டியதாச்சுதே. [illegible] த்தையே குவாலாகக் கொள்ளும் பெருமாள் இப் ப்ரபரப்பை எவ்வளவு பெரிதாகக் கொள்வர்!, [illegible] கிண்டியா

மையாலன்றோ ராவணனை முடித்தது. அது கிடைக்கைக்காகவே யன்றோ அரும்பாடுபட்டது. பெருமாள் தாம் செய்யும் நன்மைகளை அவன் விலக்கமாட்டாத தசையைப் பெற்றபின் (நிவ்ருத்தம் ந: ப்ரயோஜநம்) என்று தம் நினைவு கூடிற்றாக அருளினார் என்றன்றோ பெரியார் பேச்சு. அப்படியிருக்க, ப்ரக்ருத விபீஷணாநுஜ்ஞாவசனத்தை ஆதராதிசயத்தோடு காட்டியிருக்கின்ற கடலரசனை முடித்துவிடுவதான நினைவையும் முந்தியே நெஞ்சில் கொண்டாரென்பதை இசைய பாவியேன் நெஞ்சு கொஞ்சமும் துணியவில்லை.

இனி, ராஜநீதியில் ஸாமாத்யுபாயங்களில் ஏதேனுமொன்றை, கார்யஸாதகமாகக் கொள்ளுவதும், ஒன்று பலியாவிடில் மற்றொன்றைக் கைக்கொள்ளுவதும் ப்ராப்தம். அந்த முறையில் இங்கு முந்தி ஸாமப்ரவ்ருத்தி; அது பலிக்கக் காணாவிடில் தண்டோபாய ப்ரவ்ருத்தியை நெஞ்சில் கொண்டதாகக் கொள்ளலாம் என்னில்; அதுவும் இங்குப் பொருந்தாது. இங்கு சரணாகதியானது ராஜநீதிப்படி மந்திரிகள் ஒன்றுகூடி ஆவாபோத்வாபங்கள் செய்தோ, அல்லது ஏகமனதாய் முதலிலேயே நிர்ணயிக்கப்பட்டோ வந்ததில்லை. இதற்கு முந்தி விபீஷணாழ்வாரைப் பரிக்ரஹிக்கும் விஷயமாக ஆலோசித்த முறையை நோக்கவேணும். பெருமாளுக்கு விபீஷணனை அங்கீகரிக்கத் திருவுள்ளமிருந்தும் அதை மந்த்ரிகள் வாய்க்கொண்டு நிர்ணயித்ததாகவன்றோ இருப்பது. தவிர, லங்கை புகுந்தபின்பு மந்த்ரிகளுடன் கலந்து அங்கதப்பெருமாளைக் கொண்டு "ஸீதையைவிட்டு சரணமடைகிறாயா? சண்டைக்கு வருகிறாயா? என்று ராவணனைக் கேட்டு வரவிட்டபோது ஸாமத்தையும் தண்டத்தையும் உடன் ப்ரஸ்தாபித்துவிட்டதுபோல் இங்கு இல்லையே. அங்கு ராஜநீதியை யநுஸரித்து ஸாமத்தில் கேட்போம்; தவறில் தண்டத்தில் ப்ரவ்ருத்தி செய்யவேண்டியதென்கிற நிர்ணயம் செய்துகொண்டு ஆள்விட்டது.. அப்படி ஒன்றுகூடி யிங்கு ஆலோசனை நடைபெறவில்லை.

கடற்கரை சேர்ந்தவுடன், "இனி யிவ்விடத்திலிருந்து கடல் கடப்பதற்கு ஒரு முடிவு செய்துகொள்ளவேண்டியது, ஆகையால் ஸைந்யத்தை இங்கு நிறுத்துவோம் என்று ஸைந்யம் நிறுத்தப்

2

பட்டது. அந்தப்படி ஆலோசனை தொடங்கப்பட்டது" என்பதாக அந்தஸமயம் சொல்லவில்லை. விபீஷணன் வந்தபிறகும் மேற்குறித்த ஆலோசனை விஷயமாக மந்த்ரிகள் ஒன்றுகூடினார்களென்றுவது இதைப்பற்றி ஏதாவது ஆலோசனை செய்தார்கள் என்றுவது தோன்றும்படியான வாக்யங்கள் ஒன்றுமில்லை. மந்த்ராலோசனை செய்யவேண்டியது அவசியந்தானே, சரணாகதி ப்ரஸ்தாவந்தான் எப்படிவந்தது? என்று கேள்விபிறக்கும். வந்தவழி இப்படியாக வேணுமென்று தோன்றுகிறது. அதாவது — மஹாராஜர் விபீஷண விஷயத்தில் விசேஷ விரோதத்தைச் செய்தவர். பின்னிட்டு அவரை ஸாதுவாக அறிந்துகொண்டபிறகு தனக்கு அநுதாபம் பிறந்திருக்கவேண்டியது ஸ்பஷ்டம். அதற்கு அறிகுறியாக அவரை ஆதரித்து அவசியமாக மேல் நடக்கவேண்டிய காரியத்தைப்பற்றி ஆதரம் தோற்றக்கேட்டது. இது வார்த்தைப்பாட்டிலே கேட்டது. ஆலோசனைக்காகக்கூடிக் கேட்டதல்ல. அப்படியாகில் விபீஷணனை இளையபெருமாளோ பெருமாளோ கேட்டிருக்கலாம். 'ஸமுத்ர தரணத்திற்காக மந்த்ராலோசனை உபக்ரமிக்கப்பட்டது' என்றும் சொல்லியிருக்கலாம். அப்படியொன்றுமில்லை. மஹாராஜர் கேட்டதுகொண்டு, மஹாராஜர் அவரிடத்தில் தமக்குண்டான அன்பு மிகுதியைக்காட்டுவதற்குக் கேட்டதென்று தோற்றுகிறது. அவரும் சரணாகதி தமக்கு பலிக்கக் கண்டவராகையாலே (எருது கெட்டார்க்கும் எட்டே கடுக்காய்) என்கிற கணக்கிலே கடலரசனைச் சரண்புகுவது ஸர்வோபாயமாய் நமது காரியம் கைகூடுமென்று தெரிவித்தார். இதைக் கேட்டதும் மஹாராஜர் பெருமாள் இருந்தவிடம் தேடிவந்து விபீஷணாபிப்ராயத்தை வெளியிட்டார் என்றிருக்கிறது.

மஹாராஜர் பெருமாளிருந்த விடம் தேடிவந்ததாகச் சொன்னபடியாலே மந்த்ராலோசனை உபக்ரமிக்கப்பட்டதாகக் கொள்ள இடமில்லை என்று தோற்றுகின்றது. நிற்க, சொன்ன உபாயத்தைப் பெருமாளும் தமது சீலத்திற்குப் பொருத்

முடையதாயிருந்ததாகையாலே ஏற்றுக்கொண்டாரித்தனை. குரங்கின் காலிலும் விழுமவர் ஒரு தேவயோகியின் காலில் விழ இசையாதொழிவரோ?

இவ்வவதாரம் (ஸுக்ரீவவசநாத்) (ஸாக்ஷாஜ்ஜஸ்ய ஶாஸநாத்) உக்த்யாதிப்படியே ஆர்த்தத்ராண ஸந்நாஹத்திற்காகவே ஏற்பட்டதாகையால் ஶரணமடைவதிலும், அதிலும் அன்றீன்ற கன்றுக்கித்யாதிப்படி ஸுஹ்ருத் பரிக்ருஹீத வித்யத்வ விபீஷணனிடத்திலுண்டான ஆதராதிஶயத்தால் அவர் வார்த்தையைக் கேட்பதிலும் மிகவுகப்பாகையாலே ஏற்றுக்கொண்டார். ஆகவே ஸமகாலமாக நிக்ரஹாபிஸந்தியும் நெஞ்சிலே யுண்டென்று கொள்வது பொருந்தாது.

மேலும், விபீஷணஸ்ய ஶரணாகதிக்ரமமாகிய இத்யாதியைக்கொண்டு வார்த்தைப்பாட்டிலே ஶரணாகதி வரவில்லை, பிறகு ஆராய்ச்சி செய்தும் அது நிர்ணயிக்கப்பட்டது. “லக்ஷ்மண! விபீஷணன் சொன்ன உபாய பரிக்ரஹம் எனக்கு ருசிக்கிறது; உன் அபிப்ராய மெப்படி?” என்று பெருமாள் கேட்டிருப்பது முதலியவற்றைக் காணலாம். ஸாமம் பலிக்காவிடில் தண்டத்தையே கொள்ள வேண்டுமென்கிற ப்ரஸ்தாவமே யில்லை. இராவணனுக்கு அங்கதப் பெருமாளை விட்டபோது அப்படிப்பட்ட நிர்ணயம் முந்தியே உண்டாயிருந்ததன்றோ, ராவணன் துஷ்ப்ரக்ருதியாய் அக்ருத்யத்திலே ஊன்றி நின்றானாகையாலே அப்படிக் கேட்கவேண்டிற்று. இங்கு அப்படி யில்லாமையாலே ஸாமத்தையே நிர்ணயித்தது.

முகங் காட்டாவிட்டவாறே தண்டத்தில் ப்ரவ்ருத்தி நேர்ந்தது என்று சொல்லுவதற்குங்கூட அவகாஶமில்லாம லிருக்கிறது. ஸாமம் பலியாதவாறே மேல் என்ன செய்ய வடுப்பது? என்று மந்த்ரிகளுடன் கலந்திருக்கவேண்டுவது பெருமாள் சீலத்திற்குப் பொருந்தியது. அப்படியன்றிக்கே ஒரு நிர்ணயமின்றிச் சீறி வில்லெடுத்தமுறைக்கு ஒத்துமையாக ஒரு ஸாவகல்பநம் செய்வதே உசிதமென்று தோன்றுகிறது. “முந்தி தவஸா வெஸதஸவெநூந ஸாமபொரா வெஷாஷெணேநவா என்றுளது. மேல் ஸாமராம் ஸெரஷயிஷ்ய்ராதி என்றுளது. நடுவிலுள்ளதான சுதூஜெ ச்லோகத்திலும் ஸாமஶரணமே சுஹிவஸம்யி விஷயம். அதுவிஷயமாக

acharya.org

மந்த்ரிகளுடன் கலக்கவேண்டிய அவகாசமுமில்லை. மேலும் ஸாமாநந்தரமான தாநபேதங்களுக்கு ப்ரஸக்தியில்லாமையாலே தண்டத்தையே கைப்பற்றவேண்டுமாகையாலே கொண்டார்'' என்று சொல்லலாகாது. ராஜநீதிப்படி செய்கிற காரியம் இது என்னும்பக்ஷத்தில் எதுவிஷயமும் மந்த்ரிகள் ஆலோசனைக்கே வராமல் பெருமாள் செய்யமாட்டாரே. திடீரென்று அவரையுமறியாமல் வந்ததாகவன்றோ சீற்றம் தோற்றுகிறது. இளையபெருமாளும் ஓடி மறுத்தாரே; அவருக்கு ஸமுத்ரதரணம் அநிஷ்டமா? அவர் மறுத்தது உபாயாந்தர சிந்தை பண்ணுவோமென்ற கருத்தினாலன்றோ? ஒரு கருத்துமின்றியே ஸஹஸா மறுக்கப் போவரோ?

தவிரவும், தபஸா ஸேதுபந்தேந ஸாகரோச்சோஷணேந வா என்றவிடத்தில ஸாகரோச்சோஷணம் உபாயமாகக் கொண்டதன்று. திருவடிவாய் கொண்டு லங்காப்ரஸ்தாநத்தைக் கொண்டபோது ஸமுத்திரத்தை நினைத்துக் கலங்கினார் மஹாராஜர். அவரை ஸமாதானப்படுத்தவேண்டி, உபாயக்லேசமில்லாமலே, எப்படியும் தாண்டிவிடுவோம். ஶூரர்கள் இருக்கிறார்கள் என்றும், இன்னம் பலவிதமாக பௌருஷோத்ஸாஹகமாக வார்த்தைகளைச் சொல்லக்கேட்டு பௌருஷம் தலையெடுத்து 'ஸமுத்திரத்தை அணைகட்டியோ வற்றவைத்தோ தாண்டுவதற்குத் திறமையுண்டு' என்று பேசும்போது, இரண்டு காரியமும் ஸாமாந்யமானதல்லவே, எப்படி கைகூடும்? என்று ஶங்கை விளையாமைக்காக (தபஸா) என்றார். தபோவிஷயே ப்ரயாஸஸாத்யமான ஸேதுபந்தத்தையோ, அகஸ்த்யாதிகளுக்குப் போலே தத்ஸாத்யமான ஸாகரஶோஷணத்தையோ கொண்டு தாண்டுவேன் என்று சொன்னபடி. அங்கு உபாயப்ரஸ்தாவ ப்ரஸக்தியே யில்லை. முதலில் அந்த இடத்தில் தண்டம் நெஞ்சில் தோற்ற நியாயமுமில்லை.

ஸமுத்ரம் ஶரணமென்றவிடத்தில், காகுத்ஸ்தன் தலையெடுத்து ஶேஷ்யே புரஸ்தாச்சாலாயா மென்று சித்திரகூடத்தில் பரதாழ்வான் படுகாடு கிடந்ததுபோல் பெருமாளும் தைந்யம் தலையெடுத்

acharya.org

துக் கல் நெஞ்சரும் நெஞ்சிளகிக் காரியம் செய்தே தீரும்படி சுநதிக்ரணீயமான ஊற்றத்தை நெஞ்சிலேகொண்டு கிடந்தபடி. கடலரையனே! இரங்காவிடில் நான் முடிந்தே கிடப்பேன் என்று யிற்றுக் கிடந்தது. தவஸா என்ற வங்கு மஹாராஜர் வார்த்தை கேட்டு பௌருஷம் தலையெடுத்து ஸாமர்த்தியம் தோற்றப் பேசினது. இங்குக் கடல் இரங்கவேண்டி ஒஜநூமடியாக நைச்சியந் தலையெடுத்துக் கிடந்தபடி. அது க்ஷத்ரியத்வப்ரயுக்தமான பௌருஷத்துக்கும் பரத்வத்துக்கும் சேரும். இது அவதார மெய்ப்பாட்டுக்கும் நீர்மைக்கும் பொருந்தும்.

பிறகு ஸா.மரம் மோக்ஷயிஷ்ராமி யென்றதும் உண்டோபாயமே இனித் தகுந்ததென்று கொண்டதன்று. மண்டலமிட்டுக் கிடந்த மஹாநாகம் கால்பட்டதும் சீறிப் படமெடுப்பதுபோல், ஒஜநூமடங்கலும் தோற்றத் தாம் கிடந்தகிடை கடலுக்குத் திரஸ்காரஹேதுவாய் விழுந்த தென்கிற பாவம் விளைந்ததனால் உடனே ஆலோசனை வேண்டாதே சீறிப்பேசினபடி, இயற்கையாயுள்ள க்ஷத்ரியத்வ ப்ரயுக்தமான பௌருஷம் தலையெடுத்துப் பேசினபடி. இதுவும் பரத்வத்துக்குப் பொருந்துமது.

கீழே தவஸா உத்ராதிவவநமும் பராங்கதிக்கு ஒத்துமைப் பட்டதாகவே கொள்ளலாம். தபஸ்ஸானது ஜெவதா வுஸாஉ ஜநகவ்ராவார விசேஷந்தானே. இங்கு பராங்கதியும் ஜெவதா வுஸாஉ ஜநநாயதமாகக்கொண்டதுதானே. * தஸாஸ்ராஸ ஒஷாமிதாதிப்படியே பராங்கதியும் தபஸ்ஸுதானே. ஆகையால் தவஷாயமான ஸேதுபந்தனமோ மோக்ஷணமோ வதவதம் விவக்ஷிதமான முறைக்கு பராங்கதி இசைந்ததாகிறது. ஆகவே வதவதும் உஷாதிஸமயியில்லை. பிந்தியும் உவாயவிஷநாயநமான நிர்ணயம் காரணமாக வந்ததுமில்லை. ததாகிஷாவாநமானமாக வந்ததித்தனை. ததாங்களில் உதிக்கும் பாவாநுகுணமாக சொலவும் செயலும் யாருக்கும் மாறுபடுவது இயல்வே. எம்பெருமானுக்கும் ஒரு சேதந விஷயத்தில் கஉதமடியாக ஸ்வாதந்திரியம் தலையெடுத்து க்ஷிவாமி யென்

பதும், அருள் தலையெடுத்தபோதாக உதாஹ்ருதி யென்பதும் உள்ளது தானே.

பெருமாளும் பிராட்டியும் அவதாரத்துக்கு முந்தி ராவண வதத்தை ஒருவாறு ஸங்கல்பித்துக்கொண்டுதானே அவதரித்தது. பிந்தி தைவயோகமாக இருவரும் காடேறவந்தபோது தண்டகாரண்ய வாஸிகளான மஹர்ஷிகளின் ப்ரார்த்தநாநுஸாரமாக ராக்ஷஸ வத ப்ரதிஜ்ஞையைப் பெருமாள செய்தருளினபோது, பிராட்டி ராக்ஷஸவதம் ஸ்வவிச்லேஷத்திலே மூட்டுவிக்குமென்றும் அப்பால் பெருமாளுக்கு என்ன தீங்கு விளையுமோவென்றும் கூசி பரிவு தலையெடுத்து அப்போதுண்டான பாவத்துக்குச்சேர பெருமாள் திருமுன்பே 'நாம் காட்டில் வாழுமிக்காலத்தில் இக்கார்யம் வேண்டா; நாட்டிலே சென்று முடிசூடி வாழுங்காலத்தில் கைக்கொள்ளலா'மென்று தடுத்துரைத்தது பூர்வப்ரவ்ருத்தஸங்கல்ப விருத்தமாக அப்போதுண்டான பாவத்துக்கீடாகச் சொன்னபடியன்றோ. இப்படி மஹாஸங்கல்பத்திலும் பாவபேதமடியாக வார்த்தைகள் வேறுபடுமேயானால் கிம்வக்தவ்யம் ।

பிராட்டி தடுத்தவிடத்தில் ஸ்வரூபாநிவ்ருத்தியென்ற ஸூத்ர தாத்பர்ய ஸ்வீகாரமென்கிற வியாக்கியானம், ஓரிடத்திலும் சொல்லப்படாத பிராட்டி ஸ்வாதந்த்ர்ய வர்ணனம் பண்ணினது, அதுக்கீடாக உதாஹ்ருத வசநோதாஹரணம், இன்னம் பலவும் ப்ரகரணவிசேஷ விரோதங்களால் துஷ்டம் என்பதை இங்கெடுத்துரைப்பதை ப்ரக்ருதாநுபயுக்தமாய் விரியுமென்று விட்டொழித்தேன்.

ராமோபி ந்ருஸிம்ஹாத்தேய யாகையாலே ஸத்ய ஸங்கல்பனு மென்று ஸங்கல்பித்தபடி செய்யாதொழிந்தது குறையென்று கூறுவது பொருந்தாது. அநந்ஸிம்ஹாஷணத்துக்கு விஷய பூர்வ லையுகொள்ளவேணும். அதுவன்று இது. அப்படியாகில், சக்ரவர்த்தி துஞ்சினனென்று வார்த்தை செவிப்பட்டதும் 'வநவாஸம் முடிந்தபிறகும் அயோத்திக்கு நான் வருவதில்லை' என்று சொன்ன

வார்த்தையும் அநுஷ்டாநத்திற்கு வாராதது விரோதிக்கும். ஸவநு, ஸநுஷிஷ்ஹெகத்தில் உஷோவாயாஷிவஸுபியென்று ஒருபோதும் ஒருவகையாலும் கொள்ள இயலாது. ஆகையால் (இற்றை முடிதல் கடத்தல்) என்றே ஈட்டுப்பாட மிருக்கவேணும்.

அப்போதுதான் ஊஷோ ஊஷாஷிகாநமைவஹும் நேரும். (இத்தை முடித்தல்) என்னுமளவில், கடல் ஸ்தானத்தில் ஆழ்வாராகும்போது, ஆழ்வாரை முடித்தல் என்னவேண்டிவரும். இற்றை முடிதல் என்கிற பாடம் ஸ்ரீராமாயண ப்ரகரணத்திற்கு நன்கு பொருந்துவதுபோலவே ஈட்டு ப்ரகரணத்திற்கும் வெகு ஸ்வாரஸ்யமாகப் பொருந்துகிறபடியை ஸாவகர்கள் ஸவயாநிக்க வேணும். [யாளெட்டியென்னுள் இருத்துவமென்றிலம்] என்று பாசுரமிருப்பதால் ஆழ்வா ரிசைவுகொண்டு எம்பெருமான் அவருள்ளத்தே புகுர நினைத்தமை தோற்றுகிறது. ஆழ்வாரை யிசைவித்து அவர் நெஞ்சிலே புகுவோம்; அவரிசையாவிடில் அவரை வஞ்சித்துப் புகுவோம்; வஞ்சனையும் பலிக்காவிடில் ஆழ்வார் திருமுன்பே படுகாடு கிடப்போம் என்று எம்பெருமான் திருவுள்ளம் பற்றினமை இங்கு விவக்ஷிதம். ஸர்வ ஶக்தனுக்கு இப்படியும் ஒரு திருவுள்ளமுண்டாகப் பொருந்துமோ வென்று கேட்கலாகாது. ஆழ்வார் பாசுரங்களிலே ஆழ மூழ்கினவர்களுக்கு இத்தகைய ஶங்கையும் உதியாது, ஸமாதானமும் அநபேக்ஷிதம்.

இப்படி பலவகைப் பொருத்தங்களையும் நோக்குமிடத்தில், அண்ணஸ்வாமி நிரூபித்திருக்கிற வகைகளே ஸ்வரஸமாகத் தோற்றுகிறது. பலகாலமாகப் பலபேர்கள் ஆதரிக்கிற பாட மென்றும் அரும்பதக்காரர்கள் வியாக்கியானித்த பாட மென்றும் கொண்டு வாதிப்பது அழகியதல்ல. "மால் உமது வாஞ்சை முற்றும்" என்ற திருவாய்மொழி நூற்றந்தாதிப் பாசுரத்தை (மாலமுது) என்றோதியும் இன்னமும் வெவ்வேறுவகையாக ஓதியும் மஹான்களும் ஸயுக்தி விஶேஷாவதாரங்கள் செய்யக்

கெட்டிருக்கிறேன். இப்படிப்பட்டவை வாசாமகோசரம். அரும்பதக்காரர்களைப்பற்றி அடியேனும் விரிவாகச் சொல்ல வேண்டியதில்லை. இயற்பா அரும்பதவுரையில், பாண்டுஜாத ஸப்ரஹ்மஸம்வாத மென்று வந்தவிடத்தில் [ஸுஜாத ஸப்ரஹ்ம: — யுதிஷ்டிர:] என்றெழுதியுள்ளார். யுதிஷ்டிரனுக்கு அங்கு என்ன ப்ரஸக்தியோ தெரியவில்லை. இங்ஙனேயாகப் பார்க்கும்போது அரும்பதவுரைகளின் ஸுவிசத ரமணீயத்வத்தை ப்ராமாணிக ப்ராஜ்ஞர்கள் இசையா தொழியார்கள்.

ப்ரக்ருதவிஷயத்தில் விஸம்வாத முடையவர்களோ மஹான்களா யிருக்கின்றார்கள். அல்பஜ்ஞனை அடியேன் விவாதத்தை வளர்த்தும் முறைக்கு இத்தனை யெழுதினேனில்லேன். ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் அனேக விடங்களில் சோதநீயங்கள். சோதநமும் ஆராய்ச்சி ஆவச்யகம். ஆராய்ச்சியில் ஏதேனும் அபிப்ராயபேதம் வந்து புகுமாகில் அதை விவாத விஷயமாக்கிப் பலரறியப் பரவவிடாமல் ஸமரஸமாய்க் கலந்து ஒருபடி நிர்ணயித்து வெளியிடவேணுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். சிறியேனுடைய இவ்வபிப்ராய ப்ரகாசநம் மஹான்களுக்குச் சீற்றத்திற்கு உறுப்பாகாதொழியவேணும். இப் புன்மொழிகளிலுள்ள பிழைகளையும் பொறுத்தருளவேணும்.

யதாவகாசப்ரதிபாதிதாநாம் விஷயாணாம் நிவேதநே |
ஸகாலக்ஷீணத்ருஷ்டேஷு ஜ்ஞா: ப்ராமாண்யவேதிந: ||

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசக பத்ரிகை.

தொகுதி 1.	பத்ராதிபர் வடகரை இராமாநுஜாசாரியார்	பகுதி 10.

ஸ்ரீரஸ்து

ஸ்ரிய:காந்தாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
யஸ்ஸ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமசீசமத் ||
வேதவேதாந்த வேதாம்ச ஸூத்ரார்த்தாக்ஷய்யப்ரவர்த்தினீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

ஆவணியில் ரோஹிணி நாள்.

[ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்]

இம்மாதத்தில் நமது வைஜயந்தீபத்ரிகை வெளிவரும் நாளாய இத்திருநன்னாளில் உலகுக்கோர் முந்தைத்தாய் தந்தையான கண்ணபிரானும், ஸ்ரீ வைஷ்ணவவுலகுக்குப் பேராசிரியரான பெரியவாச்சான் பிள்ளையும் திருவவதரித்தனர். இவ்விருவருடைய பெருமையையும் இன்று நாம் அநுபவிக்க ப்ராப்தமாகின்றது. ஆனாலும், எம்பெருமானுடைய அவதாரத்திற் காட்டிலும் ஆசாரியர்களின் அவதாரமே மிகச் சிறந்ததாதலாலும் கண்ணபிரானுடைய பெருமை பெரும்பாலும் ப்ரஸித்தமேயாதலாலும் இப்போது நாம் பெரியவாச்சான் பிள்ளையின் பெருமையைச் சிறிது அநுபவிக்க ஆசைகொண்டோம்.

இவ்வாசிரியர் தம் சரித்திரவரலாறுகளைப்பற்றி இங்கு நாம் ஒன்றும் எழுதப்புகுகின்றிலோம். இவர் தம்மால் உலகுக்கு விளைந்த மஹோபகாரங்களைப்பற்றிப் பேசுவோம். ஆழ்வார்களின்

acharya.org

அருளிச்செயல்களுக் கெல்லாம் மிகச் சிறந்த வியாக்கியானமும், ஸ்ரீ ராமாயணத்தில் பலபல ச்லோகங்களுக்கு இன்சுவையே வடிவெடுத்த வியாக்கியானமும், ஆளவந்தாரருளிய ஸ்தோத்ர ரத்நத்திற்கு உருக்கமான வியாக்கியானமும், சில ரஹஸ்யார்த்த க்ரந்தங்களும் முதலானவை இவர் அருளிச் செய்தவையாகும்.

நம் பிள்ளையென்கிற லோகாசார்யரின் திருவடிவாரத்தில் நெடுநாள் பரிசர்யைபண்ணிப் பெற்ற விசேஷார்த்தங்களையே இவ்வாசிரியர் தமது திவ்யக்ரந்தங்களில் அமைத்தருளினார். இவர் தாம் நம் பிள்ளையைபபற்றி ஓரிடததில் அருளிச் செய்திருக்கும் ஸ்ரீஸூக்திகள் நினைவுக்கு வருகின்றன; அவற்றை இங்குக் குறிபபிடுவோம்; பெரிய திருமொழியில் (5—8—7) "அந்தணனொருவன்" என்ற விடத்து வியாக்கியானத்திலே—"முற்பட த்வயத்தைக் கேட்டு இதிஹாஸ புராணங்களையும் அதிகரித்து, பரபக்ஷப்ரதிக்ஷேபத்துக்குடலாக ந்யாயமீமாமஸைகளும் அதிகரித்து, போது போக்கும் அருளிச்செயலிலேயாம் பிள்ளையைப் போலே ...." என்றருளிச் செய்தார். இதனால், நம் பிள்ளை ஸகல சாஸ்த்ரங்களையும் வரியடைவே அதிகரித்து அந்தப் பாண்டித்யம் முழுவதையும் அருளிச் செயற்பொருளுபந்யாஸங்களிலே உபயோகப்படுத்தி வந்தாரென்பது விளங்கும். அவவண்ணமாகவே இவ்வாசிரியரும் ஸகல சாஸ்த்ரஜ்ஞராகித் தமது ஞானவிளக்கத்தை வியாக்கியானங்களருளிச செய்வதில் வெகு அழகாகச் செலுத்தி இவ்வுலகுக்கு மஹோபகாரகர்களில் ப்ரதமஸ்தானம் பெற்றருளினார்.

அருளிச் செயல்களுக்கு வியாக்கியான மிட்டருளும் திருப்பணியில் மறறுஞ சில ஆசாரியர்களும் கைவைத்ததுண்டு. ஆனால், பூர்த்தியாக நாலாயிரத்திற்கும் வியாக்கியானமிட்டருளினவர் என்னும் பெருமை இவ்வாசிரிய ரொருவர்க்கே அஸாதாரணமாக அமைந்ததாகும். இவ்விஷயம் உபதேசரத்தினமாலையில், "பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான் பிள்ளை தெள்ளார்வடக்குத் திருவீதிப் பிள்ளை, மணவள யோகி திருவாய் மொழியைக் காத்த குணவாளரென்று நெஞ்சே கூறு." "நஞ்சீயர்செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு, எஞ்சாமை யாவைக்குமில்லையே—தஞ்சீரால் வையகுருவின் தம்பி மன்னுமணவாளமுனி செய்யுமவை தாமுஞ் சில," "பெரியவாச்சான் பிள்ளை பின்புள்ளவைக்கும் தெரிய வியாக்கியைகள் செய்வால்—அரிய அருளிச் செயல் பொருளை

acharya.org

ஆரியர்கட்கிப் போது அருளிச் செயலாய்த் தறிந்து.'' என்ற பாசுரங்களினாலும் உணரத் தக்கது. பெரியாழ்வார் திருமொழியில் நானூறு பாசுரங்களுக்கு மாத்திரம் இவ்வாசிரியர்தம் வியாக்கியானம் லுப்தமாயிருந்த தென்றும், மணவாளமாமுனிகள் பலருடைய பிரார்த்தனைக்கிணங்கி அக்குறையைத் தாம் நீக்கியருளினரென்றும் ஸம்ப்ரதாயம் வல்ல பெரியோர் பகர்வர்.

"கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள் தானும், மற்றைநிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினாலருள் செய்து'' என்கிறபடியே பரமகாருணிகனாக ஸர்வேச்வரன் இவ்விருள் தருமா ஞாலத்துக்கு அணிவிளக்காக அனேகவிதமான சாஸ்த்ரங்களை உபகரித்தருளினான். அவற்றுள் வேத சாஸ்த்ரமே மூலப்ரமாணம். அது வடமொழி வேத மென்றும் தென்மொழி வேதமென்றும் பாகுபாடுற்றது. வடமொழி வேதத்திற்கு வித்யாரண்யஸ்வாமிகள் பலபலபண்டிதர்களை வைத்துக் கொண்டு பாஷ்யம் அவதரிப்பித்தார். இவ்வுலகுக்கு அது வொரு மஹோபகாரம். அந்த வடமொழி வேதத்திற்காட்டிலும் பலவகையினும் சிறப்புப்பெற்ற தமிழ்வேதத்திற்குப் பெரியவாச்சான் பிள்ளை பரம ரஸபரிபூர்ணமான வியாக்கியானமிட்டருளினது யாவர்க்கும் கைம்மாறிலாத பேருதவியாகும்.

இவ்வாசிரியரின் வியாக்கியானசைலி அநுபவிக்க அநுபவிக்க அனைவரையும் ஆனந்தக்கடலில் அமிழ்த்துவதாகும். மற்றையோர் பத்தெட்டு வாக்கியங்களினால் விரியவுரைக்கும் பொருளைச் சிறிய தொரு வாக்கியத்தினால் மிக அழகாக அருளிச் செய்து வைக்குந் திறம் இவர்க்கு அஸாதாரணமானது.

கடல் ரத்நாகரமென்று பெயர் பெற்றிருத்தல் போல இவ்வாசிரியரது வியாக்கியானக் கடல் எண்ணிறந்த விசேஷார்த்தரத்ன நிதியாகப் புகழ்பெற்றுள்ளது. அவற்றுள சில அர்த்த ரத்னங்களை ஈண்டெடுத்து விளக்குவாம்:—ஆளவந்தார் எம்பெருமானார் பட்டர் நஞ்சீயர் முதலான பூருவாசாரியர்கள் அருளிச் செயல்களுக்கு ஆங்காங்கு அழகாக நிர்வஹித்துக் கொண்டிருந்த அர்த்த விசேஷங்களை இவ்வாசிரியர் நமக்கு எடுத்தூட்டியிருக்கின்றாராதலால் அப்படிப்பட்ட அர்த்தங்களை முந்துற அனுபவிப்போம். திருமங்கையாழ்வாரருளிச் செயலான பெரிய திருமொழியிற் செல்வோ மிப்போது.

acharya.org

(1—2—10) "கரியமாமுகிற்படலங்கள் கிடந்து அவை முழங்கிட, களிறென்று பெரியமாசுணம் வரையெனப் பெயர்தரு பிரிதி." என்ற பாசுரத்தின் வியாக்கியானத்தில்—மலைப்பாம்புகளானவை யானைக்கு அஞ்சிப் புற்றிலேபுக்கொளிக்கும் என்று நஞ்சீயர் அருளிச் செய்தார்; அதைக் கேட்ட நம் பிள்ளை 'இதுவோ இதுக்கு அருளிச் செய்யும்படி?' என்று கேட்க; "நீர் இப்படிக் கேட்கும்போது ஒன்றை நினைத்தல்லது கேளீர்; அத்தைச் சொல்லும்" என்று ஜீயர் நியமிக்க, நம் பிள்ளை பணித்தபடி—பெயருகையாகிறது போக்குவரத்து இரண்டுக்கும் ஸாதாரணமாயத்திருப்பது; இனித்தான் மலைக்குச் சிறப்புச் சொல்லுமவர்கள் மலைப்பாம்புகள் ஆனையை விழுங்கு மென்னக் கடவர்கள்; ஆகையாலே கரியமாமுகிற் படலங்கள் கிடந்து முழங்க, அவற்றைப் பெரிய மலைப்பாம்பானது ஆனையாக வெண்ணி ஆஹாரமாகக் கொள்ளக்கருதி மலைபெயர்ந்தாற்போலே கால் வாங்கிவந்து கிட்டா நிற்கும் என்று பொருள் கொள்ளலாம் போலிருக்கிறதே என்று விஜ்ஞாபிக்க, ஜீயர் அதுகேட்டு 'இப்படியேதான் பொருள்' என்று போரக் கொண்டாடியருளினார்—என்கிற ஐதிஹ்யம்உள்ளது.

இதனைச் சிறிது விவரிபபோம்; சில மலைப்பாம்புகள் யானையைப் பார்த்து அஞ்சி நடுங்கி ஓடிப்போய்விடுமென்றும், பல மலைப்பாம்புகள் யானையை அணுகி விழுங்கி விடுமென்றும் தமிழ் நூற்களால் தெரிகின்றது. 'திரையன்பாட்டு' என்று ஓர் பழைய நூலில்—"கடுங்கண்யானை நெடுங்கை சேர்த்தி, திடங்கொண்டறைதல் திண்ணமென்றஞ்சிப், படங்கொள் பாம்பும் விடரகம் புகூஉம், தடங்கொள் உச்சித்தாழ்வரையடுக்கத்து" என்றதனால் மாசுணம் களிற்றைக் கண்டு அஞ்சி யொளிக்குமென்பது தெரிகின்றது. "ஞால்வாய்க் களிறு பாந்தட்பட்டெனத், துஞ்சாத் துயரத்தஞ்சு பிடிப்பூசல், நெடுவரை விடரகத்தியம்பும், கடுமான் புல்லிய காடிறந்தோரே." என்று சங்கநூல்களுள் ஒன்றான நற்றிணையிலும், "பரியகளிற்றை அரவு விழுங்கி மழுங்கவிருள் கூர்ந்த, கரிய மிடற்றர் செய்ய மேனிக் கயிலைமலையாரே" என்று தேவாரம் திருக்கயிலாயம் முதல் திருமுறையிலும், "இடிகொள் வேழத்தை எயிற்றொடு மெடுத்துடன் விழுங்கும், கடியமாசுணம் கற்றறிந்தவரென வடங்கிச், சடைகொள் சென்னியர் தாழ்விலர் தாம் மிதித்தேறப், படிகள் தாமெனத் தாழ்வரை கிடப்பனபா

ராய்." என்று கம்பராமாயணச் சித்திரகூடப் படலத்திலும் உள்ள பாட்டுக்களால் மாசுணம் யானையை விழுங்கும் என்பது தெரிகின் றது. அஞ்சி யொளித்தல் சிறுபான்மையும், விழுங்குதல் பெரும் பான்மையுமாயிருத்தலால் "களிறென்று பெரிய மாசுணம் வரை யெனப் பெயர்தரு" என்ற இவ்விடத்திற்கு—மலைப்பாம்புகள் மேகங்களை நோக்கி யானைகளாக ப்ரமித்து அவற்றை விழுங்குதற் காக மலை பெயருமாபோலே பெயர்ந்து கிட்ட வருமிடம்—எனப் பொருள் கொள்ளுதல் நன்கு பொருந்துமென்பது நம் பிள்ளை திரு வுள்ளமாயிற்று.

(1—3—1.) "முற்றமூத்துக் கோல் துணையா" என்ற விடத்து வியாக்கியானத்தில் ஓர் ஐதிஹ்யம் அருளிச் செய்கிறார்! நஞ்சீயர் ஸந்யாஸாச்ரமஸ்வீகாரம் செய்துகொள்ளும்போது த்ரிதண்டம் தரித்துக்கொள்வதற்கான மந்த்ரம் "ஸகா மாகோபாய" (ஓ த்ரிதண்டமே! நீ எனக்குத் துணை யாயிருந்து என்னை ரக்ஷிக்கவேணும்) என்பதாகக் கேட்டு, ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்தனும் பரம சேதநனுமிருக்கிற எம் பெருமானையே துணையாகப் பற்றவேண்டியிருக்க, அசேதநமான தண்டத்தை நோக்கி இங்ஙனே சொல்லும்படியாக ஒரு ஆச்ரமம் நேருவதே: என்று (நஞ்சீயர்) ஸாதித்தாராம்.

இவ்விடத்தில் இன்னுமோர் ஐதிஹ்யமும் சொல்லுவதுமுண்டு; நஞ்சீயர் பட்டர் திருவடிகட்கு அந்தரங்கராய் வர்த்திக்கிற நாளிலே ஒரு கைசிகத்வாதசியன்று பட்டர் ப்ரஹ்மரதத்திலெழுந்தருளித் திருவீதியலங்கரிக்கப் புறப்பட்டவாறே நஞ்சீயரும் ஸ்ரீபாதம் தாங் கப் புக, "உத்தமாச்ரமியாய் த்ரிதண்ட தாரியான உமக்கு இக் காரியம் தகாது" என்று பட்டர் முதலானோர் மறுத்துக் கூற, நஞ்சீயர், 'எனக்கு நீ துணையாகி என்னை ரக்ஷிக்கவேணுமென்னும் பொருளுடைய மந்திரத்தைச் சொல்லி ஸ்வீகரிக்கப்பட்ட இந்த முக்கோல்தானே இன்று எனக்கு விரோதியாகிறதோ? இக்கோல் எனக்குத் துணையல்லவோ? ஸ்வரூப ரக்ஷணத்திற்கு இக்கோல் இடையூறாயின் இஃது எனக்கு வேண்டா' என்று சொல்லி த்ரிதண்டத்தை விட்டெறியப் போனாராம். அப்போது அவரு டைய பக்தி விசேஷத்தைக் கண்டு அனைவரும் வியந்தனர்.]

(3—7—3) "அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய் அரக்கர் குலப் பாவை தன்னை, வெஞ்சின மூக்கரிந்த விறலோன் திறம் கேட்கில்."

acharya.org

என்ற பாசுரத்தின் வியாக்கியானத்தில்—"பட்டர் இப்பாட்டை யருளிச் செய்து, ஒரு ஸ்த்ரீயை விரூபையாக்கினவனுடைய திறம் கேட்கில் அஞ்சுவன் என்கையால் இத்தலைக்கு குணஹாநியாய்த் தோற்றுகின்றது; இது ஆழ்வார் அருளிச் செய்யக்கூடாது; இது எங்ஙனே சேரும்படி? என்று ஆச்சானைக் கேட்க; 'துடுப்பிருக்கக் கைவேகவேணுமோ? எம்பெருமானார்தாமே அருளிச் செய்து வைத்தாரிறே' என்ன, அருளிச் செய்தபடி எங்ஙனே? என்று கேட்க, முன்பொரு புணர்ந்து உடன் போக்கிலே பிறந்த ப்ரமாதத்தைக் கேட்டு அத்தை நினைத்து இப்போது பயப்படுகிறாள் என்றருளிச் செய்தார்—என்றுள்ளது.

இதனைச் சிறிது விவரிப்போம்: இவ்விடத்தில் ஆழ்வாருடைய திருத்தாயார் சூர்ப்பணகாபங்க விருத்தாந்தத்தை யெடுத்துரைத்து 'இப்படிப்பட்ட தன்மையைக் கேட்க நான் அஞ்சுகின்றேன்' என்று சொல்லியிருப்பதன் கருத்து யாது? அரக்கியின் மூக்கையறுத்ததுபோலே என் மகளின் மூக்கையும் (திருவாலி யெம்பெருமான்) அறுத்திடுவனோவென்று அஞ்சுகின்றேனென்பதாகவன்றோ இங்குக் கருத்துத் தோற்றுகின்றது. குணக்கடலாகிய எமபெருமான் விஷயத்தில் இவ்வாறு நினைத்து அஞ்சுதல் கூடுமோ? இது குணஹாநி சொல்லுகிறபடியாகுமன்றோ என்று பட்டர் சங்கித்து ஆச்சானைக் கேட்டார். அதற்கு ஆச்சான், 'துடுப்பு இருக்கக் கைவேக வேணுமோ? எம்பெருமானார் இனிதாக நிர்வஹித்துப் பொருளருளிச் செய்து வைத்திருக்க நாம் ஏன் வருந்தவேண்டும். என்று சொல்லி அப்பொருளையும் வெளியிட்டார்; அதாவது—'அரக்கர் குலப்பாவை தன்னை மூக்கரிந்த விறலோன்' என்றதனால் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் நேர்ந்த பிரிவு தெரிவிக்கப்படுகிறது. இராவணன் ஸீதையைக் கவர்ந்து சென்றதற்கு மூலகாரணம் சூர்ப்பணகையின் அங்கபங்கமே யாதலால் இந்த அங்கபங்கத்தை ப்ரஸ்தாவிக்கும் முகத்தால் ஸ்ரீ ராம ஸீதைகளின் பிரிவு நினைப்பூட்டப்படுகின்றது. ஆகவே முன்பு இருவருமாய்ப் புறப்பட்டுச் சென்று ஒருவரை யொருவர் பிரிந்து பலநாள் வருந்திக்கிடக்க நேர்ந்ததே; அவ்விதமாக இப்போதும் இவர்களுக்கு [வயலாலி மணவாளனுக்கும் பரகாலநாயகிக்கும்] ஏதேனும் விதிவசத்தாலே பிரிவு நேர்ந்து பரிதபிக்க ப்ராப்தமாகுமோ வென்று அஞ்சுகின்றேன்—என்பதாம்.

acharya.org

(4—4—6) "தான் போலு மென்றெழுந்தான் தரணியாளன் அது கண்டு தரித்திருப்பானரக்கர் தங்கள், கோன் போலு மென்றெழுந்தான், குன்றமன்ன இருபது தோளுடன் துணித்த வொருவன் கண்டீர்—நாங்கூர்த் திருத் தெற்றியம்பலத்தென் செங்கண்மாலே."—இப்பாட்டின் முன்னடிகட்குப் பொருள் சொல்லுவது ஸூக்ஷ்மபுத்திசாலிகளுக்கன்றி மற்றையோர்க்கு இயலாது. முற்காலத்தில் ஆப்பான் திருவழுந்தூரரையர் என்கிற ஒரு ஸ்வாமியும் இன்னுஞ் சில முதலிகளுமாக இதற்குப் பொருள் என்னவென்று ஆராயத் தொடங்கினர். அவர்கட்குப் பொருள் புலப்படவில்லை. அப்போது பட்டர் மிகச் சிறு பிராயத்தவராயிருந்தார். அப்போது அவர் அருளிச் செயல் மூலம் ஓதியிருந்தாரல்லர். ஆனாலும் பட்டர் சிறுபிராயமே தொடங்கி எல்லா வழிகளிலும் தமது ஸூக்ஷ்ம புத்தியைச் செல்லவிட்டுப் பல வகையான அர்த்த விசேஷங்களை வெளியிட்டுக் கொண்டு ஆச்சரியமாக விளங்கிவந்தமையால் பல பெரியோர்களும் பட்டரைப் பணிந்து அர்த்தங்கள் கேட்பதுண்டு: அப்படியே கீழ்ச் சொன்ன அரையர்முதலானோரும் பட்டரிடம் சென்று இப்பாட்டுக்குப் பொருள் என்ன? என்று கேட்டனர். அப்போதே பட்டர் 'பாசுரத்தை விளங்கச் சொல்லுங்கள்' என்று சொல்லி ஒருகால் பாசுரத்தைக் கேட்டவாறே 'தான் போலுமென்றெழுந்தான் தரணியாளன் அது கண்டு தரித்திருபபான் அரக்கர் தங்கள் கோன் போலும்' என்கிறவரையில் இராவணன் வார்த்தையின் அநுவாதம் என்று சொல்லிப் பொருளை விளக்கிக் காட்டினர். இங்கே பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியான ஸ்ரீ ஸூக்தி வருமாறு—"ஆப்பான் திருவழுந்தூரரையரும் மற்றுமுள்ள முதலிகளுமாக இப்பாட்டிற் சொல்லுகிறதென்? என்று பட்டருக்கு விண்ணப்பஞ் செய்ய, ஒருகால் இயலைக் கேளா 'ராவணன் வார்த்தை காண்' என்றருளிச் செய்தார். [தான் போலுமித்யாதி] ஒரு க்ஷத்ரியன்போலே எதிரி யென்று வந்தான்; அது கண்டு தரித்திருப்பான் ராக்ஷஸராஜனும்—என்று கிளர்ந்தெழுந்த ராவணனுடைய மலைபோலேயிருக்கிற இருபது தோளையும் துணித்த தனிவீரன் கிடீர்"—என்று. இப்பொருளை விவரித்துக் காட்டுவோம். நாங்கூர்த் திருத்தெற்றியம்பலத் தெம்பெருமான் யாவனென்னில்; இராவணனுடைய மலைபோன்ற இருபது தோள்களை

யும் துணித்த தனிவீரன். அந்த இராவணன் எப்படிப்பட்டவனென்னில்; மிகவும் அஹங்காரந் தோற்றச் செருக்கி வார்த்தை சொல்லிக்கொண்டே போர்க்களத்தில் கிளர்ந்தவன். அப்படி அவன் செருக்குடன் சொன்ன வார்த்தை ஏதென்னில்; '|தான் போதுமென்றெழுந்தான் தரணியாளன் அது கண்டு தரித்திருப்பான் அரக்கர் தங்கள் கோன் போலும்' என்கிற இவ்வார்த்தையாம். இவ்வார்த்தைக்கு அர்த்தமேதென்னில் ?; இராமனென்று ஒரு பயல் தான் ஒரு பெரிய க்ஷத்ரியன் போல எதிரியென்று வருகிறதாம்; அதைக் கண்டு ஒருவன் பொறுத்திருக்கிறதாம்.. அப்படிப் பொறுத்திருப்பவன் ராக்ஷஸர்கட்குத் தலைவனென்று பெயர் சுமந்திருப்பதாம். என்று வெகு அற்பமாகச் சொல்லி யுத்தத்திற்குக் கிளம்பினனென்கை. இதனுல், இராமன், தனக்கு எதிரியென்று புறப்படுவதற்கும் தகுதியற்றவன் என்பதும், இராமன் போர்க்கு வரச் செய்தேயும் இராவணன் தான் ஆறியிருப்பது தன் பெருமைக்குத் தகாதென்பதும் தெரிவிக்கப்பட்டனவாம்.

இப்பாட்டின் இவ்வரிய பெரிய பொருளை உணராதவர்கள் பிறரும உணர்ந்து கொள்ள இடமில்லாதபடி "தான் போலுமென்றெழுந்தான்" என்றும் "கோன்போலுமென்றெழுந்தான்" என்றும் பாடத்தையே மாறுபடுத்திப் பதிப்பித்தும் ஓதுவித்தும் வருவது வருந்தத்தக்கது.

(5—1—2) "பள்ளச் செறுவில் கயலுகளப் பழனக் கழனியதனுள் போய்ப், புள்ளுப்பிள்ளைக்கு இரைதேடும் புள்ளம் பூதங்குடிதானே."—முற்காலத்தில், ஆலவாயுடையான் என்பாரொரு தமிழன் பட்டரிடம் வந்து இப்பாட்டில் ஒரு கேள்வி கேட்டான்: பள்ளச் செறுவில் கயலுகள' என்ற போதே அவ்விடத்து வயல்களில் மீன்கள் அளவற்றுக் கிடக்கின்றமை வெளிவந்துவிட்டது ; அப்படி யிருக்க ஈற்றடியில் 'இரைதேடும்' என்று எங்ஙனே சொல்லலாம்? மீன் அருமைப் பட்டிருந்தாலன்றோ இரைதேட வேண்டும் ; கொள்வார் தேட்டமாம்படி குறையற்றுக் கிடக்கும் போது தேடிப்பிடிப்பதாகச்சொல்லுவது பொருந்துமோ? என்று கேட்டான் ; இதற்குப் பட்டர் அருளிச் செய்ததாவது—பிள்ளாய்! நீ கற்றவனுயினும் சொற்போக்கு அறிந்திலை ; "பிள்ளைக்கு இரை தேடும்" என்றுள்ளது காண் ; அங்குள்ள மீன்கள் நிலமிதியாலே தூணும் துலாமும் போலே தடித்திருக்கும் ; அவை

acharya.org

பறவைக்குட்டிகளின் வாய்க்குப் பிடிக்கமாட்டாவாகையால் உரிய சிறுமீன்கள் தேடிப்பிடிக்க வேண்டுமத்தனையன்றோ என்றாராம். (வ்யா) பாலசிஷ்யர்கள் அவகாஹித்துக் கொள்ளக்கூடிய சிறு விஷயங்களை மஹாசாஸ்த்ர ஸாகரத்திலிருந்து ஆசாரியர்கள் உபதேசிக்கத் தேடுகின்றமை இவ்விடத்திற்கு உள்ளுறை பொருளாகும்.

(தொடரும்.)

இந்த வியாஸத்தின் அநுபந்தம் இனி "அருளிச் செயல் விசேஷார்த்தங்கள்" என்ற மகுடத்தின்கீழ் ஸஞ்சிகை தோறும் வெளிவந்து கொண்டிருக்கும்.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம்

[பத்ராதிபர்]

(201-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

கீழ் வாஸுதேவாதி வ்யூஹங்களைப்பற்றி யதாமதி தெரிவிக்கப்பட்டது. இங்கு அந்த வ்யூக சதுஷ்டயங்களில் நின்றுமுண்டாய் தங்களை த்யாநியாநிற்கும் சேதனர்களின் லலாடாதி (நெற்றி முதலான) அவயவங்களில் வீற்றிருந்து அவரவர்களின், தாபத்ரயாதிகளாலுண்டாகும் தாபத்தின் ஶமநத்தையும், ஶரீர ரக்ஷணத்தையும் பண்ணுநிற்கும் கேஶவாதி வ்யூஹாந்தரங்களைப் பற்றிச் சிறிது தெரிவித்துக்கொள்கிறேன். அடியேன் சிற்றறிவுடையனுதலால் அடியேனுல் எழுதப்படுமவைகளில் தவறுகள் மலியக் காணக்கூடும். அத்தவறுகளை அறிவாளுயர்ந்த பெரியோர்கள் திருத்தி யநுக்ரஹித்தால் அவைகளை அனைவருமறியுமாறு வைஜயந்தியின் வாயிலாய் வெளியிட்டு அவர்கள் செய்த பெருநல்லுதவிக்குத் தலையல்லால் கைமாறிலாதவனுகக் கடவேன்.

கேசவன், நாராயணன், மாதவன் என்று சொல்லப்படுகிற மூன்று திருநாமங்களும் ஶாந்தோதிதர் என்கிற வ்யூஹவாஸுதேவரிடத்தில் நின்றும் உத்பன்னர்கள். கோவிந்தன், விஷ்ணு, மதுஸூதனன் என்கிற மூன்று திருநாமங்களும், ஸங்கர்ஷணரிடத்திலிருந்து உத்பன்னர்கள். த்ரிவிக்ரமன், வாமனன், ஸ்ரீதரன் என்று சொல்லப்படுகிற மூன்று திருநாமங்களும் ப்ரத்யும்நரிடமிருந்து உத்பன்னர்கள். ஹ்ருஷீகேசன், பத்மநாபன் தாமோதரன் என்கிற மூன்று திருநாமங்களும் அநிருத்தரிட

acharya.org

மிருந்து உத்பன்னர்கள். ஆக வாஸுதேவ, ஸங்கர்ஷண, ப்ரத்யும்ந, அநிருத்தர்களென்கிற வ்யூஹசதுஷ்டயத்தில் நின்று முண்டான கேஶவாதி வ்யூகாந்தரங்கள் பன்னிரண்டு.

1. அவர்களில் ப்ரஹ்மருத்ரர்களுக்கு நியந்தாவாய் தன்னை ஆஶ்ரயித்தவர்களின் க்லேஶத்தைப் போக்குமவனுயிருக்கும் கேஶவன் ஸ்வர்ணவர்ணனுய் நான்கு சக்ரங்களை ஆயுதமாகக் கொண்டு ஸ்ரீதேவியோடு லலாடத்தில் வீற்றிருந்து "லலாடே ஸததம் தே(தெ)வ்யா ஸ்ரீயாஸஹ விராஜிதம்—சதுஶ்சக்ரம் நமஸ்யாமி கேஶவம் கநக ப்ரப(ஹ)ம் என்று தன்னை வணங்குமவர்களை வாழ்வியாநிற்பன்.

2. ஸமஸ்த சேதநாசேதநங்களை ஆதாரமாகவும் ஆதேயமாகவுமுடைய நாராயணன் நீருண்ட காளமேகம்போல் ப்ரகாஶியாநின்றுகொண்டு நான்கு ஶங்க(ஙெ)ங்களை ஆயுதங்களாக வுடையனுய் அம்ருதோத்பவா தேவியோடு கூட வயிற்றின் நடுவில் வீற்றிருந்து "அம்ருதோத்பவயா தேவ்யா ஸமாஶ்லிஷ்டமதோத(தொ)ரே—நாராயணம் க(ஙெ)நஶ்யாமம் சதுஶ்ஶங்க(ஙெ)ம் நமாம்யஹம் | என்று தன்னைத் தொழுவார்க்குத் துணையாகாநிற்பன்.

3. மாவித்யா(தொ)ர)ச ஹரே: ப்ரோக்தா தஸ்யா: ஸ்வாமீ த(ய)வ: ஸ்ம்ருத: என்கிறபடி ஸமஸ்தமான வித்யைகளுக்கும் ஸ்வாமியாயிராநின்ற மாதவன் இந்த்ர(ஞ) நீலநிப(ஹ)னுய் நான்கு க(ம)தைகளைக் கையிற்கொண்டு கமலா தேவியோடு ஹ்ருத(த)யத்தில் வீற்றிருந்து நித்யம் கமலயா ஶ்லிஷ்டம் ஹ்ருத(த)யேஹம் த(த)யாம் பு(வோ) தி(யி)ம்—மாத(ய)வம் மணி ப(ஹ)ங் காப(ஹ)ம் சிந்தயாமி சதுர் க(ம)த(த)ம் | என்று தன்னைச் சிந்திப்பார்க்குச் சரணுயிருப்பன்.

4. நஷ்டாம்ச த(ய)ரணீம் பூர்வம் கோ(கெ)ா)விந்தோ(தொ)யஸ் ஸலப்த(ஓ)வாந் என்கிறபடி நஷ்டமான பூமியையடையப் பெற்றவனுன கோ(கெ)ா)விந்தன் சந்த்ரனைப்போல் ப்ரகாஶியாநின்றுகொண்டு நான்கு தநுஸ்ஸுகளை ஆயுதங்களாக வுடையனுய் சந்த்ர(ஞ)ஶோபி(ஷி) நீ தேவியுடன் கண்டத்தில் வீற்றிருந்து தே(தெ)வ்யாச சந்த்ர(ஞ) ஶோபி(ஷி)ந்யா தே(தெ)வம் கண்டே(டெ) விராஜிதம்—சந்த்ர(ஞ) பா(ஹா)ஸம் சதுஶ்

ஶார்ங்க(ம)ம் கோவிந்த மஹமாஶ்ரயே | என்று தன்னையாஶ்ரயிக்குமவர்களை, யாதரியா நிற்பன்.

5. நதத(த)ஸ்தி விநாயத் ஸ்யாத் மயா பூ(ஹு)தம் சராசரம் என்கிறபடியே எங்கும் வ்யாபித்திரா நிற்கும் விஷ்ணுவானவன் பத்ம கிஞ்சல்க நிபனாய் நான்கு ஹலத்தை (கலப்பைகளை) ஆயுதங்களாகக்கொண்டு விஷ்ணு பத்நீதேவியோடு கூட வயிற்றின் வலது பக்கத்தில் வீற்றிருந்து விஷ்ணு பத்ந்யாக்ய(யு)யா தேவ்யா குக்ஷௌ த(த)க்ஷிண பார்ஶ்வக(ம)ம்—விஷ்ணும் சதுர்ஹலம் வந்தே(தெ) பத்ம(கூ) கிஞ்சல்க ஸந்நிப(ஹ)ம் | என்று தன்னைச் சேவிப்பார் க்ஷேமத்தைக் கருதாநிற்பன்.

6. மத்வாக்ய (யூாவு)ம் அஸுரம் ஹந்தி என்கிறபடி மது என்ற அஸுரனைக் கொன்று நிஷ்ப்ரதிபக்ஷ லக்ஷ்மீகனான மது ஸூதநன் கமலத்தின் காந்தியையுடையனாய் நான்கு உலக்கைகளை ஆயுதங்களாகக் கொண்டு வைஷ்ணவீ தேவியோடு வலது புஜத்தில் வீற்றிருந்து வைஷ்ணவீ ஸம்ஜ்ஞயா தேவ்யா கலிதம் த (த) க்ஷிணே பு (ஜா) ஜே—சதுர்முஸலமப்ஜா (ஜா) ப (ஹ) ம் ஸம்ஶ்ரயே மதுஸூதநம் என்று தன்னை யடைந்தார்களை ஆதரியா நிற்பன்.

7. த்ரிரித்யேவம் த்ரயோ வேதா꞉ கீர்த்திதா முநிஸத்தமை :—க்ரமேஸ தாம்ஸ்ததா (யா) ஸர்வாந் த்ரிவிக்ரம இதி ஸ்ம்ருத꞉ | என்கிறபடி ஸர்வவேத ப்ரதிபாத்ய ((தூ))ன பிருக்கும் த்ரிவிக்ரமன் அக்நிவர்ணனாய் நான்கு கத்திகளைக் கையில் தரியா நின்றுகொண்டு வராரோஹா தேவியோடு வலது தோளில் வீற்றிருந்து தக்ஷிணாம்ஸே தயாவார்யம் வராரோஹாயபம்ப்ரஹம் அக்நிவர்ணம் சது꞉ வட்கம் ஹாவயாமி த்ரிவிக்ரமம்—என்று தன்னை த்யாநிப்பார்க்கு ரக்ஷகனாயிருப்பன்.

8. த்ரு (தூ) ஷ்ட்யா ஸ்வகாந்த்யா வாமாநி ஸுகா (வா)நி நயதீதி ய꞉ என்கிறபடி ஸுவப்ரதனான வாமநன் பா(வா)ல ஸூர்யகாந்தியையுடையனாய் நான்கு வஜ்ராயுதங்களையுடையனாய் ஹரிப்ரியா தேவியோடு வயிற்றினிடது பக்கத்தில் வீற்றிருந்து ஹரிப்ரியாயுதம் குக்ஷௌ வாமபார்ஶ்வஸ்த (யு) புண்ட்ரக (ம)ம்—வாமநம் பா(வா) லஸூர்யாப(ஹ)ம் சதுர்வஜ்ரம்

acharya.org

விஹாவயே | என்று தன்னை ஹாவிப்பார் பாபங்களைப் பஞ்சு போல் பரக்கடியா நிற்பன்.

9. ஶ்ரியம் த(ய)ரதி நித்யம் யஃ ஸ்ரீயரஸ்ஸது கீர்த்திதஃ என்று பெரிய பிராட்டியாரை பரத்வத்திற்போலே வ்யூஹத்திலும் விடாமல் மார்பில் தரியாநின்ற ஸ்ரீயரன் புண்டரீகநிஹனுய் நான்கு பட்டாக்கத்திகளை ஆயுதங்களாகக்கொண்டு ஶார்ங்கிணீ தேவி யோடு இடது புஜத்தில் வீற்றிருந்து வாழவைவோனை மஹாவாஹம் ஶார்ங்கிணீபதி மவ்யயம்—ஸ்ரீயரம் புண்டரீகாஹம் சதுஃபட்டஸமாஶ்ரயே என்று தன்னை யடைந்தாரை யாதரியா நிற்பன்

10. ஹ்ருஷீகாணீந்த்ரியாண்யாஹுஃ தேஷாமீஶாய தோஷவாந்—ஹ்ருஷீகேஶஸ்ததோ விஷ்ணுஃ வ்யாதோ தேவே ஷுகேஶவஃ என்று இந்த்ரியங்களை நியமியாநின்ற ஹ்ருஷீகேஶன் மின்னற்போல் ப்ரகாஶியாநின்றவனுய் நான்கு முத்கரங்களை ஆயுதங்களாகவுடையனுய் தேவதேவிகாதேவியுடன் இடது தோளில் வீற்றிருந்து தேவதேவிகயா தேவ்யா ஶ்ரிதம் வாமாம்ஸ ஸம்ஶ்ரிதம்-சதுர்முத்கரஹஸ்தமப்யே (ஹ்யே) மி ஹ்ருஷீகேஶம் தடித்ப்ரஹம் | என்று தன்னையடைந்தார்க்கடைக்கலமா யிருப்பன்.

11. பார்த்தி(யி)வம் ஹரிபத்மஞ்ச நாஹா வஷ்டகளம் மஹத்—யஸ்ய ஹேமமயீ திவ்யா கர்ணிகா மேருருச்யதே | யஸ்ய நாஹள தத்பத்திஃ பத்ம நாஹஸ் தடுச்யதே என்கிறபடி உந்தியில் பத்மத்தையுடைய பத்மநாபன் சூர்யனைப்போல் ப்ரகாஶியா நின்றவனுய் பஞ்சாயுதங்களையுமுடையனுய் மஹாலக்ஷ்மீ தேவி யோடு ப்ருஷ்டபாகத்தில் (முதுகில்) வீற்றிருந்து ப்ருஷ்டேஸம்ருஷ்டயா தேவ்யா மஹா லக்ஷ்ம்யா விராஜிதம்—பஞ்சாயுயம் பத்மநாஹம் ப்ரணமாம்யர்க்க ரோசிஷம் | என்று தன்னை வணங்கினுரை வாழ்வியா நிற்பன்.

12. தாமாநி லோகநாமாநி ஹாந்தியஸ்யோதராந்தரே— என்கிறபடி லோக நாமங்களை உதரத்திலுடைய தாமோதரன் பட்டுப்பூச்சிபோல் ப்ரகாஶியா நின்றுகொண்டு நான்குபாஶங்களைக் கையிலே யுடையனுய் லோகஸுந்தரீ தேவியோடு பிடரியில் வீற்றிருந்து ஸதா ககுதமதம் லோக ஸுந்தரீபதிமவ்யயம் தாமோதரம்சதுஃ பாஶம் இந்த்ரகோப நிஹம் ஹஜே என்று தன்னைத் துதிப்பார்க்குத் துணையாகா நிற்பன்.

acharya.org

ஊர்த்வ புண்ட்ரம் தரிக்கும்போது அநுஸந்திக்கும் ப்ரகாரம் ப்ரஸங்காத் இங்கு எழுதப்படுகிறது.

	திருமண்	ஸ்ரீ சூர்ணம்
நெற்றியில்	கேஶவாய நம:—	ஸ்ரீயை நம:
வயிற்றில்	நாராயணாய நம:—	அம்ருதோத்பவாயைநம:
மார்பில்	மாதவாய நம:—	கமலாயை நம:
கழுத்தில்	கோவிந்தாய நம:—	சந்த்ரஶோஹிந்யை நம:
வயிற்றின் வலது பக்கத்தில்	விஷ்ணவே நம:	விஷ்ணு பத்ந்யை நம:
வலது புஜத்தில்	மதுஸூதநாய நம:	வைஷ்ணவ்யை நம:
வலது தோளில்	த்ரிவிக்ரமாய நம:	வராரோஹாயை நம:
வயிற்றினிடது பக்கத்தில்	வாமநாய நம:	ஹரிப்ரியாயை நம:
இடது புஜத்தில்	ஸ்ரீதராய நம:	ஶார்ங்கிண்யை நம:
இடது தோளில்	ஹ்ருஷீகேஶாய நம:	தேவதேவிகாயை நம:
முதுகில்	பத்மநாபாய நம:	மஹாலக்ஷ்ம்யை நம:
பிடரியில்	தாமோதராய நம:—	லோகஸுந்தர்யை நம

தியானம்

(வி. கே. ஏ. எஸ். ரகுநாதாச்சாரி, பி. ஏ., எம். ஐ. எஸ். ஏ.)

நாமெல்லோரும் தியானமென்ற வார்த்தையை அடிக்கடி பிரயோகப் படுத்துகிறோம். ஆனால் அது எதைக்குறிக்கின்றது, அதனுடைய தன்மை தானென்ன? என்பனவற்றைப் பற்றி நாம் ஸாதாரணமாக ஆராய்வதில்லை. அதன் பொருள் நம் மனத்தகத்தே பதிந்து கிடக்கின்ற தாதலின் அச்சொல் வழங்கி வரத் தலைபட்டு விட்டது. தியானம் என்ற பக்குவ நிலையை நமமுணர்ச்சிகளால் சிறிதளவு அறிதலாகுமாயினும் விவரித்துரைத்தல் கடினமானதே.

இவ்வுலகத்திலே நாம் தோன்றிய காலத்திலேயே நம்முடன் பிறப்பாகத் தோன்றி நம்மை முற்றிலும் அழித்து விடுகின்ற 'பற்று' என்று ஸாதாரணமாகக் கூறப்படும் ஆசையாகிற பந்தத்தை நாமறிவோமல்லவா? அது எவ்வளவுக் கெவ்வளவு நமக்குக் கீழ்மைதனத்தை உண்டு பண்ணுவிக்கின்றதோ அவ்வளவுக்

கவ்வளவு நமக்கு மேன்மையை யளிக்கக்கூடிய 'பற்று' மொன்றுளது. அதனை நாம் 'பக்தி' என்ற பெயர் கொண்டழைக்கிறோம். எப்படி நீசப் 'பற்று' உலகப் பொருள்களுக்கும் நமக்கும் பாந்தவ்யத்தை ஏற்படுத்து விக்கின்றதோ அப்படியே தூய்மையான 'பற்றாகிய' பக்தியும் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கு மந்தரங்க ஸம்பந்தம் செய்விக்கின்றது. அது சேஷியின்பால் சேஷனுக்கு அர்ஹதவத்தையும் சேஷன் பால் சேஷிக்குக் கிருபா கடாக்ஷத்தையும் நிலை பெறச் செய்கின்றது. இவ்வளவு குணவிசேஷங்களுள்ள பக்தி தலை யெடுத்து ஓங்கி வளருங் காலத்திலே தளிர்த்து நிற்கின்ற தன்மையில் தியானமாக மிளிர்ந்து முற்றின நிலையிலே தியானமே ஆகிவிடுகின்றது (மாகவே தழைக்கின்றது.)

இப்படிப்பட்ட தியானம் ஒருவர் பால் காணப்படுமாயின் அவர் எம்பெருமானுடைய பரி பூர்ண கடாக்ஷத்திற்குப் பாத்திரரானவரென்பதை நாம் அநேக வாயில்களால் அறியலாகும். பண்டைக் காலத்தில் ஒரு முனிவர் வனமொன்றில் தவம் செய்து கொண்டிருந்தார். அவரிடம் சிஷ்யனாக விருப்பான் வேண்டி ஒருவன் வந்து சேர்ந்தான். வெகு நாட்கள் வரையில் அவன் அவருகந்த பணிவிடைகளைச் செவ்வனே இயற்றி வந்தும் அவர் அவனுக்கு ஒன்றுமுபதேசியாது மோனமாகவே யிரா நின்றார். அந்நிலையிலும் அவன் தன்குன்றாப் பக்திப் பெருக்கினால் சற்றும் மனம் தளர்ந்திலன், நொந்து மிலன். முதலில் நம்பிக்கை யேற்பட்டு அது பக்தியாக வளர்ந்து பிறகு பக்தி முதிர்ந்து தியானமாக வளர ஆரம்பித்தது. இப்படித் தியானத்திலேயே சில நாள் சென்றது. ஒரு நாள் காலை முனிவர் ப்ருஹத் சங்கியை கழித்து கொள்ளச் சென்றார். சிஷ்யனும் கூடவே சென்றான். முனிவரை நெருங்கி ஒரு பன்றி வர அவர் 'டுர் டுர்' என்று உச்சாரணம் செய்தார். உடனே பன்றி விலகிப் போயிற்று. சிஷ்யன் ஸத்ஸங்கத்திலே இத்துணை நாள் பொறுமையுடன் வதிந்து வந்தவனேயன்றோ? ஆகவே எப்படி அசுசித்தன்மை பொருந்திய பன்றி 'டுர் டுர்' என்று சொன்ன காலத்திலேயே முனிவரை விட்டு விலகிச் சென்று விட்டதோ அவ்வண்ணமே இகப்பற்றும் 'டுர் டுர்' என்று சொன்னவளவிலே அகன்றிடலாகும் என்று அவனுக்கு எண்ண முதித்தது. அவ்விநாடியே முனிவர், தனக்கு இத்துணை நாள் பொறுத்ததின் பெரும் பலனையளித்துவிட்டார் என்று

acharya.org

ஆனந்தக் கூத்தாடினார். மேனி சிலிர்த்தான். மெய் மறந்தான். அவன் வாயினின்றும் 'டுர், டுர்' என்ற சொற்களே புறப்படலாயின. அவ்விடத்திலேயே குரு சரணாரவிந்தத்தின் பால் ஏகாக்ரசித்தனாய்த் தனக்குபதேசிக்கப்பட்ட மந்த்ரத்தை உச்சாடனம் செய்துகொண்டேயிருந்து பரிபக்குவ நிலையை யெய்தினவளவிலே "கனக கிரிமேல் கரியமுகில் போல் வினதை சிறுவன் மேற்கொண்டு" எம்பெருமான் அவனுக்குக் காட்சியளித்து ஆசீர்வதித்துச் சிலகாலம் அடியார்கள் நிமித்தம் இப்பூமியில் வசிக்கும்படி ஆக்ஞாபித்தான். சீடனும் எம்பெருமான் கட்டளையைச் சிரஸாவஹித்துச் சின்னாள் உலகத்திலே இனிது வாழ்ந்திருந்து பிறகு" இந்த உடல் விட்டு இரவி மண்டலத்தூடேகி

இவ்வண்டங் கழித்திடையிலாவரண மேழ்போய்
அந்தமில் பாழ்கடந்து அழகார் விரசைதனிற் குளித்து அங்கு
அமானவனாலொளி கொண்டசோதியும் பெற்று அமரர்
வந்தெதிர் கொண்டலங்கரித்து வாழ்த்தி வழிநடத்த
வைகுந்தம்புக்கு மாமணி மண்டபததுச் சென்று
அடியார்கள் குழாங்களழ கோலக்க மிருக்க
ஆநந்தமயமான மாமணி மண்டபத்துப
படியாதுமில் படுக்கையாயிருக்கும நந்தன்
பணாமணிகள் தம்மினொளி மண்டபத்தினிடையில்
வடிவாரும் மாமலராள் வலவருகும் மற்றை
மண்மகளும் ஆய்மகளும் இடவருகும் இருக்க
நடுவாக வீற்றிருக்கும் நாரணனைக் கூடினான்.

பின்னும் வால்மீக முனிவருடைய ராம நாம ஜபம் எவருமறியாததன்று. இப்படிப்பட்ட தன்மை வாய்ந்தது தியானம்.

ஆகவே தியானமே இவ்வுலகத்தினின்றும் நம்மைக் கைதூக்கி விடுவதாகிய உண்மைப் பொருளாகும். மற்றவை யனைத்தும் தோற்றமேயன்றி நித்தியமானவையல்ல. மாயையே உருவாகிய யிவ்வுலகத்திலேயே மக்களாய்த் தோன்றினநாம் அநுஸரிக்கக் கூடிய முக்கிய கடமைதானென்னெனில், பரிசுத்தம் பொருந்திய தூயவாழ்க்கையைக் கைப்பிடித்தொழுகுதலேயாகும். அப்பொழுதுதான் பற்றறும் பக்தியுறும் தியானம் வளரும். பக்குவ நிலையெய்தும்.

acharya.org

ஆமாம், எல்லோரும் புண்ணியமானதொரு கண்ணிய வாழ்க்கையை நடத்துதல் வேண்டுமென்று நாக்கடிப்பாகவும் வாய்ப்பறையாகவும் சாற்றுதலியலும். ஆனால் அநுபவ பூர்வமாகக் கையாளுதற்கில்லையே, எத்தனையோ பெயர் அவ்வண்ணம் முயன்றும் தம் முறுதியினின்றும் நழுவிப் போந்தனரே ஆதலின் இஃதியலாததாகும் என்று ஒரு சிலர் கூறுவர். அநேகர் அவ்வண்ணமாகத் தாழ்ந்தும் போயிருப்பதாகக் காணப்படலாம். ஆனால் உண்மை யஃதன்று ஏனெனில் "இருப்புறினும் தொண்டர்க்கு வேண்டுமிதமல்லால் திருப்பொலிந்த மார்பனருள் செய்யானன்றோ? ஆகவே நாம் செய்யவேண்டியதென்ன? எவர்க்கும் இத்தகைய மேன்மைத்தான காரியம் முடித்தற்பாலதன்று என்று சொல்பவர்க்கு அதை முடித்துக் காட்ட முற்படவேண்டும். இவ்வண்ணம் முற்படுவது அஹம்பாவத்தைக் காட்டாது. ஏனெனில்? இப்படிப்பட்ட காரியத்தைச் சிரஸாவஹித்து நாம் முடித்துக் காட்டினால் எல்லோரும் நம்மைப்போல முற்பட்டு நற்பலனை யடைவர். ஆகவே நாம் உலகோர் மாட்டு நன்மை செய்தோரேயாகின்றோம். 'நாம் கைக்கொண்ட காரியத்தைப் பூர்த்தி செய்வோமென்றெண்ணி யிருப்பது பேதமைத்து' என்று கலியின் மாயையினால் கவரப்பட்டுரைப்பவருடைய கட்டுரை கட்குச் சிறிதும் செவி சாய்க்காது நாம் தியானத்தின் மாட்டு நம்முடைய சிரத்தையைத்தினே தினே அதிகரிப்பித்துக் கொண்டே செல்லவேண்டியதே நமது கடமை. அதன் பலனைப் பற்றி நமக்குக் கவலை யெற்றுக்கு? நாம் விதியை யநுஸரித்துக் கர்மத்தைச் செய்துவருவோமாயின் ஸர்வாந்தர்யாமியே அதனுடைய பலனை இனிதாக்கிடுவன். அதையே யன்றோ பகவத்கீதையிலும், "நான் ஸ்வேச்சாதிகாரி. ஆயினும் பக்த பராதீனன்" என்ற கருத்துப்பட ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா அருளிச் செய்திருக்கிறார்.

ஆகவே, நாம் நம்முடைய காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து பிறருடைய தூண்டுதலானவார்த்தைகளையும் அவருடைய அசிரத்தையையும் கொஞ்சமும் கண்ணெடுத்துப் பாராது நம்முடைய மேற் போக்கையே கவனித்துவரவேண்டும். நாம் உய்வதன்றிப் பிறரையும் உய்விக்க வழிகாட்டியாக விருக்கும் இத்தூய்மையான வாழ்க்கையிலே நாம் ஈடுபட் டிருப்போமாயின் முயற்சியே திருவினையாக்கிவிடும். நம்முடைய தியானம்

acharya.org

சிறிதளவும் தளர்ச்சி யடையாவண்ணம் நாமதனை இமைபோலப் பாதுகாத்து வரல் வேண்டும். அன்புந் தியானமுந் ததும்பும் தன்மை என்னே பெரிது! அன்பு அதிகரிக்க அதிகரிக்கத் தியான மும் ததேவத் ததும்புகின்றது. மேற்கண்ட வற்ருல் தியானமே ஒருவற்கு நிரந்தரமான ஸந்தோஷத்தை மிகுதியும் தரவல்லது என்பது வெள்ளிடை மலையன்றே ?

மேன் மேலும் ஒருவனுக்கு உற்சாகத்தை ஊட்டக்கூடிய தியானத்தின் சக்திகள் வெகு அபூர்வமானவையே யாகும். பக்த னொருவன் கல்லிலும் கடவுளைக் கண்ணாரக் காணலாகும் என்ருல் அதன் சக்தியினருமை தானென்னே ! அச்சக்தி நிரந்தரமாயிருப் பது. எந்நாளும் அழியாதது. உயிருதறிய உடலத்திலும் உயிரை யுண்டாக்க வல்லபெருமை அச்சக்திக்குளது என்பதினின்றே அச்சக்தியின் போற்றருந்தன்மை தெற்றென விளங்குவதாகின் றது. இச்சக்தியைத் தன்னகத்துக் கொண்டு ஒளிரும் தியானம் எவருக்கு ஸ்ரீய: பதியின் பால் இயற்கை யாகவே உண்டாகின் றதோ அவர்கள் உண்மையிலேயே மிகுந்த ஸந்தோஷ வந்த ராகின்றனர். தியானம் இயற்கையிலேயே உண்டாதல் வேண்டும் என்று ஒரு பெரியார் பின்வருமாறு வற்புறுத்தி யுள்ளார். "நம் பிக்கையினுலும் தியானத்தினுலும் ஏற்படும் ஒரு சக்தியைக் கொண்டு வெகு எளிதில் [illegible] அடைதல் கூடும். ஆனல் வாதத்தினல் ஒரு காலும அதனை யெய்துதலியலாது"

ஆகவே நாம் "ஒன்றே செய்க. ஒன்றும் நன்றே செய்க. நன்றும் இன்றே செய்க" என்ற பிரகாரம் மேற்சொன்னபடி தூய வாழ்க்கையில் இன்று தொட்டே ஈடுபட்டு தியானப் பிழம் பாய் ஒளிர்ந்து, எம்பெருமானுடைய திருப்பாதார விந்தங்களை நாம் புகலுறுமாறு எம்பெருமானர் தம கருணை நோக்கெனுந் தூண்டுப்புக்கொண்டு நம்மை உந்திச் செல்வாராக.

கோயில் அண்ணன் திருவடிகளிலே சரணம்

ஸ்ரீ பாஷ்ய முத்ரணம்

[ஸ்ரீ. உ. வே. அனந்தாசாரியார் ஸம்ஸ்க்ருத பண்டிட் பச்சையப்பன் காலேஜ்]

ஸ்ரீ பகவத் ராமாநுஜன் அருளிச செய்த ஸ்ரீ பாஷ்ய க்ரந் தத்திற்கு முக்கியமான அநேக வ்யாக்யாநங்களுடன் தேவநாகர

லிபியில் ஒரு பதிப்பு இதுவரை வெளிவராதது பெருங்குறையாகக் காணப்படுகிறது. இக் குறையைப்பற்றி, வடதேசங்களில் (காசி, கல்கத்தா முதலிய இடங்களிலிருந்து வந்த அநேக வித்வான்களும் அடியேனிடத்தில் சொன்ன துண்டு. நமது தென்தேசத்தில் அவதரித்த அபூர்வ க்ரந்தங்களை நல்லநிலையில் ஸம்ரக்ஷிக்கவேண்டு வது தென் தேசத்தவர்களுடைய கடமையல்லவா? இக்குறையை நீக்குவதன் பொருட்டு ஸ்ரீஸ்ருதப்ரகாசிகை முதலான பத்துவ்யாக் யாநங்களுடன் ஸ்ரீ பாஷ்யத்தை அச்சிட்டு வருகிறோம். அதில் க்ஷேத்ராமாவ ஷஷ்டீ ஸகேஸு இதி வ்ருதிவ்ருஸவ ஸஹேவாக:, என்ற வங்க்தி ஆஸேது ஹிமாசலம் பரிநிஷ்டித வித்வான்கள் அனைவராலும் ஸேவிக்கப்பட்டு வருகிறது. இதற்குமுன் அச்சிட்ட அநேக முத்ரித புஸ்தகங்களிலும் இப்படியே பாடம் இருந்தபடி யால் இந்த பாடத்தில் விவாதம் இல்லை என்று எண்ணி அச்சிட் டோம். கழிந்த வைகாசிமீ பெருமாள் கோயிலில் ஸ்ரீ தேவப் பெருமாள் மஹோத்ஸவத்தில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்க ராசார் ஸ்வாமி அடியேனிடத்தில், வ்ருதிவ்ருஸவஸஹூாவாக: என் றல்லவோ சுத்தமான பாடம் அதை கவனித்ததில்லையோ? என்று கேட்டார். அடியேன் இந்த பாடபேதத்தைப்பற்றி கேள்விப் படாததால் அப்படி இருக்குமோவென்று ஸம்சயப்பட்டு, அந்த ஸ்வாமிக்கு, அடியேன், இன்னும் பல ஸ்ரீகோசங்களைப்பார்த்து ஆராய்ந்தும், இன்னும் பல வித்வான்களைக் கேட்டும் தெரிந்து கொண்டு நிர்ணயம் சொல்லுகிறேன் என்று விண்ணப்பம் செய்து கொண்டேன். ஷை அண்ணங்கராசார் ஸ்வாமி சிறிதுநேரத்துக் கெல்லாம் பழைய ஓலைப்ரதி ஒன்றை அடியேனுக்கு அனுப்பி வைத்தார். அதைப் பார்த்ததில் ஸஹூாவாக: என்ற பாடமே இருந்தது. அதற்குப்பின் அங்கு எழுந்தருளி இருந்த அநேக வித்வான்களிடம் இந்த விஷயத்தை ப்ரஸ்தாபித்தபோது சிற்சில பெரியவாள் ஸஹூாவாக: என்ற பாடமே சரி என்று ஒப்புக் கொள்வதுண்டு எனத் தெரியவந்தது. அதன்மேல் ஸ்ரீதத்வ டீகையை அச்சிடுவதற்காகப் பரிசோதித்தபோது அதில் வ்ருதிவ்ருஸவ:—கவவாஜாவவாஜ:, தஸு ஸஹூாவாக: என்று வங்க்தியைக் கண்டோம். கண்ட பிறகு ஸஹூாவாக: என்ற பாடமே ஸ்ரீ தேசிகன் உகந்தருளின பாடம் எனத் தெரியவந்தது. ஸஹூ வாக:என்ற பாடம் ஸ்ரீ தேசிகனுடைய காலத்தில் இருந்திருக்

acharya.org

காது. அப்படி இருந்தால் ஸ்ரீ தேசிகன் அந்த பாடத்தையும் எடுத்து ஆவாபோத்வாபங்களைச் செய்யாமல் இருக்கமாட்டார். ஆகையால் ஸஹூவாஸ: என்ற பாடம் பிற்காலத்தில் முளைத்திருக்க வேண்டும் என ஊஹிக்க வேண்டியிருக்கிறது. இவ்விரண்டுபாடங்களில் ஸஹூவாஸ: என்பதே ஸஹஸ்ராநாமணம் என்றும் தோன்றுகிறது. இவ் விரண்டு பதங்களுக்கும் அர்த்தத்தில் ஸ்வல்ப வ்யத்யாஸம் உண்டு. சந்தர்பாநு குணமாக ஒருபதத்தினுடைய அர்த்தத்தை மற்றொரு பதத்திற்குக் கொள்ளவேண்டியதுண்டு. ஸஹூவாஸ: என்னும் பாடத்தை ஒப்புக்கொண்டால் அதற்கு ஸஹூவாஸ: என்ற பதத்தின் அர்த்தத்தை ஆரோபணம் செய்து வாக்யார்த்தத்தைப் பூர்த்தி செய்யவேண்டி வரும். ஸஹூவாஸ: என்னும் பாடத்தை ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் அந்த ஶ்ரமம் இல்லை. இந்த விஷயத்தில் பண்டிதர்கள் யதோசிதம் வ்யவஸ்தை செய்துகொள்ளுவார்கள் என்று விஜ்ஞாபிக்கிறேன்.

> நிருத்தூராணாம் விதேஷாம் ஸாராஸாரவிவேகிநாம்
> வஹாநி வரணாத்ஸூஜ வராமாநு ஶிரஸாநிஶம்
> கநஞாசார்யநாமேஸ்ள நஸ்ராநஹிஜ நஸ்யேய:
> ஸ்ரீ ஹாஷ்ய வாஸஹூஸம்விஶேவ ஸதாம்சேஷே ||
>
> வெ. கநஞாசார்யர்.

பத்ராதிபரின் குறிப்பு

ஸ்ரீ பாஷ்ய விஷயமாய் ஏற்பட்டிருக்கும் சர்ச்சையைப் பற்றிச் சிறிது கவனிக்கும்படி நேர்ந்ததில் 1916-௵த்தில் ஸ்ரீதராசார்யரால் பரிஷ்கரிக்கப்பட்டு ஸ்ரீப்ருந்தாவனத்தில் ஸ்ரீநிவாஸ யந்த்ராலயத்தில் அச்சிட்ட புஸ்தகத்தில் “ஸஹூவாஸ:” என்றே மூலம் அச்சிடப்பட்டிருக்கிறது. 1886-௵த்தில் பாரத்வாஜ ராமாநுஜாசார்யரால் பரிஷ்கரிக்கப்பட்டு காஞ்சீபுரம் திருவேங்கட முதலியாரால் அச்சிடப்பட்ட ஸ்ரீபாஷ்ய க்ரந்தத்தில் ஸம்ஹவாஸம்கா என்றே அச்சிடப்பட்டிருககிறது. இது விஷயம் ஸ்ரீ அனந்தாண்பிள்ளை கோவிந்தப்பங்கார் ஸ்வாமியிடம் ப்ரஸ்தாபித்த காலத்தில் மேற்சொன்ன பாடங்கள் பழையதாவ

acharya.org

கோஶங்களில்மாத்ரமல்ல அச்சுப்புஸ்தகங்களிலும் முன்னமேயே அச்சிடப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லி ஷை க்ரந்தங்களையும் எடுத்துக்காட்டினார். இத்தால் ஸ்ரீஅண்ணங்கராசாரியாரநுக்ரஹித்த பாடமே பெரியோர்கள் திருவுள்ளமாகக் காணப்படுகிறது. இவ்வாறிருக்க அபத்தபாடத்தை ஆதரித்து அதை ஸமர்த்திக்க முன்வருவது ஆரியர்கட் கழகன்றென்பதை ஸவிநயம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம் பத்ராதிபர்

எண் குணத்தான்

(பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரே. திருமலை ஐயங்கார், காரியதரிசி, தமிழ்ச் சங்கம் திருவல்லிக்கேணி)

எண் குணத்தான் என்பது எண்வகைப்பட்ட குணங்களையுடையான் என்று பொருள் படும். இதனை, "எட்டுமா மூர்த்தி எண் கண்ணன் எண்திக்கு எட்டு இறை எண் பிரகிருதி எட்டு மாவரைகள் ஈன்ற எண்குணத்தோன்" என்று எம்பெருமானை விவகரித்தார் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன். ஐந்து பூதங்கள், சந்திரன், சூரியன். யாகம் பண்ணுகிறவன் முதலிய எட்டுப் பெரிய உடம்புகளை உடைய ருத்திரன், நான்கு முகங்களில் எட்டுக் கண்களை யுடைய பிரம்மா, எட்டுத்திக்குகளு, அஷ்டதிக் பாலகர்கள், பஞ்சபூதங்கள், மஹத், அகங்காரம், மனசு ஆகிய எண்வகைப் பிரகிருதிகள், ஹிமயம் முதலான எட்டுப்பெரிய மலைகள் இவற்றை எல்லாம் உண்டு பண்ணின எட்டுக் குணமுள்ளவனை எம்பெருமான் என்பது இதன் பொருள். "இவனுக்கு எட்டு குணங்க ளென்கிறது [illegible] திவா ஸைகளன்றிக்கே யொழிகையும், நித்யங்களான ஹோஷங்களை யுடையனுகையும்" நினைத்தது முடிக்கவல்லனுகையும் (கர்மத்துக்கு உட்படாமை, கிழத்தனமில்லாமை, மரண மில்லாமை, பசி யில்லாமை, தாஹ மில்லாமை, சோக மில்லாமை, நித்யமான போகங்களை யுடைமை, நினைத்ததை முடிக்கவல்லமை என்பன.)

நாயனார் கடவுள் வாழ்த்ததிகாரத்தில் "கோளில் பொறியிற் குணமிலவே யெண் குணத்தான் றளை வணங்காத்தலை" எனப் பகர்கின்றார்.

acharya.org

பரிமேலழகர் உரை பின் வருமாறு.

“தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள் போலப் பயன் படுதலுடைய வல்ல, எண்வகைப்பட்ட குணங்களை யுடையானது தாளை வணங்காத் தலைகள்.”

““எண் குணங்களாவன—தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவை இவ்வாறு சைவாகமத்திற் கூறப்பட்டது.” அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் முதலியவற்றை முதலாக வுடையவன் எனவும் கூறலாம் கடையிலாவறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா வின்பம், நாம மின்மை, கோத்திர மின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு என வகுப்பர் சமணர்.

எண் குணத்தான் என்பதை ஆனந்தவல்லியிற் சொல்லுகிற கணக்கிலே எண்ணுக்குபெருகியிருப்பதாய் ஆனந்தாதி குணத்தை யுடைய ஸ்வாமியான ஸ்ரீமந் நாராயணன் எனக் கொள்வது சாலப் பொருந்தும்.

ஆழ்வாரும், “எண்பெருக்கந் நலத்து ஒண்பொரு ளீறில வண்புகழ் நாரணன் திண் கழல் சேரே” எனப பணித்துள்ளார்.

“இப்படி ஸகல ஸமாஸ்ரயணீயனாகச் சொல்லபபட்ட ஈஸ்வரன் தான் ஆர்? என்னில்,—அஸங்க்யேயராய் ஜ்ஞாநாநந்தஸ்வபாவராயிருந்த ஸர்வாத்மாக்களையும் நித்யஸித்த கல்யாணகுணங்களையு முடையனாயிருந்த நாராயணன் அவனுடைய ஆஸ்ரிதரை ஒருகாலும் கைவிடாதே ரக்ஷிக்கும் ஸ்வபாவமான திருவடிகளை ஆஸ்ரயி என்கிறார்” (ஆராயிரப்படி)

“பத்தாம்பாட்டு. அழகிது; அப்படியே யாகிறது; பஜநத்துக்கு ஆலம்பநமான மந்த்ரம் எது? என்ன,—அது இன்னதென்றும், அதினுடைய அர்த்தம் அநுஸந்தேயமென்றும் சொல்லுகிறார். இது தன்னைப் புறம்புள்ளார் ஜபஹோமாதிகளாலே கார்யங் கொள்ளா நிற்பர்கள்; நம் ஆசார்யர்கள் ‘ஸ்வரூபாநுஸந்தாநத்துக்கு ஈடா யிருக்கிற இதினுடைய அர்த்தாநுஸந்தாநம் மோக்ஷ ஸாதநம் என்று தாங்களும் அநுஸந்தித்து, தங்களைக் கிட்டினார்க்கும் உபதேசித்துக்கொண்டு போருவர்கள். * * *

ஆழ்வான் இப் பாட்டளவும் வரப்பணித்து, இப்பாட்டளவிலே

acharya.org

வந்தவாறே 'இத்தையுந் தம் ஆசார்யர்கள் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கோள்' என்ன, பட்டரும் சீராமப் பிள்ளையும் எழுந் திருந்து போகப் புக்கவாறே அவர்களை யழைத்து, 'இன்னபோது இன்னார் இருப்பார், இன்னார்போவார் என்று தெரியாது;இருந்து கேளுங் கோள்' என்று திருமந்திரத்தை உபதேசித்து, இப் பாட்டை நிர்வஹித்து, 'இப்பாட்டை இதுக்கு அர்த்தமாக நினைத் திருங்கோள்' என்று பணித்தான்'' (ஈடு).

நிற்க, கௌதமமஹரிஷி

"𑌅𑌷𑍍𑌟𑌾𑌵𑌾𑌤𑍍𑌮 𑌗𑌣𑌾𑌃—𑌦𑌯𑌾𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌕𑍍𑌷𑌾
𑌨𑍍𑌤𑌿𑌰𑌨𑌸𑍂𑌯𑌾 𑌶𑍌𑌚 𑌅𑌨𑌾𑌯𑌾𑌸𑍋 𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑌕𑌾𑌰𑍍𑌪𑌣𑍍𑌯 𑌮𑌸𑍍𑌪𑍃
𑌹𑍇𑌤𑌿'' என்றும, "𑌯𑌸𑍍𑌯𑍈𑌤𑍇 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌤𑍍 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾 𑌨𑌚𑌾𑌷𑍍𑌟𑌾
𑌵𑌾𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑌾 𑌨𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌂 𑌸𑌾𑌲𑍋𑌕𑍍𑌯𑌂𑌚 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿''
எனவும் கூறுகிறார். இவற்றின் பொருள் கூறுதும். பிராஹ்மணர் களுக்கு அவசியமாக ஆத்மகுணங்கள் என்று எட்டுக்குணங்கள் அபேக்ஷிதங்கள். அவை யாவன தயை, க்ஷாந்தி அநஸூயை, ஶௌசம், அநாயாஸம், மங்களம், அகார்ப்பண்யம், அஸ்ப்ருஹை. ஒரு பிராஹமணனுக்கு நாற்பது ஸம்ஸ்காரங்களும் பூர்ணமாக இருநதாலும், இந்த எட்டு ஆத்ம குணங்கள் இல்லாமற்போனால் அவனுக்குப் பிரஹ்ம ப்ராப்தி இல்லை. சத்துருவாயினும், மித்ரனா யினும் ஒருவனை ஆபத்தினின்று யதா சக்தி ஸம்ரக்ஷிப்பது தயை. இதரர்கள் நமக்கு எவ்வித தீங்குசெய்யினும் அவர்கள்மேற்கோபங் கொள்ளா திருத்தல் க்ஷாந்தி. பிறருக்கு எவ்வித ஶ்ரேயஸ் ஸம் பவித்தாலும் அதில் அஸூயையின்றிக்கே ஆனந்திக்கும் குணம் அநஸூயை. அபக்ஷ்யங்களை விலக்கி, ஸத்ஸங்கம் செய்து, ஸ்வதர் மத்தை அநுஷ்டித்தலே ஶௌசம். தர்மத்தை அனுஸரித்ததாயி னும் எப்பொழுதும் பீடாகரமாக இருக்கும் வியாபாரத்தை விலக் குதல் அநாயாஸம். ப்ரஶஸ்த காரியங்களைச் செய்து அப்ரஶஸ் தங்களை விலக்குவதே மங்களம். தமக்குள்ளது அற்பமாயினும் அதில் ஏதாவதொரு அம்சத்தை நாடோறும் பிரீதியுடன் மற்ற வர்களுக்குத் தானம் செய்வதே அகார்ப்பண்யம். தம்முடைய நியாயமான பரிஶ்ரமததால் தமக்கு வருமபொருளைக் கொண்டு திருப்தி அடைவதும், பிறருடையபொருளுக்கு ஆசைப்படாமல் இருப்பதுமே அஸ்ப்ருஹைஇவை விரிக்கிற் பெருகும்.

acharya.org

புஷ்பங்கள் எம்பெருமானுக்கு போக்யங்கள், அவற்றால் அவனை அர்ச்சிக்கிறோம். மேலே சொன்ன எட்டு ஆத்மகுணங்களோடு கூடிய ஒரு சேதனன் எண் குணத்தானான எம்பெருமானை ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்வதே ஸ்வரூபம். எனவே எண்குணத்தான் எண்குணத்தானை வணங்கி உய்யலாமென்பதாயிற்று, "எட்டுமாமலர்—

அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பம் இந்த்ரியநிக்ரஹ: |
ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமாபுஷ்பம் விசேஷத: ||
ஜ்ஞாநம்புஷ்பம் தப: புஷ்பம்த்யாநம் புஷ்பம் ததைவச|
ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம்பவேத் ||

எட்டுப் புஷ்பங்களாவன ஒருவனுக்கும் தீங்கு செய்யாமை, இந்திரியங்களை அடக்கல், எல்லாரிடமும் இரக்கமுள்ளவனா யிருத்தல், ஒருவன் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளல், தன்னையும் எம்பெருமானையும் பற்றிய அறிவு, தபஸ், தியாநம், உண்மை பேசுவது.

"தனக்கு வமையில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது"

"நம்பியைத் தென் குறுங்குடி நின்றஅச்
செம்பொனே திகழும் திரு மூர்த்தியை
உம்பர் வானவர் ஆதியஞ் சோதியை
எம்பிரானை என் சொல்லி மறப்பனோ?

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ப்ரபந்ந குலம்

(ஸ்ரீ. உ. வே. திருமலை நல்லான் ராமகிருஷ்ணய்யங்கார்.
ஆழ்வார் திருநகரி.)

ஸ்ரிய: பதியான ஸர்வேசுவரன் "பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி" ஸங்கல்பித்து, "சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம் குணகர்ம விபாகச:" என்கிறபடி நான்கு வர்ணங்களையும் படைத்து அவையவைக்கான குணங்களையும் கருமங்களையும் வகுத்து வைத்தான். ஏகப்ரகாரமாய் ஜ்ஞாந ஸ்வரூபனாயிருக்கிற

acharya.org

ஆத்மவஸ்து பேதாஸஹமானாலும், சரீர ரூப உபாதிக்ருத பேதத்தைக்கொண்டு ப்ராஹ்மண க்ஷத்ரியத்வாதி வ்யபதேசம் உபபந்நமேயெனப்பூர்வர்கள் உபபாதித்துப் போந்தனர். ஆக பகவத்தாஸ்யமே ஆத்மாவுக்கு நிருபகம் என்று உணர்ந்த பெரியோர் வர்ணாச்ரம வித்யா விருத்தங்களை கர்தபஜந்மம், சவவஸ்தமம், சில்பநைபுணம், பஸ்மாஹுதி, சவவிதவாலங்கார மென்று கழிப்பர்கள். ஆத்மஸ்வரூபத்தை அறியாதவர் ப்ராம்மண்யாதிப்ரயுக்தம் குலம் உச்ராயம் என்றுப்ரமிப்பர்கள். தோல்புரையே போமதுவான இதன் உண்மையை அஜ்ஞர்கள் எங்ஙனம் அறிவர்?

சரீர விநாசாவதியான இத்தகைய குலங்களைவிட, முடிவிலா (யாவதாத்மபாவி) வடிமைக்குலம் நலமிக்கதென நவில வேண்டுமோ? ப்ரபந்நரெனினும், ஸ்ரீவைஷ்ணவர் எனினும் அடியாரெனினும் ஒக்கும். ஆன்றோர் அடியார்தம் குலத்தையே ஆசைப்படுகிறார்கள். பகவத் பாகவதஸம்பந்தமுள்ள விடங்களில் அசேதநகீட ஜந்மங்கள்கூட அவர்கட்கு இனித்தாயிருக்கிறது. பகவத் தாஸ்யத்தில் ஜாதாஸ்வாதனாயுள்ள எவன்தான் அதைவிடமுடியும்? பிரபந்நகுலத்திற் பிறப்பு "ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு" என்கிறபடியே ஜாயமாந காலகடாக்ஷவிஷயீபூதனான ஆயிரத்திலொரு ஞானவானுக்கே கிட்டும். இக்குலத்திற் பிறப்பாவது, ஞானமனுட்டான மானமிவை நன்றாகவுடைய குருவை யடைந்து பகவத்ஸம்பந்தத்தை யுணருகை. "ஸஹி வித்யாதஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்டம் ஜந்ம" என்கிறபடி பரஹமசம்பந்தத்தை யுணர்ந்த பின்னரே யிவன் பிறந்தவனாகிறான். "அன்று நான்பிறந்திலேன்" என்கிற திவ்ய ஸூக்தியும் இங்கு ஒபபநோக்கற்பாலது. சாரீர சம்பந்தத்தோடு ஞானஸம்பந்தமும் ஒரேகுலத்திலுண்டானால் அது பொன்மலர் நாற்றமுடைத்துப் போலாகும். "பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய" (பிதாமஹம் நாதமுநிம் விலோகம்) என்ற ஸ்ரீஆளவந்தார் ஸ்ரீஸூக்தியில் இவ்வுபய ஸம்பந்தமும் ஒள்ளொடுங்கி யுளது. இவ்வுபயசம்பந்தமும் பெறுகை, பட்டருக்கு ஆழ்வான் பக்கல் கிடைத்தது. இத்தகைப்பேற்றை ஸ்ரீ ஆண்டாள் பக்கலிலும் காணலாம். இவ்விருசம்பந்தங்களையும் தந்தையும் பெண்ணும் "மாயன்மணி வண்ணன் தாள்பணியும் மக்களைப் பெறுவர்களே" "வாய்த்தநன்மக்களைப் பெற்று

மகிழ்வரே." என்றும் "நிச்சலும்பாடுவார் நீள்விசும் பாள்வரே" என்றும் பரமபதத்தோடு வாசியற நமோ நாராயணாய வென்பாரே என்று சூழ்ந்திருந்தேத்தும் பல்லாண்டோடு வாசியற ஒக்க பலமாக வருளியிருப்பதால் இதனது பெருமை தெரியவரும். நன்மக்களாவர் நன்மையுடையமக்கள். நன்மையாகிறது பகவச் சேஷத்வமாகிற ஆத்மஸ்வரூபநிரூபகதர்மம். அத்னைத யுடைத்தாதல் பற்றி ஆத்மாவை "நன்பொருள்" என்று கூறுவதுமுண்டு. "நம்பினேன் பிறர்நன்பொருள் தன்னையும்" என்கிறவிடத்து நன்பொருள் என்கிறபதத்திற்கு ஆத்மாவென்று வியாக்கியானித் திருப்பதுங்காண்க. அவ்விடத்திய வியாக்கியானமாவது :—"நன்பொருள் என்கிறது ஆ ஆத்மாவை... .... வைலக்ஷண்யத்தை யுடையனுகையாலே................பகவச்சேஷத்வத்தளவில் நில்லாதே சேஷத்வகாஷ்டையில் நிற்கக்கடவ ஆத்மவஸ்துவைக்கிடீர் நானபஹரித்தது." என்று.

ஆகவிங்கு நன்மக்கள் என்கிறது ஆத்மகதசேஷத்வாநுரூபமானப்ரபதனத் திலிழிந்தவரை யென்று கூறத்தட்டில்லை. "வைஷ்ணவோ ந: குலே ஜாத: ஸ நஸ்ஸந்தாரயிஷ்யதி" வைஷ்ணவோ ந: குலே ஜாதஸ்ஸ நஸ் ஸந்தார விஷ்யதி) என்றிறே பிதிருக்களும் தங்கள் குலத்தில் வைஷ்ணவன் உண்டானல் போர உவப்பது. "வாயுநன்மக்களைப் பெற்றுமகிழ்வரே" என்கிற விடத்திலும் "பெரியாழ்வாரைப் போலே பகவத்ப்ரவணரான புத்ரர்களைப் பெற்று ஹ்ருஷ்டராவர்கள்" என்று பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானம் செய்தருளினர். இதிலிருந்து "ப்ரபந்ந புத்ர லாபத்தையே ஸ்ரீ ஆண்டாள் பலமாகக் கருதி அருளினளென்று வெளியாகின்றதன்றே? ஆக ஸ்ரீ ஆண்டாளும் பெரியாழ்வாரும் தாம் கை கண்ட ஶரீர வித்யாஸம்பந்தங்களினுலுண்டாகும் ஆநந்தம், எல்லோருக்கும் ஒக்க உண்டாகவேணு மென்று ஆஶாஸிக்கிறர்கள். "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றேனெனக் கேட்டதாய்." என்று புத்ரஸம்ருத்தி பெரிதும் பெற்றோரை மகிழ்விக்குமன்றே?. கூடுமனமுடையீர் வரம்பொழிவத் தொல்லைக் கூடுமினே" "போதுவீர் போதுமின்" என்று மனமுடையோர் எல்லோரையுமே தங்களது பரபந்நகுலத்திற் சேர வழைக்கு மிவ்விருவருடைய கருணையைபாருங்கள்.

பிராம்மண குலாதிகளிற் பிறப்பு அநாதி கர்மாதீனமாயிருக்

கும். தோல்புரையே போமதுவான பிராஹ்மண குலத்தில் பிறப்புக்கும் இறப்புக்கும் பஹுவித போக்யதாபேக்ஷையுண்டு. பிரபந்நகுலப் பிறப்புக்கு இச்சையொன்றே வேண்டுவது எல்லாமவனே என்றிருப்பேவமையும். "க்ஷுத்ரம் கர்ம" என்கிறபடியே க்லேசசாத்யமான கர்மத்துறையில இறங்கவேண்டிய அவஸ்யமில்லை. ப்ரபந்நனுக்கு பகவத் ஸம் பந்ததையிட்டே கிராமகுலாதிவ்யபதேசம்.

"ஸகாஜீவ்யபதேஷ்டவ்ய: ப்ரபந்ந: கர்மாதிபி: |
விஷ்ணுநாவ்யபதேஷ்டவ்ய: ஸ்வயம் ஸ ஸதா ஸ்ம்ருத: ||

என்னும்பிரமாண மிங்கு அநுஸந்தேயம். பகவத்ஸம்பந்தத்தைத் யிட்டுத்தான் "குருகூச்சடகோபன் என்னும், காரிமாறன் என்னுமாழ்வாருக்கு ஸ்வக்ராம குலவ்யபதேசம். "வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்கள்" என்றும், "கோயில்வாழும் வைட்டணவர் என்றும் பகவத்ஸம்பந்தாந்வயா தேசத்தைக் கொண்டு தந்தையும் பெண்ணும் வ்யபதேசிக்கையாலே மேலேகாட்டிய ப்ரமாணம் பகவத்ஸம்பந்தமற்ற க்ராமகுலங்களையே குறிக்கும் எனக்கண்டு கொள்க. பிராமணனுக்கு வேதாத்யயனம் போலே ப்ரபந்நனுக்கு சந்தங்கள் ஆயிரமும் அறியக்கற்கை. பிராம்மணாதியருக்கு காமப்ரம்ஸாதிபயமும், "ஸ்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞா" என்று ஈசுவரன் கோபத்திற்காளாகிறபயமும் உண்டு. ப்ரபந்நனுக்கது இல்லை. இவன் பரவிருத்திபரனன்றே! ப்ரபந்நன்புரிந்த வறியாவிழுக் காட்டிலுள்ள அபராதங்களை தோஷங்களில் போக்யத்வபுத்தி ரூபமான வாத்ஸல்யம் கொண்டவீஸ்வரன் பொறுத்தருள்வான். ஆக நிர்ப்பயமாய் பலிஷ்டமாய் தர்மாஷ்டமான வொருராஜகுலம் போலேயாயிற்று ப்ரபந்நகுலமும். ஈசுவரவாத்ஸல்யம் ப்ரபந்நரல்லாதார் விஷயத்தில் கிடையாதோவெனில் ஆம் இல்லையென்க, எல்லாம் தானேயாக நடத்திப் போருமவர்களாக நினைப்பவரிறே ப்ரபந்நேதரர் "ஸ்வாதந்த்ர்யேண கர்த்தா" என்று ஜீவகர்த்ருத்வம் ஈசுவராதீனம் என்கிற ஸித்தாந்தத்தைத் யுணர்ந்து, என்னாற் செயற்பாலதென்? என ஸ்வப்ரவிருததியை விட்டு "களைவாய் துன்பங்களையாதொழிவாய்" என்று கிடக்குமவரிறே! ப்ரபந்நர்கள். இத்தகையோர் அபராதம் புரியப்ரஸக்தியேது.? காதாசித்கமாகவதெங்கேயானும் உண்டானாலும் ஸர்வபாவேந தன்னைப்பார்க்கும் மஹாத்மாவானவிவன் செய்ததை அவன்

acharya.org

போக்யமாகவே கைக்கொள்வானத்தனை. "என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார்" என்றிறே அவனருளும் சந்தை. ப்ரபந்நேதரர் ஜ்யோதிஷ்டோமாதிகளால் ஸ்வதந்திரராய் ஸ்வர்க்கத்தை லபிக்குமாப்போலே பாபமடியாக நரகாநுபவமும் பண்ணிப்போருகிறார்கள். இதனால் ஈசுவரனுக்கு வைஷம்யநைர்க்ருண்ய ப்ரஸக்திபரிஹாருத மாயிற்று. ஒருதகப்பன் ஸ்வேச்சாதீநப்ரவ்ருத்தியில்லா சைசவாவஸ்தையிலுள்ள தன்புத்திரன், தன்னைக் காலாலுதைத்திடில் அதைப்போக்யமாகக் கொள்கிறான். அப்புத்திரனே ஸ்வதந்திரனான பின்னர் அச்செய்கை தந்தையின் சினத்திற்கே ஆஸ்பதமாகும். இதுபோல்தான் ஈசுவரனுக்கு ப்ரபந்ந ப்ரபந்நேதரர்கள் விஷயத்திலிருக்கு மிருப்பும். தோஷபோக்யத்வப்புத்தி வாத்ஸல்யமாயின் "ஶாஸ்திரானர்த்தக்யம்" என்கிற சங்கையும் இதனால் ஒருவாறுபரிஹாருத மாயிற்று. சாஸ்திரம் பிரவிருத்திபரருக்கேயன்றி நிவிருத்திபரருக்கில்லை. "நஶாஸ்த்ரம் நைவசக்ரம:" என்னக் கடவதிறே. எனவே குழந்தைகள்போல் தனக்கென்றொரு பிரவிருத்தியின்றிக்கே மாசில்லாதாராயிருக்குமவர்கள் ப்ரபந்நர் என்றதாயிற்று. இதுகொண்டே ப்ரபந்நகுலத்தை "மாசில்குடி" என்று ஆழ்வாரும் அருளிச்செய்தார். மாசாவன அகங்காரமமகாரங்கள். "ஸுஹ்ருந்தே நாஹந்தேவிஹரணபதம்" என்று அகங்காரத்தை ப்ரபந்நர்கள் "வாரேணுமறிகடலோ மாருதமே" என்கிற கணக்கிலேவிரட்டி யடிப்பவர்கள். ஆகையாலிறே மாசில் குடியாயிற்று ப்ரபந்நகுலம். "நாவிஷ்ணு:ப்ருதிவீபதி:" என்றும் "திருவுடை மன்னரைக்காணில் திருமாலைக்கண்டேனே" யென்றும் அரசரை ஈசுவரனாகவும், "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்" என்று தெய்வத்தோடொப்பக் குழந்தையை கொண்டாடியிருப்பதாலும் அரசர்குலம் போலும் குழந்தையினம் போலுமுள்ளது தொண்டர் குலம் என்னதாயிற்று. ராஜகுலம் ஸ்ரீஸம்ருத்தியுள்ளது. இக்குலமும் அழியாத ஸ்ரீஸம்ருத்தியுடையது. ப்ரபத்தியே இதற்குத் தலைசிறந்த ஸ்ரீஆகும். "பரித்யக்தாமயாலங்கா" என்று உற்றாரையும் ஊரையும் பொகட்டு ஆகாசத்திலே நின்று ப்ரபத்தி பண்ணும் விபீஷணாழ்வானை "அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்" என்று ஸ்ரீ உள்ளவனாகக்கூறிற்றிறே ஸ்ரீராமாயணம். ஸ்ரீவைஷ்ணவர் என்னும் வ்யபதேசமும் இதுபற்றியே எனக்கொள்க.

acharya.org

குழந்தைகள் மனம் கல்மஷமற்றது. “பால்யேந திஷ்டாஸேத்” என்று பெரியோரைப் பாலியமாக விருக்கவாசை கொள்ளுமாறு வேதபுருஷனும் விரும்புகிறான். “சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச் சென்றுகேள்” என்று “பாலகனென்றும பரிபவம் செய்யும்” மதியைநோக்கிப் பணித்த பெரியாழ்வார் குழந்தைகளின் பெருமையறிந்தவரில் தலைவராகிறார். கண்ணனிடம் ஆழ்வார்கள் ஈடுபட்டதற்குக்காரணம் ஸௌசீல்ய ஸௌலப்யங்களுக்கு ஏற்றவனது குழந்தைச் செய்கைகளேயாகும். எத்திறம் உ-. [illegible] ந்திருந்தேங்கிய வெளிவே! என்று உரலினோடிணைப்பிற் போலமற்ற அவனது மிடுக்குச் செய்கைகளில் ஆழ்வார் ஈடுபடவில்லை. ப்ரபந்நவம்சம் ராஜா குலஸாதிருஸ்யத்தையும் குழந்தைத்தன்மையும் பெற்றிருப்பதை ஸ்ரீபட்டர் ஸ்ரீரங்க ராஜாஸ்தவத்தில் அழகாக நிரூபித்திருக்கிறார்.

“ கிஞ்சாபல்யவத்தி பரதாரித விஷ்ணுயா
ஸம்ஸார ராஜகரண ப்ரபதாம்ஷிதம் கிமேவம்
ஸ்ரீரங்கராஜசரணா ப்ரபதாரிதஸ்வம்
யதாவராஹ்ரதி ஸஸ்ரூதி ஸாஹஸே ஸ்மிந ”

ஶாகேவப்ரவத்ருதே ஶயாமேதாஸரதிதே. என்றுணிறே கீதாசாரியன். ஸவகாரத்தால த்ருடாத்யவஸாயம் கூறப்படுகிறது. அதுவே ப்ரபத்திபலஹேது. ப்ராபத்திபலதாரித என்னும் சொற்கள் ஸ்ரீபட்டரது அநுவதந ஶக்தியை அழகுற அறிவிக்கின்றன. வாநரபலத்தைக் கொண்டு ஸாதாரணமான ஸோர்ஸாகரத்தைத் தாண்டக்கிடீர் சக்ரவர்த்தித திருமகன் “ஈத்ருஶம் வாயுதாரணம் ஸாமர்த்யவா” என்று அசிக்தன் போலே பேசிப்படுத்தது. ப்ரபந்நகுலராஜனே ப்ரபத்திபலங்கொண்டு தன்னோடு தன்பரிவாரங்களும் “யாமுறுமை அடியேன் செய்யும் விண்ணப்பம்” என்று “ஶஶோயா” என்று கூறப்படுகிற வைஷ்ணவ மாயாஸாகரத்தைத் தாண்டும்படி செய்தருளினன். அத்தகையமாசில் குடிப்பிறபபுக் கிடீர் அறிவிற் சிறுமனி சனுமடியேனை ஸ்துதிஸாஹஸத்தில் இறக்குகிறது. ராஜ குலத்திற் பிறந்தவனுக்கு ராஜாபராத பயமில்லைகிடீர். இதனால ராஜாகுல ஸாத்ருச்சயம் கூறப்பட்டது. இனிக்குழந்தைத் தன்மையைக் கூறுகிறார் ஸ்ரீரங்கராஜேதி. ஆதிதம்பதிகளின் திருவடிகள் செய்த லாலனை ஸதுதியிலிறங்கஹேது. பட்டா ரங்கராஜனுக் ஸ்வீகிருத புத்திரர் என்று ப்ரஸித்தமிறே. ப்ரபந்நன் தலைக்கு மேலேயும் தனிர்புரையும் தண்மை திருவடிகளுக்கு இயற்கையாம். லாலித புத்ரர்களுக்கு அபராதபயம் இல்லை யென்பது வெள்ளிடைமலை.

acharya.org

ஆக இவ்விரு திருஷ்டாந்தங்களையுங் கொண்டு ப்ரபந்நகுலத்தின் பெருமையை நாம் நன்கு அறிந்து கொள்ளுகிறோம் அன்றோ?

அடியேன் இப்பத்திரிகையில் முதன் முதலின் எழுதும் வியாசமிது வாதலின் ஒருவேளை இது இப்பத்திரிகை நடைக்கு ஒவ்வாமலுமிருக்கலாம். ஆயினும் விஷய கௌரவத்தை யுத்தேசித்து இதையாதரித்திடல் வேண்டுமெனவறிஞர்களைப் பிரார்த்திக்கிறேன்.

திருமலை நல்லான் ரகாமகிருஷ்ணய்யங்கார்

ஓர் ஸந்தேஹ நிவ்ருத்தி.

(ப்ரதிவாதி பயங்கரம், ஸ்ரீ .உ. வே. அண்ணங்கராசாரியார்.)

சமையலறைகளில் பலவகையான துராசாரங்கள் நடக்கின்றன. நமது க்ருஹங்களிலுள்ள சமையலறைகளில் நடப்பவற்றைப் பற்றி நாம் சொல்லவரவில்லை. பெரும் பெரும் தேவாலயங்களில் திருமடைப்பள்ளிகளில் நடக்கிற துராசாரங்களைப் பற்றியே இங்கு ப்ரஸ்தாவிக்கிறோம். ஸ்ரீவைஷ்ணவ தேவாலயங்களில் ப்ரஸாதவிநியோகம் விசேஷமாக நடைபெறுகின்றது ஆசாரசீலர்களான மஹாசிஷ்டர்களும் பகவத் ப்ரஸாதமென்று மிக்க பக்தியோடு உட்கொள்ளுகிறார்கள். அதைப்பெறுவதற்குப் பெருமுயற்சிகளும் செய்கிறார்கள். தம்தம் திருமாளிகைகளில் விறகு முதலியவற்றையும் ஜலம் விட்டுக்கழுவி அடுப்பிலிடும் மஹாசிஷ்டர்கள் தேவாலயங்களுள் நுழைந்தபின் அந்த ஆசாரங்களையெல்லாம் மறந்து விடவேண்டியிருக்கிறது. தேவாலயச் சமையலறைகளில் நடக்கும் துராசாரங்களைக் கட் கூடாகக் கண்டால் எவ்வளவு முட பக்தியுள்ளவர்களாயிருந்தாலும் அந்த ப்ரஸாதங்களை வுட்கொள்ள முற்படமாட்டார்களென்பது உண்மை. இதற்காகவே திருமடப்பளிகளில் யாரும் போகாதபடி பார்த்துக்கொள்ளும் வழக்கமுமுண்டு. சில பெரியோர்கள் வேணுமென்றே சமையலறைகளுள் நுழையாமல் ஒதுங்குகிறார்கள். 'உள்ளே என்ன நடக்கிறதென்பதை நாம் பார்க்கக்கூடாது; அதெல்லாம் தேவரஹஸ்யம்' என்று சொல்வதையும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆகவே, திருமடைப்பள்ளிகளில் நடக்கும் துராசாரங்களை அறியாதார் இல்லை. யாவரும் அறிநதுவைத்தும அவற்றைக் கவனிப்பதில்லை. வாய்க்கு இன்பமாகப் பண்டங்களை புஜிப்பதிலேயே பெரும்பாலும் அனைவர்க்கும் ஊக்கம. எங்கேயாவது ஆசாரங்களைப்பற்றி மேலதிகாரிகள் கவனிப்பதாயிருந்தால் தளிகைபண்ணுகிறவர்கள் கிடைப்பதே அரிதாய்விடுகிறது.

acharya.org

இவ்விதம் துராசாரங்கள் நடக்கப் பெரியோர்களும் கூசாமல் பிரஸாதங்களை வாங்கிப்புஜிக்கிறார்களே, இதற்கு ஏதாவது சாஸ்த்ர ஆதாரமுண்டோ வென்று வெகுநாளாக நாம் சங்கை கொண்டிருந்தோம். வைகாநஸஸூத்ர நுவர்த்தியான ஒரு மஹானுடன் ஸமீபகாலத்தில் நாம் ஸம்பாஷிக்கையில் அவர் வைகாநஸ தர்ம ஸூத்ரத்தில் இதற்கு ஆதாரம் இருப்பதாக எடுத்துக் காட்டினர். அதில் மூன்றாவது ப்ரபாடகம், நாலாவது கண்டம், பதினொராவது ஸூத்ரம்.——

[ஆதுரே! பாலே! பசநாலயே! ச! சௌசம்! ந! வி சாரணீயம்; யதாசக்தி! ஸ்யாத்.] என்றுள்ளது. ரோகி, சிறுவன், சமையல்வீடு இவற்றில் சுத்தியைப்பற்றி விசாரிக்கத் தேவையில்லை; யதாசக்தி இருக்கலாம்——என்பதே இதன் பொருள்.

இந்த ப்ரமாணுதாரம் இருந்தாலும் வேணுமென்றே துராசாரங்களைச் செய்யாமல் கூடுமானவளவு ஸதாசாரங்களில் முயல்வது நலம்.

வர்த்தமானங்கள்

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்

ஷை சங்கத்தினுதரவில ஸ்ரீஜயந்தீ உத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீவானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி திருவல்லிக்கேணி மடத்தில் அடியிற்கண்ட உபந்யாஸங்கள் நடைபெற்றன. 6-9-36-மாலை 4-மணிக்கு அட்வகேட் ஸ்ரீமான் R. கேசவய்யங்கார் **கேசவன் கீர்த்தி** என்னும விஷயத்தைப்பற்றி மிகவும் அழகாக 2-மணியம் உபந்யஸித்தார். 7-9-36 மாலை 6 மணிக்குமேல் அட்வகேட் ஸ்ரீமான் C. நரஸிம்மாசாரியார **கண்ணனும் தென்குருகூர் நம்பியும்** என்ற விஷயத்தைப்பற்றி 1½ மணிகாலம் தற்காலம் ஆங்க்லேய பாஷாபிமானிகளும் உகக்குமாறு எளியநடையில் உபன்யஸித்தார். 8-9-36 மாலை 4 மணிக்குமேல் **கண்ணன் திருவவதாரத்தைப்** பற்றி ஸ்ரீமான் R. கேசவய்யங்கார் உபந்யஸித்தார். இன்னும் 9-10 11-12-13 தேதிகளிலும் அனேகம் வித்வான்களின் உபந்யாஸங்கள் நடைபெறுமென்று தெரியவருகிறது.

ஸ்ரீ ரங்கம் :—புரட்டாசி 31-உ (16-10-36) நவராத்ரி உத்ஸவாரம்பம்.

திருப்பதி :—ப்ரஹ்மோத்ஸவ ஆரம்பம் புரட்டாசி 6-உ (21-9-36) கருடஸேவை 10-உ (25-9-36) திருதேர்

வாநமாமலை:—புரட்டாசி 14-உ (29-9-36) ஒன்றான வாநமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி உத்ஸவ ஆரம்பம் 23-உ (8-10-36-ல்) கன்னிப்புனர்வசுவில் சாற்றுமுறை.

acharya.org

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶக பத்ரிகை.

தொகுதி 1.	பத்ராதிபர் வடகரை இராமாநுஜாசாரியார்	பகுதி 11

ஶ்ரீரஸ்து
ஶ்ரிய:காந்தாய நம:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே ।
ய: ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ॥
வேதவேதாந்த வேதார்த ஸங்க்ரஹாத்யுக்திவர்ஷிணீ ।
ஶ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ॥

புரட்டாசித் திருவோணம்

பத்ராதிபர்

ஶ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி

நமது வைஜயந்தியின் பதினோராவதுபகுதி புரட்டாசித் திருவோணத்திலவதரிக்க நேர்ந்ததுபற்றி அத்திருநன்னாளின் பெருமையைப்பற்றிச் சிறிது எழுத நேர்ந்தது.

புரட்டாசித் திருவோணத்திற்குப் பெருமையென்? எனில் ஆசார்ய சிகாமணியாகிய நம் ஸ்ரீ நிகமாந்ததேசிகன் அவதரிக்கும் பாக்யம் பெற்றதே. அத்திருநன்னாளில் அவ்வாசார்ய சிகாமணியின் பெருமையைச் சிறிது எழுதி யநுபவிக்கும் பாக்யம் சிற்றறிவுடையவடியேனுக்கு ப்ராப்தமாயிற்று.

அம்மஹாநுபாவரான ஸ்ரீ தேஶிகன் பெருமையைப் பற்றிப் பேசவும் எழுதவும் சீலமில்லாச்சிறியனான வடியேன் அர்ஹனல்லே

acharya.org

ஞயினும் அம்மஹாநுபாவர் நமது எம்பெருமானார் தர்மநமென்கிற விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்குச் செய்திருக்கும் உபகாரங்களும், அவரது ஜ்ஞாநபக்தி வைராக்யங்களும், அவரது ஸ்ரீஸூக்திகளும் அவருடைய அவதார ரஹஸ்யத்தின் பெருமையும் அறிவொன்றுமில்லாதவடியேனையும் சிறிது எழுதும்படி தூண்டின.

பவளம் சங்கு முத்து முதலான ரத்நங்களை யுடையதாய் அதனுல் ரத்னுகரமென்று ப்ரஸித்தமான ஸமுத்ரத்தின் நீர் உவர்க்குமாயினும் அச்சமுத்திரத்தை நீக்குவாருண்டோ? அதுபோலவே சமுத்திரத்தின் உவர்நீர்போல நிஷ்ப்ரயோஜனமான என்னுடைய புன் சொற்களில் ஸ்ரீதேஶிகன் பெருமைகளாகிற ரத்நம் பொதிந்திருக்கின்றமைபற்றி என்புல்லிய சொற்களையும் ஆரியர்கள் ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

இம்மஹாநுபாவர் பொய்கை யாழ்வாரவதரித்த காஞ்சீபுரத்திற்கருகே ஹிமவநம் என்று ப்ரஸித்தமான திருத்தண்கா என்கிற திவ்ய தேஶத்தில் எம்பெருமானாரால் ஸ்தாபிக்கப்பட்ட எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதி பதிகளில் தூப்புல் (விஶ்வாமித்ர) குலதிலகராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அனந்த ஸோமயாஜியாரின் பௌத்ரரான ஸ்ரீ அனந்த ஸோமயாஜியாருக்கும் கிடாம்பி அப்புள்ளார் ஸஹோதரியான தோதாத்ரி அம்மைக்கும் திருக்குமாரராக கலி 4369 ஶாலிவாஹந ஶகாப்தம் 1190 விபவஸு புரட்டாசி மாதம் திருவோண நக்ஷத்திரத்திலவதரித்து, பெரிய திருவடியின் பேரருளால் ஹயக்ரீவ மந்த்ரோபதேஶத்தைப் பெற்று, அம்மந்த்ரத்தால் ஹயக்ரீவரையாராதித்து, அவருடைய கடாக்ஷத்தால் ஸமஸ்தமான வித்யைகளையும் கரதாமலகமாகக் கற்றறிந்து, குதர்க்கவாதிகளான புறமதத்தவர்களை புறங்காட்டியோடும்படி தர்க்கித்து, அப்ரகாரங்களைப் பின்புள்ளாரு மறியுமாறு ஶததூஷணி ஸங்கல்ப ஸூர்யோதயம் முதலானக்ரந்தங்களையருளிச்செய்து, அப்பெருமையினுல் கவிதார்க்கிக ஸிம்ஹம் என்கிற பிருதைப்பெற்று, வேதாந்தார்த்தங்களை ப்ரவசனம் செய்து அனேக வேதாந்த க்ரந்தங்களையுமருளிச்செய்து, வேதாந்தாசார்யர் என்கிற பெயர்பெற்று, ஸ்ரீ பாஷ்யகாரரருளிச் செய்த ஸ்ரீ பாஷ்யத்திற்கு தத்வடீகை முதலான க்ரந்தங்களை யு மருளிச் செய்து, இவவிருள் தருமாஞாலத்தைத்தமது ஸ்ரீ ஸூக்திகளால் தெருள் தருமா ஞாலமாக்கி வாழ்வித்தருளினர்.

acharya.org

இவரது அவதாரத்தைப் பற்றிப்பேசா நின்ற ஶ்லோக ரத்ந மொன்று இங்கு நினைவுக்கு வருகின்றது. அதாவது, வேதே ஸஞ்ஜாத கேதே முநிஜந வசநே ப்ராப்த நித்யாவமாநே ஸங்கீர்ணே ஸர்வவர்ணே ஸதி தத நுகுணே நிஷ்ப்ரமாணே புராணே—மாயாவாதே ஸமேதே கலிகலுஷவசாச் சூந்யவாதே விவாதே தர்மத்ராணாய யோபூத் ஸ ஜயதி பகவாந் விஷ்ணு கண்டாவதார: (வேதே ஸம்ஜாத கேதே முநிஜநவசநே ப்ராப்த நித்யாவமாநே ஸங்கீர்ணே ஸர்வவர்ணே ஸதி தத நுகுணே நிஷ்ப்ரமாணே புராணே—மாயாவாதே ஸமேதே கலிகலுஷவசாச் சூந்யவாதே விவாதே தர்மத்ராணாய யோபூத் ஸ ஜயதி பகவாந் விஷ்ணு கண்டாவதார:) கலியின் கொடுமையால வேதபுருஷன் வேதத்தையடையவும், அவ்வேதார்த்தத்தை பரத்யக்ஷீகரித்த மஹாநுபாவர்களான முனிகளின் வசநம் அவமாநத்தை யடையவும, ஸர்வஜாதிகளும் பேதமின்றிக்கலக்கவும் வர்ணாஶ்ரம பேதங்களைப்பற்றிப் பேசா நின்ற புராணங்கள் அப்ரமாணங்களாகவும், மாயாவாதம் ஆனந்த மடையவும், ஶூந்யவாதம் நிராவாயமாய்ப் பரவவும், ஆகாநின்ற காலத்தில் தர்மத்தைப் பரிபாலிப்பதற்காக எக்காலத்திலும் எவ் விடத்திலும் வ்யாபித்திராநின்ற விஷ்ணுவான திருமலைமாலின் திரு மணியின் திருவவதாரமாக யாவரொருவர் அவதரித்தாரோ? அந்த தேஶிகன் ஸர்வோத் க்ருஷ்டராய் விளங்கா நிற்கிறார்—இன்னும் வேங்கடேசாவதாரோயம் தத்கண்டாம்சோதவா பவேத்—யதீந்த்ராம்சோதவா வேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்கலம் | வேங்க டேஶாவதாரோயம் தத்கண்டாம் ஶோதவாபவேத்—யதீந்த் ராம் தவேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம் | திருவேங்கட முடையான் திருநக்ஷத்திரமான திருவோணத்திலவதரித்ததை நோக்குமிடத்து திருவேங்கட முடையானே இக்கலியுகத்தில் ஸ்ரீதேஶிகனு யவதரித்தாரோ? என்றும், குதர்க்கவாதி களான புறமதத்தவர்களின் வாதங்களை யடக்கி தம்முடைய கம்பீரமான ஸ்ரீ ஸூக்திகளே எங்கும் பரவும்படி பண்ணு கையால் திருமலைமால் திருமணியின் திருவவதாரமோ? என் றும், ஶாங்கராதிமதங்களைக் கண்டித்து விஶிஷ்டாத்வைத மதத்தை ஸ்தாபிக்கையாலே யதிஶ்ரேஷ்டரான எம்பெருமானாரே

acharya.org

மறுபடியும் ஒரு அவதாரம் செய்தருளினாரோ? என்றும் விதர்க்கிக்கத்தகுந்த தேசிகனுக்குப் பல்லாண்டு) என்று அவர் திருக்குமாரரான ஸ்ரீ நயினாசாரியாரருளிச் செய்திருக்கையால் இவரது அவதாரத்தின பெருமை வாசாமகோசரம்.

ஸ்ரீவேங்கடார்யேண க்ருதா: ப்ரபந்தா: ஸம்க்யாதும் ஊர்த்வம் விபுதைர் நஶக்யா: — ஸ்ரீ வேங்கடார்யேண க்ருதா: ப்ரபந்தா: ஸங்க்யாது மூர்த்வயாம் விபுதைர் நஶக்யா: என்கிறபடி இவரநுக்ரஹித்த ஸ்ரீஸூக்திகள் அஸங்க்யாதங்கள்.

ஸ்ரீ தேசிகனருளிச் செய்திருக்கும் க்ரந்தங்களில் வைராக்கிய பஞ்சகமென்றொரு க்ரந்தரதந முளது. அக்ரந்தத்தை தேசிகனருளிச் செய்ததின் காரணத்தையும் வைராக்யபஞ்சகத்தினர்த்தத்தையும சிறிது கவனித்தால்' ஸ்ரீ தேசிகனுடைய ஜ்ஞாநபக்தி வைராக்யங்கள் நன்கு விளங்கும்.

திருமலைமால திருமணியின அவதாரமான தூப்புல் வேதாந்த தேசிகன் கூரத்தாழ்வானைப்போலே உஞ்சவ்ருத்தி செய்து அதனால் அந்தர்யாமி ஆராதநத்தை குறைவற நடத்தி உபயவேதாந்த ப்ரவசநம் பண்ணிக்கொண்டு த்யாக மண்டப மென்கிற பெருமாள் கோவிலில் பேரருளாளனையே யெல்லாமாகக் கருதி அவருக்கு அநுதினம் பல்லாண்டு பாடிக்கொண்டு பரமானந்தமா யெழுந்தருளியிருக்கும் காலத்தில் விஜய நகர ஆஸ்தாநத்தில் விசேஷமான செல்வாக்குடைய வித்யாரண்யர், விரக்தாக்ரேஸரரான தேசிகனுடைய உஞ்சவ்ருத்தி ஜீவனத்தை யறிந்து இவருக்கு விசேஷமானத் த்ரவ்யஸஹாயத்தைச் செய்யக்கருதி விஜய நகரத்திற்கு விஜயம் செய்யவேண்டுமென்று விஜ்ஞாபந பத்ரிகை யொன்றனுப்ப அதைக் கடாக்ஷித்த ஸ்வாமி தேசிகன் இந்த வித்யாரண்யர் நம்முடன் பழகி நம்முடைய ஸ்வபாவங்களை நன்கறிந்தும் இவ்வாறு எழுதுவதே! என்று போர நொந்து அவருடைய பத்ரிகைக்குப் பதிலாக அனுப்பிவைத்த ஶ்லோகமொன்றே போரும். தேசிகனுடைய ஜ்ஞாந பக்தி வைராக்யங்களின் பெருமையை யுணர்த்துகைக்கு. அதாவது.

நாஸ்தி பித்ரார்ஜிதம் கிஞ்சின் ந மயா கிஞ்சிதார்ஜிதம்
அஸ்தி மே ஹஸ்திஶைலாக்ரே வஸ்து பைதாமஹம் தநம் ||

என்னுடைய பிதாவினால் ஸம்பாதிக்கப்பட்ட தொன்றுமில்லை.

acharya.org

என்னால் ஸம்பாதிக்கப்பட்டதும் ஒன்றும் கிடையாது ஆனால் அத்திமாலையின் அக்ரத்தில பிதாமஹனால் ஸம்பாதிக்கப்பட்ட பொருள், எனக்கு தனமாக விருக்கிறது.

இதன் கருத்து யாதெனில் பிதா ஸ்வயமாக ஆர்ஜித்த பொருளை அவரிஷ்டப்படி விநியோகப்படுத்திக்கொள்ளக் கூடும. ஆதலின் அப் பொருளைத் தன்னுடையதென்று எவ்வாறு சொல்லமுடியும்? ஆதலால பித்ரார்ஜிதம எனக்குக் கிடையாதென்றார். தனக்கு ஸம்பாதிக்கவேண்டுமென்கிற இஷ்டமே கிடையாது. அவ்வாறு ஸம்பாதிக்கவேண்டிய ஆவஶ்யகமுமில்லை. ஒருக்கால் தனக்கென்றொரு செல்வம் வந்தாலும் அச் செல்வம் வந்ததுபோலவே செலலும ஸ்வபாவமுடைத்தாகையால் அதையும் நம்புவதற்கில்லையென்று எனனால் ஸம்பாதிக்கப்பட்டதும் ஒன்றுமில்லை என்றார். பிதாமஹனால் ஸம்பாதித்து ஸுரக்ஷிதமாக வைக்கப்பட்ட பொருளைத் தன்னாலும் தன் பிதாவாலும் இருவரும் சேர்ந்தாலும் மற்றெவராலும் அழிக்கமுடியாது. ஆனால் அதனாலேற்படும் வருமானத்தை யதேஷ்டமாக அநுபவிக்கலாம. ஆதலின் பைதாமஹம் தநம் எனக்கிருக்கின்றதென்றார். இது ஒரு ஶ்லேஷை. உண்மையென்ன வெனில்?

அத்திமாமலையில் வீற்றிருக்கும் பேரருளாளன், பிதாமகன் என்கிற ப்ரஹ்மாவின் யாகத்தில் ஹவிர்பாகக்ரஹணார்த்தம் எழுந்தருளினவராதலால் பேரருளாளனை பைதாமஹம் தநம் என்றார். சேலேய் கண்ணியரும் பெரும் செல்வமும்....அவரே என்னுமாப்போலே இவரும் பேரருளாளனே எனக்கு தனமென்கிறார்.

இவ்வாறு தம்முடைய விரக்திதோன்ற எழுதி யனுப்பிய ஶ்லோகத்தைப் பார்த்தும் வித்யாரண்யர் ஸ்வாமி விஷயத்தில் வைத்திருந்த பக்தியதிஶயத்தால் எப்படியாவது ஸ்வாமி விஷயத்தில் சிறிது கிஞ்சித் கரித்து க்ருதார்த்தராக வேண்டுமென்று நினைத்து மறுபடியும் எப்படியும் எழுந்தருளவேண்டு மென்று ப்ரார்த்திக்க, அப்போது அநுக்ரஹித்த ஶ்லோகரத்நங்கள் ஐந்து. அவைகளுக்கே வைராக்ய பஞ்சகமென்று பெயராகும். அது முமுக்ஷுக்களுக் கத்யந்தம அறியவேண்டியது ஆவஶ்யகம்........ஆதலின் அவ்வைராக்ய பஞ்சகம், பெருமாள் கோவில் ப்ரதிவாதி பயங்கரம ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியாரநுக்ரஹித்த உரையுடன் இங்கு அச்சிடப்படுகிறது.

acharya.org

வைராக்ய பஞ்சக வ்யாக்யாநம்

[ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்]

அவதாரிகை :—*திருமலைமால் திருமணியாய்ச் சிறக்கவந் தருளின தூப்புல் வேதாந்த தேசிகன் ஸர்வதோமுகமான ஞானம் படைத்ததுபோலவே விரக்தியையும் லோகவிலக்ஷணமாகப் பெற்றவராதலால் கூரத்தாழ்வானைப் போலவே தாமும் உஞ்சவ்ருத்தி யையே கொண்டு பெருமாள் திருவாராதநத்தைக் குறையற நடத் திக்கொண்டு செந்தமிழும் வடமொழியும் திகழ்ந்த நாவர்க்கு உபய வேதாந்த க்ரந்தப்ரவசநம் செய்தருளா நின்றுகொண்டு *கார் மேனி யருளாளர்கச்சிப்பதியிலே பேரருளாளனை மங்களாசாஸ நஞ் செய்து கொண்டெழுந்தருளி யிருந்தார். இவர்க்குப் பரம மித்திரரான ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள் விஜயநகர மஹாராஜ னிடத்தில் மிகுந்த வாத்ஸல்யம் பெற்றுப் பலபல வித்வான்களை ஆதரிப்பதற்குரிய ஸௌகர்யங்களை யுடையரா யிருந்தபோது இந்த ஸ்ரீதேசிக சிகாமணியை ஸ்மரித்து இவருடைய ஏழைமையைப் போக்கிச் செல்வச் சிறப்பை யுண்டாக்கக் கருதி அந்த விஜய நகரராஜனிடத்திற்கு எழுந்தருளுமாறு ப்ரார்த்தநா பத்ரி கையை அனுப்ப, அதனைக் கடாக்ஷித்தருளின ஸ்வாமி தேசிகன் தம்முடைய நிஷ்டா விசேஷங்களை அந்த வித்யாரண்ய ஸ்வாமி அறிந்துவைத்தும் வீணாக இப்படி ஆஹ்வாநம் பண்ணுகிறாரே! எனத் திருவுள்ளம் நொந்து, அவருடைய பத்திரிகைக்கு உத் தரமாக

நாஸ்தி பித்ரார்ஜிதம் கிஞ்சித் ந மயா கிஞ்சிதார்ஜிதம் |
அஸ்தி மே ஹஸ்திசைலாக்ரே வஸ்து பைதாமஹம் தநம் ||

என்கிற ச்லோகத்தை யெழுதியனுப்ப, அவரும் அதைக் கண்டு, ஸ்வாமி தேசிகனிடத்தில் அவர் தாம் வைத்திருந்த வாத்ஸல்யத் தினால் எப்படியாவது இவர்க்கு ஐச்வர்யஸம்ருத்தி ஸம்பாதநம் பண்ணி வைக்க வேணுமென்கிற ஆசையினால் மீண்டும் மிக நிர்ப்பந்தித்துப் பத்ரிகை விடுக்க, அப்போது ஸ்வாமி அநுக்ரஹித்தருளி யனுப் பிய ச்லோக ரத்நங்கள் **வைராக்ய பஞ்சக**மென்று ப்ரஸித்தி பெற்றிருக்கும். இதன் பொருளைச் சிறிய ஞானத்தர்களும் எளி தாகத் தெரிந்துகொள்ளுமாறு சிறிய உரை எழுதப்படுகின்றது.

acharya.org

ஸ்வாமி தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளில் ஒவ்வொரு பதத்திலும் பலபல விசேஷார்த்தங்கள் அமைந்திருக்குமென்பதை அடியேன் சிறிய ஞானத்தன் அநுபவிக்கவும் அநர்ஹன் யாதவாப்யுதயத்தில் முதல் ஸர்க்கத்தில் ஒன்பதாவதான *प्रत्याख्यातमलीकया सह न तु कृपासम्मिलितया सह्य । सत्को विस्मितं वृत्तं विदुः श्रीमानजीजनत्* என்ற ச்லோகத்தின் வியாக்கியானத்திலே "इत्थं विविक्तमास्वाद्य सारवत्सु वचो वचः । कवितार्किकसिंहस्य काव्येष्वमृतेष्वपि ॥" என்று தீக்ஷிதர் பணித்திருப்பதை நினைப்பூட்டுகின்றேன். ஆசார்ய கடாக்ஷ விசேஷத்தினால் அப்படிப்பட்ட விசேஷார்த்தங்களைப் பெற்று மிக விரிவாகவே வியாக்கியானஞ் செய்யலாமாயினும், விரிவின்றித் தெளிவான பொருளை ஸ்பஷ்டமாக வுணர்த்தும் வியாக்கியானமே வேணுமென்று பல பக்தர்களின் அபேக்ஷை தெரிவதாலும், ஸ்வாமி தேசிகனுடைய திவ்ய ஸ்ரீ ஸூக்திகளெல்லாவற்றுக்கும் அடியேனுடைய ஆயுளில் உரையெழுதி வெளியிட வேணுமென்கிற குதூஹலம் மிக்கிருப்பதனாலும், மற்றும் பலவகை ஸௌகர்யங்களை அநுஸரிக்க வேண்டியதனாலும் சுருக்கமான வியாக்கியானமே யெழுதப்படுகின்றது. ....

क्षोणीकोणशतांशपालनकलादुर्वारगर्वानल-

क्षुभ्यत्क्षुद्रनरेन्द्रचाटुरचनाधन्यान्न मन्यामहे ।

देवं सेवितुमेव निश्चिनुमहे योऽसौ दयालुः पुरा

धानामुष्टिमुचे कुचेलमुनये दत्ते स्म वित्तेशताम् ॥

1. க்ஷோணீ கோண ஶதாம்ஶ பாலந கலாதுர்வார கர்வாநல க்ஷுப்யத் க்ஷுத்ர நரேந்த்ர சாடு ரசநா தந்யாந் நமந்யாமஹே—தேவம் ஸேவிதுமேவ நிஶ்சிநுமஹே யோஸௌ தயாளுः புரா தாநா முஷ்டிமுசே குசேலமுநயே தத்தே ஸ்ம வித்தேஶதாம் !

(பொழிப்புரை). பூமண்டலத்தின் ஏகதேசத்திலே நூற்றிலொருபாகத்தை ஆளுகையாகிற தொழிலினாலுண்டாகிய அடங்காச் செருக்காகிய தீயினால் (கதுவப்பட்டு) நிலைகலங்கிநின்ற அல்ப ப்ரபுக்களைப் புகழ்வதனால் செல்வம் பெறுகின்றவர்களை ஒரு பொருளாக மதிக்கமாட்டோம்; (எம்முடைய அத்யவஸாயம்

acharya.org

எப்படிப்பட்டதென்றால்) இரக்கமுடையனை யாவனொரு எம்பெருமான் முற்காலத்தில், ஒரு முஷ்டியளவான அவல் கொடுத்த குசேல முனிவனுக்குக் குபேரனாகுந் தன்மையைக் கொடுத்தருளினனோ அந்தப் பரம புருஷனை அடிபணிவதற்கே அறுதியிட்டிரா நின்றோம்.

“இக்ஷ்வாகூணாமியம் பூமி: ஸஶைலவநகாநநா” என்றாற் போலவும் * ஒருநாயகமாய் ஓடவுலகுடனாண்டவர் * என்றாற் போலவும் பூமண்டலம் முழுவதையும் அரசாளவல்லவர்கள் இப்போது இல்லையே. பூமியின் பலகோடி நூறாயிரத்தில் ஒரு பங்குமாத்திரமான நிலத்தை ஆளப்பிறந்த அற்ப அரசர்களே உள்ளார்கள். இந்த அல்ப அதிகாரத்திற்கே இவர்களுடைய அஹங்காரம் வாசாமகோசரம். அந்தச் செருக்கினால் தீக்கதுவினாற் போல் தடுமாறிக்கிடக்கின்ற அந்த அல்பர்களிடஞ் சென்று ‘நீ இந்திரன் சந்திரன் குபேரன்’ என்று இல்லாத பொய்யுரைகளைப் புனைந்து புகழ்ந்து ஜீவிப்பவர்களுடைய ஜீவநத்தை ஒருபிழைப்பாகவே மதிக்கமாட்டேன். “உனக்குப் பணி செய்திருக்குந் தவமுடையேன் இனிப்போயொருவன் தனக்குப் பணிந்து, கடைத்தலை நிற்கை நின்சாயை யழிவு கண்டாய்” என்னும்படியான திண்ணிய அத்யவஸாயமுடைய நான் அந்த எம்பெருமானைத் தவிர்த்து மற்றொருவன் மனைக்கடையிலே புகுந்து துவளமாட்டேன்; “அடிமை யென்னும் அக்கோயின்மையாலே அங்கங்கேயவை போதருங் கண்டாய்” என்றாப்போலே எம்பெருமானை அடிபணிந்தார்க்கு ஐஹிகத்தில்தானும் ஒரு குறை யுண்டாகுமோ? அப்பெருமான் அல்பஸந்துஷ்டன் என்னுமிடமும் குசேலோபாக்கியான முகத்தினால் நன்கு அறியக் கூடியதன்றோ. ஆகவே ஆமுஷ்மிகத்திற்குப் போலவே ஐஹிகத்திற்கும எம்பெருமான் கைபார்த்திருக்குமத்தனையே நமக்குள்ளது-என்றாராயிற்று.

* க்ஷோணா பார்த்திவஸேவகே ஸ்துதிஸ்தோத்ராணி ஸ்தவ: | நுதி: ஸ்லாகார்த்தவாதஸ்ச ப்ரஶம்ஸா ஸ்லாகநம் ஸ்துதி: * என்கிற மேதினீ கோஶத்தின்படி க்ஷோணஶப்தம் இங்கு ஸ்தவ பர்யாயமாகும். [சாடுவசநா] அரசர்களைப் புகழ்வதை சாடூக்தி யென்பர்கள். பொதுவாகப் புகழ்ந்துரைப்பதற்கும் பெயர். “ப்ரியவாக்யே மித்யாப்ரியவாக்யே ச” என்பர் கோஶகாரர்கள். “சாடுவசநாம் யந்த்ராம்நநந்த்ராஸ்ஸ” என்பது புதிய பாடம்.

acharya.org

யாசநாபி: ஹ்ருதா உஞ்சவ்ருத்தி:—யாசநோஞ்சவ்ருத்தி:, தாமுஞ்சவ்ருத்திமிதி யாசநோஞ்சவ்ருத்திக்ஷ, தவேது இவ்விடத்தில் ப்ரஸ்துதமான குசேலமுனி சரித்திரத்தை அதிவிஸ்தர ஸரஸ ஸம்ஸ்க்ருத கத்ய ரூபமாக எழுதி வெளியிட்டிருக்கிறேன் ; ரஸிகமநீஷிகள் கண்டு களிக்க. .... க.

2\. ஶிலம் கிமநலம் பவேதநலமௌதரம் பாதிதும்
பய: ப்ரஸ்ருதிபூரகம் கிமு ந தாரகம் ஸாரஸம் |
அயத்நமலமல்லகம் பதி படச்சரம் கச்சரம்
பஜந்தி விபுதா முதா ஹ்யஹஹ! குக்ஷித: குக்ஷித: ||

2\. ஶிலம் கிமநலம் பவேதநலமௌதரம் பாதிதும் பய: ப்ரஸ்ருதி பூரகம் கிமு ந தாரகம் ஸாரஸம்—அயத்நமலமல்லகம் பதிபடச்சரம் கச்சரம் பஜந்தி விபுதா முதாஹ்யஹஹ! குக்ஷித: குக்ஷித: ||

ஜாடராக்நியைத் தணிப்பதற்கு [அதாவது, பசி தீருவதற்கு] நிலங்களில் கதிர் பொறுக்கி ஜீவித்தல் போதாதோ? (அது தானும் கிடைக்காவிடினும்) ஒரு சிறங்கை நிறைக்கும்படியான குளத்துத் தண்ணீர் தாரகமாகமாட்டாதோ? வழிகளிலே (விழுந்துகிடக்கின்ற) எளிதாகக் கிடைக்கக்கூடிய அழுக்கடைந்த கந்தைத் துணியும் கோமணமாகப் போதுமே. (இப்படியிருந்தும்) பண்டிதர்கள் வயிற்றுக்காக வீணாய் அரசர்களைப் பணிகின்றார்களே! ஐயோ!.

மநுஸ்ம்ருதியில் நான்காவது அத்யாயத்தில * அத்ரோஹேணைவ பூதாநாமல்பத்ரோஹேண வா புந: | யா வ்ருத்திஸ்தாம் ஸமாஸ்தாய விப்ரோ ஜீவேதநாபதி * என்று அந்தணன் ஜீவிக்கவேண்டிய வழியைச் சொல்லத்தொடங்கி * யாத்ராமாத்ரப்ரஸித்த்யர்த்தம் ஸ்வை: கர்மபிரகர்ஹிதை: | அக்லேசேந ஶரீரஸ்ய குர்வீத தநஸஞ்சயம் * என்று ஶாஸ்த்ரீய கர்மங்களால் ஸம்ஸாரயாத்ராநிர்வாஹார்த்தமான தேஹயாத்ராதாரண யாத்ரைக்காகப் பொருளீட்டலாமென்று சொல்லி, எவ்வகைக் கருமங்களால் பொருளீட்டுவதென்ன, * ருதாம்ருதாப்யாம் ஜீவேத்து ம்ருதேந ப்ரம்ருதேந வா | ஸத்யாந்ருதாப்யாமபி வா ந ஶ்வவ்ருத்த்யா கதாசந * என்று சொல்லி அவற்றை மேல்

ச்லோகங்களிலே விவரிக்கிறார்—* த்வதேகஸம்ஸ்ரயம் பாதயுக்மம் ஸ்ரத்தயா விஸ்ய * இத்யாதியாலே. இங்கு குல்லூக பட்டருடைய வியாக்கியானம்—“ஸர்வேஷாமேவ ஸர்வேஷாம் ஸர்வேஷாம் ஸர்வேஷாம் உக்தம்; ஸம்ஸ்யாத்ஸ்ஸர்வேஷாம் ஸர்வேஷாம் விஸ்வ:” என்று. அதுவே இங்கு விஸ்வ எனப்பட்டது. ஔசாரம்—தவிதவர்த்தி:.

கதம்ப என்ற இரண்டில் முதலது அவ்யயம். (அபர்யாப்த மென்றபடி.) அஷ்டச்லோகியில் “ கதம் த்ருணகௌஸி ஸர்வஸ்வம்” என்று பட்டரும், அதிமாநுஷஸ்தவத்தில் “தேவீஸ்வாமீநம்ப” என்று ஆழ்வானும் ப்ரயோகித்தமை காண்க. [ஸ்ருஸ்த்தி ஸுஸ்தரப] “ ஸாணிதீதீஹ்ஸ்ஸ ஸ்ஸ்ருதி:” என்றான் அமரன். இதைத் தமிழர் சிறுங்கை என்பார்கள். ‘சொறங்காய்’ என்பது ஆபாஸ வழக்கு ஸாரஸி ஸஸம்—ஸாரஸ. கபதீஸ்ஸ்ஸ என்று ஒரே பதமாகக்கொண்டு சிலர் உரைப்பர்கள்; “ஸுஸ்தாரதம் ஸம்ஸ்யாதம் களவீதம் ஸ்ஸ்ஸ்” என்று வைஜயந்தீ கோஶம் என்றும காட்டுகிறார்கள். கபதீ ஸ்ஸஸ்ஸ என்று மூன்று பதமாகவே பிரிக்கவேணு மென்றும், மேற்காட்டிய கோஶத்தில் ‘ களவீதம் ஸ்ஸ ஸ்ஸஸ’ என்று பதச்சேதமென்றும் பெரியோர் பணிக்கக் கேட்டிருக்கை. தமிழ்க கோசங்களிலும் “ அல்லகம்....கௌபீனம்” என்று காண்கிறது இங்கு தேசிக ஸ்ரீஸூக்தி சைலியை ஆழ்ந்து நோக்குமிடத்து கஸம் என்கிற பதம் ஆவச்யகமாயிருப்பதால் ஸஸஸஸ மென்று விவக்ஷித்து ப்ரயோகித்திருக்கமாட்டா ரென்றும் அறுதியிடலாகிறது. இத உபரி விசேஷணவிவக்ஷணாநாம் ஸர்: ஸ்ரேணம் ॥

கபதீம்—கவிஸ்த்ரேநா யத்: யஸ்ய்தக. கநாயாஸா ஸ்ஸஸிதியாவக. *வடதம் ஜீணஸம் கதம் ஸஸத ஷிதம் * இத்ரேர:. * கஹஸஹத்ஸதேத வெசெ * இதிவ கஸர:. “ காகஷிதம் காகஷிதம்” என்ற விடத்தில் ஸஸ்ஸாத ஸாரஸம் ரஸிக்கத்தக்கது. ஒன்றில், ஸாவஸிஹக்கிஸஸஸி ஸத்யஃ— காகஷிதிஸிஸஹஸிதஸ்ய:. மற்றொன்றில் காகஷிஹஸ்ஸம் ஷிதீயாஸஹவஸாதஷம். * ராஜ்ஞ ராஜ்ஞாயிஃ

acharya.org

𑌵𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌭𑍃𑌨𑍍𑌨𑍃𑌪𑌭𑍂𑌪𑌮𑌹𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌃” என்ற அமரகோஶத்தில் படிக்கப்பட்டுள்ள 𑌮𑌹𑍀𑌕𑍍𑌷𑌿𑌚𑍍𑌛𑌬𑍍𑌦த்திற்கு இது பர்யாயம். * 𑌗𑍋𑌤𑍍𑌰𑌾 𑌕𑍁𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌪𑍃𑌥𑍍𑌵𑍀 * என்ற அமரகோசத்தின்படி 𑌕𑍁𑌶𑌬𑍍𑌦𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌪𑌰𑍍𑌯𑌾𑌯மாதல் அறிக. 𑌕𑍁𑌂 𑌕𑍍𑌷𑌿𑌯𑌤𑍀𑌤𑌿 𑌕𑍁𑌕𑍍𑌷𑌿𑌤𑍍; 𑌕𑍍𑌷𑌿 𑌨𑌿𑌵𑌾𑌸𑌗𑌤𑍍𑌯𑍋𑌰𑌿𑌤𑌿 𑌧𑌾𑌤𑍁𑌃 । 𑌕𑍍𑌷𑌯𑌵𑌾𑌨𑍍, 𑌕𑍌 (𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂) 𑌕𑍍𑌷𑌿𑌯𑌤𑍀𑌤𑌿 𑌵𑌾. * 𑌕𑍍𑌷𑌿 𑌕𑍍𑌷𑌯𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌯𑍋𑌰𑌿𑌤𑌿 𑌧𑌾𑌤𑍁𑌃. (2)

3. 𑌜𑍍𑌵𑌲𑌤𑍁 𑌜𑌲𑌧𑌿𑌕𑍍𑌰𑍋𑌡𑌕𑍍𑌰𑍀𑌡𑌤𑍍𑌕𑍃𑌪𑍀𑌟𑌭𑌵𑌪𑍍𑌰𑌭𑌾
𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌟𑌪𑌟𑍁𑌜𑍍𑌵𑌾𑌲𑌾𑌮𑌾𑌲𑌾𑌕𑍁𑌲𑍋 𑌜𑌠𑌰𑌾𑌨𑌲𑌃 ।
𑌤𑍃𑌣𑌮𑌪𑌿 𑌵𑌯𑌂 𑌸𑌾𑌯𑌂 𑌸𑌂𑌫𑍁𑌲𑍍𑌲𑌮𑌲𑍍𑌲𑌿𑌮𑌤𑌲𑍍𑌲𑌿𑌕𑌾
𑌪𑌰𑌿𑌮𑌲𑌮𑍁𑌚𑌾 𑌵𑌾𑌚𑌾 𑌯𑌾𑌚𑌾𑌮𑌹𑍇 𑌨 𑌮𑌹𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌨𑍍 ॥

3. ஜ்வலது ஜலதிக்ரோட க்ரீடத் க்ருபீட பவ ப்ரபா ப்ரதி பட படு ஜ்வாலா மாலாகுலோ ஜடராநல:—த்ருணமபி வயம் ஸாயம் ஸம்புல்ல மல்லி மதல்லிகா பரிமளமுசா வாசா யாசா மஹே ந மஹீச்வராந்.

கடலினிடையே களித்து வர்த்திக்கின்ற (பாடபாக்நி யென்னப் படுகிற) நெருப்பினுடைய ஜ்வாலைக்குத் தோள்தீண்டியாயும், (எவ்வளவு ஸமுத்ரங்களையும ஒரு நொடிப்பொழுதில் கொள்ளை கொள்ளவல்ல) ஸாமர்த்திய முடையதாயிருக்கின்ற ஜ்வாலாபுஞ் ஜங்களினால் வ்யாப்தமாயிருக்கின்ற ஜாடராக்நியானது (தாராள மாக) எரியட்டும்; (எவ்வளவு கொடிய பசி மிகுந்தாலும்) மாலைப் பொழுதில் மலர்ந்த சிறந்த மல்லிகைப்பூவின் நறுமணத்தை வீசுகின்ற வாக்கினால் அரசர்களிடத்தில் நாம் ஒரு சிறு புல்லையும் யாசிக்கமாட்டோம்.

கடலினிடையே அபாரமான கடல்நீரைப் பருகிக்கொண்டு பாடபாக்நி யிருப்பதாக நூற்கொள்கை. அதனால் தான் கடல்நீர் புறம்போகாமல் ஒரு மர்யாதையிலே நிற்பதாகவும் கூறுவர். *𑌵𑌾𑌷𑍍𑌣𑍁𑌵𑌾𑌨𑍍 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌵𑌡𑌵𑌾𑌗𑍍𑌨𑌿𑌃* இத்யாதிகளைக் கொண்டும் இதனையறியலாம். அப்படிப்பட்ட பாடபாக்நி போலவே நம்முடைய ஜாடராக்நி எவ்வளவேனும் படர்ந்து எரியட்டும்; (அதாவது) எவ்வளவு தீவ்ரமான பசி பொறுக்க வொண்ணாதபடி நலிந்தாலும் நலியட்டுமென்றபடி. ‘புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது’ என்னுமாபோலே அந்த நிலையு

யிலும் * என் நாவிலின் கவி யாரொருவர்க்குங் கொடுக்க கில்லேனென்கிறார் பின்பாதியில். மல்லிகை மலரின் பரிமளம எவ்வளவு கொண்டாடத் தகுநததோ அவ்வளவு கொண்டாடு. தற்குரிய நம் வாக்கு எமபெருமான் விஷயததில் ப்ரஸரிக் குமே யல்லது அல்ப ப்ரபுக்களின் விஷயத்தில் சிறிதும் ப்ரஸரிக்க மாட்டாது: அருமருந்தன்ன வாக்கைக கொண்டு அன்னவர்க ளிடத்தில் ஒரு த்ருணமும் யாசிக்கமாட்டோம் என்றாராயிற்று. விஷயமஹாவத்தைப் பற்றததமவாக்கைத தாமே புகழ்கல்ஏற்கும்.

கௌராவஸஹ்யு ஶக்ஷணயா ஜய்ரவதெஜவஸஹவாவக்டி. க்ஷீரவிட ஷவ:—கஷி:. (க்ஷீரவிடமென்று ஜலத்திற்குப் பெயர்) *க்ஷீரவிட யொநிஜ்ஜுவநஃ* ஊத்ரூசஃ * கஸஹரவஃ * ஊதிஸ்ரத்யூயயா ஜஸஶ்வ உத்தீஹஹிஸிதியாவக. "வ்ரதிஷடா . . . வஷ்யஸ்; * வ்ரதிவக்ஷவ்ரதிஸஂஸிவ்ரத்ரநீகவிரொயிநஃ *ஊதி ஷஷ்ய ஸவயடிரயெ ; ஆயாநாக" ஊதி ஊஹாஞ: ‖ [ஷீஜதஷீகா] * ஜதஷீகா ஜவஹிடிகா வ்ரகாணஜஹுதஜஜஃ | வ்ரஸஷவாவ காநூஜஹிநி * ஊத்ரூசஃ. யாவயாதா ஷிக்ஷூக மாதலால் தூணஂ, ஜஹீஸ்ராநிதி கஜடிவஷஷயஂ (ந)

4. ஜ-ரீஸ்வரஷாரவஹிவிடிதஜிடிகா
ஜ-ராஷிகாமெயரஷிதொ஽யஜஹிஃ |
யஜ்ஞநாஹஂ நிரவாயஜஷீ மெ
யநஜயஷஹ்ஜநஹெஷணஂ யநஂ ‖

4. துரீஶ்வரத்வார பஹிர்விதர்திகா துராஸிகாயை ரசி தோயமஞ்ஜலி:—யதஞ்ஜநாபம் நிரபாய மஸ்தி மே தநஞ்ஜய ஸ்யந்தந பூஷணம் தநம்.

(அஹங்காரமே வடிவெடுத்த) கெட்ட ப்ரபுக்களினுடைய வாசல் திண்ணையில துவண்டிருக்கு மிருப்புக்கு இதோ ஒரு கும்பிடு கொடுக்கப்பட்டது. (அபபடிப்பட்ட நிலைமை நமக்கு வேண்டா மென்றபடி.) ஏனெனில், அர்ஜுநனுடைய தேருக்கு அலங்கார மாய் மைபோன்ற நிறமுடையதாய் அழிவற்றதான (கண்ணபிரா னென்கிற) செல்வம் எனக்கு உள்ளதன்றோ.

அஹங்காரிகளான அரசர்களைக் காணவேண்டிச் செல்லுமவர் கள் வாசல் திண்ணையிலே யிருந்துகொண்டு ‘மஹாப்ரபுவை இப்

acharya.org

போது ஸேவிக்க நேருமோ?' என்று கேட்பதும் அங்குள்ள இவா உபாதாநங்கள் * நிதராதி ஹாநி ஹாநிகேத வஸதி கவஹாரம் பேராஷயத்ஜராஜு தீவ்ரத்ரெக்ஷநவாயம் ஸஹிதாவே வரோ ஹாய க்ஷுயாஹி யாஹி * என்றாற்போலே திரஸ்காரிக்கவுமாய்ப் படும் பரிபவங்கள் நமக்குக் கனவிலும் நேரவேண்டா என்கிறார். * ரவிஜோதாயஶஜுமி:* என்றது அதிலுள்ள ஜுகுப்ஸையைக் காட்டுகிறபடி. இங்ஙனம் சொல்லுதல் கவிமரபு. "ஶுஹ்ரம் நஶோஹா கவயே நிரவத்யாய" என்றார் ஆளவந்தாரும்.

பிரபுக்களை ஸேவியாவிடில் சரீர போஷணம் முதலியவை எங்ஙனே நடைபெறு மென்ன; * யோக க்ஷேமம் வஹாம்யஹம் * என்று தேர்த்தட்டிலே நின்று பிரதிஜ்ஞை பண்ணின பெருமானே நமக்கு அழியாச் செல்வமாதலால் அப்படிப்பட்ட பெருமானாலே நித்ய ஸ்ரீமான்களான நாம் பிறர்மனை திரிதந்துண்ணவேண்டிய கட்டுப்பாடு உடையோமல்லோம் என்றாராயிற்று. யக: என்றது யஸ்மாத்காரணாத் என்று அர்த்தமுள்ள அவ்யயம்.

கஞ்சநாபம், நிரவாயம் என்ற இரண்டு விசேஷணங்களும் வ்யதிரேகத்ருஷ்டாந்தகம். வெளுத்த ரத்னமாயும் அழிந்து போவதாயுமிறே உலகத்தில் தனமுள்ளது; இங்ஙனன்று காணும் தெய்வத்தேரினில் கீதை செப்பிய எங்கள் தனம் என்கிறார். நிரவாய மென்றவிடத்து * உத்பாத்ய யோகஶ்ய ஹேதுயாஸ்த்காஸம் யமெந்த்ரிராவஸி யாராவிஷ்வாஷாேண: | ய: வ்யாஹாரத்விரகம் வரிவஸ்ணாரவ: பேயஸ் ஶே தரவ ஸாஷ்திகம் ஶாகாத: * என்ற அப்பய தீக்ஷிதருடைய ச்லோகம் நினைக்கத் தகும். "யோக க்ஷேமம் வஹாம்யஹம்" என்ற பகவத் ப்ரதிஜ்ஞையையே நம்பியிருக்கிறேனென்று காட்டுதற்காகவே 'யதஜுயஸ்தந ஹாஷணம்' எனப்பட்டது. .... (ச)

5. ஶரீரவதாவயி வ்ரஜாநிஷேவணாவாதாக
கவிஷநயநஜுயவ்ரஶேஷம் யநம் தநம் |
யநஜுயவியநம் யநஶாதவஜோவயநம்
ஹாவாயநஶோயநம் ஹாஶநவாம் ஹஶோரயநம் ||

acharya.org

5. ஶரீரபதநாவதி ப்ரபு நிஷேவணா பாதநாத் அபிந்தந தநஞ்ஜய ப்ரஶமதம் தநம் தந்தநம்—தநஞ்ஜய விவர்த்தநம் தநமுதூடகோவர்த்தநம் ஸுஸாதநமபாதநம் ஸுமநஸாம் ஸமாராதநம் ||

இந்தவுடல விழுமளவும் அரசர்களை அநுவர்த்திப்பதாகிற ஆபத்திற்குக காரணமாய்க்கொண்டு ஜாடராக்நிக்கு சாநதியைத் தருகின்ற பொருள் பாழாகுக. அது நமக்கு வேண்டா. அர்ஜுநனை அபிவ்ருத்தி செய்ததும், கோவர்த்தன மலையைக் கொற்றக் குடையாகத் தாங்கிநின்றதும், தேவதைகளுக்குப் பரமத்ருப்தியை அளிக்க வல்லதும், எதையும் நாம அடைவதற்குச் சிறந்த ஸாதநமானதும், தன்னை நம்பினோர்க்கு ஒருவகையான தீங்கையும் தர மாட்டாததுமான செல்வமன்றோ செல்வம். அதாவது *திருவுக்குந் திருவாகிய செல்வம். அதுவே நமக்குள்ளது.

க்ஷுத்ரப்ரபுக்களைப் பணிந்து பொருளீட்டுமவர் தங்கள் ஆயுள் உள்ளளவும அவர்களைப் பணிந்தே தீரவேண்டும். பொருளீட்டுவதற்கு முன்பு அவர்களைப் பணிநதேயாக வேண்டுமென்பது நிர்விவாதம. அபாரமான பொருளை ஆர்ஜித்துவிட்டு விலகி விடலாமே யென்னில்; அதுவுமாகாது; ஆர்ஜித்த பொருளுக்கு அபாயம் விளையாத படி அடிக்கடி அவர்களை உபஸத்தி செய்தாக வேண்டும. ஆகவிப்படி யாவஜ்ஜீவம் ஸ்வரூபநாசத்தை ஸஹித்துக்கொண்டு பொருள் படைப்பது இந்தப் பாழும வயிற்றுக்காகவே யாதலால் அபபடிப் பட்ட பொருள் நமககுத் தேவையிலலை. சரீரயாத்திரை ஆத்மயாத்ரை என இரண்டையும் நிர்வஹிக்கவல்ல பரமபொருள் நமக்குக் கைப்பட்டே யிருக்கின்றது என்றார்

க்ஷுதிந்தநதநஞ்ஜய: = ஜாடராக்நியைச் சொல்லுகிறது. க்ஷுத் இந்தநம்யஸ்ய ஸ:| இங்கு க்ஷுத் என்றது அந்நத்திற்கும் உபலக்ஷணம். சோறுந் தண்ணீரும் எதிர்பார்க்கிற அக்நி என்றபடி. தநஞ்ஜய ஶப்தம அக்நிக்கும் அர்ஜுநனுக்கும் பெயர். இங்கு அக்நியையும் மூன்றும் பாதத்தில் அர்ஜுநனையும் சொலலுகிறது. இந்தநம் என்பது அஸாரமென்றபடி. யிக் என்கிற ஸ்தானத்தில் இந்தந மென்கிறது என்பாருமுளர். இங்கு வஙுவஹாயஹத்தில அக்ஷராநுப்ராஸத்தில் தநஶப்தம் நான்கு தடவை வந்திருக்கிறது;

acharya.org

மேல் உர்த்தரார்த்தத்தில் இந்தப்பதமே ஏழுதடவை வந்திருக்கிறது; இதனால் எற்றைக்கும ஏழேழ் பிறவிக்கும் துணையாக நிற்கும் ய_நம் அதுவே யென்று யூநிப்பித்தபடி. இந்த ச்லோகத்தில் பல்வகையான அர்த்த விசேஷங்கள் தொனிக்கும். அறிவுடையார் ஆழ்ந்து அறிக.

[ய_நஜயவிவய_நம்] "ய_நஜய வ்ரு ஶஷம் ய_நம்" என்று கீழ்ச் சொன்னபடியே ய_நஜய ஶாஷிவருஷமான ய_நம் போலன்றியே இது ய_நஜய வ்ருஜிகா மென்கிறார். [உஉ-ஙி ஶ மொ வய_நம்] எடுத்து வஹிக்கப்பட்ட கோவர்த்தன மலையை யுடையது. திருவாய்ப்பாடியில் கண்ணபிரானுடைய அதிமாநுஷ சீலவ்ருத்த வேஷங்களைக் கண்டு ஆயர்களனைவரும் 'இவனே நம குலக் கொழுந்து; இவனது கட்டளைப்படியே நாம் நடக்கவேண்டும்' என்று அறுதியிட்டிருந்தனர்: அங்ஙனமிருக்கையில் சரத்காலம் வந்தது. அப்போது இடையர்கள் வருஷந்தோறும் நடத்துவது போல் வழக்கப்படி இந்திரனுக்குப் பூசை செய்யப் பற்பல வண்டிகளில் சோறும் தயிரும் நெய்யும காய்கறிகளும் மற்றுமுள்ள பூஜா த்ரவ்யங்களுமாகிய இவைகளைச் சேகரிப்பதைக்கண்டு க்ருஷ்ணன் 'ஓ பெரியோர்களே! நாமும் நம்முடைய பசுக்களும் எதனால் ஜீவிக்கிறோமோ அதற்கே பூஜை செய்வது தகுதி; இக் கோவர்த்தனகிரியே பசுக்களுக்குப் புல்லுந் தண்ணீருங் கொடுத்துக் காப்பாற்றுகின்றது; இந்திரனால் நமக்கு என்ன பயனுண்டு, ஒன்றுமில்லை. ஆகையால் நீங்கள் இபபூசனை யனைத்தையும் இம மலைக்கே இடுங்கள்' என்ன, இடையர்கள் இதைக்கேட்டு அங்ஙனமே செய்ய, கண்ணபிரான் தானே ஒரு தேவதாரூபங் கொண்டு அவற்றை முற்றும் அமுது செய்தருள, அவ்விந்திரன் கோபத்தோடு புஷ்கலாவர்த்தம் முதலிய பல மேகங்களை ஏவி, கண்ணன் விரும்பி மேய்க்கிற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் கண்ணனுக்கு இஷ்டரான இடையர்க்கும் இடைச்சியர்க்கும் தீங்கு தரும்படி கல்மழையை ஏழுநாள் இடைவிடாது பெய்வித்த பொழுது கண்ணன் கோவர்த்தன மலையை யெடுத்துக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்து எல்லாவுயிர்களையுங் காத்தருளினன் என்ற வரலாறு இங்கு உணர்க.

acharya.org

உத³ரபோஷணாவஹயஜ்ஞமென்ற விதில் மற்றொரு பொருளும் தொனிக்கும்; அதாவது, நாநாயஜ்ஞமான ஶாஸ்த்ரத்திற்கு வாக்கும் அர்த்தமாதலால் வாக்கின் வ்ருத்தியையும் நிர்வஹிப்பது இந்த யஜ்ஞமென்கை. வயிற்றை வளர்க்கிற யஜ்ஞம் அது; வாக்கை வளர்க்கிற யஜ்ஞம் இது என்று ரஸோக்தி. [ஸாதநாயஜ்ஞம்] ஐஹிகங்களான க்ஷுத்ர பதார்த்தங்களை மாத்திரம் வாங்குவதற்கே அது ஸாதனம்; ஆமுஷ்மிகங்களான சிறந்த ச்ரேயஸ்ஸுக்களுக்கும் இது ஸாதனம் என்றவாறு. ஸாதநாநி ஸாயநாநி யஸ்ய தத் என்று பஹுவ்ரீஹியாய் பக்திபரபத்திகள் முதலிய சிறந்த ஸாதனங்களை யுடையது என்றும் விவக்ஷிதம். அந்த யஜ்ஞத்தின் ஸாதனங்கள் [ஆர்ஜநோபாயங்கள்] ஹேயமென்று காட்டினபடி [அபாயஜ்ஞம்] கொள்ளக் கொள்ளக் குறையும் அது; * கொள்ளமாளாவின்பவெள்ளம் இது; ஜ்ஞாதிதஸ்கராதிகளால் கொள்ளை கொள்ளப்படுகையாகிற அபாயங்களும் இதற்கில்லை. * அபாயாத விஹாராஹார்யம் அஹ்ருதிவஶம்வதம் | அதஸ்கராக்ருதாஹார்யம் வர்த்தயம் யஜ்ஞம்ஹி ந: || [ஸாதநஸாம்ஸாராயஜ்ஞம்] அறிவுடையார்க்கும் அமரர்க்கும பேரின்பம் பயக்கு மென்றபடி. இப்படிப்பட்ட சீரிய பொருளாக ஸ்வாமி விவக்ஷிக்கும் யஜ்ஞம் இன்னதென்பது விளங்க விஶேஷ்ய நிர்தேஶமில்லா விடினும் விசேஷணப் பொருத்தங்களாலே எம்பெருமானென்கிற பரம் பொருளே அது என்பது வெளிப்படை .... ரு

ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தம்

[பத்ராதிபர்]

233-வது பக்கத்தின் தொடர்ச்சி

கீழ்வாஸுதேவாதி வ்யூஹங்களைப பற்றியும், அந்த வ்யூஹங்களிலிருந்து உத்பன்னர்களான கேஶவாதி பன்னிருதிருநாமங்களைப் பற்றியும் தெரிவித்துக்கொண்டேன்; இங்கு விபவாவதாரங்களைப் பற்றிச்சிறிது விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

விபவமென்பது அஜாயமானோபஹுதா விஜாயதே என்கிற படி பிறப்பிலியான பரமபுருஷன் ஆஶ்ரிதானுக்ரஹார்த்தம் தன்

acharya.org

னுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை அநேகப்ரகாரமாக்கிக் கொண்டவதரித்தல் என்று அர்த்தமாகலாம். அவ்விபவமாவது இத்தனை யென்று கணக்கிட்டுச் சொல்ல வொண்ணாதபடி அஸங்க்யாதமாய் கௌணமென்றும் முக்யமென்றும் இரண்டுவகைப்பட்டிருக்கும். இதில் கௌணமென்பது அவ்வளவு ஶ்ரேஷ்டமானதன்று. முக்யமென்பது ஶ்ரேஷ்டமானது. ஸர்வேஶ்வரன் லோகரக்ஷணார்த்தமாக ஒருசேதனனை ஆவேஶித்துச் சில கார்யங்களை ஸ்வேச்சையாலே செய்யுமதை கௌணமென்று சொல்லுவார்கள். அதுவும் ஸ்வரூப ஆவேஶமென்றும் ஶக்த்யாவேஶமென்றும் இரண்டுபடிப்பட்டிருக்கும். ஸ்வரூப ஆவேஶமாவது தன்னுடைய ஶுபாஶ்ரயமான அஸாதாரண விக்ரஹத்தோடே ஆவேஶிக்கை. பரசுராமாவதாரத்தை ஸ்வரூப ஆவேஶ அவதாரமென்பர்கள். ஶக்த்யாவேஶமாவது உசிதகாலங்களில் சில சேதனர்களிடத்தில் தனது ஶக்திமாத்ரத்தாலே ஆவேஶித்து அக்கார்யம் முடிந்த பிறகு கடக்கநிற்கை.

இதுதான் ஸ்ருஷ்டிகாலத்தில் ப்ரஹ்மாவுக்குள் ஆவேஶித்து ஸ்ருஷ்டித்து அக்கார்யம் முடிந்தபிறகு அவனைவிட்டகன்று நிற்றல். இதுபோலே ருத்ரனை ஆவேஶித்து ஸம்ஹரித்தல். மற்றும் அக்நிமுதலான தேவர்களை ஆவேசித்து அவ்வோ காரியங்களைச் செய்தல். ஸ்ருஷ்டிக்குக் கடவனான ப்ரஹ்மாவும், ஸம்ஹாரத்தைப் பண்ணுகின்ற ஶங்கரனும், வேதங்களை விபாகித்து, பஞ்சமவேதமாகிய மஹாபாரதத்தைப் பண்ணிய வ்யாஸமஹருஷியும், வென்றிமா மழுவேந்தி மண்மிசை மன்னரை மூவெழுகால் கொன்று அவ்வரசர்களின் ரக்தங்களால் பித்ருதர்ப்பணத்தைப் பண்ணிய பரசுராமனும், அகார்ய சிந்தாஸமகாலமேவ ப்ராதுர்ப்பவம் ஶ்சாபத(ய)ர: புரஸ்தாத் அகார்த்யத்தை அகத்தில் நினைக்க ஆரம்பிக்குமப்பொழுதே அவர்கள் முன்னே வில்லும் கையுமாய் ஆவிர்ப்பவித்து ரக்ஷித்துப்போந்த கார்த்தவீர்யார் ஜுநாதிகளும் பகவானுடைய ஆவேஶாவதாரமா யிருந்தாலும் அஹங்கார விஶிஷ்ட ஆத்மாக்களை கார்யார்த்தமாக ஆவேஶித்து அக்கார்யம் முடிந்தபின் தான் கடக்க நிற்கையால் அவ்வவதாரங்கள் முமுக்ஷுக்களுக்கு உபாஸிக்கத் தகுந்தவைகளாக ஆகமாட்டா.

முக்யாவதாரமாவது ஶுபாஶ்ரயமான தன்னுடைய அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தை அதற்கேற்பட்ட ஸ்வபாவவிஶே

acharya.org

ஷங்களொன்றையும் விடாமல் ஆதியஞ்சோதி யுருவையங்கு வைத்திங்குப் பிறந்து என்கிறபடியே தேவதிர்யங்மநுஷ்யஸ்தாவர ஸஜாதீயமாக்கி ஸகலமநுஜநயந விஷயமாக்குகை. அவ்வவதாரங்களாவன மத்ஸ்ய கூர்மாத்யவதாரங்கள்.

இவைகளில் மத்ஸ்யாவதாரமாவது சென்ற கல்பத்தின் கடைசியில் சதுர்முக ப்ரஹ்மா நித்ரைசெய்யும் காலத்தில் மூன்று லோகங்களும் ப்ரளய ஜலதியில் முழுகாநிற்க நித்ரைபண்ணிக் கொண்டிருக்கும் ப்ரஹ்மாவின் முகங்களில் நின்று வேதங்கள் ஆவிர்ப்பவித்தன. அப்போது ஸமீபத்தில் வர்த்தியாநின்ற ஹயக்ரீவன் என்று பெயரையுடைய அஸுரனொருவன் அவ்வேதங்களை அபஹரித்துக்கொண்டு அப்ரளயார்ணவத்தில் முழுகி மறைந்து விட்டான். அத்தையறிந்த பரமகாருணிகனான பரமபுருஷன் அந்நீருக்குச் சளைக்காத மீனுருக்கொண்டு அம்மஹார்ணவத்தில் ப்ரவேசித்து ஹயக்ரீவனென்கிற அவ்வஸுரனைக்கொன்று அவ்வேதங்களைக்கொணர்ந்து ப்ரஹ்மாவிற்குக் கொடுத்தான். இதுவே ஸர்வேஶ்வரனுடைய விபவாவதாரங்களில் முந்தினதாயிருக்கும்— இவ்விடத்தில் மதஸ்யாவதாரத்தைப் பற்றி ஸ்ரீ பாகவதத்தில் ஸ்ரீ ஶுகர் பரிக்ஷித்மஹாராஜாவிற்குச் சொன்ன ப்ரகாரத்தைச் சிறிது எழுதி அநுபவிக்க ப்ராப்தமாகிறது.

அதாவது நடந்த கல்பத்தில் ஸத்யவ்ரதன் என்கிற ராஜருஷி ஒருவன் இருந்தான். அவன் ஒருகால் க்ருதமாலா என்கிற நதியில் ஜலதர்ப்பணம் பண்ணுநிற்க, அவரது அஞ்சலி தீர்த்தத்தோடே மீன் ஒன்று கையில் வந்தது. ஜலத்தோடே கையில் வந்த அம்மீனை அம்மன்னன் அத்தீர்த்தத்தோடே நதியில் விட்டுவிட்டான். அவ்வாறு நதியில் விடப்பட்ட அம்மீனானது, பரம காருணிகனான அம்மன்னனை நோக்கி, ஓ தீனவத்ஸல! நான் இநத நதியில் என்னுடைய ஜ்ஞாதிகளான மத்ஸ்யங்களின் உபத்ரவம் ஸஹிக்க முடியாமல் உன் கையில் அடைக்கலம் புகுந்தேன். நீ மறுபடியும் அந்த நதியிலேயே என்னை விட்டு விட்டாய். அடைக்கலம் புகுந்தவர்களைக் கைவிடலாகுமோ? என்று மிகவும் இரக்கமாய் வேண்டிக் கொண்டது. தன்னை அநுக்ரஹிப்பதற்காக பரமப்ரீதியுடன் பரமபதத்திலிருந்து பரம புருடன் மீனுருவாய் வந்ததை யறியாத அம்மன்னன், ஆர்த்தியுடன் சொன்ன அம்மீனின் வார்த்தையைக் கேட்டு மிகவுமிரங்

acharya.org

கித் தன்னுடைய தீர்த்த பாத்திரத்தின் ஜலத்தில் அம்மீனை ஆதரவுடன் எடுத்துவிட்டு தன் ஆஶ்ரமத்திற்குக் கொண்டு வந்தான். அன்றிரவே அம்மீன் அப்பாத்ரம் போதாதபடி அதிகமாக வ்ருத்தியடைந்து அவ்வரசனை நோக்கி அய்யா அரசனே! இத்தீர்த்த பாத்ரம் நானிருப்பதற்குப் போதாது. மிகவும் கஷ்டப் படுகிறேன். எவ்விடத்தில் நான் சுகமாக ஸஞ்சரிக்கமுடியுமோ? அவ்விடத்தில் என்னை கொண்டுபோய் விடவேண்டும் என்று வேண்டிக்கொண்டது. அப்போதே அம்மன்னன், அம்மீனை எடுத்துக்கொண்டு போய், அகன்றதொரு தடாகத்தில் விட்டான். ஜலத்தில் விட்டவுடன் அத்தடாகத்தளவு வ்ருத்தியடைந்து எனக்கு சுகமாக வஸிக்க இத்தடாகமும் போதாது ஆகையால் பெரியதோர் ஜலாஶயத்தில் என்னைக் கொண்டு விட்டு விட வேண்டுமென்று மிகவும் வேண்டிக்கொண்டது. உடனே அத் தடாகத்தளவு அகன்றிருக்கும் அம்மீனை எடுத்துக்கொண்டுபோய் ஸமுத்ரத்தில் விட்டான். அப்போது மீன் அவ்வரசனை நோக்கி ஒ மன்னனே! சிறிய மீன் பெரிய மீனுக்கு ஆஹாரமென்பதை யறியாயோ? இச்சமுத்திரத்திலிரா நின்ற பெரிய மீன்கள் என்னைத் தின்று விடுங்களே. இதில் என்னை விடுவது உசிதமா? என்று சொல்லிற்று.

இவ்வாறு சொல்லாநின்ற அம்மீனைப் பார்த்து ஸத்யவ்ரதன் உன்னைப்போன்ற பெரிய மத்ஸ்யத்தை நான் எங்கும் கண்டதில்லை இவ்வளவு பெரிய உன்னைத் தின்னும் படியான மத்ஸயம் எங்கேயும் கிடையாது. ஒரு தினத்தில் நூறு யோஜனை தூரம் வளர்ந்த நீ யார்? ப்ரஹ்ம ஶப்தவாச்யனான ஸ்ரீமந் நாராயணனே நீயாக வேண்டுமென்றும், நீ உலகைக் கடாக்ஷித்து வாழ்விக்க இம்மீனுருக் கொண்டிருக்கிறாய் என்றும் பலவாறு ஸ்தோத்திரம் பண்ணினான். அப்போது மீனுருக்கொண்ட பகவான் ஒ ஸத்யவரத இந்றைக்கு ஏழாவது நாள் யுகமுடிவு. அப்போது ப்ரளய முண்டாகப் போகிறது. அச் சமயம் ப்ரளய சமுத்ரத்தில் ஓர் ஓடம் தோன்றும். அதில் நீ ஸமஸ்தமான ஒஷதிகளோடும் ஸப்தருஷிகளோடும் ஸமஸ்தமான வித்துக்களோடும் கூட ஏறி யாதொரு வருத்தமுமின்றி ஏகார்ணவத்தில் ஸஞ்சரிக்கப்போகிறாய். அவவோடமானது பெருங்காற்றால் அங்குமிங்கும் அலைக்கப்பட, அப்போது ஸமீபத்திலிராநின்ற பெரிய ஸர்ப்பமாகிற வாஸுகியினால் அந்த ஓடத்தை என்னுடையகொம்பில் கட்டிவிடு. நான் ப்ரஹ்மாவின் இரவு முடி

யும் வரை அப்ரளயத்தில் ஸஞ்சரிப்பேன். நான் பரப்ரஹ்ம ஶப்த வாச்யன். ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் நிரதிஶயமான பெருமையை யுடையவன். உன்னுடைய அழகான ப்ரஶ்நங்களால் இவ்வர்த்தத்தை உனக்கு அறிவித்தேன். நீ இதை யறிவாய் என்று சொல்லி பகவான் அந்தர்த்தாநமாய் விட்டார்.

அப்பால் ஸத்யவ்ரதன் தர்ப்பங்களை கிழக்கு நுனியாயிருக்கும்படி பரப்பி அதன்மேல் வடகிழக்குத் திசையை நோக்கி உட்கார்ந்துகொண்டு மதஸ்ய ரூபதாரியான பகவானுடைய பாதாரவிந்தத்தைப் பரிவுடன் த்யானம் செய்துகொண்டு பகவானால் சொல்லப்பட்ட அக்காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அந்த ஏழாவது தினத்தில் மேகங்கள் ஊழிமுதல்வனுருவம்போல் கருத்து ஆகாஶத்திற் சிறிது மவகாஶமின்றிப் பரந்து மின்னலோடும் இடியோடும் கூடி அதிபயங்கரமாக இடைவிடாது வர்ஷிக்க, எங்கும் ஜலமயமாய் ஸமுத்ரமும் வேலையைக் கடந்து உலகம் முழுதும் வ்யாபித்து விட்டது. அப்போது பகவானை த்யாநித்துக் கொண்டிருந்த ஸத்யவ்ரதன் முன்னேஓர் ஓடம் தென்பட்டது. உடனே ஸத்யவ்ரதன் அவ்வோடத்தில் ஸமஸ்தமான வித்துக்களோடும் ஸப்தருஷிகளோடும் ஓஷதிகளோடும் ஏறிக்கொண்டான். அதைப்பார்த்த ருஷிகள் ஸத்யவ்ரதனைப்புகழ்ந்து ஓ அரச ஶ்ரேஷ்டனே! தன்னைத்துதிப்பார் க்லேஶத்தைப் போக்குமவனான கேஶவனை த்யாநம் செய்வாயாக. அவன் இப்போது ஏற்பட்டிருக்கும் ஸங்கடத்தில் நின்றும் நம்மைக் காப்பாற்றுவான் என்று சொல்ல, ஸத்யவ்ரதனும் அவ்வாறே த்யாநிக்கப் பரமகாருணிகனான ஸர்வேஶ்வரன் அநேக யோஜனை தூரமுடைய ஸ்வர்ண மயமான திருமேனியையும் ஒற்றைக் கொம்பையுமுடைய ஓர் மீனுருவாய் அப்ரளயார்ணவத்திலாவிர்ப்பவித்தான். ஸமீபத்தில் நீண்டதோர் ஸர்ப்பமும் காணப்பட்டது. உடனே ஸத்யவ்ரதன் அவ்வோடத்தை மீனுருவாகிய பகவானுடைய கொம்பில் அந்தப்பெரிய ஸர்ப்பத்தைக் கயிராக்கொண்டு கட்டிவிட்டுப் பரமானந்தபரிதனாய் பகவானைப் பலவாறு ஸ்தோத்ரம் பண்ணினார். அவ்வாறு ஸ்தோத்ரம் பண்ணா நின்ற ஸத்ய வ்ரதனைக்கடாக்ஷித்து மத்ஸ்ய பகவான் அப்ரளயார்ணவத்தில் ஸஞ்சரியாநின்று கொண்டு ப்ரக்ருதியைக் காட்டிலும் விலக்ஷணமான ஆத்மதத்வத்தையும் அவ்வாத்மா

acharya.org

பகவானையடைவதற்கு ஸாதனமான பக்தியோகத்தையும் ப்ரதி பாதியா நின்ற மத்ஸ்ய புராணத்தை யருளிச்செய்தான். ஸத்ய வ்ரதன் ஸப்தருஷிகளோடு கூட ஓடத்திலிருந்து கொண்டே மத்ஸ்ய பகவானால் சொல்லப்பட்ட அப்புராணத்தைக் கேட்டுப் பரமானந்த மடைந்தான்.

வேதங்களை அபஹரித்துச்சென்ற ஹயக்ரீவனைக்கொன்று அவ்வேதங்களை மீட்டு ப்ரளயம் போனவுடன் படுக்கையை விட்டு எழுந்திருந்த ப்ரஹ்மாவிற்குக் கொடுத்தான்.

இவ்வாறு ஜ்ஞாந விஜ்ஞாந ஸம்பன்னனாய் மீனுருவாகிய பகவானுடைய அநுக்ரஹத்தைப்பெற்ற அந்த ஸத்யவ்ரதனே இந்தக் கல்பத்தில் வைவஸ்வத மநுவாயிருக்கிறான். இந்த ராஜருஷியான ஸத்யவ்ரதனுக்கும் மாயா மத்ஸ்ய ரூபியான பகவானுக்குமிடையே நடந்த இந்த வ்ருத்தாந்தத்தைச் சிந்திப்பார் இவ்வுலகில் அவர்கள் நினைத்த ஸமஸ்தமான ஐஶ்வர்யங்களையு மடைந்து ஶரீரவியோகாநந்தரம் "நசபுநராவர்த்ததே" என்கிற பரமபதத்தையடைந்து பகவானுக்குப் பல்லாண்டு பாடிக்கொண்டு பரமானந்த மடைவர்கள்.

ஸ்ரீ. உ. வே. ஜகத்குரு அநந்தாசார்ய ஸ்வாமி விஷயமான செய்யுட்கள்

T. K. இராமாநுஜன்
செந்தமிழ் உதவி பத்திராசிரியன்

கொச்சகக் கலிப்பா

1. ஆரியமும் செந்தமிழும் ஆந்திரமும் முதலாய
சீரியபன் மொழிகளினும் தேயமெலாம் நனிபுகழும்
மாரியென வுரைவழங்கும் வள்ளல் அநந்தாரியனார்
ஏரியல்செந் தாமரைத்தாள் எப்போதும் பணிகுவமே.

2. மன்னு புகழ்முடும்பை நம்பி வழித்தோன்றிக்
கன்னி முதலிமய மட்டும் கடல்வண்ணன்
றன்னடியர் வாழச் சமயப் பகைதடிந்து
மன்னுகதிர் ஞாலங் கடந்து மறைந்ததுவே.

acharya.org

3. தென்னாட்டுப் புலவர்திறம் தேயமெல்லாம் கொண்டாட
இந்நாட்டுப் பரசமய இகலழித்துத் திறைகொண்டார்
எந்நாட்டும் அதுபுரிய எண்ணி அநந்தாரியனார்
பொன்னாட்டுள் இஞ்ஞான்று புக்கனரோ புகல்வீரே.

4. உலககுரு என்றே உரைக்குமுறைக் கேற்ப
நிலமுழுதுந் தஞ்சீர் நிறுவினார் வானத்
தலமும் அடியிணைக்கீழ்த் தங்கப் புரிந்து
நிலவுறச் செய்தற்கு நினைந்து பிரிந்தாரோ.

5. அண்ணல் மிகு காதி அநந்தாரியனார் தாம்
கண்ணன் கழல்கட்கு அனவரத கைங்கரியம்
பண்ணி மகிழ்தற்கிப் படிதகா தென்றெண்ணி
விண்ணுலகில் இன்று விழைந்து புகுந்தனரோ.

6. ஆழ்வார்கள் செய்கலையும் ஆன்ற பழமறையும்
ஏழ்பாரும் உய்ய இசைக்கும் அநந்தாரியனார்
வாழ்வான வைகுந்த வானாடு புக்கனரேல்
தாழ்வாரை ஆளும் தகையார் இனியாரே?

7. வேதம் முதலான விழுநூல்கள் பற்பலவும்
கோதகல ஆய்ந்து குணம்பலவும் தந்துபதிக்
தாதரவோ டெங்கட் கருளும் அநந்தாரியர்போல்
ஏதமறப் பன்னூல் தருவார் இனியாரே.

8. நித்தியமும் நைமித்திகமும் நெறிதவறாப்
பத்திமையோர் செய்யப் பரமனார் வீற்றிருக்கும்
உத்தமமாம் கோயில்பல ஊர்தோ றெடுப்பித்தற்கு
அத்தன் அநந்தாரியன்போல் வல்லார்கள் ஆரினியே.

9. சென்றவிட மெல்லாம் திருமால் பரத்துவமே
நன்று விரித்துவரும் நாவீறுடையபிரான்
இன்று திருநாடு புகுந்தாலும் எழுகதிர்போல்
துன்றும் ஒளியோ டுலகுதொழத் தோன்றுவரே.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் ஜகத்குரு அனந்தாசார்ய ஸ்வாமிகளின் பிரிவு

[C. P. ராஜகோபாலன்]

"ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படுவார்"

என்பது மூதுரை.

ஊழி பெயரினும் தம் புகழ் குன்றாது வைகுந்தவானாடளவும் செல்லும் கீர்த்தியாய், மண்மிசைப்பிறந்த பயன் எய்தி, விண்ணாளார் செல்வம் வீறெய்த நம் ஜகத்குரு சுவாமிகள், சென்ற ஆடித் திங்களில் சாப்ரா என்னும் நகரில் வியோகமடைந்தார் என்பதை கேட்டுப் பரிதபிக்காத சஞுதனிகள் எவர். சென்ற நூற்றாண்டில் அன்னார் நம இந்து மதத்திற்கும் ஸ்ரீ பகவத் ராமானுஜஸித்தாந்தத்திற்கும் சிறப்பாகச் செய்து வந்த அரியதொண்டு எம்போல்வரால் அளவிடற்பாலதோ. இருள் தருமாஞாலத்தில் கலிமிக்க காலத்தில் ஆழியானருளால், மாயாவாதிகள் செறுக்கடங்கும்படிக்கும், எம்பெருமானார் தரிசனமே தழைத்தோங்கவும் தம்முடைய சரீரம் பொருள் ஆவி மூன்றையும் தனக்கென வாழா பிறர்க்குறியனவாக்கித் தம் வாழ்நாளைக் கழித்தார் என்று கூறுவது மிகையாது. மரவுரியுடுத்து மலைவன நெற்கொரித்து முதிர்வன சருகு வாயில் வந்தால் வன்பசி தவிர்த்து அனல் வெயில் மழையால் வருந்தி மூலவனலை சிரமளவு எழிப்பியும் நீரினிடைமூழ்கியும் தேகம் நமதல்லவென்று சிற்சுக வபேக்ஷையில் நிற்கும் அன்பரினும் துளக்கமில் நல்தவ முனிவர் கரைகண்டோர் யாவரினும் சீரிய பெருமை நம் ஸ்வாமியினுடையதாகும். திருமாலடியாரல்லாதவர் வீடில்லாதவரே என்று தெளிந்து அப்பெருமானையே, சதா சிந்தித்தும், அச்சிந்தனையின் பயனைப் கேட்டார்களை பிணிக்குந்தகையவாய் கேளாரும் வேட்ப மொழிகள் நவின்று, தனக்குள் அமைத்த தேவபிரானையே புறத்திலும் (பல கோயில்களில்) அமைத்து திவ்ய தேசங்கடோறும் சஞ்சாரம் செய்து இரகஸ்ய கிரந்தகளின் ஸாரத்தை பல்லோர்க்கும் பயன்படும்படி இம்மையும் வீடும் பயக்கும்படி செய்யத் தெள்ளியார் திருநான்மறை வல்லவருள் பெரியோராவர்.

acharya.org

இவர் தம் குணங்களைப் பேசப்புகில் வாய் படைத்த பயன் பெறு வோம். அவை சொலப்புகில் வாயமுதம் பரக்கவேண்டும். சிறு மாமனிசர் என்பதற்கேற்ப மிகவும் தூரிசமான திருமேனியோடு தூய வெள்ளை தரித்து, காண்பார்க்கு எளியாராய், தம்மை அடைந் தோர்க்கு அருள் பொழியுமுகத்தராய் புறந்தூய்மை நீரான் அமை வதுபோல் அகந்தூய்மையும் வாய்மையார். கண்டவர் மனம் வழங் கும்படி கவரும் சக்தி வாய்ந்தவர். அரும் பெரிய வேதாந்த விளக்கின் தத்வங்கள் லேசில் எவர் மனதிலும் பதியும்படி எடுத் துச் சொல்லும் பேராற்றலுள்ளவர். வள்ளலென்னும் பெயர் இவர் மாட்டு வாயானவாய், பேசும் பேச்சில்லாமல் ஈந்துவக்கும் இன்பம் பெற்றவர். அன்றைய அறுபதாவது அப்த பூர்த்தி விழாவில் செய்த தானதருமங்களும் பின்னர்ச் செய்த பெரிய தானங்களும் இன்னும் எவர் உள்ளத்திலும் பதிந்து கிடக்கின்றன. சிந்தையா லும், சொல்லாலும், செய்கையினாலும், ஸ்ரீ பகவத் ராமானுஜஸித் தாந்தத்தை வடநாட்டில் நிலைநாட்டிய பெருமை இவர் ஒருவருக்கே உரியது தென்னாட்டில் இருப்பது இயல்பேயாகும். வடதேசத் தில் பல பாஷைகள் நிறைந்த இடத்தில் அப்பாஷைகளில் வல்லு நராகி சித்தாந்த ஸ்தாபனம்செய்து, பெரிய அரசர்களையும் ஜமீன் தார்களையும், மற்றும் பல்லோரையும் இச்சித்தாந்தத்தைத் தழுவும் படிசெய்யும் வன்மை எவ்வித ஆற்றலும் ஊக்கமும் வேண்டுமென் பதை அளித்தல் இவர் தம் பெருமையின் நற்கூறு அறிந்ததாகும். இவர் தாம் வேங்கடத் துறைவார்க்கு நமவென்பது போலல்லாமல் இந்தியாவின் தலைமை நகரமாகிய பம்பாயில் யாவரும் கண்டு வியக் கும்படியாய், விண்ணினின்று இழிந்ததோ! என்னலாம்படி மணிப் பெட்டகம்போன்ற அரவணைத்துயின்ற ஆழியானுக்கு ஆடகமா டம் அமைத்தது அப்பெருமான்பால் கொண்டுள்ள எல்லையில் பிரே மத்திற்கு ஓர் சாட்சியாகும். இதுவே இவரது ஞாபக சின்னமாக என்றும் விளங்கும் .ஸ்ரீ ராமானுஜ சித்தாநதம் பரவவேண்டுமென் னும் முழுநோக்கத்துடன் இத்தகைய நிலயம் ஒன்றை நிறுவியது, அர்ச்சாவதாரத்தில் பெருமையும், தேங்கின மடுக்கள் போலே என் றும் தாகித்தவர்க்கு பருகும் அமிர்தமாகும். இத்தூய வாழ்க்கை யுடையார் பெருமை கூறப்புகின், அது "துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்திறந்தாரை எண்ணிக் கொண்டற்று" என் பதுவேயாகும்.

acharya.org

ஸ்ரீ பாஷ்ய விஷய ப்ரம நிராஸ:

(முசர்ப்பாக்கம் அக்காரம் திருவேங்கடாசாரியர் எழுதியது)

ஸ்ரீராமாநுஜஸித்தாந்தவைஜயந்தி திருவாடிப்பூர சஞ்சிகையில், பி. ஆர். ஆராவமுதய்யங்கார்ஸ்வாமி எழுதியதாக அடியில் கண்ட விஷயம் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீபாஷ்யத்தில் முதலிலும் முடிவிலும் இரண்டு பாடப்பிழைகள் ஸம்பதிதங்களாய் விட்டன என்று பிராமாணிக பண்டிதர்கள் கொண்டாடும்படியாக ஸ்ரீ அண்ணஸ்வாமி தத்வப்ரதிஷ்டையில் நிரூபித்திருக்கிறார். அதாவது "க்ருத்ஸ்நா ச ஷட்கீ ஸம்ஸ்த இதி ப்ரதிப்ரஸவ ஸம்ஹார:" என்ற விடத்தில்-ஸம்ஹார:. என்கிற பாடம் சரியானதில்லை. ஸஹார: என்கிறபாடம்தான் சரியானது என்றும் ஸ்ரீபாஷ்யத்தின் பழைய தாளகோசங்களைக் கொண்டும் வித்வான்கள் முன்னிலையில் சொந்தமான உபபாதநங்களைக் கொண்டும் நிரூபித்துக் காட்டினதாகவும் அந்த வித்வான்களும் ஒத்துக்கொண்டதாகவும். நிகமாந்ததேசிகன் தத்வடீகையில் ஸஹார: என்ற பாடத்தையே ஆதரித்திருப்பதாகவும்; ஸ்ரீபாஷ்யத்தில் சரமஸூத்ர அவதாரிகையில் "யதிவர ...ஷாயதாம்"—"அநாவ்ருத்தி ஸம்ஹாரஶங்கா இத்யாஹ. என்ற விடத்தில். ஸம்ஹாரவநாஶங்கா என்றுமாறி தப்பாக வந்துவிட்டதாகவும் ஸம்ஹாரஶப்தமும் ஶங்கையும் பர்யாயமானதால் இது தப்புபாடம். ஸம்ஹாரஶங்கா என்றேயிருக்க வேணும், என்றும் காட்டினதாகவும் வெளிவந்தது.

இந்த விஷயத்தில் அனைவரும் பிரமிக்காமல் தெளிவு பெறுவதற்காக நிரூபணம் பண்ணவேண்டியதாக வந்தது. "ப்ரதிப்ரஸவஸம்ஹார:" என்கிற விஷயத்தில் ஸ்ரீ ஶ்ருதப்ரகாஶிகையின் உபபாதனத்தை நன்றாக யோசித்தால். ஸம்ஹார: என்றபாடமே ஶ்ருதப்ரகாஶிகாசார்யருக்கு அபிமதம் என்று தோற்றுகிறது.

"ப்ரதிப்ரஸவோऽபவாதாபவாத: ஸவிஷயோ ஜ்ஞாந ஶிக்ஷாதி ப்ரயோகேஷு "ஜ்ஞாऽவிதார்த²ஸ்ய கரணே" இதி ஸூத்ரே விஹிதாயாம் ஷஷ்ட்யாம் ... ஸாவகா

acharya.org

ஶப்³த³ம், ஸஹித்வா வ்யுத்பத்திரிதி ஹி தஸ்ய வாக்யஸ்யார்த²꞉ யத்³யபி ஜ்ஞாநஸ்ய ஶப்³த³ஜந்ய—த³யாபி ஸஹித்வ இதி ஷஷ்டீ ந ஶப்³தோ³ச்சாரணவிஹிதா; ஸஹித்வோ ஜாநீத இதி தி³ஶஸ்தவ ஶாஸ்த்ரோபாஹ்யக்வாக்; யாதோ³விக்ரஹோத்தஸ்து வ்யுத்பத்தி த³க்ஷிண ணாயக்வாது; ந ஹி த³ஸ்வம் ஶப்³தோ³ச்சாரணவிஹிதமேவ விஶ்ருதி கதோ³ நாத்³யதிவ்யஸவவ்யாவ்ஸ்ரிதி நிஷேத⁴ஸ்ய ப்ராவ காஶக்வ ” இந்த உபபாதநப்பிரகாரத்தால் “ ஸம்ஹவாக” என்கிற பாடமே அங்கீகரித்ததாக ஏற்படுகிறது. எப்படியெனில் ஸஹ்ர வாக என்றுபாடமானல். வ்யதிவ்யஸவம் இருப்பதால் என்று அர்த்தமாகும். இந்தவாதிக்கம் ஸித்தாந்த கௌமுதி ஸமாஸ விதிகள் படித்தவர்கள் எல்லாருக்கும் இருப்பதாக தெரிந்த விஷயம். அவர்களுக்கு இருப்பதினுல் என்று சொல்லவேண்டியதில்லை. இருந்தாலும் பிரகிருதஸ்தலத்தில் அந்த வாதிக்கம் வ்யவதிக்குமா, வ்யவதிக்காதா, என்கிற ஸந்தேஹத்தைப் போக்க வ்யக்தஸ்தலத்தில் ஸம்பவிக்கும் என்று உபபாதநம் பண்ணு வதுதான் ப்ரக்ருத ஶேஷீ. ஆகையால் சாஸ்திரத்தில் பிரதிப்ர ஸவ மிருந்தாலும் பிரகிருதத்தில் ஸம்பவிக்கிறபடியால் என்று சொன்னுல் தான் உபபாதநம் பண்ணிக்காண்பிப்பது வ்யாக்யா தாக்களுக்கு பணியாக விருக்கும். ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் உபபாதநம் பண்ணிக்காண்பித்ததினுல் ‘ஸம்ஹவாக’ என்ற பாடமே அந்த வ்யாக்யாதாவுக்கு திருவுள்ளமாகத் தெரிகிறது. ஸஹ்ராவாக என்றுல் ஶாஸ்திரத்தில் இருப்பதனுல் என்றர்த்த மாகும். அது வ்யாகரணஶாஸ்த்ரம் படித்தவர்களுக்குத் தெரியு மாதலால் அது சொல்லவேண்டிய விஷயமாக விராது. சில விடத் தில் சாஸ்திரத்திலிருப்பதால் என்று சொன்னுலும் அது பிர கிருதத்தில் ஸம்பவிக்கிறபடியால் என்று ஶேஷபூரணம் பண்ணியே தீரவேண்டி வரும். ஆகையால் வ்யதிவ்யஸவ ஸம்ஹவாக. என்றபாடத்தில் ஶாஸ்திரத்தில் ஏற்பட்ட வ்யதிவ்ய ஸவம் வ்யக்தத்தில் ஸம்பவிக்கிறபடியால் என்றர்த்தமாகிறபடி யால் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் வ்யக்தத்தில் ஸம்பவத்தை உபபாதநம் பண்ணிக் காண்பித்தபடியால் அவருக்கு ஸம்ஹவாக. என்ற பாடமே திருவுள்ளத்திலிருப்பதாகத் தோற்றுகிறது.

acharya.org

அவர் ஸஹோவாச என்றாவது ஸம்ஹவாச என்றாவது வ்யதீகம் எடுக்காமலிருந்தாலும், உபபாதனப் பிரகாரத்தில் ஸம்ஹவாச என்ற பாடமே தத்ஸித்த மென்னக்குறையில்லை, தாளகோசங்கள் அனேகங்களில் அடியேன் ஸ்வாமி சன்னிதியில் காலக்ஷேபம் பண்ணினது முதல் பார்த்ததில் ஸம்ஹவாச என்ற பாடமே காண்கிறது. அச்சிட்ட கோசங்களிலும் அப்படியே காணப்படுகிறது. அதற்கு உபபாதநமும் பண்ணி அந்த பாடமே ஸாது என்று காண்பித்தாய் விட்டது. இனி ஏதாவது கோசத்தில் ஸஹோவாச என்ற பாடமிருந்தாலும் தஸ்மை ப்ரோவாச தஸ்மை ஸம்ஹவாச என்று சேஷ பூரணம் பண்ணி அர்த்தம் நிர்வஹிக்க வேண்டியதா யிருப்பதால் அதைக் காட்டிலும் ஸம்ஹவாச என்ற பாடமே ஸாத்யவாதலால் இதுவே ஸர்வ ஸம்மதம் என்று தெளியக்கடவது. தத்வடீகையில் கூட ஸ்ருதப்ரகாசிகாகாரர் இந்த பாடத்தையே ஆதரித்ததாகவே கொள்ளலாம். எங்ஙனே யென்னில் "ப்ரோவாசேதி—ப்ரதிப்ரஸ்ரோஷ்யவாத நிராஸ꞉ தஸ்மை ஸஹோவாச." என்றிருக்கிறது. இங்கு செய்யவேண்டிய உபபாதநம் முன்னமே செய்யப்பட்டிருக்கிறது. "கஸ்மிந் த்ருஷ்டே இத்யேந ஸாமாந்ய꞉ ப்ரதிபாதிதம் ஸோ ஜ்ஞாதவ்ய இதி ஸம்வாதே. 'ஜ்ஞாத்வா தமேவ' இத்யாதிஷு ஸாமாந்யம் ஸாக்ஷாத்காரோ பாய꞉ தஸ்மாத் ப்ரோவாசேதி ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வ ப்ரபஞ்சநம் நீத உபாதானம்—என்றிருக்கிறது. முன்னிலிருக்கும் இந்த உபபாதநத்தால்—பின்னால்—தஸ்மை ஸஹோவாச என்றிருந்தாலும், ப்ரதிப்ரஸவஸ்மாச்ச ஸஹோவாச தஸ்மை ப்ரோவாச ஸம்ஹவாச என்றும் சேஷபூரணம் பண்ணி அர்த்தம் கொள்ளத் தட்டில்லை. ஆகையால் தத்வடீகை பங்க்தியும் ஸஹோவாச என்ற பாடத்திற்கு ஸாதகமாகவாகாது. ஆதலால் ஸம்ஹவாச என்ற பாடமே ஸாத்ய; ஸஹோவாச என்றபாடம் சேஷபூரணம் பண்ணி அர்த்தம் கொள்ள வேண்டியதாயிருப்பதால் அஸாத்ய வென்றே தோற்றுகிறது.

இனி ப்ரஸ்தாவ்ருத்தி ஸம்ஹவாமஜ்ஞா, ப்ரஸ்தாவ்ருத்தி ஸம் ஹவந்தாமஜ்ஞா என்ற விரண்டு பாடங்களில் எதுஸாத்ய வென்

ருல், ப்ராசீந தாளகோசங்களிலும் அச்சிட்ட கோசங்களிலும் நிர்வண நிர்வாஹகர்களின் கண்ணுஸ ப்ராசீந பாடங்களிலும் ஸம்ஸவாஸஜ்ஞா என்றே யிருப்பதால் இதுவே சரியான பாடம். அநிர்வாஹகர்களின் அவதார பாடங்களைக்கண்டு இது தப்பு என்று சொல்லுவதா யிருந்தால் ஒவ்வோரிடங்களிலும் அளவில்லாமல் தப்புகளைக்காட்டி புஸ்தகங்களைப் பெருக்கலாம் ஆனல் அது நிர்வாஹகர்களின் பணியாகாது. எது நிர்வண நிர்வாஹகர்களின் பணியென்றால்? அதுகேட்க. ஸ்ரீபாஷ்யம். த்விதீயாத்யாயம் த்விதீயபாதம் ரசநாநுபபத்த்யதிகரணத்தில் "அந்யத்ராபாவாச்ச ந த்ருணாதிவத்" என்கிற ஸூத்ர ஸ்ரீபாஷ்ய ஸ்ருதப்ரகாசிகைகளிலும் வேதாந்தஸாரதீபங்களிலும் அச்சிட்ட எல்லா கோசங்களிலும் தாள கோசங்கள் அநேகங்களிலும் அடியில் காண்பிக்கப்பட்ட ரீதியில் பாடங்கள் காண்கின்றன. "யதி ஹி த்ருணோதகாதிகமநடுஹாத்யவயாதம் ப்ரஹீணம் வா க்ஷீராகாரேண பரிணமேத" என்று ஸ்ரீபாஷ்யம் "அநடுஹாத்யவயாதமிதி"—என்று ஸ்ருதப்ரகாசிகையில் ஸ்ரீபாஷ்யப்ரதீகம் "அத்ருஷ்டஸ்யாப்யநடுஹாத்யவயாத ப்ரஹீண த்ருணதாத்யோபமோக்ஷேதயா என்று ஸ்ருதப்ரகாசிகாஸூக்தி:.

"அநடுஹாதிஷ்வதப்ருநாத:" என்று வேதாந்த ஸார ஸ்ரீஸூக்தி: "அநடுஹாத்யவயாதஸ்ய ப்ரஹீணஸ்யவா" என்று தீபவாக்யம் இந்த ரீதியில் தெலுங்கு லிபியில் முதலில் அச்சிடப்பட்ட ஸஜ்ஜரபாஷ்யம் அதின் வ்யாக்யாநங்களிலும் "அநடுஹாத்யவ யாதம் என்றே காணப்படுகிறது. இவ்விடத்தில் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. "வஸுஸ்ரம்ஸுத்வம்ஸ்வநடுஹாம் த:" ||8-2-72|| என்கிற வ்யாகரண ஸூத்திரத்தால். "அநடுஹ்" என்கிற ஹகாராந்த ப்ராதிபதிகத்திற்கு பதாந்தத்தில் தகாரம் விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த விதி. 'அநடுஹ்.' ப்ராதிபதிகத்திற்கு ஸமாஸத்திலும் ஸுபாதிப்ரத்யயங்கள் வந்து லோபித்து பதாந்தத்வத்தால் "ஸ்வாதிஷ்வஸர்வநாமஸ்தாநே" என்பதனால் பதஸம்ஜ்ஞை வந்து. தகாரம வரவேண்டியதாயிற்று. அப்படியிருக்க "அநடுஹாத்யவ

acharya.org

யாதம்-என்று ஸ்ரீபாஷ்ய ஸூத்ரகல்பகாஶிகாதிவ ஸாரங்களில் ஸாதித்திருப்பன வ்யாகரணவிருத்த மாகவே ஏற்படுகிறது. இதைப் பற்றி அடியேனுக்கு ஆசார்யரான திருப்பதியில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமான் திருமலை அனந்தாண் பிள்ளை. புரிசை ஸ்ரீரங்காசாரியர் ஸ்வாமி வெகு நாளாக யோசித்து யோசித்து ஏற்படாமல் அடியேன் அந்த ஸ்வாமி சன்னிதியில் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் பண்ணும் போதும் வ்யஸநமாய் அதற்குத்தகுந்த பரிஹாரம் ஏற்படாமல் யோசிக்கிற காலத்தில் எம்பெருமான் கிருபையினால் ஒரு ஸ்ரீபாஷ்ய தாளகோஶம் கிடைக்க அதுவும் ஒரு வித்வானால் முன்னூறு வருஷங்களுக்கு முன்னால் தப்பில்லாமல் எழுதப்பட்டதாயிருக்க அதில் வ்யாக்யாதஸ்தலத்தில் பார்க்க "ஊநவாஹாநி வயாதம்" என்றிருந்தபடியால் அடியேனுக்கு இந்த பாடமே சரியானதென்று அருளிச்செய்தார். சிலர் ஊநவாஹா நிவயாதம் என்கிற பாடம் தவிர வேறு பாடம் காணாமையால் ஸ்ரீபாஷ்யகார ஸ்ரீ ஸூக்தியை நாம்வேறு விதமாகத் திருத்தக்கூடாதென்கிற பக்த்யதிசயத்தால் இந்த ஸம்ப்ரயோகத்தை யொருவிதமாக ஸமர்த்தநம் பண்ணி எழுதியுமிருக்கிறார்கள். அது அவ்வளவு ஹ்ருத்யகரமாக வில்லாததால் ஸ்ரீ ஸ்வாமிக்குத்தகுந்த ஸ்ரீ கோஶமும் கிடைத்தபடியால் ஸ்ரீஸ்வாமி திருத்தி யருளினார். இப்படி யோசித்துச் செய்யவேண்டிய விஷயங்களிருக்க யோசிக்காமலே ஸம்ஹவாஸ என்கிற பாடத்தை திருத்தி ஸஹவாஸ என்ற பாடத்தை ஸாது வென்று சொல்லுவது அடியேனுக்குச் சரியாக தோற்றவில்லை.

வைஜயந்தீ க்ராஹக மஹாஶயர்கள் சன்னிதியில் ஓர் விண்ணப்பம்

நமது வைஜயந்தி, கார்த்திகையில் கார்த்திகை ஆரம்பித்து நாளது புரட்டாசித் திருவோணத்தோடு 11-ஸஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன. அடுத்த அற்பிசியில் திருமூலத்தோடு 12-சஞ்சிகைகளும் வெளிவந்து அப்த பூர்த்தியாய் இரண்டாவது வருஷம் ஆரம்பமாகும். ஆதலின் இந்த வருஷத்துச் சந்தாத் தொகை ரூ. 1-12-0 இதுவரை அனுப்பாமலிருக்குமவர்களுக்கு வி. பி. மூலம் ஸஞ்சிகை அனுப்பினால் வீண் செலவு அதிகப்படுமாதலால் அடியேனிடத்தில் க்ருபை பண்ணி மணியார்டர் செய்தருள வேண்டுகிறேன்.

—பத்திராதிபர்.

acharya.org

வர்த்தமானங்கள்

பனஸவாடியில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் தாது ஞு ப்ரஹ்மோத்ஸவம்,

1936ஞு அக்டோபர் மீ 15தேதி முதல் 25ம் தேதி வரையில் நடைபெறும். 16வ த்வஜாரோஹணமும் 24வ தீர்த்தவாரியும் நடைபெறும். ஒவ்வொருநாளும இரண்டு வேளையும் ஸ்வாமி புறப்பாடு வீதிகளில் நடக்கும். தென்னிந்தியாவிலிருந்து வேத பாராயணக்காரர்களும் திவ்யப்ரபந்தம் ஸேவிப்பவர்களும் வந்து பாராயணம் ஸ்வாமியின் முன்னும் பின்னும் நடத்துவார்கள். தென்னிந்தியாவிலிருந்து பாண்டு வாத்தியக்காரர்களும் நாதஸ்வரக்காரர்களும் வந்து உத்ஸவ காலத்தில் வாசிப்பார்கள். வாண வேடிக்கையும் நடக்கும். வட இந்தியாவில் இப்படிப்பட்ட உத்ஸவம் வேறு எங்கும் ஸேவிக்க முடியாது. பக்த ஜனங்கள் எல்லோரும் இஷ்ட மித்ரர்களோடு வந்து உத்ஸவத்தில் கலந்து கொண்டு ஆனந்திக்கக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

உத்ஸவ விவரம்

அக்டோபர் மீ 14வ புதன்கிழமை மிருத்ஸங்க்ரஹணம், அங்குராரோபணம். 15வ வியாழக்கிழமை ஸேனைமுதலியார் வீதிசோதநோத்ஸவம். 16வ வெள்ளிக்கிழமை காலையில் துவஜாரோஹணம், வெள்ளிச்சப்பரம் பேரீதாடனம். ராத்திரி ஹம்ஸ் வாஹனத்தில் புறப்பாடு. 17வ சனிக்கிழமை காலை பல்லக்கு, ராத்திரி சேஷ வாஹனம். 18வ ஞாயிற்றுக்கிழமை காலை பல்லக்கு, ராத்திரி கருட வாஹனம். 19வ திங்கட்கிழமை காலை பல்லக்கு, ராத்திரி அநுமந்தவாஹனம. 20வ செவ்வாய்க்கிழமை காலை பல்லக்கு மோஹினிவேஷம், ராத்திரி ஸிம்மவாஹனம். 21வ புதன்கிழமை காலை தோளுக்கினியான் சூர்ணாபிஷேகம். ராத்திரி யாளிவாஹனம். 22வ வியாழக்கிழமை காலை பல்லக்கு, ராத்திரி யானை வாஹனம். சௌபாடியில் வாணவேடிக்கை. 23வ வெள்ளிக்கிழமை காலை பல்லக்கு, ராத்திரி குதிரைவாஹனம். 24வ சனிக்கிழவை காலை பல்லக்கில் சௌபாடிக்கு எழுந்தருளி, தீர்த்தம் ஸாதிப்பது, ராத்திரி ஆனந்த விமானம். 25வ ஞாயிற்றுக்கிழமை காலை புஷ்ப யாகம், ராத்திரி புஷ்பபல்லக்கு.

இப்படிக்கு,

தேவஸ்தானம்—கார்யகர்த்தா.

acharya.org

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶந பத்ரிகை.

தொகுதி 1.	பத்ராதிபர் வடகரை இராமாநுஜாசாரியார்	பகுதி 12.

ஸ்ரீரஸ்து

ஶ்ரிய:காந்தாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
ய: ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||
வேதவேதாந்த வேதாம்ஶ ஸந்மார்க்கப்ரவர்த்திநீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

அற்பசியில் திருமூலம்

[பத்ராதிபர்]

ஸ்ரீஶைலேஶ தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்

மூலம் என்கிற நக்ஷத்திரமானது ஸமஸ்தமான நன்மைகளுக்கும் மூலமாக (காரணமாக) இருப்பது பற்றியே மூலம் என்று வழங்கப்படுகிறது.

மேலும் ஆண்மூலம் அரசாளும் என்ற பழமொழி அந்வர்த்தமாகும்படி மணவாளமாமுனிகள் அற்பிசியில் திருமூலத்திலவதரித்து ஸத்யோந லோகாந் ஜயதி என்கிறபடி தம்முடைய ஹிதமான அமுத மொழிகளால் இவ்வுலகை வாழ்வித்தருளினர். இவருடைய அவதாரத்திற்கு யோக்கியமான அத்திரு நக்ஷத்திரத்தைப்பற்றி ஒரு மஹாநுபாவர் யத்ரைவ ஶேஷ்யஜ ஶாஸ்த்ர

acharya.org

வதார ஹேதும் காரணாவயவம் யதீந்த்ர: காரணேனைகவஸி ஷ்யா:—ஸூஸ்ரீ ஜஸத்யோஹணிதஸ்ய ஹேதோஷி ஸஞ்ஜா ஹேதும் தஜேவ ஜமஜஹ்ருத்ஜ்யைகஹேதும் | எந்த அற்பிசியில் திருமூலத் திருநாளானது கருணையங் கடலான காந்தோபயந்த்ரு (மணவாளமா) முநிகளின் அவதாரத்திற்குக் காரணமாயிற்றோ? அந்தத் திருமூலம் அஸத்துக்களில் அக்ரகண்யனை அடியேனுடைய ஸத்தைக்கு மூலமாகவும் இருள் தரு மாஞாலத்திலுள்ள ஆத்மாக்களின் அப்யுதயத்திற்கு மூலமாகவும் ஆயிற்று என்று அருளிச் செய்தமை போற்றற்குரியது. இவ்வளவு பெருமை வாய்ந்த இவ்வாசிரியரின் பெருமையைப்பற்றி மனஸாலும் நினைக்க வரிதாயிருக்கப் பேசவும் எழுதவும் துணிவது ஸாஹஸமே யாகும். பாற்கடலின் பாலை முற்றவும் பருக நினைத்ததொரு பூனையைப்போல் ஆசை பற்றி வரையலுற்றேன்.

இம்மஹாநுபாவர் "செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடு நாள், சீருல காரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடு நாள், மந்தமதிப் புவி மானிடர் தங்களை வானி லுயர்த்திடுநாள், மாசறு ஞானியர் சேரெதிராசர்தம் வாழ்வு முளைத்திடுநாள், கந்தமலர்ப் பொழில் சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடு நாள், காரமர் மேனி யரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடுநாள், அந்த மில்சீர் மணவாளமுநிப்பரனவதாரம் செய்திடு நாள், அழகு திகழ்ந்திடுமைப்பிசியில் திருமூலமதெனு நாளே" என்று கொண்டாடத் தகுந்த, கலியுக வருஷம் 4471 சென்ற ஶாலிவாஹன ஶகாப்தம் 1292-வதான ஸாதாரண வருஷம் அற்பிசி மாதம் 26-வது தினம் வியாழக்கிழமை ஶுக்ல பக்ஷம் மூல நக்ஷத்திரத்தோடு கூடிய சதுர்த்தீ திதியில் சொட்டைக் குலத்தில் கோமட மென்கிற குடியில் திகழக் கிடந்தான் திருநாவீறுடைய பிரான் தாதரண்ணரரையர் குமாரராக உடையவருடைய அபராவதாரராய் உபய விபூதியும் கொந்தளிக்கும்படி அவதரித்தருளினர். அவதார ஸ்லோக மிருக்கும்படி—

வாயோர்ஹாவம் மதாயாம் கலியுகஸமாஸ்ரிதி ஸ்ரீஜராயே ஶகாப்தே வர்ஷே ஸாதாரணேऽக்கே ஸுதிமதந்தே வாஸரே தீர ஸம்வேத்ய—வாரேஜைவே வதந்யஸ்ரீம் ஸஜநிவதியேள ஶுக்லபக்ஷே ஸஹ்காரா ஸ்ராஜந்தேமா வ்ருதாரே யதிவதிர வரோ ரஸ்ஜாமாதா நாமா |

acharya.org

இவ்வாசார்ய சிகாமணி இவ்வுலகிலவதரித்தவன்றே கலி, வானோமறிகடலோ கானோ ஒருங்கிற்றுக் கண்டிலம்....

இவ்வாறு உலகை வாழ்விக்க அவதரித்தருளின மாமுனிகளுக்கு தாதரண்ணரும் பத்து நாளும் கடந்த விரண்டா நாள் ஜாத கருமம் செய்து திருவிலச் சினையும் ப்ரஸாதித்து, இவருடைய திவ்யதேஜஸ்ஸைப் பார்த்து இதொரு அவதார விசேஷமென்று கருதி பணமாடரவணைப் பற்பல காலமும் பள்ளி கொள் மணவாளரான அழகிய மணவாளனுடைய திருநாமத்தை இவர்க்குக் திருநாமமாகச் சாற்றி யருளினர்.

இவ்வாறவதரித்த மாமுனிகள், உசித காலங்களில் அன்ன ப்ராஶந சௌளோபநயநாதி ஸம்ஸகாரங்களை ஶாஸ்திர விதிப்படி செய்யப்பெற்று வேதாதி ஸம்ஸ்க்ருத ஶாஸ்த்ரங்களை அதிகரித்து திருத்தகப்பனாரான தாதரண்ணரிடம் தமிழ் வேதங்களாகிற திவ்ய ப்ரபந்தங்களையும் ரஹஸ்ய க்ரந்தங்களையும் அதிகரித்து பதினாறுவது திரு நக்ஷத்திரத்தில் ஷோடஶ கலைகளோடு கூடின பூர்ண சந்தரனைப்போலே ஸகல கலா ஸம்பூர்ணராய் விளங்கா நின்றார்.

அப்பால் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருத்தகப்பனாரால் திருக்கல்யாணம் செய்விக்கப்பெற்று மாதுலகுலமான சிக்கில் கடாரத்திற்சில காலம் எழுந்தருளியிருந்தார்.

அக் காலத்தில் ஆழ்வார் திரு நகரியில் தர்ஶந ப்ரவர்த்தகராயெழுநதருளியிருக்கும் திருமலையாழ்வார், பின்னல் தர்ஶந ப்ரவர்த்தகராவார் யாரோ? என்று ஆலோசியாநின்றுகொண்டு தொண்டர்க்கமுதான திருவாய் மொழியின் திவ்யார்த்தங்களை நிலத் தேவர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குப் பரமபோக்யங்களாக அருளிச் செய்யாநின்றுகொண்டு இதர ஶாஸ்த்ரங்களை அநாதரித்து திருவாய் மொழியின் ஶப்தரஸம் அர்த்தரஸம் பா(ஸா)வரஸம் முதலானவைகளை ஸர்வதா அநுபவியா நின்று கொண்டிருக்கையாலே திருவாய் மொழிப்பிள்ளை என்று எல்லாராலும் போற்றும் பெருமையையுடையவராய் ஆழ்வார் திருவடிகளையே தஞ்சமாகக் கருதி ஆழ்வார் திருவடிகளில் ஸர்வவித கைங்கர்யங்களையும் பண்ணாநின்றுகொண்டெழுந்தருளியிருந்தார்.

அப்போது நாயனாரும் மாதுல குலமான சிக்கில் கிடாரத்தில் நின்றும் புறப்பட்டுத் தம்முடைய ஜன்ம பூமியான ஆழ்வார்திரு

acharya.org

நகரிக்கெழுந்தருளி பொருநற்சங்கணிதுறையிற் சங்கங்கள் சேருமாப்போலே ஶங்க வண்ண நம்பியான ஆதிசேஷனுடைய அவதாரமாகையாலே ஶுத்தஸ்வபாவரான தாமும் திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளை யாஶ்ரயித்து விலக்ஷண ஸம்பந்தத்தை யுடையராய் ஸாங்கோபாங்கங்களோடு த்ரவிட வேதமான திவ்யப்ரபந்தங்களின் திவ்யார்த்த விஶேஷங்களை திருவாய்மொழிப்பிள்ளையின் திருவருளால் கையிலங்கு நெல்லிக்கனிபோலறியபெற்று அன்னையு மத்தனுமாசாரியனுமனைத் துறவும், மன்னிய பேரு முபாயமும் தெய்வமு மற்றுமேல்லாம், என்னை யளித்த திருவாய் மோழிப்பிள்ளை என்று ஶேஷித்வ ஶரண்யத்வ ப்ராப்யத்வங்கள் மூன்றையும் திருவாய் மொழிப்பிள்ளை விஷயத்திலேயே அநுஸந்தித்துக் கொண்டெழுந்தருளி யிருந்தார்....

இவ்வாறு தம்மிடத்தில் பக்தி பண்ணுநின்ற மாமுனிகளை பிள்ளை மிகவு முவந்தருளி அந்த உவப்பின் மிகுதியால் உமக்கு உடையவர் திருவடிகளே உபாயோபேயமென்று அத்யவஸித்திருமென்று நியமித்தருள அவ்வாறே மாமுனிகளும் தமது ஆசார்யரான திருவாய் மொழிப்பிள்ளை தமக்கு ப்ராப்யப்ராபகமாகக் காட்டிக் கொடுத்த உடையவர் திருவடிகளில் அத்யந்த ப்ராவண்யத்தையுடையவராய் அப்ராவண்யத்தின திஶயத்தாலே யதிராஜ விம்ஶதியென்கிற உடையவர் விஷயமான ஸ்தோத்ரத்தை யருளிச் செய்து அத்தாலே வல்லார்கள் வாழ்த்தும் குருகேசர் தம்மை மனத்துவைத்துச், சோல்லார வாழ்த்தும் மிணவாளமாமுனித் தோண்டர் குழாம், எல்லாம் தழைக்க வெதிராஜ விம்ஶதி யன்றளித்தோன், புல்லாரவிந்தத் திருத்தாளிணையும் போற்று நெஞ்சே என்று பின் புள்ளாருமீடுபட்டு யதீந்த்ர ப்ரவணர் என்று போற்றும் படியானார். பிள்ளையும் யதிராஜவிம்ஶதியைக் கேட்டு மிகவுமுகந்தருளி திருப்புளிபாரடியிலே தாம் கண்ட உடையவரை மாமுனிகளுக்குத் திருவாராதனமாக விரங்கியருளினார்.

இவ்வாறு திருவாய் மொழிப்பிள்ளை தமக்குத் திருவாராதனமாக வநுக்ரஹித்த உடையவரையும் ஆழ்வாரையும் ஆராதியா நின்று கொண்டு திருவாய் மொழிப்பிள்ளை திருவுள்ளத்தை மிகவு முகப்பித்து, ஈடு முப்பத்தாறாயிரம் முதலான அருளிச்

செயல் வ்யாக்யானங்களை காலக்ஷேபம் பண்ணிக்கொண்டெழுந் தருளியிருந்தார்.

அக்காலத்தில் மாமுனிகளுக்கு ஒரு குமாரரவதரித்தார். அவர்க்கு, பிள்ளை நியமனப்படி இராமாநுஜய்யன் என்று திரு நாமம் சாத்தியருளினார்.

இவ்வாறு வாழ்ந்தருளும காலத்தில் ஒரு திருவாதிரை யன்று திருவாய் மொழிப்பிள்ளை "இன்றோ? எதிராஜரிவ்வுலகில் தோன்றிய நாள், இன்றோ கலியிருள் நீங்கும் நாள், என்று பல தடவை இத்தையேசொல்லி ஈடுபட்டு மேலொன்றும் சொல்லாமல் மோஹித்து நிற்க நாயனாரும இன்றோதான் வேதியர்கள் வாழ விறை மகழோன் தான்வாழ வாதியர்கள் வாழ்வடங்கு நாள் என்று அப்பாட்டை பூர்த்தி செய்தருள பிள்ளையும் இத்தைக்கேட்டருளி மிகவும் உகந்தருளினார்.

இவ்வாறு ஆசார்ய ஶிஷ்யக்ரமம் நன்றாக நடைபெறா நிற்க, பிள்ளையும் நிதய விபூதியிலே நித்ய கைங்கர்ய நிரதராய் வாழக் கருதி அதற்கு இடையூறான ப்ரக்ருதி ஸம்பந்தத்தை யொழிக்க தம்முடைய ஆசார்யரான உலகாரியன் திருவடிகளை ப்ரார்த்தித் துக் கொண்டிரா நிற்க, திருமேனியிலே மிகவும் தளர்வு ஏற்பட்டு மிகவும் ஆர்த்தியோடே எழுந்தருளியிருக்க, இவ்வாறு வருந்து வதற் கடியென்? என்று நாயனார் முதலான முதலிகள் கேட்க பிள்ளையும் காலம் கலிகாலமாயிருக்கிறதே உலகில் ஆழ்வார்களரு ளிச்செயல்களில் ருசி விஶ்வாஸங்களுடையராய்ப் ப்ரவசநம் பண் ணிக்கொண்டு போருவாரார்? என்று க்லேஶப்படா நிற்கின்றேன் என்ன, அப்போது நாயனார் அப்படியே அடியேன் செய்கிறேன் என்று விண்ணப்பிக்க பிள்ளையும் பரம ப்ரீதராய் நாயனாருக்கு ஸம்ஸ்க்ருத ஶாஸ்த்ரத்தி லிருக்கும் ப்ராவண்யத்தைப் பார்த்துச் சங்கித்து நாயனாரைக் கடாக்ஷித்து ஸம்ஸ்க்ருத ஶாஸ்த்ரத்தில் பலகால் கண்வையாதே எம்பெருமானார்க்கு உகப்பாக ஒருகால் ஸ்ரீ பாஷ்யத்தைக் காலக்ஷேபம் செய்து நமக்கும் எம்பெருமானார்க் கும் இஷ்டமாக ஆழ்வார்களருளிச் செயலையே எப்போதும் கால க்ஷேபம்செய்து கொண்டு பூர்வாசார்யர்களைப் போலே நம்பெரு மாளுக்கு மங்களாஶாஸநம் செய்து கொண்டு கோயிலிலே நிதய வாஸம் பண்ணவேண்டும் என்று நியமித்தருளி மற்ற முதலிகளை நாயனார் கையில் காட்டிக்கொடுத்து முதலிகளைப் பார்த்து நாய

acharya.org

ஞரை அவதார விஶேஷமென்று நினைத்து நம்மைப்போலே ஆத ரித்துப் போருங்கோள் என்று நியமித்தருளி ஸ்வாசார்யரான பிள்ளை லோகாசார்யர் திருவடிகளை த்யாநியா நின்றுகொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினார்.

நாயனாரும் பிள்ளையை ப்ரஹ்ம மேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளி படுத்தி அவர்பெருமைக்குத் தக்கபடி திருவத்யயநம் நடத்தி யருளினார்.

அப்பால் நாயனாரும் பிள்ளை நியமநப்படி ஆழ்வார்களருளிச் செயலைக் காலக்ஷேபம பண்ணிக்கொண்டு ஆழ்வார் திருநகரியிலே சிலகால மெழுந்தருளியிருக்கச்செய்தே அழகிய வரதர் (வாநமா மலை ராமாநுஜ ஜீயர்) முதலானவர்கள் மாமுனிகளின் வைபவத் தைக்கண்டு அவர் திருவடிகளில் ஆஶ்ரயித்தார்கள். அவர்களில் வாநமாமலை ராமாநுஜ ஜீயர் மஹா விரக்தராய் ஸர்வ ஸங்க பரித் யாக பூர்வகம் ஆஶ்ரம ஸ்வீகாரம் செய்துகொண்டு மாமுனிகளுக்கு "நிழலுமடி தாறுமானோம்" என்னும்படி பாதரேகாமயராய் நித்ய ஸேவை பண்ணிக்கொண்டெழுந்தருளி யிருந்தார்.

இப்படி அந்தரங்கரானவர்களோடு எழுந்தருளி யிருக்கும் மணவாள மாமுனிகள். நம்பெருமாளை மங்களாஶாஸநம் பண்ணிக் கொண்டு யாவத் காலம் கோயிலிலே யிருக்கவன்றோ நமக்கு ப்ராப்தம் என்றறுதியிட்டு அப்போதே ஆழ்வார் திருமுன்பே சென்று திருவரங்கம திருப்பதியிலே நம்பெருமாளை ஸேவிக்க விடை கொள்ளுகிறேன் என்று விண்ணப்பிக்க, அப்படியே ஆழ் வாரும் விடை கொடுத்தருள, வாநமாமலை ராமாநுஜ ஜீயர் முத லான முதலிகளோடே புறப்பட்டு நடுவே வில்லிபுத்தூருறையும் வடபெருங் கோயிலுடையானையும் பெரியாழ்வாரையும் ஆண் டாளையும் திருவடிதொழுது அங்கு நின்றும் புறப்பட்டு திருமா லிருஞ் சோலை நின்றான் கழலிணை தொழுது முடிச்சோதியிற் படியே கிரீடாதி நூபுராந்தமாக முற்று மநுபவித்துத் தீர்த்த ப்ர சாதங்கள் ப்ரஸாதிக்கப்பெற்று விடைகொண்டு அதித்வரை யோடே கோயிலேற வெழுந்தருளி கங்கையிற் புனிதமாய் காவிரி யில் நீராடி, கேஶவாதி பன்னிரண்டு திருநாமங்களையும சாத்திக் கொண்டு, திருவரங்கப் பெருநகரைத் தெண்டன் ஸமர்ப்பித்து நிற்க, அவ்வளவில் அணியரங்கன் திருமுற்றத்தடியார்களனை வரும் வந்தெதிர்கொண் டெழுந்தருள்வித்துக் கொண்டு அக்காலத்

acharya.org

தில் கோயிலுக்கதிபதியா யிருக்கும் பட்டர் திருமாளிகைக் கெழுந்தருள பட்டரும் மாமுநிகளை அப்யுத்தாந ப்ரணாம புரஸ்ஸரமாக வுபசரித்து ஆஸநத்திலே எழுந்தருளச்செய்து தேவரீரை ஸேவிக்கும்படியான பாக்யம் பெற்றோம் என்று மிகவும் ப்ரீதராய் திருவாய்மொழியில் ஒரு பாட்டை உபந்யஸிக்கும்படி வேண்டிக்கொள்ள அப்படியே மாமுனிகளும் ஈட்டில்படியே ஒரு பாட்டையுபந்யஸித்தருள திருமாலே தந்த பெருமாளாகிற பட்டரும் போரவித்தராய்மாமுநிகளுக்குமுப்பத்தாறாயிரப்பெருக்கர் என்று திருநாமம் சாத்தி மிகவும்கொண்டாடி மாமுநிகளை ஆதரவுடன் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போக மாமுனிகளும் யதாக்ரமமாக ‘உடையவர் ஆழ்வார் ஸ்ரீரங்க நாயகியார் முதலானவர்களைத் திருவடிதொழுது ப்ரதக்ஷிணமாக உள்ளேசென்று கருவூலம் முதலானவைகளை ஸேவித்து ப்ரணவாகரமான விமாநத்தையும் ஸேனை முதலியாரையும் தெண்டன் ஸமர்ப்பித்து அழகிய மணவாளன் திருமண்டபத்திலே எழுந்தருளித் தெண்டன் சமர்ப்பித்து, பெரிய திருவடியையும் த்வார பாலகர்களையும ஸேவித்து அவர்களை அநுமதிகொண்டு உள்ளே சென்று மணத்தூணருகே நின்று அரங்கமா கோயில்கொண்ட கரும்பினைக் கண்ணாரக் கண்டு வாயாரப்புகழ்ந்து அமலனாதி பிரானிற்படியே பாதாதி கேசாந்த மநுபவித்து, பழுதே பல பகலும் போயின வென்றிழந்த நாளுக்கு அநுதபித்து, அரங்கத்தரவணைப் பள்ளியணைக் கண்வளர்ந்தருளும் பரமனை, படுத்த பைநாகணைப் பள்ளி கொண்டானுக்குப் பல்லாண்டென்று மங்களாஸாஸநம் பண்ணு நிற்க, அழகிய மணவாளனும் மாமுநியைத் தன்னுடைய கருணாம்ருதவ் ருஷ்டிகளாலே குளிரக்கடாக்ஷித்துத் தம்திருப்பவள வாய் திறந்து நம்மிராமாநுஜனைப்போலே நீரும் நம்வீட்டில் கைங்கர்யத்தையும் தர்சந ரஹஸ்யங்களையும் ஆராய்ந்துகொண்டு உம்முடைய ஶரீராவஸாநத்தளவும் இங்கேயே வாஸம் பண்ணிக்கொண்டிரும் என்று நியமித்தருளி தீர்த்தம ப்ரஸாதம் சடகோடன் திருமாலைகளும் ப்ரஸாதித்தருள, மாமுனியும் மஹாப்ரஸாதம் என்று அங்கீகரித்து நம்பெருமாள் நியமனப்படியே அங்குண்டான ரஹஸ்ய க்ரந்தங்களை யெல்லாம் நன்கு ஆராய்ந்து அவைகளை ப்ரசாரம் செய்துகொண்டு அரங்கமா நகரிலேயே நித்ய வாஸம் பண்ணிக்கொண்டெழுந்தருளி யிருந்தார்.

acharya.org

அக்காலத்தில் கோயில் கார்யங்களை நிர்வஹித்துப் போகிற உத்தம நம்பி பெருமாள் அமுது செய்தருளுகிற தளிகை முதலான வைகளைச் சிறிது தாழ்வாக நடத்துவதை வாநமாமலை ராமாநுஜ ஜீயர், நாயனார் ஸன்னிதியில் விண்ணப்பிக்க, நாயனாரும் அழகிய வரதரைக்குறித்து பெருமாளுக்கு எல்லாக்கைங்கர்யங்களையும் குறைவற நடத்தும்படி இந்த உத்தம நம்பியையே திருத்திப்பணி கொள்ளும்படி பெருமாளை நீரே ப்ரார்த்தியும் என்று சொல்லி தானும் ப்ரார்த்திக்கப் பெருமாளும் அப்படியே அநுக்ரஹித் தருளினார்.

அப்பால் அழகிய மணவாள நாயனார் திருமலை முதலான திருப்பதிகளை ஸேவிக்கத் திருவுள்ளம்பற்றிப் பெருமாள் சன்னிதியிற்சென்று விடைகொண்டு புறப்பட்டு திருவெள்ளறையிற் பங்கயச் செல்வியாரைப் புருஷகாரமாகக் கொண்டு செந்தாமரைக் கண்ணரைத் திருவடிதொழுது திருக்கோவலூரிடை கழியில் முதலாழ்வார் மூவரையும் ஸேவித்து, அவர்கள் புருஷகாரமாகத்திருக் கோவலூராயனைத் திருவடி தொழுது, அங்கு நின்றும் புறப்பட்டுப் பரன்சென்று சேர்திருவேங்கடம் சென்று, பாத பீடத்திலடியிட்டேறுமாப் போலே ஶேஷகிரியை ஏறி ஸேவாக்ரமத்திலே ஸேவித்து, அகலகில்லேன் இறையுமென்றலர் மேல் மங்கையுறையும் திருமார்பனான திருவேங்கடமுடையானைப் புகலொன்றில்லா வடியேன் உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேன் என்று அடி பணிந்து நிற்க, திருவேங்கடத் தப்பனும் தீர்த்தப்ரஸாதம் சடகோபன் அநுக்ரஹிக்கப் பெற்று விடைகொண்டு உலகேத்தும் ஆழியானத்தியூரான் பெருமாள் கோவில் சென்று பேரருளாளனைத் தெண்டன் சமர்ப்பித்து நிற்க, பேரருளாளனும் "நம் மிராமாநுஜனைப்போலே யிருப்பா ரொருவரைப் பெற்றோம்" என்று அதி ப்ரீதியோடே தீர்த்தம் ப்ரசாதம் திருமாலை திருப்பரியட்டம் சடகோபன் ப்ரஸாதிக்கப் பெற்று, க்ருதார்த்தராய் திருவெஃகாமுதலான திருப்பதிகளையும் திருவடி தொழுது, ஸ்ரீபெரும்பூதூரெழுந்தருளி இதுவோ? பெரும்பூதூர் இங்கே பிறந்தோ வெதிராசரெம்மிடரைத் தீர்த்தார் இதுவோதான் தேசுகும் பொருநல் திருநகரிக் கொப்பான ஓங்கு புகழுடையவூர்" என்று சொல்லிக்கொண்டே ஊருக்குள்ளே ப்ரவேசித்து, சந்நிதிக்குள்ளே சென்று யோநித்ய மச்யுதபதாம்புஜ ....ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே என்று எம்பெருமானா

ரைத் தெண்டன் சமர்ப்பித்து எதிராஜன் திருவுருவை நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்காதபடி நிலை நிறுத்திக்கொண்டு தீர்த்தப்ரஸாதம் ப்ரஸாதிக்கப்பெற்று சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி என்று மங்களாஸாஸநம் பண்ணி ஸ்ரீ பாஷ்யம் ஸேவிக்க நியமனம் பெற்றுக்கொண்டு மறுபடியும் பெருமாள் கோவிலுக்கெழுந்தருளி கிடாம்பியாச்சான் வம்ஸஸ்தரான கிடாம்பி நயினாரிடத்தில் ஸ்ரீபாஷ்யம் ஸேவித்துக்கொண்டு அங்கே சிறிதுகாலமெழுந்தருளியிருந்து அப்பால் பேரருளாளரிடத்தில் விடைபெற்று திருவரங்கம் திருப்பதியை அடைந்து அழகிய மணவாளனை அடிபணிந்து நிற்க, வந்தவரை வாழ்விக்கும் பெருமாளான அழகிய மணவாளன் தீர்த்தப்ரஸாதங்கள் ப்ரஸாதித்து, இனிமேல் இங்கேயே நித்யவாஸம் பண்ணிக்கொண்டிரும் என்று நியமிக்க அப்படியே ஸ்ரீரங்கத்திலே நித்யவாஸம் பண்ணுநின்றுகொண்டு காலே காலே வரவரமுநிः கல்பயந்மங்களாநி என்றபடி ஒவ்வொரு சமயமும் தவறாது நம்பெருமாளை மங்களாஸாஸநம் பண்ணிக்கொண்டெழுந்தருளி யிருந்தார்.

இவ்வாறிருக்கும் காலத்தில் ஒரு சமயம் பெருமாள் மங்களாஸாஸனத்திற்கிடையூறாக ஆஸௌசமொன்று ஏற்பட, அதனால் பெருமாளை ஸேவிக்க முடியாமற்போக, பெருமாள் விஸ்லேஷம் ஸஹிக்கமாட்டாதவராய் பகவதநுபவத்திற்கு விரோதிகளான சரீரஸம்பந்தமுடைய பந்துக்களை பரித்யஜித்து, த்ரிதண்ட காஷாயாதிகளைத் தரித்து, உத்தம ஆஸ்ரமமான ஸந்யாஸ ஆஸ்ரமத்தை ஸ்வீகரித்துப் பெருமாளை தெண்டன் சமர்ப்பித்து நிற்க, பெருமாளும் அதி ஸந்தோஷத்துடனே துயரறு சுடரடியான சடகோபனையும் ப்ரஸாதித்துத் திருப்பவளவாய் திறந்து அழகிய மணவாள ஜீயர் என்கிற திருநாமத்தையே நீர் எப்போதும் வஹிக்கக் கடவீர் என்று நியமித்தருளி பல்லவராயன் மடத்தை இவர்க்கு வாஸஸ்தானமாக அநுக்ரஹித்து உத்தம நம்பி முதலானோரைக் கடாக்ஷித்து நம் அழகிய மணவாளஜீயரை எழுந்தருளப்பண்ணிக் கொண்டுபோய் மடத்தே வைத்து வாருங்கோள்! என்று நியமித்தருள, அவர்களும் அப்படியே ஜீயரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய் மடத்திலே எழுந்தருளப்பண்ணி மணவாள மாமுனியே இன்னமொரு நூற்றாண்டிரும் என்று மங்களாஸாஸநம் பண்ணி தெண்டன் சமர்ப்பித்து வந்தார்கள்.

acharya.org

அப்பால் வாநமாமலை ராமாநுஜஜீயர் முதலானோர்களைக் கொண்டு மடத்தை ஜீர்ணோத்தாரணம் செய்வித்து தமது ஆசார்யரான திருமலை ஆழ்வார் பெயரையிட்டு ஒரு காலக்ஷேபகூடத்தை ஏற்பாடுசெய்து அதற்கு ரஹஸ்யம் விளைந்த இடமான பிள்ளை லோகாசார்யர் திருமாளிகையிலிருந்து மண்கொண்டுவந்து அக் கூடத்திற்கு மண் இடுவித்து அக் கூடத்தைக் குருகுலவாஸமாகக் கருதி அவ்விடத்திலேயே, ரஹஸ்யார்த்தங்களை யருளிச் செய்யா நின்று கொண்டெழுந்தருளியிருந்தார்.

அக்காலத்தில் திருவரங்கன் திருமுற்றத்தடியார்களனைவர்களும் நம்மை யுஜ்ஜீவிப்பிக்க அழகியமணவாளன் இங்கே எழுந்தருளினாற் போலே அழகியமணவாளஜீயரும் இங்கே எழுந்தருளினார் என்று மிகவும் ஆதரித்துப் போந்தார்கள்.

அக்காலத்தில் கோவிந்ததாஸரப்பன் என்கிற பட்டர்பிரான் ஜீயர், மாமுநிகளின் ஜ்ஞாநபக்தி வைராக்யங்களைக்கண்டு ஆஶ்ரயித்து, உடையவர் விஷயத்தில் எம்பாரைப்போலே மாமுநிகளின் திருவடியை க்ஷணகாலமும் விட்டுப்பிரிய க்ஷமரன்றிக்கே ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வவித கைங்கர்யங்களையும் செய்துகொண் டெழுந்தருளியிருந்தார்.

இவ்வாறு எழுந்தருளியிருக்கும் மாமுநிகளின் அப்ரதிம வைபவத்தைக்கண்டு முதலியாண்டான் வம்ஶஸ்தர்களான கோயிற் கந்தாடை அண்ணன் முதலான ஆசார்ய புருஷர்கள் மாமுனிகளின் திருவடியை ஆஶ்ரயிக்க உத்தேஶித்திருக்க அழகிய மணவாளனும அவர்கள் ஸ்வப்நத்திலே எழுந்தருளி மணவாள மாமுனிகளின் அவதார விசேஷத்தைத் தெரிவித்து அவரை யாஶ்ரயிக்கும்படி நியமித்தருள, அவர்களும் உடையவர் திருமேனி ஸம்பந்தத்தை யுடையவர்களாய் அபிஜந வித்யாவிருத்தங்களாலுயர்ந்த தங்கள் பெருமையைப் பாராதே இவர் திருவடிகளில் ஸம்பந்தமே தங்களுக்கு உத்தாரகமென்று நினைத்து மாமுனிகளை யாஶ்ரயித்தார்கள்.

இப்பேர்ப்பட்ட ஶிஷ்யஸம்பத்துடனே மாமுனிகள் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்தருளும் அந்நல்லடிக்காலத்தில் குத்ருஷ்டிமதாவலம்பியான ஒருவன் கோயிலிலே தன்னுடைய மதத்தை ப்ரசாரம் செய்யா நிற்க, ஸர்வஜ்ஞரான மாமுனிகளும் கலையறக் கற்ற மாந்

acharya.org

தர் காண்பரோ? கேட்பரோ? என்கிறபடி அவனை அலக்ஷியம் செய்து அவனை ஊரைவிட்டு ஓட்டத் திருவுள்ளம்பற்றி வாதூல வம்ஶஸ்தரான வேடலப்பையை வரவழைத்து அவரைக்கொண்டு அவனை ஊரைவிட்டு ஓடும்படி செய்தருளினார்.

அக்காலத்தில் பெருமாள் கோவிலில் எழுந்தருளியிருக்கும் பிரதிவாதி பயங்கரரான அண்ணா மாமுனிகளின் வைபவத்தை யறிந்து அவரிடம் ரஹஸ்யார்த்தங்களை அறிந்து கொள்ள வேண்டுமென்று உத்தேசித்துக் கோயிலுக்கு வந்து மாமுனிகளை தெண்டன் சமர்ப்பித்து நிற்க, மாமுனிகளும் ஒன்றுந் தேவின் ப்ரவேஶத்தைச் சிறிது உபந்யஸிக்க இவர்க்கு த்ரவிட ப்ரபந்தத்தில் தான் பரிசயம் விஶேஷமாகவுண்டென்றிருந்த அண்ணாவும் உபயவேதத்திலு மிவர்க்கிருக்கும் ப்ரவீணதையை ப்ரத்யக்ஷமாகக்கண்டு மிகவும் உகந்து, அடியேனை ஆட்கொண்டருள வேணுமென்று வேண்டிக்கொள்ள, மாமுனிகளும், நீர் ப்ரதிவாதி பயங்கரர். நாம் ஸாது. இது எங்ஙனே கூடுவது? என்ன அண்ணாவும், ப்ரஸித்த: ஸ யதைவாஸீத் ப்ரதிவாதிபயங்கர:—ஸ்ரீவைஷ்ணவாநாம் ததைவாஸீத் தாஸ இதி விஶ்ருத: அடியேன் பிரதிவாதிகள் கோஷ்டிகளில் பயங்கரன் என்று ப்ரஸித்தனா யிருப்பது போலவே ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டியில் தாஸன் என்றும் ப்ரஸித்தனானவன் என்ன, அதைக்கேட்டு மாமுனிகள் மிகவுமுவந்தருளி அவர்க்கு பஞ்ச ஸம்ஸ்காரங்களையும் ப்ரஸாதித்து ஸ்ரீ வைஷ்ணவதாஸர் என்கிற திருநாமத்தையும் அநுக்ரஹித்தருளினார்.

அப்பால் தமது ஆசார்யரான திருவாய்மொழிப்பிள்ளை யவதரித்த ஆழ்வார் திருநகரியில் ஆழ்வாரை ஸேவிக்க வாஸையுண்டாய் நம்பெருமாளை விடைபெற்று ஆழ்வார் திருநகரிக் கெழுந்தருளி அங்கே யாத்ருச்சிகமாய் எழுந்தருளின ஆயியிடத்தில் ஆசார்ய ஹ்ருதயார்த்தத்தைக் கேட்டு அவ்வர்த்தத்தை அங்குள்ளார்க்கு அழகாக அருளிச் செய்துகொண்டிருக்க, அக்காலத்தில் அத்தேசத்திற்கதிபனானவொருவன் மாமுனிகளின் அப்ரதிம வைபவத்தைக்கண்டு திருவடிகளில் ஆஶ்ரயிக்க, அவனைத் திருத்திப் பணிகொண்டு அவனைக் கொண்டு காளமேகன் திருமண்டபம் முதலான அனேக கைங்கர்யங்களை ஆழ்வாருக்கு முகோல்லாசமாகச் செய்தருளினார்.

acharya.org

அப்பால் திருக்குறுங்குடி யெழுந்தருளி அங்கு திருவேங்கட முடையான் என்கிற ஒருப்ராஹ்மணனைத் திருத்திப் பணிகொண்டு அவர்க்கு திருவேங்கடதாஸர் என்று திருநாமம் சாற்றி அவரை நம்பி கைங்கர்யத்தைச் செய்துகொண்டிருக்கும்படி நியமித்தருள அவரும் அப்படியே நம்பிக்கு அனேக திருப்பணி முதலான கைங்கரியங்களைச் செய்துகொண்டிருந்தார். இவ்வாறு திருக்குருகூர் நம்பிக்கும் திருக்குறுங்குடி நம்பிக்கும் அனைத்தழகும் கண்டருளப்பண்ணி மற்றும் அத்தேஶத்திலுண்டான திவ்யதேஶங்களில் கைங்கர்யங்களைச் செய்வதற் கநுகூலமான ஆஶ்ரிதர்களை நியமித்து, **பிறந்தகத்தில் சீராட்டுப் பெற்றாலும் தன்னைச் சிறந்து கக்கும் சீர்க்கணவன் றன்னை மறந்திருக்கலாமோ?** மனமே என்று அழகிய மணவாளனிடத்தில் திருவுள்ளம் சென்று கோயிலுக் கெழுந்தருளி முன்புபோலே எழுந்தருளி யிருந்தார்.

அக்காலத்தில் எறும்பியப்பா கோயிலுக் கெழுந்தருளி நம்பெருமாளை ஸேவித்து, கோயில் கந்தாடை அண்ணனோடு மடத்திற்கு வந்து மாமுனிகளைத் தெண்டன் சமர்ப்பிக்க, மாமுனிகளும் இவர் ஒரு பெரிய வித்வான். இவருகக்கும்படி விஷய மருளிச் செய்யக் கருதி பரத்வப்ரதிபாதகமான உயர்வற வுயர் நலத்தின் ப்ரவேஶத்தை யுபந்யஸிக்க, அப்பாவும் அதைக் கண்டு இவர்க்குத் தமிழில் தான் பரிசயமுண்டென்றிருந்தோம் ஸம்ஸ்க்ருதத்திலு மிவர்க்குண்டான பாண்டித்யம் வாசாமகோசரம் என்று போரவும் மாமுனிகளைப் புகழ்ந்து போற்ற, மாமுனிகளும் ப்ரீதராய் அப்பாவை மடத்திலே அமுதுசெய்யும்படி ப்ரார்த்திக்க, அப்பாவும் **தருவரேல் புனிதமன்றே** என்கிற விஶேஷஶாஸ்த்ரத் ரத்தை யறியாதவராய், யதியின் அன்னத்தைப் புஜிக்கக் கூடாதென்கிற ஸாமாந்யஶாஸ்திரத்தை யடியொற்றி, அவ்வாறுசெய்ய மறுத்து, ஊருக்கு எழுந்தருளினார். ஊரில் சென்று தம்முடைய திருவாராதனப் பெருமாளான சக்ரவர்த்தித் திருமகனுக்குத் திருவாராதனம் ஸமர்ப்பிக்கக் கோயிலாழ்வாரைத் திருக்காப்பு நீக்கப் புக, எவ்வளவு ப்ரயத்நம் செய்தாலும் திறக்க முடியாமற் போகவே அப்பாவும் அன்று அமுது செய்யாமல் முசித்துக் கிடக்க, அன்றிராத்திரி அவர் ஸ்வப்நத்திலே பெருமாள் எழுந்தருளி ஆதிஶேஷாவதாரமான அழகிய மணவாளமாமுனியினிடம் அபசாரப்பட்டுவந்த உம்முடைய கையால் திரு

acharya.org

வாராதனம் கண்டருளோம் மாமுனிகளை யாஸ்ரயித்து வாரும் என்று நியமித்தருள, அப்பாவும் உடனே கண்விழித்துப் பெருமாள் நியமனப்படியே கோயிலேற வெழுந்தருளி, கோயிற் கந்தாடை அண்ணனை புருஷகாரமாகக் கொண்டு மாமுனிகள் திருவடிகளை யாஸ்ரயித்துக் க்ருதார்த்தரானார்.

இவ்வாறு ப்ரஸித்தமான ஶிஷ்யஸம்பத்தோடே மாமுனிகள் கோயிலி லெழுநதருளியிருக்கும காலத்தில் நம்பெருமாள் தான் சக்ரவர்த்திக்குப் புத்திரனாய் அவதரித்த காலத்தில் "இமௌஸ்ம முனிஶார்தூல கிங்கரௌ ஸமுபஸ்த்திதௌ" முனிஶ்ரேஷ்டரான விஶ்வாமித்ர மகரிஷியே! இந்த நாங்களிருவரும் தேவரீருக்கு சிஷ்யர்கள் என்று, விஸ்வாமித்ரரை ஆசார்யராக வரித்தும், "அவனே பின்னோர் தூது ஆதிமன்னர்க்காகிப் பெரு நிலத்தார் இன்னார் தூதனென நின்றான்" என்றபடி பாண்டவர்க்குத் தூது செல்ல கிருஷ்ணனாயவதரித்த காலத்தில் சாந்தீபினி மகரிஷியை ஆசார்யராக ஆஶ்ரயித்து ஸமஸ்த்தமான ஸமஸ்க்ருத சாஸ்த்திரங்களையும் அப்யசித்து ஆசார்யனுக்குக் குருதக்ஷிணை ஸமர்ப்பிக்கவேண்டி அவருடைய திருவுள்ளமேதென்றபேக்ஷிக்க, சாந்தீபினியும் முன்னொருகால் மறிகடல் வாய் மாண்ட தன்புத்திரனைக் கொணர்ந்து கொடுக்கும்படி அபேக்ஷிக்க, அவ்வாறே ஓதுவித்ததக்கணையாய் அப்புதல்வனைக் கொணர்ந்து கொடுத்து அவர்களைத் திருப்தி செய்வித்தாலும், நம்மை யறிந்துவைத்தே நம்மிடத்தில் எல்லையில்லா வாநந்தத்தை யுடைய பரமவிலக்ஷணமான மோக்ஷ புருஷார்த்தத்தை அபேக்ஷியாதே இவ்வாறு அபேக்ஷிப்பதே என்று அத்ருப்தி யடைந்தவனாகையால் இந்த அர்ச்சாவதாரத்தில் முன் ஆஶ்ரயித்த ஆசார்யர்களைப்போ லன்றிக்கே ஆசார்யனுக்கு வகுத்த ஸமஸ்த குணங்களுக்கும் கொள்கலமான மணவாள மாமுனியை ஆசார்யராக வரித்து, அர்ச்சாவதாரத்தை ப்ரதிபாதியா நின்ற ஆழ்வார்களருளிச் செய்த த்ரவிடவேதத்தின் அர்த்தத்தை அனைவரும் விஶ்வஸித்து கேட்டு க்ருதார்த்தராகப் பண்ணவேண்டுமென்று திருவுள்ளம் பற்றி, மணவாள மாமுனியைக் கடாக்ஷித்து, நமது பெரிய திருமண்டபத்தில் ஒருவருஷம் த்ரவிட வேதத்தை ஈடுமுதலான ஸமஸ்த்தமான வ்யாக்கியானங்களுடன் அருளிச்செய்ய வேண்டுமென்று நியமிக்க, மாமுனியும் தந்யோஸ்மி, அநுக்ருஹீதோஸ்மி,

acharya.org

என்று மிகவும் உகப்போடே ஒரு ஸம்வத்ஸரம் திருவாய் மொழியை ஈடு முப்பத்தாறாயிரப்படி முதலான வ்யாக்யானங்களுடன் உபந்யசித்தருளினார்.

பெருமாளும் பிராட்டியும் ஸமஸ்தமான பரிவாரங்களோடும் ஸிம்ஹாஸநத்தி லெழுந்தருளி ஒரு ஸம்வத்ஸரம் திருவாய் மொழியினர்த்தம் கேட்டருளி சாத்து முறைதினத்தில் ஆசார்ய ஸம்பாவனை ஸமர்ப்பிக்க அடைக்காய் முதலான அநேக பரிசுகளைத் தட்டில் அமர்த்திவைக்க, அப்போது அழகிய மணவாள பட்டருடைய ஒரு குழந்தையாய்ப் பெருமாள் எழுந்தருளி ஸ்ரீ சைலேசத யாபாத்ரம் என்கிற தனியனை அருளிச் செய்துவிட்டு மறைய அங்குள்ள பெரியோர்கள் இதென்ன வாச்சர்யம் குழந்தை எங்கே? ச்லோகம் சொல்வதெங்ஙனே? என்று சங்கியா நிற்க, பெருமாளும் அருளப் பாடிட்டு அத்தனியனை ஓலையிலெழுதி மஞ்சள் காப்புச் சாத்தும்படி நியமிக்க, அப்படியே செய்ய, அதையும் தட்டில் வைக்கச் சொல்லி அப்பிள்ளையைப் பார்த்து வாழித் திருநாமம் சொல்லும்படி நியமிக்க, அவரும் வாழிதிருவாய் மொழிப்பிள்ளை என்று உபக்ரமித்து மணவாளமாமுனியே இன்னமொரு நூற்றாண்டிரும் என்று முடிக்கப் பெருமாளும் மிகவுமுகந்து ஸமஸ்தமான வரிசைகளையும் சோதித்து மாமுனிகளை மடத்தில் எழுந்தருளப் பண்ணி வாருங்கோள் என்று உத்தம நம்பி முதலானவர்களை நியமித்தருள அவர்களும் அப்படியே ஸமஸ்தமான கோயில் பரிவாரங்களோடு மாமுனியை மடத்திலே எழுந்தருளச் செய்து வந்தார்கள்.

அநந்தரம் அழகிய மணவாளன், கோயில் திருமலை பெருமாள் கோவில் முதலான திவ்யதேசங்களிலெல்லாம் ஸேவாகால முபக்ரமிக்கும்போது ஸ்ரீ சைலேச தனியனை உபக்ரமித்து மணவாள மாமுனியே இன்னமொரு நூற்றாண்டிருமென்று முடிக்கவேண்டும் என்று நியமித்தருளினார்.

இன்னமும் இத்தனியன் வைபவத்தை திருவேங்கடமுடையானும திருமாலிருஞ் சோலை மலையானும் ப்ரகாசிப்பித்தருளினார்கள். இவ்வாறு ப்ரஸித்த வைபவத்தையுடைய அழகிய மணவாளமாமுனியின் வைபவத்தை யநுஸந்தித்து அவர் பெரான்னடியாஞ் செங்கலப் போதுகளை யுன்னிச் சிரத்தால் தீண்டுவார்

acharya.org

அமானிவனின் கரத்தால் ஸ்பர்சிக்கப்படுவார். இவ்விடத்தில் காரப்பங்காடு ஸ்ரீ உ. வே. சிங்கப் பெருமாள் ஸ்வாமி மணவாளமா முனிகளின் திருவடிகளை உன்னிச் சிரத்தாலே தீண்டுமவர்களுக்கு அமாநவகரஸ்பர்சம் அநாவஶ்யம் என்றருளிச் செய்வர்.

மன்னுயிர் காளிங்கே மணவாள மாமுனிவன்
பொன்னடியாம் செங்கமலப் போதுகளை—உன்னிச்
சிரத்தாலே தீண்டிலமானவனும் நம்மைக்
கரத்தாலே தீண்டல் கடன்.

ப்ரபந்நர் யார்

திருமலைநல்லான் ராமகிருஷ்ணய்யங்கார்
சிரோமணி ஆழ்வார் திருநகரி

கீழ் ப்ரபந்ந குலத்தைப்பற்றிச் சிறிது விவரித்தோம். இதில் ப்ரபத்தி ஸ்வரூபத்தையும், ப்ரபந்நர் யார்? என்பதையும் பற்றிச் சிறிது கூறுவோம்.

(1) ப்ரபத்தியானது "ஈசுவரனுக்கு நான் அடியான்" என்று உணர்கை. ஈசுவர ஸம்பந்தம் என்று முளதாதலின் அவனடியான் யானென்று இசைந்து அதை அநுஸந்திப்பதே ப்ரபத்தி யென்று கூறியதாயிற்று. சேஷத்வமாவது சேஷியின் இஷ்டப்படி உபயோகிப்பதற்குத் தகுந்ததன்மை. சேஷத்வமும் அடிமையும் ஒரே பொருளன. "ததேகசேஷத்வாநுஸந்தாநம் ஶரணாகதி:" என்பர் ஶ்ரீதத்வப்ரகாசிகா சார்யர். சரணாகதிபதம் ப்ரபத்தியைக் குறிக்கிறது. ஆழ்வாராதியரிடம் இத்தகைய ப்ரபத்தி நிலைநிற்கிறது. ஆதலின் அவர்கள் பிரபந்நர்களாகிறார்கள். பிரபந்நர்—பிரபத்தியுடையோர்.

(2) எனவே அவனுகந்தபடி உபயோகிக்கத் தகுந்ததன்மையே ஆத்மாவுக்கு ஸ்வரூபம் என்று உணர்ந்த பெரியோர், ப்ரபத்தியைக் கூடத்தான், அநுஷ்டிக்கும் உபாயம் என்று நினையார்கள். உபாயமும் ஈசுவரன்தான் அவர்களுக்கு. உபேயமும் அவனே. "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்" என்று அவன் திருவடிகளையே உபாயமாக அத்யவஸிக்கிறார் ப்ரபந்நஜன கூடஸ்தர். ஆறு—உபாயம். எல்லா மவனதருள்டியாகவே என்

றிருப்பர் ப்ரபந்நர். "அதுவு மவன தின்னருளே" என்னக் கடவதிறே! காதல் கடல்புரைய உண்டாவதும், அவாவற்று வீடு பெறுகையு மவனால்தான். அவனுக்காகத் தன்னைக் கொள்வது தான் புருஷார்த்தம். உமக்கே நாமாட்செய்வோம். கைங்கரியங்கள் கூட அவன் முகஉல்லாஸத்திற்காகத்தான்! அதனால் தனக்கு உண்டாகும் ஆநந்தம் அவஸாத ஸ்வேதம்போலே. அவஸாத ஸ்வேதந்யாயமாவது:—நெல் குத்துவது உமியை வேறாக்கி அரிசியைப் பெறுவதற்காகத்தான். ஆனால் குத்தும்போது வேர்வையுண்டாகிறது. வேர்வைக்காக நெல்குத்துவ தில்லையன்றோ? அது பொல் ஸ்வாநந்தத்திற்காகக் கைங்கரியம் செய்வார்களன்று ப்ராந்நர்கள், நிற்க,

(3) ஆழ்வார்கள் பிரபந்நர்கள் என்பதில் ஒரு ஸந்தேஹம் உண்டாகிறது. "நிதித்யாஸிதவ்ய:" என்று விதிக்கப்பட்ட பக்தி ரூபமான பகவத் விஷய காமம் அன்றோ "மயர்வறமதி நலமருளினன்" என்கிறபடியே அவனருளடியாக ஆழ்வாருக் குண்டாயிற்று? பக்திமான்களான அவர்களை ப்ரபந்நர் என்ப தெப்படி? ஒருவருக்கே பக்தியும், பரபத்தியு மிசையாது, விருத்ததர்மங்களாகையாலே. பிரவிருத்தி பாருக்கானதுபக்தி, நிவிருத்தி பாருக்கானது ப்ரபத்தி. பகவத்ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி: ப்ரபத்தி: பகவான் பிரவிருத்திக்குத்தடங்கலான தன் பிரவிருத்தியில் நின்று ஒழிதல்" என்று கூட ப்ரபத்தி லக்ஷணம் கூறுகிறார்கள். சேஷத்வாநு ஸந்தாநம் செய்பவன் ஒரு பிரவிருத்தியிலும் தானிறங்கமாட்டானன்றோ? பிரபத்தியையே உபாயமாக நினையாதவன் எப் பிரவிருத்தியில்தா னிறங்குவான்? எனவே பக்தியும் ப்ரபத்தியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாதலின் ஒருவரிடமே அவை யிருக்கமாட்டா. ஆதலின் பக்தி நிஷ்டர்களான ஆழ்வார்களைப் பரபந்நர் என்பது பொருந்தாது.

(4) உண்மைதான் நீ நினைப்பதுபோல் பக்தி, ஸாதந ரூபமாக ஆழ்வார்களுக்கு இருக்கும் பக்ஷத்தில் உன் கூற்று, சற்று பொருந்தும். ஆனால் அவர்களுடைய பக்தி ஸாதநரூபமன்று. நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் என்று அவன் பாதத்தை மட்டும் உபாயமாகப் பற்றியிருக்கும் ஆழ்வார்பக்தியையும் ஸாதநமாகக் கோண்டார் என்பது ஏற்குமோ? பின்னையவர்களது பக்தி தான் எது என்னில்? அத்யந்தப்ரீதிரூபமான ஸாத்யபக்தியென்

acharya.org

கிறோம். கர்மத்தை அங்கமாகவுடைய உபாஸநாரூபமான பக்தி தான் ஸாதநபக்தி. அத்தகைய பக்தி ஆழ்வாருக்கு இல்லை. விதுரதிகளைப்போல அபசாரத்ராதிகரணத்திற்கு இலக்காகாவிடினும் ஸாதநபக்தியாயின் அவனருள இவர் பெற்ற வேற்றம் போய்விடும் ஆக ஸாத்யபக்தியென்றே கொள்ளவேண்டியிருக்கிறது. ஸாத்ய பக்தியை ஸாதந மென்று கூறமுடியாது. பகவத் விஷயமான காதலே ஸ்வயம்பிரயோஜனமானது. அதுவே மிக்க சுவை யுடைத்து.

“ நின்புகழில், வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ-நீயவர்க்கு வைகுந்தம் என்னருளும் வான் ”

(உனது கல்யாணகுணங்களை அநுஸந்திப்பதைக்காட்டிலும் வைகுந்தம் இனிய தாமோ?) என்கிற உதாரப் பேச்சை நோக்கிடில் இவ்வுண்மை புலனும். ஆதல்பற்றித் தான் அதையே ஸாத்ய மாகக்கொண்டு “ஸாத்யபக்தி” யென்கிறார்கள். பிரயோஜனத்திற்கு ப்ரயோஜநாந்தராபேக்ஷை கிடையாதிறே. உபாஸநத்திற்கோ வெனின்? அவித்யா நிவிருத்தி ரூபமான மோக்ஷம் பிரயோஜன மாதலால் அது ஸாதனமாகிறது. ஸாதநமாயின் பிரவிருத்தியில் மூட்டும். பலனுக்காக ஸாத்யமாயின் பிரவிருத்தியில் மூட்டாது. அதுவே பலனுதலின் பலனடைந்தவன் அவ்விஷயத்திலேயே முயல்வதில்லை யல்லவா. ஆகவே ஸாத்யபக்தி நிவிருத்தி பரருக்கே யன்றி ப்ரவிருத்தி பரருக்கில்லை. சுருங்கக் கூறுமிடத்து ஸாத்ய பக்தியையே பிரபத்தி என்றிடில் அது பிசகாகாது. இப்பொழுது ஸாத்யபக்திக்கும் பிரபத்திக்கும் விரோதகந்தமாவது இருக்கிறதா வென்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

(5) ஸாத்ய பக்தியும் பிரபத்தியும் ஒன்றுதான் என்பதன் உண்மைக் கருத்தாவது:—ஸாத்யபக்தி யுள்ளவனுக்கவ்வளவே நிற்கவொண்ணுது. அதுதான் பிரபத்தியின் முந்தியநிலை. ப்ர பத்தி காரணத்வேநவே ஸாத்ய பக்தி எங்குமுளதாம். பகவத் விஷயமான காதல், தன் சேஷத்வரூபஸம்பந்தத்தை யுணராமல் நிலைநிற்க முடியாது. பார்யைக்குத் தன் பர்த்தாவினிடம் உள்ள காதலை, தான் அவன் காதலியென்று கருதாதவரை நிலைக்குமோ? இதனுல் தான் ஸாத்யபக்திமான்களை ப்ரபந்நர் என்று காரியகாரணங்களின் அபேதத்தைக்கொண்டு வ்யவஹரிக்கிறார்கள். “ ஹதுா

acharya.org

நேவபராங்குசாதி புருஷாந்” பக்தாநேவபராங்குசாதி புருஷாந் என்று பக்தர்களாகக் கூறப்படு மாழ்வார்களே, “காஸாரஸம் யமிமுகா: கமலாஸஹாயபக்தா: ப்ரபத்தி பதவீநியதா மஹாந்த:”காஸாரஸம்யமிமுகா: கமலாஸஹாயபக்தா: ப்ரபத்தி பதவீநியதாமஹாந்த: என்று ப்ரபந்நர்களாகவ்யவஹரிக்கப்படுகிறார்கள். இதன் சைலியிலேயே கீழே காட்டிய உண்மை உணர்த்தப்படுகின்றதை உற்றுணர்மின்.

(6) இனி மற்றோர் சங்கை. ஆழ்வார்கள் பதின்மரும் ப்ரபந்நர் என்பதை ஒப்புக்கொள்கிறோம். மதுரகவிபோல்வார் ப்ரபந்நராவார்களா? அவர்கள் நித்யசத்ருவான பகவத்ஸௌந்தரியத்திலாழங்கால்படுமவர்களன்றோ? “மாமேகம் சரணம் வ்ரஜ” மாமேகம் சரணம்வ்ரஜ” என்று விதிக்கப்பட்ட ப்ரபத்தியவர்களுக் கேது? ஆசாரியனே உபாயோபேயமென்றன்றோ பற்றுவர் சரமபர்வநிஷ்டர். மதுரகவி யாழ்வார் நன்மையால் மிக்க நான் மறையாளர்கள் புன்மையாகக்கருதும் தன்னை ஆண்டிடும் தன்மையான் சடகோபநம்பிதான் என்கிறார். இதுபோல் மணவாள மாமுனிகளும் “ தந்தை நற்றாய் தாரம்தனயர் பெருஞ் செல்வம் என்றனக்கு நீயே எதிராசா ” என்றும்,

தென்ன ரங்கர்தமக்காமோ தேவியர்கட்காமோ
சேனையர் கோன்முதலான சூரியர் கட்காமோ
மன்னியசீர் மாறனருள் மாறிதனக்காமோ
மற்றுமுள்ள தேசிகர்கள் தங்களுக்குமாமோ
என்னுடைய பிழை பொறுக்க யாவருக்கு முடியும் ?
எதிராசா உனக் கன்றியாரொருவர்க்காகேன்
உன்னருளாலெனக்கு ருசிதன்னையு முண்டாக்கி
ஒளிவிசும் பிலடியேனை ஒருப்படுத்து விரைந்தே.

என்றும் எதிராசனையே எல்லாமாகவும் பற்றியிருக்கிறார். இத்தகையோரை ப்ரபந்நர் என்று கூறமுடியுமோ? ஸித்திவ்ரதீய ஹிதைஷணோ ராமாநுஜார்யம் நத:” என்று சரமபர்வநிஷ்டர் பக்திப்ரபத்திகள் துஷ்கரங்களானபோது சரமபர்வமே உத்தாரகம் என்று நிஷ்கர்ஷித்திருப்பதும், மேலான சரமபர்வநிஷ்டர் துஷ்கரமான ப்ரபத்திமான்களாகார் என்பதை வலியுறுத்துகிறது என்று.

acharya.org

(7) இதற்குச் சுருக்கமாக விடையளித்து வாசகர்களிடம் அடுத்த கட்டுரை யெழுதுவதற்காக விடைபெற்றுக் கொள்ளுகிறோம். சரணாகதியின் ஸ்வரூபத்தை யலசிப் பார்த்தால் சரமபர்வமும் அதன் கண் அடங்கும் என்பதற்கு ஐயமில்லை. தச்சேஷத்வாநு ஸந்தாநம் ததீய சேஷத்வத்தளவிலன்றி நில்லாது அவனடிமையின் எல்லை நிலமாமிறே அவனடியார் தம்மடிமை. "ஜஜ ஜ ஊஜுஹஜெகுஷு வீ ஜதிராஹுயிகா ஹவெகு" என்று அடிமையின் எல்லைநிலம் சென்றவனிடமிறே! தானுவப்பதாக ஈசுவரனும் கூறுகிறார் எல்லைநிலமான ததீய சேஷத்வத்தளவில் சென்றவனுக்குத் தான் ப்ரபந்நத்வ பூர்த்தி. உண்டபோது ஒரு வார்த்தை உண்ணாதபோதொருவார்த்தை பேசுபவரை பரிஹஸிப்பவரிறே சரமபர்வநிஷ்டர். உண்டபோது :—அநுபவிக்கிறபோது. ருஷி அரசனுக்கு விருந்தளித்தானெனில் அவன் பரிகரத்திற்குமென்று சொல்லவேண்டுமோ? ஈசுவரனைச் சேர்ந்தாரை ப்ரபத்தி ரூபவிருந்திலிருந்து விலக்க முடியுமோ? உத்தமன் தன்னைவிடத் தன்னைச் சேர்ந்தாரை யுபசரிப்பதிலேயே கண்ணுங் கருத்தாயிருப்பான். அது போல் தான் ஈசுவரனும் தன்னைச் சேர்ந்தார் விஷயத்தில் இலை பூ முதலியவைகளையே அன்போடு கொடுத்திடல் "தடிஹம் ஹக்ஷ்யுபஹுதம் அஶ்நாமி" என்று பெரு விருந்தாகக் கொள்ளுமவன். ஞானநந்த மயமான நன்பொருளை (ஆத்மாவை) அவனதென இசைந்து நல்கிடில் அது அவனுக்குப் பெரிய விருந்தாவதற்கையமென்ன? "விஷுபாரா ஞாநி ஹுஹுஜெஶாஷீநி ஶுணவதிவு" என்று அநந்யார்ஹத்வ,} அநந்யப்ரயோஜநத்வ விசிஷ்டமான விதுரனிட்ட வந்நத்தைப் பெருவிருந்தாகக் கண்ணன் கொண்டதைக் கண்டோமிறே. மடிதடவாத சோற்றில் கடுங்கிறுக்கனிறே. ஆசார்யனே உபாயோபேயம் என்று ப்ரபத்தி பண்ணுபவருக்கு ப்ரபந்நத்வ பூர்த்தி யுண்டென்று இதனால் நிரூபிக்கப்பட்டது. ராஜஸம்பந்திகளை உபசரித்திடில் ராஜோபசாரம் செய்ததாமாப்போலே அவனடியாரைப் பற்றிடினுமவன் தன்னைப் பற்றினதாகவே கருதிக் கொள்கிறான். "ஓாஜெகும் ஶரணம் வ்ரஜ" என்கிற இடத்தில் தன்னையும் தன்னைச் சேர்ந்தவனையும் எனக் கொள்ள வேண்டும். "ஜ்ஞாநீத்வாத்மைவ மெ மதம்" என்று அவனைச் சொன்னால் அவனாதாத்மாவான ஞானிகளையும் குறிக்கத் தட்டில்லை. ததீயவ்யு

acharya.org

திரிக்த மநஸ்யார் ஹத்வம் என்றும் கொள்ளவேணும். ஆக மாமேவ யே ப்ரபத்யந்தே, மாமேகம் ஶரணம் வ்ரஜ, என்கிற இடங்களில் ஆசார்யாதி ப்ரபதநபரரையும் ஸ்வீகரித்தல் யுக்தமே. இல்லாதபோது சரமபர்வமும் த்யாஜ்ய கோடி ப்ரவிஷ்டமாகுமத்தனை.

(8) "ராமாநுஜார்யம் நமத" என்று ப்ரபத்தியிற் காட்டில் வேறாக சரம பர்வத்தைக் கூறுவானென் என்னில்? ஆசாரியனிடம் பிரபத்தி செய்யாவிடினும், ஆநுகூல்யமாத்திரத்திய அவனது அபிமானத்திற் காளாவதால் மட்டும் கரையேறுவதைக் கொண்டு அங்ஙனம் கூறப்பட்டதெனக் கொள்க. திடமான "அத்யவஸாயம்" (தீர்மானம்) அபேக்ஷிதமாயிருக்கும் பிரபத்தியில் அதுவுமின்மையால் ஆசாரியன் அபிமானித்தல் ஸாகரமாம் அன்றோ? ஆதல்பற்றி ஆசாரியாபிமானம் வேறென மேலாகச் செல்லப்பட்டதென்றறிக. ஆயின் ஆசாரியாபிமான பாத்திரரானவர் (ப்ரபத்தியின்மையால்) ப்ரபந்நராகாரே யெனில்? இவர்களுக்கு நேரேப்ரபத்தி யில்லாவிடினும் பரம்பரையாகப் ப்ரபத்தியுண்டு. (ஸ்வாசார்யாசார்யக ஸம்பந்த ப்ரபத்திவைஶிஷ்ட்யம் ஸ்வாசார்யாபிமாந ஏவாவதி) ஆசாரியனிடம் ப்ரபத்தி நேரேயுளது. அவன் ஸம்பந்தமுள்ள சிஷ்யனிடம் ஆசாரியன் மூலமாயிருக்கிறது. ஆதலால் அவனையும் ப்ரபந்நன் என்னக்குறையில்லை. ஆசாரியபரபத்தியைவிட ஆசார்யாபிமானத்திலொதுங்குகைமேல். செய்(வயல்) நிரைய நீர் நின்றால் பக்கத்துவயலில் பொசிந்து காட்டுமாப்போல் ஆசாரிய நிஷ்ட ப்ரபத்தி யிவனிடமும் ஸம்பந்திக்கத் தட்டில்லை. நம் ஆசாரியர்கள் ஆசாரியாபிமானத்திலேயே ஒதுங்கிப் போவார்கள்.

"ஸர்வே ஶ்ரேயஸ்த்வ ஸாரவிஜ்ஞஸ்த்வநாசார்யாஃ ப்ரேப்ஸவ:
ப்ரேப்ஸுர்யாஸ்யாத்ய ப்ராப்யதா தேஶிகா: ப்ராப்திகாரா:

என்று ஆசாரியர்களில் முன்னவரும், பின்னவரும், ஶாஸ்த்ரார்த்தி வக்ஷம் ஸாதி ராமாநுஜார்யே" என்கிறபடியே நிருபாதிக ஆசாரியனை உடையவர் சம்பந்தம் (திருமுடி திருவடி சம்பந்தங்களால்) பெற்று உயர்ந்தனர் என்பதை இங்கு நோக்குக.

(9) இங்கு சுருங்கக் கூறுமிடத்து பகவானால் விதிக்கப்பட்ட பிரபத்தியே மோக்ஷஸாதகம்; (ஶாஸ்த்ரகவஶாஸ்த்ர ஸம்ப

நிகில க்ருதாக ஸம்பந்தேந ப்ரவ்ருத்தேர்மோக்ஷ காரணம், ஶாஸ்த்ரீயம் ஸாக்ஷாத் ப்ரபந்நேஷு, ஶாஸ்த்ரீய ஸம்பந்திஷு ஸ்வாசார்யாபிமாநவதாம் இதி) நேராகவோ, பரம்பரையாக வோ ப்ரபத்தியுடையவர்கள் பிரபந்நர்கள். நமக்காக எம்பெருமானார் ரங்கராஜனிடம் பரபத்தி செய்திருப்பதால் நாமும் ப்ரபந்நர்களே.

> "காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி
> பாபக்ரியஸ்ய ஶரணம் பகவத் க்ஷமைவ |
> ஸா ச த்வயைவ கமலாரமணேர்த்திதா யத்
> க்ஷேமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ச்ரிதாநாம்,"

மூன்று காலங்களிலும் மூன்று கரணங்களினலும் செய்யப்பட்ட பாபத்தை உடையவனுக்கு உன்க்ஷமைதான் சரணம். அது தேவரீரால்ரங்கராஜனிடம் ப்ரார்த்திக்கபபட்டதென்பதே தேவரீரை யடைந்தோருக்கு க்ஷேமம்) என்னும் வரவர முனிகளின் பிரமாண மிங்கு அநுஸந்தேயம். ஆக நமக்கெல்லா மெம்பெருமானர் திருவடிகளே தஞ்சம் என்றிருப்பே அமையும்.

ஸ்ரீபாஷ்யபாட பரிஷ்கரணம்.

(ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதிபயங்கரம். அண்ணங்கராசாரியர்.)

அடியேனுடைய தத்வப்ரதிஷ்டா க்ரந்தத்தில் ப்ராஸங்கிகமாக, ஸ்ரீபாஷ்யத்தில் நேர்நதுள்ள இரண்டுபாடப் பிழைகளைப் பற்றி ப்ரஸ்தாவம் செய்யப்பட்டிருந்தது. முதல் ஸூத்ர பாஷ்யத்தில் [ப்ருதி ப்ரஸவ ஸம்ஹாராஸ்] என்ற ஸ்ரீஸூக்தியில் ஸம்பவாஸ் என்று ஓதப்பட்டுவருவதும், சரமஸூத்ரபாஷ்ய அவதாரிகையில் [புநராவ்ருத்தி ஸம்பவாஶங்கா] என்ற ஸ்ரீஸூக்தியில் ஸம்பாவநாஶங்கா என்று ஓதப்பட்டுவருவதும் இடைச் செருகலாக நேர்ந்த பிழைகள் என்றும் ப்ராசீந தாளகோஶங்களில் இத்தகைய பிழையானபாடம் இல்லையென்றும், இப்பாடங்கள் ஒரு வகையாலும் பொருந்தவும் மாட்டா என்றும் அடியேன் விரிவாக நிரூபணம் செய்திருக்கிறேன். ஸ்ரீமான். உ. வே. சேனங்குளம் கந்தாடை ராமாநுஜாசார்யர்ஸ்வாமி யென்கிற மஹான்,

acharya.org

மேற்குறித்த இரண்டிடங்களிலும் தற்காலம் ஓதப்பட்டுவருகிற பாடங்களே அழகாகப் பொருந்துமென்று இந்த வைஜயந்தீ பத்ரிகையிலேயே எழுதியிருந்தார். அதன் பிறகு அடியேனுடைய நிரூபணங்களுக்குள்ள உபபத்திகளை ஆராய்ச்சி மணிமாலையில் விரிவாக வெளியிட்டேன்.

தற்காலம் ஸ்ரீபாஷ்யத்தைப் பத்து வியாக்கியானங்களோடு சென்னையில் தேவநாகரிலிபியில் பதிப்பித்துவருகின்ற வித்வான்களும் வ்ருதிவ்ருஸவஸம்ஹவாஸ: என்ற பாடத்தையே முதலில் பதிப்பித்து மாத ஸஞ்சிகையை வெளியிட்டுவிட்டு, பிறகு அடியேனுடைய நிரூபணங்களை ஆமோதித்து (அடுத்த ஸஞ்சிகையில்) "ஸஹ்ராவாஸ: என்கிற பாடமே ஆசார்யாபிமதமாகத் தெரிகிறது" என்று வெளியிட்டார்கள்.

அடியேனுடைய நண்பரான ஸ்ரீமான் ஆராவமுதாசாரியர் இவ்விஷயங்களைச் சுருக்கமாகத் திருவாடிப்பூர வைஜயந்தீ ஸஞ்சிகையில் வெளியிடுவித்திருந்தார். அதைக் கடாக்ஷித்தருளின ஸ்ரீ. உ. வே. மு. அ. திருவேங்கடாசாரியர் ஸ்வாமி "ஸ்ரீபாஷ்ய விஷய ப்ரமநிராஸ:" என்கிற வொரு வியாஸமெழுதிச் சென்ற புரட்டாசித் திருவோணஸஞ்சிகையில் வெளியிடுவித்துள்ளார். இந்தஸ்வாமியின் திருவுள்ளமாவது—(1) வ்ருதிவ்ருஸவஸம்ஹவாஸ: என்கிறபாடமே யுக்தம். இதுவே ச்ருதப்ரகாசிகைக்கு நன்கு பொருந்துவது. (2) ஸம்ஹாவநாஶங்கா என்பது யாரோசில அசடுகள் சொல்லிவருகிற பாடமாதலால் அதை எடுத்துக் கழிக்க வேண்டிய அவசியமேயில்லை—என்பதே. ஸ்ரீஉவே. சே. கந்தாடை ராமாநுஜாசார்ய ஸ்வாமியைப்போல் இந்தஸ்வாமியும் ஸம்ஹாவநாஶங்கா என்கிற அபபாடத்தைத் ஸமர்த்திக்க முயற்சி கொள்ளாததைப்பற்றி உவப்பே. மைஸூரிலும் காஶியிலும் பரீக்ஷை கொடுத்த பண்டிதரென்று உலாவுகின்ற அந்த மஹநீயருடைய திருவுள்ளம் கன்றுமாறு "அநிபுணலேகர்களின் அபவாதங்கள்" என்று இவர் அவலீலையாக எழுதினதைப் பற்றிமாத்திரம் உள் வெதும்புகின்றேன். ப்ராஜ்ஞர்கள் பரிசோதித்துப் பதிப்பித்த ஸ்ரீகோஶங்களிலும், அநேக வித்வான்களின் திருவாய்களிலும் "ஸம்ஹாவநாஶங்கா" என்ற பாடத்தை அடியேன் கண்டும் கேட்டுமிருந்தபடியால்தான் அதைபற்றிப்ப

acharya.org

ப்ரஸ்தாவம் விளைந்தது. இந்த (மு. அ. தி.) ஸ்வா ஸவ்யதிவ்ய ஸவஸம்ஹவாஸ என்பதே சுத்தபாடம் என்று போராடுவது போலவே, ஸம்ஹாவநாஸங்கா என்பதே சுத்தபாடமென்று போராடுகிற மஹாபண்டிதர்களுமுளராதலால், ஸம்ஹவாஸ மிறன் ஸ்வாரஸ்யத்தை நிரஸிக்க முயன்றதுபோலவே ஸம்ஹாவநா ஸங்கா என்ற ஸ்வாரஸ்யத்தையும் நிரஸிக்க அடியேன் முயன்றது மிகவும் யுக்தமே.

வ்யக்ஷதம், ஸம்ஹவாஸ என்கிற பாடமே யுக்தமென்று ஸமர்த்திக்கப்புகுந்த ஸ்ரீமத் திருவேங்கடாசார்ய ஸ்வாமியின் நிரூபணங்களைப்பற்றி அடியேனுடைய விமர்சங்களை இங்கு விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். "வ்யதிவ்யஸவ ஸம்ஹவாஸ என்கிற விஷயத்தில் ச்ருதப்ரகாசிகையின் உபபாதநத்தை நன்றாக யோசித்தால் ஸம்ஹவாஸ என்கிறபாடமே யுக்தமாகத் தோற்று கிறது"—என்று முதலில் எழுதிவிட்டு, ச்ருதப்ரகாசிகா ஸ்ரீ ஸூக்திகளையும் உதாஹரித்துக்காட்டிவிட்டு, "இந்த உபபாதந ப்ரகாரத்தால் ஸம்ஹவாஸ என்கிற பாடமே அங்கீகரித்ததாக ஏற்படுகிறது" என்று கூறி, "எப்படியெனில்" என்று தொடங்கி மேல் உபபாதனம் செய்திருக்குமழகு ஆச்சரியமானது. இவர்தா மெடுத்துக்காட்டியுள்ள ச்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்தியிலிருந்து ஸம்ஹவாஸ என்கிறபாடமே புலப்படுகிறதென்பதை யன்றோ நிரூபித்துக்காட்டவேண்டும். அதற்காகவேயன்றோ (எப்படியெனில்) என்று அவதாரிகையும் இவர் இட்டுக்கொண்டார். மேலே இவர் செய்கிற நிரூபணத்திற்கும் ச்ருதப்ரகாசிகைக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லையென்பதை அனைவரும் காணலாம். ததாஹி;—

"ஸஜ்ஞாவாஸ என்று பாடமானால் ப்ரதிப்ரஸவம் இருப்ப தால் என்று அர்த்தமாகும். இந்த வார்த்திகம் ஸித்தாந்த கௌமுதி ஸமாஸவிதிகள் படித்தவர்களெல்லாருக்கும் இருப்ப தாகத் தெரிந்தவிஷயம். அவர்களுக்கு 'இருப்பதினால்' என்று சொல்லவேண்டியதில்லை" என்கிறவிதனையே ஸ்வஸக்ருஸ எழுதி யுள்ளார். இது இவருடைய சொந்த யுக்திவாதத்திற் சேருமத் தனை போக்கி ச்ருத ப்ரகாசிகா ஸூக்திக்கு இது விவரண மாகுமோ? இவர் "எப்படியெனில்" என்று ஆரம்பித்தது தம் சொந்த யுக்தியை விவரிப்பதற்கோ? அன்று. ச்ருதப்ரகாஸிகா

acharya.org

காரருடைய ஸ்ரீ ஸூக்தியின் ஹ்ருதயத்தை விவரிக்கப் புகுவ தாக ப்ரவேசம் காட்டிவிட்டு அஸம்பத்தமான வேறொன்றை எழுதப் புகுந்துவிட்டார்.

இவருடைய அபிப்ராயம் முற்றிலும் பிசகு என்பதை ஸூஸ்பஷ்டமாக நிரூபிக்கிறேன் காண்மின். இங்கு ஸ்ரீ பாஷ்யகாரர் ஸாதிக்கிற விஷயம் வ்யாகரண சாஸ்த்ரம் வாசித்தவர்களுக்கெல்லாம் தெரியுமாகையாலே அதை இவர் எடுத்துக்காட்டுவது நிஷ்பலம் என்று இவர் கருதுவது யுக்தமன்று. அந்தந்த சாஸ்த்ரங்களை வாசித்தவர்களுக்கு அவ்வவ் விஷயங்கள் தெரிந்தவையே. ஆதலால் எதுவுமே எழுத வேண்டாவாகும். மல்லிநாதர் முதலானோர் வியாக்கியானங்களில் அடிக்கடி ஐ.க்ஷுஃ என்றும் ஐதிவாஃ என்றும், ஐதிவாணிநிஃ என்றும் பலபல ப்ரமாணங்களை உதாஹரிக்கிறார்கள். அமரம்வாசியாதாரில்லை; அப்படியிருக்க ஐ.க்ஷுஃ என்று இவர் ஏன் எழுதுகிறார்? வயம்ப...॥ ஜ்ஞாதாக்களுக்கு ஸ்மரிப்பித்தல், அஜ்ஞர்களுக்கு அபூர்வமாகத் தெரிவித்தல் என்கிற இரண்டையும் பயனாகக் கருதிப் பல பல சாஸ்த்ரார்த்தங்களை வ்யாக்யாதாக்கள் ஆங்காங்கு எழுதிவருவது வழக்கம். ஒன்று பார்க்கலாம். ப்ரஹ்மஸூத்ரத்தில் “அநாவ்ருத்திஃ ஶப்தாத் அநாவ்ருத்திஃ ஶப்தாத்” என்பது கடைசி ஸூத்ரம். இதில் [ஶப்தாத்] என்பதற்கு சாஸ்திரமிருக்கிறபடியாலே என்று அர்த்தம். அங்கு விவக்ஷிதமான ஸவஸேவவதுயஜ்ஞகுவியான ஔபநிஷதவசந மிருப்பது வேதாந்திகளுக்குத் தெரிந்ததே. அதை வியாஸர் புதிதாக நிருமித்துவிடவில்லை. அது இருக்கிறது என்று காட்டுவது தவிர வேறொன்றும் செய்யவுமில்லை. அந்த ஒரு ஸூத்திரத்தில் மாத்திரமன்று; நூற்றுக்கணக்கான ஸூத்ரங்களில் (ஶ்ருதேஃ) என்றும் (ஸ்ம்ருதேஃ) என்றும் தத்ப்ரமாண ஸத்பாவத்தையே காட்டி வருகிறார் ஶ்ருதிஸ்ம்ருதிஜ்ஞர்களுக்கு அவை தெரியுமாதலால் இவர் ஏதுக்கு தத்ஸத்பாவத்தைக் கூறுகிறாரென்று கேட்டால் என்ன விடையோ? தெரிய வேணும்.

இரண்டாவதாக இந்த ஸ்வாமி எழுதுவதென்னவென்றால். ‘சாஸ்த்திரத்திலிருப்பதால் என்று சொன்னாலும், ‘அது ப்ரக்ருதத்தில் ஸம்பவிக்கிறபடியால்’ என்று சேஷ பூரணம் பண்ணியே

acharya.org

யாகவேணும் என்று அபூர்வ-விலக்ஷண-நியமபரிக்ஷணம் பண்ணு கிறார். இதுவும் அயுக்தம். ப்ரக்ருதத்திற்குப் பொருந்தக் கூடிய ப்ரமாணங்களைத் தானே மஹான்கள் எடுத்துக்காட்டுவர்கள். ஶங்கா பரிஹார ரூபமாக ஶாஸ்த்ரத்தை யெடுத்துக்காட்டின மாத்திரத்திலேயே அது ப்ரக்ருதத்தில் இஷ்ட ஸாதகம் என்பது தேறிவிட்டபடியால் இவர்சொல்லுகிற ஶேஷபூரணம் ஸர்வாத்மநா அநபேக்ஷிதம். வாயுகஶாஸ்த்ர வஹூவத்தைக் கொண்டு ஊஹா விதமான ஶங்கைக்குப் பரிஹாரமாக வாயுக ஶாஸ்த்ர வஹூவ ஶாஸ்த்ர வ்ருத்யுபாதநமே அபேக்ஷிதமென்று தெளிக.

ஶாஸ்திரத்தில் வ்ருத்திவ்ருஷவ மிருந்தாலும் அது ப்ரக்ருதத் தில் ஸம்பவிக்கிறதென்பதை உபபாதநம் பண்ணிக்காட்டினால் தான் வ்யாவ்ருத்தி வ்ருத்தியாகும் என்று இவர் எழுதுவது ஸ்ரீபாஷ்யத்திற்குக் குறை கூறினபடியே யாகும். ஏனென்னில்; வ்ருத்திவ்ருஷவ ஶாஸ்த்ரம் ப்ரக்ருதத்தில் ஸம்பவிக்கிற தென் பதை ஸ்ரீபாஷ்யகாரர் எங்கே உபபாதநம் பண்ணிக் காட்டியிருக் கிறார்? ஒரு அக்ஷரமேனு முண்டோ? ஸம்ஹவாக என்று ஸாதித் திருக்கிறாரே யென்னில்; வ்ருத்திஜ்ஞாஶாஸ்த்ரமே உபபாதநமாய் விடுமானால் எல்லாரும் ஸூத்ரகாரர்களாக ஆய்விடலாம். ஸம்ப விப்பதற்கு ஹேது யுக்திகளை நிரூபணம் பண்ணிக் காட்டினாலன்றோ உபபாதநமாகும். அது அணுமாத்திரமும் ஸ்ரீபாஷ்யத்தில் இல்லையே;

ஸ்ரீ பாஷ்யத்தில் இல்லாவிடினும் ச்ருதப்ரிகாஶிகையில் அது உள்ளது என்னில்; ச்ருதப்ரகாஶிகையிலும் இது கிடையா தென்பதை நாம் அடுத்தபடியாகவே விவரிக்கப்போகிறோம். இவரிஷ்டப்படி வைத்துக் கொண்டாலும், ஸம்ஹவாக என்பது ஸ்ரீபாஷ்யத்திலுள்ளதாக இவர் சொல்லுகிறாராகையாலே ஸம்ஹவ மௌஷ்யமான உபபாதநம் அதுதன்னிலேயே யிருந்தாலன்றிப் பயனில்லையே. ஸூத்ரகாரஶௌஶீ என்று இவர் எழுதியிருக் கிறாரே, எதை க்ரந்த காரஶைலியாக எழுதுகிறார்? ப்ரதிஜ்ஞா மாத் ரத்தையேயா க்ரந்த காரஶைலியாக எழுதுகிறார்? அந்தோ! இது மிக நன்று;

இங்கே ச்ருதப்ரகாஶிகையின் க்ருத்யம் எவ்வளவென்னில்; ஸூஹஜிஜ்ஞாஸா என்கிறவிடத்தில் வ்ருத்திவ்ருஷவ ஶாஸ்த்ரம்

ஸம்பவிக்குமா? ஸம்பவிக்காதா? என்கிற விசார லேசமும் அவர் செய்திருக்கவில்லை. உள்ள பங்க்தியை யாவரும் காணலாம். அவர் எவ்வளவில் போயிருக்கிறா ரென்னில்; கேண்மின்;—வ்யாகரண சாஸ்த்ரத்தில் [ப்ரதிபதவிதாநா ஷஷ்டீ ந ஸமஸ்யதே] என்றும் [க்ருத்யோகா ச ஷஷ்டீ ஸமஸ்யதே] என்றும் இரண்டு அநுசாஸநங்களுள்ளன. ஒரு சாஸ்த்ரத்தைக் கொண்டு மற்றொரு சாஸ்த்ரத்தை ஸர்வாத்மநா பாதிப்பது கூடாது. அப்படியானால் பாதிதமான சாஸ்த்ரம் உதியாமலே யிருந்து விடலாம். ஸூக்ஷ்மேக்ஷிகாயா து இரண்டு சாஸ்த்ரங்களுக்கும் ஸாவகாசம் காட்டித்தீரவேண்டியது ப்ராமாணிகர்களின் கடமை. ஆகவே மேலெடுத்துக் காட்டிய ஸமாஸநிஷேத சாஸ்த்ரம், ப்ரதிப்ரஸவ சாஸ்த்ரம் என்ற இரண்டனுள் ப்ரதிப்ரஸவ சாஸ்த்ரத்திற்கு ப்ராபல்யம் இசைந்தால் நிஷேதசாஸ்த்ரத்திற்கு ஏதேனு மோரிடத்திலாவது வ்யவஸ்தை காட்ட வேண்டுமே; ப்ரதிபதவிதாநா ஷஷ்டீ ஸமாஸநிஷேத சாஸ்த்ரம் ஸாவகாசமாகக் கூடிய இடம் எது? என்று விசாரித்துக்கொண்டு (ஸர்பிஷோ ஜ்ஞாநம்) என்ற விடம் ஸமாஸநிஷேத சாஸ்த்ராவகாசஸ்தல மென்று காட்டினர். அதற்குமேல், ஜ்ஞாநம் என்பதும் ஜிஜ்ஞாஸா என்பது போலவே க்ருதந்தமே யாதலால் [க்ருத்யோகா ச ஷஷ்டீ ஸமஸ்யதே] என்கிற ப்ரதிப்ரஸவ சாஸ்த்ரம் அங்கும் ப்ரவர்த்திக்கத் தடையில்லாமையாலே * ப்ரதிபதோக்தாதிநிஷேத சாஸ்த்ர வையர்த்யமே வந்து விடுகிறதே என்கிற சங்கையை யத்யபீத்யாதியாலே தோற்றுவித்து, மேல் ததாபீத்யாதியாலே என்ன ஸமாதானம் காட்டினு ரென்னில்; க்ருத்யோகா ஷஷ்டீ என்பதற்கு க்ருத்யோகம் நிமித்தீக்ருத்ய விஹிதா ஷஷ்டீ என்று பொருளாதலாலும் ஸர்பிஷ: என்பதிலுள்ள ஷஷ்டியானது கர்த்ருகர்மணோ: க்ருதீதி க்ருத்யோகநிபந்தந மன்றிக்கே ஜ்ஞோவிதர்த்தஸ்ய கரணே இதி ப்ராதிஸ்விக ஸூத்ர விஹிதமாநெ யாதலாலும், க்ருத்யோகா ச ஷஷ்டீ ஸமஸ்யதே என்கிற ப்ரதிப்ரஸவசாஸ்த்ரம் அங்கு ப்ரவர்த்திக்க வழியில்லை; ஆகவே ஸமாஸநிஷேதசாஸ்த்ரம் அங்கு ஸாவகாசமே யாயிற்று என்று தலைக் கட்டினர். ஸவ்ஷீ,

acharya.org

இவ்வளவும் ஶப்தஶாஸ்த்ரார்த்த ஸம்யக் விசார பரீக்ஷணமே யன்றி, ஶ்ருஹுஜிஜ்ஞாஸா என்கிற ப்ரக்ருத ஸ்தலத்தில் வ்யதி வ்யஸ்த ஶாஸ்த்ரம் ஸம்பவிக்குமா? ஸம்பவிக்காதா? என்கிற வ்யஸ்தஸ்ரமோஜமும் ச்ருதப்ரகாஶிகையில் கிடையாது. இப்படி பரமிப்பதற்குங்கூட அங்கு ஸாமர்த்ய லேஶமும் இல்லாதிருக்க எது கொண்டு இவர் ப்ரமித்தாரோ அறியோம்.

மேலும், இவர் கருதுகிறபடியே கொண்டாலும் [வ்யதிவ்ய ஸ்தஸ்ய வ்யக்தே வ்யஸ்தீ ஸம்ஸாக] என்று பங்கதி யிருந் திருக்கவேணும் வ்யதிவ்யஸ்த ஸம்ஸாக என்பது ம்ராந்திக வழியே யன்று. ஸாயணே ஶப்தவ்யோமே நாவாவகம் வக்ஷம் வ்யயோகஸ்த மாதலால் ஸ்ரீபாஷ்யகாரர் ஒருகாலும் அபபடி அசட்டு ப்ரயோகம் செய்தருள மாட்டார். மேலும் முதலில் எவ்விதமான தோஷம் வ்யாஸமாயிற்று என்பதைக் கவனித் தால் மேலே எவ்விதமான ஸமாதானம் சொல்லவுரியது என்ப தும் தெளிவாகும். வ்யாகரண ஶாஸ்த்ரத்தில் ஸமாஸாபவாதம் இருக்கிறதே என்று தோஷம் வந்ததே யல்லது வேறில்லை. அதற்குத்தக்க ஸமாதானம் என்ன? அந்த ஶாஸ்த்ரத்திலேயே அந்த ஸமாஸாபவாதத்திற்கும் அபவாதம் இருக்கிறது என்ன வேண்டுவதே. அதைத்தான் பாஷ்யகாரர் அருளிச் செய்தார். அதற்கு ஏற்ற ஸ்ரீஸூக்தி ஸம்ஸாக என்பதேயாம். வ்யதி வ்யஸ்த ஶாஸ்த்ரம் இங்கு ஸம்பவிக்குமா? ஸமபவிக்காதா? என் கிற விசாரத்திற்கு உத்திதியே கிடையாது. கர்மணி ஷஷ்ட்யா ஸமாஸநிஷேதம் ப்ரகிருதத்தில் ஸம்பவிக்குமா? ஸம்பவிக்காதா? என்கிற விசாரம் எப்படி இல்லையோ? அப்படியேதான் இதுவும் என்று நன்கு தெளியக்கடவது. ஸமேதே, தத்வடீகா பங்க்தி களைப்பற்றி இவர் எழுதியிருப்பதும் ஸாக்ஷேபவாராஸம். (ஶேஷபூரணம்—ஶேஷபூரணம்) என்று இவர் அடிக்கடி ஸாத ராஸம்மதமான தொன்றை எழுதிக்கொண்டிருப்பது வ்யுத்பந் நர்கள் அருவருககத்தக்கது. ஶேஷம் கோபேந பூரயேத் என்னப்பட்ட ஶேஷபூரண மொன்றே இவர்க்கு ஶரண மென்னலாம். தாத்ருஶ ஶேஷபூரணம் இவர்க்கு ஸஹ ஜமேவ உண்டு.

acharya.org

திருத்தம் செய்யவேண்டியிருந்தால் நிதானித்து யோசித்துச் செய்யவேண்டுமென்று இவர் எழுதுகிறார். அடியேன் திருத்தம் செய்யவந்தவனல்லேன். ஸகலம் ப்ரஸாத ஸாஸ்த்ரத்திலுள் திரோஹிதமாயிருந்த ஸம்ப்ரதாயத்தை யெடுத்துக் காட்டினேனத்தனை. தாம் பார்த்த பல ஓலை ஸ்ரீ கோசங்களில் ஸம்ஹரஸ என்றே பாட மிருக்கின்றதாக இவர் எழுதுவது யதார்த்தமாயிருக்குமாயின், ஸநகஸநந்தநாத்யைர்யோகிபி என்றே பல ஓலை ஸ்ரீ கோசங்களிலும் தாம் கண்டதாகத் தாமே தெரிவிக்கும் ஸகலம்த்தோடொக்க அந்த ஸகலமும் வர்ஜநீய மென்று தாமே தெளியக் கடவர்.

ஹாஷ்யகோச ஸாரங்கள் பலவற்றிலும் ஸநகஸநந்தநாத்யை...... என்றே காணப்பட்டாலும் அதைப் பொருள்படுத்தும் பண்டிதர் எங்கு மில்லை. ஸஞ்ஜ்ஞாந என்பதைச் சேர்த்து எழுதவேண்டு மிடங்களில் ஸஞ்ஜ்ஞாந என் றெழுதாமல் ஸஞ்ஜ்ஞாந என்றே பெரும்பாலும் எழுதியும் அச்சிட்டு மிருநதாலும் அதைக் கணிசிப்பாரில்லாதாபபோலவே இந்த ஹகாரப் பிழையையும் கணிசிப்பா ரில்லை. ஸநகஸநந்தநாதி யென்றே ஸஹஸ்ரநாமாதிகளி லெங்கும் ஸம்ப்ரயோக: ஸர்வ:. இதைப்பற்றி இவரெழுது மைதிஹ்யம் ஸதிஸாரவிஸ்லேஷணீயமும் ஸஹாஸ்யமாகும். தத்வத்ரயவ்யாக்யாநத்தில் ராமம்என்று நாலைந்து இடங்களில் ஸாதிக்கப்பட்டு இருக்கிறது. அவ்விடங்களிலெல்லாம் ரோமம் என்றே அச்சிட்டு விட்டார்கள். அது கொண்டு மயங்குவாராருமில்லை.

கிம்பஹுநா ? ஸ்ரீ காஞ்சியில் ஸம்ப்ரதித்த வித்வானாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ உவே. எம்பாவையங்கார் ஸ்வாமி திருமாளிகையிலிருந்த ஸ்ரீ ஹாஷ்ய தாளகோசத்தை அடியேன் ஐஞ்ச வருமாக ஸம்பாதித்து ஸேவித்ததில் ஸஹாஸ என்கிற பாடம் காணப்பட்டது. கோயில் திருநாராயணபுரம் முதலிய இடங்களுக்கு விடைகொள்ளும்போதுகளில் அங்கங்கு ஓலை ஸ்ரீகோசங்களை ஆராய்ந்ததிலும் பெரியோர்களை யடியணிந்து கேட்டதிலும் இதுவேதான் ஸநகஸநந்தநாதி மென்று அறுதியிடப்பட்டது. ஸம்ப்ரதாய நிர்ணீதமான வதுவே ஸமயத்தில் ப்ரகாசித மாயிற்று. இதில் ருசியிலாதாரைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஸர்வம் ஸமஞ்ஜஸம்.

acharya.org

ஸ்ரீ இராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி

[ஸ்ரீ. உ. வே. கீரனூர் நரஸிம்ஹமாசாரியார்,
அட்வகேட், திருவல்லிக்கேணி.]

மதம் என்றும் தர்சனம் என்றும் சொல்லப்படும் சாஸ்திரங்களின் கொள்கைகளினால் நாம் இப்பிறப்பில் சுகமே வாழ்ந்து மறுபிறப்பிலும் பேறு பெற்றாலன்றி பிரயோஜனமில்லை ஸ்ரீ இராமாநுஜ ஸித்தாந்தம் என்று சொல்லப்படுகிற மதமானது நாம் பிரத்யக்ஷமாய் கண்டு அநுபவிக்கிற நம்முடைய சரீர தத்வத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட மதம் இதில் சொல்லப்படும் தத்வங்கள் அனைத்தும் சரீராத்ம பாவத்திலிருந்து ஸம்பாவிதமாகிறது. உடலிலுள்ள அவயவங்கள் ஒவ்வொன்றும் உயிருக்கு அநந்யார்ஹஷேமாய் அந்த சேஷத்வத்தின் காரியமாய் ஒன்றோடொன்று ஒத்து உழைத்து வருகிறதல்லவா? இந்த சரீராத்ம பாவத்திலிருந்து தோன்றும் தத்வம் ஹிதம் புருஷார்த்தங்களாகிற இம்மூன்றையும் பரக்கப் பேசுவதுதான் விசிஷ்டாத்வைத மதம். பல காரணங்களினால் இம்மதத்தின் அருமை பெருமைகளை நம்மவர்கள் பலருமே அறியாமலிருக்க மற்றவர்கள் எவரும் அறியவில்லை என்பது ஆச்சரியமல்ல. கலா பேதங்களாலும் கிராம குலாதி வ்யபதேசங்களாலும் அஹங்காரம் மகாரங்கள் மேலிட்டு தட்டித் தடுமாறுகிறோம். இதை நீக்கவேண்டுவது அவசியம். ஸ்ரீ இராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி பத்திராதிபர் இக்குறைதனை நீக்கப் பல படிகளாலும் பிரயத்தனங்கள் பண்ணிவருகிறார். அப்பத்திரிகையை ஆந்தனையும் ஆதரிப்பது அவசியம். பல துளி பெரு வெள்ளமாம. வருஷச் சந்தா 1—12—0. அந்தச் சந்தா போதாததால் சிலர் மாதம் ஒரு ரூபாய் உபகரித்து வருகிறார்கள். சக்த்யாநுஸாரம் விஷய தானமும் பொருள் தானமும் பண்ணி இப்பத்திரிகையை அபிவிருத்தி செய்யவேண்டுமென்பதுதான் அடியேன் கைகூப்பி வணங்கிச்செய்யும் விண்ணப்பம்.

[ஸ்ரீ. உ. வே. ஆர், கேசவய்யங்கார், அட்வகேட்,
திருவல்லிக்கேணி.

"ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி" எனும் திருநாமம் பூண்ட இப்பத்திரிகையைத் தகவும் வலிமையும் பொருந்திய மஹா ரஸிகரான வடகரை ஸ்ரீ. உப. வே. ராமாநுஜாசாரிய ஸ்வாமி தலைவராயிருந்து மாதந்தோறும் வெளியிட்டு வருகிறார். தற்பொழுது இப்பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு ஆரம்பமாகப் போகிறது. எம்பெருமானார் தரிசனத்தைக் கசடற ஷோதிக்கற்று உலகெங்கும் பரவச்செய்வதே ஸ்ரீ வைஷ்ணவர்

acharya.org

களுக்கு பரம புருஷார்த்தம். இத்தரிசனம் ஒன்றேதான் "அகில தம: கர்சனம்" ஈதொன்றே ஸர்வலோக ஹிதைஷி. பரன் ஸர்வ சேதாசேதந விசிஷ்டன். உலகனைத்தும் பரனுக்கே விசேஷணம், எனும் எம்பெருமானார் தரிசன உண்மையறிவின்மைதான் உலகத்தின் குழப்பங்களுக்கும் துயரங்களுக்கும் காரணம். அன்பே சேதநஸ்வரூபம். அருளே ஈசுவர ஸ்வரூபம். உலகனைத்தும் பரனுக்கே சரீரம், எனும் மறைமுடி வுண்மையே எம்பெருமானார் தரிசனமாய் அவதரித்தது. இவ்வொன்றே உலகு காக்கும் உண்மை. இத்தரிசன உண்மையை நன்கு விளக்கிப் பரவச்செய்வதே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு என்று முற்ற ஓர் கைங்கரியம். "சாரீரகம்" எனும் திருநாமம் இத்தரிசனம ஒன்றில்தான் இசைந்து நிலை நின்றது. ஸ்ரீ பாஷ்யகாரர் விஸூதிகளா யிருததலாலேயே ஸ்வதஸ்ஸித்தமான பரஸ்பர மித்ர ஸாவமும, சேஷஸாவமும் விளங்கி நிற்கும் நமக்குள்ளேயே காலகதியால் பிறபட்டார் சிலகளுடைய சொற்களும் நூற்களும நமது ஸ்வரூபத்தை மறைக்கவும், நாம் ஒருவரை ஒருவர் அணுகாதிருக்கவும், ஊடுசுவர்களாயே போந்தன என்பதை உணர்ந்தார் துயருறாதிருக்க முடியாது. அச்சுவரிடித்து அத்துயர் தீர்ப்பதே எம்பெருமானார்க்கு அன்னார் விஸூதிகள் செய்யும் பணி. இப்பணி பூண்டாரையே எம்பெருமானார் ஆட்கொள்வார் என்பது அடியேன் துணிவு. இப்பணி பூண்டார் இப்பத்திராதிபர். பத்திரிகை வாயிலாக வெளியிடக்கூடிய உண்மைகள் சில உபதேசத்தால் அறியப் பட வேண்டிய ரஹஸ்யங்கள் சில. ஈதே தொல்நெறி. இநநெறி காத்து உண்மை விளக்குவதே சான்றோர் கடன். உண்மையை உள்ளவாறே உலகு காழுறுமாறு விளக்கவேண்டும். அதுவே அரிய அறம். இக்காலதநிய சிலர் அவ்வறம் துறந்து மனம் போன போக்கெல்லாம் சென்று தாம் வாய்படைத்ததை- மட்டுமே விளக்கச் சொல்மாரி பொழியுமவையெல்லாம் அபசார கோடியிலேயே அடைக்கப்பட்டு ப்ராமாணிகர்களுக்கு அநாதரணீயங்களாயே ஒழியும். அத்தகைய கோது எள்ளளவும் அணுகாது இப்பத்திராதிபர் தொல்நெறி நின்று அரிய ஆராய்ச்சிகளைச்செய்து ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த உண்மை எம்போலியர்களுக்கும் நன்கு புலபபடுமாறு எளிய நடையில் ரஸம் பெருக எழுதபபட்டு வருவது சாலவும்போற்றி புகக்கத்தக்கது. இவ்வாறே மேன்மேலும் ஓங்கி வளர்ந்து எங்கும் நன்கே பரவுமாறு ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் இப்பத்திரிகையைப் பொருளாலும், சிஷ்யத்தாலும், உதவி, ஆதரிக்கும் கடமைப் பாடுடையார்கள் என்பது அடியேன் செய்யும் விண்ணப்பம்.

குறிப்பு:—இப் பத்திரிகை 284-ம் பக்கம் 9-வது வரியில் பேருபாயமும் என்பதை பேருபாயமும் என்று திருத்திப் படிக்கவும்.

acharya.org